அமரர் கல்கியின்
“தியாக பூமி”

அமரர் கல்கியின் தியாக பூமி

முதலாவது பாகம்

கோடை 1

1.ரயிலடி 2
2.சாலை 5
3.கூட்டுக் கச்சேரி 7
4.சாவித்திரியின் அலறல் 9
5.தந்தையும் மகளும் 11
6.ஸ்ரீதரன், பி.ஏ 14
7.தந்தியும் தபாலும் 16
8.தங்கம்மாள் 20
9.தீக்ஷிதர் விஜயம் 23
10.எடு அபராதம்! 27
11.'எனை மணந்த மணவாளன்' 30

இரண்டாம் பாகம்

மழை 35

1.வெள்ளம் 36
2.பஜனை 39
3.உடைப்பு 42
4.அடைக்கலம் 46
5.தீக்ஷிதர் சபதம் 48
6.ஸ்ரீதரன் சங்கடம் 51
7.சாதிப் பிரஷ்டம் 54
8.பிரயாணம் நின்றது 57
9.நாளை தீபாவளி 61
10.வண்டி வந்தது! 64

மூன்றாம் பாகம்

பனி 67

1.நல்ல சேதி 68
2.சதியாலோசனை 72
3.சாவித்திரியின் பயணம் 75
4.பனி மறைந்தது 79
5.நல்லானின் கோபம் 83
6.கிரகப் பிரவேசம் 85
7.அக்னயே ஸ்வாஹா! 89
8.கோட்டை இடிந்தது 93
9.அநாதைக் கடிதம் 96
10.சாவித்திரியின் கனவு 100
11."அப்பா எங்கே?" 104
12.பாட்டு வாத்தியார் 108
13.மீனாக்ஷி ஆஸ்பத்திரி 112
14.சாவித்திரியின் சங்கல்பம் 116
15.சாவடிக் குப்பம் 120

நாலாம் பாகம்

இளவேனில் 123

1.சாருவின் பிரார்த்தனை.....124
2.உமாராணி விஜயம்.....128
3.'ஸ்ரீமதி சாருமதி தேவி'.....131
4.பசுவும் கன்றும்.....134
5.முல்லைச் சிரிப்பு.....136
6.பூர்வ ஞாபகம்.....139
7.புனர் ஜன்மம்.....143
8.கதம்பக் கச்சேரி.....146
9.பராசக்தி குழந்தை.....149
10.'ஜில்லி! ஜில்லி!'.....153
11.சங்கம் ஒலித்தது!.....156
12.'வஸந்த விஹாரம்'.....160
13.குருட்டுக் கிழவன்.....163
14.கண் திறந்தது!.....167
15.சாரு எங்கே?.....170
16.'ஸுலோச்சு விஷயம்'.....173
17.'அவள் என் மனைவி'.....175
18.உமாராணியின் பழி.....178
19.ஸ்ரீதரன் சபதம்.....181
20.வந்தாரே தக்ஷிதர்!.....186
21.நெடுங்கரைப் பிரயாணம்.....190
22.ராஜி யோசனை.....193
23.மங்களத்தின் மரணம்.....196
24.'மாட்டேன்! மாட்டேன்!'.....199
25.பராசக்தி லீலை!.....202
26.சந்திப்பு.....204
27.'ஜட்ஜு மாமா!'.....207
28.கர்வ பங்கம்.....212
29.மோனாவின் கணவன்.....217
30.தீர்ப்பு.....221
31.தியாகம்.....225
32.சாந்தி.....228

முதலாவது பாகம்
கோடை

"நிழல் அருமை வெயிலிலே நின்றறிமின் ஈசன் கழலருமை வெவ்வினையில் காண்மின்."

1. ரயிலடி

டிங்! டிங்! டிங்!

டிணிங்! டிணிங்! டிணிங்!

போர்ட்டர் கண்ணுசாமி மணியைக் கீழே வைத்து விட்டுக் கைகாட்டி மேடைக்கு ஓடினான். 'டக்-டக்', 'டக்-டக்' என்று இழுத்தான். ஒரு கைகாட்டி சாய்ந்தது. இன்னொரு கைகாட்டியும் சாய்ந்தது.

தூரத்தில் 'ஜிகுஜிகு' 'ஜிகுஜிகு' என்று பத்தரை மணி வண்டி வந்து கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.

புதுச்சத்திரம் ரயில்வே ஸ்டேஷனில் பரபரப்புக்கு அறிகுறிகள் காணப்பட்டன. படுத்துக் கொண்டிருந்த ரயிலடி நாய் எழுந்து நின்று உடம்பைச் சிலிர்த்தது.

தூங்கி வழிந்த ரயிலடிக் கடைக்காரன் திடுக்கிட்டு எழுந்திருந்தான். அவன் எதிரே ஒரு தட்டில் நாலைந்து எள்ளுருண்டையும் மூன்று வாழைப்பழங்களும் இருந்தன. அவற்றின் மீது மொய்த்த ஈக்களைப் பரபரப்புடன் ஓட்டினான்.

வெளியே, தூங்குமூஞ்சி மரங்களின் குளிர்ந்த நிழலில் இரண்டு கட்டை வண்டிகளும், ஒரு வில் வண்டியும் கிடந்தன. வண்டியில் படுத்திருந்த வண்டிக்காரர்கள் கையில் தார்க் கழியுடன் கீழே குதித்தார்கள். படுத்து அசை போட்டுக் கொண்டிருந்த மாடுகளும் ஒவ்வொன்றாக எழுந்து நிற்கத் தொடங்கின.

அந்த வண்டிக்காரர்களில், வில் வண்டியிலிருந்து குதித்தவனை மட்டும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். அவன் கவனிக்கப்பட வேண்டியவன். அவன் பெயர் நல்லான். ஆமாம்; நெடுங்கரை சம்பு சாஸ்திரியின் பட்டிக்காரன் நல்லான்தான்.

ஸ்டேஷன் மாஸ்டர் டிக்கட் மேஜையை இழுத்துப் பூட்டினார். ஆணியில் மாட்டியிருந்த தலைப்பாகையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார். கையில் ரயில் சாவியுடன் வெளியில் வந்தார்.

ஒரு கிழவனும், ஒரு ஸ்திரியும், ஒரு சிறுவனும் அப்போதுதான் மூட்டை முடிச்சுகளுடன் பிளாட்பாரத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். சாதாரணமாய், இவ்வளவு பெரிய கூட்டத்தை அந்த ஸ்டேஷனில் பார்ப்பது அபூர்வமாதலால், ஸ்டேஷன் மாஸ்டருக்கு உற்சாகமாக இருந்தது. பின்னால் தங்கிய சிறுவனைப் பார்த்து அவர், "அடே அரை டிக்கட்! சீக்கிரம் போ! உனக்காக ரயில் காத்துக் கொண்டு நிற்காது!" என்று அதட்டினார். அவர் கூறியதை ஆமோதிப்பதைப்போல், கைகாட்டியினருகில் வந்துவிட்ட ரயில் கீச்சுக் குரலில் 'வீல்' என்று சத்தம் போட்டது!

ஸ்டேஷனிலிருந்து கிளம்பிய நிழலடர்ந்த சாலை கொஞ்ச தூரத்துக்கு ரயில் பாதையை யொட்டியே போயிற்று. அந்தச் சாலையில் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு பிராம்மணர் தலையில் ஒரு மூட்டையுடன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் ஏற்கனவே விரைவாகத்தான் நடந்து வந்தார்; ரயில் வீலிட்ட சத்தத்தைக் கேட்டதும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு 'லொங்கு லொங்கு' என்று ஓடி வரத் தொடங்கினார்.

ரயிலுக்கும் அவருக்கும் ஒரு நிமிஷம் போட்டி. அதன் முடிவில், அந்தோ! ரயில் தான் வெற்றி பெற்றது.

இதோ பிளாட்பாரத்துக்கு வண்டி வந்துவிட்டது! இவ்வளவு சின்ன ஸ்டேஷனில்கூட நிற்கவேண்டியிருக்கும் தன் தலை விதியை நினைத்துத்தானோ என்னவோ, இரண்டு தடவை பெருமூச்சு விட்டுவிட்டு நின்றது.

ஸ்டேஷன் மாஸ்டரின் பார்வை, வண்டியில் ஏறத் தயாராய் நின்ற இரண்டரை டிக்கட்டுகளின்மேல் விழுந்தது. அப்போது அவர், 'ஒருவேளை இன்றைக்கு யாராவது இறங்கக்கூட இறங்குவார்களோ!' என்று எண்ணமிட்டார். அவர் அப்படி எண்ணிக் கண்ணிமைக்கும் நேரம் ஆகவில்லை; ரயிலின் கதவு ஒன்று திறந்தது. அதிலிருந்து ஒரு மனுஷர் இறங்கினார். ரயில் நின்றதும் நிற்காததுமாய் அவர் இறங்கிய அவசரத்தைப் பார்த்தால் முந்திய ஸ்டேஷனிலேயே அவர் இறங்குவதற்குத் தயாராகக் கதவோரமாய் வந்து நின்றிருக்க வேண்டுமென்று தோன்றியது.

இறங்கிய பிரயாணி நெற்றியில் விபூதியும், முகத்தில் புன்சிரிப்பும், கழுத்தில் துளசி மணிமாலையும், கக்கத்தில் மடிசஞ்சியுமாகக் காணப்பட்டார். "ஓகோ! நம்ப சம்பு சாஸ்திரின்னா?" என்று ஸ்டேஷன் மாஸ்டர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

'படீர்' என்று ரயில் கதவு சாத்தும் சத்தம்; அப்புறம் 'விஸில்' ஊதும் சத்தம்; ரயில் 'குப்' 'குப்' என்று புகை விட்டுக் கொண்டு கிளம்பிற்று.

"என்ன, சம்பு சாஸ்திரியார்! இந்த வருஷத்து வெயில் எல்லாம் உங்கள் தலையிலேதான் போலிருக்கே!" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

சாஸ்திரியார் இடுப்பில் செருகியிருந்த டிக்கட்டை எடுத்துக்கொண்டே, "ஆமாம்; அப்படித்தான். ஆனால் பெரியவாள், 'நிழலருமை வெயிலில்' என்று சொல்லியிருக்காளில்லையா? அந்த மாதிரி ஏதோ பகவான் கிருபையினாலே கடைசியாகக் குழந்தைக்கு வரன் நிச்சயமாச்சு...!" என்றார்.

"வரன் நிச்சயமாச்சா? ரொம்ப சந்தோஷம்."

"முகூர்த்தம்கூட வைத்தாச்சு!"

"அப்படியானால், கொஞ்ச நாளைக்கு நம்ம ஸ்டேஷன் கலகலப்பாயிருக்கும்... நல்ல வரன் தானே?"

"ஏதோ மனசுக்குப் பிடிச்ச வரன். பையன் பி.ஏ. பாஸ் பண்ணியிருக்கான். கல்யாணக் கடுதாசி வரும் நீங்கள் அவசியம் கல்யாணத்துக்கு வரவேணும்."

"நானா, சாஸ்திரிகளே! என் சொந்தக் கல்யாணமாயிருந்தாக்கூட இந்தப் பாழாப்போன ரயில் வேலையிலே லீவு கொடுக்க மாட்டானே? பர்த்திவச்சு நடத்திக்கோ என்பானே? கேளுங்கள். போன வருஷத்திலேதான் ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் சீமந்தக் கல்யாணத்துக்காக லீவு கேட்டார்...!"

"அப்படியெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. ஒரு நாளைக்காவது கட்டாயம் வந்துவிட்டு வரவேணும். நான் வண்டி அனுப்புகிறேன்."

இப்படிப் பேசிக் கொண்டே இருவரும் பிளாட்பாரத்திலிருந்து ஸ்டேஷனுக்குள் வந்தார்கள். அதே சமயத்தில் ரயிலுடன் போட்டி போட்டுக்கொண்டு சாலையில் ஓடி வந்த பிராம்மணர் இரைக்க இரைக்க ஸ்டேஷனை வந்து அடைந்தார். வந்தவர் சம்பு சாஸ்திரியைப் பார்த்ததும், "ஏங்காணும் சம்பு சாஸ்திரி! இந்த ரயிலிலேதானே இறங்கினீர்? ஏதடா ஒரு மனுஷன் ஓடி வருகிறானேயென்று அந்த கார்டு கிட்ட சொல்லி வண்டியை ஒரு நிமிஷம் நிறுத்தி வைக்கக் கூடாதா?" என்றார்.

"தீக்ஷிதர்வாள்! பரிகாசம் இருக்கட்டும். குழந்தை சாவித்திரிக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கு..."

"என்ன, கல்யாணம் நிச்சயமாயிடுத்தா? அட எழவே! முன்னமே ஏங்காணும் சொல்லித் தொலைக்கலை? வரன் எந்த ஊர்? என்ன குலம்? என்ன கோத்திரம்? பையன் என்ன பண்றான்? கையிலே எவ்வளவு கொடுக்கிறீர்? மேற்கொண்டு எவ்வளவு செய்கிறீர்? சீர் செனத்தி என்ன? எதிர் மரியாதை எப்படி? எல்லாம் விவரமாய்ச் சொல்லும்."

"விவரமாய்ச் சொல்றதற்கு இப்போது சாவகாசமில்லை, தீக்ஷிதர்வாள்! பையன் பி.ஏ. பாஸ் பண்ணியிருக்கான்..."

"பி.ஏ.யா? அடி சக்கை! உத்தியோகம் ஆயிருக்கோ?"

"இன்னம் ஆகலை; அதுக்கென்ன, குழந்தை அதிர்ஷ்டத்துக்குச் சீக்கிரம் ஆயிடறது."

"உத்தியோகம் ஆகலையா? வெறும் வறட்டு பி.ஏ.தானா? போகட்டும்; நிலம் நீச்சு வீடு வாசல் ஏதாவது இருக்கோ, அதுவும் இல்லையோ?"

"நிலம் அவ்வளவாக இருப்பதாகத் தெரியலை. தகப்பனார் கல்கத்தாவிலே பெரிய உத்தியோகம் பார்த்தவர். பென்ஷன் இருநூறு ரூபாய் வர்றது; கையிலே ரொக்கம் ஏதாவது இருக்கும்."

"இவ்வளவுதானா? ஏங்காணும், நிலம் நீச்சு இல்லை, உத்தியோகம் கிடையாது, கையிலே 'காஷ்' இருக்குன்னு ஊரிலே சொல்லிக்கிறா!-கடைசியிலே இந்த வரன் தானா உமக்குக் கிடைத்தது? முப்பது வேலி மிராசுதார் ஜாதகம் நான் வாங்கிண்டு வந்தேன்; பரம்பரை பெரிய மனுஷன், வயது நாற்பத்தைந்துதான் ஆச்சு; அது உமக்குப் பிடிக்கலை பாரும்! கெட்ட ஜாதகம் என்கிறது இதுதாங்கணும்."

"தீக்ஷிதர்வாள்! இனிமேல் அதைப்பற்றிப் பேசி என்ன லாபம்? கல்யாணம் நிச்சயமாகி முகூர்த்தமும் வச்சாச்சு! நீங்கள்ளாம் கூடமாட இருந்து கல்யாணத்தை நடத்தி வைக்கணும். நான் போய் வர்றேன்."

"என்ன போய் வர்றீரா, ஏங்காணும்? ரயிலைத்தான் ஒரு நிமிஷம் நிறுத்தி வைக்கத் துப்பு இல்லை; அடுத்த ரயில் வருகிற வரையில் பேச்சுத் துணைக்காவது இருந்துட்டுப் போகக்கூடாதா? என்னங்கணும் அப்படித் தலைபோற அவசரம்? பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிட்டாத்தான் என்ன? அதுக்காக இப்படியா சப்பட்டை கட்டிண்டு பறக்கணும்?...அடே! மனுஷன் சொல்லாமல் போறதைப் பார்த்தாயா? ஓஹோ! அவ்வளவு கர்வம் வந்துட்டதா!... ஸ்டேஷன் மாஸ்டர்வாள்! கேட்டயளா கதையை!....." என்று தீக்ஷிதர் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் பேசத் தொடங்கினார்.

2. சாலை

ஸ்டேஷனுக்கு வெளியே மாட்டு வண்டிகள் கிடந்த இடத்துக்குச் சம்பு சாஸ்திரி போனதும், வண்டிக்காரர்களில் ஒருவன், "சாமி! வண்டி பூட்டட்டுமா?" என்றான். இன்னொருவன், "அட ஏண்டா சும்மா? எஜமானுக்குத்தான் சொந்த வண்டி பூட்டி நிக்குதேடா?" என்றான்.

"ஏஞ்சாமி, நம் வீட்டிலேங்களா கல்யாணம்?" என்று முதலில் பேசியவன் கேட்டான்.

"ஆமாண்டாப்பா! கல்யாணம் ஐந்தாறு நாளும், நெடுங்கரைக்கு வர்றவாள் யாராயிருந்தாலும் நீங்க கொண்டுவந்து விட்டுடணும். வண்டிச் சத்தம் எங்கிட்டயே வாங்கிக்கணும்!" என்றார் சம்பு சாஸ்திரி.

"அதுக்கென்னங்க? எஜமான் வீட்டுக்கு வர்றதுக்குச் சொல்லணுங்களா? ஜோராக் கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டுட்டு, ஜாம் ஜாம்னு சந்தனம் பூசிக்கிட்டு, மடிநிறைய வெத்திலைப் பாக்குக் கட்டிக்கிட்டு வர்றதில்லே!"

தயாராக வண்டியைப் பூட்டி நிறுத்தியிருந்த வில் வண்டிக்காரனைப் பார்த்து, சம்பு சாஸ்திரி, "என்ன நல்லான்? நீயே வந்துட்டயா? நான் இன்றைக்கு நிச்சயமாய் வர்றதாகக்கூடச் சொல்லியிருக்கவில்லையே?" என்று கேட்டார்.

"எப்படியும் இன்னிக்கு வந்துடுவீங்க என்று ஓர் உத்தேசங்க. அப்படி ஒரு வேளை நீங்க வராபோனால், மாட்டுக்குப் பருத்திக்கொட்டை மூட்டை போட்டுண்டு திரும்பலாம்னு இருந்தேனுங்க."

சாஸ்திரி வண்டியில் ஏறி உட்கார்ந்தார். நல்லான் 'ஹய்' 'ஹய்' என்று மாட்டை முடுக்கினான். வண்டி 'கட கட' சப்தத்துடன் போகத் தொடங்கியது.

"குழந்தைக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்து; தெரியுமோ இல்லையோ, நல்லான்!"

"அந்தத் தீட்சிதர்கிட்டச் சொல்லிக்கிட்டிருந்தது காதிலே விழுந்ததுங்க. ரொம்ப சந்தோஷங்க. நீங்க வரன் தேடக் கிளம்பி மூணு மாதத்துக்கு மேலே ஆயிட்டுதுங்க."

"ஆமாம்! சங்கராந்தி ஆனதும் கிளம்பினேன். போகாத ஊரில்லை; தேடாத இடமில்லை. அதை ஏன் கேட்கிறே, நல்லான்! ஒன்று சரியாயிருந்தால், இன்னொன்று சரியா யிராது. படிப்பிருந்தால் சொத்து இராது; சொத்திருந்தால் படிப்பிராது; இரண்டும் இருந்தால், பையன் பிடிச்சிராது. இவ்வளவும் சரியாயிருந்தால், ஜாதகம் சரியாயிராது. ஏதோ, கடைசியில் பெரியவாள் புண்ணியத்திலே..."

இப்படிச் சொல்லிக் கொண்டே சாஸ்திரிகள் மடிசஞ்சியை அவிழ்த்து, அதனுள்ளிருந்து மூலையில் மஞ்சள் தடவிய இரண்டு ஜாதகங்களைக் கையில் எடுத்தார்.

"பாக்கி எது எப்படி யிருந்தாலும் சாதகப் பொருத்தந்தாங்க சரியா யிருக்கணும்!" என்றான் நல்லான்.

"அப்படியில்லை, நல்லான்! 'நாளென் செயும் கோளென் செயும்?' என்று அப்பர் சொல்லி யிருக்காப்பலே, பகவான் கிருபை யிருந்தால் மற்றதெல்லாம் என்னத்திற்கு? ஏதோ நம்ம திருப்திக்குப் பார்க்க வேண்டியது."

"இப்ப நிச்சயம் பண்ணியிருக்கிற இடம் சாதகப் பொருத்தம் சரியா யிருக்குதுங்களல்ல?"

"கூடியவரையில் பொருத்தந்தான். செவ்வாய் தோஷ ஜாதகம்; ஆனாலும் இரண்டு மூன்று பிரபல ஜோசியாளைக் கேட்டாச்சு-பாதகமில்லை, பண்ணலாம்னு சொல்லிவிட்டார்கள். செலவுதான், நல்லான், ஏகப்பட்டது ஆயிடும் போலிருக்கு!"

"வரதச்சணை எவ்வளவுங்க?"

"ரொக்கமா நாலாயிரம் ரூபாய்! அப்புறம்....."

"அப்பா! நாலாயிரம் ரூபாயா? கல்யாணச் செலவெல்லாம் சேர்த்தால் பத்தாயிரம் ரூபாய்க்கு ஓடிப் போயிடுங்களே?"

"போனாப் போகட்டும், நல்லான்! நமக்கு இருக்கிறது ஒரு குழந்தை! நாலு வருஷம் நன்னா விளைஞ்சால் கடனை அடைச்சுட்டுப் போறோம்."

"அது கிடக்கட்டுங்க, தள்ளுங்க! நம்ம குழந்தைக்குச் செலவழிக்காதே, வேறு யாருக்குச் செலவழிக்கப் போறோம்? ஆனால், கல்யாணத்தைப் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார் என்று சொல்லுவாங்க....."

"அதெல்லாம் ஜமாய்ச்சுடுவோம், நல்லான்! நீ இருக்கிறபோது எனக்கு என்ன கவலை?"

"நான் இருந்து என்னங்க பிரயோஜனம்? அக்கிரகாரத்து ஐயமார் ஒத்தாசையல்ல வேணும்? இந்தத் தீட்சிதர் மாதிரியே எல்லாரும் இருந்தாங்கன்னா..."

"அப்படி இருக்கமாட்டார்கள், நல்லான்! இந்த மாதிரி சமயத்தில் விட்டுக் கொடுப்பார்களா?.....வண்டி ஏன் இவ்வளவு மெள்ளப் போறது? மாட்டைக் கொஞ்சம் தட்டி ஓட்டேன்!" என்றார் சாஸ்திரியார்.

நல்லானுக்கு மிகவும் ஆச்சரியமாய்ப் போயிற்று. சாஸ்திரியார், "மாட்டை விரட்டாதே! மெள்ளப் போகட்டும்" என்று தான் சொல்வது வழக்கமே தவிர, "தட்டி ஓட்டு!" என்று சொல்லி வழக்கமே கிடையாது. இப்போது அவர் அப்படிச் சொன்னதும், நல்லான் தார்க்குச்சியை வைத்து இரண்டு அழுத்து அழுத்தினான். அந்த உயர்ந்த ஜாதி மாடுகள், வழக்கமில்லாத வழக்கமாகத் தாரினால் குத்தப் படவே ரோசத்துடன் பிய்த்துக் கொண்டு கிளம்பின.

"நிறுத்து, நிறுத்து, நிறுத்து!" என்று கத்தினார் சாஸ்திரிகள். ஏனெனில், அவர் கையிலிருந்த ஜாதகங்கள் இரண்டும் சாலையில் விழுந்து பறந்து போய்க்கொண்டிருந்தன. வண்டி கிளம்பின வேகத்தில் அவற்றைச் சாஸ்திரி தவற விட்டு விட்டார்.

நாலு கால் பாய்ச்சலில் கிளம்பிவிட்ட மாடுகளை இழுத்து நிறுத்துவதற்கு வெகு பிரயாசையாய்ப் போயிற்று. கடைசியாக வண்டி நின்றதும், சம்பு சாஸ்திரி குதித்து ஓடினார். சாலையின் இருபுறத்திலும் தேடிக்கொண்டே சென்றார். கடைசியாக, மூலைக்கொன்றாகக் கிடந்த இரண்டு ஜாதகங்களையும் பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்து மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டார்.

இந்தச் சம்பவத்தினால் நல்லானுடைய உற்சாகம் கொஞ்சம் குறைந்து போயிற்று. அவன் பிறகு சாஸ்திரியாருடன் பேச்சுக் கொடுக்காமல் வண்டியை விரைந்து ஓட்டத் தொடங்கினான்.

3. சீட்டுக் கச்சேரி

தஞ்சாவூர் ஜில்லாவில் குடமுருட்டிப் பாசனத்தில் உள்ளது நெடுங்கரைக் கிராமம்.

வருஷம் 1918; மாதம் சித்திரை; தேதி ஞாபகமில்லை. அன்று வெயில் கொளுத்தும் உச்சி வேளையில், நெடுங்கரை அக்கிரகாரம் வழக்கம்போல் அமைதி குடிகொண்டு விளங்கிற்று.

அக்கிரகாரத்தில் பெரிய தெரு என்றும், சின்னத் தெரு என்றும் இரண்டு தெருக்கள் உண்டு. பெரிய தெருவில் சுமார் இருபது வீடுகள் இருக்கும். தெருவின் நடுமத்தியிலுள்ள ஒரு வீட்டின் வாசல் திண்ணையில் வெயிலுக்கு அடக்கமாகத் தட்டி கட்டியிருந்தது. அந்தத் தட்டி மறைவில் சிலர் உட்கார்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவர் இஸ்பேட் ஆஸ் சீட்டை எடுத்துத் தரையில் ஓங்கி அடித்துவிட்டு, "ஏண்டா, வெங்கிட்டு! சம்பு சாஸ்திரி ஏண்டா இன்னும் வர்றலை? இந்த வருஷமும் கல்யாணம் நடக்காது போலிருக்கே?" என்றார்.

"இன்னிக்கு வர்றார் என்று கேள்வி, சாமா! ரயிலடிக்குக் கூட வண்டி போயிருக்கே!" என்று வெங்கிட்டு என்கிற வெங்கட்ராமய்யர் சொல்லிவிட்டு, கீழே கிடந்த சீட்டுக்களையெல்லாம் எடுத்துக் கலைக்க ஆரம்பித்தார்.

"இந்த வருஷங்கூடக் கல்யாணம் பண்ணாமற் போனா, அப்புறம் பெண்ணை ஆத்திலேயே வைச்சுக்க வேண்டியது தான்; ஏற்கனவே அது குதிரையாட்டமா வளர்ந்திருக்கு!" என்றார் சாமாவய்யர்.

வெங்கட்ராமய்யர் சீட்டைக் கலைத்துப் படார் படார் என்று அடித்துவிட்டு, நாலு நாலு சீட்டாக போட்டார். பிறகு, "ரமணி! கேளேண்டா!" என்றார்.

ரமணி ஐயர், "பிரயோஜனமில்லை, மேலே" என்றார்.

அடுத்தவர், "கேள்வி" என்றார்.

"மேலே பத்து" என்றார் அதற்கு அடுத்தவர்.

"இன்னொரு பத்து" என்றார் வெங்கட்ராமய்யர்.

"துருப்பு!" என்று கேட்டார் நாலாவது ஆசாமி. கொஞ்ச நேரம் ஆட்டத்தின் சுவாரஸ்யத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

"நரசிங்கபுரம் வரனைத்தான் கடைசியிலே நிச்சயம் பண்ணிண்டு வருவா போலிருக்கு" என்றார் வெங்கட்ராமய்யர்.

"ரமணி! மெதுவாய் அந்தச் சம்பந்தியின் விலாசத்தை மட்டும் நீ கொஞ்சம் தெரிஞ்சுண்டு வர்றணுண்டா!" என்றார் சாமா அய்யர்.

"உனக்கு என்னத்துக்கடா அப்பா அந்த விலாசம்?"

"என்னத்துக்கா? ஒரு மொட்டைக் கடுதாசி எழுதிப் போடலாம்னுதான்."

"அந்தப் பாச்சாவெல்லாம் கல்கத்தாக்காரன் கிட்டப் பலிக்காது. மலை முழுங்கி மகாதேவனுக்குக் கதவு ஓர் அப்பளாம். அவன்கள் எல்லாம் சாதி ஆசாரத்தைவிட்டு எத்தனை நாள் ஆச்சோ!... இறங்கித் தொலையேண்டா, பஞ்சு! கிளாவர் ராணியைக் கையில் வச்சுண்டு ஏன் முழிச்சிண்டிருக்கே?"

"அதுக்காக இல்லேடா! ஒரு கடுதாசி எழுதிப் போட்டுவச்சா, இன்னும் ஆயிரம் இரண்டாயிரம் பணமாவது கறக்கட்டுமேன்னு தான்! நான் சொல்றேன். கேளு, ரமணி! இந்தக் கல்யாண சமயத்திலே ஏதாவது ஒரு கலகம் பண்ணினால் ஒழிய, சம்பு

சாஸ்திரிக்கும் புத்தி வராது. வர வர மனுஷன் பண்ணற அக்கிரமம் அதிகமாகப் போச்சு. குடியானத் தெருவிலே யாராவது இப்போ நாம் சொல்றபடி கேக்கறானா? எல்லாரும் இரண்டு படி கூலி கொடுத்தா, இவன் இரண்டரைப் படி கொடுக்கிறது. எல்லாரும் அஞ்சிலே ஒரு வாரம் கொடுத்தா இவன் நாலிலே ஒன்று கொடுக்கிறது. இப்படிப் பண்ணிப் பண்ணி ஊரைக் குட்டிச் சுவராய் அடிச்சிட்டான்..."

"அதெல்லாம் சரிதானப்பா, அவன் செய்றது ரொம்ப அக்கிரமந்தான். ஆனால், நீ என்ன வேணாலும் பண்ணிக்கோ! கல்யாணத்தை மாத்திரம் நிறுத்தி விடாதே! அஞ்சாறு நாளைக்கு ஆத்திலே அடுப்பு மூட்டாமல் சௌக்கியமாய்ச் சாப்பிடுகிறதைக் கெடுத்துவிடாதே!"

"ரமணி! பஞ்சு ஏன் இப்படிச் சொல்றான் தெரியுமோல்லியோ? அவன் ஆம்படையாள் மூணு மாதமாய் நலங்குப் பாட்டெல்லாம் நெட்டுருப் பண்ணிண்டிருக்கா. அதையெல்லாம் பாடித் தீர்த்துடணுமாம்."

"கல்யாணம் நின்று போனால், பஞ்சுவுக்குக் கஷ்டம்; அடுத்தபடி ராமய்யா வாத்தியாருக்கு வருத்தம். ராமய்யா வாத்தியார் அவர் அம்மா வருஷாப்திகத்துக்கு இந்தக் கல்யாணத்தைத்தான் நம்பியிருக்கார்; தெரியுமோ இல்லையோ?"

"என்னை ஏண்டா இழுக்கறயள் உங்க வம்பிலே? நான் சிவ சிவான்னு இருக்கேன்" என்றார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமய்யா வாத்தியார்.

அப்போது ரமணி ஐயர், "சாமா! நீ இந்த விஷயத்திலே கொஞ்சங்கூடச் சிரத்தை எடுத்துக்க வேண்டாம். நம்ப தீக்ஷிதன் இருக்கான். எல்லாம் பார்த்துக்குவன். அவனுக்கு ஏற்கனவே சம்பு சாஸ்திரி மேலே கோபம், அவன் 'ஸெட்டில்' பண்ணிண்டு வந்து கிழவனுக்குப் பொண்ணைக் கொடுக்கலேன்னு" என்றார்.

"தீக்ஷிதன் கூட இன்னிக்கு எங்கேயோ கிளம்பிப் போயிருக்கான். ஏதாவது வத்தி வைக்கத்தான் போயிருக்கானோ, என்னமோ?" என்றார் ராமய்யா வாத்தியார்.

"என்னவெல்லாமோ சொல்லப் போயிட்டீர்களே தவிர, அந்தப் பெண் சாவித்திரி படற கஷ்டத்தைக் கவனிக்க மாட்டேங்கறயளே! எப்படியாவது அவளுக்கு ஒரு வழி பிறந்தாப் போதும் என்று எனக்கு இருக்கு. பாரு! மங்களம் அவளை என்ன பாடு படுத்தி வைக்கறா, பாரு!" என்றார் வெங்கட்ராமய்யர்.

அப்போது, அந்த வீட்டுக்கு எதிர்ச்சாரியில், இரண்டு வீட்டுக்கு அடுத்த விட்டிலிருந்து, ஒரு ஸ்திரீயின் குரல், "அடியே சாவித்திரி! உன்னைக் கட்டையிலே வைக்க! இங்கே உடனே வர்றயா இல்லையா?" என்ற கூச்சலிடும் சப்தம் கேட்டது.

சாமா அய்யர், "சாவித்திரி மாத்திரம் ஏதோ பரம சாது என்று எண்ணாதேடா, வெங்கிட்டு! அது பொல்லாத வாய்த் துடுக்கு!" என்றார்.

"போகிறது; மங்களத்துக்குப் பரிந்து பேச நீ ஒருவனாவது இருக்கியே?" என்றார் ரமணி ஐயர்.

"போடா! இது என்ன ஆட்டண்டா! சீட்டை நேரப் பிடிக்கிறதா தலை கீழாப் பிடிக்கிறதா என்று தெரியாதவனோடெல்லாம் ஆட வேண்டியிருக்கு!" என்று சொல்லி, சாமாவய்யர் கையில் இருந்த சீட்டுகளைக் கீழே விட்டெறிந்தார். எல்லாரும் அவரவர்கள் சீட்டுகளைத் தரையில் தொப்பு தொப்பென்று போட்டார்கள்.

"பட்டாபிஷேகத்துக்குப் பயந்துண்டு போட்டுட்டயாக்கும். சரி, சரி, ஆட்டம் போறும்; அவாவாள் ஆத்துக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கோ!" என்று வெங்கட்ராமய்யர் சொல்லிச் சீட்டுகளை எடுத்துச் சேர்த்தார். கச்சேரி முடிந்தது! ஒவ்வொருவராய் எழுந்து சென்றார்கள்.

4. சாவித்திரியின் அலறல்

சாவித்திரிக்குச் சாபங் கொடுத்த குரல் எந்த வீட்டிலிருந்து வந்ததோ, அந்த வீடு நெடுங்கரை அக்கிரகாரத்திலேயே பெரிய வீடாய்க் காணப்பட்டது. அதுதான் சம்பு சாஸ்திரியின் வீடு என்பதை நாம் சுலபமாய் ஊகிக்கலாம்.

அந்த வீட்டின் முன் வாசற்படிக்கு மேலே 'ஸ்ரீராமஜயம்' என்றும் 'நல்வரவு' என்றும் எழுதியிருப்பதைப் பார்த்ததும், நமக்கும் உள்ளே போகலாம் என்ற தைரியம் ஏற்படுகிறது. வீட்டுக்குள்ளிருந்து வரும் புஷ்பங்களின் நறுமணமும் நம்மைக் கவர்ந்து இழுக்கிறது.

உள்ளே சென்றதும், விஸ்தாரமான கூடத்தைப் பார்க்கிறோம். கூடத்தின் சுவரில் படங்கள் மாட்டப் பட்டிருக்கின்றன. ஒரு படத்தில், ஸ்ரீராமன் மகுடாபிஷேகம் செய்து கொள்கிறான். இன்னொரு படத்தில் குழந்தை கிருஷ்ணன் கட்டைவிரலை ருசி பார்த்துக் கொண்டிருக்கிறான். மற்றொரு படத்தில் வேணுகோபாலன் பசுமாட்டின் மீது சாய்ந்து கொண்டு புல்லாங்குழல் வாசிக்கிறான். வேறொரு படத்தில் சீதை மாயமானைப் பிடித்துத் தரும்படி இராமனைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். இன்னொரு படத்தில் ஸ்ரீசுப்பிரமண்ய சுவாமி மயில் வாகனத்தில் வீற்றிருக்கிறார்.

இவற்றை நாம் பார்த்துக் கொண்டிருக்கையில், இனிமை ததும்பும் பெண் குரலில், செஞ்சுருட்டி ராகத்தில்,

'எப்போ வருவாரோ எந்தன் - கலிதீர'

என்ற நந்தன் சரித்திரக் கீர்த்தனை கேட்கிறது. பாட்டு வந்த பக்கம் திரும்பிப் பார்த்தால், கூடத்தின் ஒரு பக்கத்திலுள்ள பூஜை அறையில் ஓர் இளம்பெண் உட்கார்ந்து பூத்தொடுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அந்த அறையின் சுவரோரத்தில் அமைந்த பூஜை மண்டபத்தில் பித்தளைப் பீடம் ஒன்றில் தேவியின் விக்கிரகம் இருக்கிறது. பின்னால் சில படங்களும் இருக்கின்றன. மண்டபத்துக்கு எதிரில் அழகாக இழை கோலம் போட்டிருக்கிறது. குத்துவிளக்கு எரிகிறது.

பாடிக்கொண்டிருந்த பெண்ணுக்கெதிரில் இரண்டு தாம்பாளங்கள் இருக்கின்றன. ஒன்றில் உதிரிப்பூக்களும், இன்னொன்றில் தொடுத்த பூமாலைகளும் இருக்கின்றன. அப்போது அந்தக் குழந்தை-ஆம், குழந்தையென்றுதான் சொல்லவேண்டும்; வயது பதின்மூன்று பதினாலுக்குள் தான் இருக்கும். ஊசியும் நூலும் வைத்துக்கொண்டு சம்பங்கிப் பூக்களை நீளவாக்கில் கோத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பால் வடியும் முகத்தில் புன்னகை பூத்திருந்தது.

பின்கட்டிலிருந்து, முன்னமேயே நாம் கேட்ட ஸ்திரீயின் குரல், "அடியே சாவித்திரி! நீ நாசமாய்ப் போக! இப்போ உடனே எழுந்து வர்றயா இல்லையா?" என்று உரத்துக் கத்தியது கேட்டது.

"நான் நாசமாய்ப் போய்ட்டா அப்புறம் நீ சௌக்யமா யிருப்பாயா, சித்தி?" என்றாள் சாவித்திரி. இப்படி அவள் மெதுவான குரலில்தான் சொன்னாள். ஆனாலும் அது பின்கட்டுக்கு எட்டியிருக்க வேண்டும். ஏனெனில், அடுத்த கணம், உள்ளே இன்னொரு வயதான ஸ்திரீயின் குரல், "வாயைப் பார்த்தயோல்லியோ, வாயை!" என்று சொல்வது கேட்டது.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம், "என்ன சொன்னே?" என்று கேட்டுக் கொண்டு ரௌத்ராகாரமாக ஒரு ஸ்திரீ சமையலுள்ளிருந்து வந்தாள். அவளுக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். அவளுக்குப் பின்னால் முதுமைப் பிராயத்து ஸ்திரீ ஒருத்தியும் வந்தாள்.

சாவித்திரி சாந்தமாக, "சித்தி! நான் ஒன்றும் சொல்லிவிடவில்லையே! இப்ப, ஊரிலிருந்து அப்பா வந்துடுவாளே; வந்ததும் பூஜைக்கு எல்லாம் தயாராயிருக்கவேண்டாமா? அதுக்கோசரம் இந்தப் பூவை ஒரு நிமிஷத்திலே தொடுத்து வைச்சுட்டு வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீ கோவிச்சுண்டு நூறு கட்டேலே போறதுக்கும், ஆயிரம் நாசமாய்ப் போறதுக்கும் இழுத்துட்டயே" என்றாள்.

"ஆமாண்டி, ஆமாம்! உனக்கு நாலு வயதிலேருந்து வேளா வேளைக்குச் சாதம் போட்டு, தலை பின்னி, எண்ணெய் தேச்சுவிட்டு, எல்லா எழவும் எடுக்கிறதுக்கு எனக்குப் பாத்தியதை உண்டு; ஒரு வார்த்தை சொல்றதுக்கு மட்டும் பாத்தியதை இல்லை! ஆமானே?" என்றாள் மங்களம்.

"இப்ப என்னடி ஆச்சு, பெண்ணே! இன்னும் கல்யாணம், கார்த்தி, தீபாவளி, சங்கராந்தி, திரட்சி, சீமந்தம் எவ்வளவோ பாக்கி இருக்கே! அவ்வளவு எழவும் நீ தானே எடுத்தாகணும்?" என்றாள் மங்களத்தின் தாயார்.

"பாட்டி! எனக்குக் கல்யாணமும் வேண்டாம். கழுத்தறுப்பும் வேண்டாம். சித்திக்கு ஏற்கனவே வையத் தெரியாது! நீங்க வேறே கத்துக் கொடுங்கோ!" என்றாள்.

இதைக் கேட்ட பாட்டி! "பார்த்தாயா? பார்த்தாயா? நான் கத்துக் கொடுக்கிறேனாமே! முளைச்சு முளையாகலே? அதுக்குள்ளே இவ்வளவு அகமா? இந்த வீட்டிலே நான் என்னத்துக்கடி இருக்கேன் இனிமேல்? இதோ போறேன்! நீயாச்சு, உன் பொண்ணாச்சு" என்றாள்.

அதற்கு மங்களம், "நன்னாயிருக்கே? நீ என்னத்துக்குப் போறது? நாளைக்கு வீட்டைவிட்டு ஓடப்போற நாய்க்காக நீ ஏன் போகணும்? பேசாமே இரு. நானும் போனால் போறது, போனால் போறது என்று விட்டு விட்டுத்தான் இப்படிக் கட்டை துளுத்துப்போச்சு, இதோ கரண்டியைக் காய்ச்சிண்டு வந்து இவ முதுகிலே சூடு போடாத போனால், என் பேர் மங்களமில்லை" என்று சொல்லிவிட்டு, அவசரமாகச் சமையற் கட்டுக்குள் போனாள். அவளைத் தொடர்ந்து பாட்டியும் சென்றாள்.

அவர்கள் போன பிறகு, சாவித்திரி சற்று நேரம் மேலே பார்த்த வண்ணம் மௌனமாயிருந்தாள். பிறகு குனிந்து பூவைக் கோக்க ஆரம்பித்தாள். அவள் கண்ணில் துளித்திருந்த ஜலம் முத்து முத்தாகப் பூக்களின் மீது உதிர்ந்தது. கண்ணீரை நிறுத்துவதற்காகவோ என்னவோ அவள் கண்ணை இறுக மூடிக்கொண்டு சற்று நேரம் இருந்தாள். கூடத்தில் காலடிச் சத்தத்தைக் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தாள்.

மங்களம் சமையலறையிலிருந்து கையில் இரும்புக் கரண்டியுடன் வருவது தெரிந்தது. அந்த இரும்புக் கரண்டியின் அடிப்பாகம் பழுக்கக் காய்ந்து அதிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.

"ஐயோ!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு சாவித்திரி எழுந்தாள். பூஜை அறையிலிருந்து வெளியே முற்றத்தைப் பார்க்க ஓடினாள். மங்களமும் அவளைத் தொடர்ந்து போனாள். முற்றத்திலிருந்து தாழ்வாரத்தில் பாய்ந்து ஏறினாள் சாவித்திரி. மங்களம் அப்படியும் விடவில்லை. அவள் ரொம்ப நெருங்கி வந்துவிடவே, சாவித்திரி ரேழிக் கதவைத் திறந்து கொண்டு ரேழியில் ஓடினாள்.

அதே சமயத்தில், வாசற்பக்கத்திலிருந்து வாசற்கதவும் திறந்தது.

சம்பு சாஸ்திரி உள்ளே வந்தார்!

5. தந்தை யும் ம களும்

சம்பு சாஸ்திரி அவ்வாறு உள்ளே பிரவேசித்ததும், சாவித்திரி, மங்களம் இரண்டு பேருமே ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டார்கள்.

திகைப்பு நீங்கியதும், சாவித்திரி, "அப்பா!" என்று அலறிக்கொண்டு ஓடிப்போய்ச் சம்பு சாஸ்திரியைக் கட்டிக்கொண்டார்கள்.

சாஸ்திரி, "மங்களம்!" என்று சொல்லி அவளை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தார்.

மங்களம் ஒன்றும் பதில் பேசாமல் திரும்பி விடுவிடென்று சமையலறைக்குள் சென்றாள்.

சாஸ்திரி சாவித்திரியைத் தழுவியபடியே அழைத்துக் கொண்டு உள்ளே வந்து தாழ்வாரத்தில் போட்டிருந்த விசுபலகையில் உட்கார்ந்தார். சாவித்திரியையும் தம் அருகில் உட்கார வைத்தார். குழந்தை அவருடைய மடியில் முகத்தை வைத்துப் படுத்தபடி விசிக்கத் தொடங்கினாள்.

சமையலுள்ளில் சற்று உரத்த குரலில், சம்பு சாஸ்திரியின் காதில் விழும்படியாகப் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

"அடி பெண்ணே! நான் அப்பவே சொன்னேனோ, இல்லையோ! நீ விளையாட்டுக்காக ஒரு காரியத்தைச் செய்யப் போக, அவர் நிஜந்தான்னு நினைச்சுண்டாலும் நினைச்சுக்குவர். வேண்டாம்னு சொன்னாக் கேட்டாத்தானே?"

"நினைச்சுண்டா நினைச்சுக்கட்டுமே! கல்யாணம் ஆகப்போற பொண்ணைக் கரண்டியைக் காய்ச்சிக் சூடறதுக்கு இங்கே யாருக்காவது பைத்தியம் பிடிச்சிருக்கா, என்ன?"

"இல்லேடி, கரைக்கறவர் கரைச்சாக் கல்லுங்கரையும் என்கிறாப்பலே- இந்தப் பொண்ணு இல்லாத்தையும் பொல்லாத்தையும் ஏற்கெனவே சொல்லி வைச்சுண்டிருக்காளே!"

"வேணும்னா, இனிமே அவர் வெளியிலே போற போது, பொண்ணையும் கூட அழைச்சுண்டு போகட்டும். அவ ஹிம்சையை இத்தனை நாளும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாச்சு; இனிமேல் என்னால் பொறுக்க முடியாது."

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சம்பு சாஸ்திரி, சாந்தமான குரலில், "குழந்தை! சித்திக்குக் கோபமூட்டறதுக்கு நீ என்ன பண்ணினே, அம்மா!" என்று கேட்டார்.

சாவித்திரி, விசித்துக் கொண்டே, "நான் ஒண்ணும் பண்ணலை, அப்பா! பூஜைக்குப் பூத்தொடுத்திண்டிருந்தேன். சித்தி, கிணத்துலேயிருந்து ஜலங் கொண்டு வருவதற்குக் கூப்பிட்டாள். காலமேயிருந்து, இருபது குடம் கொண்டு வந்து கொட்டிவிட்டேன், அப்பா! 'இதோ பூவைத் தொடுத்து வைச்சுட்டு வர்றேன்னு' சொன்னேன். அதுக்காகக் கரண்டியைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சி எடுத்துண்டு சூடறதற்கு வந்தா அப்பா!" என்று சொல்லி, பலமாக அழத் தொடங்கினாள்.

சம்பு சாஸ்திரிக்கு அப்போது பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. பத்து வருஷத்துக்கு முன்னால் நடந்ததென்றாலும் நேற்றுத்தான் நடந்ததுபோல் அச்சம்பவம் அவர் மனக்கண் முன்னால் தோன்றியது.

சாஸ்திரி மாட்டு கொட்டகையில் இருந்தார். புதுச் சத்திரம் சந்தையிலிருந்து புதிதாக வாங்கிக்கொண்டு வந்திருந்த உயர்ந்த ஜாதி 'உசுலாயத்து' மாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். "ரூபாய் இருநூத்தைம்பது கொடுத்தாலும் பொறும்,

அப்பா!" என்று நல்லானைப் பார்த்துச் சொன்னார். அப்போது, தண்ணீரில் ஏதோ விழுந்ததுபோல் ஒரு சிறு சப்தம் எங்கிருந்தோ கேட்டது. சின்ன சப்தந்தான்; ஆனாலும் அது ஏன் அவருடைய இருதயத்தை அவ்வாறு பேதித்தது? அதன் காரணம் அடுத்த விநாடியே தெரிய வந்தது. "ஐயோ! குழந்தை கிணத்துலே விழுந்துடுத்தே!" என்றது ஒரு தீனமான குரல். அது அவருடைய அத்தைக் கிழவியின் குரல்.

அத்தையின் குரலுக்கு எதிரொலியே போல், சம்பு சாஸ்திரியும், "ஐயோ!" என்றார். உடனே, விரைந்து ஓடவேண்டுமென்று அவர் மனம் துடித்தது! ஆனால், அந்தச் சமயத்தில் அவருடைய கால்கள் சொன்னபடி கேட்டால்தானே? இரண்டு அடி வைப்பதற்கு முன்னால் தடுமாறிக் கீழே விழுந்தார்.

அதிர்ஷ்டவசமாக, அச்சமயம் இன்னொரு மனிதனுக்குக் கால்கள் சொன்னபடி கேட்டன. தடுமாறி விழுந்த சம்பு சாஸ்திரியைத் திரும்பிக்கூடப் பாராமல் நல்லான் மின்னலைப்போல் பாய்ந்து சென்றான். மூன்று கொல்லைக் கட்டுகளையும், வேலிகள் செடிகள் உள்படத் தாவிக்கொண்டு சென்று, கண்ணை மூடித் திறக்கும் நேரத்தில் சாஸ்திரியாரின் வீட்டுக் கொல்லைக் கிணற்றை அடைந்தான். கிணற்றைச் சுற்றி எழெட்டுப் பேர் நின்று கொண்டு குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டிருந்தார்கள். ஒருவர் தாம்புக் கயிற்றை எடுத்துக் கீழே விட முயற்சித்தார். இன்னொருவர் ஏற்ற மரத்தை இழுத்து அமுக்க முயன்ற கொண்டிருந்தார். நல்லான் அவர்களையெல்லாம் ஒரே தள்ளில் விலக்கித் தள்ளிவிட்டுக் கிணற்றுக்குள் பரபரவென்று இறங்கினான்.

இதெல்லாம் சாஸ்திரிக்கு அப்போது தெரியாது. பிற்பாடு மற்றவர்கள் சொல்லித்தான் தெரிந்தது. விழுந்தவர் எழுந்திருந்து நெஞ்சு படக் படக் என்று அடித்துக் கொள்ள, கால் கைகள் நடுங்க, தடுமாற்றத்துடன் ஓடிச்சென்று கிணற்றங் கரையை அடைந்த சமயம், நல்லான் கிணற்றுக்குள்ளிருந்து குழந்தை சாவித்திரியைத் தோளில் போட்டுக்கொண்டு கரையேறிக் கொண்டிருந்தான். சாஸ்திரியைப் பார்த்ததும், "சாமி! பயப்படாதீங்க! குழந்தைக்கு அபாயம் இல்லீங்க" என்றான். அவ்வளவுதான்; சாஸ்திரியார் ஸ்மரணை இழந்து கீழே விழுந்தார்.

அன்று சாயங்காலம் சாஸ்திரியின் அத்தை, அவரிடம் சொன்னாள்: "அப்பா! எத்தனையோ நாளாய் நானும் சொல்லிண்டு வந்தேன். நீ கேட்கவில்லை. எனக்கோ தள்ளாமை அதிகமாயிடுத்து; நாளுக்கு நாள் கண் தெரியலை. இந்தக் குழந்தையைக் காப்பாத்தறதற்கு இனிமேல் என்னை நம்பாதே. நான் சொல்றதைக் கேளு. கொஞ்சம் வயசான பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொள்ளு. உனக்கென்ன அப்படி பிரமாதமாய் வயசாயிடுத்து? ஐம்பது வயசானவாள் எல்லாம் கல்யாணம் பண்ணிக்கலையா? உனக்காக இல்லாமற் போனாலும், இந்தத் தாயில்லாப் பெண்ணைக் காப்பாத்தறத்துக்காவது கல்யாணம் பண்ணிக்கொள்."

இந்த மாதிரி இதற்கு முன்னாலும் அத்தை எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறாள், அப்போதெல்லாம் சாஸ்திரி அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே போய்விடுவார். அல்லது "அத்தை! வேறே ஏதாவது பேச்சு இருந்தால் பேசேன்!" என்பார். ஆனால் இன்று எழுந்து போகவும் இல்லை; மறுத்துப் பேசவும் இல்லை. மௌனமாயிருந்தார்.

சாஸ்திரியின் முதல் மனைவி பாக்கியம், சாவித்திரி கைக் குழந்தையாயிருக்கும் போதே வைசூரி போட்டு இறந்து போனாள். சாஸ்திரியின் வாழ்க்கையில் அவருடைய தங்கை சம்பந்தமான ஒரு துக்க சம்பவம் ஏற்கனவே நிகழ்ந்திருந்தது. அவருடைய உயிருக்குயிராயிருந்த மனைவியும் இறந்துவிடவே, சாஸ்திரிக்கு வாழ்விலேயே விரக்தி ஏற்பட்டது. அவருடைய மனமெல்லாம் பகவத் பக்தியில் ஈடுபட்டது. இரண்டாவது கல்யாணத்தைப் பற்றி அவர் நினைக்கவேயில்லை. உலகில் பந்தம் அதிகமாக ஆக, துக்கமும் அதிகம் என்பதை உணர்ந்த சாஸ்திரி இது

விஷயத்தில் ஒரே பிடிவாதமாயிருந்தார். எவ்வளவோ பேர் எத்தனையோ விதமாகச் சொல்லியும் அவர் செவி கொடுக்கவில்லை. ஆனால், இன்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு அவருடைய மனம் மாறிவிட்டது. தாயில்லாக் குழந்தையான சாவித்திரியைப் பார்த்துக் கொள்ள ஒரு தாய் அவசியந்தான் என்று அவருக்குப் பட்டது. 'அத்தையின் வாக்கு ஒரு வேளை அம்பிகையின் வாக்காயிருக்கலாம்' என்று தோன்றிற்று. அந்த வருஷத்திலேயே அவர் மங்களத்தை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார்.

மேற்சொன்னது அவ்வளவும் சம்பு சாஸ்திரிக்கு இப்போது தெளிவாக ஞாபகத்தில் வந்தது. தாம் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டதன் நோக்கம் என்ன என்பதையும், அந்த நோக்கம் எவ்வளவு அழகாக நிறைவேறியிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்த போது அவரை அறியாமல் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பும் அதில் கலந்திருந்த துக்கமும், விசித்துக் கொண்டிருந்த சாவித்திரியைத் திடுக்கிடச் செய்தன. சாவித்திரி விசித்தலை நிறுத்தி, நீர் ததும்பிய கண்களுடன் தகப்பனாரின் முகத்தை நோக்கினாள். அதைப் பார்த்த சாஸ்திரி அவளுடைய முதுகைத் தடவிக் கொண்டே, "குழந்தை! நீ வருத்தப்படாதே, அம்மா! உன் கஷ்டங்களுக்கு முடிவு வந்துவிட்டது. கல்யாணம் நிச்சயம் பண்ணிண்டு வந்திருக்கேன். மாப்பிள்ளைக்கு ஸ்ரீதரன் என்று பெயர். பி.ஏ. பாஸ் பண்ணியிருக்கான். கல்யாணம் ஆனதும் சீக்கிரத்திலேயே உன்னை அழைச்சுண்டு போய் விடுவார்கள், அம்மா!" என்று கூறியபோது அவருடைய கண்களிலும் ஜலம் ததும்பத் தொடங்கியது.

ஆனால், சாவித்திரியின் கண்களிலிருந்த கண்ணீர் என்ன ஆயிற்று? திடீரென்று எப்படி மாயமாய் மறைந்தது? அவளுடைய முகம் ஒரு கண நேரத்தில் இப்படி மலர்ந்து விட்டதே! என்ன அதிசயம்!

"அது இருக்கட்டும், அப்பா! எத்தனை நாழியாச்சு, நீங்க இன்னும் பட்டினியாயிருக்கயளே! சுருக்க ஸ்நானம் பண்ணிவிட்டு வாங்கோ! நான் அதுக்குள்ளே பூஜைக்கு எல்லாம் எடுத்து வைக்கிறேன்" என்றாள்.

6. ஸ்ரீதரன், பி.ஏ.

சாவித்திரி, அப்பாவினுடைய பூஜைக்கு வேண்டிய பொருள்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தபோது, அவளுடைய மனம் ஸ்ரீதரன் என்னும் உருவம் தெரியாத தெய்வத்தைப் பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டது.

ஸ்ரீதரன்!-எவ்வளவு அழகான பெயர்! அவர் எப்படி இருப்பாரோ? பி.ஏ. பாஸ் பண்ணியவர் என்றல்லவா அப்பா சொன்னார்? சென்ற வருஷத்தில் நெடுங்கரைக்கு வந்திருந்த பி.ஏ. கணபதி என்பவரின் ஞாபகம் சாவித்திரிக்கு வந்தது. அந்தக் கணபதி அவருடைய பெயருக்கு விரோதமாக உயரமாய் ஒல்லியாய் இருந்தார். தலையில் உச்சிக் குடுமி வைத்திருந்தார். கிராமாந்தரத்தில் அந்தக் காலத்தில் வாலிபர்கள் தலை நிறையக் குடுமி வைத்திருப்பது சாதாரண வழக்கம். பட்டணங்களுக்குப் படிக்கப் போனவர்கள் அந்த வழக்கத்துக்கு விரோதம் செய்தார்கள். சிலர் கிராப் செய்துகொண்டார்கள்; வேறு சிலர் அதற்கு நேர்மாறாக உச்சிக் குடுமி வைத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். பெரும்பாலும் கலாசாலைப் படிப்பை முடித்தவர்கள்தான் இம்மாதிரி செய்தார்கள். இதனால் அந்தக் காலத்தில் உச்சிக் குடுமிக்கு, 'பி.ஏ. குடுமி' என்று பெயர் ஏற்பட்டிருந்தது. மேற்படி கணபதியின் உச்சிக் குடுமியை, 'பி.ஏ. குடுமி' என்று ஊரில் எல்லாரும் சொன்னார்கள்.

ஆகவே, ஸ்ரீதரன் தலையிலும் உச்சிக் குடுமிதான் இருக்கும் என்று சாவித்திரி நினைத்தாள். மேற்படி கணபதியின் உச்சிக் குடுமி பார்ப்பதற்கு நன்றாயில்லையென்று மற்றக் குட்டிகளுடன் சேர்ந்து தானும் பரிகாசம் பண்ணியதை நினைத்தபோது சாவித்திரிக்குத் தன் பேரிலேயே கோபம் வந்தது!

சீச்சீ! குடுமிதான் பெரிய காரியமாக்கும்! குடுமி எப்படியிருந்தால் என்ன? அவர் முகம் எப்படியிருக்குமோ? ஒரு வேளை மூக்குக்கண்ணாடி போட்டுக் கொண்டிருப்பாரோ? போட்டுக் கொண்டிருந்தால், பார்ப்பதற்கு அழகாய்த்தான் இருக்கும். போட்டுக்கொண்டிராமற் போனால், இன்னும் ரொம்ப நல்லது. முகத்தின் லட்சணம் எங்கே போய் விடும்?-இந்த மாதிரி எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

ஏறக்குறைய அதே சமயத்தில், என்.ஆர்.ஸ்ரீதரன், பி.ஏ. சென்னை தம்பு செட்டித் தெருவில் இருந்த ஒரு ஹோட்டலில் மாடி அறையில் கயிற்றுக் கட்டிலில் படுத்தபடி, தனக்கு வரப்போகும் மனைவி எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிப் பகற்கனவு கண்டுகொண்டிருந்தான். அவன் மார்பின்மேல் சார்லஸ் கார்விஸ் நாவல் ஒன்று கிடந்தது.

ஆமாம்; அவன் கண்டது பகற்கனவுதான். ஏனெனில், அவன் கண்கள் மூடியிருந்தனவே தவிர, அவன் உண்மையில் தூங்கவில்லை. மனோராஜ்யந்தான் செய்து கொண்டிருந்தான்.

ஏறக்குறையச் சென்ற ஐந்தாறு மாத காலமாக அதாவது அவன் நரசிங்கபுரத்திலிருந்து உத்தியோகம் தேடும் வியாஜத்துடன் சென்னைக்கு வந்ததிலிருந்து அவனுடைய நேரமெல்லாம் பெரும்பாலும் இத்தகைய மனோராஜ்யத்திலேயே சென்று கொண்டிருந்தது.

இவ்வளவு நாள் யோசனைக்குப் பிறகும் அவன் ஒரு திட்டமான முடிவுக்கு வரவில்லையென்பது உண்மைதான். முக்கியமாக, தனக்கு வரப்போகும் மனைவியின் முகம் எப்படியிருக்க வேண்டுமென்று அவனால் பூரணமாகக் கற்பனை செய்ய முடியவில்லை. ரொம்ப அழகாயிருக்க வேண்டும்; ரொம்ப ரொம்ப அழகாயிருக்க வேண்டும்; தான் இதுவரையில் பார்த்திருக்கும் அழகான முகங்கள் எல்லாவற்றையும்

காட்டிலும் அழகாயிருக்க வேண்டும்! இப்படிப் பொதுவாக நினைக்கத்தான் முடிந்ததே தவிர, அது எப்படியிருக்க வேண்டுமென்று அவன் மனத்தில் பிடிபடவேயில்லை.

ஆனால், வேறு சில அம்சங்களில் தனக்கு வரப்போகும் மனைவி எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றி, அவனுக்குத் திடமான அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. அவள் படித்த நாகரிகமான பெண்ணாயிருக்க வேண்டும். சந்தேகமில்லை. பதினெட்டு முழப்புடவையைப் பிரிமணை மாதிரி சுற்றிக் கொள்ளும் பட்டிக்காட்டுத் தரித்திரங்கள் முகத்திலும் அவனால் விழிக்க முடியாது. நடை உடை பாவனைகள் எல்லாம் ஜோராக இருக்க வேண்டும்.

கல்கத்தாவிலும் சென்னையிலும் தான் பார்த்திருக்கும் நாகரிகமான பெண்களை அவன் நினைத்துப் பார்த்துக் கொண்டான். அப்போது அவனுடைய சிநேகிதன் நாணாவினுடைய மனைவி ஸுலோசனாவின் ஞாபகம் வந்தது. அதிர்ஷ்டக்காரன் நாணா! ஸுலோசனாதான் என்ன நாகரிகம்! என்ன படிப்பு! அவள் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டு பாடினால், அப்ஸரஸ் பூமிக்கு வந்து பாடுவது போலல்லவா இருக்கிறது?

தான் நாணாவுக்கு ஒருநாளும் குறைந்து போகக் கூடாது என்று எண்ணமிட்டான் ஸ்ரீதரன். அதைக் காட்டிலும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்துப் போகலாம். ஸ்ரீதரன் நரசிங்கபுரத்திலிருந்து சென்னைக்கு வந்ததற்கே முக்கிய காரணம் இதுதான். அங்கே இருந்தால், யாராவது பட்டிக்காட்டுப் பேர்வழிகள் வரன், கிரன் என்று ஜாதகத்தையும் கீதகத்தையும் எடுத்துக் கொண்டு வந்து சேர்வார்கள். அம்மாவும், அப்பாவும் மாற்றி மாற்றிப் பிராணனை வாங்கி விடுவார்கள்! அந்தத் தொந்தரவே வேண்டாமென்றுதான் அவன் சென்னைக்கு வந்திருந்தான்.

எல்லாம் சரிதான்; ஆனால் அவனுடைய எண்ணம் நிறைவேறுவது எப்படி? தாயார் தகப்பனார் பிரயத்தனம் செய்யவேண்டாமென்றால், பிறகு கல்யாணம் நடப்பது தான் எவ்வாறு? இந்தப் பாழாய்ப்போன தேசத்தில் மனதுக்குப் பிடித்த ஒரு பெண்ணைக் கண்டோ ம், காதலித்தோம், கல்யாணம் செய்துகொண்டோ ம் என்பதற்கெல்லாம் எங்கே இடம் இருக்கிறது?

ஐயோ, தான் ஐ.சி.எஸ். படிப்பதற்காகச் சீமைக்குப் போவதாகச் சொன்னதை அம்மா மட்டும் அப்படிப் பிடிவாதமாய்த் தடுத்திராவிட்டால்! "நீ சீமைக்குப் போனால் நான் உயிரை விட்டுவிடுவேன்!" என்றல்லவா சொல்லித் தடுத்துவிட்டாள், பாவி! ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையாயிருப்பதில் இது தான் கஷ்டம்.

சீமைக்கு மட்டும் போயிருந்தால்!... ஸ்ரீதரன் அந்த நிமிஷம் மனோராஜ்யத்தில் கப்பல் பிரயாணம் செய்யலானான். கப்பல் மேல்தளத்தில் அவன் குறுக்கும் நெடுக்குமாய் உலாவுகிறான். அப்போது எதிரில் நவநாகரிகத்திற் சிறந்த ஒரு பெண் வருகிறாள். அவள் யாரோ சுதேச ராஜாவின் மகளாகவோ, அல்லது பெரிய வடக்கத்திப் பிரபுவின் மகளாகவோ இருக்க வேண்டும். அவர்களுடைய கண்கள் சந்திக்கின்றன. பிறகு அவர்களுடைய கரங்கள் சந்திக்கின்றன. தங்களுடைய அழியாத காதலுக்கு அறிகுறியாக அவர்கள் தங்கள் கைவிரல்களில் உள்ள மோதிரங்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

ஆகா! நாணாவும் அந்தக் கப்பலில் இருந்து இந்தக் காட்சியை மட்டும் பார்த்தானானால், என்ன செய்வான்? வயிறெரிந்து கடலில் குதித்து விட மாட்டானா?...

ஸ்ரீதரனுடைய மனோராஜ்யம் இவ்வளவு ரஸமான கட்டத்துக்கு வந்திருந்தபோது, அவனுடைய அறையின் கதவைத் தடதடவென்று தட்டும் சத்தம் கேட்டது. அதே சமயத்தில் நாணாவின் குரல், "ஏண்டா, இடியட்! உனக்குக் கல்யாணமாமேடா! எந்த மடையண்டா உனக்குப் பெண்ணைக் கொடுக்கப் போகிறான்?" என்று முழங்கிற்று.

7. தந்தியும் தபாலும்

ஸ்ரீதரன், "வந்துட்டாயா, அப்பா! வா!" என்று சொல்லிக் கொண்டே, படுக்கையிலிருந்து எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

நாணா உள்ளே நுழைந்த போது, "ஓகோ! தூக்கம் போலே இருக்கு. தூங்குடா, அப்படி, தூங்கு! அடுத்த வருஷம் இந்த நாளிலே தலைமாட்டிலே ஒரு குழந்தை கால்மாட்டிலே ஒரு குழந்தை கிடந்து 'குவாங்' 'குவாங்' என்று கத்தும். அப்புறம் தூக்கமேது, எழவேது? எல்லாத் தூக்கத்தையும் இப்பவே தூங்கி விடு" என்று சொல்லிக் கொண்டு வந்தான்.

"நாணா அய்யர்வாள்! தங்கள் திருவாயால் என்ன திருப் பிதற்றல் பிதற்றுகிறீர்கள்?" என்று கேட்டான் ஸ்ரீதரன்.

"நானா பிதற்றுகிறேன்? இப்போ என்ன பந்தயம் கட்டறே? முதல்முதல்லே, உனக்கு ரெட்டைப் பிள்ளைதான் பிறக்கப் போகிறது என்கிறேன்..."

"சரி பிறக்கட்டும். அப்புறம்?"

"நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப் போலே அமுக்கனைப் பார்த்ததில்லையட்ட, ஸ்ரீதரா! கல்யாணம் நிச்சயமாச்சுன்னு சமாசாரம் வந்தால் உடனே..."

"கல்யாணமா? யாருக்கு?" என்று கேட்டான் ஸ்ரீதரன்.

"சரியாய்ப் போச்சு! 'அட எழவே! எனக்கா கல்யாணம்?' என்றானாம் ஒருவன்! அந்த மாதிரிதான் இருக்கு கதை!"

"இருந்துட்டுப் போகட்டும்; இப்பவாவது 'வாட் இஸ் தி மாட்டர்'ன்னு சொல்லித் தொலை!"

"என்ன?...நிஜமா உனக்கு ஒண்ணுந் தெரியாதுன்னா சொல்றே?"

"ஆமாம், ஆமாம்; 'நாட் கில்ட்டி'ன்னு தான் அப்பவே பிடிச்சு சொல்லிண்டிருக்கேன்."

"இதென்ன வேடிக்கையான்னா இருக்கு? இந்தத் தந்தியைப் பாரு!" என்று சொல்லி, நாணா தன் சட்டைப் பையிலிருந்து ஒரு தந்தியை எடுத்து ஸ்ரீதரனிடம் கொடுத்தான்.

"ஸ்ரீதரனுக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறது.

அவனை உடனே அனுப்பி வைக்கவும் - ராஜாராமய்யர்."

இந்தத் தந்தியைப் படித்தவுடனே, ஸ்ரீதரனுக்கு ஒரு கண நேரம், ஏதோ ஒருவித இன்ப உணர்ச்சி உண்டானது போல் இருந்தது. ஆனால் அடுத்த நிமிஷத்தில் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. "எனக்குக் கல்யாணம் நிச்சயம் - ஆனால் என்னை ஒரு வார்த்தை கேட்கவில்லை! சபாஷ்!" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான். "தந்தி கூட எனக்கு இல்லை!-நாணாவுக்கு!" என்று எண்ணியபோது, அவனுடைய கோபம் அசாத்தியமாயிற்று. ஆனால், உடனே, சற்று முன்னால் தான் மனோராஜ்யத்தில் ஈடுபட்டிருந்த போது தபால்காரன் வந்து, "ஸார்! தபால்!" என்றதும், தான் அலட்சியமாக, "போட்டு விட்டுப் போ!" என்று சொன்னதும் ஞாபகம் வரவே, திடுக்கிட்டு எழுந்து ஜன்னலண்டை சென்று அங்கே தரையில் கிடந்த கடிதத்தை எடுத்தான். அதில் நாலு மூலையிலும் மஞ்சள் தடவியிருந்தது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நாணா, "ஏண்டா, உலக்கை! கல்யாணக் கடுதாசைக்கூடப் பிரிச்சுப் பார்க்காமலா தூங்கிண்டிருந்தாய்!" என்றான்.

ஸ்ரீதரன் நாணாவைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பரபரப்புடன் உறையை உடைத்து உள்ளிருந்த கடிதத்தைப் பார்த்தான். அவனுடைய தகப்பனார் ராஜா ராமய்யரின் கடிதந்தான். கடிதம் எழுதியிருந்ததோரணையில் அவர் தம் பேரில் அதிகமாகப் பொறுப்பைச் சுமத்திக் கொள்ள இஷ்டப்படவில்லையென்பது தெளிவாயிருந்தது.

"இந்த வருஷம் எப்படியும் உனக்குக் கல்யாணம் செய்துவிடவேண்டுமென்பது உன் தாயாரின் விருப்பம். இனிமேல் தாமதிப்பது உசிதமில்லை யென்பதுதான் என் அபிப்பிராயமும். ஆகவே, கூடிய வரையில் எல்லாவற்றிலும் சிலாக்கியமாகத் தோன்றிய இடத்தில் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறோம். நாலாயிரம் ரூபாய் வரதட்சிணை பேசி ஆயிரம் ரூபாய் அட்வான்ஸு வாங்கியாகிவிட்டது..."

இதைப் படித்ததும் ஸ்ரீதரனுக்குத் தலையில் போட்டுக் கொள்ளலாமென்று தோன்றியது. அப்பாவுக்குக் கூடவா புத்தி இப்படிப் போக வேண்டும்?

மேலே ராஜாராமய்யர், எவ்வளவு ரூபாய்க்குப் பித்தளைப் பாத்திரம், வெள்ளிப் பாத்திரம் வாங்கி வைக்கிறார்கள்; பெண்ணுக்கு நகை என்னென்ன போடுகிறார்கள்; மாப்பிள்ளைக்கு உடுப்புக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கிறார்கள்; மேற்கொண்டு என்னென்ன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் விவரமாக எழுதியிருந்தார். கடைசியில், "இந்த விவரமெல்லாம் உனக்கு அவசியம் எழுத வேண்டுமென்று உன் தாயார் சொன்னதன் பேரில் எழுதியிருக்கிறேன். அம்மா போய்ப் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தாள். மனஸுக்கு ரொம்பவும் பிடித்திருப்பதாகச் சொல்கிறாள். நீ நாளை இரத்திரி வண்டியிலேயே புறப்பட்டு வந்து சேர வேண்டியது" என்று கடிதத்தை முடித்துக் கையெழுத்துப் போட்டிருந்தார்.

'அம்மாவுக்கு மனஸுக்குப் பிடிச்சிருக்காம்! பலே! அம்மாதான் கல்யாணம் பண்ணிக்கப் போறாளாக்கும்!' என்று ஸ்ரீதரன் மனதுக்குள் எரிந்து விழுந்தான். அந்த எரிச்சல், கடிதத்தின் பின் குறிப்பாக எழுதியிருந்ததைப் படித்ததும் பல மடங்கு அதிகமாயிற்று.

"பெண்ணின் பெயர் சாவித்திரி..."

[நல்ல கர்நாடகப் பெயர்! தன் பெயரும் சத்தியவான் என்றிருந்தால், இருண்டு பேரும் நாடகமே ஆடிவிடலாம் என்று ஸ்ரீதரன் எண்ணினான்.]

"...தகப்பனாரின் பெயர் சம்பு சாஸ்திரி. அவர்களுக்குப் புதுச்சத்திரம் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள நெடுங்கரை கிராமம். பரம்பரையான வைதிகக் குடும்பம். குலங் கோத்திரத்தில் அப்பழுக்குக் கிடையாது. இதையும் உன் தாயார் எழுதச் சொன்னாள்."

ஸ்ரீதரனுக்கு அழுகையே வந்துவிடும்போல் இருந்தது. பேஷ்! நல்ல இடம் பார்த்தார்கள்! போயும் போயும் கடைசியில் ஒரு பட்டிக்காட்டு சாஸ்திரி பெண்தானா கிடைத்தது? இந்தத் தடியன் நாணாவுக்கு, பிராம்மணார்த்த சாஸ்திரியின் பிள்ளைக்குப் பெரிய வக்கீல் வீட்டிலே கல்யாணம்; தனக்குப் பட்டிக்காட்டு சாஸ்திரி வீட்டில் கல்யாணம். பரம்பரை வைதிகமாம்! சிவ சிவா! அப்பம் வடையிலேயே முழுகியவர்போல் இருக்கு!

கடிதத்தைக் கோபமாகத் தரையில் விட்டெறிந்தான் ஸ்ரீதரன். அவன் அதைப் படித்துக் கொண்டிருந்தபோது சார்லஸ் கார்வியின் நாவலைப் புரட்டிக் கொண்டிருந்த நாணா திடுக்கிட்டு, "என்னடா இது கோபம்?" என்று கேட்டுவிட்டு அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

நாலாயிரம் ரூபாய் வரதட்சிணை என்ற விஷயத்தைப் படித்ததும், நாணா "பலே அடிச்சேடா பிரைஸ், நாலாயிரம் ரூபாய்!" என்று ஸ்ரீதரன் முதுகில் தட்டிக் கொடுத்தான். பாவம்! நாணாவின் கல்யாணத்தில் வரதட்சணை கிடையாது. லா காலேஜில் சேர்த்துப்

படிக்க வைப்பதாக அவனுடைய மாமனார் ஒப்புக் கொண்டு, பணம் கொடுக்காமலே காரியத்தை முடித்து விட்டார். இப்போது அவன் மாமனார் வீட்டிலிருந்துதான் லா காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். டிராம் சத்தத்துக்கு இரண்டணா வேணுமென்றாலும் மாமனாரைத்தான் அவன் கேட்கவேண்டியதாயிருந்தது. ஆகவே, நாலாயிரம் ரூபாய் வரதட்சணை என்றதும், அவனுக்கு ஸ்ரீதரன் மேல் பொறாமை உண்டாயிற்று. இந்தப் பொறாமை, பின்னால், "சம்பு சாஸ்திரியின் பெண்" என்று படித்ததும் குதூகலமாக மாறியது.

"சபாஷ்! நெடுங்கரை சம்பு சாஸ்திரி பெண்ணா? ஹா! ஹா! ஹா!" என்று நாணா விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினான்.

ஸ்ரீதரன் தன்னுடைய எரிச்சலையெல்லாம் அடக்கிக் கொண்டு, "ஏன்? அவாளையெல்லாம் உனக்குத் தெரியுமா என்ன?" என்று கேட்டான்.

"பேஷாய்த் தெரியும். நெடுங்கரை சம்பு சாஸ்திரின்னா தஞ்சாவூர் ஜில்லா பூராத் தெரியுமே? நீ கல்கத்தாவில் இருந்தவன்; உனக்குத் தெரியாது. மடிசஞ்சின்னா, ஒண்ணாம் நம்பர் மடிசஞ்சி. போறாத்துக்கு, பஜனை வேறே; 'பாண்டுரங்க விட்டலே' என்று நாமாவளி சொல்லிக்கொண்டு குதிக்க ஆரம்பித்தாரானால் ஊர் கிடுகிடுத்துப் போயிடும். ஆத்திலே, அம்பாள் உபாசனை! நவராத்திரி ஒன்பது நாளும் பூஜை பிரமாதப்படும்; அதை ஏன் கேட்கிறே, போ!"

ஸ்ரீதரனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "நல்லவேளை! நீ ஆத்திலே ஆம்படையாள் உபாசனை பண்றயே அந்த மாதிரி இல்லையே; நிஜமா, சக்தி உபாசனைதானே பண்றார்? இருக்கட்டும்; அவர் பெண்ணைக்கூட நீ பார்த்திருக்கயா என்ன?" என்றான்.

நாணா திடீரென்று ஆச்சரியம் அடைந்தவனைப் போல், "ஏண்டா, நிஜமா நீ பொண்ணைப் பார்க்கலை? நீ பார்க்காமலேயா கல்யாணம் நிச்சயம் பண்ணியாச்சு! சரிதான், இப்பத்தான் விஷயம் தெரிந்தது. ஸ்ரீதரா! உன் அப்பாவும் அம்மாவுமாச் சேர்ந்து உன்னை நாலாயிரம் ரூபாய்க்கு வித்துட்டா! அவ்வளவுதான்" என்றான்.

"என்னை வித்துடறது அவ்வளவு இலேசில்லை. அது இருக்கட்டும். நீ பொண்ணைப் பார்த்திருக்கிறாயா, சொல்லு!"

"நன்னாப் பார்த்திருக்கேன். ஆனால் பார்த்து இரண்டு வருஷம் ஆச்சு. நான் பார்த்தபோது ஓர் அழுக்குப் பாவாடையைக் கட்டிண்டு மூக்கைச் சிந்திண்டு நின்னுது. ஆனால், நிஜத்தைச் சொல்லணுமோல்யோ? அந்தப் பொண்ணுக்குக் கண் ஒரு மாதிரி. ஒண்ணரைக் கண்ணுன்னு யாராவது சொன்னா, நம்பாதே, ஸ்ரீதரா அப்படியெல்லாம் ஒன்றுமில்லை."

நாணா சொன்னதெல்லாம் ஸ்ரீதரனுக்கு வேம்பாயிருந்தது. ஆனாலும் துணிந்து கடைசிக் கேள்வியைக் கேட்டுவிட்டான். "அந்த ஊரிலே பள்ளிக்கூடம் என்கிற நாம தேயம் கிடையாதே?" என்றான்.

"ஏன் கிடையாது? பொண்ணு படிச்ச பொண்ணான்னு தானே கேக்கறே? இரண்டாங் கிளாஸ் வரையிலும் படிச்சிருக்கா. ப-ட-ம் படம், கு-ட-ம் குடம் என்றெல்லாம் எழுத்துக் கூட்டிப் படிப்பாள். ஆனால், ஸ்ரீதரா! நான் சொல்றேன், கேளு. படிப்பாவது நாகரிகமாவது! படிப்பையும் நாகரிகத்தையும் நான் கட்டிண்டு அவஸ்தைப் படறது போதும், எங்கேயாவது ஐந்து நிமிஷம் வெளியிலே போனால், வீட்டிலே உத்தரவு கேட்டுண்டு போகவேண்டியிருக்கு. இரண்டு நிமிஷம் தாமதமாய்ப் போனா, 'ஏன் லேட்' என்ற கேள்வி. இந்த வம்பெல்லாம் உனக்கு வேண்டாம். பேசாமல், உன் அப்பா அம்மா தீர்மானிச்சிருக்கிற பொண்ணையே பண்ணிக்கோ-சரி? நான் வரட்டுமா? இன்றைக்கு ஸினிமாவுக்கு அழைச்சிண்டு போறதாச் சொல்லியிருக்கேன். உடனே போகாட்டா, ஸுலோசனா என்னை உசிரோட வைக்கமாட்டாள்."

"நாணா! போகிற வழியிலே, தந்தி ஆபீஸிலே, ஸ்ரீதரன் செத்துப் போய்விட்டான்; அவனுக்குக் கல்யாணம் வேண்டாம்' என்று எங்க அப்பாவுக்குத் தந்தி கொடுத்துட்டுப் போய்விடு."

"சீச்சி! என்னடா உளறுகிறே? சம்பு சாஸ்திரியைப் பற்றி நான் என்னமோ சொன்னேனே என்று நினைச்சுக்காதே. அப்படி ஒண்ணும் ரொம்ப மட்டமில்லை. நெடுங்கரையில் அவர்தான் பெரிய மிராசுதார். பொண்ணும் அப்படி அவலட்சணமா இருக்கமாட்டா. ராத்திரியே ஊருக்குக் கிளம்பிப் போ. வேணும்னா, பொண்ணை நேரிலே பார்த்துட்டுத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொல்லு, தெரிகிறதா?"

"பேஷாய்த் தெரிகிறது."

"ஊருக்குப் போனதும் கடுதாசி போடு! ஏண்டா! கல்யாணத்துக்கு நான் வரணுமா, வேண்டமா?"

"கல்யாணம் நடந்தால் கட்டாயம் வரணும். பருப்பில்லாமல் கல்யாணமா?"

"நடந்தால் என்ன? கட்டாயம் நடக்கத்தான் போறது, நானும் பார்க்கத்தான் போறேன். உன் அம்மா பேச்சை மீறி நீ ஒரு காரியம் செய்துட்டா, நான் ஒத்தைக் காலால் நிற்க மாட்டேனா?..."

இப்படிச் சொல்லிக்கொண்டே நாணா வெளியேறினான்.

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த ஆத்திரம், கோபம் எல்லாம் ஸ்ரீதரனுக்கு அப்போது பொத்துக் கொண்டு வந்தது. காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டு அப்பாவுக்கு வெகு காரமாகக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

8. தங்கம்மாள்

"உன் அம்மா பேச்சை மீறி உன்னால் ஒரு காரியம் செய்ய முடியுமா?" என்று நாணா கடைசியாகக் கேட்டுவிட்டுப் போனதில் ரொம்பவும் உண்மை அடங்கியிருந்தது.

உலக சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற வீரர்கள், மகான்கள் முதலியோரைப் பற்றி, அவர்கள் "அன்னையிடம் அபார பக்தியுள்ளவர்கள்; தாய் சொல்லை மீறாதவர்கள்" என்றெல்லாம் நாம் படித்திருக்கிறோமல்லவா? நம்முடைய ஸ்ரீதரன் ஒரு பெரிய வீரனாகவோ, மகா புருஷனாகவோ ஆவான் என்பதற்கு எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை என்றாலும், அவனுக்கும் மேற்கூறிய வீரர்கள் - மகா புருஷர்களுக்கும் இந்த விஷயத்தில் ஒற்றுமை இருந்தது. அவனுடைய தாயார் தங்கம்மாளின் பேச்சை மீறி அவனால் ஒன்றும் செய்ய முடிவதேயில்லை.

ஆனால் அவனுடைய இந்த இயல்பு வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குச் சாதாரணமாகத் தெரியாது. தாயாருக்கும் பிள்ளைக்கும் ஒற்றுமையே இல்லை என்றுதான் தோன்றும். அப்படி ஓயாமல் அவர்கள் சண்டைபோடுவார்கள். தங்கம்மாள் எது சொன்னாலும் ஸ்ரீதரன் முதலில் அதை மறுத்துத்தான் பேசுவான். "முடியவே முடியாது" என்பான். எரிந்து விழுவான். திட்டுவான், "கழுதை!" "மூடம்!" "இடியட்!" "பிரம்மஹத்தி!" என்றெல்லாம் அஷ்டோ த்தர அர்ச்சனை செய்வான். சில சமயம், கோபம் தலைக்கு மீறிப் போகும்போது அம்மாவை அடித்துக்கூட இருக்கிறான்.

ஆனால், இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்கும் பிறகு கடைசியில், தங்கம்மாள்தான் வெற்றி பெறுவாள். அவள் சொன்னபடிதான் ஸ்ரீதரன் காரியம் செய்வான்.

இத்தகைய சக்தி தங்கம்மாளுக்கு எப்படி ஏற்பட்டது என்று கேட்டால், ஏன், தாயின் அன்புதான் முதன்மையான காரணம் என்பதில் சந்தேகமில்லை; அடுத்தபடியாக, அவளுடைய மனோபலத்தையும் சொல்லவேண்டும். வசவு திட்டு எல்லாவற்றையும் - அடிகளையும் கூட பொறுத்துக்கொண்டு, கடைசியில் காரியத்தை மட்டும் சாதித்துக் கொள்வாள்.

ஸ்ரீதரன் தங்கம்மாளின் ஒரே பிள்ளை; கடைசிக் குழந்தை. அவனுக்கு முன்னால் மூன்று பெண்கள். அவர்களில் மூத்தவளை நரசிங்கபுரத்திலேயே உறவில் கல்யாணம் செய்து கொடுத்திருந்தது. மற்ற இரண்டு பெண்களின் புருஷர்களும் உத்தியோகஸ்தர்கள். அவர்கள் ஹைதராபாத்திலும், நாகபுரியிலும் இருந்தார்கள். இப்படித் தூர தூரமான இடங்களில் இருந்தும் மூன்று பெண்களின் புக்ககத்தாரும் ஒரு விஷயத்தில் பூரண ஒற்றுமைப்பட்டிருந்தார்கள். ராஜாராமய்யரையும் தங்கம்மாளையும் அவர்கள் படுத்தி வைத்த பாட்டுக்கு அளவேயில்லை. ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு, "அந்தப் பெண்ணுக்கு மட்டும் அதைச் செய்தாயே? ஏன் எங்க மாட்டுப் பெண்ணுக்கு மட்டும் செய்யவில்லை?" என்றெல்லாம் பலமான சண்டை பிடிப்பார்கள். ராஜாராமய்யர் சம்பாதித்ததெல்லாம், இந்த மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்துகொடுத்ததற்கும், பிறகு அவர்களுக்குச் சீர் செனத்தி செய்ததற்குமே சரியாய்ப் போய்விட்டது என்று சொல்லலாம். அவர்களுடைய இரண்டாவது பெண் ஐந்து குழந்தைகளைப் பெற்ற பிறகு, ஆறாவது பிரசவத்துக்குக் கூடப் பிறந்தகத்துக்குத்தான் வருவாள் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

இந்தப் பெண்களும், இவர்களுடைய புருஷர்களும், சம்பந்திகளும் கொடுத்து வந்த தொல்லைகளினாலேயே ராஜாராமய்யர் ஒரு மாதிரி கால் பைத்தியமாகிவிட்டார் என்று சொல்லவேண்டும். அவருக்கு வாழ்க்கையிலேயே வெறுப்பு வந்துவிட்டது. குடும்ப விவகாரங்களையெல்லாம் தங்கம்மாளே பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார். தாம் மனோதத்துவ பரிசோதனைகளிலும், ஆவி உலக ஆராய்ச்சிகளிலும்

ஈடுபடத் தொடங்கினார். அந்தக் காலத்தில், "மெஸ்மெரிஸம்", "ஹிப்னாடிஸம்", "டெலிபதி" முதலிய மனோதத்துவ ஆராய்ச்சிகளைப் பற்றிய புஸ்தகங்கள் ஏராளமாக வெளியாகிக் கொண்டிருந்தன. இன்னும், மரணத்திற்குப் பிறகு மனுஷர்கள் என்ன ஆகிறார்கள் என்பது பற்றியும், ஆவிகளுடன் பேசும் ஆச்சரிய அநுபவங்களைப் பற்றியும் சொல்லும் புஸ்தங்கள் பிரபலமாயிருந்தன. ராஜா ராமய்யர் இத்தகைய நூலாராய்ச்சியில் தம்முடைய முழுக்கவனத்தையும் செலுத்தினார். இதற்காகவே அவர் தமது உத்தியோகக் காலம் முடிவடைவதற்கு இரண்டு வருஷம் முன்னதாகவே வேலையை விட்டு விலகி நரசிங்கபுரத்துக்கு வந்து சேர்ந்தார்.

ராஜாராமய்யர் இம்மாதிரி 'தாமரை இலைத் தண்ணீர்' என்னும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து வந்தபடியால், குடும்ப நிர்வாகம் பெரிதும் தங்கம்மாளின் தலையிலேயே சுமந்தது. மூன்று சம்பந்தி வீட்டுக்காரர்களோடும் மல்லுக்கு நின்று சமாளிக்க வேண்டிய பொறுப்பு முழுவதும் அவளுக்கு ஏற்பட்டது. தங்கம்மாள் எவ்வளவு தான் முதலில் பிடிவாதம் பிடித்தாலும், கடைசியில் பெண்கள் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்பார்களே என்ற எண்ணத்தினால், சம்பந்தி வீட்டுக்காரர்களுக்கே விட்டுக் கொடுக்க வேண்டி நேரிடும். அப்போதெல்லாம், அவள் தன் மனத்திற்குள், "ஆகட்டும், ஆகட்டும். ஸ்ரீதரனுக்குக் கல்யாணம் ஆகட்டும்; இவ்வளவுக்கிவ்வளவு ஆட்டி வைக்காமல் போனால்..." என்று கர்வங் கட்டிக் கொள்வாள்.

சென்ற இரண்டு மூன்று வருஷமாக, ஸ்ரீதரனுக்கு 'நல்ல' இடத்தில் கல்யாணம் ஆக வேண்டுமே என்ற ஒரே கவலை தான் தங்கம்மாளுக்கு. 'நல்ல' இடம் என்றால், தான் 'ஆட்டி வைப்ப'தற்குத் தகுந்த இடம் என்று அர்த்தம். பட்டணங்களில், எங்கேயாவது வக்கீல் பெண் கிக்கீல் பெண் வந்து வாய்த்துவிடப் போகிறதேயென்று தங்கம்மாளுக்கு ஒரே பயம். அந்த மாதிரி இடத்தில் சம்பந்தம் அவளுக்குப் பிடிக்கவில்லை; இரண்டு கோண எழுத்துப் படித்துவிட்டு, 'ஹாட் பூட்' என்று இங்கிலீஸ் பேசிக் கொண்டு, தலையைக் கோணவகிடு பிளந்து கொண்டு நிற்கும் பெண்களையும் அவளுக்குப் பிடிக்கவில்லை. 'இடம் பணக்கார இடமாயிருக்கவேண்டும்; பெண் பதவிசாயிருக்கவேண்டும்' என்பதுதான் அவளுடைய விருப்பம். இந்த நோக்கத்துடந்தான் ராஜாராமய்யர் கிராமாந்தரத்துக்குப் போகலாம் என்று சொன்ன யோசனையை அவள் ஒப்புக் கொண்டது; கிராமாந்தரத்தில், அதுவும் 'நம்ம' பக்கத்தில் பெரிய மிராசுதார் பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்ய வேண்டும். அப்போதுதான் பெண்ணும் குடித்தனத்தில் தனக்கு ஒத்தாசையாயிருக்கும், சம்பந்திகளும் தன்னுடைய அதிகாரத்துக்கு உட்படுவார்கள் என்று தங்கம்மாள் தன் மனத்திற்குள் தீர்க்காலோசனை செய்து தீர்மானித்திருந்தான்.

இந்த நோக்கத்துக்கெல்லாம் சம்பு சாஸ்திரி வீட்டில் சம்பந்தம் ஒத்து வருவதாயிருந்தது. பெண்ணுக்குச் சொந்தத் தாயார் இல்லை; இளைய தாயார் என்பது ஒரு குறைவு. ஆனால் அதுவும் ஒரு நல்லதுதான். பெண்ணுக்கு அம்மா சலுகை இராது. வீட்டில் நாய் மாதிரி படிந்து கிடக்கும். சம்பு சாஸ்திரிக்கு வேறு பெண்ணோ, பிள்ளையோ கிடையாது என்பதும் ஒரு முக்கியமான 'பாயிண்ட்' அல்லவா? அவருக்குப் பிறகு, அந்தச் சொத்தெல்லாம் பெண்ணுக்குத்தானே வந்து சேரும்?

இது எல்லாவற்றையும் யோசித்துத் தங்கம்மாள், இந்தப் பெண்தான் தனக்கு மாட்டுப் பெண்ணாக வர வேண்டுமென்று முடிவு செய்துவிட்டாள். அவள் முடிவு செய்தபிறகு, ஸ்ரீதரன் 'வேண்டாம்' என்று சொன்னால் அதற்காகக் கல்யாணம் நின்று போய்விடுமா? அவனுடைய கடுதாசை ராஜாராமய்யர் அவளுக்கு வாசித்துக் காண்பித்து, "இப்போது என்னடி சொல்றே? உன் பேச்சைக் கேட்டுப் பணம் வேறே வாங்கியாச்சே! உன் பிள்ளையானா இப்படிச் சொல்றானே?" என்றதும், தங்கம்மாள், "நன்னாயிருக்கு; அவன் அப்படித்தான் சொல்லுவன். பின்னே, இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் போலே, கல்யாணம் என்றதும், பல்லை இளிப்பன் என்று நினைச்சுண்டயளோ? ராத்திரி போட்

மெயிலிலே பட்டணத்துக்குக் கிளம்பலாம், வாருங்கோ. இரண்டு பேருமாய்ப் போய் அவனையும் அழைச்சுண்டு, இன்னும் துணிமணி நகை நட்டு வாங்க வேண்டியதையும் வாங்கிண்டு வந்துடலாம்" என்றாள்.

அந்தச் சமயத்தில், வீட்டு வாசலில் காலடிச் சத்தமும் கனைப்புச் சத்தமும் கேட்டன. "ஐயர்வாள் இருக்காளா?" என்று கேட்டுக் கொண்டே நெடுங்கரைச் சங்கர தீக்ஷிதர் உள்ளே வந்தார்.

9. தீக்ஷிதர் விஜயம்

சங்கர தீக்ஷிதரைப் பார்த்ததும், உட்கார்ந்திருந்த தங்கம்மாள் எழுந்திருக்க முயற்சித்தாள். "உட்காருங்கோ, அம்மா! எனக்கோசரம் எழுந்திருக்க வேண்டாம். ஏதோ பூஜை வேளையிலே கரடியை விட்டடிச்சது மாதிரி நான் வந்தேன்னு நினைச்சுக்கப் படாது. எனக்கு நெடுங்கரை. பக்கத்துக் கிராமத்துக் காரியமாக வந்திருந்தேன். நம் ஊருக்குச் சம்பந்தியா வரப்போறவாளாச்சேன்னு உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு..."

"ஓகோ! அப்படிச் சொல்லுங்கணும்? உட்காரும். நெடுங்கரையா உமக்கு? சம்பு சாஸ்திரிக்கு ஏதாவது உறவு, கிறவு உண்டோ ?" என்றாள் தங்கம்மாள்.

"உறவு இல்லை; ஆனால், உறவுக்கு மேலே, பால்யம் முதல் நாங்கள் பிராண சிநேகிதாள். அவன் காரியமெல்லாம் என்னுது, என் காரியமெல்லாம் அவனுது. முந்தா நாள் ஊரிலேயிருந்து கிளம்பி வந்தபோது, ரயிலடியிலே அவனைப் பார்த்தேன். 'கல்யாணம் நிச்சயமாயிடுத்து; இப்படியே ஊருக்குத் திரும்பு. எல்லாக் காரியமும் நீதான் பார்த்துக்கணும்' என்றான். 'அப்பா! இரண்டே நாளைக்குப் பொறுத்துக்கோ! கிளம்பின காரியத்தை முடிச்சிண்டு வந்துடறேன்' என்று சமாதானம் சொல்லிட்டு வந்தேன். 'அப்படின்னா, போறதுதான் போறயே! சம்பந்தியாத்துக்கும் போய் எட்டிப் பார்த்துட்டு வா!' என்றான். அவன் பேச்சைத் தட்டப்படாதுன்னுதான் இங்கே வந்தேன்."

"சந்தோஷம், நல்ல வெயிலிலே வந்திருக்கீர். ரொம்பக் களைச்சுப் போயிருக்காப்பலே இருக்கே. தாகத்துக்கு ஏதாவது குளிர்ந்த..."

"அதெல்லாம் எனக்காக நீங்க ஸ்பெஷலாக் காப்பி, கீப்பின்னு ஒண்ணும் போட வேண்டாம்! தயாராயிருந்தா..."

"நன்னாயிருக்கு! காப்பிக்கு என்னங்கணும் குறைச்சல்? தயாரா யில்லாட்டா, ஒரு நிமிஷத்திலே ஆயிடறது... அடே குப்புசாமி! சீக்கிரம் காப்பி போட்டுக் கொண்டா!"

"அடாடா! இவ்விடத்திலே காப்பிக்கு என்ன குறைச்சல்? வேறு எதுக்குத்தான் என்ன குறைச்சல்? அதெல்லாம் சம்பு சாஸ்திரியிடம் கேட்டுண்டுட்டேன். 'அடே! நீ ஜன்மாந்தரத்திலே பண்ணின புண்யத்தினால் தாண்டா உனக்கு இப்படிப்பட்ட வரன் கிடச்சுது'ன்னும் சொல்லியாச்சு. 'வரதட்சிணை எவ்வளவுடா'ன்னு கேட்டேன். "நாலாயிரம்"னான். அப்படியே அசந்து போய்ட்டேன். வெறும் வறளியெல்லாம் இந்தக் காலத்திலே ஆறாயிரம், எட்டாயிரம்னு கேக்கறான்கள். இவ்விடத்திலே ரொம்ப தாராள மனசுள்ளவாளாயிருக்கணும்னு அப்பவே தீர்மானிச்சுட்டேன்!"

"ஆமாங்கணும், ஆமாம். போனாப்போறதுன்னு நாலாயிரத்துக்குச் சம்மதிச்சுது! ஆனால், அவ்வளவுக்கும் பின்னாலே பிராமணன் சீர் செனத்தியெல்லாம் சரியாச் செய்வான்னு நினைச்சுண்டிருக்கேன். செய்வாரோல்யோங்கணும்?"

"பேஷாச் செய்வன்னா! யாருக்காகச் செய்றான்னு கேக்கறேன்! இருக்கிறது ஒரு பொண்ணு..."

"அதை உத்தேசிச்சுத்தான் நாங்களும் சம்மதிச்சுது. ஏதோ, குலம், கோத்ரம் நன்னாயிருக்கு. பிராமணரும் சாதுவாயிருக்கார்..."

"அதை ஏன் கேக்கறேள்? சாதுன்னா, பரம சாது! அடிச்சா அழத் தெரியாதுன்னாக்கே! குலம், கோத்திரத்துக்குத்தான் என்ன குறைச்சல்? பரம்பரையா வைதிகம். ஆனால், ஊரில் இறக்கிறவனுக அசூயை பிடிச்சவன்க. ஏதாவது அப்படி இப்படின்னு நொசுக்குச் சொல்வானுக. உங்களுக்குக் கூட ஏதாவது கடுதாசு, கிடுதாசு

வந்தாலும் வரும். அவன் தங்கைக்கு ஏதோ கெட்ட பெயர்னா, அதுக்காக இவன் என்ன பண்ணுவன்? நான் தான் கேக்கறேன்?"

தங்கம்மாள் திடுக்கிட்டவளாய், "என்னங்கணும் பெரிய கல்லாய்த் தூக்கிப் போடறீர்? அது என்ன சமாசாரம்?" என்று கேட்டாள்.

இத்தனை நேரமும் சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் புன்னகையுடன் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த ராஜாராமய்யர், இப்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்து, "ஏன் தங்கம், அவசரப்படுகிறாய்? அந்தச் சமாசாரத்தைச் சொல்வதற்காகத்தானே, தீக்ஷிதர் மூட்டை கட்டிக் கொண்டு வந்திருக்கார்? தானே சொல்கிறார்!" என்றார்.

தீக்ஷிதர் திடீரென்று தேள் கொட்டினது போல எழுந்திருந்து, ஒரு நிமிஷம் வரையில் வாயைக் கையால் பொத்திக் கொண்டு நின்றார். பிறகு, கையை எடுத்து விட்டு, "அடாடாடா! என்ன காரியம் பண்ணினேன்? என் புத்தியை ஜோட்டாலே அடிக்கணும்! உங்களுக்குச் சமாசாரம் தெரிஞ்சிருக்கும்னே நினைச்சுட்டேன். இல்லாட்டா, என் வாயிலே அந்த வார்த்தை வந்திருக்குமா? ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணி வைன்னு பெரியவா சொல்லியிருக்கா. அப்படியிருக்கிறபோது..." என்றார்.

"அந்தக் கதையெல்லாம் இருக்கட்டுங்கணும். விஷயம் இன்னதென்று சொல்லும்."

"சொல்றேன்; பேஷாய்ச் சொல்றேன்! ஒருவிதத்துக்கு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கிறதே நல்லது. ஆனால், அந்த அசடு இதை என்னத்துக்காக மறைச்சு வச்சான்னு தான் தெரியலை. எல்லாத்தையும் உடைச்சு முன்னாலேயே சொல்லி விடறதுதான் நல்லதே தவிர..."

"அது தான் நல்லது; சமாசாரத்தைச் சொல்லும்!"

"பிரமாதம் ஒன்றுமில்லை. சம்பு சாஸ்திரிக்குத் தங்கை ஒருத்தி இருந்தாள். மீனாக்ஷின்னு பேரு. அவளுக்குக் கல்யாணம் ஆகி ரொம்ப நாள் வரைக்கும் புருஷனைப் பத்தித் தகவலே கிடையாது. செத்துப் போய்ட்டான்னு சில பேர் சொன்னா; இல்லை, கிறிஸ்தவனாய்ப் போய்ட்டான்னு சிலபேர் சொன்னா. ஊரிலே, இவள் இரண்டுங்கெட்டானாத் தலையிலே மயிரை வச்சிண்டு இருக்காளேன்னு புகாராயிருந்தது. இப்படியிருக்கிறபோது, பாருங்கோ! மாமாங்கத்துக்குப் போறேன்னு சம்பு குடும்பத்தோடே போனான் – பதினைஞ்சு வருஷத்துக் கதை நான் சொல்றது – மாமாங்கத்திலேயிருந்து திரும்பி வந்தபோது தங்கையை அழைச்சுண்டு வர்றலை. செத்துப் போய்ட்டாள்னு ஒரே அடியா அடிச்சுட்டான். ஊரிலே அதை ஒருத்தரும் நம்பலை. பல தினுசா வதந்தி. கிறிஸ்தவனாப் போன ஆம்படையானை அங்கே வரச் சொல்லி, அவனோடே கூட்டி அனுப்பிச்சுட்டான்னு சில பேர் சொன்னா. இல்லை, அவள்தான் இவன் பேச்சை மீறிப் போய்ட்டாள்னும் இரண்டொத்தர் சொன்னா. அப்புறம், இல்லையா? ஊரிலே அசூயை புடிச்சவன்க இன்னும் பல தினுசாகவும் சொல்லிண்டிருந்தானுக..."

"இதென்ன கூத்தான்னா இருக்கு? ஏன்னா, இப்படி ஒண்ணு இருக்குன்னு அந்தப் பிராமணன் ஒரு வார்த்தை கூடச் சொல்லலையே!" என்றாள் தங்கம்மாள்.

பிறகு அந்த மூன்று பேருக்குள்ளும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

தீக்ஷிதர்: சொல்லலேன்னா தப்புத்தான். இதை என்னத்துக்காகச் சொல்லாதே இருக்கணும்? இது மறைச்சு வைக்கிற காரியமா? அப்புறம் தெரியாதே போயிடுமா?

ராஜாராமய்யர்: ஆமாங்கணும், தீக்ஷிதரே! கல்யாணம் நிச்சயம் பண்றதுக்காக வந்த மனுஷ்யர், 'என் தங்கை ஓடிப் போய்ட்டாள்'னு முதலிலேயே சுக்லாம்பரதரம் குட்டிக்குவாரா?

தங்கம்மாள்: நீங்க சித்த பேசாம இருங்கோ...ஏங்கணும்! ஊரிலே இந்தப் பிராமணனை அதுக்காக ஜாதியை விட்டுத் தள்ளிக் கிள்ளி வச்சிருந்ததோ?

தீக்ஷிதர்: அந்த மாதிரி பேச்சு வந்தது. நான் தான் குறுக்கே நின்னு, அதெல்லாம் கூடவே கூடாதுன்னு தடுத்தேன்.

தங்க: அப்படின்னா, போனவள் இவ்விடத்துக்குப் போக்குவரத்து ஒண்ணும் வச்சுக்கலையாக்கும்?

தீக்ஷிதர்: அதெல்லாம் பேசப்படாது. அப்படியிருந்தால், நானே உங்ககிட்டே 'இந்த சம்பந்தம் உங்களுக்கு வேண்டாம்'னு சொல்லிவிட மாட்டேனா?

ராஜா: போறது, தங்கம்! இந்த மட்டும் தீக்ஷிதர் தயவு பண்ணிச் சம்மதிச்சுட்டார். ஆனா, பிள்ளையாண்டான் மக்கர் பண்றானே, அதுக்கென்ன செய்யறதுன்னுதான் தெரியலை...ஏங்கணும், பொண்ணு எப்படிங்கணும்?

தீக்ஷிதர்: பொண்ணுக்கென்ன? ஒண்ணும் ஊனம் கிடையாது, ஊமை இல்லை; செவிடு இல்லை.

ராஜா: பேஷாப் போச்சு. ஊமை செவிடு இல்லையா? இவள் என்னமோ பிரமாதமா வர்ணிச்சாளே?

தங்க: ஏங்கணும், தீக்ஷிதரே? அந்தப் பொண்ணுக்கு என்னங்கணும் குறைச்சல்? பாக்கறதுக்கு, மூக்கும் முழியுமா நன்னாத்தானே இருக்கு?

தீக்ஷிதர்: சந்தேகம் என்ன? பட்டிக்காட்டிலே அதை விட என்ன புரட்டிவிடும்னுதான் நானும் கேக்கறேன். பின்னே ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையாயிருக்குமா?

தங்க: குடித்தனத்துப் பெண்ணுக்கு அதைவிட அழகு என்னத்துக்குங்கணும்?

தீக்ஷிதர்: அம்மா! நீங்க சொல்றது ரொம்ப சரி. அதை விடத்தான் அழகு என்னத்துக்கு? அய்யர்வாள்! நீங்களே சொல்லுங்கோ. நாமெல்லாம் கல்யாணம் பண்ணிக்கிறபோது பெண் அழகைப் பார்த்தா பண்ணிண்டோம்?

ராஜா: இல்லை, நாம் பண்ணிக்கலை. அதுதான் தெரிஞ்சிருக்கே! ஆனால் அந்த மாதிரி நம்ம பிள்ளையாண்டான் பண்ணிக்குவானா?

தங்க: எல்லாம் பண்ணிக்குவன் - நீங்க கொஞ்சம் வாயை மூடிண்டு இருந்தாக்கே!

ராஜா: இதோ வாயை மூடிண்டுட்டேன்.

[கையினால் வாயைப் பொத்திக்கொண்டார்.]

தங்க: அவர் கிடக்கார், தீக்ஷிதரே! இப்படித்தான் அவர் விளையாடுவர். நீர் சொல்லும்; சம்பந்திக்கு நிலம் நீச்சு இருக்கிறதெல்லாம் நிஜந்தானே?

திக்ஷிதர்: ஆஹா! அதிலே ஒரு வார்த்தை பிசகில்லை. ஆறரை வேலி நன்செய்யும், மூணு வேலி புன்செய்யும் இருக்கு. பேஷான நிலம். தலை வாய்க்கால் பாய்ச்சல். இளையாளுக்கு மட்டும் பிள்ளை கிள்ளைன்னு பிறந்து வைக்கா திருந்தால், எல்லாம் உங்களைச் சேர வேண்டியதுதான்!

தங்க: இந்தக் காலத்திலே அதை நம்பி இருக்க முடியுமாங்கணும்?

தீக்ஷிதர்: அதெப்படி இருக்க முடியும்? பின்னாலே நடக்கப்போறதை யார் கண்டா? இப்பவே முடிஞ்ச வரையிலே நம்ம குழந்தைக்கு நாம வரப் பத்திக்க வேண்டியதுதான்; மனுஷன் என்னமோ மொத்தத்திலே நல்லவன்...

தங்க: இருந்தாலும், அவர் தங்கை சமாசாரத்தைச் சொல்லாமே மறைச்சுது எனக்குப் புடிக்கவேயில்லை.

தீக்ஷிதர்: அது பிசகுதாம்மா, பிசகுதான்! ஆனால், அதுக்காக, கல்யாணத்தை மாத்திரம் நிறுத்திவிடாதேங்கோ. என்ன அபராதம் வேணுமோ சொல்லுங்கோ, நான் வாங்கித் தர்றேன்.

தங்க: நாங்க கல்யாணத்துக்கு வர்றபோது, நீங்கதான் எங்களையெல்லாம் கவனிச்சுக்கணும்.

தீக்ஷிதர்: நன்னாயிருக்கு; காத்திண்டிருக்கேன். என்னை உங்க மனுஷன்னு நினைச்சுக்குங்கோ, அவ்வளவுதானே? கிட்டி முட்டி விசாரிக்கப் போனால், ஏதாவது உறவு கிறவுன்னு கூட ஏற்பட்டுடும்; திருவிடை மருதூரிலே உங்க தங்கையைப் போஸ்ட் மாஸ்டர் பஞ்சாபகேசய்யருக்குக் கொடுத்திருக்கு இல்லையோ?

தங்க: ஆமாம்; அவருக்கு நீங்க சொந்தமா, என்ன?

தீக்ஷிதர்: அவருடைய தங்கை மாப்பிள்ளைக்கு நான் சாக்ஷாத் சித்தப்பா! கிட்ட வந்தாச்சு, பாத்தயளோல்யோ?

இந்தச் சந்தர்ப்பத்தில் குப்புசாமி காப்பி கொண்டுவந்துவிட்டபடியாலும், தங்கம்மாளும் ராஜாராமய்யரும் பட்டணம் போகக் கிளம்ப வேண்டியிருந்தபடியாலும், சம்பாஷணை இத்துடன் முடிந்தது. தீக்ஷிதர் சூடான காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, குளிர்ந்த மனத்துடன் கிளம்பிச் சென்றார்.

10. எடு அபராதம்!

சம்பு சாஸ்திரி விட்டு வாசலில் பந்தல்கால் முகூர்த்தம் ஆனதிலிருந்து ஊரில் கல்யாணக் களை ஏற்பட்டுவிட்டது. அக்கிரகாரத்தில் சரிபாதியை அடைத்துப் பந்தல் போட்டார்கள். வாழை மரங்களும், திரைச் சீலைகளும் கொண்டு வந்து கட்டினார்கள்.

ஊரில் உள்ள பசங்களுக்கெல்லாம் கல்யாணப் பந்தல்தான் நிரந்தர வாசஸ்தலமாயிற்று. அவர்கள் சதா பந்தல் கால்களைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டும், குதித்துக் கொண்டும், கொம்மாளம் போட்டுக் கொண்டும் இருந்தார்கள். அந்தக் கடுங்கோடையில், அவர்கள் விளையாடுவதற்கு இவ்வளவு குளிர்ந்த இடம் வேறு எங்கே கிடைக்கும்?

சம்பு சாஸ்திரி எதிர்பார்த்தபடியே, ஊரிலுள்ளவர்கள் அந்தச் சமயத்தில் விட்டுக் கொடுக்காமல் அவருக்கு ஒத்தாசை செய்ய முன் வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தை ஏற்றுக்கொண்டு செய்தார்கள். அவரவர்களும் தங்கள் சொந்தக் காரியத்தையும் கொஞ்சம் சேர்த்துப் பார்த்துக் கொண்டார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. கல்யாணச் சாமான் ஜாப்தா போடும் போது சாமாவய்யர் பன்னிரண்டு சீட்டுக் கட்டுப் போட வேண்டுமென்று வற்புறுத்தி அப்படியே வரவழைத்துக் கொண்டார். சீனிவாசய்யர் ஒன்பது கட்டுச் சிவபுரி புகையிலை கட்டாயம் வேண்டும் என்று சொன்னார். ஷோக் சுந்தரமய்யர், சந்தனம், ஸெண்டு, ஊதுவத்தி வகையரா மட்டும் ஐம்பது ரூபாய்க்குத் திட்டம் போட்டார். இந்த மாதிரியே கல்யாணம் சிறப்பாக நடக்க வேண்டியதற்கு யோசனைகளை ஒவ்வொருவரும் சொன்னார்கள். உக்கிராணச் சாமான்கள் வாங்கிக்கொண்டு வரப்போன பஞ்சாப கேசய்யர், தம் வீட்டுக்கு ஒரு வருஷத்துக்கு வேண்டிய மளிகைச் சாமான்களையும் சேர்த்து வாங்கிக் கொண்டு வந்துவிட்டார் என்று ராமய்யா வாத்தியார் சத்தியம் பண்ணத் தயாராயிருந்தார்.

சமையலுக்குக் குண்டுக் கிருஷ்ணனை அமர்த்தி அவன் ஒன்பது ஆட்களுடன் வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள். உள்ளூர்க் கோவில் மேளக்காரனுடன், திருநாகேசுரம் தங்க நாயனத்துக்கும் அச்சாரம் கொடுக்கப்பட்டது. இரண்டு நாள் கதாகாலட்சேபத்துக்குச் சம்புசாஸ்திரியே ஏற்பாடு செய்துவிட்டார்.

கல்யாணத்துக்கு இரண்டு நாளைக்கு முன்பிருந்தே சமையற்காரர்கள் வந்து சமையல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அப்புறம் அக்கிரகாரத்தில் பாட்டியம்மாள்களையும் வியாதிக்காரர்களையும் தவிர, பாக்கி எல்லாருக்கும் கல்யாண வீட்டில்தான் சாப்பாடு.

பஜனை சம்பு சாஸ்திரி என்றால் சுற்று வட்டாரத்தில் வெகு தூரத்துக்குத் தெரிந்திருந்தது. அவருக்கு ஒரே பெண்; அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் என்றதும், வைதிகர்கள் வந்து குவிய ஆரம்பித்து விட்டார்கள். எனவே, கல்யாணத்துக்கு முதல் நாள், பந்துக்களும், சிநேகிதர்களும், வைதிகர்களும், கதை கச்சேரி கேட்கலாமென்று வந்தவர்களும், கல்யாணச் சாப்பாட்டை உத்தேசித்தே வந்தவர்களுமாக, ஊர் ஜே ஜே என்று ஆகிவிட்டது.

கடைசியாக, சம்பந்திகளும் வந்து சேர்ந்தார்கள். ஆனால் எதிர்பார்த்ததுபோல் அவர்கள் அவ்வளவு பேர் இல்லை. ரயிலடிக்குப் பத்து வண்டிகள் அனுப்பியிருந்தும், ஆறு வண்டிக்குத்தான் ஜனங்கள் வந்தார்கள். மாப்பிள்ளையை அழைப்பதற்குமுன், ஊரின் கீழ்க் கோடியிலிருந்த சிவன் கோவிலில் அவர்கள் சற்று நேரம் தங்க ஏற்பாடாகியிருந்தது. அங்கே ஊராரும் வரவழைக்கப்பட்டனர். சம்பந்திகளுக்கும் ஊராருக்கும் அங்கே பரிச்சயம் ஏற்பட்டது. பிறகு, 'ஜான்வாஸ' ஊர்வலம் ஆரம்பமாயிற்று. அதற்காக வந்திருந்த கோச் வண்டியில், மாப்பிள்ளை ஸ்ரீதரன்

ஜம்மென்று உட்கார்ந்திருந்தான். விலையுயர்ந்த ட்வீட் துணியில் தைத்த கால்சட்டையும் மேல்சட்டையும், காலரும் நெக்டையும் தரித்து, கிராப் செய்த தலையை அழகாக வாரி விட்டுக் கொண்டு நெற்றியில் சின்னஞ்சிறு சாந்துப் பொட்டுடன் அவன் அலட்சியமாகக் கோச் வண்டியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த நெடுங்கரைவாசிகள், 'இந்தச் சம்பு சாஸ்திரி பெண்ணுக்கு இப்படிப்பட்ட மாப்பிள்ளையா!' என்று மனத்திற்குள் அசூயைப் பட்டார்கள். ஆனால் வெளியில் "மாப்பிள்ளை அவ்வளவு ஆசாரமாயிருக்கமாட்டான் போலே இருக்கு. போகப் போகத் தெரியணும்!" என்றும், "தலையை ஏன் இப்படி விகாரம் பண்ணிண்டிருக்கான்? அழகாகக் கட்டுக் குடுமி வச்சிண்டிருக்கப் படாதோ?" என்றும், "சம்பு சாஸ்திரியின் கர்நாடகத்துக்கும் இந்தப் பிள்ளையின் டவுன் நாகரிகத்துக்கும் எங்கே சரிப்பட்டு வரப்போகிறது?" என்றும் பலவாறு பேசிக்கொண்டார்கள்.

ஊர்வலம் முடிந்ததும் சாப்பிடக் கூப்பிடுவதை எதிர் பார்த்து எல்லாரும் திண்ணையிலும் பந்தலிலுமாக உட்கார்ந்திருந்தார்கள். "இலை அப்போதே போட்டாச்சே; ஏன் தாமசம்?" என்று ஒரு கேள்வி எழுந்தது. "சம்பந்திகளைக் கூப்பிடப் போயிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் வரவில்லை" என்று ஒருவர் சொன்னார். அப்புறம் கொஞ்ச நேரம் 'கசு முசு' 'கசு முசு' என்று காதோடு காதாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். "மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானுக்குப் பெண் பிடிக்கவில்லையாம். கல்யாணம் வேண்டாம். ஊருக்குப் போகணும்கிறானாம்" என்று ஒரு வதந்தி பரவிற்று. "அவன் இன்னும் பெண்ணையே பார்க்கவில்லையே?" என்று சிலர் கேட்டார்கள். "பெண்ணின் அப்பாவைப் பார்த்ததுமே பையனுக்குப் போரும்னு ஆயிட்டதாம்!" என்று ஒரு ஹாஸ்யப் பிரியர் சொன்னார். "சீச்சீ! அதெல்லாம் இல்லேடா! ஊர்கோலத்துக்கு மோட்டார் வைக்கலேன்னுதான் பையனுக்குக் கோபமாம். சுத்த கர்நாடகமா, கோச் வண்டியில் உட்கார்ந்து ஊர்கோலம் வந்தது அவனுக்குப் பிடிக்கலையாம்!" என்றார் இன்னொருவர்.

இப்படி எல்லாரும் தலைக்கு ஒரு விதமாகப் பேசிக் கொண்டிருக்கையில் தீக்ஷிதர் அவசர அவசரமாகச் சம்பு சாஸ்திரி வீட்டுக்கு வந்து அவரைச் சம்பந்திகளின் ஜாகைக்கு அழைத்துக்கொண்டு போனார்.

சம்பந்தி – ஜாகையில் கூடத்திலே ராஜாராமய்யர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். தங்கம்மாள் பக்கத்தில் நின்றாள். சாஸ்திரியைக் கண்டதும், தங்கம்மாள் பக்கத்தில் நின்றவர்களை, "நீங்கள்ளாம் போங்கோ!" என்று அதட்டவே, எல்லாரும் விலகிப் போனார்கள்.

"என்னங்கணும், இப்படிப் பெரிய கல்லாத் தூக்கிப் போட்டுட்டீரே!" என்றாள் தங்கம்மாள்.

இந்தப் பேச்சு, சாஸ்திரியின் தலையில் பெரிய கல்லைப் போலவே விழுந்தது. அவர் பிரமித்துப் போய், "என்ன? என்ன?" என்று கேட்டார்.

"என்னவா? உம்ம தங்கை சமாசாரத்தை எங்ககிட்டச் சொல்லாமயே இருந்துட்டீரே? இவாளுக்கு எங்கேடா தெரியப்போறது, ஏமாத்தி விடலாம்னுதானே இருந்தேள்?" என்றாள்.

சாஸ்திரிக்கு ஒருவாறு இது ஆறுதல் அளித்தது. அதே சமயத்தில் துயரமும் பொங்கிக் கொண்டு வந்தது.

"அம்மா! இந்தக் கல்யாண சமயத்திலே அவள் பேச்சை ஏன் எடுக்கறயள்! அவளுக்கு நான் ஸ்நானம் பண்ணி எத்தனையோ வருஷம் ஆச்சே! அவளுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையே!" என்றார். அவருடைய கண்களிலிருந்து அப்போது கண்ணீர் பெருகி வழிந்தது.

"இருந்தாலும், இப்படிக் குடும்பத்திலே ஒரு குத்தம் இருக்குன்னு எங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமோ? இப்படிப்பட்ட இடத்திலே வந்து சம்பந்தம் பண்ணிக்கணும்னு எங்களுக்கு என்னங்கணும் வந்திருக்கு?...ஏன்னா! நீங்க பாட்டுக்குப் பேசாமலிருக்கயளே?" என்று தங்கம்மாள் ராஜாராமய்யரைப் பார்த்துக் கேட்டாள்.

"என்னை என்னத்தைச் சொல்லச் சொல்றே? விஷயந்தான் தெரிஞ்சிருக்கே. உனக்கு ஒரு காரணத்தினாலே பிடிக்கலை. பையனுக்கு இன்னொரு காரணத்தினாலே பிடிக்கலை. அப்புறம் என்ன கல்யாணம் வேண்டியிருக்கு? அவர் கிட்டச் சொல்லிவிட்டு, பேசாமே கிளம்பிப் போக வேண்டியதுதான்" என்றார் ராஜாராமய்யர்.

சம்பு சாஸ்திரிக்கு இடி விழுந்தது போல் இருந்தது. "ஐயர்வாள்! என்ன இப்படிச் சொல்றயளே! எனக்கு ஒண்ணும் புரியலையே?" என்றார்.

இப்போது தீக்ஷிதர் குறுக்கிட்டு, "ஆமாங்கணும்; உமக்கு ஒண்ணும் புரியாது. அப்பவே, நான் ஊர்க்கோலத்துக்கு மோட்டார் கார் வரவழையும்னு சொன்னேனோ, இல்லையோ? மாப்பிள்ளைப் பையனுக்கு அதுதான் கோபமாம்!" என்றார்.

"அவன் ஏற்கனவே பட்டிக்காட்டுப் பெண் வேண்டாம்னு சொல்லிண்டிருந்தான். அதுக்குத் தகுந்தாப்பலே, இந்த ஊரானா, மகா பட்டிக்காடாக இருக்கு. நீரானா, ஓர் ஓட்டைக் கோச் வண்டியைக் கொண்டு வந்து ஊர்கோலத்துக்கு நிறுத்தியிருக்கீர்" என்றாள் தங்கம்மாள்.

"இந்தச் சின்னக் காரியத்துக்காகக் கோவிச்சுக்கலாமா? மோட்டார் காருக்குத்தான் சொல்லியனுப்பிச்சேன்; சமயத்திலே கிடைக்கலை; நாலாம் நாள் ஊர்கோலத்துக்கு எப்படியாவது மோட்டார் வண்டி கொண்டு வந்துடறேன்..."

"நாலாம் நாள் ஊர்கோலத்துக்கு நீர் என்னங்கணும் ஏற்பாடு செய்யறது? அது அவாளைச் சேர்ந்ததுன்ன?" என்றார் தீக்ஷிதர்.

"இனிமேல் எல்லாம் அவாளைச் சேர்ந்ததுதான். எனக்கு மனுஷ்யாள் கிடையாது. அவாள்தான் எல்லாத்தையும் எடுத்துப் போட்டுண்டு செய்யணும்."

"அதுக்கென்ன, பேஷாய்ச் செய்யறேன். நாளைக்குத் தாலி கழுத்திலே ஏறிடுத்துன்னா, அப்புறம் நீங்க வேறே, நாங்க வேறேயில்லை. அதுவரையிலே தனித் தனிதானே? என்ன இருந்தாலும், நீர் உம்ம தங்கை சமாசாரத்தை மறைச்சு வச்சதுக்கு இப்ப ஒரு வழி பண்ணித்தான் ஆகணும்" என்றால் தங்கம்மாள்.

"அப்படி ஒண்ணும் நான் வேணும்னு மறைச்சு வைக்கலை, அம்மா! சந்தர்ப்பம் ஏற்படலை, சொல்லலை; அவ்வளவுதான். இப்ப நீங்க என்ன சொல்றயளோ, அந்தப்படி கேக்கறேன்" என்றார் சாஸ்திரி.

"அப்படின்னா, நான் முதல்லே கேட்டபடி ரூபாயைக் கொடுத்துடும். முழுசா, ஐயாயிரம் ரூபாயாயிருக்கட்டும். பாக்கி ஆயிரம் ரூபாயையும் இப்பவே அனுப்பிச்சுடும். நான் போய், பிள்ளையாண்டானை அப்பா ஐயான்னு கெஞ்சி, தாவாக் கட்டையைப் பிடிச்சுச் சமாதான் பண்ணியாகணும்" என்றாள் தங்கம்மாள்.

சாஸ்திரி மனதுக்குள், 'அடாடா! இது என்ன பணத்தாசை! அதுவும் இந்த மாதிரி சந்தர்ப்பத்திலா?' என்று எண்ணிக்கொண்டார். ஆனால், வெளிப்படையாக, "அதற்கு என்ன, அம்மா! அப்படியே செய்துவிட்டால் போகிறது! இதோ ஆயிரம் ரூபாயும் அனுப்பிவிடுகிறேன். அதற்காகக் காரியம் தவக்கமாக வேண்டாம். ஊரார் எல்லாரும் சாப்பிடக் காத்துண்டிருக்கா. உங்க மனுஷ்யாளையும் உடனே வரச் சொல்லுங்கோ!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

11. 'எனை மணந்த மணவாளன்'

பிறகு கல்யாணம் எவ்விதமான தங்கு தடையாவது, சண்டை சச்சரவாவது இல்லாமல் நடந்தேறியது. சம்பந்திகள் எள்ளு என்று கேட்பதற்குமுன் எண்ணெயாகவே கொடுத்துவிடும்படி சம்பு சாஸ்திரியின் உத்தரவு. ஆகவே, அவர்களுக்கு எவ்வித மனக் குறையும் ஏற்படவில்லை. உண்மையில், இந்தக் கல்யாணத்தில் ஆன வீண் செலவுகளைப் பற்றிச் சம்பந்தியம்மாளே புகார் சொல்லும்படியிருந்தது. "அடாடா! இது என்ன ஊதாரித்தனம்! இப்படியா பணத்தை வாரி இறைப்பார்கள்? நாங்கள் சம்பந்திகள் வந்திருப்பது முப்பது பேர். இங்கே சாப்பாடு நடக்கிறது ஐநூறு பேருக்கு. வருகிறவாள், போகிறவாள் எல்லாரும் இப்படியா வாரிக் கொட்டிக்கொண்டு போகவேண்டும்?" என்று தங்கம்மாள் வயிறு எரிந்தாள். இப்படிச் செலவாகிற பணமெல்லாம் மாட்டுப் பெண் மூலமாகத் தன் பிள்ளைக்கு வந்து சேரவேண்டிய பணம் என்ற ஞாபகமானது அந்த வயிற்றெரிச்சலை அதிகமாக்கியது.

கல்யாணம் அமர்க்களமாகத்தான் நடந்தது. இந்தக் கல்யாணத்தில் எப்போது பார்த்தாலும் அண்டா நிறையக் காப்பி தயாராயிருந்ததையும், நினைத்தவர்கள் நினைத்த போது காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும் பற்றி அந்தப் பிரதேசத்தில் வெகு நாளைக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அக்கிரகாரத்தில் முக்கால்வாசி வீடுகளில் ஆறு மாதத்துக்குக் காப்பிக்கு வேண்டிய சர்க்கரை கல்கண்டு இந்தக் கல்யாணத்தில் சேர்ந்துவிட்டது. குடியானத் தெரு ஜனங்களுக்கும் இந்தக் கல்யாணத்தில் குதூகலந்தான். நாலு நாளும் இராத்திரியில் குடி படைகளுக்குச் சாப்பாடு போட்டுவிட வேண்டுமென்று சாஸ்திரி உத்தரவிட்டிருந்தார். இந்தக் கல்யாணச் சாப்பாட்டை உத்தேசித்து குடியானத் தெருவில் சில வீடுகளுக்கு வெளி ஊர்களிலிருந்து உறவு முறையார் கூட வந்திருந்தார்கள். குடிபடைகளுக்குச் சாப்பாடு போட்டு வெற்றிலை பாக்கு வாங்கிக் கொடுப்பதில் புகாருக்கு இடமில்லாமல் முன்னின்று நடத்தி வைக்கும் பொறுப்பு நல்லானுக்கு ஏற்பட்டது. அவன் இது விஷயத்தில் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. சாதாரணமாய், சாஸ்திரியாரின் க்ஷேம லாபத்தில் அவன் ரொம்ப அக்கறையுள்ளவனாயிருந்தும், இந்தச் சமயத்தில், 'எங்கெங்கிருந்தோ முன் பின் தெரியாத ஜயமாரெல்லாம் வந்து சாப்பிட்டுட்டுப் போறாங்களே? வருஷமெல்லாம் உழைக்கும் குடியான ஜனங்களும்தான் சாப்பிடட்டுமே! இவங்களுக்கு எஜமானிடம் நன்றி விசுவாசமாவது இருக்கும்' என்று அவன் எண்ணி, மிகவும் தாராளமாகவே வந்தவர்களுக்கெல்லாம் வாரி விட்டுக்கொண்டிருந்தான்.

இந்த மாதிரியெல்லாம் செலவாவதைப் பற்றிச் சம்பந்தியம்மாளைக் காட்டிலும் பத்து மடங்கு வயிறெரிந்து கொண்டிருந்தார்கள், மங்களமும் அவள் தாயாரும். ஆனால், இந்தக் களேபரத்தில் அவர்களால் ஒன்றும் குறுக்கிட்டுச் சொல்ல முடியவில்லை. சொன்னாலும் தங்கள் பேச்சு ஏறாதென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, தாயாரும் பெண்ணும் கூடிக் கூடிப் பேசிக்கொள்வதுடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. அவர்களுடன் சிலசமயம் மங்களத்தின் தம்பி செவிட்டு வைத்தியும் சேர்ந்து கொண்டான். பாவம்! செவிட்டு வைத்திக்கு, சாவித்திரியைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பார்கள் என்ற ஓர் ஆசை மனத்திற்குள் இருந்துகொண்டிருந்தது. அது இப்போது நிராசையாய்ப் போயிற்று. ஊரில் சிலர் அவனை இது சம்பந்தமாகப் பரிகாசமும் செய்தார்கள். ஆகவே, ஏக்கமும் பொறாமையும் முகத்தில் பொங்கி வழிய அவன் கல்யாண வீட்டில் உள்ளுக்கும் வாசலுக்கும் போய் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி மங்களம் இருக்குமிடத்துக்குப் போய், "அக்கா! கல்யாண தட்சிணை ஆளுக்கு ஒரு ரூபாயாம்!" என்றும், "ராத்திரி முந்நூறு தேங்காய்

கிடந்தது; இப்போ ஒண்ணு கூட இல்லை" என்றும், இந்த மாதிரி ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தான்.

இப்படியாக அந்தக் கல்யாணத்தை மிகவும் சந்தோஷமாயும் குதூகலத்துடனும் அநுபவித்தவர்கள் பலர்; மனத்துக்குள் எரிந்துகொண்டு வெளியில் காட்டிக்கொள்ளாதிருந்தவர்கள் சிலர். அவர்களுள் எல்லாம் அளவிலாத ஆனந்தத்தில் மூழ்கிச் சொர்க்க வாழ்வையே அடைந்துவிட்டதாக எண்ணிய ஒரு ஜீவனும், சொல்ல முடியாத சோக சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்த ஓர் ஆத்மாவும் இருந்தார்கள். அவர்கள் மணப்பெண்ணாகிய சாவித்திரியும் மணமகனாகிய ஸ்ரீதரனுந்தான்.

"பிள்ளையாண்டானுடைய மோவாய்க் கட்டையைப் பிடித்து அப்பா, ஐயா என்று கெஞ்சியாக வேண்டும்" என்று சம்பந்தியம்மாள் சம்பு சாஸ்திரியிடம் சொன்ன போது உண்மையையே சொன்னாள். ஆனால் அவள் சொன்ன காரணம் மட்டும் சரியல்ல. தங்கம்மாள் சென்னைப் பட்டணத்துக்குப் போய் வழக்கம்போல் தன்னுடைய சக்தி முழுவதையும் பிரயோகித்தாள். மூன்று மணி நேரம், வாக்குவாதம், கோபதாபம், அழுகை புழுகை எல்லாம் ஆனபிறகு கடைசியாக அவள், "இப்பொழுது ஒண்ணும் முழுகிப் போகவில்லை. எல்லாருமாகக் கிளம்பிக் கல்யாணத்துக்குப் போவோம். நீயே பொண்ணைப் பாரு. பொண்ணைப் பார்க்காமயா தாலி கட்டப் போறே? பார்த்த பிறகு உனக்குப் பிடிக்காட்டா, என்கிட்டே சொல்லு. நான் எப்படியாவது கல்யாணத்தை நிறுத்திடறேன். எல்லாருமாத் திரும்பி வந்துடலாம்" என்று சொன்னாள். "அது நன்னாயிருக்குமா?" என்று ஸ்ரீதரன் கேட்டதற்கு, "ஏன் நன்னாயிருக்காது? இப்போது பணம் அட்வான்ஸ் வாங்கிண்ட அப்புறம் ஒரு காரணமும் இல்லாமல் வாண்டான்னாத்தான் அவமானம். அப்போ உனக்குப் பொண் பிடிக்கலைன்னா ஏதாவது நான் சாக்குச் சொல்லிவிட்டுக் கிளம்பி விடறேன். உனக்கென்ன அதைப்பத்தி?" என்றாள். இதன்மேல், ஸ்ரீதரன் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தான். சம்பு சாஸ்திரியின் பெரிய மனுஷத்தன்மையைப் பற்றியும் சாவித்திரியின் அழகைப் பற்றியும் அவள் வர்ணித்ததும் ஒருவாறு அவன் மனத்தை இளகச் செய்திருந்தன.

இப்போது நெடுங்கரைக்கு வந்து அந்தப் பட்டிக்காட்டையும் 'ஜான்வாஸ' ஊர்வலத்தின் அழகையும் பார்த்த பிறகு அவன் மனம் சோர்ந்துவிட்டது. அவனுக்கு மாமனாராக வரவிருந்த சம்பு சாஸ்திரி இன்னாரென்று தெரிந்ததும் அவனுக்குப் பஞ்சப் பிராணனும் போய்விட்டது. கோவிலில் வைத்து உபசாரங்கள் நடந்த போதெல்லாம், சம்பு சாஸ்திரி குறுக்கே நெடுக்கே போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து, அவர் அந்தக் கோவிலின் குருக்கள் என்று அவன் எண்ணினான். அப்புறம், அவர்தான் சம்பு சாஸ்திரி என்று தெரிந்தபோது, "ஐயோ!" என்று அசந்து போனான். 'இந்தக் கட்டுப்பெட்டிப் பிராமணனா எனக்கு மாமனார்? இவருடைய பெண்ணும் இப்படித்தானே இருக்கும்?' என்று எண்ணியபோது அவனுக்குச் சொரேல் என்றது. தன் சிநேகிதன் நாணா சொன்னதெல்லாம் நிஜந்தான், பரிகாசமல்ல என்று அவனுக்கு நிச்சயம் ஏற்பட்டது. இந்தக் கண்ணராவியையெல்லாம் பார்க்க நாணா கல்யாணத்துக்கு வராமல் போனதே நல்லது என்றும் நினைத்தான்.

ஊர்வலம் முடிந்து, சம்பந்திகளுக்காக ஏற்பட்டிருந்த ஜாகைக்குப் போனதும், அம்மாவைத் தனியாக அழைத்து அழமாட்டாத குரலில், "என்னால் முடியாது; இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம். இப்போதே நான் ஓடிப் போறேன்" என்றான்.

இவர்களுக்குள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தபோதுதான் தீக்ஷிதர் சம்பு சாஸ்திரியை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். தங்கம்மாள் சாஸ்திரியுடன் பேரம் பேசி, அவர் அதிகப் பணம் கொடுக்கச் சம்மதித்துவிட்டுப் போனதும், மறுபடியும் தன் மகனிடம் வந்தாள். "அப்பா! குழந்தை! நீயுந்தான் இப்படிச் சொல்றேன்னு, நான் அந்தப் பிராமணன் கிட்டே ஏதாவது சாக்குக் காட்டிக் கல்யாணத்தை நிறுத்திவிடலாம்னு

பார்த்தேன். அது முடியலையேடாப்பா! இன்னொரு ஆயிரம் ரூபாய் அதிகம் கொடுக்கணும்னேன். உடனே சரீன்னுட்டார். என்ன பண்றதுடாப்பா, குழந்தை! கல்யாணத்தை நடத்தித்தான் ஆகணும்!" என்றாள்.

சம்பு சாஸ்திரியின் தாராள சுபாவத்தை அறிந்ததும், உண்மையிலேயே தங்கம்மாளுக்கு இந்தக் கல்யாணத்தை எப்படியாவது நடத்திவிட வேண்டுமென்று உறுதி ஏற்பட்டிருந்தது.

ஸ்ரீதரனோ அத்தனைக்கத்தனை ஆத்திரம் அடைந்தான். "நீ நாசமாய்ப் போக! பணம், பணம், பணம் என்று அடித்துக்கொள்கிறாயே? பணம் உன்னோடு சுடுகாட்டுக்கு வரப்போறதா?" என்றான்.

இதுதான் சமயமென்று தங்கம்மாள் தன் கைவரிசையை ஆரம்பித்துவிட்டாள். "ஆமாண்டாப்பா! என்னை இந்த ஊரிலேயே சுடுகாட்டிலே வச்சுட்டுப் போயிடு. நான் இதோ கிணத்துலே விழுந்து செத்துப் போறேன். இந்த அவமானத்தோடே என்னாலே ஊருக்குத் திரும்பிப் போக முடியாது" என்று சொல்லி அழத் தொடங்கினாள். இந்த மாதிரி சோக நாடகமெல்லாம் கொஞ்ச நேரம் நடந்த பிறகு, கடைசியில் தங்கம்மாள், 'நான் சொல்றதைக் கேள்டா, குழந்தை! நீ இப்போ மாத்திரம் என் மானத்தைக் காப்பாத்திடு, அப்புறம் உனக்கு வேணும்னா, ஆம்படையாளை அழைச்சு வைச்சுக்கோ! இல்லாட்டா, வேண்டாம். அவ எனக்கு மாட்டுப் பொண்ணா இருந்துட்டுப் போகட்டும்" என்றாள். ஸ்ரீதரன், "அப்படின்னா, நீயே நாளைக்கு எனக்குப் பதிலாகத் தாலி கட்டிவிடு" என்றான்.

ஆனால், மறுநாள் ஸ்ரீதரன் தான் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட சுபலக்னத்தில் சாவித்திரிக்குத் தாலி கட்டினான். அதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு முதன் முதலாக, கல்யாணப் பந்தலில் மாலை மாற்றும் சந்தர்ப்பத்தில், ஸ்ரீதரன் சாவித்திரியைப் பார்த்தான். சாவித்திரி அப்போது குனிந்த தலை நிமிராமல் இருந்தாள். கிராமாந்தர வழக்கப்படி, அவளுக்குப் பதினெட்டு முழப் புடவை உடுத்தி, தலையில் பழைய காலத்து நகைகள் எல்லாம் அணிவித்து அலங்காரம் செய்திருந்தார்கள். அதைப் பார்த்த ஸ்ரீதரன், "கர்நாடகம் என்றால் படு கர்நாடகம்" என்று தீர்மானித்துக் கொண்டான். பிறகு, திருமாங்கல்ய தாரணத்துக்கு முன்பு மணமகனும் மணமகளும் மந்திரோச்சாடனத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும் கட்டம் வந்தது. இருவரையும் எதிர் எதிரே உட்காரவைத்து ஒரு பட்டுத் துணியைப் போட்டு மூடினார்கள். மந்திரம் பண்ணிவைத்த சாஸ்திரிகள் "முகத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார். ஆம்; ஸ்ரீதரன் சாவித்திரியின் முகத்தைப் பார்த்தான். முதலில் அவளுடைய கண்கள் தான் தெரிந்தன. அந்தக் கண்களின் பார்வையில் இருந்த ஒருவிதப் பரிதாபம் அவன் இருதயத்தை ஒரு கண நேரம் என்னமோ செய்தது. அப்புறம், முகம் தெரிந்தது. வெகு நேரம் ஹோம குண்டத்துக்கு எதிரில் இருந்து சாவித்திரியின் முகம் புகையுண்டிருந்தது. போதாததற்குக் கண்களை அடிக்கடி கசக்கியதனால் கண்ணில் இட்டிருந்த மை கன்னமெல்லாம் வழிந்திருந்தது. மூக்கிலே புல்லாக்குத் தொங்கிற்று. இந்த நிலையிலிருந்த சாவித்திரியின் முகத்தைப் பார்த்ததும், ஸ்ரீதரன், 'இவ்வளவு அவலட்சணமான முகம் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது' என்று தீர்மானித்து விட்டான்.

அப்புறம் அந்தக் கல்யாணத்தின்போது, சாவித்திரியின் முகத்தை இன்னொரு தடவை பார்க்க ஸ்ரீதரன் முயற்சி செய்யவில்லை. 'ஏதோ தலைவிதியினால் இந்தப் பந்தம் ஏற்பட்டுவிட்டது; ஆனால் இப்போது தாலி கட்டுவதுடன் சரி, அப்புறம் எனக்கும் இவளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது' என்று அடிக்கடி அவன் மனத்தில் உறுதி செய்து கொண்டான். அந்தப் பெண்ணிடம் அவனுக்கு லவலேசமும் இரக்கம் உண்டாகவில்லை. 'இவள் ஏன் பிறந்தாள்? இவள் பிறந்ததனால் தானே நாம் இந்தச்

சங்கடத்தில் அகப்பட்டுக்கொள்ள நேர்ந்தது?' என்று எண்ணி என்ணி அவன் ஆத்திரப் பட்டான்.

சாவித்திரியின் மனோ நிலையோ இதற்கு நேர் மாறாக இருந்தது. கல்யாணம் நிச்சயமானதிலிருந்து அவள், 'ஸ்ரீதரன், ஸ்ரீதரன்' என்று மனத்திற்குள் ஜபம் செய்து கொண்டிருந்தாள். காகிதத்தையும் பென்ஸிலையும் எடுத்துக் கொண்டு போய்த் தனியான இடத்தில் உட்கார்ந்து கொண்டு, "ஸ்ரீதரன், பி.ஏ." "ஸ்ரீதரய்யர், பி.ஏ." "மகா-ரா-ரா-ஸ்ரீ ஸ்ரீதரய்யர் அவர்கள்" என்றெல்லாம் எழுதி எழுதிப் பார்ப்பாள். கல்யாணத் தேதி நெருங்க நெருங்க, ஸ்ரீதரனைப் பார்க்கவேண்டுமென்னும் அவளுடைய ஆவலும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

கல்யாணத்துக்கு முதல் நாளிரவு அவளுடைய ஆவல் உச்ச நிலையை அடைந்திருந்த சமயத்தில், 'கசு முசு' என்று பலரும் இரகசியம் பேசிக்கொண்டதை அவள் கவனித்தாள். வம்புக்கார ஸ்திரீகள் இரண்டொருவர் அவளிடம் வந்து, "அடியே! சாவித்திரி! 'பொண்ணு பிடிக்கலை, கல்யாணம் வேண்டாங்'கறானாம் உன் ஆம்படையான்!" என்று சொன்னார்கள். இது சாவித்திரி காதில் நாராசமாக விழுந்தது. ஆனாலும் அதை அவள் நம்பவில்லை. சம்பு சாஸ்திரி திரும்பி வந்ததும், "என்ன அப்பா எல்லோரும் கூடிக் கூடிப் பேசிக்கிறாளே," என்று கேட்டாள். "உனக்கு ஒன்றுமில்லை, அம்மா! கல்யாணம்னா அப்படித்தான் இருக்கும். சம்பந்திகள் அது பண்ணலை, இது போறலை என்று சொல்லிக் கொண்டிருப்பா, நாலு பேர் நாலு வம்பு வளப்பா! அதையெல்லாம் நீ காதிலேயே போட்டுக்கப்படாது, அம்மா!" என்றார். சாவித்திரிக்கு இதனால் சமாதானம் உண்டாயிற்று.

மறுநாள் சாவித்திரி, முதன் முதலாக ஸ்ரீதரனைப் பார்த்தபோது, அவள் உடல் முழுதும் மகிழ்ச்சியினால் ஒரு குலுங்குக் குலுங்கிற்று. அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடி ஸ்ரீதரன் உச்சிக் குடுமியுடன் இராமல், நாகரிகமாகக் கிராப் வைத்துக் கொண்டிருப்பதையும், சிவந்த மேனியுடன் சுந்தர புருஷனாய் விளங்குவதையும் கண்டதும், கர்வத்தினால் அவளுடைய உடல் பூரித்தது. திருமாங்கல்ய தாரணத்துக்கு முன்னால், பட்டுத் துணியினால் மறைக்கப்பட்ட சமயம், ஸ்ரீதரனுடைய முகத்தைப் பார்த்தபோது, அவளுக்கு மயிர்க் கூச்சம் எடுத்து, கண்களில் ஜலம் வந்துவிட்டது.

அப்புறம் அவனுடைய அழகிய முகத்தை மறுபடி பார்க்க வேண்டுமென்று அடிக்கடி அவளுக்கு ஆவல் உண்டாயிற்று. சில தடவைகளில் ரொம்பவும் துணிச்சலுடன் நிமிர்ந்து பார்ப்பாள். அப்போதெல்லாம் அவன் தன்னைப் பாராமல் குனிந்து கொண்டிருப்பதையோ அல்லது வேறு பக்கம் நோக்கிக் கொண்டிருப்பதையோ பார்த்ததும் அவளுக்கு அவமானமாய்ப் போய்விடும். 'அவர் எவ்வளவு அடக்கமாக இருக்கிறார்? நமக்கு எவ்வளவு துணிச்சல்' என்றெண்ணித் தன் ஆவலை அடக்கிக் கொண்டாள்.

கல்யாணம் நாலு நாளும் சாவித்திரி இந்த உலகத்திலேயே இருக்கவில்லை. துயரம் என்பதே இல்லாத ஆனந்த கற்பனாலோகத்தில் வசித்து வந்தாள்.

'கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா!.....'

என்று அவளுடைய குழந்தை உள்ளம் ஓயாமல் பாடிக் கொண்டேயிருந்தது. தனக்குப் புருஷனாக வாய்த்தவர் சாதாரண மனுஷர் அல்ல, தன்னுடைய தகப்பனார் பூஜை செய்யும் ஸ்வாமிதான் தன்னைச் சிறு தாயாரின் கொடுமையிலிருந்து மீட்பதற்காக இப்படி மனுஷ ரூபத்தில் வந்திருக்கிறார் என்று எண்ணினாள்.

தன்னுடைய துயரங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டனவென்றும், இனிமேல் தன் வாழ்க்கையில் சந்தோஷத்தைத் தவிர துக்கம் என்பதே கிடையாதென்றும் அவள் நினைத்து நினைத்து மனம் பூரித்தாள். வாழ்க்கையில் தன்னுடைய கஷ்டங்களெல்லாம் உண்மையில் அப்போதுதான் ஆரம்பமாகின்றன என்பது அந்தப் பேதைப் பெண்ணுக்கு எப்படித் தெரியும்?

கடவுளின் கருணை அற்புதமானது; அனந்தமானது. மனுஷ்யர்களுக்கு அவர்களுடைய வருங்காலத்தை அறியும் சக்தி இல்லாமல் பகவான் செய்திருக்கிறார் அல்லவா? இந்த ஒன்றிலேயே இறைவனுடைய கருணைத் திறத்தை நாம் நன்கு அறிகிறோம். வருங்காலத்தில் நிகழப்போவதெல்லாம் மட்டும் மனுஷனுக்குத் தெரிந்திருந்தால், அவன் ஒரு கணமாவது உண்மையான மகிழ்ச்சி அநுபவிக்க முடியுமா?

இரண்டாம் பாகம்

மழை

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யு மோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசு மோ?" - கபிலர்

1. வெள்ளம்

சாவித்திரிக்கும் ஸ்ரீதரனுக்கும் கல்யாணம் நடந்த வருஷத்தில், அந்தப் பிரதேசத்தில் வெகு நாள் வரையில் மழை பெய்யவில்லை.

புரட்டாசிக் காய்ச்சல் அந்த வருஷத்தைப் போல் கொடுமையாக எப்போதும் இருந்ததில்லையென்று ஜனங்கள் சொன்னார்கள். ஐப்பசி பிறந்து பத்துத் தேதி ஆயிற்று. அப்படியும் மழை இருக்கிற இடமே தெரியவில்லை.

குடமுருட்டியிலும் ஜலம் குறைந்துவிட்டபடியால், தண்ணீர் மடைச் சண்டைகள் அதிகமாயின.

"சாமி! இந்த மாதிரி இன்னும் நாலு நாள் காய்ஞ்சால் இந்த வருஷம் பஞ்சந்தான். இப்பவே, விளைச்சல் ஒண்ணுக்குப் பாதிதான் எதிர்பார்க்கலாம்" என்றான் நல்லான்.

"இப்படியே இருந்துவிடாதப்பா! பகவான் கிருபை பண்ணுவர். மழை சீக்கிரம் வரும்" என்றார் சம்பு சாஸ்திரியார்.

"மழை எங்கே வரப் போறதுங்க, இந்த ஐயமாரு பண்ணுகிற அக்கிரமத்திலே!" என்றான் நல்லான். ஊரில் அந்த வருஷம் மிராசுதார்களுக்கும், குடியானவர்களுக்கும் மனைக்கட்டுச் சண்டை ஏற்பட்டு, கோர்ட்டில் கேஸ் நடந்து கொண்டிருந்தது. இந்தக் கோபத்தைத்தான் நல்லான் அப்படி வெளியிட்டான்.

"அப்படிச் சொல்லாதே, நல்லான்! ஔவையார் என்ன சொல்லியிருக்கா? 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' அந்த மாதிரி, நீதான் நல்லானாச்சே, உனக்காகத்தான் மழை பெய்யட்டுமே?"

நல்லான் சிரித்துவிட்டு, "என் பேர்தானுங்க நல்லான். உண்மையிலே நான் ரொம்பப் பொல்லாதவனுங்க. ஒரு வேளை, உங்க தர்ம குணத்துக்காக மழை பேஞ்சால்தான் பேஞ்சது. ஏங்க! மகா பாரதத்திலே விராட பர்வம் வாசிச்சா, மழை வரும் என்கிறார்களே!" என்றான்.

"ஆமாமப்பா, நல்லான்! நம் தேசத்துப் பெரியவர்கள் அப்படி நம்பிக்கை வைத்திருந்தார்கள். இந்த நாளில் அதையெல்லாம் யார் நம்புகிறார்கள்? இருந்தாலும், நான் கூட இன்னிக்கு ராத்திரி விராட பர்வம் வாசிக்கலாம்னு நினைச்சுண்டிருக்கேன்" என்றார் சாஸ்திரியார்.

சம்பு சாஸ்திரியார் அன்றிரவு விராட பர்வம் வாசித்ததனால் தானோ என்னவோ, நமக்குத்தெரியாது; மறுநாள் மாலை கீழ்த் திசையில் இருண்ட மேகங்கள் திரண்டு எழுந்தன. மத்தியானத்திலிருந்தே கம்மென்று மிகவும் இறுக்க மாயிருந்தது. "ஒரு வேளை மழை வந்தாலும் வரும்" என்று ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். கிழக்கே மேகம் திரளுகிறது என்று அறிந்ததும் எல்லோரும் வீதியில் வந்து பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மேகங்கள் அதிவேகமாகப் பரவி நாலு திசைகளையும் மூடிக்கொண்டன. காது செவிடுபடும்படியாக இடி இடித்தது. மின்னல் ஒரு திசையின் அடிவாரத்தில் கிளம்பி, கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வானத்தைக் குறுக்கே கடந்து சென்று, இன்னொரு திசையின் அடிவரையில் சென்று மறைந்தது.

பிறகு மழை பெய்யத் தொடங்கியது. மழை என்றால் எப்பேர்ப்பட்ட மழை! பிரளய காலத்து மழை என்று தான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் படபடவென்று பெரிய பெரிய மழைத்துளிகள் விழுந்தன. சில நிமிஷத்துக்கெல்லாம் வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தாரையாகிவிட்டது. பாபநாசம் சிவசமுத்திரம் முதலிய இடங்களில்

மலையிலிருந்து அருவி விழுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த மாதிரியாக, மேகமாகிய மலை முகட்டிலிருந்து ஒரு பெரிய – பிரம்மாண்டமான – கண்ணுக்கெட்டிய தூரம் பரவிய அருவி விழுவது போலவே தோன்றியது. அன்றிரவெல்லாம் இடைவிடாமல் அப்படிப் பெய்து கொண்டிருந்தது. தாலுகா கச்சேரியில் வைத்திருந்த மழை அளக்கும் கருவி, அன்று ராத்திரி எட்டங்குல மழை காட்டியதாகப் பிற்பாடு தெரிய வந்தது.

மறுநாள் பொழுது விடிந்த பிறகும் மழை நிற்கவில்லை. மழையுடன் காற்றும் பலமாக அடித்தபடியால் ஊரில் எல்லாரும் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பாமல் இருந்தார்கள். ஆனால் நல்லானுக்கு மட்டும் இருப்புக் கொள்ளவில்லை. நேற்று வரை தண்ணீருக்கு ஏங்கிக் கிடந்த வயல்களை இன்று போய்ப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. கீத்துக் குடலையை எடுத்துத் தலையில் மாட்டிக் கொண்டு கிளம்பினான். ஊரைத் தாண்டி அப்பால் போனதும், எங்கே பார்த்தாலும், ஒரே ஜலப் பிரளயமாயிருந்தது! குளத்திலே ஜலம் அலை மோதிக் கொண்டிருந்தது. வயல்களில் எல்லாம் தண்ணீர் நிறைந்து பெரும்பாலான வரப்புகளை மறைத்துவிட்டது. அவற்றில் நெற்பயிரின் நுனி மட்டும் தெரிந்தும் தெரியாமலும் காணப்பட்டது. வாய்க்கால்களில் ஜலம் கரையைத் தொட்டுக்கொண்டு ஓடிற்று! ஆகா! குடமுருட்டியின் காட்சியை என்னவென்று சொல்வது? அப்போது அந்த நதியில் சுழிகளுடனும் சுழல்களுடனும் ஓடிக்கொண்டிருந்த வெள்ளம் குடத்தை மட்டுந்தானா உருட்டும்? மலையைக் கூடவல்லவா உருட்டிக் கொண்டுபோய்விடும்? ஆனால், மலை என்ற நாமதேயம் தஞ்சாவூர் ஜில்லாவில் இல்லாத காரணத்தினால்தான் போலும், அப்போது அந்நதியில் வேருடன் பிடுங்கப்பட்ட மரங்களும் வைக்கோற் போர்களும் மிதந்து போய்க் கொண்டிருந்தன.

நல்லான் இந்தக் காட்சியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆற்றில் இன்னும் ஒரு சாண் தண்ணீர் அதிகமானால், வெள்ளம் கரை மீறிவிடும் என்று எண்ணினான். பிறகு அங்கிருந்து சற்றுத் தூரத்திலிருந்த சேரியின் வழியாகச் சென்றான். அந்தச் சேரி அப்போது நாலு பக்கம் ஜலத்தினால் சூழப்பட்ட ஒரு தீவைப் போல் விளங்கிற்று. அந்தத் தீவிற்குள்ளும் ஒரு பகுதியில் ஜலம் வழிந்து ஓடத் தொடங்கியிருந்தது. அங்கே, சில ஆட்கள் நின்று மண்ணை வெட்டிப் போட்டு அணை கோலிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த நல்லான், 'ஐயோ! பாவம்! சாஸ்திரி ஐயா சொல்றாப்பலே, மழை பெய்தா எல்லாருக்குந்தான் பெய்யறது. ஆனால், சில பேருக்கு, அது சாதகமாயிருக்கு; சில பேருக்கு கெடுதலா முடியுறது' என்று எண்ணினான். அதே சமயத்தில் இன்னோர் எண்ணம் அவன் மனத்தில் தோன்றி அவனுக்கு ஒரு க்ஷணம் நடுக்கம் உண்டாக்கிற்று. அந்தச் சேரிக்குக் கொஞ்ச தூரத்தில் குடமுருட்டியில் ஒரு குத்தல் இருந்தது. தப்பித் தவறி அங்கே உடைப்பு எடுத்து விட்டால் சேரி அரோகரா! 'சாமி! ஆண்டவனே! அப்படி ஒண்ணும் வர வேண்டாம்!' என்று பிரார்த்தித்த வண்ணம் நல்லான் வீடு திரும்பினான்.

நல்லானைப் போலவே சம்பு சாஸ்திரியும் அன்று காலை அந்த மழையிலும் காற்றிலும் வெளிப் புறப்பட்டார். ஆனால், அவர் வயல்களுக்குப் போகவில்லை. தடாகத்தில் போய்ப் பிராத ஸ்நானம் செய்துவிட்டு, நந்தவனத்தில் புகுந்தார். அன்று ஏகாதசியாகையால், பஜனை மடத்தில் படங்களின் அலங்காரத்துக்காக அகப்பட்ட வரையில் புஷ்பங்களைச் சேகரித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அப்பாவுக்குப் பெண்ணாகிய சாவித்திரி அந்தப் புஷ்பங்களையெல்லாம் அழகான மாலைகளாகத் தொடுத்து வைத்தாள்.

சாயங்காலம் கொஞ்சம் மழை விட்டிருந்தபோது, சம்பு சாஸ்திரி சாவித்திரியை அழைத்து, "அம்மா! நல்ல வேளையாய் மழை குறைந்திருக்கிறது. சிறு தூற்றல் தான் போடுகிறது. பஜனை மடத்துக்குப் போய்க் கோலம் போட்டு விளக்கேற்றி வைத்துவிட்டு

வா, அம்மா! இன்று சீக்கிரமாகவே பஜனையை ஆரம்பித்து முடித்துவிடவேணும்" என்றார். "இதோ போகிறேன், அப்பா!" என்றாள் சாவித்திரி.

பிறகு, "மங்களம்! இன்னிக்கு ஏகாதசின்னு ஞாபகம் இருக்கோல்யோ? சுண்டலுக்குக் கடலை ஊறப் போட்டிருக்கையா?" என்று கேட்டார்.

"ஊறப் போடுவானேன்? அதுதான் மழையிலே ஊறிப் போய்க் கிடக்கே!" என்றாள் மங்களம்.

"வைத்தி! வைத்தி!" என்று இரைந்து கூப்பிட்டார் சாஸ்திரி. அவன் காதில் விழவில்லை. கிட்டப் போய், ஜாடை காட்டிக் கொண்டே, "வைத்தி! அக்கிரகாரத்திலே எல்லாரிட்டயும் போய், இன்னிக்கு ஏழு மணிக்கே பஜனை ஆரம்பிச்சுச் சுருக்க முடிச்சுடலாம்னு சொல்லிட்டு வா!" என்று சொன்னார்.

வைத்தி அவர் சொன்னதை ஒருவாறு தெரிந்து கொண்டு "இந்த மழையிலே வீடு வீடா யார் போறது? என்னால் முடியாது!" என்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சம்பு சாஸ்திரி தாமே புஷ்பக் குடலை முதலியவற்றை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

2. பஜனை

அக்கிரகாரத்தின் மேலண்டைப்புறத்தில், பெரிய தெருவையும் சின்னத் தெருவையும் சேர்க்கும் பாதை ஒன்று இருந்தது. அந்தப் பாதைக்கு மேற்கே விசாலமான படித்துறைக்குளம் காணப்பட்டது. குளத்தின் வட கரையில் பாதையை யொட்டி பஜனை மடம் இருந்தது.

இந்தப் பஜனை மடத்தில் அன்று இரவு ஏழு மணிக்கு ஜனங்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். சங்கரநாராயண தீக்ஷிதர், சாமா ஐயர், ரமணி ஐயர், ராமய்யா வாத்தியார், முத்துசாமி ஐயர் எல்லாரும் வந்தார்கள். குழந்தைகளும், ஸ்திரீகளுங்கூடச் சிலர் வந்து சேர்ந்தார்கள்.

சங்கர தீக்ஷிதர் வந்ததும், கையில் ஓர் ஓட்டை விசிறியுடன் சம்பு சாஸ்திரியிடம் வந்து, "எங்கணும், சாஸ்திரி! ரொம்ப இறுக்கமாயிருக்கே! வேர்க்கிறதோ இல்லையோ?" என்று கிறுதக்காகச் சொல்லிக்கொண்டு, சாஸ்திரியின் மேல் விசிறினார். இந்த மாதிரி விளையாட்டுக்கெல்லாம் சாஸ்திரியின் பதில் புன்னகைதான். அந்தப் பதிலையே இப்போதும் அளித்தார். உடனே தீக்ஷிதர், "ஓய், இன்னிக்குத் திவ்ய நாம சங்கீர்த்தனம் எல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம். சீக்கிரமாய் உட்கார்ந்தபடியே நாலு பாட்டுச் சொல்லிப் பஜனையை முடிச்சுடும். மழை பலமாய்ப் பிடிச்சுக்கறதுக்கு முன்னாலே, அவாவாள் வீட்டுக்குப் போய்ச் சேரலாம்" என்றார்.

"அப்படித்தான் உத்தேசம் பண்ணியிருக்கேன். இந்த மழையிலே நீங்கள்ளாம் வந்தேளே, அதுவே பெரிய காரியம்!" என்றார் சாஸ்திரியார்.

ஆனால், சங்கர தீக்ஷிதரின் எண்ணம் பலிக்காமற் போவதற்கே தானோ என்னவோ, பஜனை ஆரம்பித்த சற்று நேரத்துக்கெல்லாம் மறுபடியும் மழை பலமாய்ப் பிடித்துக் கொண்டது.

பஜனை மடத்தின் சுவர்களின் மீதும் கதவுகளின் மீதும் மழையும் புயலும் தாக்கியபோது உண்டான சப்தம் பஜனையின் சப்தத்தையும் மூழ்க அடிப்பதாயிருந்தது. இடையிடையே கதவுகள் படீர் படீர் என்ற சப்தத்துடன் திறப்பதும் மூடுவதுமாயிருந்தன.

அதே சமயத்தில் சம்பு சாஸ்திரியின் வீடும் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. அடிக்கடி திறந்து கொண்ட ஜன்னல் கதவுகளின் வழியாகக் காற்றும் மழையும் புகுந்து அடித்தன. அந்த வருஷம், கல்யாணச் சந்தடி காரணமாக சாஸ்திரியாரின் வீடு ஓடு மாற்றப்படவில்லை. இதனால் சில இடங்களில் ஏற்கெனவே சொட்டுச் சொட்டென்று சொட்டிக் கொண்டிருந்தது. இப்போது அடித்த பெருங்காற்றிலும் மழையிலும் ஓடுகள் இடம் பெயர்ந்தபடியால், சில இடங்களில் தண்ணீர் தாரையாகக் கொட்டிற்று.

பாவம்! சாவித்திரி, சுண்டல் எடுத்துக்கொண்டு போவதற்காக வந்தவள், வீட்டுச் சாமான்கள் நனையாமல் காப்பாற்றுவதற்குப் பெருமுயற்சி செய்தாள். முகத்தில் வந்து அடித்த மழையைப் பொருட்படுத்தாமல் ஜன்னல் கதவுகளைச் சாத்தினாள். அப்பாவின் புஸ்தகங்கள், கணக்கு நோட்டுகள் முதலியவற்றை எடுத்துப் பத்திரப்படுத்தினாள். ஜலம் தாரையாகக் கொட்டிய இடங்களில் அண்டா, தவலை முதலிய பெரிய பாத்திரங்களைக் கொண்டு வைத்தாள். தரையில் தேங்கியிருந்த ஜலத்தை விளக்குமாற்றால் பெருக்கித் தள்ள முயன்றாள்.

அந்தச் சமயத்தில் அவளுடைய மனம், 'தீவாளிக்கு இவாள் வர்றபோது இப்படியே மழை கொட்டிண்டிருந்தா என்ன பண்றது? இந்த வீட்டைப் பார்த்துட்டுப்

பரிகாசம் பண்ணுவாளே? அதற்குள்ளே மழை நின்று போகணுமே, ஸ்வாமி!' என்று வேண்டிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயம், மங்களம் சமையலறையிலிருந்து கையில் ஒரு கிழிசல் குடையுடன் வந்து, 'ஏண்டி, சாவித்திரி! உங்க அப்பாகிட்டச் சொல்லி இந்தக் குடையை ரிப்பேர் பண்ணி வைக்கறதற்குக்கூட விதியில்லையா? பாக்கிக்கெல்லாம் மட்டும் வாய் கிழியறதே!" என்று சொல்லிக் குடையைத் தொப்பென்று கீழே எறிந்தாள்.

பகவானுடைய பக்தியில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய குடும்ப காரியங்களைச் சரியாகக் கவனிப்பதில்லையென்பது நமது நாட்டில் தொன்றுதொட்ட சம்பிரதாயமாயிருந்து வந்திருக்கிறது. அந்தப் பரம்பரையில் வந்த சம்பு சாஸ்திரி மட்டும் இந்த வழக்கத்துக்கு விரோதமாயிருக்க முடியுமா? ஆகவே, மங்களம் அவர்மேல் எரிந்து விழுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை.

ஆனாலும், சாவித்திரி விட்டுக் கொடுக்காமல், "அப்பா கிட்டச் சொன்னேன், அவருக்கு ஞாபகம் இல்லைபோல் இருக்கு. நாளைக்கே ரிபேர் பண்ணிவிடலாம், சித்தி!" என்றாள். பிறகு, அந்தப் பேச்சு வளராமல் இருக்கும் பொருட்டு, "பஜனை முடியற சமயம் ஆச்சே, சித்தி! விநியோகத்துக்கு எல்லாரும் காத்திண்டிருப்பாளே! சுண்டலை எடுத்துண்டு போவமா?" என்று கேட்டாள்.

மங்களம், "உனக்கும் வேலையில்லை, உங்க அப்பாவுக்கும் வேலையில்லை. மழையிலேயும் இடியிலேயும் பஜனை என்ன வேண்டியிருக்கு பஜனை! நான் வல்லை சுண்டலை எடுத்துண்டு. நீயே, தொலைஞ்சுட்டு வா!" என்றாள். இப்படிச் சொல்லிக்கொண்டே உள்ளே போய், சுண்டல் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து, தரையில் 'நக்'கென்று வைத்தாள்.

அதே சமயத்தில் வானத்தில் ஒரு பேரிடி உண்டாகி நாலு திசையும் குமுறும்படி இடித்தது.

சாவித்திரி, அப்பா சொல்லிக் கொடுத்திருந்தபடி "அர்ச்சுனப் பல்குனப் பார்த்தனக் கிரீடி..." என்ற மந்திரத்தை மனத்தில் ஜபித்த வண்ணம் சுண்டல் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, அந்த ஓட்டைக் குடையைப் பிரித்துக் கொண்டு பஜனை மடத்துக்குக் கிளம்பினாள்.

பஜனை மடத்தில் சம்பு சாஸ்திரி கலைந்துபோன தம்புராவைச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தார். பஜனையிலிருந்து எழுந்து வந்து மடத்தின் தாழ்வாரத்தில் சங்கர தீக்ஷிதரும் இன்னும் நாலைந்து பேரும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னால், சம்புசாஸ்திரி பஜனை ஆரம்பித்த புதிதில், ஊரில் எல்லாரும் அதில் சிரத்தையுடன் ஈடுபட்டார்கள். நாளடைவில் சாஸ்திரியாரைத் தவிர மற்றவர்களுக்குப் பஜனையில் சிரத்தை குறைந்து வந்தது. இப்போதெல்லாம் பெரும்பாலும் பொழுது போக்குக்காகவும், சுண்டல் வடை விநியோகத்தை உத்தேசித்துமே பஜனைக்கு வந்தார்கள் என்று சொல்லலாம். இப்போதைக்குக் குழந்தைகளுக்குத்தான் பஜனையில் அதிக சிரத்தையிருந்தது. பெரியவர்களோ ஒரு பக்கம் பஜனை நடந்து கொண்டிருக்கும்போது தாங்கள் பாட்டுக்கு வம்பு வளர்த்துக் கொண்டிருப்பார்கள்.

அதிலும் இன்று மழையும் காற்றும் பிரமாதமாக அடித்துக் கொண்டிருந்தபடியால், யாருக்குமே பஜனையில் மனம் செல்லவில்லை. இன்னும் ஏன் சுண்டல் வரவில்லையென்றுதான் எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தீக்ஷிதர், பொடி டப்பியைத் தட்டி, பொடி எடுத்து உறிஞ்சிவிட்டு, "என்னடா இது? இந்தச் சம்பு சாஸ்திரி இலேசிலே பஜனையை நிறுத்தாது போல் இருக்கே! சட்டுப்புட்டுனு முடிச்சா, சுண்டலை வாங்கித் தின்னுட்டுப் போகலாம்னு பார்த்தா..." என்று இழுத்தார்.

சாமாவய்யர், அப்போது அங்கே வந்த வைத்தியைப் பார்த்து, "அடே வைத்தி! உங்க அத்திம்பேர் கிட்டச் சொல்லிச் சீக்கிரம் பஜனையை நிறுத்தச் சொல்லேண்டா! இந்த மழையிலேயும் இடியிலேயும் பஜனை என்னடா, வேண்டியிருக்கு?" என்றார்.

"நான் தானே? வந்து நாலு நாள் தான் ஆச்சு!" என்றான் வைத்தி.

தீக்ஷிதர், "நாசமாப் போச்சு! அவனுக்குச் சாதாரண நாளிலேயே காது கேக்காது. இந்த மழையிலும் இடியிலும் காது கேட்டாப்பலேதான்!" என்றார்.

"ஏண்டா வைத்தி! வாசலிலே இடி இடிக்கிறதே! உன் காதிலே விழறதா?" என்று ராமய்யா வாத்தியார் உரத்த குரலில் கத்தினார்.

அதற்கு வைத்தி, "பிரஸாதந்தானே? சுண்டலும் வடையுந்தான். எனக்குத் தெரியாதா, என்ன? எங்க அக்காதானே பண்ணினாள்?" என்றான். எல்லாரும் சிரித்தார்கள்.

முத்துசாமி ஐயர், "ஏன், ஸ்வாமி? குடமுருட்டியிலே பிரமாத வெள்ளம் வந்திருக்காம். உடப்பு எடுத்துக்கும் போலிருக்காமே, வாஸ்தவமா? யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார்.

"குடமுருட்டிதான் உடைச்சுக்கட்டும், மானமே இடிஞ்சு விழட்டும். இந்தச் சம்பு சாஸ்திரி மட்டும் பஜனையை நிறுத்தாது போலிருக்கு" என்றார் தீக்ஷிதர்.

இந்தச் சமயத்தில் சாவித்திரி, சுண்டல் பாத்திரத்துடன் உள்ளே வரவே, "சரி, சரி, பிரஸாதம் வந்துடுத்து, பஜனையை முடிக்கச் சொல்லலாம்" என்று கூறிக் கொண்டு, எல்லாரும் அவரவர்கள் இடத்துக்குப் போனார்கள்.

3. உடைப்பு

இரவு சுமார் எட்டு மணிக்கு, நல்லான் தன்னுடைய வீட்டில் கோரைப் பாயை விரித்து அதில் படுத்துக் கொண்டான். தூக்கம் என்னவோ வரவில்லை. பஜனை மடத்துக்குப் போய்ப் பஜனை கேட்கலாமாவென்று ஒரு கணம் நினைத்தான். அப்புறம், 'இந்த மழையிலே யார் போறது?' என்று எண்ணினான். இரவு பூராவும் இப்படியே மழை பெய்தால், வயல்களில் எல்லாம் ரொம்ப ஜலம் கட்டி நிற்கும், அதிகாலையில் எழுந்து போய் வடிய விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆனால், வாய்க்கால்களில் ஜலம் ததும்பப் போய்க் கொண்டிருந்தால், எப்படி வடிய விடுகிறது என்று யோசனை உண்டாயிற்று. விராட பர்வம் படித்தால் மழை வரும் என்பது போல், மழையை நிறுத்துவதற்கும் ஏதாவது வழி இருக்கிறதா என்று சாஸ்திரியாரைக் கேட்க வேண்டுமென எண்ணினான்.

அப்போது நல்லானுடைய பாம்புச் செவியில் மழையின் 'சோ' என்ற சத்தத்தையும், காற்றின் 'விர்' என்ற சப்தத்தையும் தவிர, வேறு ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

அது, ஜலம் கரையை உடைத்துக் கொண்டு பாயும் சப்தம் என்று அவனுக்குத் தெரிந்து போயிற்று. உடனே குடமுருட்டியின் குத்தல் ஞாபகம் வந்தது. அவ்வளவுதான்; போர்த்திக் கொண்டிருந்த துப்பட்டியை எடுத்து விசிறி விட்டு, அவசரமாக எழுந்தான். ஓலைக் குடலையை எடுத்துத் தலையில் மாட்டிக் கொண்டு அந்தக் கொட்டுகிற மழையில் மின்னல் வெளிச்சத்தின் உதவியினால் சேரியை நோக்கி விரைந்து சென்றான்.

நல்லான் தட்டுத் தடுமாறி, இரண்டு மூன்று இடத்தில் தடுக்கி விழுந்து எழுந்திருந்து கடைசியாக சேரியை அடைந்தபோது, சேரி அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. காலையில் மண்ணை வெட்டி வரப்புப் போட்டுக் கொண்டிருந்தார்களல்லவா? அந்த வரப்பெல்லாம் போய்விட்டது. ஒரே வெள்ளமாக ஜலம் சேரியில் புகுந்து கொண்டிருந்தது. மழை, காற்று, பாய்கின்ற ஜலம் இவற்றின் 'ஹோ' என்ற இரைச்சலுக்கு இடையிடையே, "ஐயோ! கொழந்தையைக் காணமே!" "ஏ குட்டி! எங்கடி போய்ட்டே!" "ஆயா! ஆயா! ஐயோ! ஆயா போய்ட்டாளே!" "அடே கருப்பா! மாட்டை அவிழ்த்துவிடுறா!" "ஐயோ! என் ஆடு போயிடுச்சே!" என்று இந்த மாதிரி பரிதாபமான அலறும் குரல்கள் தீன ஸ்வரத்தில் கேட்டன.

மின்னல் வெளிச்சத்தில் நல்லானைப் பார்த்ததும், சேரி ஜனங்கள் வந்து, அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். "ஐயோ! சாமி! குடிமுழுகிப் போச்சுங்களே! குடமுருட்டி உடைப்பு எடுத்துக்கிட்டதே! நாங்க என்ன செய்வோம்? எப்படிப் பிழைப்போம்?" என்று கத்தினார்கள்.

நல்லான் உரத்த குரலில், "அடே! நீங்கள் எல்லாரும் ஆம்புளைகள் தானாடா! உடைப்பு எடுத்தா, ஓடிப்போய் மண்ணைக் கிண்ணைக் கொட்டி அடைக்கிறதுக்குப் பார்க்காமே, பொம்புளை மாதிரி அழுதுகிட்டு நிக்கறீங்களேடா?" என்றான்.

"உடைப்பையாவது, அடைக்கவாவதுங்க! கிட்ட ஆள் அண்ட முடியாதுங்க. அவ்வளவு பெரிய உடைப்பு சாமி!" என்றான் தலையாரி வீரன்.

"குடிசையெல்லாம் விழுந்து எல்லாம் பாழாய்ப் போச்சுங்க. இனிமே உடைப்பை அடைச்சுத்தான் என்ன பிரயோஜனம்? புள்ளை குட்டிங்களைக் காப்பாத்தறதுக்கு ஒரு வழி சொல்லுங்க!" என்றான் இன்னொருவன்.

"புள்ளை குட்டி போனாலும் பரவாயில்லை. ஆடு மாடெல்லாம் இருந்த இடந்தெரியலைங்களே!" என்றான் மூன்றாவது ஆள்.

அப்போது இடி முழக்கத்துடன் பளீரென்று மின்னிய மின்னலின் வெளிச்சத்தில் நல்லானுக்கு முன்னால் ஒரு கணப் பொழுது தோன்றிய காட்சி அவனுடைய நெஞ்சைப் பிளப்பதாயிருந்தது. கொஞ்ச தூரத்தில் குடமுருட்டியின் கரை உடைத்துக்கொண்டு, ஜலம் ஒரே நுரை மயமாகப் பாய்ந்து கொண்டிருப்பதையும், சேரியெல்லாம் ஜலம் புகுந்திருப்பதையும், குடிசைகள் இடிந்து விழுந்து கொண்டிருப்பதையும், பெண் பிள்ளைகளும், பிள்ளை குட்டிகளும் அலறுவதையும் அவன் அந்த ஒரு க்ஷண நேரக் காட்சியில் கண்டான்.

உடனே, அவன் ஆவேசம் வந்தவனைப் போல், "அட பாவிகளா! தடிப்பசங்கள் மாதிரி சும்மா நிக்கறீங்களேடா? இன்னும் கொஞ்சம் நாழி போனா அத்தனை பேரும் வெள்ளத்திலே போயிடுவாங்களே! ஓடுங்க! ஓடுங்க! பொம்புளைகளை யெல்லாம் சேர்த்து, பிள்ளை குட்டிகளோடு அக்கிரகாரத்துக்கு ஓடச் சொல்லுங்க!" என்றான்.

"என்ன, சாமி குருட்டு யோசனை சொல்றீங்க? அக்கிராகாரத்துக்கு நாம் போனா அய்யமாரு விடுவாங்களா?" என்றான் தலையாரி வீரன்.

"குருட்டு யோசனை ஒண்ணும் இல்லேடா! ஓடிப் போய் சாஸ்திரி ஐயா காலிலே விழுந்தா ஏதாவது வழி சொல்லிக் காப்பாத்துவாரு. அநேகமா, பஜனை மடத்திலே தான் இப்ப இருப்பாரு. பஜனை மடத்துக்கு ஓடச் சொல்லுங்க பொம்புளைகளை. ஆம்புளைகளெல்லாம் ஆடு மாடைக் காப்பாத்தறதுக்கு வழி பாருங்க!" என்றான் நல்லான்.

"பட்டிக்கார ஐயாவே சொல்லச்சே நமக்கு என்ன வந்தது? ஓடுங்க எல்லாரும் பஜனை மடத்துக்கு!" என்றான் தலையாரி வீரன்.

பிறகு, நல்லானும் சாம்பானும் குடமுருட்டியில் உடைப்பு எடுத்துக்கொண்ட இடத்தைப் பார்க்கப் போனார்கள்.

பஜனை முடிந்தது. சாஸ்திரியார் ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்து கற்பூர ஹாரத்தி காட்டினார். எல்லோரும் சேர்ந்து மங்களம் பாடினார்கள்.

பிறகு, தீக்ஷிதர் எழுந்திருந்து பிரஸாத விநியோகம் செய்ய ஆரம்பித்தார். பஜனையில் இந்தப் பணியை அவர் தான் ஏற்றுக் கொள்வது வழக்கம். விநியோகம் செய்து வரும்போது, தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டும் தெரிந்தும் தெரியாமலும் இரண்டு மூன்று தடவை சுண்டல் கொடுப்பார். அந்தப் பிள்ளைகளும் தகப்பனாரின் நோக்கத்தை அறிந்தவர்களாய் மூலைக்கு மூலை வந்து சுண்டல் வாங்கி மடி நிறையக் கட்டிக் கொண்டு போவார்கள்.

இன்று வழக்கம்போல் தீக்ஷிதர் சுண்டல் கொடுத்துக் கொண்டிருக்கையில் திடீரென்று மடத்தின் வாசலில் ஏதோ கூக்குரல் கேட்டது. மழை, காற்று சப்தத்துக்கிடையே பலர் ஓடிவரும் சத்தம் போல் இருந்தது. 'இது என்னவாயிருக்கலாம்?' என்று யாரும் யோசிப்பதற்கு முன்னால், படீரென்று மடத்தின் வாசல் கதவு திறந்தது. திறந்த கதவு வழியாக திமுதிமுவென்று சொட்ட நனைந்திருந்த பெண்பிள்ளைகளும் குழந்தைகளும் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து மழைச் சாரலும் உள்ளே புகுந்து அடித்தது.

பஜனை மடத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் அவ்வளவு பேருடைய கண்களும் ஏககாலத்தில் வாசற்படி பக்கம் திரும்பி இந்தக் காட்சியைக் கண்டன. அவர்களில் பலருக்குக் கண் விழி பிதுங்கிவிடும் போல் இருந்தது.

அதே சமயத்தில், உள்ளே புகுந்த பெண் பிள்ளைகளும் இவர்களைப் பார்த்துவிட்டுப் பயப் பிராந்தி கொண்டவர்களைப் போல் திகைத்து நின்றார்கள்.

பின்னால் வருகிறவர்களுக்குக் கூட இடங்கொடாமல் அவர்கள் வாசற்படியண்டை நின்றுவிட்டார்கள்.

ஒரு கண நேரம், இந்தக் காட்சி. அடுத்த கனத்தில், "ஐயையோ! இது என்னடா இது! சேரிப் பொம்பிளைகள் போலிருக்கே!" என்று முத்துசாமி அய்யர் ஒரு கூச்சல் போட்டார்.

"அட கிரகசாரமே! இது என்ன கூத்து?" என்று சாமா அய்யர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தார்.

"ஓகோகோ! கலி முத்திப் போச்சு!" என்றார் ராமய்யா வாத்தியார்.

நாணு கனபாடிகள் வாயிலிருந்த சுண்டலை விழுங்கிக் கொண்டே, "விழட்டு! விழட்டு! எல்லாழுமா உக்காந்திழுக்கயளே!" என்று கூவினார்.

ஐந்தாறுபேர் எழுந்திருந்து, கையை ஓங்கியவண்ணம் வாசற்படியை நோக்கிச் சென்றார்கள். அவர்களுக்கெல்லாம் முன்னால், கையில் விசிறிக் கட்டையுடன் தீக்ஷிதர் சென்றார்.

"அபஸ்மாரங்களா!"

"மூதேவிகளா!"

"இங்கே எங்கே வந்தயள்?"

"அவ்வளவு தைரியங் கொடுத்துப் போச்சா?"

"போ! போ! போ!"

"பீடை! தரித்திரம்!"

இப்படி இவர்கள் விரட்டி அடிக்க, அந்தப் பெண் பிள்ளைகள் தங்களுடைய குழந்தை குட்டிகளைக் கையினால் வளைத்துப் பின்னால் தள்ளிய வண்ணம் தாங்களும் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஏக்கமும் பீதியும் குடிகொண்டிருந்தன. அவர்களில் ஒரு ஸ்திரீ சற்றுத் துணிச்சலாக நின்று, "சாமி! கோவிச்சுக்காதிங்க. தெரியாம வந்துட்டோ ங்க!" என்றாள்.

"தெரியாத வந்துட்டீங்களா? திமிரைப் பார்த்தயோல்லியோ திமிரை! அக்கிரகாரத்துக்குள் வரக்கூடாதுன்னு தெரியாதா?

"இல்லேங்க! பட்டிக்கார ஐயா, பஜனை மடத்துக்குப் போன்னு சொன்னாங்க. அதைக் கேட்டு வந்துட்டோங்க."

"என்ன! பட்டிக்காரன் சொன்னானா? அவன் தான் இந்த சாஸ்திரி இடங் கொடுத்துக் கொடுத்துத் திமிர் பிடிச்சுக் கிடக்கானே? அவன் சொன்னா, நீங்க வந்துடறதோ?"

"அவ்வளவு துணிச்சலா உங்களுக்கு வந்துடுத்து?"

"நாளைக்கே சேரியிலே நெருப்பை வச்சுக் கொளுத்தச் சொல்றேன் பாரு!"

"சாமி, சேரியிலே நெருப்பு வைக்கிறதுக்கு ஒண்ணுமில்லிங்க; எல்லாம் வெள்ளம் அடிச்சுட்டுப் போயிட்டுதுங்க!"

"போயிடுத்தா? போயிடுதோல்லியோ? நீங்கள்ளாம் இப்படித் திமிர்புடிச்சு அலைஞ்சாக்கே, ஸ்வாமியே பார்த்துத் தண்டிச்சுடறார்."

இதற்குள்ளாக, அந்த ஸ்திரீகள், குழந்தைகள் எல்லாரும் மறுபடியும் வாசற்படியைத் தாண்டி மடத்துக்கு வெளியே கொட்டுகிற மழையில் சென்றார்கள்.

மேற்சொன்னதவ்வளவும் இரண்டு நிமிஷ நேரத்திற்குள் நடந்தது. சேரி ஜனங்கள் உள்ளே வந்தபோது, சம்பு சாஸ்திரி தம்புராவை எடுத்து அதனுடைய உறையில் போட்டுக் கொண்டிருந்தார். சாவித்திரி, பூஜை சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். இரண்டு பேரும் அப்படியே பிரமித்து நின்று, நடந்ததையெல்லாம்

பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் நடந்த சம்பாஷணை அரை குறையாக அவர்கள் காதில் விழுந்தது.

சேரி ஜனங்கள் மறுபடி வெளியில் போனதும், சாஸ்திரி, சாவித்திரியைப் பார்த்து, "குழந்தை! சேரியிலே ஏதோ ஆபத்துபோல் இருக்கிறது. இல்லாவிட்டால் இவர்கள் இப்படி வந்திருக்க மாட்டார்கள். நாம் போய் விசாரிக்கலாம், வா!" என்றார்.

அவர்களை வெளியிலே விரட்டிவிட்டுத் திரும்பி வந்தவர்கள் சாஸ்திரியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"ஓய் சாம்பு சாஸ்திரி! பார்த்தீரோல்லியோ; எல்லாம் உம்மால் வர்றதுதான் காணும்" என்றார் தீக்ஷிதர்.

"அதிலே என்ன சந்தேகம்? இந்த மனுஷன் இடங்கொடுத்துக் கொடுத்துத்தான் ஊரே இப்படி கெட்டுப் போச்சு!" என்றார் முத்துசாமி அய்யர்.

"ஓய்! உம்ம பட்டிக்காரன் தான் இங்கே வரச் சொன்னானாங்காணும் அந்தப் பயலை ஒழிச்சுட்டு மறுகாரியம் பாரும்னா, நீர் கேக்கறீரா? அவனைத்தான் தலைமேலே தூக்கி வச்சுக்கிறீரே?" என்றார் சாமா அய்யர்.

"உம்ம பஜனையிலே இடி விழ!" என்று தீக்ஷிதர் முத்தாய்ப்பு வைத்தார்.

சாஸ்திரிகள் சாவதானமாக, "என்மேலே என்னத்துக்குக் கோவிச்சுக்கறயள்? நல்லானும் அப்படியெல்லாம் தப்புத்தண்டாவா ஒரு காரியம் செய்றவனில்லை. என்ன ஆபத்தோ, என்னமோ; நான் போய் விசாரிக்கிறேன். நீங்கள்ளாம் அவாவா ஆத்துக்குப் போய்ப் பேசாம தூங்குங்கோ! போது விடிஞ்சாப் பாத்துக்கலாம்!" என்றார். பிறகு சாஸ்திரியும், சாவித்திரியும் பஜனை மடத்தை விட்டு வெளியில் சென்றார்கள்.

4. அடைக்கலம்

அன்றிரவு சுமார் நடுநிசிக்கு, சம்பு சாஸ்திரியாரின் மாட்டுக் கொட்டகையில் ஒரே கலகலப்பாயிருந்தது. அந்தக் கொட்டகை நாலு பக்கமும் தாழ்வாரமும், நடுவில் பெரிய முற்றமுமாக அமைந்தது. ஒரு தாழ்வாரத்தில் நெல் குதிர்கள் வைத்திருந்தன. மற்ற மூன்று தாழ்வாரங்களில் எப்போதும் மாடு கட்டியிருப்பது வழக்கம். இன்று மேலண்டைத் தாழ்வாரத்திலேயே கொண்டு வந்து நெருக்கியடித்துக் கட்டியிருந்தார்கள். மாடுகளுக்கும் பாஷை உண்டு, அவை ஒன்றோடுடொன்று பேசிக்கொள்ளும் என்று சொல்வது உண்மையானால், சம்பு சாஸ்திரியாரின் மாடுகள் அப்போது பின்வருமாறுதான் பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

"ஹும்மா! இந்த மனுஷப் பிராணிகளைப் போலச் சுயநலம் பிடித்த பிராணிகளை நான் பார்த்ததேயில்லை."

"ஏற்கெனவே மழையிலும் குளிரிலும் அவஸ்தைப்படுகிறோம். பாதி நிசிக்கு வந்து நம்மைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தொந்தரவு செய்கிறார்களே?"

"முற்றத்தின் வழியாக வந்தபோது மேலே மழை பெய்ததில் சொட்ட நனைந்து போனேன்."

"உனக்கென்ன கேடு! என் குழந்தைக்கு உடம்பு குளிரினால் நடுங்குகிறது, பார்!"

"உங்கள் கஷ்டத்தையே நீங்கள் சொல்கிறீர்களே தவிர, அந்த மனுஷர்களின் அவஸ்தையைப் பார்க்கவில்லை. முற்றத்தில் சற்று நனைந்ததற்கு இப்படிப் புகார் செய்கிறீர்களே? இவர்கள் ஆற்றங்கரை மேட்டிலிருந்து நனைந்து கொண்டே வந்திருக்கிறார்களே?"

"ஹாமாம்! இவர்கள் எதற்காக அங்கிருந்து ஓடி வந்திருக்கிறார்கள்?"

"இது தெரியாதா? இவர்கள் இருந்த கூரைக் குச்செல்லாம் மழையிலே விழுந்திருக்கும். நம்மைப் போல இந்த ஜனங்களுக்கு ஓடு போட்ட வீடு இருக்கிறதா, என்ன?"

"அதற்காக, பிச்சைக்காரன் குடிசையிலே சனீசுவரன் புகுந்தாற் போல், இவர்கள் நம்முடைய இடத்தைப் பங்கு போட்டுக் கொள்ள வந்து விட்டார்களாக்கும்?"

"காலையிலே எஜமான் வரட்டும். அவரிடம் நான் புகார் சொல்கிறேனா இல்லையா, பார்!"

"இவர்களாக ஒன்றும் வந்திருக்க மாட்டார்கள். எஜமான் சொல்லித்தான் வந்திருப்பார்கள்."

"போகட்டும்; இவர்கள் வந்ததுதான் வந்தார்கள். நம்முடைய இடத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். எதற்காக இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்? இரையாமலிருந்து தொலைந்தால் நாம் தூங்கலாமல்லவா?"

"ஹொஹ்ஹோ! உனக்கு அது தெரியாதா? மனுஷ ஜாதியினிடத்தில் அதுதான் பெரிய குறை. அவர்களுக்குச் சத்தம் போடாமல் பேசவே தெரியாது. அவர்கள் மேல் குற்றம் இல்லை. சுவாமி அப்படி அவர்களைப் படைத்துவிட்டார்!"

மேற்கண்டவாறு மாடுகள் நிஜமாகவே பேசிக் கொண்டனவா என்று நமக்குத் தெரியாது. ஆனால் அப்போது உண்மையில் கீழண்டைத் தாழ்வாரத்தில் மட்டும் கூச்சல் பலமாகத்தான் இருந்தது. சேரி ஜனங்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் - அவ்வளவு பேரும் அங்கே இருந்தார்கள். சிலர் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தார்கள். சிலர் பசியினால் கத்திய குழந்தைகளைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பட்டிக்கார நல்லானும் அங்கே காணப்பட்டான். அவன் ஒரு குதிரின் இடுக்கிலிருந்து பெரிய சாக்குச் சுருள் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து, "ஏ பிள்ளைகளா! கொழந்தைகளைக் கொன்னுடாதீங்க. தலைக்கு ஒரு சாக்கை விரிச்சுப் போடுங்க!" என்றான்.

அந்தச் சமயத்தில், மாட்டுக் கொட்டகையின் வாசற் கதவு திறந்தது. சம்பு சாஸ்திரியும் சாவித்திரியும், கையில் ஹரிகேன் லாந்தருடனும் பீத்தல் குடையுடனும் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களைக் கண்டதும் மாடு கன்றுகள் எல்லாம், "ஹம்மா! ஹம்மா!" என்று கத்தின. அவர்களை வரவேற்பதற்காகத்தான் அப்படிக் கத்தினவா அல்லது தங்களைத் தொந்தரவுபடுத்தியது பற்றி எஜமானனிடம் புகார் சொல்லிக் கொண்டனவா என்று நமக்குத் தெரியாது.

அதே சமயத்தில், கீழண்டைத் தாழ்வாரத்திலும் கலகலப்பு ஏற்பட்டது. "சாமி! சாமி! நீங்க மவராசரா இருக்கணும். இந்த மழையிலும் குளிர்லேயும் தங்க இடங் கொடுத்தீங்களே? இல்லாட்டா, எங்க கதி என்ன ஆயிருக்கும்? பிள்ளை குட்டிங்கள்ளாம் செத்துப் போயிருக்குமே?" என்று தலையாரி வீரன் சொன்னான். "சாமி! நீங்க நல்லாயிருக்கணும்!" என்று பல குரல்கள் ஏக காலத்தில் கூவின. சிலர் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

பட்டிக்காரன் நல்லான், "இந்தக் கழுதைகளுக்கு இடங் கொடுத்ததே பிசகுங்க. இப்பக்கூட விரட்டியடிச்சுடலாமான்னு தோணுது. 'பஜனை மடத்திலே சாஸ்திரி அய்யா இருப்பாரு, போய்க் காலிலே விழுங்க'ன்னு நான் சொன்னா, இதுங்க பஜனை மடத்துக்குள்ளேயே பூந்துட்டுதுங்களே! பெரிய எழவால்ல போச்சு!" என்றான்.

"நீ பின்னோட வந்திருக்க வேணும், நல்லான். பொம்பிளைகள் என்னத்தைக் கண்டார்கள்? அதிலும் இந்த மழையிலும் காத்திலும்? பாவம், ஒண்ணுமே தெரியாமே திகைச்சுப் போய் நின்றார்கள். அப்புறந்தான் எனக்கு இந்த யோசனை தோணித்து. ராத்திரி மாட்டுக் கொட்டாயிலே யிருந்தால், பொழுது விடிஞ்சு பாத்துக்கலாம் என்று..."

"இதுக்குக் கூட நம்ம அக்கிரகாரத்து ஐயாமாரெல்லாம் நாளைக்கு என்ன சொல்லப் போறாங்களோ?"

"ஒண்ணும் சொல்ல மாட்டார்கள், நல்லான்! ஆபத்துக்குத் தோஷமில்லைன்னு அவாளுக்குத் தெரியாதா? இல்லாட்டா, நடு ராத்திரியிலே இந்த ஜனங்கள் குழந்தைகளையும் குட்டிகளையும் வைத்துக் கொண்டு என்ன பண்ணுவார்கள்?"

இந்தச் சமயத்தில், குழந்தை ஒன்று 'வீல்' என்று கத்துகிற சத்தம் கேட்டது.

"ஏ காத்தாயி! ஏன் பிள்ளையைப் போட்டு அடிக்கிறே!" என்றான் நல்லான்.

"பின்னே என்னாங்க! உயிர் பிழைச்சதே புண்ணியம் இப்போ, வவுத்தைப் பசிக்குதுன்னா, நான் என்ன செய்றது?" என்றாள் காத்தாயி.

இதைக் கேட்ட சாவித்திரி, "அப்பா! நான் ஆத்துக்குப் போய் அவல் இடிச்சிருக்கே, அதிலே கொஞ்சம் எடுத்துண்டு வரட்டுமா? குழந்தைகள் பசி, பசின்னு கத்தறது பரிதாபமாயிருக்கே!" என்றாள்.

"சித்திக்குத் தெரிஞ்சால், 'லொள்ளு'ன்னு விழுவாளே, அம்மா! இருந்தாலும் பாதகமில்லை. போய்க் கொண்டு வா! ஜாக்கிரதையாய் சேத்திலே கீத்திலே விழுந்துடாமே வா!" என்றார்.

அப்போது பட்டிக்காரன் நல்லான், "நாளைக்கு இத்தனைக்கித்தனை ஊரிலே வம்பும் தும்பும் வந்து சேரப் போகிறது" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

5. தீக்ஷிதர் சபதம்

நல்லான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. மறுநாள் காலையில் சுமார் பத்து மணிக்கு, கொஞ்சம் தூற்றல் நின்று வானம் வெளி வாங்கியிருந்த போது வம்பும் தும்பும் கும்பலாகச் சேர்ந்து சம்பு சாஸ்திரியின் வீட்டு வாசலைத் தேடிக் கொண்டு வந்தன. சங்கர நாராயண தீக்ஷிதரை முன்னிட்டுக்கொண்டு, முத்துசாமி அய்யர், சாமாவய்யர், ரமணி அய்யர், பஞ்சவய்யர், ராமய்யா வாத்தியார், பென்ஷன் ஸப் ரிஜிஸ்ட்ரார் சினிவாச அய்யங்கார், பஞ்சாங்கம் பசுபதி ஜோசியர், குமாரசாமி குருக்கள், நாராயண கனபாடிகள், அர்ச்சகர் வரதய்யங்கார் எல்லாரும் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது வாசலில் நின்ற செவிட்டு வைத்தியைப் பார்த்து, தீக்ஷிதர், "அடே! உன் அத்திம்பேரைக் கூப்பிடு!" என்று வாயாலும் கத்தி, கையாலும் ஜாடை காட்டினார். செவிட்டு வைத்தி, அவ்வளவு பேரும் கும்பலாய் வருவதைப் பார்த்து ஏற்கெனவே மிரண்டு போயிருந்தான். இப்போது, நெஞ்சு படக் படக்கென்று அடித்துக் கொள்ள உள்ளே சென்று, பூஜை அறையில் இருந்த சாஸ்திரியிடம், "எல்லாரும் வந்திருக்கா; உங்களைக் கூப்பிடறா!" என்றான். பிறகு, சமையலறைப் பக்கம் சென்று, "அக்கா! அக்கா! ஊரிலே எல்லாருமாகச் சேர்ந்து அத்திம்பேரை அடிக்க வரா! நாம் இங்கே இருக்க வேண்டாம், ஊருக்குப் போய்விடுவோம், வா!" என்றான். ஆனால் மங்களம் அப்போது கொல்லையில் குளித்துக் கொண்டிருந்தபடியால், அவள் காதில் அவன் சொன்னது விழவில்லை. அதற்குப் பதிலாக அம்மியில் ஏதோ அரைத்துக் கொண்டிருந்த சாவித்திரியின் காதில் விழுந்தது. அவள் உடனே எழுந்து பரபரப்புடன் கையை அலம்பினாள்.

இதற்குள் சாஸ்திரி வாசற்பக்கம் வந்து, கும்பலாக வந்திருப்பவர்களைப் பார்த்து, "என்ன விசேஷம்? எல்லாருமா வந்திருக்கயளே! பூஜை பண்ணுகிறதற்கு உட்கார்ந்தேன்" என்றார்.

"உம்ம பூஜையைக் கொண்டு போய்க் குடமுருட்டி உடைப்பிலே போடுங்காணும்; உமக்குப் பூஜை வேறே வேண்டியிருக்கா, பூஜை!" என்றார் தீக்ஷிதர்.

"என்ன தீக்ஷிதர்வாள், கோவிச்சுக்கறயளே? நான் என்ன தப்பு செய்துட்டேன், தெரியலையே?"

"என்ன தப்பு செய்துட்டீரா? நீர் ஒரு தப்பும் செய்யலைங்காணும்! தப்பு எங்க பேரிலேதான்!" என்றார் சாமாவய்யர்.

"அவ்வளவு நெஞ்சு ஆண்மையாங்காணும் உமக்கு? அந்த நெஞ்சிலே உப்பை வச்சு நெரடினா என்னன்னு கேக்கறேன்?" என்றார் முத்துசாமி அய்யர்.

"இதென்ன பாவமான்னா இருக்கு!" என்றார் சாஸ்திரி.

"ஆமாம், பாவந்தான்! பாவத்தையும் புண்ணியத்தையும் ரொம்பக் கண்டவரோல்லியோ, நீர்?"

சம்பு சாஸ்திரி வாயை மூடிக்கொண்டு மௌனமாயிருந்தார்.

"என்னங்காணும் ஊமைக் கோட்டான் மாதிரி சும்மா இருக்கீர்? சொல்லுமேங்காணும்?"

"என்ன சொல்லச் சொல்றயள்; அதுதான் தெரியலை?"

"தெரியலையா? உமக்கு ஏன் தெரியப் போறது? பாவம்! பச்சைக் குழந்தை! வாயிலே விரலை வைச்சாக் கடிக்கக் கூடத் தெரியாது."

"போருங்காணும், வேஷம்! பதில் சொல்லுங்காணும்! தீண்டாதவங்களை எப்படிங்காணும் அக்கிரகாரத்திற்குள் விட்டீர்?"

"நீர் பிராம்மணனாங்காணும்? பூணலை அறுத்து எரியுங்காணும்!"

"இந்த மாதிரி கர்ம சண்டாளன்கள் உலகத்திலே இருக்கிறதனால் தானே மழை பெய்யமாட்டேங்கறது!"

"அப்படிப் பெய்தாலும் ஒரேயடியாக கொட்டி வெள்ளமாய் அடிச்சுடறது!"

"கனபாடிகளே! கொஞ்சங் கோவிச்சுக்காமே கேளுங்கோ. ஆபத்துக்குத் தோஷமில்லைன்னு பெரியவாள் சொல்லியிருக்கா..."

"ஆபத்துக்குத் தோஷமில்லையா? ஆமாம், யாருக்கு ஆபத்து வந்தா தோஷமில்லை? நமக்கு ஆபத்து வந்தா, தோஷமில்லை. இந்த நீசன்களுக்கு ஆபத்து வந்தா, நமக்கென்னன்னு கேக்கறேன்."

"அப்படியே அவன்களுக்கு ஆபத்து வந்தது. ஒத்தாசை செய்யணும்னா, அதுக்கோசரம், அவன்களை அக்கிரகாரத்துக்குள்ளே விட்டுடறதா?"

"செய்றதையும் செய்துட்டு சாஸ்திரம் பேசறதைப் பார்ரா!"

"தான் கெட்டதுமல்லாமல் சந்திர புஷ்கரணியையும் சேர்த்துக் கெடுத்து விட்டீரே, ஓய்! இப்போ அக்கிரகாரத்திலே எல்லாரும்னா பிராயச் சித்தம் பண்ணிக்க வேண்டியிருக்கு?"

"கோவிலுக்குப் புண்யாவாசனம் பண்ணணும், இல்லாட்டா பூஜை பண்ணமாட்டேன் என்கிறாரே, குருக்கள்?"

"இது எல்லாத்துக்கும் யார் பணம் அழறதுன்னு கேக்கறேன்!"

"தயவு செய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ! என் மனசாட்சிக்குச் சம்மதமா, நான் ஒன்றும் தப்புப் பண்ணலை. அப்படி நீங்கள் நினைக்கிற பட்சத்தில்..."

"அடேயப்பா! பெரிய மனச்சாட்சிடா இவருக்கு!"

"அப்படித்தான் உம்ம மனச்சாட்சி பாதி ராத்திரிலே வந்து, நீசன்களையெல்லாம் அக்கிரகாரத்துக்குள்ளே விடலாம்னு சொல்லித்தே; நாங்க இவ்வளவு பேரும் உயிரோடே தானே இருந்தோம்? எங்களை ஒரு வார்த்தை கேட்டீராங்காணும்?"

"ஏற்கனவே சேரி தலைகீழா நிக்கறது. இனிமே எங்களை ஒரு பயல் மதிப்பானா? எங்க பேச்சைத்தான் யாராவது கேப்பானா?"

சம்பு சாஸ்திரி இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சும்மா நிற்க, தீக்ஷிதர், கையை ஓங்கிய வண்ணம், "முழிக்கிறதைப் பார்ரா முழிக்கிறதை!" என்றார்.

இதுவரை ரேழிக் கதவண்டை நின்று கேட்டுக் கொண்டிருந்த சாவித்திரி அப்போது குறுக்கே வந்து, "என்ன மாமா, கையை ஓங்கறயள்? எங்க அப்பாவை அடிச்சுடுவேள் போலிருக்கே?" என்று ஆத்திரமாய்க் கேட்டாள்.

தீக்ஷிதர், "ஆமாண்டி அடிக்கத்தான் போறேன்! நீ யாரடி கேக்கறது?" என்று மறுபடியும் கையை ஓங்கினார்.

"ரொம்பத் திமிர் புடிச்ச குட்டிங்காணும். முதுகிலே வையுங்காணும் இரண்டு!" என்று முத்துசாமி அய்யரும் கையை ஓங்கிக் கொண்டு வந்தார்.

சம்பு சாஸ்திரி சாவித்திரியைச் சட்டென்று அணைத்துக் கொண்டார். அதே சமயத்தில், பின்னால், ஒரு பெரிய கனைப்புச் சத்தமும், தடியை ஓங்கித் தரையில் குத்துகிற சத்தமும் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். வாசலில் சற்றுத் தூரத்தில் பட்டிக்காரன் நல்லான் வந்து ஒரு பெரிய தடியை ஊன்றிக் கொண்டு நிற்பது தெரிந்தது.

"ஓஹோஹோ! இந்தச் சிப்பாய் தடியைத் தூக்கிண்டு வந்துட்டானா? நம்மையெல்லாம் அடிச்சாலும் அடிச்சுடுவான்" என்றார் சாமாவய்யர்.

"ஏன் அடிக்க மாட்டான்? பேஷாய் அடிப்பான்! இந்தப் பதிதனுடைய வீட்டு வாசல்லே வந்து நாம் நிக்கறோமோல்லியோ?"

"வாங்கய்யா, போகலாம்!"

"கிளம்புங்கோ!"

"ஏன் இன்னும் நிற்கறயள்? வாங்கோ!"

எல்லாரும் திரும்பிப் போக ஆரம்பித்தார்கள். ஆனால், பத்து அடி போனதும், முத்துசாமி அய்யர் மறுபடி நின்று திரும்பிப் பார்த்து, "இவன் அப்பன் திவசத்துக்கு இவனை நான் திண்டாட விடாட்டா, நான் போட்டிருக்கிறது பூணூல் இல்லை" என்றார்.

"அதோடே விடக்கூடாதுங்காணும். அந்தக் கல்கத்தாக்காரன் கிட்டச் சொல்லி, இந்தக் குட்டியைத் தள்ளி வைக்கப் பண்ணி வாழாவெட்டியா அடிக்கிறேனா இல்லையா, பாரும்!" என்றார் தீக்ஷிதர்.

"அவன் பேரிலே என்னடா தப்பு? நாம் தானேடா இடங்கொடுத்துக் கொடுத்துக் கெடுத்துவிட்டோ ம்? மாமாங்கத்துக்குப் போய்ட்டு வந்து, மீனா செத்துப் போய்ட்டாள்னு ஒரே புளுகாப் புளுகினானே, அப்பவே இவனை சாதிப் பிரஷ்டம் பண்ணியிருக்கணும்."

"அப்படிச் செய்திருந்தா, இவன் பொண்ணுக்குக் கல்யாணமே ஆகாமே, திண்டாடியிருப்பான்."

சம்பு சாஸ்திரியின் காதில் இதெல்லாம் விழுந்தது. அவர் நல்லானைப் பார்த்து, "நல்லான்! நீ என்னத்துக்கு இப்போது இங்கே வந்தே? போ, வேலையைப் பாரு!" என்று சொல்லிவிட்டு, உள்ளே பூஜை அறைக்குள் சென்றார். அம்பிகையின் விக்கிரகத்தின் முன்னால் உட்கார்ந்து, 'அம்பிகை! தாயே! என் அருமை மீனாவை நான் மறக்க முயன்றாலும், இவர்கள் மறக்க விட மாட்டேனென்கிறார்களே!' என்று எண்ணிக் கண்ணீர் விடுத்தார்.

அவரைப் பின் தொடர்ந்து சென்ற சாவித்திரி, 'ஸ்வாமி! பகவானே! தீபாவளிக்கு இவர் வரப்போற சமயத்திலேதானா, இந்தச் சங்கடமெல்லாம் வர வேணும்?' என்று எண்ணி ஏங்கினாள். அவளுடைய கண்களிலும் ஜலம் ததும்பிற்று.

6. ஸ்ரீதரன் சங்கடம்

நெடுங்கரையில் சாவித்திரி, 'தீபாவளி சமயத்தில் தானா இப்படியெல்லாம் வரவேணும்?' என்று சங்கடப்பட்டுக் கொண்டிருக்கையில், கல்கத்தாவில் ஸ்ரீதரனும் தீபாவளியை நினைத்துப் பெரிதும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான்.

கல்யாணம் ஆன இரண்டு மாதத்துக்கெல்லாம் ஸ்ரீதரனுக்குக் கல்கத்தாவில் பெரிய உத்தியோகம் ஆனபோது, தன்னுடைய அபாரமான புத்திசாலித்தனத்துக்காகத்தான் மேற்படி வேலை தனக்குக் கிடைத்தது என்று அவன் நினைத்தான்.

சாவித்திரியைக் கல்யாணம் பண்ணின முகூர்த்தந்தான் ஸ்ரீதரனுக்கு வேலை கிடைத்தது என்றும், அவளுடைய அதிர்ஷ்டந்தான் காரணமென்றும் தங்கம்மாள் சொன்னாள்.

ராஜாராமய்யர் ஒன்றும் நினைக்கவும் இல்லை, சொல்லவும் இல்லை. ஏனெனில், உத்தியோகம் எப்படிக் கிடைத்ததென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். கல்கத்தாவில் ராஜாராமய்யர் உத்தியோகம் பார்த்தபோது அவருக்கு மேலதிகாரியாயிருந்த ஆங்கில துரை அவரிடம் மிகவும் விசுவாசம் வைத்திருந்தார். ஆனால், அவருடைய மனோதத்துவ சோதனைகள், ஆவி உலக ஆராய்ச்சிகள் இவற்றைப் பரிகாசம் செய்து வந்தார். ராஜாராமய்யர் உத்தியோகத்திலிருந்து விலகி ஊருக்கு வந்த பிறகு, மேற்படி துரையின் அருமை மனைவி இறந்து போனாள். இதன் காரணமாக, துரைக்கும் ஆவி உலக ஆராய்ச்சிகளில் சிரத்தை உண்டாயிற்று. ஒரு வேளை ராஜாராமய்யரின் நம்பிக்கையில் உண்மையிருக்குமோ, சாத்தியமாயிருக்குமோ என்றெல்லாம் அவருக்குச் சபலம் உண்டாயிற்று. ராஜாராமய்யருடன் கடிதப் போக்குவரவு தொடங்கினார். பிறகு, ராஜாராமய்யர் கல்கத்தாவுக்கே வந்துவிட்டால் தான் அந்த ஆராய்ச்சிகளை நன்கு நடத்த முடியுமென்று தோன்றியது. எனவே, ராஜாராமய்யரைக் கல்கத்தாவுக்கு வரப் பண்ணுவதற்காக, துரை அவருடைய பிள்ளை ஸ்ரீதரனுக்கு கே அண்டு ஒ பாங்க் என்னும் பிரசித்திபெற்ற இங்கிலீஷ் பாங்கின் கல்கத்தா கிளை ஆபீஸில் உதவி மானேஜர் வேலை செய்து வைத்தார்.

ஆகவே, ஆனி மாதத்திலேயே ராஜாராமய்யருடைய குடும்பம் கல்கத்தாவுக்குப் போக வேண்டியதாயிற்று. கல்கத்தாவில் தென்னிந்தியர் வசித்த பகுதியில் ஒரு தனி வீடு எடுத்துக் கொண்டு குடித்தனம் தொடங்கினார்கள். ஸ்ரீதரன் அப்படி ஒன்றும் அசடு இல்லையாதலால், உத்தியோகத்தைத் திறமையாகப் பார்த்து, துரைக்குத் திருப்தியளித்து வந்தான்.

தங்கம்மாளுக்கு மட்டும் ஒரு மனக்குறை இருந்து கொண்டுதான் இருந்தது. ஆடி, ஆறாம் மாதம், ஆவணியவிட்டம் இவற்றுக்கெல்லாம் நெடுங்கரைக்குப் போய் அதிகாரம் பண்ணிச் சீர்செனத்தி கொண்டு வரவில்லையே யென்பது தான் அந்தக் குறை. ஆனால், எல்லாவற்றுக்கும் சேர்த்து வைத்து, தலை தீபாவளிக்குப் போய்க் கொண்டு வந்துவிடலாமென்று அவள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள். தீபாவளிக்கு ஒரு மாதத்துக்கு முன்னாலிருந்தே பிள்ளைக்கு அவள் உரையேற்ற ஆரம்பித்து விட்டாள்.

ஸ்ரீதரனுக்கோ இது கொஞ்சங்கூட இஷ்டமில்லை. ஏற்கனவே, அவனுக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கவில்லை; சாவித்திரியை நினைத்தால் அவனுக்கு அருவருப்பாயிருந்தது; நெடுங்கரையையும், சம்பு சாஸ்திரியையும் எண்ணினால் அவனுடைய உடல் குன்றியது. இவ்வளவுடன் இப்போது ஒரு புதிய காரணமும் சேர்ந்திருந்தது.

ஸ்ரீதரன் உத்தியோகம் பார்த்த பாங்கில் டைப் அடிக்கும் வேலைக்கு ஆங்கிலோ-இந்தியப் பெண்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். ஸ்ரீதரன் வேலைக்குப் போன அன்று, அவர்களில் ஒருத்தி அவனுடைய அறைக்குள் வந்தாள். "ஆர் யூ மிஸ்டர் ஸ்ரீதர்?" என்று கேட்டாள். அந்தக் குரல் ஸ்ரீதரனுக்கு தேவகானம் போல் இருந்தது. கண்கொட்டாமல் அவளைப் பார்த்தபடி, ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் ஸ்ரீதரன். "வாட் எ லவ்லி நேம்!" என்றாள் அந்தப் பெண். ஸ்ரீதரனுக்கு அப்போது தன் பெற்றோர்கள் மீது மிகவும் நன்றி உண்டாயிற்று. தனக்கு எத்தனையோ விதத்தில் அவர்கள் கெடுதல் செய்திருந்தாலும், இவ்வளவு அழகான பெயரைக் கொடுத்தார்களே என்று எண்ணினான். பிறகு, அந்தப் பெண், ஸ்ரீதரனுடைய கடிதங்களை டைப் அடிப்பதற்குத் தன்னை நியமித்திருப்பதாகவும், அவன் கூப்பிடும்போது வருவதாகவும் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இதுவரையில் தான் கனவு கண்டு கொண்டிருந்த கந்தர்வப் பெண் இவள் தான் என்று ஸ்ரீதரன் அந்த நிமிஷமே தீர்மானித்துவிட்டேன். நாளுக்கு நாள் அவனுக்குப் பித்தம் தலைக்கேறிக் கொண்டிருந்தது. ஒரு நாள் சாயங்காலம் ஸ்ரீதரன் ஆபீஸை விட்டுக் கிளம்பிய நேரமும் மிஸ் ஸுஸி கிளம்பிய நேரமும் சரியாயிருந்தது. அப்போது ஸ்ரீதரன் ஆபீஸுக்குப் போய் வருவதற்கு மோட்டார் சைக்கிள் வைத்திருந்தான். அவன் சைக்கிளில் ஏறி உட்கார்ந்துகொண்டு, ஸுஸிக்குப் பின் ஸீட்டில் உட்கார்ந்து வரத் தைரியமிருந்தால், அவளுடைய ஜாகையில் கொண்டு போய் விடுவதாய் விளையாட்டாகச் சொன்னான். அந்தப் பெண் மிகவும் துணிச்சல் உள்ளவள். அவன் சொல்லி வாய் மூடிவதற்கு முன்னால் பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து விட்டாள். அதிகம் வளர்த்துவானேன்! அது முதல், ஸ்ரீதரனும் அந்த ஆங்கிலோ-இந்தியப் பெண்ணும் 'ஓருயிரும் ஈருடலும்' என்பார்களே, அந்த மாதிரி ஆகிவிட்டார்கள்.

இந்த நிலைமையில், தங்கம்மாள் தலை தீபாவளிப் பேச்சை எடுத்ததிலிருந்து ஸ்ரீதரனுக்கு அடிக்கடி மனச்சோர்வு உண்டாயிற்று. கோபம் கோபமாய் வந்தது. அந்தப் பாழும் கல்யாணம் மட்டும் ஆகாதிருந்தால் இப்போது எவ்வளவு சௌகரியமாயிருக்கும்! தன்னுடைய சந்தோஷத்துக்கு ஓர் எல்லையே யிராதல்லவா! ஸ்ரீதரனுடைய மனோ சஞ்சலத்தைக் கண்ட மிஸ் ஸுஸி, "என்ன சமாசாரம்?" என்று அவனை அடிக்கடி வற்புறுத்திக் கேட்டாள்.

ஸ்ரீதரன் அப்போது உண்மையைச் சொன்னான். தன்னுடைய கல்யாண விஷயத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு முன்பே இருந்தது. அதை மறைத்து வைப்பதால் பின்னால் சங்கடம் ஏற்படும் என்று அவன் எண்ணினான். இந்த மாதிரி விளைந்த சங்கடங்களைப்பற்றி அவன் நாவல்களிலும், கோர்ட் விவரங்களிலும் படித்திருந்தான். ஆகவே இதுதான் தக்க சமயம் என்று தீர்மானித்து, தன் பெற்றோர்களுடைய வற்புறுத்தலினால் தான் கல்யாணம் செய்து கொள்ள நேர்ந்ததையும், ஆனால், அந்தப் பீடையின் முகத்தில் விழிக்கவே தனக்கு விருப்பமில்லையென்பதையும், இப்போது தலை தீபாவளிக்குப் போக வேண்டுமென்று தாயார் தொந்தரவு செய்து கொண்டிருப்பதையும் கூறினான். இடையிடையே, ஹிந்துக்களுக்குள் கல்யாண விஷயத்தில் அநுசரிக்கப்படும் முறை எவ்வளவு அநாகரிகமானது என்பதைப்பற்றித் தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தையும் காரமான மொழிகளில் தெரிவித்து வந்தான்.

இப்படியெல்லாம் உண்மையைச் சொல்லி அந்தப் பெண்ணின் அநுதாபத்தைப் பெறலாமென்று ஸ்ரீதரன் எதிர்பார்த்தான். ஆனால், அந்த அநுதாபத்தை உடனே அவன் பெறவில்லை. பிறகு இரண்டு மூன்று நாளைக்கு அந்தப் பெண் அவனுடன் பேசவும் இல்லை; அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை. இதனால் ஸ்ரீதரன் வெறி கொண்டவன் போல் இருந்த நிலைமையில், அவளாக அவனைத் தேடிக்கொண்டு வந்து சமாதானப் படுத்தினாள். அவன் தன்னை ஏமாற்றியதை மன்னித்துவிடுவதாகச்

சொன்னாள். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்தான். "உமது மனைவியை நான் பார்க்க வேண்டும்!" என்றாள்.

அவள் சமாதானம் அடைந்ததில் ஸ்ரீதரனுக்கு ஒரே குதூகலம். எனவே, "அதென்ன பிரமாதம்? அவள் இங்கே வரும்போது - எப்போதாவது வந்தால் - நீ கட்டாயம் பார்க்கலாம்" என்றான் ஸ்ரீதரன்.

"அதெல்லாம் முடியாது; இப்போதே பார்க்க வேண்டும்" என்றாள் ஸுஸி.

"அது எப்படி சாத்தியம்? இப்போது எப்படிப் பார்க்கிறது?"

"தீபாவளிக்கு நீர் கிராமத்துக்குப் போகிறீர் அல்லவா? உம்முடன் நானும் வருகிறேன்" என்றாள்.

ஸ்ரீதரன் திகைத்து நிற்கும்போதே, அவள் அவனுடைய கன்னத்தை ஒரு தட்டுத் தட்டி, "பயந்து போகாதேயும். நான் இப்படியே வரவில்லை. ஆண் வேஷம் போட்டுக் கொண்டு வருகிறேன். உம்முடைய சிநேகிதன் என்று சொல்லி, என்னை அழைத்துக் கொண்டு போம்!" என்றாள்.

"சபாஷ்!" என்றான் ஸ்ரீதரன். ஏற்கெனவே மிஸ் ஸுஸியை ஆண் உடையில் அவன் பார்த்திருக்கிறான். வேஷம் பொருத்தமாயிருக்கும். சந்தேகமில்லை. தீபாவளிக்கு மாப்பிள்ளைத் தோழன் ஒருவனை அழைத்துப் போவது வழக்கமல்லவா? இவளை மாப்பிள்ளைத் தோழனாக அழைத்துப் போகலாமே? பிரயாணமும் வெகு குஷியாயிருக்கும்! - இப்படி எண்ணி "சபாஷ்! சரியான யோசனை! அப்படியே செய்வோம்!" என்றான் ஸ்ரீதரன்.

சில நாள் ஊடல் கொண்டிருந்த பிறகு மறுபடியும் அவள் சிநேகிதமான குதூகலத்தில் ஸ்ரீதரன் அவ்வாறு வாக்குக் கொடுத்துவிட்டான். ஆனால், அப்புறம் அதைப் பற்றி யோசிக்க யோசிக்க அவனுக்கு அதிலுள்ள சங்கடங்களும், அபாயங்களும் தெரிய வந்தன. அம்மாவும் கூட வரப்போகிறாளே! பிரயாணத்தின்போது நடுவில் அம்மாவுக்குத் தெரியாமலிருக்குமா? அல்லது, நெடுங்கரையில்தான் இவள் எப்படி இருக்க முடியும்? அந்தப் பட்டிக்காட்டில் இவளுக்குத் தனியாயிருக்க இடம் எங்கே கிடைக்கும்? தெரிந்துவிட்டால் எவ்வளவு அவமானம்! ஏதாவது விபரீதமாக முடிந்தாலும் முடியலாம் அல்லவா? - இதையெல்லாம் நினைக்க நினைக்க ஸ்ரீதரனுக்குப் பயம் அதிகமாகி வந்தது.

ஒரு வேளை ஸுஸி விளையாட்டுக்காகச் சொல்லியிருக்கலாம் என்று தோன்றியது. அவளிடம் அம்மாதிரி பிரஸ்தாபிக்கவும், அவள் நிஜமாகவே தான் வரப்போவதாக வற்புறுத்தினாள். பிராயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்வதும் ஸ்ரீதரனுக்குத் தெரிந்தது. அதன் மேல் ஸ்ரீதரன் அந்தப் பைத்தியக்கார யோசனை வேண்டாம் என்றும், அதில் ரொம்ப அபாயம் இருக்கிறதென்றும், தானும் தீபாவளிக்கே போகவில்லையென்றும் சொல்லிப் பார்த்தான். ஸுஸி கேட்கவில்லை. ஸ்ரீதரனை பயந்தாங்கொள்ளி என்று பரிகாசம் செய்ய ஆரம்பித்தாள். "உம் மனைவியை நான் பார்க்கக் கூடாது என்பதுதானே உம் எண்ணம்?" என்று கண்ணீர் விடத் தொடங்கினாள்.

இந்தத் தர்ம சங்கடமான நிலைமையில் என்ன செய்வதென்று தெரியாமல் ஸ்ரீதரன் தத்தளித்துக் கொண்டிருந்தான். ஒரு பக்கம் தங்கம்மாளும் இன்னொரு பக்கம் ஸுஸியும் பிரயாணத்துக்குத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். எனவே, ஸ்ரீதரனும் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். ஆனால் அவனுடைய மனம் மட்டும் என்ன நேரிடுமோ என்னவோ என்று பதைபதைத்துக் கொண்டிருந்தது.

7. சாதிப் பிரஷ்டம்

நெடுங்கரையில் பெருமழை நின்றது. ஆனால் மழை அடியோடு நிற்கவில்லை. சில நாள் காலையிலும் சில நாள் மாலையிலும், இன்னும் சில நாள் இரவிலுமாக விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தது.

குடமுருட்டியில் வெள்ளமும் குறைந்து, அதிகாரிகளும் பெரு முயற்சி செய்ததன் பேரில் ஒரு வாரத்தில் அடைப்பு அடைபட்டது.

சம்பு சாஸ்திரியின் மாட்டுக் கொட்டகையில் அடைக்கலம் பெற்ற சேரி ஜனங்கள் இரண்டு நாளைக்குள் களத்துத் திடலில் கொட்டகை போட்டுக் கொண்டு அங்கே போய்விட்டார்கள். உடைப்பு அடைபட்டதும், சேரியில் மறுபடியும் குடிசைகள் போடத் தொடங்கினார்கள். இதற்கு வேண்டிய மூங்கிற் கழி, கீத்து எல்லாம் பெரும்பாலும் சாஸ்திரியார்தான் அவர்களுக்குக் கொடுத்தார்.

உடைப்பினால் சேரி ஜனங்களுக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டதாயினும், அந்தத் துன்பத்தின் மூலமாகக் கடவுள் அவர்களுக்கு ஒரு நன்மையையும் அளித்தார். சேரியின் ஒரு பக்கத்தில் உடைப்பு வெள்ளம் பாய்ந்த வேகத்தினால், ஒரு பெரிய பள்ளம் ஏற்பட்டு அதில் ஜலம் தேங்கி நின்றது. அந்தப் பள்ளம் ஒரு பெரிய மூங்கில் கழி ஆழம் இருந்தபடியால், சேரி ஜனங்களுக்கு என்றும் ஜலம் வற்றாத ஒரு குளம் ஏற்பட்டது.

இதனாலும், பழைய குடிசைகளுக்குப் பதில் புதிய குடிசைகள் கிடைத்தபடியாலும் சேரி ஜனங்களுக்கு மொத்தத்தில் உடைப்பினால் நன்மை ஏற்பட்டதென்றே சொல்லலாம். இரண்டு மூன்று நாள் பட்ட கஷ்டங்களையெல்லாம் அவர்கள் அடியோடு மறந்து, வாழ்க்கையைப் புதிய குதூகலத்துடன் தொடங்கினார்கள்.

குடமுருட்டி உடைப்பு சேரி ஜனங்களுக்குக் குளம் பறித்துத் தந்ததல்லவா? அப்படிப் பறித்தெடுத்த மண்ணையெல்லாம் வெள்ளம் என்ன செய்தது என்று கேட்டால், சேரிக்கு அருகிலிருந்த சம்பு சாஸ்திரியின் வயல்களில் கொண்டு போய்த் தள்ளிற்று. சாஸ்திரியின் நன்செய் நிலத்தில் ரொம்பவும் உயர்தரமான இரண்டு வேலி நிலம் இதனால் பாழாய்ப் போயிற்று!

ஊரிலே வேறு யாருக்கும் இவ்வளவு அதிக சேதம் கிடையாது. சாஸ்திரிக்கு மட்டும் இம்மாதிரி நேரவே ஊரார், "பார்! இவன் செய்த காரியம் பகவானுக்கே பொறுக்கவில்லை. வாயிலே மண்ணைப் போட்டு விட்டார்!" என்றார்கள்.

இந்த உலகத்தில் பகவான் தம்முடைய அத்தியந்த பக்தர்களைத்தான் அதிகமாய்ச் சோதிப்பதைக் காண்கிறோம். இது ஓர் அதிசயம் என்றால், இதைவிடப் பெரிய அதிசயம் இன்னொன்று இருக்கிறது. உலகில் ரொம்பவும் நல்ல மனிதர்களுக்கே கொடுமையான விரோதிகள் ஏற்படுகிறார்கள்! சம்பு சாஸ்திரியின் நிலைமை இப்படித்தான் இருந்தது. அந்தப் பரம பக்தரைப் பகவான் பலவிதத்திலும் சோதனை செய்தார். அந்த நல்ல மனுஷருக்குத்தான் ஊரில் விரோதிகளும் அதிகமாயிருந்தார்கள். அவருடைய நல்ல குணமும், தயாள சுபாவமுமே அக்கிரகாரத்தில் ரொம்பப் பேரை அவருக்கு விரோதிகள் ஆக்கியிருந்தன. இந்த வருஷத்தில் குடியானவர்கள் தகராறு காரணமாக அந்த விரோதம் முற்றிப் போயிருந்தது. ஆகவே, வெள்ளத்தின்போது சேரி ஜனங்களுக்கு மாட்டுக் கொட்டகையில் இடங்கொடுத்ததை வியாஜமாக வைத்துக் கொண்டு, ஊரார் அவரைச் சாதிப் பிரஷ்டம் செய்தார்கள். அவர் வீட்டுக்கு நீர் நெருப்புக் கொடுக்கக் கூடாதென்றும், அவர் வீட்டில் நடக்கும் சுபாசுப காரியங்களுக்குப் போகக் கூடாதென்றும் கட்டுப்பாடு செய்தார்கள்.

அக்கிரகாரத்தில் எல்லாருமே இந்த நடவடிக்கைகளை விரும்பினார்கள் என்பதில்லை. பாதிப்பேருக்கு மனத்திற்குள் சம்பு சாஸ்திரியின் பேரில் அன்பும் அநுதாபமும் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் சாதுக்களாயும், பயந்த சுபாவமுடையவர்களாயும் இருந்தார்கள். தீக்ஷிதர், சாமாவய்யர், முத்துசாமி அய்யர் முதலியவர்களை எதிர்த்து நின்று சண்டை போட அவர்களுக்குத் தைரியமில்லை. "ஊரோடு ஒக்க" என்று அவர்கள் வாயை மூடிக் கொண்டு பேசாதிருந்தார்கள்.

சம்பு சாஸ்திரி தமது நிலம் மண்ணடித்துப் போனதை அவ்வளவாய்ப் பொருட்படுத்தவில்லை. அந்த செய்தி தெரிந்த அன்று இரவு அவர், "என் செயலாலாவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே, உன் செயலேயென்றுணரப் பெற்றேன்" என்பதாகப் பாடி மனத்தை நிம்மதி செய்து கொண்டார். ஆனால், ஊரார் தம்மைச் சாதிப் பிரஷ்டம் செய்தது குறித்து அவருடைய மனம் சிறிது புண்பட்டது. அதுவும் தம்மைப் பற்றியல்ல; 'ஐயோ! இவர்கள் இவ்வளவு தயாளமற்றவர்களாயும் ஞானமற்றவர்களாயும் இருக்கிறார்களே!' என்றுதான். இந்த எண்ணங்களுக்கிடையில், "நல்ல வேளையாய், குழந்தைக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே! இதெல்லாம் போன வருஷம் நடந்திருந்தால் எவ்வளவு தொல்லையாயிருந்திருக்கும்?" என்று நினைத்து அவர் ஆறுதல் அடைந்தார்.

சாவித்திரிக்கோ கோபம் கோபமாய் வந்து கொண்டிருந்தது. கதையில் வரும் கண்ணகிக்கு இருந்த சாப சக்தி சாவித்திரிக்கு இருந்திருக்குமானால், நெடுங்கரையில் அப்போது மண்மாரி பொழிந்து ஊரே நாசமாகியிருக்கும்! அப்படிப்பட்ட சக்தி தனக்கு இல்லையே என்று அவள் பொருமினாள். 'நல்ல வேளை! இந்தச் சனியன் பிடித்த ஊரைவிட்டுச் சீக்கிரம் போய்விடப் போகிறோம்' என்று எண்ணியபோது அவளுக்குக் குதூகலம் உண்டாயிற்று. தீபாவளிக்கு ஸ்ரீதரன் வரும்போது எப்படியாவது இரண்டு நிமிஷம் தனியாகப் பார்த்துப் பேச வேண்டும்; அப்போது தன்னைச் சீக்கிரம் அழைத்துக் கொண்டு போகும்படி சொல்ல வேண்டும் என்று அவள் அடிக்கடி எண்ணமிட்டாள். ஸ்ரீதரனைத் தனியாகப் பார்த்துப் பேசுவதற்கு அநேக யுக்திகளை அவளுடைய உள்ளம் ஓயாமல் கண்டு பிடித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் சாவித்திரி மேற்கண்டவாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது வாசலில் வண்டி நின்ற சத்தம் கேட்டது. தீபாவளிக்கு இன்னும் இரண்டு மூன்று நாள் இருந்தது. தீபாவளிக்கு முதல் நாள் தான் மாப்பிள்ளை வருவார் என்று சாவித்திரிக்குத் தெரியும். ஆனாலும், ஆசைக்கு அளவில்லையல்லவா? ஒருவேளை இவர்தான் கொஞ்சம் முன்னாலேயே வந்திருக்கலாமோ என்று எண்ணி, பரபரப்புடன் எழுந்து சென்று வாசற் கதவைத் திறந்தாள். மங்களத்தின் தாயார் சொர்ணம்மாள் வண்டியிலிருந்து இறங்கி, மூட்டை முடிச்சுக்களுடன் வந்து கொண்டிருந்தாள்!

பகவான் பிரத்தியட்சமாவார் என்று எதிர்பார்த்தவனுக்கு முன்னால், கோரமான பிசாசு தோன்றினால் எப்படியிருக்கும்? சாவித்திரிக்கு அவ்வளவு ஏமாற்றமாயும் அருவருப்பாயும் இருந்தது. ஆனாலும் புத்திசாலிப் பெண்ணாகையால், அந்த ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. சொர்ணம்மாள் வாசற்படி தாண்டி உள்ளே வந்ததும், "வாங்கோ, பாட்டி!" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினாள். எழுந்திருந்து, பாட்டி எடுத்துக் கொண்டு வந்த கூடையையும் மூட்டையையும் வாங்கிக் கொண்டு உள்ளே வைக்கப் போனாள்.

இதற்குள் மங்களமும் வந்து தாயாரைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றாள். சமையலறைக்குள் போய் உட்கார்ந்தாளோ, இல்லையோ, சொர்ணம்மாள், "ஏண்டி பொண்ணே! இதென்னடி நான் கேள்விப்படறது? உங்களைச் சாதியை விட்டுத் தள்ளி வச்சிருக்காமே?" என்றாள்.

"ஆமாண்டி, அம்மா! ஆமாம். உன் மாப்பிள்ளை இன்னும் என்னெல்லாம் பண்ணி என்னைச் சந்தியிலே நிறுத்தப் போறாரோ, அந்தப் பகவானுக்குத்தான் தெரியும்" என்றாள் மங்களம்.

"யாராவது தீண்டாதவாளை அக்கிரகாரத்துக்குள்ளே வரச் சொல்லுவாளா? அதிசயமாயிருக்கே? இந்தப் பிராமணனுக்கு ஏண்டி இப்படிப் புத்தி கெட்டுப் போச்சு!" என்றாள் தாயார்.

இந்தச் சமயத்தில், காமரா உள்ளில் மூட்டையைக் கொண்டு வைக்கப்போன சாவித்திரி, திரும்பிச் சமையலறைக்கு வந்தாள். சொர்ணம்மாள் சொன்னது அவள் காதில் விழுந்தது.

அப்பாவுக்குப் புத்தி கெட்டுப் போச்சு என்று பாட்டி சொன்னது சாவித்திரிக்குச் சகிக்கவில்லை. அவளுக்குத் தன்னையறியாமல் கோபம் வந்தது. வழக்கத்தை விட உரத்த குரலில் சொன்னாள்:

"எங்க அப்பாவுக்கு ஒண்ணும் புத்தி கெட்டுப் போகலை, பாட்டி! ஊரிலே இருக்கிறவாளுக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சு! வீடு வாசல்லாம் வெள்ளத்திலே போய் மழையிலே நனைஞ்சுண்டிருந்தவாளுக்கு இருக்க இடங்கொடுத்தால், அது ஒரு குத்தமா? – சித்தி! ஊரார்தான் இப்படியெல்லாம் சொல்றான்னா, நீ கூட இப்படிப் பேசறது நன்னாவேயில்லை."

இவ்வாறு சொல்லி விட்டுச் சாவித்திரி சட்டென்று வெளியே சென்றாள்.

சொர்ணம், இரண்டு கையையும் ஒரு தடவை தட்டி, மோவாய்க் கட்டையில் ஒரு கையை வைத்துக் கொண்டு, "ஏண்டி, மங்களம்! இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு வாயும் கையும் எப்போடி வந்தது?" என்றாள்.

"ஏற்கனவே, வாய்த் துடுக்கு ஜாஸ்தி, கல்யாணம் ஆனதிலிருந்து தலைகீழாய்த்தான் நிக்கறது" என்றாள் மங்களம்.

"ஐயையோ! இது புக்காத்திலே போய்க் குடித்தனம் பண்ணி எப்படிக் குப்பை கொட்டப் போறதோ, தெரியலையே?"

"முதல்லே புக்காத்துக்குப் போகணுமேடி, அம்மா! அதைச் சொல்லு! ஊரிலே யாரோ சம்பந்தியாத்துக்குக் கடிதாசி எழுதிப் போட்டிருக்கான்னு சொல்றா. என்ன நடக்கப் போகிறதோ, என்னமோ?"

இந்த மாதிரி இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, சாவித்திரி பூஜை அறைக்குள் போய் அம்பிகைக்கு நமஸ்காரம் செய்தாள். பிறகு தலைநிமிர்ந்து கைகூப்பிக் கொண்டு, "அம்பிகே! தாயே! அப்பாவை ஊரார்தான் கரிக்கிறார்கள் என்றால், உற்றாரும் கரிக்க வேண்டுமா? ஐயோ! நான்கூடச் சீக்கிரத்தில் கல்கத்தாவுக்குப் போய் விடுவேனே? அப்புறம், அப்பாவுக்கு யார் இருக்கிறார்கள்? அம்பிகே! சித்தியையும், பாட்டியையும் நல்லவாளாய் ஆக்கிவிடக் கூடாதா? எங்க அப்பாவை இப்படிக் கரிக்காமல் செய்யக் கூடாதா?" என்று பிரார்த்தித்தாள்.

8. பிரயாணம் நின்றது

ராஜாராமய்யரின் ஆவி உலகச் சோதனைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவரும், மிஸ்டர் பீடர்ஸன் துரையும், "ஸ்பிரிட் ஒர்ல்ட்" பத்திரிகாசிரியர் சியாம் பாபுவும், இன்னும் நாலைந்து பேரும் வாரத்தில் ஒரு நாள் இரவில் சந்தித்து, இறந்தவர்களுடைய ஆவிகளை வரவழைத்துப் பேச முயன்று கொண்டிருந்தார்கள். ஒரு நீளமான மேஜையை சுற்றி இவர்கள் உட்காருவார்கள். விளக்கை அணைத்து விடுவார்கள். பிறகு, ஒவ்வொருவரும் தமது இறந்து போன உறவினர் யாரையேனும் மனத்தில் நினைத்து, 'அவருடைய ஆவி வரவேண்டும்' என்று தியானிப்பார்கள்.

ஆவி உலகம் சம்பந்தமாக அப்போது வெளியாகியிருந்த புத்தகங்களில் மேற்கண்ட முறைதான் கூறப்பட்டிருந்தது. இந்த மாதிரி தொடர்ந்து செய்து வந்தால், சில நாளைக்கெல்லாம் குறிப்பிட்ட ஆவி, அல்லது ஆவிகள் அருவமாக அந்த அறைக்குள் வரும். வந்து, தியானம் செய்பவர்கள் தொட்டுக் கொண்டிருக்கும் மேஜையை மெள்ள மெள்ள உயரத் தூக்கும். அப்புறம் சில விசேஷ சப்தங்கள் எல்லாம் உண்டாகும். நாளடைவில், ஆவி, புகை போன்ற உருவம் எடுத்துக் கண்ணுக்குப் புலனாகத் தொடங்கும். கடைசியாக, அது பேசத் தொடங்கி, கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும் – இம்மாதிரி மேற்படி புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருந்தது.

இப்போது ராஜாராமய்யரும், அவருடைய சகாக்களும் செய்த சோதனையில், மேஜையானது உயரக் கிளம்ப ஆரம்பித்திருந்தது. முதலில் ஓர் அங்குலம், அப்புறம் இரண்டு அங்குலம் – இப்படியாக அபிவிருத்தியடைந்து இப்போது ஒரு முழ உயரம் வரை கிளம்பிக் கொண்டிருந்தது. உண்மையில், அங்கே தியானத்தில் அமர்ந்தவர்கள் ஒவ்வொருவரும், ஆவிகளுக்கு ஒத்தாசை செய்யும் நோக்கத்துடன் கொஞ்சம் கொஞ்சம் இலேசாக மேஜையைத் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவருக்காவது மற்றவர்களும் அப்படிச் செய்கிறார்கள் என்பது தெரியாதாகையால், அருவமான ஆவிகள் தான் வந்து மேஜையைத் தூக்குகின்றன என்று மனப்பூர்வமாக நம்பினார்கள்.

அம்மாதிரி பரிபூரண நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் ராஜாராமய்யரும் ஒருவர். தமது வாழ்நாளெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த காரியம் இப்போது உண்மையிலேயே நிறைவேறப் போகிறதென்று எண்ணி அவர் அளவிலாத உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தார். உலக விஷயங்கள் ஒன்றுமே அவருக்கு இலட்சியமாயில்லை. தீபாவளிக்குத் தம் மனைவியும் பிள்ளையும் நெடுங்கரைக்குப் போகும் விஷயம் அவருக்கு மிகவும் திருப்தியளித்தது. 'அப்பா! ஒரு பத்து நாளைக்காவது இவர்களுடைய தொல்லையில்லாமல் இருக்கலாம்' என்று அவர் எண்ணினார். அத்துடன், இப்போது அவர்கள் சோதனை நடத்திக்கொண்டிருந்த இடம் அவ்வளவு வசதியில்லாமலிருந்தபடியால், தங்கம்மாளும் ஸ்ரீதரனும் ஊருக்குப் போனால் தமது வீட்டிலேயே ஒரு நாள் நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. சோதனை நடக்கும் போது நம்பிக்கையற்றவர்கள் யாரும் அருகில் இருக்கக் கூடாதாதலால், தங்கம்மாளும் ஸ்ரீதரனும் இருக்கும்போது வீட்டில் அந்தச் சோதனை நடத்த அவர் விரும்பவில்லை.

இப்படியாக ராஜாராமய்யர் தம் மனைவியும் புதல்வனும் தீபாவளிக்கு ஊருக்குப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், நெடுங்கரையிலிருந்து அவர் பேருக்கு ஒரு தபால் வந்தது. அதைப் பிரித்துப் படித்துப் பார்த்ததும் அவர் ஒரே கலவரமடைந்து போனார். அப்போது அவர் 'ஸ்பிரிட் ஒர்ல்ட்' பத்திரிகைக்குத் தமது

ஆவி உலக அநுபவங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தாராயினும், அதை அப்படியே விட்டு விட்டுத் தங்கம்மாளைத் தேடிக் கொண்டு போனார்.

அன்று இரவுதான் நெடுங்கரைக்குப் பயணப்படுவதாக உத்தேசித்திருந்தபடியால், தங்கம்மாள் பெட்டியில் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டும், வேலைக்காரனைப் படுக்கை கட்டச் சொல்லிக் கொண்டும் இருந்தாள். அப்போது, ராஜாராமய்யர், கையில் பிரித்த கடிதத்துடன், "தங்கம்! தங்கம்! கேட்டாயா சமாசாரம்?" என்று கேட்டுக் கொண்டு வந்தார்.

"என்ன பிரமாதமான சமாசாரம்? எள்ளுக்குள் எண்ணெய் இருக்குன்னு எனக்குத் தெரியுமே?" என்றாள் தங்கம்.

"இல்லேடி! உன் பிள்ளையாண்டான், தீபாவளிக்கு மாமனார் ஆத்துக்குப் போக மாட்டேன்னு மூக்கால் அழுதுண்டிருந்தானோல்லியோ? அங்கேயும் அதுக்குத் தகுந்தாப்பலே ஒரே ரகளையா இருக்கு. சம்பு சாஸ்திரிக்குத் திடீர்னு பைத்தியம் புடிச்சுடுத்தாம்..."

"இது என்ன கூத்து?"

"பைத்தியம்னா, நிஜப் பைத்தியமில்லை! ஒரு நாளைக்குத் தீண்டாதவன்களையெல்லாம் அக்கிரகாரத்துக்குள்ளே அழைச்சுண்டு வந்துட்டாராம். அதுக்காக, ஊரார் அவரை 'பாய்காட்' பண்ணி வச்சிருக்காளாம்..."

"அடபாவிப் பிரமாணா! இப்படிப் பெரிய கல்லாத் தூக்கிப் போட்டுட்டாரே! ஆடி, ஆறாம் மாதம் ஒண்ணுக்குந்தான் போகலை - தீபாவளிக்காவது போய்த் துணிமணி, பாத்திரம் பண்டம் வாங்கி நகத்திண்டு வரலாம்னு ஆசைப்பட்டுண்டு இருந்தேனே? - ஏன்னா? நெஜமாத்தான் அப்படி எழுதியிருக்கா? நீங்களா வெறுமனைக்கோசரம் சொல்றயளா?"

"சரியாப் போச்சு! எனக்கு வேறே வேலை கிடையாதாக்கும்! தீக்ஷிதரும், இன்னும் நாலைஞ்சு பேரும் கையெழுத்துப் போட்டுக் கடுதாசி எழுதியிருக்கா. ஒரு நாளைக்குப் பலமா மழை பேஞ்சபோது, சேரியிலே வெள்ளம் புகுந்துடுத்துன்னு, சேரி ஜனங்கள் எல்லாரையும் அக்கிரகாரத்துக்கு அழைச்சுண்டு வந்து இரண்டு நாள் வச்சிருந்தாராம். ஊரார், வேண்டாம்னு எவ்வளவோ சொல்லியும் கேக்கலையாம். ரொம்ப ரஸாபாஸமாய்ப் போச்சாம். அதுக்கு மேலேதான் அவாத்துக்கு யாரும் போகக்கூடாது; நீர் நெருப்புக் கொடுக்கக் கூடாதுன்னு கட்டுப்பாடு பண்ணியிருக்காளாம். இந்தச் சமயத்தில் நாம் அங்கே தீபாவளிக்கு வரக்கூடாதுன்னு ஊரார் கேட்டுக்கறாளாம். 'அப்புறம் உங்க இஷ்டம்; நாங்க இதுக்கு மேலே சொல்றதுக்கில்லை'ன்னு லெட்டர் முடியறது. நீ என்ன சொல்றே!"

"நான் என்னத்தைச் சொல்றது? பார்த்தா, வைதிகமா, விபூதியும் துளசி மாலையுமா இருக்காரேன்னு நினைச்சேன். உங்களைப் போலேயெல்லாம் கிராப்புத் தலையும், பாழும் நெத்தியுமா இல்லையேன்னு சந்தோஷப்பட்டுண்டு இருந்தேன். இப்படிப் பைத்தியம் பிடிச்சுப் பாயைப் புரண்டப் போறார்னு நான் கண்டேனா?"

"அதைக் கேக்கலை, நான் இப்போ! தீபாவளிக்கு போறயா, இல்லையான்னுதான் கேக்கறேன்."

"அது எப்படிப் போறது? நன்னாயிருக்கே! இன்னிக்கு நாம்ப புடவைக்கும் வேஷ்டிக்கும் ஆசைப்பட்டுண்டு போய்ட்டா, நாளைக்கு நம்ப பொண்களைக் கொடுத்திருக்கிற இடத்திலே சும்மா இருப்பாளா? - அதெல்லாம் யோசனை பண்ணித்தான் செய்யணும்."

ராஜாராமய்யரும் தங்கம்மாளும் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது, வாசலில் வண்டி நின்ற சத்தமும், ஸ்ரீதரனும் அவனுடைய 'தோழ'னும், இறங்கி உள்ளே வந்த சத்தமும் அவர்கள் காதில் விழவில்லை. அடுத்த அறையில் வாசற்படிக்கு அருகில்

நின்றபடி ஸ்ரீதரன் அவர்களுடைய சம்பாஷணையைச் சற்று நேரம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். 'பெரிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டு விட்டோ மே? எப்படியாவது இந்தப் பிரயாணம் தடைப்பட்டு விடக்கூடாதா?' என்று எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு, "அது எப்படிப் போறது?" என்று தங்கம்மாள் சொன்னதைக் கேட்டதும் அளவிலாத குதூகலம் உண்டாயிற்று. ஆனால், அதைச் சிறிதும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டே அப்பாவும் அம்மாவும் இருந்த அறைக்குள் வந்தான். ஒரு வார்த்தையும் பேசாமல், அப்பாவையும் அம்மாவையும் வெறிக்கப் பார்த்துவிட்டு, "ஒரு பிள்ளைக்கு அவன் தாயார் தகப்பனாரே சத்துருக்களாயிருந்தால், என்னதான் செய்கிறது?" என்றான்.

ராஜாராமய்யர், "என்னடா உளர்றே? நான் என்னடா பண்ணினேன் உனக்கு?" என்றார்.

"ஆமாம், அப்பா! நீங்க ஒண்ணும் பண்ணலை! இந்தக் கல்யாணமே வேண்டாம்னு நான் அப்பவே அடிச்சுண்டேனா, இல்லையா? கல்யாணத்தன்னிக்குக் காலம்பரக்கூட, இந்தப் பட்டிக்காட்டுச் சம்பந்தம் வேண்டாம், புறப்பட்டுப் போயிடுவோம்னு முட்டிண்டேன். இரண்டு பேருமாச் சேர்ந்து பணத்துக்கு ஆசை பட்டுண்டு பலவந்தமாப் பண்ணி வச்சயள்."

"அடே, என்னைப் பார்த்துச் சொல்லு! கல்யாண விஷயமாய் ஒரு வார்த்தையாவது உங்கிட்ட நான் சொன்னேனாடா? அம்மாவாச்சு பிள்ளையாச்சு, எப்படியாவது செய்துக்குங்கோன்னு நான் தான் பேசாமலிருந்துட்டேனே?"

"அம்மாதான் இருக்காளே, அம்மா! என்னைக் கெடுக்கறதுக்குன்னு பிறந்திருக்காளே!" என்றான் ஸ்ரீதரன்.

ஏற்கனவே, தங்கம்மாளுக்குத் தீபாவளிக்குப் போக முடியவில்லையேயென்று துக்கம் அடைத்துக் கொண்டு வந்தது. இப்போது, பிள்ளையாண்டான் மனம் வெறுத்துப் பேசினதைக் கேட்டதும், அவள் விசித்துக் கொண்டே, "அப்படி ஏண்டா சொல்றே, குழந்தை! உனக்கு என்னடா இப்போ வந்துடுத்து? நாளைக்கே நினைச்சா இன்னொரு கல்யாணம் என் குழந்தைக்கு நான் பண்ணிவைக்க மாட்டேனா? எத்தனையோ பேர் 'நான் நீ' என்று பெண் கொடுக்கக் காத்துண்டிருப்பாளே?" என்றாள்.

அதற்கு, ஸ்ரீதரன், "என்ன? இன்னொரு கல்யாணமா? சபாஷ்! ஒரு தடவை மரப்பாச்சியைக் கல்யாணம் பண்ணி வச்சாச்சு! இன்னொரு புதுச்சேரிப் பொம்மையையும் கல்யாணம் பண்ணி வச்சுட்டா, ரொம்ப பேஷாய்ப் போய்விடும். அது வேறே நினைச்சுண்டிருக்கயா, நீ" என்றான்.

ராஜாராமய்யர், "சரிதாண்டா, சரிதான். வேறே வேலை இருந்தாப் பாரு! ஊருக்குப் போகலை, லீவு வேண்டாம்னு துரைக்கு உடனே எழுதிப் போட்டுடு" என்று சொல்லிவிட்டு, தமது அறைக்குச் சென்றார்.

"அப்பாவுக்கு என்ன, சுலபமாய்ச் சொல்லிவிட்டுப் போயிடறார். என் சிநேகிதனை அழைச்சுண்டு வந்திருக்கேனே, அதுக்கு என்ன பண்ணறது? அவா வீட்டிலே போய் ஏன் போகலேன்னு 'எக்ஸ்ப்ளெயின்' பண்ணியாகணும்" என்றான் ஸ்ரீதரன்.

அதே சமயத்தில், அவனுடைய 'சிநேகிதன்' உள்ளே வரவே, தங்கம்மாள் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "ஏண்டாப்பா? இவன் என்ன சாதிப் பையன்? முகத்தைப் பார்த்தால் களையாயிருக்கு. தமிழ் பேசத் தெரியுமா?" என்றாள்.

"அவனுக்குத் தமிழ் பேசத் தெரியாது. இங்கிலீஷும் பெங்காலியுந்தான் தெரியும். இந்த ஊர்க்காரன் தான். ஆத்திலேயெல்லாம் சொல்லிண்டு வந்துட்டான். இப்போ எப்படிம்மா அவனைத் திரும்பிப் போகச் சொல்றது?"

"போகச் சொல்வானேன்? தீபாவளிக்கு நம்ம ஆத்திலேயே வேணா இருந்திட்டுப் போகட்டுமே? உனக்கும் துணை வேணுமோல்லியோ?" என்றாள் தங்கம்மாள்.

"ரைட்டோ , அம்மா! ரொம்ப தாங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு, அவனுடைய சிநேகிதனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மேல் மாடிக்குப் போனான். அங்கே, ஸுஸிக்கு நல்ல வார்த்தைச் சொல்லிச் சமாதானப்படுத்துவதற்குள் அவன் ரொம்பவும் சிரமப்பட்டுப் போனான் என்று சொல்ல வேண்டுமா?

9. நாளை தீபாவளி

தீபாவளிக்கு முதல் நாள் காலையில் சாவித்திரி தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்போதே, 'நாளைப் பொழுது விடிந்தால் தீபாவளி' என்று எண்ணிக்கொண்டு எழுந்தாள். 'இன்னிக்கு ராத்திரி இவாள் வரப்போறா!' என்ற எண்ணமும் கூட வந்து, அவளுக்கு என்றும் இல்லாத உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் அளித்தது. இரண்டு நாளாகக் கடும் மழை விட்டுச் சற்று நேரம் இளம் வெயில் எரிப்பதும் சற்று நேரம் சிறு தூற்றல் போடுவதுமாக இருந்தது. தீபாவளிக்கு மாப்பிள்ளை வரப் போவதை உத்தேசித்துத்தான் இப்படி இருப்பதாகச் சாவித்திரி எண்ணிக் கொண்டாள். ஆனால், மழை பலமாகப் பெய்தாலும் அவளுக்கு இப்போது பயம் கிடையாது. ஏனென்றால் அப்பாவினிடம் அடிக்கடி சொல்லி, பெருமழையின் போது ஒழுகிய இடத்தையெல்லாம் ஓடுமாற்றிச் செப்பனிடும்படி செய்துவிட்டாள்.

அன்று காலை நேரமெல்லாம் சாவித்திரி, வீட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் சுத்தம் செய்வதிலும், அழகுபடுத்துவதிலும் ஈடுபட்டிருந்தாள். சுவரில் மாட்டியிருந்த படங்களை இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக மாற்றிக் கொண்டிருந்தாள். இன்னும், கோட் ஸ்டாண்டுகள், நிலைக் கண்ணாடிகள் – இவையெல்லாம் எங்கெங்கேயிருந்தால் நன்றாயிருக்குமென்று பார்த்துப் பார்த்து மாட்டினாள். சுவர் மூலையில் எங்கேயாவது கொஞ்சம் ஒட்டடை காணப்பட்டால், உடனே அதை எடுத்துக் கொல்லையில் தூரக் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்தாள். அலமாரியில் புத்தகங்களை ஒழுங்காக எடுத்துத் தட்டி அடுக்கி வைத்தாள். இடையிடையே, முற்றத்தில் காக்காய் கத்தும் சத்தம் கேட்டால், ஓடிப் போய்க் காக்காயைப் பார்த்து, "ஓகோ! இன்னிக்கு மாப்பிள்ளை வரப்போறார்னு உனக்குத்தான் அதிசயமாய்த் தெரியுமோ? எனக்குத் தெரியாதோ?" என்று அதனுடன் பேசிவிட்டு வந்தாள். குறுக்கே நெடுக்கே செவிட்டு வைத்தி போனால், அவனைப் பார்த்து, "அடே! இரண்டு நாளைக்கு கண்ட இடத்தில் எல்லாம் மூக்கைச் சிந்திப் போடாமலிரு! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்!" என்றாள்.

ஆயிற்று; சூரியன் உச்சி வானத்தைக் கடந்து மேற்புறம் சாயத் தொடங்கிற்றோ, இல்லையோ, சாவித்திரியின் பரபரப்பும் பதின்மடங்கு அதிகமாயிற்று. சம்பு சாஸ்திரியிடம் போய், "அப்பா! ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்ப வேண்டாமா?" என்று கேட்டாள். அவர், "நீ கவலைப்படாதே, அம்மா! எனக்குத் தெரியாதா? நானே ஸ்டேஷனுக்குப் போய் மாப்பிள்ளையை அழைச்சுண்டு வர்றேன்!" என்றார். ஆனாலும் இன்னும் அரை மணி ஆனதும், சாவித்திரி மறுபடியும் அவரிடம் வந்து, "ஏனப்பா! வண்டி ஓட்டிண்டு போறதுக்கு நல்லான் இன்னும் வர்றலையே?" என்று கேட்டாள்.

"வந்தாச்சு, அம்மா! வண்டி பூட்டிண்டு வர்றதுக்குத் தான் போயிருக்கான்" என்றார் சாஸ்திரியார்.

சுமார் மூன்று மணிக்குச் சம்பு சாஸ்திரியார் வண்டியில் ஏறிக்கொண்டு புதுச்சத்திரம் ஸ்டேஷனுக்குக் கிளம்பிய பிறகுதான் சாவித்திரியின் மனம் கொஞ்சம் நிம்மதி அடைந்தது. வண்டி தெருக்கோடி வரையில் சென்று மறைந்த பிறகு சாவித்திரி உள்ளே வந்து, அவசர அவசரமாகத் தன்னை அழகுபடுத்திக் கொள்ளத் தொடங்கினாள்.

கல்யாணத்தின்போது, "பெண் ரொம்பப் பட்டிக்காடு; அதனால் மாப்பிள்ளைக்குப் பிடிக்கவில்லை" என்ற பேச்சு சாவித்திரியின் காதில் விழுந்ததென்று சொன்னோமல்லவா? "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று அப்போது சாஸ்திரி சொன்னதை அவள் பூரணமாய் நம்பினாள். ஆனால், கல்யாணத்திற்குப் பிறகும் ஊரில் சிலர் இம்மாதிரி பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆகையால், இந்த ஞாபகம்

அடிக்கடி சாவித்திரிக்கு வந்து கொண்டிருந்தது. நினைத்துப் பார்க்கப் பார்க்க, ஊரார் சொல்வது வாஸ்தவந்தானே என்றும் தோன்றிற்று. மாப்பிள்ளையின் நாகரிகத்தையும், தன்னுடைய பட்டிக்காட்டு நடை உடை பாவனைகளையும் அவள் ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்து வெட்கம் அடைந்தாள். கல்யாணமாகி நாலாம் நாள் அன்று ஸ்ரீதரன் 'புல் ஸூட்' அணிந்திருந்த போது எடுத்த போட்டோ படம் ஒன்று வீட்டில் இருந்தது. அதை எடுத்து வைத்துக் கொண்டு சாவித்திரி அடிக்கடி பார்ப்பாள். கல்யாணத்தின்போது தனக்குச் செய்திருந்த கர்நாடக அலங்காரத்தை நினைத்தால் அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. 'அவாளுடைய நாகரிகம் எங்கே? இந்தப் பட்டிக்காட்டுக் கர்நாடகம் எங்கே? என்னைப் பட்டிக்காடு என்பதாக அவாள் வெறுத்தால்தான் எப்படிப் பிசகு ஆகும்?' என்று எண்ணுவாள். அதே புருஷனுக்குத் தகுந்த மனைவியாக வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொள்வாள்.

ஆனால், நாகரிகம் கற்றுக் கொள்வதற்குச் சாவித்திரிக்கு அதிக வசதி இருக்கவில்லை. அந்தத் தாயில்லாப் பெண்ணுக்கு, பட்டிக்காட்டு வழக்கப்படி அழகு செய்து விடுபவர்களே கிடையாது. "தலைவாரிப் பின்னி விடறயா?" என்று கேட்டாலே சித்தி எறிந்து விழுவாள். கல்யாணத்துக்கு முன்னெல்லாம் சாவித்திரி இதை அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. அப்போது தன்னுடைய சொந்த அலங்காரத்தில் அவளுக்குக் கவனமே கிடையாது. பூஜை அறையை அழகு படுத்துவதிலும், படங்களுக்கு அலங்காரம் செய்வதிலுமே அவளுடைய புத்தியெல்லாம் சென்று கொண்டிருந்தது. கல்யாணத்திற்குப் பிறகுதான் தன்னை அழகு செய்து கொள்வதில் சிரத்தை உண்டாயிற்று. தான் புடவை கட்டிக் கொண்டால் நன்றாயிருக்கிறதா, அல்லது பாவாடையும் தாவணியும் அணிந்து கொண்டால் நன்றாயிருக்கிறதா, தலைப் பின்னலைத் தொங்கவிட்டுக் கொண்டால் அழகாயிருக்கிறதா எடுத்துக் கட்டிக் கொண்டால் அழகாயிருக்கிறதா என்றெல்லாம் நேரம் போவதே தெரியாமல் அவள் சிந்தனை செய்து கொண்டிருப்பாள்.

எங்கேயாவது கல்யாணம், கார்த்திகைக்குப் போனால், டவுனிலிருந்து வந்திருக்கும் பெண்கள் யாராவது இருக்கிறார்களா என்று அவளுடைய கண்கள் உடனே தேடத் தொடங்கும். அப்படி யாராவது இருந்தால், அவர்கள் எப்படித் தலைவாரிப் பின்னிக் கொண்டிருக்கிறார்கள், எப்படி ஆடை ஆபரணங்கள் அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கவனமாய்ப் பார்ப்பாள். ஒரு தடவை, அத்தகைய பட்டணவாசத்துப் பெண் ஒருத்தி தலை மயிரைக் கோணலாக வகிடு எடுத்துப் பின்னிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அது ரொம்ப அழகாயிருந்தது. வீட்டுக்குப் போனதும், காமிரா உள்ளின் கதவைச் சாத்திக் கொண்டு அந்தப் பெண் மாதிரி தானும் கோண வகிடு எடுத்துக் கொண்டாள். ஆனால், அந்தப் பெண்ணுக்கு அது அழகாயிருந்ததே தவிர, தனக்கு அவ்வளவு அழகாயில்லையென்று தோன்றிற்று. வேறு யாரிடமாவது கேட்கலாமென்றால், யாரைக் கேட்பது? சித்தியிடம் போய்க் கேட்டால், கட்டாயம் விறகுக் கட்டையால் அடி விழும். 'அம்மா, அத்தை, பெரியம்மா, பாட்டி யாராவது ஒருவர் எனக்கு இருக்கக் கூடாதா? என் அதிர்ஷ்டம், எல்லாரும் போய்விட வேண்டுமா?' என்று அப்போது அவளுக்கு ஏக்கம் உண்டாகும்.

மேலும், நாகரிக வாழ்க்கையென்றால் இலேசாயிருக்கிறதா? பணம் செலவழிக்காமல் சாத்தியமாகும் காரியமில்லையே? தனக்கு வேண்டிய சாமான்களைப் பற்றி அப்பாவிடம் பிரஸ்தாபிப்பதற்கும் சாவித்திரிக்கு ரொம்ப சங்கோசமாய்த்தான் இருந்தது. ஆனாலும், அப்பா கும்பகோணம் அல்லது தஞ்சாவூர் போனால், வரும் போது விநோலியா ஸோப்பு, தலை பின்னிக் கொள்வதற்கு டேப்பு – இதெல்லாம் வாங்கிக் கொண்டு வரச் சொல்வாள். அவரும் மறக்காமல், துணியில் முடிச்சுப் போட்டு வைத்திருந்து, குழந்தை கேட்டதை வாங்கிக் கொண்டு வருவார். அவளுடைய கையில் ஏற்கனவே போட்டுக் கொண்டிருந்த தங்கக் காப்பு, கொலுஸு எல்லாவற்றையுங்கூட

அழித்துவிட்டு மெல்லிய தங்க வளைகளாகப் பண்ணிப் போட்டுவிட்டார். இப்படியாக சாவித்திரி நாகரிக வாழ்க்கையில் அபிவிருத்தியடைந்து கொண்டு வந்தாள்.

யாரை உத்தேசித்து, யார் பார்த்துச் சந்தோஷப்படவேண்டுமென்பதற்காக, சாவித்திரி ஆடை அலங்காரங்களில் இவ்வளவு கவனம் செலுத்தினாளோ, அப்படிப் பட்டவர் இன்று ராத்திரி வருவதற்கு இருந்தார். எனவே சாவித்திரி பூமியிலேயே நிற்காமல் குதித்துக் கொண்டிருந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?

அவாள் வருவதற்காக 'ஸ்பெஷ'லாய் அலங்காரம் செய்து கொண்டதாகவும் இருக்கக்கூடாது. ஆனால் அவாள் பார்த்ததும், 'இது யாரோ புது சாவித்திரி' என்று பிரமித்துப் போகும்படியாகவும் இருக்க வேண்டும் என்று சாவித்திரி எண்ணினாள். ஏற்கனவே, வாரிப் பின்னியிருந்த தலையை மறுபடியும் வாரிவிட்டுச் சரிப்படுத்திக் கொண்டாள். காலையிலிருந்து முப்பது தடவை அலம்பியான முகத்தை மறுபடி ஸோப்புப் போட்டுத் தேய்த்து அலம்பிக் கொண்டாள். முதலில் சாந்துப் பொட்டு இட்டுக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள். அதை அழித்துவிட்டுக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். அது பெரிதாய்ப் போய்விட்டதென்று அழித்துவிட்டு மறுபடி சின்னதாய் இட்டுக்கொண்டாள். பாவாடை, தாவணியை அவிழ்த்து எறிந்துவிட்டுக் கல்யாணப் புடவையை எடுத்துக் கட்டிக்கொண்டாள். அப்புறம், அவாள் வரும் போது பதினெட்டு முழப் புடவையைப் புஸு புஸு என்று கட்டிக்கொண்டு நிற்கவேண்டாம், காலையில் தான் எப்படியும் புதுப் புடவை கட்டிக் கொள்ள வேணுமே யென்று எண்ணி மறுபடியும் பாவாடை தாவணியையே உடுத்திக் கொண்டாள். ஐந்து நிமிஷத்துக்கொரு தடவை சுவரில் மாட்டியிருந்த நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்று அழகு பார்த்துக் கொண்டாள்.

இப்படி என்னவெல்லாமோ செய்தும் பொழுது போகிற வழியாயில்லை. அப்போது பட்டாசுக் கட்டு ஞாபகம் வந்தது. பட்டாசு, மத்தாப்பூ என்றால் சாவித்திரிக்கு அளவில்லாத பிரியம். அவாள் வந்த பிறகு பட்டாசு கொளுத்தலாமோ, என்னமோ? அவாளுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ? மேலும் அவாள் மட்டும் தனியாய் வரவில்லையே? மாமியாரும் கூட வருகிறாள் அல்லவா? "பச்சைக் குழந்தையா பட்டாசு கொளுத்துவதற்கு?" என்று மாமியார் கோபித்துக் கொண்டாலும் கோபித்துக் கொள்ளலாம். ஆகையால், இப்போதே கொஞ்சம் பட்டாசுக் கட்டுகளை எடுத்துக் கொளுத்திப் போட்டாள். அவை படபடவென்று வெடித்த போது அவளுக்கு வெகு உற்சாகமாயிருந்தது. அப்புறம் தீபாவளிக் கொண்டாட்டத்தைப் பற்றி அவள் இட்டுக்கட்டியிருந்த பாட்டைப் பாடிக்கொண்டே மத்தாப்புக்களைக் கொளுத்தினாள். அப்போதுதான் சூரியன் அஸ்தனமாகி விளக்கு ஏற்றும் சமயமாயிருந்தபடியால், மத்தாப்பூக்கள் அவ்வளவு பிரகாசமாய் எரியவில்லை. 'இன்னும் கொஞ்ச நேரமானால் இருட்டி விடும்; மத்தாப்பூ நன்றாக எரியும்' என்று எண்ணிக் கொண்டாள். இருட்டிச் சற்று நேரத்திற்கெல்லாம் ஸ்டேஷனுக்குப் போன வண்டியும் வந்துவிடும் என்பது ஞாபகம் வந்தது. வண்டி வாசலில் வந்து நின்று, மாப்பிள்ளை வண்டியிலிருந்து இறங்கும்போது, இரண்டு பட்டாசுக் கட்டை முற்றத்தில் கொளுத்திப் போட்டுப் படபடவென்று வெடிக்கப் பண்ணலாமா என்ற எண்ணம் தோன்றியபோது அவளுக்குக் கலகலவென்று சிரிப்பு வந்தது.

இப்படி எண்ணியதும், உடனே இன்னொரு ஞாபகமும் உண்டாயிற்று. மாப்பிள்ளை வந்து இறங்கியதும் அவரை வீதியில் நிற்க வைக்காமல் உடனே ஆலாத்தி எடுக்க வேண்டுமே? சித்தி மஞ்சள் நீர் கரைத்துத் தயாராய் வைத்திருக்கிறாளோ, என்னவோ? போய் விசாரிக்கலாம் என்று நினைத்து, சாவித்திரி சமையலறைக்குச் சென்றாள்.

10. வண்டி வந்தது !

சமையலறையில் மங்களமும், சொர்ணம்மாளும் குஞ்சாலாடு பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் செவிட்டு வைத்தி, புதுவேஷ்டி - புதுப்புடவைப் பொட்டணங்களைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். புது வேஷ்டி - புதுப்புடவைகளை அவன் கையால் தடவித் தடவிப் பார்த்து அவற்றின் மிருதுத் தன்மையை அநுபவித்துக் கொண்டிருந்தான்.

சொர்ணம்மாள், "நான் சொன்னபடியே ஆச்சா, இல்லையா, பார்த்துக்கோ! பொண்ணுக்கு அறுபது ரூபாய்க்குப் புடவை, உனக்குப் பன்னிரண்டு ரூபாயிலே புடவை, மாப்பிள்ளைக்கு முப்பத்தைந்து ரூபாயிலே வேஷ்டி; மச்சினனுக்கு ஒண்ணரை ரூபாயிலே வேஷ்டி. இதென்னடி வெட்கக் கேடு! உடம்புக்குப் பால் குடிக்காட்டாலும், ஊருக்காவது குடிக்க வேண்டாமா? நீயும் பேசாம இருக்கயே?" என்றாள்.

அதற்கு மங்களம், எரிச்சலாக, "என்னை என்னடி அம்மா பண்ணச்சொல்றே! அப்பவே கிணத்துலே குளத்திலே என்னைப் பிடிச்சுத் தள்ளி விடறதுதானே? இந்த அழகான மாப்பிள்ளையைப் பார்த்து நீதானே என்னைக் கொண்டு வந்து கொடுத்தே?" என்றாள்.

"நான் எல்லாம் சரியாத்தான் பார்த்துக் கொடுத்தேன். எதிலே குறைவாய்ப் போச்சு? சொத்தில்லையா, பணமில்லையா, வயது தான் அப்படி ரொம்ப ஜாஸ்தியா? உன்னைப் போலே இளையவளா வாழ்க்கைப்பட்டவாளெல்லாம் ராஜாத்தி மாதிரி இருக்கலையா? நீ எல்லாத்துக்கும் வாயை மூடிண்டு இருந்து இருந்துதான் இப்படி இடங்கொடுத்துப் போச்சு. இல்லாட்டா, ஒரு பொண் கல்யாணத்துக்கு யாராவது பத்தாயிரம் ரூபாய் செலவழிப்பாளோ?"

"அதோடே போனாத் தேவலையே? இப்போ, அவா கல்கத்தாவிலேயிருந்து தீபாவளிக்கு வந்துட்டுப் போற செலவெல்லாம் உன் மாப்பிள்ளைதான் கொடுக்கப் போறாராம்!"

"ஐயையோ! நெஜந்தானாடி? இதென்ன அநியாயம்? இந்தக் குடித்தனம் உருப்படறதா, இல்லையா, தெரியலையே? இன்னும், திரட்சி, வளைகாப்பு, சீமந்தம்னு நெடுக வந்துண்டே யிருக்குமே?"

"கல்யாணத்திலே பத்தாயிரம் ரூபாய் கடன். நிலத்திலே இரண்டு வேலி மண்ணடிச்சுப் போயிடுத்து. ஐயாயிரம் ரூபாய் செலவழிச்சாத்தான் மறுபடி நிலமாகுமாம். எப்படிக் கடனடைக்கப் போகிறாரோ, பாக்கி என்ன மிஞ்சப் போறதே, ஸ்வாமிக்குத்தான் தெரியும்"

"நான் சொல்றேன் கேளு, மங்களம்! இத்தனை நாளும் போனதெல்லாம் போகட்டும். இனிமே, பொட்டிச் சாவியை நீ வாங்கி வைச்சுக்கோ. ஒரு காலணாச் செலவழிக்கிறதாயிருந்தாலும், உன்னைக் கேட்டுண்டுதான் செலவழிக்கணும்னு சொல்லிடு. இல்லாட்டா எல்லாருமாச் சந்தியிலே நிக்க வேண்டியதுதான்"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், செவிட்டு வைத்தி புடவைகளையும், வேஷ்டிகளையும் ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். நடுவில் நடுவில், "அக்கா! இது யாருக்கு? இது உனக்கா? இதுதான் மாப்பிள்ளைக்கா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான். மாப்பிள்ளைக்கு வாங்கியிருந்த சேலம் மயில்கண் வேஷ்டியைப் பார்க்கப் பார்க்க, அதைத் தான் உடுத்திக்கொண்டால் எப்படியிருக்குமென்று அவனுக்கு யோசனை தோன்றி விட்டது. வேஷ்டியை ஒவ்வொரு

மடிப்பாகப் பிரித்து, கடைசியில் இரட்டை மடிப்புக்கு வந்ததும், எழுந்து நின்று அதைக் கட்டிக் கொள்ள முயன்றான்.

இந்தச் சமயத்தில், ஆலாத்திக்கு மஞ்சள் நீர் கரைத்து வைத்திருக்கிறதா என்று விசாரிப்பதற்காகச் சாவித்திரி அங்கே வந்து சேர்ந்தாள். "ஏன், சித்தி! வண்டி வரலாச்சே..." என்று சொல்லிக் கொண்டே வந்தவள் மாப்பிள்ளைக்கு வாங்கியிருந்த வேஷ்டியைச் செவிட்டு வைத்தி கட்டிக்கொள்வதைப் பார்த்ததும், மற்றதையெல்லாம் மறந்துவிட்டாள்; இரண்டே எட்டில் செவிட்டு வைத்தி அருகில் சென்று, "சீ" என்று ஓர் அதட்டல் போட்டு, அவன் உடுத்திக்கொள்ள முயன்ற வேஷ்டியைப் பிடுங்கினாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சொர்ணம்மாளுக்கு வயிற்றெரிச்சல் பொங்கிக்கொண்டு வந்தது. "ஏண்டி சாவித்திரி! உனக்கு என்னடி வந்துடுத்து இவ்வளவு ராங்கி! அந்த வேஷ்டியை அவன் பார்த்தா ஊசியா போயிடும்? இல்லாட்டா, அவன் தொட்டாத் தீட்டுப்பட்டுப் போயிடுமா? அவனைச் சாதியை விட்டுத் தள்ளி வச்சிருக்கா?" என்றாள்.

இந்த வார்த்தைகள் சாவித்திரியின் செவியில் சுருக்கென்று பாய்ந்தன. ஊரார் தங்களைச் சாதிப் பிரஷ்டம் பண்ணியிருப்பதைத்தான் பாட்டி அந்த மாதிரி சுட்டிக் காட்டுகிறாள் என்று அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ஆத்திரம் தொண்டையை அடைக்க, நாத் தழுதழுக்க, "இந்தாருங்கோ, பாட்டி! என் புடவையை வேணாலும் சித்தி எடுத்துக்கட்டும். எனக்குப் புதுப் புடவை வேணுங்கறது இல்லை. ஆனால், அவாளுக்கு வாங்கியிருக்கிற வேஷ்டியை இன்னொருத்தர் கட்டிக்கிறது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலை" என்று சொல்லிவிட்டு, வைத்தியிடமிருந்து பிடுங்கிய வேஷ்டியை எடுத்துக்கொண்டு விரைவாக அங்கிருந்து சென்றாள்.

மங்களம், போகின்றவளை ஒரு தடவை விழித்துப் பார்த்துவிட்டு, "ஸ்வாமி! பகவானே! இன்னும் என்னவெல்லாந்தான் என்னைச் சோதிக்கப் போகிறாயோ?" என்று சொல்லி, ஒரு குஞ்சலாடுவை முழுசாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

காமரா உள்ளில் சாவித்திரி, மாப்பிள்ளையின் வேஷ்டியை மடித்துக் கொண்டிருந்தாள். பிரித்தது தெரியாதபடி முன்போலவே மடிக்க அவள் பிரயாசைப்பட்டாள். அவள் கடைசி மடிப்பு மடித்துக் கொண்டிருந்தபோது, வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது. 'ஓகோ! வண்டி வந்துடுத்து போலிருக்கே! ஆலாத்தி தயாராயிருக்கிறதோ என்னமோ தெரியலையே?' என்று எண்ணிய வண்ணம் வேஷ்டியை அப்படியே வைத்துவிட்டு அறையிலிருந்து வெளியில் வந்தாள்.

அப்போது வண்டிச் சப்தத்தை மங்களமும் கேட்டு, கையில் மஞ்சள் நீருள்ள தாம்பாளத்தை எடுத்துக் கொண்டு சமையலறையிலிருந்து கிளம்பினாள். ஆனால், அதே சமயத்தில் குறுக்கே வந்த செவிட்டு வைத்தியின் காதில் வண்டிச் சத்தமும் கேட்கவில்லை; இவர்கள் எழுந்து வருவதையும் அவன் பார்க்கவில்லை. 'சாவித்திரியை மட்டும் நமக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தால் இப்படி அவள் நம்மிடம் துடுக்காக இருப்பாளா?' என்று எண்ணிய வண்ணம், ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு நடந்தவன், கையில் ஆலாத்தியுடன் வந்த மங்களத்தின் மீது மோதிக் கொண்டான். ஆலாத்தித் தாம்பாளம் கீழே 'டணார்' என்ற சத்தத்துடன் விழுந்தது. "ஐயையோ" என்றாள் மங்களம்.

சாவித்திரி இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, 'நல்ல சமயத்தில் தான் இவர்கள் இப்படிச் செய்வார்கள்' என்று மனத்திற்குள் வைத்தியையும் மங்களத்தையும் வைது கொண்டே, ரேழிப் பக்கம் சென்று, கதவோரத்தில் நின்று பார்த்தாள். வாசலில் வண்டி வந்து நின்றது. அதனுள்ளிருந்து, சம்பு சாஸ்திரி இறங்கினார்; அடுத்தாற்போல் மாப்பிள்ளை இறங்குவாரென்று சாவித்திரி பதை பதைப்புடன் எதிர்பார்த்துக்

கொண்டிருந்தாள். அவர் இறங்குவதைப் பார்த்துவிட்டுத் தான் உள்ளே ஓடிப் போவதற்கு அவள் தயாராயிருந்தாள். ஆனால், சம்பு சாஸ்திரிக்குப் பிறகு யாரும் வண்டியிலிருந்து இறங்கவில்லை. வண்டி கடக், கடக் என்ற சப்தத்துடன் ஒரு வட்டம் அடித்துவிட்டுத் திரும்பிச் சென்றது.

வண்டியிலிருந்து இறங்கிய சாஸ்திரி வீட்டுக்குள் பிரவேசித்தார். சாவித்திரி அவருக்கு முன்னாலேயே உள்ளே சென்று கூடத்தில் நின்றாள். சாஸ்திரி வந்ததும் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். சாஸ்திரி, அவளுடைய பரிதாபமான முகத்தைப் பார்த்துவிட்டு, தழதழத்த குரலில், "மாப்பிள்ளை வரவில்லை, அம்மா!" என்று சொன்னார். அப்போது அவர் கண்களிலிருந்து ஜலம் பெருகிற்று.

சாவித்திரி, "நீங்கள் என்ன செய்வேள், அப்பா! அழாதேங்கோ, அப்பா!" என்றாள். அவ்வளவுதான்; அவளுக்கும் தன்னை அறியாமல் துக்கம் பொங்கிக் கொண்டு வந்து விட்டது. எவ்வளவு அடக்கிப் பார்த்தும் முடியவில்லை. விம்மிக் கொண்டே அங்கிருந்து சென்று தாழ்வாரத்தில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலின் அருகில் போய் மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். கட்டிலில் முழங்கையை ஊன்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

சாஸ்திரி அவளைப் பின் தொடர்ந்து வந்து, அவளுடைய தலையைத் தம் கைகளால் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றார்.

வீட்டு முற்றத்தில் கூடல்வாய் முனையிலிருந்து மழை ஜலம் சொட்டுச் சொட்டென்று விழுந்து கொண்டிருந்தது.

வீட்டுக்கு வெளியே, மழைக் காலத்துத் தவளைகள் ஏகமாய்ச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. அந்த சத்தம், சோகக் குரலில் "மாப்பிள்ளை வரலை!" "மாப்பிள்ளை வரலை!" என்று கதறுவதுபோல் இருந்தது.

மூன்றாம் பாகம்

பனி

"புல் நுனிமேல் நீர்போல் நிலையாமை
என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை" - நாலடியார்

1. நல்ல சேதி

தலை தீபாவளிக்குப் பிறகு இன்னும் இரண்டு தீபாவளிகள் வந்துவிட்டுப் போயின. கார்த்திகை முடிந்து, மார்கழி மாதம் பிறந்தது.

பருவ காலங்கள் எந்தப் பஞ்சாங்கம் அல்லது காலெண்டரை வைத்துக் கொண்டு தேதி பார்க்கின்றனவோ, தெரியவில்லை. அதிலும் மற்றப் பருவங்கள் கொஞ்சம் முன் பின்னாக வந்தாலும் வரும். பனிக்காலம் மட்டும் தேதி தவறி வருவது கிடையாது. கார்த்திகை எப்போது முடியப் போகிறது, மார்கழி எப்போது பிறக்கப் போகிறது என்று பார்த்துக் கொண்டேயிருந்து மார்கழி பிறந்ததும், பனியும் தொடங்கிவிடுகிறது. ஜனங்களும், கம்பளிச் சொக்காய், பனிக் குல்லாய் காஷ்மீர்ச் சால்வை, கோரைப் பாய் ஆகியவற்றைத் தேடத் தொடங்குகிறார்கள்.

அந்த மாதங்களில் அதிகாலையில் எழுந்திருப்பதற்குச் சாதாரணமாய் யாருக்கும் மனம் வருவதில்லை. பட்சிகளின் உதய கீதத்தைக் கேட்டதும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்ளத்தான் தோன்றும். ஆனால், மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாள் என்பதை நினைத்து அதிகாலையில் பஜனை செய்ய விரும்பும் பக்தர்களும், குடுகுடுப்பாண்டிகளும் மட்டும் பனியையும் குளிரையும் இலட்சியம் செய்யாமல் எழுந்து விடுவார்கள்.

ஒரு நாள் அதிகாலையில் சம்பு சாஸ்திரி வழக்கம் போல் விழித்துக் கொண்டார். ஆனால், உடனே படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை. அவசரமாய் எழுந்து என்ன ஆகவேண்டுமென்று தோன்றியது. மூன்று வருஷத்துக்கு முன்பு வரையில் மார்கழி மாதம் என்றால், நெடுங்கரை கிராமத்தில் பிரமாதமாயிருக்கும். அதிகாலையில் வீதி பஜனை நடக்கும். பிறகு சம்பு சாஸ்திரியின் வீட்டில் பூஜை, ஹாரத்தி, பொங்கல் பிரஸாத விநியோகம் எல்லாம் உண்டு. அதெல்லாம் இப்போது பழைய ஞாபகமாகி விட்டது. சாஸ்திரியைச் சாதிப் பிரஷ்டம் செய்த வருஷத்தில், வீதி பஜனை நின்று போயிற்று. காலை வேளையில் பொங்கல் பிரஸாதத்துக்காகவும் அவர் வீட்டுக்கு யாரும் போகவில்லை. 'ஊரார் சாதிப்பிரஷ்டம் பண்ணியது இந்த ஒரு காரியத்துக்கு நல்லதாய்ப் போயிற்று' என்று மங்களம் மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள்.

அடுத்த வருஷத்தில் சாதிக் கட்டுப்பாடு தளர்ந்து விட்டது. ஊரில் தீக்ஷிதருடைய கிருத்திரிமங்களைப் பொறுக்க முடியாத சிலர் பகிரங்கமாகவே சம்பு சாஸ்திரியின் கட்சி பேசத் தொடங்கினார்கள். பிறகு, பெயருக்கு ஏதோ பிராயச்சித்தம் என்று நடந்தது. இப்போது அக்கிரகாரத்தில் அநேகர் சாஸ்திரி வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஆனால், முன்னைப் போல் சம்பு சாஸ்திரிக்கு வாழ்க்கையில் உற்சாகம் இல்லை; முன் மாதிரி பணச் செலவு செய்வதற்கு வேண்டிய வசதிகளும் இல்லை. சாவித்திரி, புருஷன் வீட்டுக்குப் போகாமலிருந்தது அவருடைய உள்ளத்தில் ஒரு பெரிய பாரமாய் இருந்து கொண்டிருந்தது. ஆகவே, ஏகாதசி பஜனை, மார்கழி பஜனை எல்லாம் நின்று போயின.

ஆனால் சாஸ்திரி அதிகாலையில் எழுந்திருப்பது மட்டும் நிற்கவில்லை. தாம் எழுந்திருக்கும்போது சாவித்திரியையும் எழுப்பி விட்டு விட்டுத் தடாகத்துக்குப் போவார். பனிக் காலத்தில், அதிகாலையில் வெத வெத என்று சூடாயிருக்கும் குளத்து ஜலத்தில் ஸ்நானம் செய்வது ஓர் ஆனந்தமாயிருக்கும். பிறகு, சூரியோதயம் வரை காத்திருந்து சூரிய நமஸ்காரம் செய்வார். பனிக் காலத்தில், சூரியன் கிளம்பிக் கொஞ்ச நேரம் வரையில் பனிப் படலம் சூரியனை மறைத்துக் கொண்டிருக்கும். 'இப்படித்தானே

மாயையாகிற பனி ஆத்ம சூரியனை ஜீவனுடைய கண்ணுக்குப் புலப்படாமல் மறைத்துக் கொண்டிருக்கிறது?' என்று வேதாந்த விசாரணை செய்வார்.

அவர் வீட்டுக்குத் திரும்பி வருவதற்குள், சாவித்திரி எழுந்திருந்து, படங்களுக்கு அலங்காரம் செய்து, விளக்கேற்றி வைத்து, பூஜைக்கு எல்லாம் எடுத்து வைத்திருப்பாள். சாஸ்திரி வந்ததும் பூஜை செய்துவிட்டு வேறு காரியங்களைப் பார்ப்பார்.

இன்று, வழக்கம் போல், அதிகாலையில் விழித்துக் கொண்டவர், பழைய நாளில், மார்கழிப் பஜனை எவ்வளவு விமரிசையாய் நடந்தது என்பதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தனை செய்து கொண்டிருந்தார். பிறகு, ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "அம்மா! சாவித்திரி! எழுந்திரு, அம்மா!" என்றார். அதே சமயத்தில் மனத்திற்குள், 'ஐயோ! இந்தக் குழந்தையின் கஷ்டம் எப்போது தீரப்போகிறதோ, தெரியவில்லையே!' என்று ஏங்கினார்.

அப்போது வாசலில், குடுகுடுப்பாண்டி, "நல்ல சேதி வருகுது, நல்ல சேதி வருகுது! குடுகுடுக் குடுகுடுக்! ஐயா வீட்டுக்கு நல்ல சேதி வருகுது!! குடுகுடுக் குடுகுடுக்!" என்று சொல்லிக் கொண்டு போனான்.

சாஸ்திரியின் குரலைக் கேட்டு சாவித்திரி மட்டும் விழித்துக் கொள்ளவில்லை; மங்களமும் விழித்துக் கொண்டாள். அவள் எழுந்து போகையில், "நல்ல சேதி வரும், நல்ல சேதி வரும்னு இரண்டு வருஷமாய்த்தான் காத்திண்டிருக்கு. வந்த பாட்டைக் காணோம். இந்தத் துக்கிரியின் தலையிலே பகவான் என்ன எழுதியிருக்காரோ?" என்று சொல்லிக் கொண்டே போனாள்.

"ஹே ராமச்சந்திரா!" என்றார் சாஸ்திரியார். பிறகு, "அவள் கிடக்கா, குழந்தை! நீ போய்ப் பூஜைக்கு ஆக வேண்டியதைப் பார்!" என்றார்.

சாவித்திரி புருஷன் வீட்டுக்குப் போகாமலிருப்பது பற்றி மங்களம் இடித்துக் காட்டியது இது முதல் தடவையல்ல; எத்தனையோ தடவை அவள் இந்த மாதிரி சொல்லிச் சொல்லிச் சாவித்திரிக்குக் காய்த்துப் போயிருந்தது. எனவே, சாதாரணமாக அவள் அதை இலட்சியம் செய்வதில்லை. ஆனால், இன்றைய தினம் அவளுடைய மனம் ரொம்பவும் புண்பட்டுப் போயிற்று. ஏனெனில், வாசலில் குடுகுடுப்பாண்டி, "நல்ல சேதி வருகுது; நல்ல சேதி வருகுது!" என்று கூவியபோது, மங்களத்துக்குத் தோன்றிய அதே எண்ணம் சாவித்திரிக்கும் தோன்றியது. 'ஒரு வேளை இன்றைக்கு நல்ல சேதி வரக்கூடாதா? என்னை அனுப்பி வைக்கும்படி அவாளிடமிருந்து கடிதம் வரக்கூடாதா?' என்று அவள் மனம் ஏங்கிற்று. அந்தச் சமயத்தில் மங்களம் அம்மாதிரி இடித்துக் காட்டிய படியால் சாவித்திரிக்குத் துக்கம் அடைத்துக் கொண்டு வந்தது.

முடிந்த வரையில் துக்கத்தை அடக்கிக் கொண்டு சாவித்திரி தந்தையின் பூஜைக்கு ஆக வேண்டிய காரியங்களைப் பார்த்தாள். பிறகு வீட்டு வேலைகளையும் செய்தாள். எல்லாம் ஆன பிறகு, காமரா உள்ளுக்குப் போய்க் காகிதம், பேனா, மைக்கூடு எடுத்து வைத்துக் கொண்டு கடிதம் எழுதத் தொடங்கினாள்.

யாருக்குக் கடிதம் எழுதினாள் என்று சொல்லவும் வேண்டுமா? காரியம் செய்யும்போதும், கதை கேட்கும் போதும், கடவுளைத் தியானிக்கும் போதும், உண்ணும் போதும், உறங்கும் போதும் யாருடைய நினைவாகவே இருந்தாளோ, அந்த மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீதரன் பி.ஏக்குத் தான்.

"என் உயிருக்குயிரான பிராணநாதருக்குத் தங்கம் அடியாள் சாவித்திரி அனந்த கோடி நமஸ்காரம்..."

இப்படி எழுதிச் சாவித்திரி நிறுத்தினாள். இதுவரையில் இம்மாதிரி எத்தனை கடிதம் எழுதியிருக்கிறோம் என்பது ஞாபகம் வந்தது. குறைந்தது, பத்துப் பன்னிரண்டு கடிதங்கள் இருக்கும். அவையெல்லாம் என்ன ஆயின?

மங்களம் அதிகாலையில் சொன்னது ஞாபகம் வந்தது; "இந்தத் துக்கிரியின் தலையெழுத்து எப்படி இருக்கிறதோ?" ஆமாம்; இந்தத் துக்கிரியின் ஜன்மத்தில்

தலையெழுத்துச் சரியாயில்லாத போது எத்தனை கடுதாசி எழுதித்தான் என்ன பிரயோஜனம்?

பாவம்! சாவித்திரி, தன்னைப் புக்ககத்துக்கு அழைத்துப் போகாததன் காரணம், ஊரிலே தங்களைச் சாதிப் பிரஷ்டம் பண்ணி வைத்திருந்ததுதான் என்று நம்பியிருந்தாள். தலை தீபாவளிக்கு நாலு நாளைக்குப் பிறகு கல்கத்தாவிலிருந்து கடிதம் வந்தது. அதில், அந்த மாதிரிதான் எழுதியிருந்தது. ஊரார் அவர்களைச் சாதிப் பிரஷ்டம் செய்து வைத்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறதென்றும், சாஸ்திரியின் காரியங்கள் தங்களுக்கும் கட்டோ டே பிடிக்கவில்லையென்றும், வீட்டிலே ஒரு பெண் இருக்கிறாளே என்பதை உத்தேசித்தாவது ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டாமா என்றும், இத்தகைய நிலைமையில் தலை தீபாவளிக்கு வரப்பிடிக்காதபடியால் வரவில்லையென்றும் கடிதம் சொல்லிற்று.

இந்தக் கடிதம் வந்த பிறகு, சாவித்திரியின் ஏமாற்றமெல்லாம் ஊராரின் மேல் கோபமாக மாறிற்று. அவர்கள் ஏதோ இல்லாததும் பொல்லாததும் எழுதியிருக்க வேண்டுமென்றும், அதனால் தான் வரவில்லையென்றும், உண்மை விவரங்கள் தெரியும்போது மாப்பிள்ளையும் சம்பந்திகளும் தீபாவளிக்கு வராதது பற்றி வருத்தப்படுவார்களென்றும் அவள் எண்ணினாள். ஆகவே, அப்பாவை விவரமாகக் கடிதம் எழுதும்படி அடிக்கடி தூண்டினாள். அவரும் எழுதினார். ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை எழுதினார். ஒன்றுக்காவது பதில் கிடையாது. பிராயச்சித்தம் செய்து கொண்டு ஊர்க் கட்டுப்பாடு நிவர்த்தியான பிறகு மறுபடியும் கடிதம் எழுதினார். அப்போதும் பதில் இல்லை.

சில நாளைக்குப் பிறகு, சாந்திக் கல்யாணம் எப்போது வைத்துக் கொள்வதாக உத்தேசம் என்று கேட்டு எழுதியதற்கும் அதே கதிதான்.

ஒரு நாளைக்குச் சம்பு சாஸ்திரி, "அம்மா, சாவித்திரி நான் எத்தனையோ கடிதம் எழுதியாச்சு, ஒன்றும் பிரயோஜனம் இல்லை. நீயாவது உன் அகத்துக்காரருக்கு ஒரு கடிதம் எழுதிப் பாரம்மா!" என்றார்.

சாவித்திரியின் உள்ளத்தில் இந்த எண்ணம் வெகு நாளாக இருந்து கொண்டிருந்தது. தகப்பனாரே சொன்னதும், உடனே கடிதம் எழுதத் தொடங்கினாள். ஸ்ரீதரனிடம் தனக்குள்ள அன்பையும், இத்தனை காலமாக அவரைப் பாராததால் தான் அநுபவிக்கும் துக்கத்தையும், உடனே அவரை வந்து அடையத் தன் உள்ளம் துடித்துக் கொண்டிருப்பதையும், அவளால் முடிந்த வரையில் உருக்கமாக எழுதினாள்.

இந்தக் கடிதத்துக்கு உடனே பதில் வருமென்று சாவித்திரி நம்பினாள். தினந்தோறும் தபால்காரன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தாள். இரண்டு வாரம் வரையில் பதில் வராமல் போகவே, ஒரு வேளை போய்ச் சேரவில்லையோ என்னவோ என்று மறுபடியும் எழுதினாள்.

இந்த மாதிரி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி மனத்தைத் தேற்றிக் கொண்டு, சென்ற ஏழெட்டு மாதத்தில் பத்துக் கடிதங்கள் எழுதிவிட்டாள்.

ஆனால், பாவம், இந்தக் கடிதங்கள் எல்லாம் அவள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறான பலனை அளித்து வந்தன என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

ஆம்; அவளுடைய கடிதம் ஒவ்வொன்றும் ஸ்ரீதரனுக்கு அவள்மேல் இருந்த வெறுப்பை அதிகப்படுத்தியே வந்தன. மேல் விலாசத்தில் அவளுடைய குழந்தைக் கையெழுத்தைப் பார்த்ததுமே அவனுக்குக் கோபம் கோபமாய் வரும். 'ஐயோ! இந்தப் பிராப்தத்தைக் கொண்டு வந்து என் கழுத்திலா கட்ட வேண்டும்?' என்று எண்ணுவான். யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயத்துடன், கடிதத்தை அவசர அவசரமாகப் பார்த்து விட்டு, சில சமயம் படிக்காமலேயே, சுக்கு நூறாய்க் கிழித்துப்

போட்டு விடுவான். சாவித்திரியின் கடிதங்களில் அவள் காட்டியிருந்த விநயம், பயபக்தி, உருக்கம் எல்லாம் அவன் மனத்தில் அருவருப்பையே உண்டாக்கின.

இதையறியாத சாவித்திரி மேலும் மேலும் மேலும் கடிதம் எழுதிப் போட்டுக் கொண்டேயிருந்தாள். சம்பு சாஸ்திரியும் சலிக்காமல், அம்பாளை வேண்டிக் கொண்டு, அவளுடைய கடிதங்களைத் தபாலில் சேர்த்து வந்தார்.

கடைசியாக சாவித்திரி இன்றைய தினம் கடிதம் எழுத ஆரம்பித்தபோது. இதுதான் அவருக்கு நாம் எழுதும் கடைசிக் கடிதம் என்று தீர்மானித்துக் கொண்டாள். மேஜையின் மீதிருந்த 'ஸெல்லூலாயிட்' பொம்மையைப் பார்த்தவண்ணம், "பாப்பா! இந்தக் கடிதத்துக்காவது அவாளிடமிருந்து பதில் வந்தால் போச்சு இல்லாமற் போனால், நான் "கிணற்றிலோ குளத்திலோ விழுந்து செத்துப் போயிடுவேன். அப்புறம் உன்னோடு யார் விளையாடுவார்கள்?" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டாள். அப்போது, தான் மூன்று வயதிலே கிணற்றில் விழுந்ததாக அப்பா சொன்னது ஞாபகம் வந்தது. 'ஐயோ! அப்போதே நான் செத்துப் போயிருக்கக் கூடாது? பாவி நல்லான் எதற்காக என்னை எடுத்தான்?' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள். பிறகு, மனத்தை திடப்படுத்திக் கொண்டு, ஒருவாறு கடிதத்தை எழுதி முடித்தாள்.

அந்தச் சமயத்தில், சம்பு சாஸ்திரி, "அம்மா, சாவித்திரி! உன் கலி தீர்ந்துவிட்டது அம்மா!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார்.

2. சதியாலோ சனை

ராஜாராமய்யரும் அவருடைய நண்பர்களும் நடத்திய ஆவி உலகச் சோதனை அகால மரணத்துக்கு உள்ளான விஷயத்தை நாம் துயரத்துடன் தெரிவிக்க வேண்டியதாயிருக்கிறது. மேஜை ஒரு முழ உயரம் கிளம்பியதற்கு மேல் அவர்களுடைய சோதனையில் வேறு எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. ஆகவே, எல்லோரும் ஒருவாறு சலிப்பு அடையும் தருணத்தில், இங்கிலாந்திலிருந்து மிஸ் மேரியா ஹாரிஸன் என்னும் பெண்மணி வந்து சேர்ந்தாள். இவள் ஒரு பிரசித்தி பெற்ற 'மீடியம்'; அதாவது, ஆவி உலகவாசிகளைத் தன்னுடைய தேகத்தின் மீது ஆவிர்ப்பவிக்கச் செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவள். ராஜாராமய்யர் – பீடர்ஸன் சங்கத்தார் இந்த 'மீடியம்' அம்மாளுக்கு வரவேற்பு அளித்தார்கள். இவர்களுடைய ஆராய்ச்சியில் அந்த அம்மாள் மிகவும் சிரத்தை காட்டி, தானே அவர்களுக்கு உதவி செய்வதாகவும் சொன்னாள்.

பலநாள் முயற்சிக்குப் பிறகு ஒரு நாளைக்கு அந்த அம்மாள் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதாவது, அவள் பேரில் ஆவிகள் ஆவிர்ப்பவித்து, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லலாயின. ஆனால், பதில் வாயினால் சொல்லவில்லை; 'மீடிய'த்தின் கையைப் பிடித்துப் பதில்களை எழுதிக் காட்டின.

முதலில், மிஸ்ஸஸ் பீடர்ஸனுடைய ஆவி ஆவிர்ப்பவமாயிற்று. பீடர்ஸன் துரை பூலோகத்தில் தங்களுடைய வாழ்க்கையைப்பற்றிக் கேட்டதற்கு, "அதெல்லாம் எனக்கு மறந்து போய்விட்டது; இந்த உலகத்துக்கு வந்த பிறகு பூலோக விஷயங்கள் ஒன்றும் ஞாபகம் இருப்பதில்லை" என்று ஆவி சொல்லிற்று. பிறகு, தான் இருக்கும் உலகம் அற்புதமான அழகு வாய்ந்தது என்றும், எங்கே பார்த்தாலும் புஷ்பக் காட்சியாயிருக்கிறது என்றும், வானவில்லின் வர்ணங்கள் எங்கும் காணப்படுகின்றன என்றும், எப்போதும் சுகந்தம் வீசுகிறது என்றும், இப்படிப்பட்ட ஆச்சரிய உலகத்துக்குப் பீடர்ஸன் துரையும் சீக்கிரத்தில் வந்து சேரவேண்டுமென்றும் எழுதித் தெரிவித்தது.

இந்த எழுத்து ஒருவாறு தம் மனைவியின் கையெழுத்தைப் போல் இருக்கிறதென்று பீடர்ஸன் துரை சொன்னார்.

பிறகு, ராஜாராமய்யருடைய தகப்பனார், 'மீடியம்' அம்மாளின் மீது ஆவிர்ப்பவித்தார். அவர் எழுதிய கையெழுத்து மிஸ்ஸஸ் பீடர்ஸனின் எழுத்துக்கு முற்றும் மாறாக, ஆண்பிள்ளைக் கையெழுத்தைப் போல் இருந்தது. இதைப் பார்த்ததுமே அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் அதிசயப்பட்டுப் போனார்கள். ஆனால் ராஜாராமய்யருக்கு அதைவிட ஆச்சரியம் அளித்தது என்னவென்றால், தம்முடைய தகப்பனார் ஓர் அட்சரங்கூட இங்கிலீஷ் தெரியாதவராயிருந்தும், இப்போது இவ்வளவு சுத்தமான் இங்கிலீஷ் எப்படி எழுதுகிறார் என்பது தான். மேலும் வைத்தீசுவரய்யர் தாம் வசிக்கும் உலகத்தைப் பற்றி வர்ணித்ததும், மிஸ்ஸஸ் பீடர்ஸன் வர்ணித்ததும், ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. மேலும் அவர், "இந்த உலகத்தில் சாதி, மத வித்தியாசம் ஒன்றும் கிடையாது. கிறிஸ்தவர்களும், ஹிந்துக்களும் ஒன்றுதான். எல்லாரும் பர மண்டலத்திலுள்ள ஏசு பிதாவைத்தான் வணங்குகிறோம்" என்றார். தம் தகப்பனார் உயிர் வாழ்ந்த போது, அவர் கிறிஸ்தவர்களைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்தார் என்பது ராஜாராமய்யருக்கு ஞாபகம் வந்தபோது, பரலோகத்தில் அவருடைய மாறுதல் ஆச்சரியமாய்த்தான் இருந்தது. ஆனால் இது எல்லாவற்றையும் விட, அவரை அதிசயத்தினால் திகைக்கப் பண்ணிய விஷயம் வேறொன்று: "வருஷாவருஷம் நான் தங்களை உத்தேசித்து சிராத்தம் பண்ணுகிறேனே, அன்று

தாங்கள் பூலோகத்துக்கு வருவதுண்டா?" என்று ராஜாராமய்யர் கேட்டதற்கு, வைத்தீசுவரய்யரின் ஆவி எழுதிய பதிலாவது:-"ஆமாம்; வருஷம் ஒரு தடவை நான் என்னுடைய கல்லறைக்கு வருகிறேன். அங்கே நீ போட்டிருக்கும் புஷ்பங்களின் சுகந்தத்தை உட்கொண்டு விட்டுத் திரும்புகிறேன்!"

ராஜாராமய்யர் தம் தகப்பனாரின் உடலுக்குக் கொள்ளி வைத்துக் கொளுத்தியதுமல்லாமல், அவருடைய எலும்புகளைப் பயபக்தியுடன் கொண்டுபோய்க் கங்கையில் போட்டுவிட்டு வந்தவர். எனவே, அவருடைய தகப்பனாரின் ஆவி, "என்னுடைய கல்லறைக்கு வருகிறேன்" என்று சொன்னதும், ராஜாராமய்யருக்கு அளவிலாத வியப்பு உண்டாயிற்று. அதை நினைக்க நினைக்க, இந்த ஆவி உலகச் சோதனையிலே அவருடைய நம்பிக்கை சிதறுண்டு போயிற்று.

இதற்கு நேர்மாறாக, பீடர்ஸன் துரையின் நம்பிக்கை அதிகமாயிற்று. அவர் தம்முடைய மனைவி வசிக்கும் உலகத்துக்குத் தாமும் சீக்கிரம் போகவேண்டுமென்றும் அதற்கு முன்னால் தாம் ஜன்ம தேசத்தையும் ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்து உத்தியோகத்திலிருந்து விலகிச் சீமைக்குப் பிரயாணமானார்.

அவர் போன பிறகு, ராஜாராமய்யரின் ஆவி உலக ஆராய்ச்சியும் சமாப்தி அடைந்தது.

இப்போது ராஜாராமய்யர் தமது முழுக் கவனத்தையும் மனோதத்துவ ஆராய்ச்சியில் செலுத்தியிருந்தார். ஹிப்னாடிஸம் என்கிற மனோவசியம், டெலிபதி என்கிற மானிடத் தந்தி ஆகிய கலைகளைப் பற்றி ஏராளமான நூல்களைப் படித்தார். அந்த அப்பியாசங்களைச் செய்வதற்குப் பூர்வாங்கமாக இப்போது காந்த சக்தி தேடிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தார். தமது அறையின் ஒரு சுவரில், வட்டவடிவமான ஒரு பெரிய கறுப்புப் புள்ளியை எழுதிக் கொண்டு, அதைக் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்தவண்ணம், "இதோ என் கண்கள் காந்த சக்தி பெற்றுவிட்டன" என்று ஜபிப்பார்.

பிறகு, கண்களை மூடிக் கொண்டு, "இதோ எனக்குக் காந்த சக்தி உண்டாகிறது. என்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் எனக்குக் கட்டுப்படுகிறார்கள். நான் எது சொன்னாலும் உடனே கேட்கிறார்கள். ஸ்ரீதரா! நான் கட்டளையிடுகிறேன்; நீ கீழ்ப்படிகிறாய்! தங்கம்! நான் சொல்கிறேன்; நீ கேட்கிறாய்!" என்று இந்த மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்வார்.

இவ்வாறு ஒரு நாள் சாயங்காலம் அவர் மாடி அறையில் காந்த சக்தி அப்பியாசத்தில் ஈடுபட்டிருக்கும் போது தான், வாசலில் கார் வந்து நின்று பலமாக ஹாரன் அடிக்கும் சத்தம் கேட்டது. ராஜாராமய்யர் தமது அப்பியாசத்தை நிறுத்தி ஜன்னல் பக்கமாக வந்து பார்த்தார்.

வாசலில், ஒரு 'ஸ்போர்ட்ஸ் மாடல் கார்' நின்றது. அதில், டிரைவர் ஸ்தானத்தில் ஸ்ரீதரன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அருகில், ஸுஸி அமர்ந்திருந்தாள். அப்போது வீட்டுக்குள்ளிருந்து வேலைக்காரன் வரவே, ஸ்ரீதரன் அவனிடம் தான் ஆபீஸுக்குக் கொண்டு போகும் கைப்பெட்டியைத் தூக்கிக் கொடுத்தான். உடனே, வண்டி விர்ரென்று கிளம்பிப் போய் விட்டது.

ராஜாராமய்யருக்கு இது ஒன்றும் அதிசயம் அளிக்கவில்லை. ஏனென்றால், தீபாவளியின் போது ஸ்ரீதரன் கூட்டிக் கொண்டு வந்த சிநேகிதன் உண்மையில் சிநேகிதி என்பது சீக்கிரத்திலேயே தெரிந்து போயிற்று. தகப்பனாரும் தாயாரும் எவ்வளவு புத்தி சொல்லியும் பயன்படவில்லை. அதைப் பற்றிப் பேச்சு எடுத்தால் ஸ்ரீதரன் உடனே, "நீங்கள் என் சம்மதத்தைக் கேளாமல் பலவந்தமாக ஏன் கல்யாணம் பண்ணி வைத்தீர்கள்? நான் என் இஷ்டம் போல்தான் இருப்பேன்" என்று ஒரே அடியாய் அடித்துவிட்டுப் போய்விடுவான்.

ஸ்ரீதரனை எப்படி நல்ல வழிக்குத் திருப்புவது என்று ராஜாராமய்யர், தங்கம்மாள் இரண்டு பேருக்கும் ஒரே கவலையாயிருந்தது.

ராஜாராமய்யர் முக்கியமாக அதற்காகவே காந்த சக்தி சம்பாதிக்கும் அப்பியாசத்தில் ஈடுபட்டிருந்தார். தங்கம்மாளும் தனக்குத் தெரிந்த வழியில் என்னவெல்லாமோ யோசனை செய்து கொண்டிருந்தாள்.

இன்று சாயங்காலம், ஸ்ரீதரன் வாசலில் நின்றுவிட்டு, வீட்டுக்குள் வராமல் கூடப் போய்விட்டதும், தங்கம்மாள் மேலே ராஜாராமய்யரைத் தேடிக் கொண்டு வந்தாள்.

"ஏன்னா? இப்படி எத்தனை நாளைக்கு இந்தப் பிள்ளையைக் கேள்வி முறையில்லாமே விட்டிருக்கிறது? நீங்களும் ஒரு புருஷாள்னு உட்கார்ந்துண்டு எல்லாத்தியும் பாத்திண்டிருக்கயளே?" என்றாள்.

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே! அவன் அப்பா பிள்ளையாயிருந்தான்னா நான் சொன்னத்தைக் கேட்பான். ஆரம்பத்திலிருந்தே அவனை அம்மா பிள்ளையாய்ப் பண்ணியாச்சு! இப்ப முட்டிண்டு என்ன பிரயோஜனம்?"

"நான் ஒண்ணும் இப்ப முட்டிக்கலை. அப்பவே கூடத்தான் முட்டிண்டேன். கல்கத்தாவிலே நாம் இருந்து வாழ்ந்ததெல்லாம் போதும். குழந்தைக்காவது நம்ம பக்கத்திலே வேலை பண்ணி வைங்கோன்னு சொன்னேன் கேட்டாத்தானே!"

"ஆமாம்; நம்ம பக்கத்திலே உன் பிள்ளைக்கு உத்தியோகம் கொடுக்கிறேன்னு காத்துண்டிருந்தா-நான் வேண்டான்னுட்டேனாக்கும்! உத்தியோகந்தான் போகட்டும்; நம்ம ஊர்ப்பக்கமாப் பார்த்து நீ கல்யாணம் பண்ணிவச்சயே? அது என்ன ஆச்சு?"

"எல்லாம் சரியாத்தான் ஆச்சு. கல்யாணம் பண்ணினதிலே என்ன குறைவாப் போச்சு? நான் ஊருக்குப் போய் மூவாயிரம் ரூபாயோடே அந்தப் பொண்ணை அழைச்சுண்டு வராமல் போனா, என் பெயர் தங்கம்மா இல்லை!"

"குஷாலாய்ப் போய் அழைச்சுண்டு வா! பிள்ளையோடே மல்யுத்தம் பண்ணு!"

"மல்யுத்தம் பண்ணுவானேன்? மாட்டுப் பொண்ணு வந்துட்டா, இவனுக்கு இந்தச் சட்டைக்காரிப் பைத்தியம் கட்டாயம் போயிடும். நீங்க மட்டும் இவன் கிட்ட இப்போ ஒண்ணும் சொல்லி வைக்காதேங்கோ!"

"நான் என்னத்துக்குச் சொல்றேன்? பைத்தியமா?"

"இந்த மாதிரி நான் நரசிங்கபுரத்துக்கு வர்றேன், அங்கே வந்து என்னைப் பார்க்கறதுன்னுட்டு, சம்பு சாஸ்திரிக்கு ஒரு கடுதாசி எழுதுங்கோ."

"அது மட்டும் என்னாலே முடியாது. நீயாச்சு, உன் பிள்ளையாச்சு, மாட்டுப் பொண்ணாச்சு! எப்படியாவது போங்கோ."

ராஜாராமய்யருடைய பிடிவாதத்தை அறிந்திருந்த தங்கம்மாள், அதே தெருவில் குடியிருந்த இன்னொரு தமிழ்நாட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த பையனை அழைத்துக் கொண்டு வந்து சம்பு சாஸ்திரிக்குக் கடிதம் எழுதச் செய்தாள். தான் சீக்கிரத்தில் நரசிங்கபுரத்துக்கு வருவதாகவும் மாட்டுப் பெண்ணைக் கல்கத்தாவுக்குக் கூட்டிக் கொண்டு போகும் உத்தேசம் இருக்கிறதென்றும், ஆனால் சம்பு சாஸ்திரி முதலில் நரசிங்கபுரத்திற்கு வந்து தன்னைப் பார்த்தால் நேரில் எல்லாத் தகவலும் தெரிவிப்பதாகவும் எழுதுவித்துத் தபாலிலும் போட்டாள்.

3. சாவித்திரியின் பயணம்

மேலே சொன்ன தங்கம்மாளின் கடிதத்தைப் படித்தவுடனே தான், சாஸ்திரியார் அவ்வளவு சந்தோஷத்துடன் வந்து, "சாவித்திரி! உன் கலி தீர்ந்துவிட்டது, அம்மா!" என்றார்.

சாவித்திரிக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. திடுக்கிட்டு எழுந்திருந்து, "ஏதாவது கடுதாசி வந்திருக்கா, அப்பா!" என்று கேட்டுக் கொண்டு வந்தாள்.

"ஆமாம்மா! சம்பந்தியம்மாள் நரசிங்கபுரத்துக்குப் பொண்ணைப் பார்க்கிறதுக்கு வர்றாளாம். திரும்பிப் போறபோது கல்கத்தாவுக்கு உன்னைக் கூட்டிண்டு போறாளாம்" என்றார்.

சாவித்திரி நம்ப முடியாத சந்தோஷத்துடன், "நிஜமாகவா, அப்பா!" என்று கூவினாள்.

இந்தச் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுச் சமையலறைக்குப் போனாள் மங்களம்.

"அடி அம்மா! இந்தப் பொண்ணுக்கு விமோசனம் பிறந்துட்டாப்பலேயிருக்குடி!" என்றாள்.

"விமோசனம் பிறந்திருக்கா? அது என்ன?" என்றாள் சொர்ணம்மாள்.

"சம்பந்தியம்மாள் நரசிங்கபுரத்துக்கு வர்றாளாம். இவளைக் கூட்டிண்டு வந்து விடச் சொல்லி எழுதியிருக்காளாம்."

"அந்தப் பெரிய மனுஷிக்கு இங்கே வந்து அழைச்சுண்டு போக முடியலையாக்கும்! உன்னையும் என்னையும் பார்க்க வேண்டியிருக்கலையாக்கும்."

"அது போனால் போகட்டுண்டு, அம்மா! இந்தப் பொண்ண எப்படியாவது புக்காத்துக்குப் போய்ச் சௌக்கியமாயிருந்தால் சரி! அரசமரத்துப் பிள்ளையாரே! சாவித்திரி புக்காத்துக்குப் போனா, உனக்கு 108 கொழக்கட்டை பண்ணி நைவேத்யம் பண்றேன்" என்றாள் மங்களம்.

"அடி அசடே! புக்காத்துக்குப் போய்த் திரும்பி வராதிருந்தா நைவேத்யம் பண்றேன்னு வேண்டிக்கோ. இது வாயையும் கையையும் வச்சிண்டு, அங்கே போய் வாழணுமே! உன் சம்பந்தி இலேசுப்பட்டவள்னு நெனச்சுக்காதே. என்னத்துக்குத் தான் வராமே இவரைக் கூட்டிண்டு வந்து விடச் சொல்லியிருக்கா, தெரியுமா? அப்பத்தானே இந்தப் பிராமணனை இன்னும் நன்னா மொட்டையடிக்கலாம்!..."

இந்தச் சமயத்தில், செவிட்டு வைத்தி, "அக்கா! அம்மா என்ன சொல்றா?" என்று கேட்டான்.

மங்களம் ஜாடை காட்டிக் கொண்டே, "சாவித்திரி புக்காத்துக்குப் போகப் போறாளாண்டா!" என்றாள்.

"சாவித்திரிதானே? ஆமாம்; கதவைச் சாத்திண்டு ஆம்படையானுக்குக் கடுதாசி எழுதறா, எழுதறா, அப்படியே எழுதறா!"

சொர்ணம்மாள், தாலி கட்டுவதுபோல் ஜாடை காட்டிக் கொண்டு, "இல்லேடா! அவள் ஆம்படையானாத்துக்குப் போகப் போறா!" என்றாள்.

"அதான் நானும் சொல்றேன். அப்பவே எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தா, ராஜாத்தியாட்டமா வச்சிண்டிருப்பனே!"

"சீச்சீ! வாயை மூடிக்கோ!" என்றாள் மங்களம்.

கல்கத்தா கடிதத்தை அப்பாவிடமிருந்து வாங்கிப் படித்ததும் சாவித்திரிக்குக் கொஞ்சம் உற்சாகம் குறைந்தது. இத்தனை நாள் கழித்து வந்த இந்தக் கடிதமாவது மாப்பிள்ளை எழுதினதாயிருக்கக் கூடாதா என்று நினைத்தாள். பிறகு, 'படித்த நாகரிக மனுஷராயிருந்தாலும் தாயார் தகப்பனாருக்கு அடங்கிய பிள்ளை. அவர்களை மீறி ஒன்றும் செய்யமாட்டார் போல் இருக்கிறது. நாமும் புக்காத்துக்குப் போனால், மாமனார் மாமியாருக்கு அடங்கி நடந்து அவரைச் சந்தோஷப்படுத்த வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். "அழைத்துப் போகிற உத்தேசம் இருக்கிறது" என்று மட்டும் தங்கம்மாள் எழுதியிருந்தபடியால், அதற்கு ஒன்றும் தடங்கல் இல்லாமல் இருக்கவேண்டுமேயென்று கவலைப்பட்டாள். எப்படியும் தான் இன்று எழுதிய கடிதத்தைத் தபாலில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அதைப் பத்திரமாய் வைத்திருந்து கல்கத்தாவுக்குப் போன பிறகு மாப்பிள்ளையிடம் காட்ட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

சம்பு சாஸ்திரி குறிப்பிட்ட தேதியில் நரசிங்கபுரத்துக்குப் போனார். அவரிடமிருந்து இரண்டு நாளைக்கெல்லாம் சாவித்திரிக்கு ஒரு கடிதம் வந்தது. "சம்பந்தியம்மாள் உன்னைக் கூட்டிக்கொண்டு போவதாக ஏற்பாடாகிவிட்டது. அடுத்த புதன்கிழமை நாள் பார்த்திருக்கிறது. எனக்கு நாகப்பட்டினத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. பார்த்துக்கொண்டு நாலு நாளில் வருகிறேன். அதற்குள், உன்னை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைக்கும்படி சித்தியிடம் சொல்லவும்" என்று எழுதியிருந்தது.

சாவித்திரிக்கு உண்டான குதூகலத்துக்கு அளவேயில்லை. "பகவானே! கடைசியில் உன்மனம் இரங்கிற்றா? என்னுடைய பிரார்த்தனையெல்லாம் பலித்ததா? உண்மையிலேயே என் கலி தீரப்போகிறதா? இந்தச் சனியன்களை விட்டுப் போகப் போகிறேனா! கல்கத்தாவுக்குப் போய் என் பிராண நாதருடன் குடித்தனம் நடத்தப் போகிறேனா? கல்கத்தா பட்டணம் எப்படியிருக்கும்? கும்பகோணத்தையும் நாகப்பட்டினத்தையும் விடப் பெரிசாயிருக்குமோ? அங்கேயெல்லாம் தெரு வீதியில் தந்திக் கம்பியிலே வண்டி ஓடுமாமே? அது எப்படியிருக்குமோ?"... ஒரு பக்கம் இம்மாதிரி எண்ணங்கள்.

'அப்பாவைச் சித்தி, பாட்டி, செவிட்டு வைத்தி இவர்கள் கையில் விட்டுவிட்டுப் போகிறோமே. இவர்கள் அவருடைய பிராணனை வாங்கிவிடுவார்களே' என்ற வேதனை மற்றொரு பக்கம். "இந்தச் சமயத்தில்தானா அப்பாவுக்கு நாகப்பட்டினத்திலே வேலை இருக்க வேண்டும்? கிளம்புவதற்கு முன்னால் நாலு நாளைக்கு அவர் ஆத்தில் இருக்கக் கூடாது? இந்த நாலு நாளும் அவருக்குச் சிசுரூஷை செய்தாலாவது மனத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமே?" என்ற ஏக்கம் இன்னொரு பக்கம்.

சாவித்திரிக்கு அப்போதிருந்த மனோநிலையில் மங்களத்துடன் கூட உறவு கொண்டாடத் தொடங்கினாள். எவ்வளவு சிரமப்பட்டும், சொர்ணம்மாளிடம் மனத்தைத் திறந்து பேச அவளால் முடியவில்லை. ஆனால், மங்களம் தனியாயிருந்த போதெல்லாம் அவளிடம் வந்து, "சித்தி! புக்காத்திலே எப்படியிருக்க வேண்டும்? மாமனார் மாமியாருக்கு எப்படி சிசுரூஷை செய்யவேண்டும், சொல்லு! அவாள் வீட்டிலே ஒரு வேளை பரிசாரகன் இருந்தா, நான் என்ன காரியம் செய்யறது? என்னால் வெறுமனே உட்கார்ந்திருக்க முடியாதே?" என்றெல்லாம் கேட்பாள். அப்புறம், "சித்தி! என்ன இருந்தாலும் உன்னையும் அப்பாவையும் விட்டுட்டுப் போறது எனக்குக் கஷ்டமாய்த்தான் இருக்கு. நான் கல்கத்தாவிலிருந்தாலும் உங்களைத்தான் அடிக்கடி நினைச்சுண்டிருப்பேன், நீ என்னை நினைச்சுக்குவயோ, மாட்டயோ?" என்பாள்.

மங்களத்துக்கும் அந்தச் சமயத்தில் சாவித்திரியிடம் புது அன்பு தோன்றியிருந்தது. தினம் தலைவாரிப் பூ வைத்து, அலங்காரம் எல்லாம் செய்துவிட்டதோடு, மாமியாராத்தில் அப்படியிருக்கவேண்டும், இப்படியிருக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். "ஏதோ உலகத்திலே எல்லாரையும் போலே

சாந்திக் கல்யாணம் என்று பண்ணிப் புக்காத்திலே கொண்டு விட்டுட்டு வர்றத்துக்கு எங்களுக்குக் கொடுத்து வைக்கலை. எப்படியாவது நீ சந்தோஷமாயிருந்தால் சரி" என்று அடிக்கடி கூறினாள். 'நல்ல வேளை! சாந்திக் கல்யாணச் செலவெல்லாம் இல்லாமற்போச்சே' என்ற திருப்தி அவள் மனத்திற்குள் இருந்தது. இதை நினைத்து பெண்ணைப் புக்ககத்துக்கு முதன் முதலில் அனுப்பும் போது செய்ய வேண்டிய சீர்களை அவள் தாராளமாகவே செய்து கொண்டிருந்தாள். பருப்புத் தேங்காய், பக்ஷணம் எல்லாம் பண்ணி வைத்தாள்.

நாலு நாள் கழித்துச் சம்பு சாஸ்திரி வந்தார். மறுநாள் தான் புதன்கிழமை. ஆகையால், பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாக நடந்தன.

புறப்படும் நாள் நெருங்கிவிடவே, சாவித்திரிக்குத் தகப்பனாரைவிட்டுப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அன்றிரவு அவள் சாஸ்திரியுடன் தனியாயிருந்தபோது, "அப்பா! நான் போய்ட்டா, நீங்க தனியாயிருக்கணுமே? எப்படியப்பா இருப்பேள்?" என்றாள்.

"அதற்கு என்ன குழந்தை செய்யலாம்? உலகத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் என்றைக்காவது ஒருநாள் விட்டுப் பிரிய வேண்டியதுதான். நீ எப்படியாவது புக்காத்துக்குப் போய்ச் சௌக்கியமாயிருக்க வேண்டும். அதுதானம்மா முக்கியம்" என்றார் சாஸ்திரி.

புதன்கிழமை காலையில், நல்ல வேளையில் வாசலில் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றது. நல்லான் தான் வண்டி கொண்டு வந்திருந்தான். அவன் முகத்திலும் சந்தோஷம் தாண்டவமாடிற்று.

உள்ளே சாஸ்திரி, "ஊம், ஊம், சீக்கிரம்!" என்று அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். சாமான்கள் ஒவ்வொன்றாய் வண்டியில் கொண்டு வந்து ஏற்றப்பட்டன. சாவித்திரி தன்னால் தவக்கம் ஆகக்கூடாதென்ற எண்ணத்தினால் கையில் கூஜாவை எடுத்துக் கொண்டு, அரைமணி நேரத்திற்கு முன்னாலிருந்து தயாராய் நின்று கொண்டிருந்தாள்.

கடைசியில், சாமான்கள் எல்லாம் வண்டியில் ஏற்றியான பிறகு, புறப்பட வேண்டிய வேளை வந்ததும் சாவித்திரி, சொர்ணம்மாளுக்கும் மங்களத்துக்கும் நமஸ்காரம் செய்தாள். செவிட்டு வைத்திக்குக்கூட, "மாமா! உனக்கும் நமஸ்காரம் பண்றேன்" என்று சொல்லிவிட்டு ஒரு பாதி நமஸ்காரம் பண்ணி எழுந்தாள். வைத்திக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அவன் அசட்டுச் சிரிப்புடன், "எனக்கு என்னத்துக்கு?" என்றான்.

மங்களம், சாவித்திரியின் நெற்றியில் விபூதி இட்டாள். பிறகு எல்லாரும் வாசலுக்கு வந்தார்கள். சாவித்திரி தெரு வீதியில் இறங்கியதும், மறுபடியும் திரும்பிப் பார்த்து "சித்தி! போய்ட்டு வர்றேன்!" என்றாள். மங்களம் "மகராஜியாய்ப் போயிட்டுவா, அம்மா!" என்றாள்.

ரேழியில் கதவோரமாய் நின்ற அவள் தாயார், "போய்ட்டு வாவாம்! நிஜந்தான்னு மறுபடியும் வந்து வைக்கப்போறது!" என்று முணுமுணுத்தாள்.

சாவித்திரியும் சம்பு சாஸ்திரியும் வண்டியில் எறிக் கொண்டார்கள். வண்டியும் 'ஜில் ஜில்' என்ற மாட்டின் சதங்கைச் சத்தத்துடன் கிளம்பிற்று.

சாவித்திரியின் மனோநிலை அப்போது எப்படி இருந்தது? இத்தனை நாளும் வசித்த ஊரை விட்டுப் போகிறோமே என்று அவள் மனத்தில் வருத்தம் உண்டாயிற்றா? நெடுங்கரையை மறுபடி எப்போது பார்ப்போம் என்று ஏங்கினாளா? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையென்பதைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

'அம்மா! கடைசியிலே, இந்தச் சனியன் பிடித்த நெடுங்கரையைவிட்டுக் கிளம்பியாச்சு! இந்த ஊர் முகத்திலேயே இனிமேல் விழிக்க வேண்டாம்' என்று தான் அவள் எண்ணினாள்.

சாவித்திரி! சாவித்திரி! இந்தச் 'சனியன் பிடித்த நெடுங்கரைக்குத் திரும்பிப் போகமாட்டோ மா' என்று ஒரு நாளைக்கு நீ தாபங் கொள்ளப் போகிறாய்! இப்போது நீ வெறுக்கும் நெடுங்கரை அப்போது உன்னை வரவேற்குமா?

4. பனி மறைந்தது

சாவித்திரிக்குச் சம்பு சாஸ்திரி எழுதிய கடிதத்தில் நாகப்பட்டினத்தில் தமக்குக் காரியம் இருப்பதாக எழுதியிருந்ததைப் படித்து, "அது என்ன அவ்வளவு முக்கியமான காரியம்?" என்று சாவித்திரி எண்ணினாளல்லவா? உண்மையிலேயே அவருக்கு மிகவும் முக்கியமான காரியம்?" என்று சாவித்திரி எண்ணினாளல்லவா? உண்மையிலேயே அவருக்கு மிகவும் முக்கியமான காரியம் நாகப்பட்டினத்தில் இருந்தது.

சாஸ்திரியார், சாவித்திரியின் கல்யாணத்துக்காக வாங்கிய கடன் ரூபாய் பத்தாயிரம் வட்டியுடன் சேர்ந்து இப்போது ரூ.13,500 ஆகியிருந்தது. குடமுருட்டி உடைப்பு, அதன் பயனாக ஏற்பட்ட மகசூல் நஷ்டம், மற்ற உபத்திரவங்கள் காரணமாக, வருஷா வருஷம் வட்டி கூடக் கொடுக்க முடியவில்லை. இத்துடன், சாஸ்திரியின் நிலத்திலும் இரண்டு வேலி மண்ணடித்துப் போய்விட்டதென்பது தெரிந்த பிறகு, கடன்காரன் பணத்துக்கு நிர்ப்பந்தப்படுத்த ஆரம்பித்தான். அது ஒன்றும் பயன்படாமல் போகவே, நாகப்பட்டினம் கோர்ட்டில் தாவா செய்து விட்டான்.

மகசூலை விற்றுக் கடனை அடைக்கலாம் என்ற நம்பிக்கை சாஸ்திரிக்கு இப்போது கிடையாது. 'நிலத்தை விற்க வேண்டியதுதான், வேறு வழியில்லை' என்று அவர் எண்ணிக் கொண்டிருந்த சமயம், சம்பந்தியம்மாளை நரசிங்கபுரத்தில் போய்ப் பார்க்கும்படி கல்கத்தாவிலிருந்து கடிதம் வந்தது. அந்தப்படியே சாஸ்திரி நரசிங்கபுரம் போய், சம்பந்தியம்மாளைப் பார்த்தார். அந்த அம்மாள் சாஸ்திரியார் செய்திருக்கும் குற்றங்களுக்கெல்லாம் ஜாபிதா கொடுத்து, அவரைத் திணற அடித்த பிறகு, "என்ன இருந்தாலும், இனிமேல் அவள் எங்காத்துப் பெண். நான் அழைச்சுண்டு போறேன். ஆனால், ஆடி ஆறா மாதம் தீபாவளி முதல் சாந்திக் கல்யாணம் வரையில் செய்ய வேண்டியதுக்கெல்லாம் சேர்த்து, மூவாயிரம் ரூபாய் கையில் கொடுத்துடணும். இல்லாட்டா பெண் உங்காத்திலேயே இருக்க வேண்டியதுதான்" என்று கண்டிப்பாய்ச் சொன்னாள்.

நிலம் விற்பதைப் பற்றி சாஸ்திரிக்கு இருந்த சிறிது சந்தேகமும் இப்போது நிவர்த்தியாகி விட்டது. வேறு வழியில் ரூ.3,000 சம்பாதிக்க முடியாது. மேலும், குழந்தை சாவித்திரி மட்டும் புருஷன் வீட்டுக்குப் போய் விட்டாளானால், அப்புறம் நிலம், நீச்சு, வீடு வாசல் எல்லாம் யாருக்கு வேணும்? தமக்கும் மங்களத்துக்கும் அரை வயிற்றுச் சாப்பாட்டுக்குப் பகவான் படி அளக்காமல் போகிறாரா?

இவ்வாறு எண்ணி சாஸ்திரி நரசிங்கபுரத்திலிருந்து நேரே நாகப்பட்டினத்துக்குப் போனார். கடன் கொடுத்த முதலாளியையும், முதலாளியின் வக்கீலையும் கண்டு பேசினார். கோர்ட்டில் கேஸ் நடத்தி ஏகப்பட்ட பணச் செலவு செய்து கட்டிக்கப் போகிற நிலத்தை இப்போதே கட்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அதிர்ஷ்டவசமாக, அந்த முதலாளியும் வக்கீலும் ஏற்கெனவே சம்பு சாஸ்திரியிடம் மதிப்பு வைத்திருந்தவர்கள். ஆகவே, சம்பு சாஸ்திரி, அடியோடு அழிந்து போவது அவர்களுக்கும் திருப்தியளிப்பதாயில்லை. கடைசியில், சாஸ்திரிக்கு இன்னொரு ரூ.3,000 ரொக்கம் கொடுத்து, வீட்டையும் முக்கால் வேலி நிலத்தையும் ஒதுக்கி விட்டு, பாக்கியையெல்லாம் கடனுக்கு ஈடாக வாங்கிக் கொள்வதென்று முடிவாயிற்று. அந்தப்படியே பத்திரமும் எழுதி முடிந்து, சாஸ்திரியார் ரொக்கம் ரூ.3000-த்துடன் நெடுங்கரைக்குத் திரும்பினார். நாகப்பட்டினத்தில் அவருக்கிருந்த முக்கியமான காரியம் இதுதான்.

ஆனால் இந்த விவரம் எதுவும் சாவித்திரிக்குத் தெரியாது. வீட்டில் வேறு யாருக்கும் தெரியாது. சாஸ்திரியார் "இதைச் சொல்வதற்கு இப்போது என்ன அவசரம்? எப்படியாவது குழந்தை முதலில் சந்தோஷமாய்ப் புக்ககத்துக்குப் போகட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று இருந்தார். ஆகவே, நரசிங்கபுரத்தில், சம்பந்தியம்மாளிடம் சாஸ்திரி ஒரு கவரைக் கொடுத்து. "அம்மா! ரூபாய் மூவாயிரம் மூணு நோட்டாயிருக்கு. பத்திரம்! ஜாக்கிரதையாய் எண்ணி எடுத்து வச்சுக்குங்கோ!" என்று சொன்னபோது சாவித்திரிக்குப் பகீர் என்றது. அப்பா பணம் என்னத்திற்குக் கொடுக்கிறார் என்பதே அவளுக்கு முதலில் புரியவில்லை. "ஏற்கெனவே அப்பாவுக்குக் கடன் உபத்திரவமாயிற்றே! இப்போது இது வேறு சேர்ந்ததா? ஆனால் என்னத்திற்காகப் பணம்?" என்று திகைத்தாள். பிறகு நடந்த சம்பாஷணையின் போது ஒருவாறு அவளுக்கு விஷயம் புரிந்தது.

சாஸ்திரி தங்கம்மாளைப் பார்த்து, "எனக்கு இப்போது சிரமதசை, தொகை என் சக்திக்கு மேற்பட்டதுதான். இருந்தாலும், உங்க மனது கோணப்படாதுன்னு எப்படியோ பணந் தயார்ப்பண்ணிண்டு வந்தேன்" என்றார்.

"சரிதாங்காணும்; ஏதோ பிரமாதமாகச் செய்துட்டதாக நினைச்சுக்க வேண்டாம். ஒவ்வொருத்தர் பொண்களுக்குச் செய்யறதுக்கு இது உறைபோடக் காணாது. அப்படி ஒண்ணும் அதிகமா உம்மை நான் கேட்கலையே. இப்போ, ஒரு சாந்திக் கல்யாணம்னு செய்திருந்தா, ஒரு இரண்டாயிரம் ரூபாய்க்காவது செய்திருக்கணுமோ, வேண்டாமோ?" என்றாள் தங்கம்மா.

"அது கிடக்கட்டும், அம்மா! உலகத்திலே பணந்தானா பெரிய விஷயம்? பணம் வரும், போகும். ஆனா, மனுஷ்யா கிடைக்கமாட்டா. எப்படியோ குழந்தையை உங்க கிட்ட ஒப்படைச்சுட்டேன். சாவித்திரி தாயில்லாப் பெண், அம்மா! இனிமே நீங்கதான் அவளைக் காப்பாத்தணும். உங்க பெண் மாதிரி பார்த்துக்கணும்" என்றார் சாஸ்திரியார்.

உணர்ச்சி மிகுதியினால் சாஸ்திரி உரத்த குரலில் பேசினார். எவ்வளவுக்குச் சத்தம் போட்டு பேசுகிறோமோ, அவ்வளவுக்குத் தங்கம்மாளின் கல்நெஞ்சில் அது பதியும் என்று அவர் எண்ணியது போலிருந்தது.

ஆனால் இது சாவித்திரிக்குப் பிடிக்கவில்லை. 'ஐயோ! என்னத்துக்காக அப்பா இப்படிக் கத்தறார்? செவிட்டு வைத்தியோடு பேசிப்பேசி, அப்பாவுக்குத் தொண்டை பெரிசாய்ப் போயிடுத்து' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

சாஸ்திரி சொன்னதற்குத் தங்கம்மாள், "அதுக்கென்னங்காணும்? பேஷாய்ப் பார்த்துக்கறேன், மூணு பொண்ணோட, சாவித்திரி நாலாவது பொண் என்று நினைச்சுக்கறேன். ஆனா நீர் மாத்திரம் முன்னே மாதிரி கவனிக்காம இருந்திடாதேயும், வளைகாப்பு, சீமந்தம் எதெதுக்கு எப்படி எப்படிச் செய்யணுமோ, அதெல்லாம் சரியாய்ச் செய்யணும்" என்றாள்.

இந்த சம்பாஷணை சாவித்திரியின் மனதைப் புண்படுத்தி விட்டது. ஊரிலிருந்து கிளம்பிய போது இருந்த உற்சாகத்தில் பாதி போய் விட்டது. மாமியாரிடம் எவ்வளவோ பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று அவள் மனதிற்குள் தீர்மானித்திருந்தாள். ஆனால் இப்போது, 'ஐயோ! இப்படிப்பட்ட மாமியாரிடமிருந்தா நாம் குடித்தனம் பண்ணப் போகிறோம்?' என்ற பயம் மட்டுந்தான் மிஞ்சி நின்றது. இத்தகைய மனுஷியிடம் எப்படி பக்தி கொள்ள முடியும்?

மாமியாருடைய அல்பத்தனத்துடன், அப்பாவின் பெருந்தன்மையையும் சாவித்திரி மனதிற்குள் ஒப்பிட்டுப் பார்த்தாள். ஐயோ! தன்னால் அப்பாவுக்கு இத்தனை நாளும் ஏற்பட்ட கஷ்டம், கவலையெல்லாம் போதாதா? இன்னமும் தன்னால் துயரந்தானா? பணம் எப்படிச் சேகரம் பண்ணினாரோ, தெரியலையே? பழைய கடனுக்கு

வட்டி கூடக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாரே! ஒருவேளை...நிலம் விற்பதைப் பற்றிப் பிரஸ்தாபமிருந்ததே! விற்று விட்டாரோ?

நாலு வருஷத்துக்கு முன் சம்பு சாஸ்திரிக்கு ஊரில் இருந்த அந்தஸ்தையும், அவருடைய இப்போதைய நிலைமையையும் சாவித்திரி எண்ணி மனம் உருகினாள். நிலத்தையும் விற்று விட்டால் அப்புறம் குடும்பத்தின் கதி என்ன? சித்தியும் பாட்டியும், "உன்னால் தான் இந்தக் குடித்தனம் பாழாச்சு!" என்று அடிக்கடி இடித்துக் காட்டியபோது கோபம் கோபமாய் வந்ததே! அவர்கள் சொன்னதில் என்ன தவறு?

அப்பாவை - இத்தகைய உத்தம குணமுள்ள அப்பாவை - இவாளெல்லாம் இப்படிக் கஷ்டப்படுத்துகிறார்களே, இது தர்மமா? "இவாளெல்லாம்" - என்ற போது, சாவித்திரி தன் கணவனையும் உட்படுத்தியே எண்ணினாள். அவருக்கு என்னதான் தாயார் தகப்பனாரிடம் பக்தி இருக்கட்டும்; அதற்காக நியாய அநியாயம், ஈவிரக்கம் ஒன்றும் பார்க்க வேண்டாமா? அவருக்கு அவருடைய அப்பா அம்மா எப்படியோ, அப்படித்தானே எனக்கும் என் அப்பா? என் அப்பாவைக் கஷ்டப்படுத்தி, அவருடைய தாயார் தகப்பனாரைத் திருப்தி பண்ண வேண்டுமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?

ஏதோ போனதெல்லாம் போகட்டும்; இனிமேல் அப்பாவுக்குத் தன்னால் எவ்வித கஷ்டமும் உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சாவித்திரி மனதிற்குள் உறுதி செய்துகொண்டாள். தான் மட்டும் ஸ்ரீதரனுடன் பேசிப் பழக ஆரம்பித்து விட்டால், இந்த மாதிரியெல்லாம் ஒரு நாளும் நேராது. ஒரு வேளை, இப்போது கூட அவருக்கு இந்த மாதிரி அம்மா பணங்கேட்டு வாங்குவதெல்லாம் தெரிந்திருக்காது. அது தெரியும்போது கட்டாயம் அம்மாவைக் கோபித்துக் கொள்வார். அப்போது தான் குறுக்கிட்டு, "போனது போகட்டும், விடுங்கள். எங்கப்பா எனக்குச் செய்யாமல் வேறே யாருக்குச் செய்யப் போகிறார்? இனிமேல் அவரைக் கஷ்டப்படுத்தாமலிருந்தால் சரி!" என்று அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சமாதானம் பண்ணி வைக்கவேணும் - சாவித்திரிக்கு இப்படியெல்லாம் யோசனை போயிற்று.

அன்றிரவு, சம்பு சாஸ்திரி சாவித்திரியிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். மாமனார் மாமியாரிடத்திலும், புருஷனிடத்திலும் அவள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார். "குழந்தை! நீ எவ்வளவோ படித்திருக்கிறாய்; கேட்டிருக்கிறாய். புதிதாக உனக்கு நான் ஒன்றும் சொல்லவேண்டாம். இனிமேல் உன் புருஷன் தானம்மா உனக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம். அந்த நாளிலே நமது தேசத்திலிருந்த சீதை, தமயந்தி, சாவித்திரி, முதலிய பதிவிரதா ரத்னங்களைப் போல் நீயும் புருஷன் மனங்கோணாமல் நடந்து கொள்ள வேண்டும். உன் மாமனார் மாமியாரிடத்திலும் பயபக்தியுடன் நடந்துகொண்டு நல்ல பேர் வாங்கவேண்டும். மனுஷ்யர்கள் என்று இருந்தால் குற்றங் குறைகள் எவ்வளவோ இருக்கும். அதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்று ஔவையார் சொல்லியிருக்கிறார். உன்னால், பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் பெருமை வரவேண்டும் அம்மா!" என்று பரிவுடன் சொன்னார்.

அப்பாவுக்குத் தன்னால் நேர்ந்த கஷ்டங்களைப் பற்றி சாவித்திரி கொஞ்சம் பிரஸ்தாபித்தாள். "ஏற்கெனவே கடன் அடைக்க முடியாமலிருந்ததே; இந்த மூவாயிரம் ரூபாயும் சேர்ந்தால் எப்படி அடைக்கிறது? நிலத்தை விற்கும்படியாயிருக்குமோ அப்பா!" - என்று கேட்டாள்.

"அதற்கெல்லாம் நீ கவலைப்படாதே, குழந்தை!" என்றார் சாவித்திரி. ஒரு நிமிஷம் சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, "சொந்தமாவது, நிலமாவது? நாம் கொண்டு வந்தோமா? கொண்டு போகப்போகிறோமா? இந்த உலக வாழ்வைப் புல் நுனிமேல் உள்ள பனித்துளிக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள் நம் பெரியவர்கள். பனிக் காலத்தில்

அதிகாலையில் எழுந்து பார்த்தால், புல்லின் நுனியில் நீர்த்துளி நிற்கும். சூரியோதயம் ஆகும்போது, சூரிய கிரணம் அந்தப் பனித் துளியின்மேல் விழுந்ததும், ஒரு நிமிஷ நேரம் அது பளபளவென்று ஜொலிக்கும். அடுத்த நிமிஷம் இருந்த இடந் தெரியாமல் மறைந்து விடும். அந்தப் பனித்துளியைப் போல் நிலையற்றது இந்த வாழ்க்கை. இப்படிப்பட்ட அநித்யமான மனித ஜன்மம் சாபல்யமடைய வேண்டுமானால், சத்தியத்தைச் சொல்ல வேண்டும், தர்மத்தைச் செய்ய வேண்டும், பகவானை ஸ்மரிக்க வேண்டும். ஆனால் ஸ்திரீகளுக்கோ இந்த சிரமம் ஒன்றும் நம்ம பெரியவாள் வைக்கவில்லை. புருஷன் மனங் கோணாமல் நடந்தால் போதும்; ஸ்திரீகள் வேறு ஒரு தர்மமும் செய்ய வேண்டாம்; பகவானைக் கூட நினைக்க வேண்டாம்" என்று தர்மோபதேசம் செய்தார்.

மறுபடியும், "சாவித்திரி! நீ இனிமேல் என்னைக் கூட மறந்துவிட வேண்டும்! நான் என்னமாயிருக்கிறேனோ, எப்படியிருக்கிறேனோ என்றெல்லாம் நினைத்துக் கொண்டு வருத்தப்படாதே. எனக்கு இனி மேல் உலகத்தில் ஒரு கவலையுமில்லை. நீ பச்சைக் குழந்தையாயிருந்த போது உன்னை என் தலையில் சுமத்திவிட்டு உன் தாயார் போய்விட்டாள். அந்தக் காலத்தில் உன்னை நோய் நொடியில்லாமல் வளர்த்து எடுப்பதற்குக் கவலைப்பட்டேன். பிறகு, உன்னை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமேயென்று கவலைப்பட்டேன். அப்புறம், உன்னைப் புக்ககத்திற்கு அனுப்புவதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். என் தலையில் சுமத்தியிருந்த பாரம் இன்றோடு தீர்ந்தது. இனி மேல் எனக்கு ஒரு கவலையுமில்லை. சந்தோஷமாய் பகவத் பஜனையில் காலத்தைக் கழிப்பேன்" என்றார்.

இப்படியெல்லாம் தர்மோபதேசம் செய்தவருக்கு - வேதாந்த ஞானம் பேசியவருக்கு - மறுநாள் சாவித்திரி ரயிலில் ஏறி உட்கார்ந்ததும், ஏன் அப்படி இருதயம் பதை பதைத்தது?

கல்கத்தாவிலிருந்து கடிதம் வந்தது முதல் ஊருக்குப் போவதில் குதூகலமாயிருந்த சாவித்திரிக்குத்தான் அப்படி ஏன் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது?

இதோ, மணி அடித்து விட்டார்கள். ரயிலும் ஊதியாயிற்று. "குப்" "குப்" என்று புகை விட்டுக் கொண்டு வண்டி நகரத் தொடங்கி விட்டது. "குழந்தை!..." என்றார் சாஸ்திரி. மேலே "போய் வரயா?" என்று கேட்பதற்கு நா எழவில்லை.

"அப்பா! போய் வரேன்! நீங்க சொன்னதையெல்லாம் ஞாபகம் வச்சுண்டு சமத்தாயிருக்கேன். நீங்கள் கவலைப் படாதேங்கோ. கடுதாசி மாத்திரம் போட்டிண்டிருங்கோ!..." இப்படியெல்லாம் ரயில் புறப்படும்போது சொல்லவேண்டுமென்று சாவித்திரி நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் இவற்றில் "அப்பா!..." என்னும் முதல் வார்த்தை ஒன்று தான் வாயிலிருந்து வந்தது.

அந்தப் பட்டப்பகல் வேளையில், திடீரென்று பனி பெய்து உலகத்தை மறைத்தது போல் சாஸ்திரிக்குத் தோன்றிற்று. சாவித்திரி, தங்கம்மாள், ரயில், ரயிலுக்குப் பின்னாலிருந்த ஸ்டேஷன், ஸ்டேஷனுக்கு அப்பாலிருந்த மரங்கள் - எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் மங்கி மறைந்தன. உண்மையில் பனி பெய்யவில்லை, தம் கண்ணில் தளும்பிய ஜலம்தான் அப்படிப் பனிப் படலத்தைப் போல் மறைத்தது என்று சாஸ்திரி உடனே தெரிந்து கொண்டு கண்ணைத் துடைத்துக் கொண்டார். மறுபடி அவர் நிமிர்ந்து பார்த்தபோது, ரயில் வெகுதூரம் போய் விட்டது. வண்டிக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த சாவித்திரியின் முகம் ஒரு விநாடி தெரிந்து, அப்புறம் மறைந்து விட்டது.

5. நல்லானின் கோபம்

சாவித்திரியை ரயிலேற்றி அனுப்பி விட்டுச் சம்பு சாஸ்திரி நெடுங்கரைக்குத் திரும்பி வந்தபோது, அவருடைய வீடு ரகளைப்பட்டுக் கொண்டிருந்தது.

அவர் வருவதற்குச் சற்று முன்னால்தான் நல்லான் வியர்க்க விருவிருக்க விரைவாக நடந்து வந்து அவருடைய வீட்டுக்குள் நுழைந்தான். அப்போது கூடத்தில் உட்கார்ந்து ஏதோ காரியம் செய்து கொண்டிருந்தாள் மங்களம்.

"இது என்ன அம்மா அக்கிரமம்? வயத்தைப் பத்திக்கிட்டு எரியுதே?" என்று நல்லான் அலறினான்.

மங்களத்துக்கு ஒன்றும் புரியவில்லை. நல்லான் எப்போதும் எஜமானுக்கும் குழந்தைக்கும் பரிந்து பேசுவதுதான் வழக்கம். மங்களத்திடம் சில சமயம் அவன் சண்டை பிடிப்பதும் உண்டு. 'பெரியம்மா'வை அதாவது மங்களத்தின் தாயாரை அவனுக்குக் கட்டோ டே பிடிக்காது. 'சொர்ணம்மாள்' என்பதற்குப் பதிலாக 'சொரணை கெட்ட அம்மாள்' என்பான். அவள் வீட்டில் இருக்கும்போது, தாகத்துக்கு மோர்த் தண்ணி கூடக் கேட்க மாட்டான். அப்படிப்பட்டவன் இப்போது வந்து இப்படி அலறியதும், மங்களம் தன்னுடைய தாயார் பேரில் ஏதோ புகார் சொல்லத்தான் வந்திருக்கிறான் என்று எண்ணினாள்.

முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக் கொண்டு "என்னடா அக்கிரமம் நடந்து போச்சு! யார் குடியை யார் கெடுத்திட்டா?" என்று கேட்டாள்.

"குடி கெட்டுத்தானுங்க போச்சு! உங்க குடியும் போச்சு; என் குடியும் போச்சு! நன்செய் புன்செய் பத்து வேலியையும் சாஸனம் பண்ண எப்படித்தான் ஐயாவுக்கு மனசு வந்ததோ தெரியலைங்களே!" என்றான்.

இதைக் கேட்டுக் கொண்டே சொர்ணம்மாள் கையிலே வைத்திருந்த தயிர்ச்சட்டியுடன் அங்கு வந்து, "ஐயையோ! பொண்ணே இதென்னடி அநியாயம்?" என்று ஒரு பெரிய சத்தம் போட்டாள். அவள் கையிலிருந்த தயிர்ச் சட்டி தொப்பென்று கீழே விழுந்து சுக்கு நூறாய் உடைந்தது.

மங்களத்துக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. "என்னடா, நல்லான்? என்ன சொல்கிறாய்?" என்று திகைப்புடன் கேட்டாள்.

"ஆமாங்க; எசமான் நிலத்தையெல்லாம் வித்துட்டாராம்! இனிமேல், அந்த வயல்வெளிப் பக்கம் நான் எப்படிப் போவேனுங்க?" என்று நல்லான் மறுபடி அலறினான்.

சொர்ணம்மாள், "ஐயையோ! குடி முழுகித்தா? - கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுப்பதுபோலே, இந்தப் பிராமணனுக்கு உன்னைக் கொடுத்தேனே? வேறே ஒண்ணும் இல்லாட்டாலும், சோத்துக்குத் துணிக்காவது பஞ்சமில்லைன்னு நினைச்சுண்டிருந்தேனே! - அதுவும் போச்சே! - இப்படியாகும்னு நான் நினைக்கலையே! - மோசம் பண்ணிட்டானே பிராமணன்!" என்று சொல்லிக் கொண்டே, ஒவ்வொரு பேச்சுக்கும் ஒரு தடவை வயிற்றில் அடித்துக் கொண்டாள்.

இதைப் பார்த்ததும் நல்லானுக்கு, "இதென்னடா சனியன்? இவர்களிடம் வந்து சொல்லப் போனோமே?" என்று தோன்றிவிட்டது.

இந்தச் சமயத்தில், ஏற்கெனவே பாதி திறந்திருந்த வாசற் கதவு நன்றாய்த் திறந்தது. சம்பு சாஸ்திரி வாசற்படியண்டை நின்றார்.

"நல்லான்! இது என்ன இது?" என்று உரத்த குரலில் கேட்டார்.

சாஸ்திரியைப் பார்த்ததும் நல்லானுக்கு மறுபடியும் ஆத்திரமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தது. அவன் வாசற்படியண்டை நின்று, கை கூப்பிக் கொண்டு, "ஏன் சாமி! எல்லாரும் சொல்றது நிஜந்தானா, சாமி? பத்து வேலி நிலத்தையும் வித்துட்டீங்கன்னு சொல்றாங்களே? பரம்பரையா வந்த பிதிரார்ச்சித நிலமாச்சே! எப்படி சாமி, உங்களுக்கு மனசு வந்தது?" என்று கதறினான்.

சாஸ்திரி, "நல்லான்! இதென்ன நீ கூட இப்படி ஆரம்பிச்சுட்டே? நிலமாவது, நீச்சாவது? பிறக்கிற போது கொண்டு வந்தமா! போறபோது கொண்டு போகப் போறமா? நம் செயலில் என்ன இருக்கிறது, நல்லான்? ஸ்வாமி கொடுத்தார், ஸ்வாமி எடுத்துண்டார்!" என்றார்.

அதற்கு நல்லான், "இதோ பாருங்க. இனிமே, சாமி - பூதம்னு எங்கிட்ட ஒண்ணும் சொல்லாதீங்க. சாமிக்குக் கண் இருக்குதா? சாமிக்குக் கண் இருந்தா இந்த மாதிரியெல்லாம் நடக்குமா?" என்றான்.

சாஸ்திரி, "நல்லான்! உன் மனசு இப்போ சரியான நிலைமையில் இல்லை. வீட்டுக்குப் போய்விட்டு அப்புறம் சாவகாசமாய் வா!" என்றார்.

நல்லான், "போறேனுங்க. ஆனா, ஒண்ணு மாத்திரம் சொல்லிடறேனுங்க உங்ககிட்ட பட்டிக்காரனாய் வேலை பார்த்துட்டு, இந்த ஊரிலே இன்னொருத்தர்கிட்ட நான் வேலை பார்க்கமாட்டேனுங்க. பட்டணத்திலே என் மச்சான் தோட்ட வேலை பார்த்துக்கிட்டு இருக்கானே, அவன் ரொம்ப நாளாய் என்னைக் கூப்பிட்டுக்கிட்டு இருக்கான். அங்கே போயிடறேனுங்க" என்று சொல்லிவிட்டு விரைவாக நடந்து போனான்.

நல்லான் போனதும் சாஸ்திரி உள்ளே வந்தார். அவரைக் கண்டதும், சொர்ணம்மாள் மறுபடியும் வயிற்றில் அடித்துக் கொள்ள ஆரம்பித்தாள். சாஸ்திரி உடனே கடுமையான குரலில், "நீங்கள்லாம் பேசாம இருக்கப் போறயளா, இல்லாட்டா நான் இப்படியே திரும்பிப் போயிடட்டுமா?" என்றார்.

மங்களம் தாயைப் பிடித்துத் தள்ளியபடி, "நீ உள்ளே போடியம்மா! உனக்கென்னடி வந்தது?" என்றாள். சொர்ணம்மாள் கொல்லைக் கட்டுக்குச் சென்று, முணமுணக்கும் குரலில் பலாக்கணம் பாடி அழத் தொடங்கினாள்.

அவள் போன பிறகு சாஸ்திரி மங்களத்தைப் பார்த்து "இதோ பார், மங்களம்! உன்னைச் சோத்துக்குத் துணிக்கு இல்லாமல் நான் விட்டு விடவில்லை. உங்க அம்மா சொல்றதைக் கேட்டுண்டு நீ வீணா மனதைப் புண் பண்ணிக்காதே. இந்த வீடும் பதினைஞ்சு மாநிலமும் பாக்கியிருக்கு. அதையெல்லாம் உன் பேரிலே எழுதி வைச்சுடறேன், நீ கவலைப்படாதே!" என்றார்.

கோபத்துடன் சாஸ்திரியின் வீட்டிலிருந்து சென்ற நல்லானுக்கு, அன்று சாவித்திரி ஊருக்குக் கிளம்பிய சமயத்தில் நடந்த பேச்சு ஞாபகம் வந்தது. சாவித்திரி வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். இன்னும் சாஸ்திரியார் உட்காரவில்லை. அப்போது நல்லான் மேல் அவள் பார்வை விழுந்தது. "நல்லான்! எசமானை நீதான் ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கணும். அடிக்கடி வீட்டிலே வந்து விசாரிச்சுக்கோ!" என்றாள். "அதெல்லாம் நீங்க கவலைப்படாதீங்க. குழந்தை! கடவுள் நம்ம ஐயாவுக்கு ஒரு குறையும் வைக்கமாட்டாரு" என்று பதில் சொன்னான் நல்லான். அந்தப் பேச்சு இவ்வளவு சீக்கிரம் பொய்யாய்ப் போய்விட்டதே! கடவுள் இப்படிப் பண்ணிவிட்டாரே!

6. கிரகப் பிரவேசம்

ராஜாராமய்யர் மிகவும் கோபமாயிருந்தார். இது என்ன உலகம், இது என்ன வாழ்க்கையென்று அவருக்கு ரொம்பவும் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அவருடைய மனோவசிய சக்தியானது ஸ்ரீதரன் விஷயத்தில் சிறிதும் பயன்படாமற் போனதுதான் அவருடைய கோபத்திற்குக் காரணம்.

மாட்டுப் பொண்ணை அழைத்து வருகிறேன் என்று தங்கம்மாள் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றதிலிருந்து ராஜாராமய்யருக்கு ஸ்ரீதரனைப் பற்றிய கவலை அதிகமாயிற்று. 'அவள் பாட்டுக்கு அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து நிற்கப் போகிறாள்! இவனானால் இந்தச் சட்டைக்காரியை இழுத்துக்கொண்டு அலைகிறானே!' என்பதாக அவருடைய மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. மாட்டுப் பெண் வருவதற்குள் இவனைச் சீர்திருத்தி விடவேண்டும் என்று தீர்மானித்தார்.

ஆகவே, ஒரு நாள் ஸ்ரீதரனை அழைத்துத் தம் எதிரில் நிறுத்திக் கொண்டு, தம்முடைய காந்தக் கண்களின் சக்தியை அவன் பேரில் பிரயோகிக்கத் தொடங்கினார். அவனை விழித்துப் பார்த்த வண்ணம், "ஸ்ரீதரா! உனக்கு இப்போது நல்ல புத்தி வந்து கொண்டிருக்கிறது!..." என்று அவர் ஆரம்பித்ததும், ஸ்ரீதரன் குறுக்கே பேச ஆரம்பித்தான்.

"ஆமாம் அப்பா! எனக்கு புத்தி வந்து கொண்டிருக்கிறது. ஆனால், உங்களுக்குத்தான் புத்தி கெட்டுப் போய் கொண்டிருக்கிறது. நீங்கள் முழிக்கிறதைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. நான் சொல்றதைக் கேளுங்கள். ஸ்பிரிட் மீடியம், மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம் இந்த கண்றாவியையெல்லாம் விட்டுவிடுங்கள். இந்த மாதிரி மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் என்று ஆரம்பித்தவர்கள் கடைசியில் எங்கே போய்ச் சேர்கிறார்கள் தெரியுமா? லூனடிக் அஸைலத்தில்தான். இந்த ஊர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் முக்கால்வாசிப்பேர் ஹிப்னாடிஸம், அப்பியாசம் செய்தவர்கள் தானாம். ஜாக்ரதை!" என்று ஒரு பிரசங்கம் செய்துவிட்டு, ராஜாராமய்யர் பிரமித்து போய் நின்று கொண்டிருக்கையிலேயே வெளியேறினான்.

அதற்குப் பிறகு ராஜாராமய்யர் இரண்டு, மூன்று தடவை ஸ்ரீதரனுக்குத் தர்மோபதேசம் செய்யலாமென்று முயன்றார். ஒன்றும் பயன்படவில்லை. அவன் நின்று காது கொடுத்துக் கேட்டால்தானே?

இதனாலெல்லாம் ராஜாராமய்யரின் மனது ரொம்பவும் குழம்பிப் போய் இருந்தது. அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. அந்தக் கோபத்தை யார் மேல் காட்டுவது என்றும் தெரியவில்லை. கடைசியில் ஹிந்து சமூகத்தின் மேல் காட்டத் தீர்மானித்தார். ஹிந்து சமூகத்திலுள்ள பால்ய விவாகம், வரதக்ஷணை முதலிய வழக்கங்களைப் பலமாகக் கண்டித்துப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுத வேண்டுமென்று முடிவு செய்தார்.

ராஜாராமய்யர் இத்தகைய மனோ நிலையில் இருந்த போதுதான் ஒரு நாள் திடீரென்று தங்கம்மாள் சாவித்திரியை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவர்களைப் பார்த்ததும் ராஜாராமய்யர், "என்ன தங்கம் வருகிறதைப் பத்தித் தகவலே கொடுக்கலையே! ஒரு கடுதாசி போடக் கூடாதா?" என்றார்.

இதற்குள் சாவித்திரி மாமனாரின் அருகில் வந்து நமஸ்காரம் செய்தாள்.

அதைப் பார்த்த ராஜாராமய்யர், "வாடி அம்மா, வா! இந்த வீட்டுக்கு நீ ஒருத்தி தான் பாக்கியாயிருந்தது. வந்துட்டயோல்யோ? எங்களையெல்லாம் பைத்தியமா அடிச்சுட்டான்; உன்னை என்ன பண்ணப் போறானோ!" என்றார்.

தங்கம்மாள், "சரிதான்; வரத்துக்கு முன்னாலேயே அவளை காபரா பண்ணாதேங்கோ! அவர் கிடக்கார்; நீ மேலே மாடிக்குப் போடி, அம்மா!" என்றார்.

தன்னுடைய மாமனார் பெரிய தமாஷ்காரர் என்றும் எப்போதும் வேடிக்கையும் பரிகாசமுமாய்ப் பேசுவார் என்றும் சாவித்திரி கேள்விப்பட்டிருந்தாள். ராஜாராமய்யர் சொன்னதை அந்த மாதிரி பரிகாசம் என்று அவள் நினைத்தாள். வாய்க்குள் சிரித்துக் கொண்டே அவள் மாடிப்படி ஏறிச் சென்றாள்.

ரயில் பிரயாணத்தின் போது கல்கத்தா நெருங்க நெருங்க சாவித்திரியின் உற்சாகம் அதிகமாகிக் கொண்டிருந்தது. தகப்பனாரைப் பிரிந்த வருத்தத்தைக்கூட மறந்து விட்டாள். "ஆச்சு! நாளைக்கு இத்தனை நேரம் அவாளைப் பார்த்து விடுவோம்," "இன்னும் ஒரு ராத்திரிதான் பாக்கி; பொழுது விடிந்தால் அவாளைப் பார்க்கலாம்" என்று இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். மாமியாரிடம் "கல்கத்தா ஸ்டேஷனுக்கு எத்தனை மணிக்கு வண்டி போகும்?" "அங்கிருந்து வீடு எவ்வளவு தூரம்?" "எவ்வளவு நேரத்தில் போகலாம்?" "ஸ்டேஷனுக்கு யாராவது வந்திருப்பாளா?" என்று இம்மாதிரி அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீதரனை முதலில் பார்க்கும் போது என்ன செய்வது எவ்விதம் நடந்து கொள்வது என்று அவள் மனம் சதா யோசனை செய்து கொண்டிருந்தது. முதலில் நாமாகப் பேசக் கூடாது. அவர் தான் பேசுவார். ஏதாவது கேட்பதற்கு நாம் பதில் சொன்னால் போதும் என்று நினைத்தாள். அவர் ஏதாவது கேட்டால்தான் நாம் ஏன் பேச வேண்டும். இரண்டரை வருஷமாய்த் திரும்பிப் பாராமல், போட்ட கடிதங்களுக்குப் பதில் கூடப் போடாமல் இருந்தவரிடம் பேச்சு என்ன வேண்டியிருக்கிறது என்று எண்ணினாள். ஆனால் இந்தக் கோபத்தினால் தான் நாம் பேசாமலிருக்கிறோம் என்பது அவருக்குத் தெரிய வேண்டுமே, வேறு ஏதாவது நினைத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று யோசித்தாள். "நீங்கள் தான் இத்தனை நாளாய் என்னைக் கவனிக்காமல் இருந்து விட்டீர்களே! உங்களோடு நான் பேசவில்லை!" என்று பளிச்சென்று சொல்லிவிட்டு, கை விரல்களினால் 'டூ' இட்டுக் காட்டவேண்டுமென்று தீர்மானித்தாள்.

அருகில் வந்து அவர் தன்னைத் தொட்டு விளையாட முயற்சித்தால் என்ன செய்வது? பேசாமல் நிற்கலாமா, அல்லது திமிறிக் கொண்டு ஓடலாமா என்று சிந்தனை செய்தாள். "இருக்கட்டும், இருக்கட்டும்; ஒரு நாளைக்கு அந்த மாதிரி அவர் விளையாட வரும்போது, அவருடைய கன்னத்தைப் பிடித்து நன்றாய்க் கிள்ளி விட்டுவிடுகிறேன்" என்று கர்வங் கட்டிக் கொண்டாள்.

இப்படியெல்லாம் சாவித்திரி மனோ ராஜ்யத்தில் ஆழ்ந்திருந்தவளாதலால், "நீ மேலே மாடிக்குப் போ, அம்மா!" என்று மாமியார் சொன்னதும், "ஒரு வேளை அவாள் மாடியில் இருக்காளோ?" என்ற எண்ணம் தோன்றிற்று. கால்கள் உற்சாகமாகக் குதித்துக் கொண்டு மாடியின் மீது ஏறின. ஆனால், அவளுடைய நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. மாடியில் உள்ள அறைகளை ஒவ்வொன்றாய்த் திறந்து பார்த்துக் கொண்டு வந்தாள். அவள் எதிர்பார்த்த மனுஷர் இல்லை. கடைசியாக அவள் திறந்த அறையில் ஸ்ரீதரனுடைய படம் ஒன்று எதிரில் மாட்டியிருக்கவே, அந்த அறைக்குள் நுழைந்தாள்.

சுவரில் ஸ்ரீதரனுடைய படங்கள் இன்னும் சில காணப்பட்டன. கோட் ஸ்டாண்டுகளில் அவனுடைய உடுப்புகளும் தொப்பிகளும் தொங்கின. ஒரு சீட்டுக் கட்டு, ஸிகரெட் டப்பா, நெருப்புப் பெட்டி, இவையும் இருந்தன. சாவித்திரி இவற்றையெல்லாம் பார்த்ததும், இதுதான் ஸ்ரீதரனுடைய அறையாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். மேஜையின் மீது சிதறிக் கிடந்த புஸ்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்தாள். இதுவரையில் அப்பாவுக்கு சிசுரூஷை

செய்தது போல், இனி மேல் நாம் தானே இவாளுக்கு எல்லா சிசுரூஷையும் செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டாள்.

ஸிகரெட் டப்பாவும், நெருப்புப் பெட்டியும் சாவித்திரிக்கு அதிக வியப்பையளிக்கவில்லை. ஏனெனில், கல்யாணத்தின் போதே "மாப்பிள்ளை சுருட்டுக் குடிக்கிறாராம்" என்ற பேச்சு அவள் காதில் விழுந்திருந்தது. "இதெல்லாம் டவுன் நாகரிகத்தில் சேர்ந்தது" என்று எண்ணி அவள் மனதை சமாதானம் செய்து கொண்டிருந்தாள். இப்போது ஸிகரெட் டப்பாவைப் பார்த்ததும், ஊரிலே கல்யாணத்தின் போது சொன்னது வாஸ்தவந்தான். அதனால் என்ன மோசம்? நாம் நாளடைவில் சொல்லி சரிப்படுத்திவிடலாம்!" என்று நினைத்தாள்.

பிறகு அறையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு வந்தவள், தற்செயலாக அலமாரி ஒன்றைத் திறந்து பார்த்தாள். அதற்குள் இன்னும் சில புஸ்தகங்கள் இருந்தன. அப்புறம் ஒரு கைப்பெட்டி இருந்தது. கைப்பெட்டியைத் திறந்தாள். திறந்தவுடன், மேலே கிடந்த புகைப்படம் கண்ணுக்குத் தெரிந்தது. ஐயோ! இது என்ன?

சாவித்திரியின் உற்சாகம், குதூகலம் எல்லாம் எங்கே போயிற்று? ஒரு நொடிப்போதில், இவ்வளவு மனோ வேதனை அவளுக்கு எப்படி ஏற்பட்டது?

கண்ணைக்கூடக் கொட்டாமல் சாவித்திரி அந்தப் படத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அது ஒரு வெள்ளைக்காரியின் படம். (வெள்ளைக்காரிக்கும் சட்டைக்காரிக்குமுள்ள வித்தியாசமெல்லாம் அவளுக்கு அப்போது தெரியாது). இந்தப் படம் எதற்காக இவாளுடைய பெட்டிக்குள் இருக்கிறது?

ஏதோ அசுசியான பண்டத்தைத் தொடுவதுபோல், சாவித்திரி அந்தப் படத்தை இடது கை விரலினால் எடுத்து நகர்த்தினாள். அதன் அடியில் இன்னொரு படம் இருந்தது. முகம் அதே வெள்ளைக்காரியின் முகந்தான். ஆனால், இடுப்பில் ஒரு விதமாய் வேஷ்டி கட்டிக்கொண்டு தலையில் குல்லா வைத்துக் கொண்டிருந்தாள். ஐயோ! பயங்கரமே! பார்க்க சகிக்கலையே! – இந்தச் சனி எதற்காக இங்கே இருக்கிறது?

அந்தப் படத்தையும் இடது கையினால் நகர்த்தினால் சாவித்திரி. ஆகா! என்ன தவறு செய்தாள்! முதல் படத்தைப் பார்த்ததுமே பேசாமல் பெட்டியை மூடி விட்டுப் போயிருக்கக் கூடாதா? இரண்டாவது படத்தை நகர்த்தியதும், அடியில் இன்னொரு படம் இருந்தது. அதில், ஸ்ரீதரனும் அந்தச் சட்டைக்காரியும், ஒருவரோடு ஒருவர் இடித்துக்கொண்டு நின்றார்கள்!

சாவித்திரி பெட்டியைத் தடாலென்று மூடினாள். அவள் நெஞ்சை என்னமோ அடைப்பது போலிருந்தது. தொண்டையை யாரோ பிடித்து அமுக்குவது போலிருந்தது. கண்ணில் ஜலம் எங்கிருந்தோ துளித்தது.

அந்த சமயத்தில் கீழே மாடிப்படி ஓரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. தாயாரும் பிள்ளையும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இதென்ன, அம்மா! திடீர்னு வந்துட்டே! தந்தி, கிந்தி ஒன்றும் அடிக்கலையே?"

"தந்தி அடிச்சாத்தான் என்ன? நீ ஸ்டேஷனுக்கு வந்து அம்மாவை அழைச்சுண்டு வரப் போறயாக்கும்?"

"ஏனம்மா அப்படிச் சொல்றே? பேஷா அழைச்சுண்டு வருவேன். இருக்கட்டும்; ஊரிலேயிருந்து எனக்கு என்ன கொண்டு வந்திருக்கே, சொல்லு!" என்றான் ஸ்ரீதரன்.

"மேலே போய்ப் பாரு! என்ன கொண்டு வந்திருக்கேன்னு தெரியும்" என்றாள் தங்கம்மாள்.

"நிஜம்மா ஏதாவது கொண்டு வந்திருக்காயா என்ன?" என்று சொல்லிக் கொண்டு ஸ்ரீதரன் மாடிப் படியில் ஏறினான். தங்கம்மாளும் அவனைத் தொடர்ந்தாள்.

ஸ்ரீதரன் தன்னுடைய அறைக்குள் நுழைந்தபோது, சாவித்திரி ஒரு ஜன்னல் ஓரத்தில் நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் இன்னாளென்று தெரிந்து கொள்ள ஸ்ரீதரனுக்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. தெரிந்ததும் அவனுக்குக் கோபம் அசாத்தியமாய் வந்தது. அம்மா தன்னை ஏமாற்றி விட்டாளென்னும் எண்ணந்தான் முன்னால் நின்றது.

சட்டென்று திரும்பி, பின்னால் வந்த தங்கம்மாளைப் பார்த்து, "இது என்ன நான்சென்ஸ்! இந்தச் சனியனை யார் அழைச்சுண்டு வரச் சொன்னா?..." என்றான்.

"ஆமாண்டாப்பா! இப்ப நான்ஸென்ஸ், கீன்ஸென்ஸ் என்று தான் சொல்லுவே. கொஞ்ச நாள் போனா, நீங்க ரெண்டுபேரும் ஒண்ணாப் போயிடுவயள்; நான் தான் நான்ஸென்ஸா ஆயிடுவேன். என்னமோப்பா! உன் ஆம்படையாளைக் கொண்டு வந்து ஒப்பிச்சுட்டேன். நீயாச்சு, அவளாச்சு!" என்றாள்.

தங்கம்மாள் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது, சாவித்திரி தயக்கத்துடன் நாலு அடி நடந்து வந்து, சற்றுத் தூரத்தில் இருந்தபடியே நமஸ்காரம் செய்தாள்.

ஸ்ரீதரன் அதைக் கவனியாமல், "என்ன அம்மா பேத்தறே? ஆம்படையாளாவது ஒப்பிக்கவாவது? யாரைக் கேட்டுண்டு அழைச்சுண்டு வந்தே? ஓகோ! இதுக்காகத்தான் இவ்வளவு மூடு மந்திரம் பண்ணினே போலிருக்கு! அந்த வேலைத்தனமெல்லாம் எங்கிட்டப் பலிக்காது. ராத்திரியே திருப்பிக்கொண்டு போய் ரயிலேத்திவிட்டு வந்து மறு காரியம் பார்! தெரியுமா?" என்றான்.

"வேண்டாண்டா, ஸ்ரீதரா! அப்படியெல்லாம் சொல்லாதேடா" என்றாள் தங்கம்மாள்.

சாவித்திரி விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

ஸ்ரீதரன், "ரொம்ப சரி! வர போதே, அழுதுண்டு, வந்துட்டயோன்னோ? மூதேவி! பீடை!" என்றான்.

7. அக்னயே ஸ் வாஹா !

சாவித்திரி புக்ககம் போன பிறகு நடுவில் ஒரு பனிக் காலம் வந்து போய்விட்டது. மறுபடியும் மாரிக் காலம் சென்று இன்னொரு பனிக் காலம் வந்தது.

கடந்த நாலு வருஷத்தில், சோழ நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களையும் போல் நெடுங்கரையும் பெரிதும் க்ஷீணமடைந்திருந்தது. நெல் விலை மளமளவென்று குறைந்து போகவே, ஊரில் அநேகம் பேர், 'இனிமேல் கிராமத்தில் உட்கார்ந்திருந்தால் சரிப்படாது' என்று பிழைப்புத் தேடிப் பட்டணங்களுக்குப் புறப்பட்டார்கள்.

இங்கிலீஷ் படித்து விட்டுச் சும்மா இருந்த வாலிபர்கள் உத்தியோகம் தேடுவதற்காகப் போனார்கள். இங்கிலீஷ் படிக்காதவர்கள், ஏதாவது வெற்றிலைப் பாக்குக் கடையாவது வைக்கலாம், இல்லாவிட்டால் காப்பி ஹோட்டலிலாவது வேலை பார்க்கலாம் என்று எண்ணிச் சென்றார்கள்.

இப்படிப் போகாமல் ஊரிலே இருந்தவர்களின் வீடுகளில் தரித்திரம் தாண்டவமாடத் தொடங்கிற்று.

இந்த மாறுதல் சம்பு சாஸ்திரியின் வீட்டிலேதான் மிகவும் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. எப்போதும் நெல் நிறைந்திருக்கும் களஞ்சியத்திலும் குதிர்களிலும், இப்போது அடியில் கிடந்த நெல்லைச் சுரண்டி எடுக்க வேண்டியதாயிருந்தது.

மாட்டுக் கொட்டகை நிறைய மாடுகள் கட்டியிருந்த இடத்தில் இப்போது ஒரு கிழ எருமையும், ஒரு நோஞ்சான் பசுவும் மட்டும் காணப்பட்டன.

தென்னை மரம் உயரம் பிரம்மாண்டமான வைக்கோற் போர் போட்டிருந்த இடத்தில் இப்போது ஓர் ஆள் உயரத்திற்கு நாலு திரை வைக்கோல் கிடந்தது.

நெல் சேர் கட்டுவதற்காக அமைத்திருந்த செங்கல் தளங்களில், இப்போது புல் முளைத்திருந்தது.

ஆனால், குறைவு ஒன்றுமில்லாமல் நிறைந்திருந்த இடம் ஒன்று நெடுங்கரையில் அப்போதும் இல்லாமற் போகவில்லை. அந்த இடம் சம்பு சாஸ்திரியின் உள்ளந்தான். தமது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலைக் குறித்துச் சாஸ்திரி சிறிதும் சிந்திக்கவில்லை. முன்னை விட இப்போது அவருடைய உள்ளத்தில் அதிக அமைதி குடி கொண்டிருந்தது. பகவத் பக்தியில் முன்னைவிட அதிகமாக அவர் மனம் ஈடுபட்டது.

குழந்தை சாவித்ரியைப் பற்றி இடையிடையே நினைவு வரும்போது மட்டும் அவருடைய உள்ளம் சிறிது கலங்கும். ஆனால் உடனே, "குழந்தை புருஷன் வீட்டில் சௌக்கியமாயிருக்கிறாள். நாம் ஏன் கவலைப்படுகிறோம்?" என்று மனத்தைத் தேற்றிக்கொள்வார்.

சாவித்திரி கல்கத்தாவுக்குப்போய் ஐந்தாறு மாதம் வரையில் அடிக்கடி அவளிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. அப்புறம், இரண்டு மாதத்துக்கொரு தரம் வந்தது. இப்போது சில மாதமாய்க் கடிதமே கிடையாது. அதனால் என்ன? கடிதம் வராத வரையில் க்ஷேமமாயிருக்கிறாள் என்றுதானே நினைக்க வேண்டும்? மேலும் இனிமேல் சாவித்திரிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அவளுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? நமக்குத் தான் அவளால் என்ன ஆகவேண்டும்? "இனி உனக்கு மாதா பிதா தெய்வம் எல்லாம் புருஷன் தான்" என்று நாம் தானே உபதேசம் செய்து அனுப்பினோம்? எப்படியாவது குழந்தை சந்தோஷமாயிருந்தால் சரி. கடிதம் போடாமல் போனால் என்ன? – இப்படி எண்ணியிருந்தார் சம்பு சாஸ்திரி.

அன்று தை வெள்ளிக்கிழமை. சாஸ்திரி அம்பிகையின் பூஜைக்குப் புஷ்பம் சேகரித்து வைத்துவிட்டு ஸ்நானம் செய்யக் குளத்துக்குப் போயிருந்தார்.

வாசலில் "தபால்" என்ற சத்தம் கேட்டது. சமையலுள்ளில் கைவேலையாயிருந்த சொர்ணம்மாள், "மங்களம்! மங்களம்! சுருக்கப் போய்த் தபாலை வாங்கிண்டு வா!" என்றாள்.

மங்களம் போய்த் தபாலை வாங்கிக் கொண்டு வந்தாள். வரும்போது வாசற்கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு வந்தாள்.

சொர்ணம்மாள், மங்களம், வைத்தி மூன்று பேரும் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்தார்கள். "வைத்தி! கடுதாசை வாங்கி வாசி!" என்றாள் சொர்ணம்மாள்.

மங்களம், "அடே! சத்தம் போடாமே மெதுவாய் வாசி. உனக்குத்தான் காது செவிடு. எங்களுக்குக் காது கேக்கறது!" என்றாள்.

வைத்தி, "சாவித்திரிதான் போட்டிருக்கா! வேறே யார் போடப் போறா?" என்றான்.

"இப்படி வரிந்து வரிந்து கடுதாசி எழுதறதுக்கு இந்தப் பொண்ணுக்குக் கையைத்தான் வலிக்காதா?" என்றாள் சொர்ணம்மாள்.

வைத்தி வாசிக்கத் தொடங்கினான்:

'மகா-ரா-ரா-ஸ்ரீ அப்பா அவர்களுக்கு, சாவித்திரி அநேக நமஸ்காரம்.

தாங்கள் என்னைக் கைவிட்டு விட்டீர்களா? நான் போட்ட ஒரு கடிதத்திற்காவது பதில் இல்லையே? இங்கு நான் படுகிற கஷ்டம் சகிக்க முடியவில்லை. வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் பண்ணிச் சீர் செய்யவில்லையென்று மாமியார் ரொம்பவும் கோபித்துக் கொள்கிறாள். பிரசவத்திற்கு ஊருக்குப் போ போ என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறாள். தாங்கள் வந்து என்னை உடனே அழைத்துக் கொண்டு போகாவிட்டால் என் பாடு அதோ கதிதான். உங்களுக்குத் துன்பமாகவும் பூமிக்குப் பாரமாகவும் நான் ஏன் பிறந்தேன்?

அப்பா! எனக்கும் நெடுங்கரைக்கு வந்து உங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ரொம்பவும் ஆசையாயிருக்கிறது. சித்தி கையினால் ஒருவேளையாவது சாப்பிட்டால் என் உடம்பு சொஸ்தமாகும். இந்தக் கடிதத்தைத் தந்தியாகப் பாவித்துத் தாங்கள் புறப்பட்டு வந்து என்னை அழைத்துப் போகவேண்டியது. இல்லாவிட்டால் என்னை நீங்கள் மறுபடியும் உயிரோடு பார்ப்பது நிச்சயம் இல்லை.

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள புத்திரி

சாவித்திரி'

"எழுதுகிற வக்கணையைப் பார்த்தயோல்லியோ?" என்றாள் மங்களம்.

"அதுக்குத்தாண்டி அம்மா பொம்மனாட்டிகளுக்குப் படிப்பு உதவாதுன்னு சொல்றது?" என்றாள் சொர்ணம்மாள். பிறகு, வைத்தியைப் பார்த்து "இன்னொரு தடவை வாசிடா!" என்றாள்.

வைத்தி மறுபடி வாசிக்கத் தொடங்கி, "சித்தி கையால் ஒரு வேளையாவது சாப்பிட்டால், என் உடம்பு சொஸ்தமாகும்..." என்று படித்ததும், சொர்ணம்மாள் அவன் கையிலிருந்து கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

"ஆமாண்டி, அம்மா! சித்தி உனக்குப் பொங்கிக் கொட்டத்தான் காத்திண்டிருக்கா!" என்று சொல்லிக் கொண்டே கடிதத்தைக் கிழித்து நெருப்பில் போட்டாள்.

வைத்தி, "ஏம்மா! சாவித்திரி பிள்ளையாண்டிருக்கிறது அத்திம்பேருக்குத் தெரியாதோன்னோ? வந்த கடுதாசையெல்லாம் நீதான் கிழிச்சுக் கிழிச்சு எறிஞ்சுடறயே" என்றான்.

"சீச்சீ! வாயைப் பொத்திக்கோடா, இரையாதேடா!" என்றாள் சொர்ணம்மாள். பிறகு, "என்னமோ, நினைச்சுண்டா, எனக்கு வயத்தை பத்திண்டுதான் எரியறது. என் பொண் வயத்திலே ஒரு பிள்ளைக் குழந்தைன்னு பிறந்திருந்தா, இப்படியெல்லாம் ஆயிருக்குமா?" என்று பிரலாபிக்கத் தொடங்கினாள்.

இந்தப் பேச்சுப் பிடிக்காத மங்களம், "அது இருக்கட்டண்டி, அம்மா! நீ பாட்டுக்கு இந்த மாதிரி பண்ணிண்டிருக்கயே? அவாளுக்குத் தெரிஞ்சு போய்ட்டா என்ன பண்றது?" என்றாள்.

"ஆகா! வேணும்னாப் பொண்ணைப் பிரசவத்துக்கு அழைச்சுண்டு வந்து பத்தியம் வடிச்சுக் கொட்டேன். நானா வேண்டாங்கறேன்! பணந்தான் இங்கே கிடந்து இறையறது..."

"அதுக்குச் சொல்லலேடி, அம்மா!..."

"பின்னே, எதுக்குச் சொல்றே? அடி போடி பைத்தியமே! பணச் செலவைப் பார்க்காமே, அழைச்சுண்டுதான் வந்து, ராப்பகலா உழைச்சுக் கொட்டறேன்னு வச்சுக்கோ - அந்தப் பொண்ணுக்கு ஏதாவது தலையைக் கிலையை வலிச்சா, ஊரிலே நாலு பேர் என்னடி சொல்வா? நீ வேணும்னு ஏதோ செய்துட்டேன்னுதானேடி சொல்வா?"

"நான் ஒண்ணு கேட்டா, நீ ஒண்ணு சொல்றயே, அம்மா! அவாள் ஆத்திலே இருக்கிறபோது கடுதாசி, கிடுதாசி வந்துட்டா என்ன பண்றதுன்னுட்டுன்னா கேக்கறேன்? இல்லை, கடுதாசிக்குப் பதில் வல்லையேன்னு ஒரு தந்தி அடிச்சு வச்சாள்னு வச்சுக்கோ, அப்போ என்ன செய்யறது?"

"அதுக்கெல்லாம் நான் யோசனை பண்ணி வச்சிருக்கேன்; நீ பேசாமே இரு!" என்றாள் மங்களத்தின் தாயார்.

வழக்கம் போல் அன்று சாஸ்திரி பூஜை செய்து முடியும் சமயத்தில், மங்களமும் அவள் தாயாரும் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு, தீர்த்தம் வாங்கிக் கொண்டார்கள். "மங்களம்! இன்று தை வெள்ளிக்கிழமையாச்சே! நைவேத்யத்துக்கு ஏன் வடை பாயஸம் பண்ணலை? வெறும் அன்னம் மட்டும் வச்சுட்டே?"" என்றார் சாஸ்திரி.

மங்களம் பதில் சொல்வதற்குள், சொர்ணம்மாள், "அவள் என்ன பண்ணுவள்? நானும் பேசப்படாது பேசப்படாதுன்னு பாத்துண்டிருக்கேன். வடை பாயஸம் பண்ணறதுன்னா இலேசாவா இருக்கு? வெல்லம் வேண்டாமா? பயத்தம் பருப்பு வேண்டாமா? இதெல்லாம் வாங்கறத்துக்குப் பணத்துக்கு எங்கே போறது? மாதம் பிறந்ததும் ரூபாயை எண்ணிக் கொடுக்கறாப்பலே பேசியாயிடறது! இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த வெறும் அன்னத்துக்கே ஆபத்து வந்துடும்போல் இருக்கு! ஆனாலும் இப்படி மூக்கைப் புடிச்சுண்டு மணியை ஆட்டிண்டு இருந்தாக்கே, காலட்சேபம் எப்படி நடக்கும்?" என்று மூச்சு விடாமல் பேசினாள்.

"நீங்க என்னத்துக்கு அதுக்காகக் கவலைப்படறேள்? இத்தனை நாளும் காப்பாத்தின ராமன் இன்னமும் காப்பாத்துவன்" என்றார் சாஸ்திரி.

"ஆமாமாம்; 'ராமா ராமா'ன்னு சொல்லிச் சொல்லித்தான் இந்தக் குடித்தனம் இப்படிப் பாலாப் போச்சு. இப்பவாவது நான் சொல்றதைக் கேளுங்கோ. சென்னைப் பட்டணத்திலே எவ்வளவோ பேர் பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கிறாளாம். நீங்களும் போய் ஏதாவது சம்பாதிக்கிற வழியைப் பாருங்கோ!"

சாஸ்திரிக்குத் தம் மாமியாரிடம் விசுவாசமோ மரியாதையோ அதிகம் கிடையாது. மங்களத்தின் தாயார் என்பதற்காகத்தான் அவள் வீட்டில் இருப்பதைச் சகித்துக் கொண்டிருந்தார். ஆனால், இப்போது அவள் சொன்ன வார்த்தை அம்பிகையின் வாக்கு என்றே அவருக்குத் தோன்றிற்று. ஏற்கெனவே, அவருடைய மனம் அமைதி இழந்திருந்தது. எங்கேயாவது யாத்திரை போகவேண்டுமென்று எண்ணியிருந்தார்.

இப்போது, சொர்ணம்மாள் இப்படிச் சொன்னதும், அவருடைய மனத்திலும் அதே விருப்பம் இருந்தபடியால், "அதற்கென்ன? அப்படியே செய்துட்டாப் போச்சு! ஆனால், மங்களம் இங்கே தனியாயிருக்கவேணுமேன்னுதான் யோசிக்கிறேன்" என்றார்.

அதற்குச் சொர்ணம்மாள், "மங்களத்தைப் பத்தி நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். நான் அவளை என்னோடே ஊருக்கு அழைச்சுண்டு போறேன். கொஞ்ச நாளைக்காவது அவள் கஷ்டப்படாமே எங்களோடே இருக்கட்டும்" என்றாள்.

"மங்களத்தை நீங்க பாத்துக்கறதாயிருந்தா எனக்கென்ன கவலை? ஜாக்கிரதையாய் அழைச்சுண்டு போய் வச்சுக்குங்கோ! நான் நாளைக்கே கிளம்பறேன்" என்றார் சாஸ்திரி.

"பட்டணத்திலே நாலு பெரிய மனுஷாள் வீட்டிலே பாட்டுச் சொல்லிக் கொடுக்கறதுன்னு ஏற்பட்டு, குடித்தனம் போடலாம்னு தோணினாக் கடுதாசி போடுங்கோ; புறப்பட்டு வந்து சேரறோம்."

"அதுக்கென்ன, அப்படியே செய்றேன்" என்றார் சாஸ்திரி. ஆனால், அவர் மனத்தில் மட்டும் சொரேல் என்றது. காசிக்கு போயும் பாவம் தொலையவில்லை என்பார்களே, அந்த மாதிரி பட்டணத்துக்குப் போன அப்புறமும் இவர்களுடன் வாழவேண்டுமா என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார். 'நம் செயலில் என்ன இருக்கிறது? பகவானுடைய சித்தப்படி நடக்கட்டும்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

8. கோட்டை இடிந்தது

கல்கத்தாவில் ஸ்ரீதரனுடைய வீட்டில் ராஜாராமய்யர் தம்முடைய வீட்டில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். வீட்டின் பின்புறத்திலிருந்து 'லொக்கு லொக்கு' என்று இருமுகிற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது, ராஜாராமய்யரின் கவனம் பத்திரிகையில் செல்லவில்லை. "தங்கம்; தங்கம்!" என்று கூப்பிட்டார்.

"ஏன் கூப்பிட்டேள்?" என்று கேட்டுக் கொண்டே தங்கம் அறைக்குள் வந்தாள்.

"ஏண்டி! இந்தப் பொண்ணு இப்படி வாய் ஓயாமல் இருமிண்டிருக்கே! பிள்ளைத்தாச்சிப் பொண்ணை இப்படிக் கவனிக்காம வச்சுண்டிருந்தா, ஏதாவது இசை கேடா முடியப்போறதேடி!" என்றார் ராஜாராமய்யர்.

"இதுக்கு நான் என்ன பண்ணுவேன்? அந்த எழவு, சம்பந்திப் பிராம்மணன் வந்து பொண்ணை அழைச்சுண்டு போனான்னா தேவலை? உலகத்திலே ஒரு தகப்பனும் இப்படி இருக்கமாட்டான். இந்தப் பொண்ணு பத்து நாளைக்கு ஒரு கடுதாசி போடறதிலே குறைச்சலில்லை. ஒண்ணுக்காவது பதில் கிடையாதாம்.

"அங்கே அவருக்கு என்ன தொல்லையோ, என்னமோ?"

"என்ன தொல்லை வந்துடுத்து, உலகத்திலே இல்லாத தொல்லை? பணச்செலவுக்குச் சோம்பிண்டுதான் இப்படி வாயை மூடிண்டு இருக்கார்! வீட்டிலே இரண்டு லங்கிணிகள் இருக்காளே, அவா போதனையாயிருந்தாலும் இருக்கும்."

"சரி, அதுக்காக நாம் என்ன பண்றதுங்கறே?"

"நாக்பூர்லேருந்து செல்லத்தை வேறே இங்கே பிரசவத்துக்கு அனுப்பப் போறாளாம்! இரண்டு பிள்ளைத்தாச்சிகளை வைச்சிண்டு நான் என்ன பண்றது? சாஸ்திரத்துக்கும் விரோதம். இந்தப் பொண்ணானா, என்னை ரயிலேத்தி விட்டுடுங்கோ, நான் ஊருக்குப் போறேன்னு சொல்லிண்டிருக்கா, அனுப்பிச்சுடலாமான்னு பார்க்கறேன்."

"என்னடி இது? நிஜமா தானே போறேன்னு சொல்றாளா?"

"நிஜமா வேறே, அப்புறம் பொய்யா வேறயா? உங்களோட எழவு, பொய் சொல்லி இப்ப எனக்கு என்ன ஆகணும்?"

"கோவிச்சுக்காதேடி! அந்தப் பொண்ணு தைரியமாய்ப் போறேன்னு சொன்னா, திவ்யமாப் போகச் சொல்லு, அது ரொம்பத் தேவலை. இங்கே இருந்தா நீங்க ரெண்டு பேருமாச் சேர்ந்து அவளைக் கொன்னே விடுவயள். குரங்கு கையிலே பூமாலையாட்டமா, உன் கையிலும், உன் பிள்ளை கையிலும் ஆப்புட்டுண்டாளே பாவம்! பெண்டாட்டியாம், பிள்ளையாம்! தூத்தேரி!" என்று சொல்லிக் கொண்டே ராஜாராமய்யர் எழுந்திருந்து கையிலிருந்த பத்திரிகையைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டுவிட்டு வெளிக் கிளம்பிச் சென்றார்.

தங்கம்மாள் அங்கிருந்து நேரே பின்கட்டுக்குப் போனாள். அங்கே அடிக்கடி இருமிக் கொண்டே, இரும்பு உரலில் மிளகாய்ப் பொடி இடித்துக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

"ஏண்டி அம்மா, என்னத்திற்காக இப்படி வாய் ஓயாமே இருமறே? வேணும்னு இருமறாப்பலேன்னா இருக்கு?" என்றாள் தங்கம்மாள்.

"இல்லேம்மா! ஏற்கனவே, இருமிண்டிருக்கோன்னோ? ஏன் மிளகாய்ப் பொடி இடிக்கலைன்னு கேட்டேளேன்னு இடிச்சேன். மிளகாய்க் காரத்தினாலே ஜாஸ்தியா இருமறது."

"அப்படி என் மேலே பழியைப் போடு. இஷ்டம் இல்லைன்னா, முடியாதுன்னுட்டுப் போயேன். என்னத்துக்காகப் பொய் சாக்குப் போக்கெல்லாம் சொல்றே?"

"பொய் இல்லேம்மா, இருமி இருமி மாரெல்லாம் வலிக்கிறதம்மா, தலையைக் கூடச் சுத்தறது."

"இப்படி வெறுமனே உடம்பு உடம்புன்னு என் பிராணனை வாங்காதே! சாயங்காலம் அழைச்சுண்டு போய் ரயில்லே ஏத்தி விட்டுடறேன்; பேசாமே பொறந்தாத்துக்குப் போய்ச் சேரு."

"பொறந்தகம் சவரணையாயிருந்தா நான் ஏன் அம்மா இப்படி இருக்கேன்? போட்ட கடுதாசி ஒண்ணுக்காவது தான் அப்பா பதிலே போடலையே? அது தான் நீங்க பரிகாசம் பண்றயள்."

"பரிகாசமில்லேடி! உன்னோடு வந்து நான் பரிகாசம் பண்றேனாக்கும்? நான் கூடச் சொல்லலே. எல்லாம் உன் மாமனார் உத்தரவு! நீ லொக்கு லொக்குனு இருமறது அவருக்குச் சகிக்கவில்லையாம். இன்னி ராத்திரியே ரயில் ஏத்தி அனுப்பிவிடச் சொல்கிறார். நகை நட்டுன்னு ஒண்ணும் எடுத்துண்டு போகப்படாது. பிழைச்சுக் கிடந்து வந்தால் பூட்டிக்கலாம். மாத்திக் கட்டிக்கறதற்கு ஒரு புடவையை எடுத்துண்டு கிளம்பறத்துக்குத் தயாராயிரு"

இதைக் கேட்டதும் சாவித்திரியின் முகத்தில் வியப்பும் துயரமும் ஒருங்கே தோன்றின. "என்ன அம்மா! நிஜமா, மாமாவா என்னைத் தனியா ரயிலேத்திவிடச் சொன்னார்?" என்றாள்.

"இதென்னடி எழவு! எல்லாருக்கும் என்னைப் பார்த்தா பொய் சொல்றவ மாதிரி தோணறாப்பலே இருக்கே!" என்றாள் தங்கம்மாள்.

"இல்லை, அம்மா! அவர் ஒண்டிக்காவது என் பேரிலே கொஞ்சம் இரக்கம் இருந்ததுன்னு நினைச்சுண்டிருந்தேன். அதனாலே கேட்டேன்" என்று சாவித்திரி சொன்னபோது அவள் குரலில் துயரமும் கோபமும் கலந்திருந்தன.

தங்கம்மாள் உடனே ஆங்காரமான குரலில், "ஓகோ! அப்படியா நினைச்சுண்டிருக்கே மனஸிலே! மாமனார் மகராஜன், மாமியார் மூதேவின்னு நினைச்சுண்டிருக்கயாக்கும்! அதான் ஸ்வாமி உன்னை இந்த நிலைமையிலே வச்சிருக்கார். இல்லாட்டா, உலகத்திலேயெல்லாம் ஆம்படையான் பொண்டாட்டின்னு சவரணையாயில்லையோ? அவன் ஏன் உன் மூஞ்சியைக்கூடப் பார்க்கப் புடிக்கல்லே என்கிறான்? உன்னைத் தாலி கட்டினதிலேயிருந்து சனியன் புடிச்சுதடிம்மா, புடிச்சுது!" என்றாள்.

நெடுங்கரையிலிருந்து சாவித்திரி கல்கத்தாவுக்குக் கிளம்பி வந்தபோது என்னவெல்லாமோ ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டு வந்தாள். அந்தக் கோட்டை சென்ற இரண்டு வருஷ காலத்தில் ரொம்பவும் இடிந்து சிதைந்து போயிருந்தது. இப்போது அது அஸ்திவாரம் உள்படப் பெயர்ந்து விழுந்து மண்ணோடு மண்ணாயிற்று!

சாவித்திரி புருஷன் வீட்டில் கிருகப் பிரவேசம் செய்த அன்றே அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் பார்த்தோம். அந்த வரவேற்பு அவளுக்கு அளவற்ற ஏமாற்றத்தையும் துயரத்தையும் அளித்தது. ஆனாலும், அவள் அடியோடு தைரியத்தை இழந்துவிடவில்லை. தன்னுடைய நடத்தையினால் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடலாமென்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

மாமியார், மாமனார், புருஷன் - இந்த மூன்று பேருடைய பிரியத்தையும் எப்படியாவது சம்பாதித்து விட வேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டு சாவித்திரி புக்கத்தில் தன் வாழ்க்கையை ஆரம்பித்தாள். ஐயோ! இது எவ்வளவு அசாத்தியமான -

ஒன்றோடொன்று முரண்பட்ட - காரியம் என்பது அந்தப் பேதைப் பெண்ணுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்த வீட்டில் மாமியார் தான் முக்கியமானவள் என்பதை சாவித்திரி முதலிலேயே அறிந்து கொண்டாள். எனவே, அவளுடைய பிரியத்தைச் சம்பாதிப்பதிலேயே அதிகமாகக் கவனம் செலுத்தினாள். வீட்டுக் காரியங்களைச் சரிவரச் செய்வதிலும், மாமியாருக்குச் சுசூரூஷை புரிவதிலும் முழு மனத்துடன் ஈடுபட்டாள்.

இதனால், ஆரம்பத்தில் சில நாள் வரை மாமியாரின் பிரியத்தைச் சம்பாதித்துவிட்டதாகக் கூட அவளுக்குத் தோன்றிற்று. ஆனால், இது வெறும் பிரமை என்பது சீக்கிரத்திலேயே தெரிந்தது.

சாவித்திரி எவ்வளவுதான் பணிவாயிருக்கட்டும், சிசுரூஷை செய்யட்டுமே? என்ன பிரயோஜனம்? அவள் தகப்பனார் எதற்காக இப்படி அச்சுப்பிச்சாயிருக்க வேண்டும்? உலகத்திலே எல்லாத் தகப்பனார்களையும் போல் பெண்ணுக்குச் சவரணையாய் சீர் செனத்தி ஏன் செய்யவில்லை? - இதைப்பற்றித் தங்கம்மாளின் குறை தீராத குறையாயிருந்தது.

"நெடுங்கரைப் பட்டிக்காட்டிலே போய்க் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு அப்பவே பிள்ளையாண்டான் முட்டிண்டான். நான் தான் பிடிவாதமாகக் கல்யாணத்தைப் பண்ணி வைச்சேன். அந்த நன்னி எந்த நாய்களுக்காவது இருக்கோ? - என்னெல்லாம் ஊர் சிரிக்க அடிச்சுட்டான் பிராமணன்! பறையனையெல்லாம் வீட்டுக்குள்ளே அழைச்சுண்டு வந்து - ஊரிலே எல்லோரும் சாதியைவிட்டுத் தள்ளிவைச்சு - ஐயையோ! இந்த அவமானத்துக்காகவே ஊர்ப் பக்கம் இத்தனை நாளாய் நான் தலை காட்டலை! - அப்புறம், போனாப் போறது, தகப்பன் பைத்தியமா இருந்தா, பொண்ணு என்ன பண்ணும்னு மனசு இரங்கிப் போய் அழைச்சுண்டு வந்தேன். அப்படியாவது என்னடி அம்மா வந்தது? - கொஞ்சம் வாயைத் திறந்தால் போரும், என் பிள்ளைக்குப் பெண் கொடுக்க நான் நீ என்று ஓடி வருவா. ஏதடா, அப்படியெல்லாம் பண்ணாதிருக்காளேன்னு யாருக்காவது நன்னி விசுவாசம் இருக்கோ? - ராங்கியிலே குறைச்சலில்லை, ராங்கி!" என்று தங்கம்மாள் இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பாள்.

சாவித்திரியிடம் இந்த ஒரு குறை உண்டு என்பதை நாம் முன்னமே பார்த்திருக்கிறோம். அவள் ரோஸக்காரி; கொஞ்சம் வாய் அதிகம். அதிலும் அவளுடைய தகப்பனாரைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னால் அவளுக்குப் பொறுக்கவே பொறுக்காது. மாமியார் ஏசிக்காட்டுவதையெல்லாம் சகித்துச் சகித்துப் பார்ப்பாள். கடைசியில், சகிக்க முடியாமல் போய், "என்னை என்ன வேணாலும் சொல்லுங்கோ, அம்மா! எங்க அப்பாவை ஒண்ணும் சொல்லாதேங்கோ. அவர் மாதிரி எல்லாரும் இருந்தாப் போரும். அவர் எனக்குச் செய்தாப்பலே எல்லாரும் அவாவா பொண்ணுக்குச் செய்தால் போரும்" என்று ஏதாவது சொல்லி வைப்பாள். இந்த மாதிரி, பேச்சு வளரும். இதனால், போகப் போக, தங்கம்மாளுக்கு மாட்டுப்பெண் பேரில் எரிச்சல் அதிகமாகிக் கொண்டு வந்தது. இந்த எரிச்சலை அதிகமாக்கும்படியான இரண்டொரு சந்தர்ப்பங்களும் ஸ்ரீதரனால் ஏற்பட்டன.

9. அநாதை க் கடிதம்

இந்த இரண்டு வருஷ காலத்தில் சாவித்திரியின் விஷயமாக ஸ்ரீதரனுடைய மனோபாவம் இரண்டு மூன்று தடவை மாறுதல் அடைந்துவிட்டது.

ஆரம்பத்தில் கொஞ்ச நாள், தன்னைக் கேட்காமல் தங்கம்மாள் அவளை அழைத்துக் கொண்டு வந்த காரணத்தினால் அவனுக்கு வெறுப்பும் கோபமுமாயிருந்தது. போகப் போக, "சரிதான்; இந்தப் பிராரப்தத்தைக் கட்டிக் கொண்டுதான் மாரடித்தாக வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் நமக்கென்ன கஷ்டம் வந்தது? அவள் பாட்டுக்கு வீட்டில் அம்மாவுக்கு ஒத்தாசையாயிருந்து விட்டுப் போகிறாள்" என்று ஒரு மாதிரி முடிவுக்கு வந்திருந்தான்.

சில நாளைக்கெல்லாம் சாவித்திரியிடம் அவனுக்கு கொஞ்சம் சிரத்தை உண்டாகத் தொடங்கிற்று. சிரத்தை உண்டானதும், அவளைத் தன் தாயார் படுத்துகிற கஷ்டத்தைப் பார்த்து இரக்கமும் ஏற்பட்டது. ஸ்ரீதரனுடைய இரக்கம் சாவித்திரிக்கு ஆபத்தாய் முடிந்தது.

ஒரு தடவை சாவித்திரி கஷ்டமான காரியம் செய்வதைப் பார்த்து, ஸ்ரீதரன் அம்மாவிடம், "ஏனம்மா இந்த வேலையெல்லாம் அவளைச் செய்யச் சொல்கிறாய்?" என்றான். தங்கம்மாளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "ஆமாண்டாப்பா, உன் ஆம்படையாள் காரியம் செய்யலாமோ? தேஞ்சுன்னா போயிடுவள்? நீ வேணா பூட்டி வைச்சுட்டுப்போ! இல்லாட்டா, பின்னோட அழைச்சுண்டு போயிடு" என்று கத்தினாள். அவன் வெளியே போன பிறகு, சாவித்திரியிடம், "ஏண்டி பொண்ணே! ஆம்படையானிடம் கோழி சொல்ல ஆரம்பிச்சுட்டயோல்லியோ? நீ காரியம் செய்யலாமோடி? மிராசுதார் பொண்ணாச்சே! போய் மெத்தையை விரிச்சுப் போட்டுண்டு படுத்துக்கோ! நான் தான் ஒத்தி இருக்கேனே இந்த வீட்டிலே காரியம் செய்யறதற்கு!..." என்று சரமாரியாய்ப் பொழியத் தொடங்கினாள்.

இம்மாதிரி சாவித்திரிக்கு ஸ்ரீதரன் பரிந்து பேசிய ஒவ்வொரு தடவையும் அவளுக்கு அதனால் கஷ்டமே நேர்ந்தது. ஒரு நாள் சாவித்திரி மாவு இடித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீதரன் பார்த்துவிட்டான். "உன்னை யார் மாவு இடிக்கச் சொன்னது? வீட்டிலே வேலைக்காரியில்லையா?" என்று ஸ்ரீதரன் கோபமாய்க் கேட்டான். சாவித்திரி, அவனுடைய கோபத்தைத் தணிக்கும் நோக்கத்துடன், "அம்மாதான் இடிக்கச் சொன்னார்" என்று சொல்லி விட்டாள். ஸ்ரீதரன் அம்மாவிடம் போய், "இதென்ன அம்மா நான்ஸென்ஸ்? இவளை என்னத்துக்காக மாவு இடிக்கச் சொன்னாய்?" என்று கேட்டான். "அப்படிச் சொல்லு தகடிகை!" என்றாள் தங்கம்மாள். "நான் என்னடா அப்பா சொன்னேன்! கொஞ்ச நாள் போனா, ஆம்படையானும் பொண்டாட்டியும் ஒண்ணாப் போயிடுவயள்; நான் தான் நான்ஸென்ஸாப் போயிடுவேன்னு சொன்னேனோ இல்லையோ? என் வாக்குப் பலிச்சுதா?" என்று கூச்சலிட்டாள். பிறகு, சாவித்திரியைக் கூப்பிட்டு, "ஏண்டி பொண்ணே! நானாடி உன்னை மாவு இடிக்கச் சொன்னேன்; என் மூஞ்சியைப் பார்த்துச் சொல்லடி!" என்று கேட்டாள். சாவித்திரி பயந்துபோய்ப் பேசாமல் இருந்தாள். பார்த்தயோல்லியோடா கள்ள முழி முழிக்கிறதை!" என்றாள் தங்கம்மாள். ஸ்ரீதரனுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. "ஏண்டி! பொய்யா சொன்னே?" என்று சாவித்திரியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்துவிட்டுப் போய்விட்டான்.

சாவித்திரி அழுதுகொண்டே மாவு இடிக்கத் தொடங்கினாள். தங்கம்மாள், "என் பிள்ளைக்கும் எனக்கும் ஆகாமலடிக்க வந்துட்டயாடி அம்மா, மகராஜி! என்ன சொக்குப்

பொடி போட்டிருக்கயோ, என்ன மருந்து இட்டிருக்கயோ, நான் என்னத்தைக் கண்டேன்!" என்று புலம்பத் தொடங்கினாள்.

இந்த நாளில் சாவித்திரி சரியான வழியில் முயற்சி செய்திருந்தால் ஒருவேளை ஸ்ரீதரனுடைய அன்பைக் கூடப் பெற்றிருக்கலாம். ஆனால், அந்தச் சரியான வழி அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. மாமியாரைத் திருப்தி செய்வது தான் கணவனைத் திருப்தி செய்யும் வழி என்று அவள் நினைத்தாள். அவன் பகலில் எப்போது வீட்டுக்கு வந்தாலும் அவள் அடுப்பங்கரையில் ஏதாவது காரியம் செய்து கொண்டிருப்பாள். இரவில் அவன் வரும் போது அவள் ஒன்று, பகலெல்லாம் உழைத்த அலுப்பினால் படுத்துத் தூங்கிப் போய் விடுவாள்; அல்லது மாமியார் சொன்னது எதையாவது நினைத்து அழுது கொண்டிருப்பாள். "சனியன்! சனியன்! எப்ப பார்த்தாலும் ஒரே அழுகைதானா? மூதேவி! பீடை!" என்று ஸ்ரீதரன் எரிந்து விழுவான். இதனால் அவளுடைய அழுகை அதிகமாகும். ஸ்ரீதரனுடைய வெறுப்பும் வளரும்.

சாவித்திரி ரொம்பவும் அழுது விசிக்கும் சமயங்களில் ஸ்ரீதரன் அது சகிக்காமல், "ஏண்டி அம்மா! இந்தப் பீடையை உன்னை யார் அழைச்சுண்டு வரச் சொன்னா? நான் தான் வேண்டாம் வேண்டாம்னு முட்டிண்டேனே! ஊருக்கு அனுப்பிச்சுத் தொலைச்சுட்டு மறு காரியம் பாரு!" என்பான். அவன் தாயார், "ஆமாண்டாப்பா! என் பேரில் தப்புத்தான்! என் புத்தியை விளக்குமாத்தாலே அடிச்சுக்கணும். ஆனா, இப்ப என்ன முழுகிப் போச்சு? இவளுக்கு என்ன, கடுதாசி எழுதத் தெரியாதா? உனக்கு அந்தக் காலத்திலே எட்டு நாளைக்கு ஒரு கடுதாசி எழுதிண்டிருந்தாளே? அப்பாவுக்குக் கடுதாசி எழுதி அழைச்சுண்டு போகச் சொல்லட்டுமே?" என்று பதில் சொல்வாள்.

இத்தகைய நிலைமையில்தான், சாவித்திரி கர்ப்பமானாள். இதனால் அவளுடைய மனத்தில் ஒரு புதிய உற்சாகத்துடன் குதூகலம் உண்டாயிற்று. இனிமேல், தனக்கு இந்த வீட்டில் அதிக கௌரவம் ஏற்படும், புருஷனும் மாமியாரும் முன்னைவிடப் பிரியமாயிருப்பார்கள் என்ற ஆசையும் எழுந்தது. கூடிய சீக்கிரத்தில் இந்த ஆசை நிராசையாயிற்று.

ஸ்ரீதரனுக்குச் சில புதிய கஷ்டங்கள் அப்போது ஏற்பட்டிருந்தன. சில காலமாகவே ஸ்ரீதரனை அலட்சியம் செய்யத் தொடங்கியிருந்த ஸுஸி அப்போது பகிரங்கமாய் அவனை நிராகரிக்கத் தொடங்கினாள். அதுமட்டுமல்ல, ஐயாயிரம் ரூபாய் பணம் கொடுக்காவிட்டால் அவன்மேல் கேஸ் போடுவதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தாள். பாங்கில் அவனுடைய வேலை திருப்திகரமாயில்லையென்று மேலதிகாரிகள் கருதி, அவனுடைய சம்பளத்தைக் குறைத்து விட்டார்கள். இந்தக் கோபத்தையெல்லாம் ஸ்ரீதரன் பேதை சாவித்திரியின் மேல் காட்டினான்.

தங்கம்மாளுக்கோ ஏற்கெனவே இருந்த குறைகள் எல்லாம் போதாதென்று, வளைகாப்பு, சீமந்தம் பண்ணவில்லை, சம்பு சாஸ்திரி கடுதாசி கூடப் போடாமல் இருக்கிறார் என்ற குறையும் சேர்ந்து கொண்டது. ஆகவே நாளுக்கு நாள் சாவித்திரியின் கஷ்டங்கள் அதிகமாகிக் கொண்டு வந்தன.

இவ்வளவு கஷ்டங்களுக்கும், வேதனைகளுக்குமிடையில் சாவித்திரி தன்னுடைய மாமனார் ஒருவரைத்தான் நம்பியிருந்தாள். அந்த வீட்டில் தன்னிடம் பச்சாதாபப்படுகிறவர் அவர் ஒருவர் தான் என்றும், ஏதாவது ஆபத்து என்றால் அவர் தான் தன்னைக் காப்பாற்றக்கூடியவர் என்றும் எண்ணியிருந்தாள். அவர் இந்த மாதிரித் தன்னை தனியாக ரயிலேற்றி அனுப்பிவிடச் சொன்னார் என்றதும், அவளுக்கு 'இனிமேல் என்ன இருக்கிறது?' என்று தோன்றிவிட்டது. குழந்தைப் பருவத்திலிருந்து அவளுக்குப் பகவானிடம் இருந்த அசையாத நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது. "ஸ்வாமியாவது? பூதமாவது? எல்லாம் பொய் போல் இருக்கிறதே!" என்று எண்ணலானாள்.

ஒரு மனம் இப்படி நினைத்தது; ஆனால் அதே சமயத்தில் சாவித்திரியின் இன்னொரு மனம், 'நிஜமாகவே நாம் நெடுங்கரைக்குக் கிளம்பப் போகிறோமா?' என்று குதூகலத்தினால் துள்ளிக் குதித்தது!

"அப்பா! எனக்கும் நெடுங்கரைக்கு வந்து உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது" என்று சாவித்திரி எழுதிய போது அவளுடைய இருதயத்தில் உண்மையாகவே பொங்கிக் கொண்டிருந்த ஆசையையே வெளியிட்டிருந்தாள்.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு 'மசக்கை' வரும் என்றும், சில சில பொருள்களின்மேல் பிரத்தியேகமான ஆசை உண்டாகுமென்றும் சொல்கிறார்கள் அல்லவா? சாவித்திரியின் மசக்கை, அவளுக்கு நெடுங்கரைக்குப் போக வேண்டுமென்று அளவிலாத ஆசை கொள்ளச் செய்தது.

நெடுங்கரையில் தன்னுடைய வாழ்க்கையை நினைத்தாலே அவளுக்கு இப்போது சந்தோஷமாயிருந்தது. அந்தக் காலத்தில் அவள் அங்கே பட்ட கஷ்டங்களையும், அநுபவித்த துயரங்களையும் அடியோடு மறந்துவிட்டாள். நெடுங்கரையைப் பற்றிய சந்தோஷமான ஞாபகங்கள் மட்டுமே அவள் மனத்தில் இப்போது இருந்தன.

நெடுங்கரை வீதிதான் எவ்வளவு அழகாயிருக்கும்? வாசலில் தென்னை மரங்களின் நிழல் எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கும்? அந்த வீதியில் வில் வண்டி பூட்டி வரும் போது, மாடுகளின் சதங்கை ஜில் ஜில் என்று சப்திப்பது எவ்வளவு இனிமையாயிருக்கும்?

ஆகா! நெடுங்கரை வீட்டை எப்போது பார்ப்போம்? முன்போல் மறுபடியும் எப்போதாவது அப்பாவின் பஜனைக்குப் புஷ்பம் எடுத்துக்கொண்டு வருவோமோ? மாலை தொடுத்துப் படங்களுக்குப் போடுவோமோ?

அப்பா! அப்பா! நீங்கள் பஜனை பண்ணி நான் மறுபடியும் கேட்பேனே? சித்தி! உன் கையால் சாதம் பிசைந்து போட்டு நான் சாப்பிடுவேனா?

ஐயோ! சித்தி! உன்னை என்னவெல்லாம் பாடுபடுத்தி வைத்தேன்? உன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட பாவந்தான் இப்படி என்னைப்படுத்தி வைக்கிறதோ?... சாவித்திரி இவ்வாறெல்லாம் எண்ணமிடுவாள். தங்கம்மாளுடன் ஒப்பிட்டபோது, மங்களம் தன்னிடம் அபாரமான பிரியம் வைத்திருந்ததாகச் சாவித்திரிக்குத் தோன்றிற்று.

ஆகவே, அவள் அப்பாவுக்குத் தன்னை வந்து அழைத்துப் போகும்படி கடிதம் எழுதியபோது, அடங்காத ஆர்வத்துடன் தான் எழுதினாள். தன்னுடைய கடிதங்களுக்குப் பதில் வராததனால் அவள் அடைந்த ஏமாற்றத்துக்கு அளவில்லை. ஒரு வேளை கடுதாசி போய்ச் சேர்ந்திராதோ, அப்பா ஒரு வேளை ஊரில் இல்லையோ, அல்லது அவர் சரியாய் விலாசம் எழுதாதபடியால் அவருடைய பதில்தான் இங்கே வந்து சேரவில்லையோ என்று எண்ணாததெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு சமயம் சப்பட்டை கட்டிக்கொண்டு நெடுங்கரைக்குப் பறந்து போய்விடலாமா என்று அவளுக்குத் தோன்றும்.

இத்தகைய மனோ நிலையில் அவளை ரயிலேற்றி ஊருக்கு அனுப்பி விடுவதாகச் சொன்னபோது, 'என்ன இரக்கமற்றவர்கள் இவர்கள்!' என்ற வெறுப்பும், தனியாகப் போக வேண்டுமே என்ற துணுக்கமும் அவள் அடைந்தாலும், மனத்தின் ஒரு பக்கத்தில் சந்தோஷமும் இருந்தது. ஊருக்குக் கிளம்பும் நேரம் ஆக ஆக அவள் உற்சாகம் அதிகரித்தது.

சாவித்திரி, மாமனார் விஷயத்திலும் தான் ஏமாற்றமடைந்ததாக எண்ணியது மட்டும் சரியல்ல. உண்மையில், ராஜாராமய்யர் சாவித்திரியின் மேல் இரக்கங்கொண்டே, "அவள் ஊருக்குப் போவதாயிருந்தால் போகட்டும்" என்று

சொன்னார். தங்கம்மாளின்மேல் வந்த கோபத்தைத் தம் கையில் இருந்த பத்திரிகையின் மேல் காட்டி விட்டு அவர் வெளியே போனதுகூடச் சாவித்திரியின்மேல் இருந்த கருணையினால்தான். கல்கத்தாவிலிருந்து வேறொரு குடும்பத்தார் மறுநாள் சென்னைக்குப் புறப்படுவதாக அவர் கேள்விப்பட்டிருந்தார். அதைப்பற்றி விசாரித்துத் தகவல் தெரிந்து கொள்வதற்குத்தான் அவர் வெளியேறினார். விசாரித்ததில் அவர் கேள்விப்பட்டது உண்மைதானென்று தெரிந்தது. மறுநாள் புறப்படுவதற்கு இருந்தவர்கள் திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள், ரொம்பவும் நல்ல மனுஷர்கள். "ஆகா! சாவித்திரியை பேஷாய் அழைத்துக் கொண்டு போகிறோம்" என்று சொன்னார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டு ராஜாராமய்யர் திரும்பி வீட்டுக்கு வந்ததும் நெடுங்கரைச் சம்பு சாஸ்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார். தம்முடைய சம்பந்திக்கு அவர் இதுவரையில் தம் கையினால் கடிதம் எழுதினது கிடையாது. அவர் சாஸ்திரிக்கு எழுதிய முதல் கடிதம் இதுதான். பாவம், அவர் எழுதிய கடைசிக் கடிதமும் இதுவாகவே ஆயிற்று!

சில முக்கியமான காரணங்களினால் சாவித்திரியைக் கல்கத்தாவில் பிரசவத்துக்கு வைத்துக்கொள்ள முடியவில்லையென்றும், இங்கிருந்து திருநெல்வேலிக்கு வரும் தகுந்த மனுஷ்யாளுடன் கூட்டி அனுப்பியிருப்பதாகவும், சென்னைப் பட்டணத்துக்கே சாஸ்திரி வந்திருந்து குழந்தையை அழைத்துப் போகவேண்டுமென்றும், சென்னைப் பட்டணத்துக்கு ஒருவேளை வர முடியாவிட்டால், குறிப்பிட்ட வண்டிக்குப் புதுச்சத்திரம் ஸ்டேஷனுக்கு வந்திருந்து அழைத்துப் போகவேண்டுமென்றும் கடிதத்தில் எழுதினார். பிறகு, தாமே அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு போய்த் தம் கையாலேயே தபால் பெட்டியில் போட்டார். தபால் பெட்டியின் விளிம்பில் எழுதியிருந்த மணிக்கணக்கைப் பார்த்துவிட்டு, "சரி, இன்று தபாலில் கட்டாயம் போய்விடும்" என்று நிச்சயம் செய்துகொண்டு திரும்பினார்.

ராஜாராமய்யர் நம்பியபடியே, கடிதம் அன்று தபாலிலேயே சேர்ந்து வழியில் எங்கும் விழுந்து விடாமல் பிரயாணம் செய்து, போட்ட மூன்றாம் நாள் மேலமங்கலம் தபாலாபீஸுக்குப் போய்ச் சேர்ந்தது. நெடுங்கரைக்குக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்த தபால்காரன், சம்பு சாஸ்திரியின் வீடு பூட்டியிருப்பதைப் பார்த்தான். ஒரு நிமிஷம் யோசனை செய்தான். பிறகு "சரிதான், எங்கேயாவது போயிருப்பார்கள்; வந்து எடுத்துக் கொள்வார்கள்" என்று முடிவு செய்து, காமரா அறையில் ஜன்னல் வழியாகக் கடிதத்தை உள்ளே எறிந்து விட்டுப் போய்ச் சேர்ந்தான்.

அவன் எறிந்த இடத்திலேயே ராஜாராமய்யரின் கடிதம் அநாதையாய்க் கிடந்தது!

10. சாவித்திரியின் கனவு

சாவித்திரியை அழைத்துக்கொண்டு போகிறோமென்று சொன்ன திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் உண்மையிலேயே ரொம்பவும் நல்ல மனுஷர்கள். புருஷன், மனைவி, குழந்தை, புருஷனுடைய தாயார் இவர்கள்தான். தாயார் விதவை. புருஷனுக்கு முப்பது வயதும், மனைவிக்கு இருபது வயதும் இருக்கும். குழந்தை மூன்று வயதுப் பையன். அவர்களில் யாரும் பார்ப்பதற்கு அவ்வளவு லட்சணமாயில்லை. கணபதி அவனுடைய பெயருக்கு ஏற்றது போலவே கட்டைக் குட்டையாயும், கொஞ்சம் இளந் தொந்தி விழுந்தும் காணப்பட்டான். கறுப்பு நிறந்தான். முகம், கன்னமும் கதுப்புமாய்ச் சப்பட்டையாயிருந்தது. ஜயம் அவனைவிடச் சிவப்பு; ஆனால் முகத்தில் அம்மை வடு. போதாதற்கு, மேல் வாய்ப்பல் இரண்டு முன்னால் நீண்டு வந்திருந்தது. இதை மறைப்பதற்காக ஜயம் அடிக்கடி உதட்டை இழுத்து மூடிக்கொண்டாள். அவள் நாலைந்து மாதமாக 'ஸ்நானம் செய்ய'வில்லையென்றும் தோன்றிற்று. இந்தக் குடும்பத்தார் ஒருவரோடொருவர் கொண்டிருந்த அந்யோந்யம் சாவித்திரிக்கு அளவிலாத ஆச்சரியத்தை அளித்தது. என்ன அன்பு! என்ன அக்கறை!

ஐந்து நிமிஷத்துக்கொரு தடவை, "ஜயம்! ஏதாவது வேணுமா?" என்று கணபதி கேட்டுக் கொண்டிருந்தான். "ஏண்டாப்பா! பிள்ளைத்தாச்சிப் பொண்பட்டினியாயிருக்காளே! ஏதாவது வாங்கிண்டு வந்து கொடேண்டா!" என்று தாயார் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள். "நான் தான் வெறுமனே சாப்பிட்டுண்டே இருக்கேனே! அம்மாதான் பச்சை ஜலம் வாயிலே விடாமே இருக்கார். அவருக்கு ஏதாவது பழம், கிழம் வாங்கிக் கொடுங்கோ!" என்பாள் ஜயம்.

ஜயம் எதற்காவது எழுந்து நின்றால், சொல்லி வைத்தாற்போல், கணபதி, அவனுடைய தாயார் இரண்டு பேரும் எழுந்திருந்து, "என்ன வேணும், ஜயம்?" என்று கேட்பார்கள். கொஞ்ச நேரம் அவள் உட்கார்ந்திருந்தபடியே வந்தால், "இந்தாடி அம்மா! ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாக் காலைக் கொரக்களி வாங்கும். சித்தே காலை நீட்டிண்டு படுத்துக்கோ!" என்பாள் மாமியார். அஸ்தமித்தால் போதும்; ஜன்னல் கதவுகளையெல்லாம் சாத்திவிடச் சொல்வாள். வண்டியிலுள்ள மற்றவர்கள் ஆட்சேபித்தால், "கொஞ்சம் கோவிச்சுக்காதீங்கோ. பிள்ளைத்தாச்சிப் பொண்ணு. பனி உடம்புக்காகாது" என்பாள்.

அவர்கள் ஒருவரோடொருவர் அந்யோந்யமாயிருந்ததல்லாமல், சாவித்திரியையும் மிகப் பரிவுடன் கவனித்துக் கொண்டார்கள். சில சமயம் அந்த அம்மாள், சாவித்திரியின் கஷ்டங்களைப் பற்றியும் பேச ஆரம்பித்து விடுவாள். "ராஜாத்தி மாதிரி இருக்கா. இவளை ஆத்திலே வச்சுட்டு அந்த மூடம் எங்கெல்லாமோ சுத்தி அலையறானே?" என்றும், "நல்ல மாமியார் வாச்சாடி அம்மா, உனக்கு! இப்படி எட்டு மாதத்துக் கர்ப்பிணியைத் தனியா அனுப்பறதுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?" என்றும் சொல்வாள். கணபதி, "பேசாமலிரு, அம்மா!" என்று அடக்குவான். "நீ சும்மா இருடா! என்னமோ, அந்த துஷ்டைகளுக்குப் பரிஞ்சு பேசறதுக்கு வந்துட்டே? உனக்கென்ன தெரியும், ஊர் சமாசாரம்? இந்தச் சாதுப் பெண்ணை அந்த ராட்சஸி படுத்தி வச்சது. ஊரெல்லாம் சிரிப்பாய்ச் சிரிச்சுது! பாவம்! இவளுக்குப் பொறந்தகமும் வகையில்லைபோல் இருக்கு. அவாதான் வந்து தலைச்சம் பிள்ளைத்தாசியைப் பாத்துட்டு அழைச்சுண்டு போகவேண்டாமோ?" என்பாள்.

மாமியார் இப்படி ஏதாவது பேசும்போதெல்லாம், மாட்டுப் பெண்ணின் முகத்தில் பெருமை கூத்தாடும். அவளுக்குப் புக்ககத்தைப் போலவே பிறந்த வீடும் நன்றாய் வாய்த்திருந்தது என்று சம்பாஷணையில் சாவித்திரி தெரிந்து கொண்டாள். ஜயத்தின்

தகப்பனாருக்கு இரண்டு மாதமாய் உடம்பு சரியில்லை என்று தகவல் வந்ததாம். "ஒரு வேளை நான் பிழைக்கிறேனோ, இல்லையோ, என் பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒரு தடவை பார்த்துவிட்டால் தேவலை" என்று அவர் சொன்னாராம். அதன் பேரில்தான் இப்போது இவர்கள் திருநெல்வேலிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இந்தக் குடும்பத்தையும், இவர்கள் ஒருவரிடம் ஒருவர் காட்டும் அன்பையும் பார்க்கப் பார்க்கச் சாவித்திரிக்கு ஆச்சரியம் அதிகமாகிக் கொண்டிருந்தது. 'உலகத்தில் இப்படியும் மனுஷ்யாள் இருக்கிறார்களா? இந்த மாதிரி இடமாகப் பார்த்து நம்மையும் அப்பா கொடுத்திருக்கக் கூடாதா? இவ்வளவு மோசமான இடத்தில் கொண்டு போய்த் தள்ளினாரே?' என்று ஒரு நிமிஷம் நினைப்பாள். 'அப்பா பேரில் என்ன தப்பு? அவர் எவ்வளவோ பணத்தைக் காசைச் செலவழித்து, நாம் ஒசத்தியாயிருக்க வேண்டுமென்று ஒசந்த இடமாய்ப் பார்த்துத்தான் கொடுத்தார். நம் தலையெழுத்து இப்படியிருந்தால், அதற்கு அப்பா என்ன பண்ணுவா?' என்று எண்ணுவாள் அப்புறம், கணபதியின் சப்பட்டை மூஞ்சியையும் அசட்டுச் சிரிப்பையும் அவன் பெண்டாட்டிக்குச் செய்யும் உபசாரங்களையும் பார்க்கும்போது, 'நல்ல வேளை! அப்பா நம்மை இந்த மாதிரி ஆம்படையானைப் பார்த்துக் கொடுக்காமலிருந்தாரே?' என்று தோன்றும். ஸ்ரீதரனின் களையான முகத்தையும், நாகரிகமான தோற்றத்தையும் அவள் நினைத்துப் பார்த்துப் பெருமை கொள்வாள். ஆனால், அடுத்த நிமிஷமே, அவனும் ஸுஸியுமாய் எடுத்துக் கொண்ட போட்டோ படம் மனக்கண் முன்னால் வந்து நிற்கும். அவளுடைய பெருமை சிதறிப் போகும். 'அசடாயிருந்தாலென்ன? அவலட்சணமாயிருந்தாலென்ன? ஜயம் அதிர்ஷ்டசாலி, அவளுக்கு அகமுடையானின் அன்பு இருக்கிறது. நாம் தான் கொடுத்து வைக்காத பாவி' என்று நினைத்துக் கண்ணில் துளித்த கண்ணீரை மற்றவர்கள் பார்க்காதபடி துடைத்துக் கொள்வாள்.

ஜயத்தின் தகப்பனாருக்கு உடம்பு சரியில்லையென்ற விஷயத்தைக் கேட்டதும் சாவித்திரிக்கு, 'ஒரு வேளை நம் அப்பாவுக்கும் உடம்பு ஏதாவது அசௌகரியமாயிருக்குமோ? அதனால்தான் கடிதம் போடவில்லையோ?' என்று தோன்றியது, 'ஐயோ! அவர் சுரம் கிரமென்று படுத்துக் கொண்டால் சித்தியும் பாட்டியும் அவரைச் சரியாய்க் கவனித்துக் கொள்வார்களா? அந்த மாதிரி சமயங்களில் நாம் பக்கத்தில் இருந்தால் அவருக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும்? ஐயோ! நாம் பெண் பிறந்து அப்பாவுக்குக் கஷ்டத்தைத் தவிர வேறென்ன? இந்த வயதில் ஒரு பிள்ளையிருந்தால் அவருக்கு எவ்வளவு ஒத்தாசையாயிருக்கும்? பாழும் பெண் ஜன்மம் ஏன் எடுத்தோம்? பிள்ளையாகப் பிறந்திருக்கக் கூடாதா?' என்றெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விடுவாள்.

இப்படியெல்லாம் நினைக்க நினைக்க தகப்பனாரையும், நெடுங்கரையையும் பார்க்க வேண்டுமென்ற அவளுடைய ஆவல் பத்து மடங்கு, நூறு மடங்காகப் பெருகிக் கொண்டிருந்தது. மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ரயில் போய்க் கொண்டிருந்தபோதிலும், அதிலிருந்த ஒவ்வொரு நிமிஷமும் சாவித்திரிக்கு ஒரு யுகமாகத் தோன்றிற்று.

கணபதியின் குடும்பத்தார் சென்னைப்பட்டணத்தில் இறங்கி இரண்டு நாள் சிரம பரிகாரம் செய்து கொண்டு பிறகு திருநெல்வேலிக்குக் கிளம்ப உத்தேசித்திருந்தார்கள். ஒரே பிரயாணமாகப் போனால் பிள்ளைத்தாச்சிப் பெண்ணுக்கு உடம்புக்கு ஆகாதென்று கணபதியின் தாயார் சொல்லிவிட்டாள். ஆகவே, சென்னையில் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் தங்கிவிட்டுப் போகத் தீர்மானித்தார்கள். சாவித்திரியையும் தங்களுடன் இருந்துவிட்டுப் போகும்படி சொன்னார்கள். அவள் அதற்கு இணங்கவில்லை.

இந்த நல்ல மனுஷர்கள் காட்டிய அபிமானத்தினாலும் அநுதாபத்தினாலுமே அவர்களைச் சாவித்திரிக்குப் பிடிக்காமல் போயிருந்தது. அவளுடைய துரதிர்ஷ்டத்தைப்

பற்றிக் கணபதியின் தாயார் அடிக்கடி பேசியதும், அதைக் கணபதியும் ஜயமும் தடுக்க முயற்சித்ததும் சாவித்திரிக்குப் பரம சங்கடத்தை அளித்தன. இவர்களே தனக்கு முன்பின் தெரியாதவர்கள். இனிமேல் இவர்களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டுக்கும் போய் அவர்களுடைய பரிதாபத்துக்கும் ஆளாக வேண்டுமா? – மேலும் நெடுங்கரைக்குப் போய்ச் சேரும் ஆவலும் சாவித்திரிக்கு அளவில்லாமல் இருந்தது. ஆகையால் தன்னைப் பெண்பிள்ளைகள் வண்டியில் ஏற்றிவிட்டு விட்டால், போய்விடுவதாக அவர்களிடம் சொன்னாள். தங்களுடன் தங்கிப் போகலாமென்று அவர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமற் போகவே, அப்படியே அவளை ரயில் ஏற்றி விட்டார்கள்.

ஸ்திரீகள் வண்டியில் அன்று அதிகம் பேரில்லை. மொத்தம் ஐந்தாறு பேர் தான் இருந்தார்கள். ஆகையால் இடம் தாராளமாயிருந்தது. சாவித்திரி தனியாக ஒரு மூலையில் போய்ப் பெட்டியை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவளுக்கு எதிர்ப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீ சற்று நேரத்துக்கெல்லாம் சாவித்திரியிடம் பேச்சுக் கொடுத்தாள். அவள் யார், எந்த ஊர், எங்கிருந்து எங்கே போகிறாள், ஏன் தனியாகப் போகிறாள் என்றெல்லாம் விசாரித்தாள். சாவித்திரி சுருக்கமாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். "ஐயோ பாவம்! பிள்ளைத்தாச்சிப் பெண்ணைத் தனியா அனுப்பிச்சுட்டாங்களே!" என்று அந்த ஸ்திரீ ரொம்பவும் பரிதாபப்பட்டாள். பிறகு, "கல்கத்தாவிலிருந்து கண்ணை முழிச்சுண்டு வந்திருக்கே! பொட்டியை எடுத்துக் கீழே வச்சுட்டுப் படுத்துக்கோ, அம்மா!" என்றாள்.

சாவித்திரிக்கும் தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. பெட்டியைத் திறந்து ஒரு புடவையை எடுத்துத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு படுத்தாள். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் தூங்கிவிட்டாள்.

சாவித்திரி கனவு கண்டாள். அவளுக்குக் குழந்தை பிறந்துவிட்டது. குழந்தை, மனுஷ்யக் குழந்தை மாதிரியே இல்லை. தெய்வலோகத்துக் குழந்தை மாதிரி இருக்கிறது. அதன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் பசி, தாகம் ஒன்றும் தெரியாது. அது சிரிக்கிற அழகைத் தான் என்னவென்று சொல்வது! – சாவித்திரி குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள். அவளைச் சுற்றிலும் எல்லாரும் வந்து நின்று கொண்டிருக்கிறார்கள். அப்பா, சித்தி, பாட்டி, மாமனார், மாமியார் எல்லாருந்தான். மாமியாருக்குப் பின்னால் இவரும் சங்கோசப்பட்டுக் கொண்டு நிற்கிறார். எல்லாரும் குழந்தையை எடுத்துக் கொள்ள ஆவலாயிருக்கிறார்கள். "சித்தெக் கொடுடி குழந்தையை! பாத்துட்டுக் கொடுத்துடறேன்" என்று தங்கம்மாள் கெஞ்சுகிறாள். "நான் உன் குழந்தையை ஒண்ணும் பண்ணிட மாட்டேண்டீ; தேஞ்சு போயிடாதேடி, கொடுடி" என்கிறாள் மங்களம்.

அவர்களைப் பார்த்துச் சாவித்திரி, "நீங்கள்ளாம் என் குழந்தையைப் பார்க்க வேண்டாம். என்னை என்ன பாடு படுத்தி வச்சயள்? இப்ப மாத்திரம் குழந்தையை எடுத்துக்கிறதற்கு வந்துட்டேளாக்கும்? எங்க அப்பாகிட்ட மாத்திரந்தான் கொடுப்பேன், வேறொத்தரும் என் குழந்தையைப் பார்க்க வேண்டாம். போங்கோ!" என்கிறாள்.

சட்டென்று சாவித்திரி கண்ணை விழித்துக் கொண்டாள். "மாயவரம்! மாயவரம்!" என்று போர்ட்டர் கூவுவது கேட்டது. "மாயவரம் வந்துட்டதா? இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புதுச்சத்திரம் வந்துடுமே?" என்று எண்ணிச் சாவித்திரி எழுந்து உட்கார்ந்து, தலைமாட்டில் வைத்திருந்த புடவையை எடுத்துப் பெட்டிக்குள் வைக்கப் போனாள். பெட்டியைக் காணவில்லை!

எதிரிலிருந்த ஸ்திரீயையும் காணவில்லை. அந்தண்டைப் பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்து, "ஏனம்மா! இங்கேயிருந்த என் பெட்டியைக் காணோமே? யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டாள். அவர்களில் ஒருத்தி,

"ஐயையோ! உன் பெட்டியா அது? உன் எதிரிலே உட்கார்ந்திருந்தாளே அந்த அம்மா அதை எடுத்துண்டு சிதம்பரத்திலேயே இறங்கி விட்டாளே!" என்றாள்.

11. "அப்பா எங்கே?"

சாவித்திரி அதிகாலையில் புதுச் சத்திரம் ஸ்டேஷனில் வந்து இறங்கினாள். இன்னும் பனிபெய்து கொண்டிருந்தபடியால், ஸ்டேஷன் கட்டிடம், அதற்கப்பாலிருந்த சாலை, தூங்குமூஞ்சி மரங்கள் எல்லாம் மங்கலாகக் காணப்பட்டன.

தன்னை அழைத்துப் போக அப்பா வந்திருக்கிறாரோ என்று ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தாள். பிளாட்பாரத்தில் ஒரு பிராணியும் இல்லை. வெளியே ஒரு வண்டி மட்டும் கிடந்தது. அதிகாலையானதால் ஒரு வேளை நல்லானை மட்டும் வண்டியுடன் அனுப்பியிருப்பார் என்று சாவித்திரி எண்ணினாள்.

நல்ல வேளையாக, அவளிடமிருந்த கொஞ்சம் பணத்தையும், டிக்கட்டையும் பெட்டியில் வைக்காமல் ஒரு பர்ஸில் போட்டு இடுப்பில் செருகிக் கொண்டிருந்தாள். ஆகையால் அவை கெட்டுப் போகாமல் பிழைத்தன.

சாவித்திரி, டிக்கட்டை எடுத்துக் கொடுத்தபோது, தனக்குத் தெரிந்த பழைய ஸ்டேஷன் மாஸ்டரோ என்று ஒரு க்ஷணம் உற்றுப் பார்த்தாள். இல்லை. அவர் இல்லை. இவர் யாரோ புதுசு! மீசையும் கீசையுமாயிருக்கிறார். சாவித்திரி வெளியில் போன பிறகு அவர் டிக்கட் குமாஸ்தாவிடம், "வர வரப் பெண்பிள்ளைகள் எல்லாம் துணிந்து போய்விட்டார்கள்! கொஞ்ச நாள் போனால், நாமெல்லாம் சேலை கட்டிக்க வேண்டியதுதான்" என்றார்.

அதற்கு டிக்கட் குமாஸ்தா, "ஆமாம், ஸார்! ஆனால் குழந்தை பெறுகிற காரியம் மட்டும் அவர்கள்தானே செய்ய வேண்டும் போலிருக்கு!" என்று நகைச்சுவையுடன் பதில் அளித்தார்.

இதைக் கேட்டுக்கொண்டே வெளியில் போன சாவித்திரி, அங்கே கிடந்த ஒரே வண்டியின் அருகில் சென்றாள். வண்டிக்காரன், "எங்கே, அம்மா, போகணும்? வண்டி பூட்டட்டுமா?" என்றான். அவன் நல்லான் இல்லை. வண்டி, நெடுங்கரை வண்டியும் இல்லை. அது ஓர் ஒற்றை மாட்டு வண்டி.

"ஏனப்பா, நெடுங்கரையிலிருந்து வண்டி ஒன்றும் வர்றலையா?" என்று சாவித்திரி கேட்டாள்.

"இன்னிக்கு வர்றலீங்க; ஒருவேளை நாளைக்கு வருமோ, என்னமோ!" என்றான் வண்டிக்காரன்.

சாவித்திரிக்கு ஆத்திரமும் அழுகையுமாய் வந்தது. அப்பாவா இப்படி அலட்சியமாயிருக்கிறார்? நம்பவே முடியவில்லையே? ஒருவேளை அவருக்கு ஏதாவது ஆபத்தாயிருக்குமோ? இல்லாமற் போனால் இப்படி இருக்கமாட்டாரே?

வண்டியைப் பூட்டச் சொல்லி, சாவித்திரி அதில் ஏறிக் கொண்டு நெடுங்கரைக்குப் பிரயாணமானாள்.

வண்டி நெடுங்கரை அக்கிரகாரத்துக்குள் நுழைந்த போது, சாவித்திரிக்கு நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. நெடுங்கரையை மறுபடி பார்க்க வேண்டுமென்று அவள் எவ்வளவு ஆவல் கொண்டிருந்தாள்? புறப்படும்போது எவ்வளவு குதூகலமாயிருந்தாள்? அந்தக் குதூகலம் இப்போது எங்கே போயிற்று? நெடுங்கரைக்கு வந்ததில் ஏன் கொஞ்சங் கூடச் சந்தோஷம் உண்டாகவில்லை?

சாவித்திரியின் கண்களுக்கு நெடுங்கரை அக்கிரகாரம் இப்போது பழைய தோற்றம் கொண்டிருக்கவில்லை. வீடுகள், தென்னை மரங்கள், கோவில், மண்டபம் எல்லாம் முன் மாதிரியேதான் இருந்தன. ஆனாலும், வீதி மட்டும் களை இழந்து காணப்பட்டது.

வீடு நெருங்க நெருங்க அவளுடைய மனம் அதிகமாகப் பதைபதைத்தது. அப்பாவை எப்படிப் பார்ப்பது, என்ன சொல்வது? சித்தியின் முகத்தில் எப்படித்தான் விழிப்பது? ஒரு வேளை ஆத்தில் பாட்டியும் இருப்பாளோ? இருந்தால், அவள் ஏதாவது வெடுக்கென்று சொல்வாளே? அப்புறம் ஊரார்தான் என்ன சொல்வார்கள்? என்ன நினைத்துக் கொள்வார்கள்? தெருவில் பந்து விளையாடிக் கொண்டிருந்த பசங்களை ஏறிட்டுப் பார்க்கக்கூடச் சாவித்திரிக்கு வெட்கமாயிருந்தது.

இதோ, வீடு வந்து விட்டது, "நிறுத்தப்பா!" என்றாள் சாவித்திரி. வண்டி நின்றது. தன்னுணர்ச்சி இல்லாமலே சாவித்திரி வண்டியிலிருந்து இறங்கினாள். சற்று விரைவாகவே வீட்டை நோக்கிச் சென்றாள்.

வாசற் கதவு பூட்டியிருந்ததைப் பார்த்ததும், ஒரு நிமிஷம் சாவித்திரிக்கு இருதயமே நின்றுவிட்டதுபோல் தோன்றிற்று! அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

நெடுங்கரை தன்னை எப்படி வரவேற்கும் என்பது பற்றி சாவித்திரி என்னவெல்லாமோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், இந்த மாதிரி வரவேற்பை அவள் எதிர்பார்க்கவேயில்லை. வீட்டுக் கதவு பூட்டியிருக்குமென்று அவள் நினைக்கவேயில்லை.

சாவித்திரிக்கு யோசனை செய்யும் சக்தி வருவதற்குச் சில நிமிஷம் பிடித்தது. ஒருவரும் ஊரில் இல்லைபோல் இருக்கிறது. ஆனால், எங்கே போயிருப்பார்கள்? அப்பா ஊரில் இல்லாததனால் தான் தன்னுடைய கடிதங்களுக்குப் பதில் இல்லையோ?

இந்தச் சமயத்தில் வீதியில் பசங்கள் விளையாடிக் கொண்டிருந்த பந்து சாவித்திரிக்கு அருகில் வந்து விழுந்தது. பந்தைத் தொடர்ந்து ஒரு பையன் ஓடி வந்தான். அவனைப் பார்த்துச் சாவித்திரி, "ஏண்டாப்பா, குழந்தை, இந்தாத்து மாமா எல்லாரும் எங்கே?" என்று கேட்டாள். அந்தப் பையன் விளையாட்டின் சுவாரஸ்யத்தில், "எனக்குத் தெரியாது, அம்மாமி! அதோ தீக்ஷிதர் மாமா இருக்கார் கேளுங்கோ!" என்று சொல்லி, பந்தை வீசி எறிந்து, "அடே பிடிடா!" என்று கூவிக் கொண்டே ஓடிவிட்டான்.

அப்போது அறுவடைக் காலமாதலால், சாவித்திரி வந்த நேரத்திற்கு அக்கிரகாரத்தில் புருஷர்கள் எல்லாரு வயல் வெளிக்குச் சென்றிருந்தார்கள். தீக்ஷிதருக்கு அந்த உபத்திரவம் ஒன்றும் இல்லாதபடியால் அவர் மட்டும் வீட்டில் இருந்தார். வாசலில் வண்டிச் சத்தத்தைக் கேட்டு வெளியில் வந்தார். சாவித்திரி தனியாக வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும், அவருக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. 'இது என்ன கூத்து?' என்று எண்ணிக் கொண்டே இந்த வேடிக்கையைப் பூராவும் பார்த்து விடுவதற்காக அவருடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கையில் ஜப மாலையுடன் ஜபம் செய்யத் தொடங்கினார்.

சாவித்திரி கையில் ஒரு கொசுவிய புடவையுடன் மட்டும் இறங்கிப் போனது அவருக்கு இன்னும் வியப்பையளித்தது. அவள் இருந்த கோலமோ சொல்ல வேண்டியதில்லை. 'சரிதான், சரிதான். நாம் நினைத்தபடிதான் ஆயிற்று. இந்தப் பெண் புக்ககத்திலே இருந்து பேர் சொல்லாது என்று நாம் அப்போதே சொல்லவில்லையா? அது பலிச்சுப் போச்சு. ஏதோ கெட்ட நடவடிக்கியிலே இறங்கியிருக்கவேண்டும். இவளாகத்தான் கிளம்பிவிட்டாளோ, அவாளேதான் அடிச்சு விரட்டிட்டாளோ, தெரியலை. இதையெல்லாம் ஒரு மாதிரி தெரிஞ்சுண்டு தான், சம்பு சாஸ்திரி ரொம்ப நாளாய்ப் பொண்ணு என்கிற பேச்சை எடுக்காதிருந்தான் போலிருக்கு...' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார் தீக்ஷிதர்.

வீட்டின் கதவு பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டு சாவித்திரி திரும்பியபோது அவள் முகத்தில் தோன்றிய ஏமாற்றமும் துக்கமும் தீக்ஷிதருக்கு மிக்க மகிழ்ச்சியளித்தன. 'வேண்டும், வாயாடிக் கழுதைக்கு நன்றாய் வேண்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

இதற்குள் சாவித்திரி வீதியைக் கடந்து அவர் இருந்த இடத்துக்கு வந்தாள். "தீக்ஷிதர் மாமா, எங்ககம் ஏன் பூட்டிக் கிடக்கு? எங்க அப்பா எல்லாரும் எங்கே?" என்று கேட்டாள்.

"உங்கப்பன் எங்கே போனானோ, நான் என்னத்தைக் கண்டேன்? எங்கிட்டச் சொல்லிண்டா போறான்?" என்றார் தீக்ஷிதர்.

சாவித்திரிக்கு அழுகை வரும்போல் இருந்தது. அப்பா எங்கே என்பதை எப்படியாவது தெரிந்து கொள்ள அவள் மனம் துடிதுடித்தது. தீக்ஷிதருக்கும் தெரியும், ஆனால், சொல்ல மறுக்கிறார் என்பதும் ஒருவாறு தெரிந்தது.

அவளுடைய ஆங்காரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, பரிதாபமான குரலில், "தீக்ஷிதர் மாமா! எங்கப்பா மேலே உங்களுக்கு ஏதாவது கோபம் இருந்தாலும் எனக்காகவாவது சொல்லப்படாதா?" என்றாள். அப்புறம் இன்னொரு பயங்கரமான எண்ணம் தோன்றவே, "எங்கப்பாவுக்கு... உடம்பு கிடம்பு...ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்.

"அவனுக்கும் எனக்கும் உடம்புக்கு என்ன வரப் போகிறது? போன சனிக்கிழமை கூட இருந்தான் கொட்டறாப்புளி மாதிரி. சென்னைப் பட்டணத்துக்குப் போறதாகச் சொல்லிண்டிருந்தான். ஒரு வேளை அங்கேதான் போயிருப்பான்."

"சென்னைப் பட்டணத்துக்கா? என்னத்துக்கு மாமா?"

"பாட்டுச் சொல்லிக் கொடுத்து, பணம் சம்பாதிச்சுண்டு வரப்போறானாம், பணம்!"

உடனே சாவித்திரிக்குப் பழைய ஞாபகம் உண்டாயிற்று. அப்பா ஏற்கெனவே கடன்பட்டிருந்தது, மறுபடியும் தன்னைக் கல்கத்தாவுக்குக் கூட்டி அனுப்பப் பணம் வாங்கிக் கொண்டு வந்தது, அப்போதே நிலத்தை விற்றிருப்பாரோ என்று தான் சந்தேகித்தது – எல்லாம் நினைவுக்கு வந்தன. ஆனால் இதையெல்லாம் பற்றி இவரைக் கேட்பதற்கு மனம் வராமல், "எங்க சித்தி? – அவ கூடவா பட்டணத்துக்குப் போயிருக்கா?" என்று கேட்டாள்.

"உங்க சித்தி – பிறந்தாத்துக்குப் போய்ட்டா, பிறந்தாத்துக்கு" என்று சொல்லிவிட்டு, தீக்ஷிதர் எழுந்திருந்தார்.

இவ்வளவு நேரமும் வாசலில் வண்டி நின்று கொண்டிருந்தது. தான் சவாரி ஏற்றிக் கொண்டு வந்த அம்மாளின் நிலைமையைப் பார்த்ததும், சத்தம் வருமோ வராதோ என்ற சந்தேகம் வண்டிக்காரனுக்கு உண்டாகி விட்டது.

"என்னம்மா, எத்தனை நேரம் அம்மா காத்திருக்கிறது?" என்று அவன் கேட்டான்.

சாவித்திரி வண்டியை நோக்கி நடந்தாள். சட்டென்று மறுபடியும் திரும்பி வந்து, வீட்டுக்குள் போய்க் கொண்டிருந்த தீக்ஷிதரிடம், "மாமா, பட்டணத்திலே, எங்கப்பா விலாசம் தெரியுமா?" என்று கேட்டாள்.

"விலாசம் யார் கண்டா? எங்கிட்டச் சொல்லிட்டா போயிருக்கான்? அங்கே போய், பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி வீடுன்னு விசாரிச்சா தானே தெரியறது!" என்று சொல்லிவிட்டுத் தீக்ஷிதர் உள்ளே போய்ச் சேர்ந்தார்.

இன்னும் கொஞ்ச நேரம் அவளிடம் பேச்சுக் கொடுத்தால், அப்படி இப்படி என்று உறவு கொண்டாடிக் கொண்டு சாப்பாட்டுக்கு உட்கார்ந்துவிடப் போகிறாளே என்று அவருக்குப் பயம். ஒரு வேளைச் சாப்பாடு போடுவது ஒன்றும் பிரமாதமில்லை; வாஸ்தவந்தான். ஆனால் இந்த மாதிரி சாதி கெட்டு, நெறி கெட்டு ஓடி வந்திருப்பவளுக்குச் சாப்பாடு எப்படிப் போடுவது? போட்டுவிட்டு அந்தப் பாவத்தை எங்கே கொண்டுபோய்த் தொலைப்பது?

சாவித்திரி மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டாள். வண்டி திரும்பி வந்த வழியோடு போயிற்று. இதற்குள் சமாசாரம் எப்படியோ பரவி, அக்கிரகாரத்தில் பல

வீடுகளில் ஸ்திரீகள் வாசற்படியண்டை நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களில் யாரும் வண்டியினருகில் வந்து விசாரிக்கவில்லை. இதுவும் ஒரு காலமா என்று ஆச்சரியப்படும் மனோபாவம் அவர்களுடைய முகத்தில் பிரதிபலித்தது.

வண்டி அக்கிரகாரத்தைத் தாண்டிச் சென்று அப்பால் இருந்த குடியானத் தெருவின் ஒரு முனை வழியாகப் போயிற்று. சாவித்திரிக்கு அப்போது நல்லானின் ஞாபகம் வந்தது; வண்டியை நிறுத்தச் சொல்லி, அங்கே நின்ற ஒரு குடியானவ ஸ்திரீயிடம், "பட்டிக்கார நல்லான் ஊரிலேயிருக்கானா?" என்று கேட்டாள். அந்த ஸ்திரீ, "இது யாரு? நம்ப சாஸ்திரி ஐயா பொண்ணு சாவித்திரி மாதிரியில்லேயிருக்கு?" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள். இதைக் கேட்டு இன்னும் சில ஸ்திரீகளும் வண்டியின் பக்கம் வந்தார்கள். மறுபடியும், சாவித்திரி நல்லானைப் பற்றிக் கேட்டாள். "அவரு அப்பவே ஊரைவிட்டுப் போய்ட்டாரே, அம்மா. உனக்குத் தெரியாதா? சாஸ்திரி ஐயா நிலத்தை வித்தாரோ, இல்லையோ, இந்த ஊர்லே இனிமே இருக்க மாட்டேன்னு போய்ட்டாரு. இப்ப சாவடிக் குப்பத்திலே, அவரு மச்சானோடேயல்ல இருக்காரு!" என்றாள் அந்தக் குடியானவ ஸ்திரீ.

சாவித்திரிக்கு இப்போது நிலைமை ஒருவாறு தெரிந்தது. அப்பா நிலத்தை விற்றுவிட்டார். வேறு வருமானமும் இல்லை. ஆகையால், தன்னை வந்து அழைத்து வரக் கையில் பணம் இல்லாமையால் தான் வரவில்லை. சங்கோசப்பட்டுக் கொண்டு, போட்ட கடுதாசிக்குப் பதில் போடாமல் இருந்துவிட்டார். இப்போது பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கப் பட்டணத்துக்குப் போயிருக்கார். அப்பா! அப்பா! ஒருவேளை என்னை அழைத்து வருவதற்குத் தான் பணம் சம்பாதிக்கப் புறப்பட்டீர்களோ?

தகப்பனாரைப் பார்க்கும் ஆவல் சாவித்திரிக்கு இன்னும் அதிகம் ஆயிற்று. "வண்டியை ஓட்டப்பா!" என்றாள்.

குடியானவ ஸ்திரீகள் கொஞ்ச தூரம் வண்டி பின்னால் நடந்து கொண்டே, "ஏம்மா எங்கே வந்தே?", "இப்படித் தனியா வந்துட்டுப் போறயே?", "பாவம்! அப்பா ஊரிலே இருக்காருன்னு நினைச்சுட்டு வந்தயாக்கும்!", "பட்டினியாப் போறே போல் இருக்கே", "ஆனாலும் இந்தப் பாப்பாரச் சாதியைப்போல பார்த்ததில்லை. வந்த பொண்ணைச் சாப்பிட்டயான்னு கேக்காத கூட அனுப்பிச்சுட்டாங்களே?", "கொஞ்சம் இறங்கி ஒரு குவளை மோராவது சாப்பிட்டுட்டுப் போயேம்மா!" என்று இந்த மாதிரி சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

சாவித்திரி, "ஒன்றும் வேண்டாம், அம்மா! எனக்குப் பசிக்கவே இல்லை. ஊருக்குப் போய்ச் சாப்பிட்டுக்கிறேன். எங்க அப்பாவை அவசரமாய்ப் பார்க்கணும். அதுக்காகத்தான் போறேன்" என்று சொல்லி, அவர்களை நிற்கச் செய்தாள்.

மேலே வண்டி போனபோது, "இந்தக் குடியானவ ஸ்திரீகள் சொன்னது எவ்வளவு உண்மை! இவர்களுக்கு இருக்கிற ஈவிரக்கம், பச்சாதாபம் அக்கிராகாரத்திலே யாருக்கும் இல்லையே? யாராவது வந்து 'தீர்த்தம் வேண்டுமா?' என்று கூடக் கேட்கவில்லையே?" என்று சாவித்திரி எண்ணமிட்டாள்.

அதே சமயத்தில் அக்கிரகாரத்து ஸ்திரீகள், ஒருவருக்கொருவர், "ஏண்டி, அம்மா! அவள் பெரிய மனுஷியோல்லியோ! பெரிய இடத்திலே பிறந்தவள்; பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட்டவள். நம்மை எல்லாம் இலட்சியம் பண்ணி வண்டியை விட்டிறங்கி வந்து ஒரு வார்த்தை பேசுவளோ?" என்று பேசிக்கொண்டார்கள்.

12. பாட்டு வாத்தியார்

சம்பு சாஸ்திரி நெடுங்கரையை விட்டுக் கிளம்பிய போது அவருடைய மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று.

அவரை ஊரார் சாதிப் பிரஷ்டம் பண்ணி வைத்து, தீபாவளிக்கும் மாப்பிள்ளை வராமற் போனதிலிருந்து சாஸ்திரி மனம் சோர்ந்து போயிருந்தார். சாவித்திரியைப் புக்ககத்துக்கு அனுப்பிய பிறகு அவருடைய மனச் சோர்வு அதிகமாயிற்று. வீட்டிலே சாவித்திரி இல்லை. வெளியிலே நல்லான் இல்லை. முன்னைப் போல் பஜனைகளும் உற்சவங்களும் நடப்பதில்லை. இதனாலெல்லாம் நெடுங்கரை வாசமே அவருக்கு வெறுத்துப் போயிருந்தது. ஆனாலும் ஊரை விட்டுக் கிளம்பும்போது, அவருடைய இருதயம் ஏன் இவ்வளவு வேதனை அடையவேண்டும்?

'கூடாது; இத்தகைய பாசம் கூடாது, நம்மை இந்தப் பாசத்திலிருந்து விடுவித்து ரக்ஷிப்பதற்காகத்தான் அம்பிகை இவ்வாறு மாமியாரின் வாக்கின் மூலமாக ஆக்ஞாபித்திருக்கிறாள்' என்று எண்ணி மனத்தை உறுதிப் படுத்திக் கொண்டு கிளம்பினார்.

க்ஷேத்திர யாத்திரை செய்ய வேண்டுமென்ற விருப்பம் சாஸ்திரிக்கு வெகு காலமாக இருந்தது. அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு இப்போது சந்தர்ப்பம் வாய்த்தது. சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று அங்கெல்லாம் இரண்டு மூன்று நாள் தங்கி ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு கடைசியாகச் சென்னைப்பட்டினம் வந்து சேர்ந்தார்.

சென்னையில் முதலில் அவருக்குத் திக்குத் திசை தெரியவில்லை. அப்புறம், கோவில்களை வைத்து ஒருவாறு அடையாளம் கண்டுபிடிக்கத் தெரிந்துகொண்டார். கபாலீசுவரர் கோயில், பார்த்தசாரதி கோவில், கந்தசாமி கோவில், ஏகாம்பரேசுவரர் கோவில் ஆகியவற்றில் ஸ்வாமி தரிசனம் செய்து பரவசமானார். அப்புறம் வந்த காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினார்.

சம்பு சாஸ்திரி கிராமத்தில் பெரிய மிராசுதாராயிருந்தவர். எல்லாருக்கும் உதவிசெய்து அவருக்குப் பழக்கமே தவிர, ஒருவரிடம் போய் நின்று ஓர் உதவி கேட்டு அறியாதவர். மேலும் இயற்கையிலேயே சங்கோச சுபாவமுடையவர். அடித்துப் பேசிக் காரியத்தை முடித்துக் கொள்ளும் சக்தி அவருக்குக் கிடையாது.

அப்படிப்பட்டவர், முன்பின் தெரியாதவர்களின் வீடு ஏறிச்சென்று அவர்களிடம் ஒரு காரியத்தைக் கேட்பது என்றால், இலேசான காரியமா? ஆனாலும், சாஸ்திரி பகவான்மேல் பாரத்தைப் போட்டு, நெஞ்சைத் திடப் படுத்திக் கொண்டு, இந்தக் காரியத்தைத் தொடங்கினார்.

காரியத்தில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை மட்டும் அவருக்கு இல்லை. "நாகரிகம் மிகுந்த இந்தப் பட்டணத்திலேயாவது, பட்டிக்காட்டு மனுஷனாகிய நமக்குப் பாட்டு வாத்தியார் வேலை கிடைக்கவாவது?' என்ற அவநம்பிக்கை அவருடைய மனத்துக்குள் கிடந்தது. அவருக்கே தம்மிடம் நம்பிக்கை இல்லாதபோது மற்றவர்களுக்கு எப்படி நம்பிக்கை உண்டாகப் போகிறது?

சிலர் சம்பு சாஸ்திரியின் தோற்றத்தைப் பார்த்ததுமே அவருக்குச் சங்கீதம் எங்கே வரப்போகிறது என்று தீர்மானித்துவிட்டார்கள். ஒரு பெரிய மனுஷர் சம்பு சாஸ்திரியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஏன் ஸ்வாமி உங்க ஊரிலே சங்கீதத்தைத் தராசிலே நிறுத்துக் கொடுக்கிறதா, மரக்காலிலே அளந்து கொடுக்கிறதா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வி சம்பு சாஸ்திரியின் மனத்தை ரொம்பவும் உறுத்திற்று. கர்நாடக சங்கீதத்தின் ஜீவஸ்தானமாகிய சோழநாட்டில் அவர் பிறந்தவர். குழந்தைப் பிராயத்திலிருந்து மகா வித்வான்களுடைய சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டே வளர்ந்தவர். அப்படிப்பட்டவரைப் பார்த்து, இந்த மெட்ராஸ்காரன், தன்னிடம் பணம் இருக்கிற திமிரினால் தானே இப்படிக் கேட்டான்? "ஆமாம்; சங்கீதத்தைப் பணங் கொடுத்து வாங்குகிற இடத்திலே, மரக்காலில் அளந்தோ தராசில் நிறுத்தோதான் கொடுப்பார்கள். எங்கள் ஊரில் இப்படிக் கிடையாது." – இந்த மாதிரி சம்பு சாஸ்திரி சொல்லவில்லை; அந்த வீட்டைவிட்டுப் போகும் போது மனத்திற்குள் நினைத்துக் கொண்டு போனார்.

இன்னொரு பெரிய வக்கீலின் வீட்டில் பாட்டு வாத்தியார் வேண்டுமென்பதாகக் கேள்விப்பட்டுச் சம்பு சாஸ்திரி அந்த வீட்டுக்குள் சென்றார்.

வக்கீல் அவரைப் பார்த்ததும், யாரோ பட்டிக்காட்டிலிருந்து வந்திருக்கும் கட்சிக்காரர் என்று நினைத்துக் கொண்டார். "என்ன, ஐயா! ஏதாவது கேஸ், கீஸ் உண்டா?" என்று கேட்டார்.

"இல்லை – வந்து – கொஞ்சம் எனக்குச் சங்கீதம் தெரியும். ஆத்திலே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கச் சொன்னால்..."

வக்கீலுக்குக் குஷி பிறந்துவிட்டது. "என்ன சங்கீதமா? நீரா? நாசமாய்ப் போச்சு!" என்று அவர் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

அவருடைய சிரிப்பின் தாத்பர்யத்தைச் சம்பு சாஸ்திரி தெரிந்துகொண்டு, "வேணும்னா, பாடிக் காட்டுகிறேன்" என்றார்.

"பாடிக் காட்டுகிறீரா? நீரா?" என்றார் வக்கீல். உடனே, "சௌந்தரம்! சௌந்தரம்! இங்கே வா! ஒரு பிராமணன் பாடறேன்னு வந்திருக்கார்" என்றார். இந்த வேடிக்கையைத் தாம் மட்டும் அநுபவிப்பதில் அவருக்குத் திருப்தி இல்லை, தமது மனைவியும் கூட இருந்து அநுபவிக்க வேண்டும் என்று எண்ணினார்.

அவருடைய மனைவி வந்தாள். கூட அவளுடைய புதல்வியும் வந்தாள். "இவரா பாடப் போகிறார்?" என்று சௌந்தரம் கேட்டாள்.

"ஆமாம்! எங்கே உம்ம பாட்டை அவிழ்த்து விடுங்காணும்!" என்றார் வக்கீல்.

சம்பு சாஸ்திரி ஒரு கீர்த்தனம் பாடினார். அக்ஷர சுத்தமாகவும், சாஸ்திரரீதியாகவும், உருக்கம் கொடுத்தும் அற்புதமாய்ப் பாடினார்.

பாட்டின் போது ஒரு தடவை தாயாரைப் பார்த்துப் பெண் சிரித்தாள். ஏனென்றால், அந்தக் கீர்த்தனத்தை ஏற்கெனவே அந்தப் பெண் ஒரு பாட்டு வாத்தியாரிடம் கற்றுக் கொண்டிருந்தாள். அந்த மாதிரி இல்லாமல் இவர் தப்பாய்ப் பாடுகிறார் என்று பெண் சமிக்ஞையாகச் சிரித்தாள். தாயார், சமிக்ஞையிலேயே, "பேசாமலிரு" என்று பெண்ணை அடக்கினாள்.

பாட்டு முடிந்ததும், வக்கீல் நிதானமாக, "ஏன் ஸ்வாமி! நீர் இப்ப பாடியது பாட்டா, தெவச மந்திரமா?" என்று கேட்டார். அவருடைய மனைவி "வித்வானைப் பார்த்து அப்படியெல்லாம் சொல்லாதேயுங்கோ! உங்களுக்குப் பிடிக்கலேன்னா, வேண்டான்னுட்டுப் போங்களேன்!" என்றாள். சம்பு சாஸ்திரி எழுந்து வெளியே சென்றார்.

மற்றொரு பெரிய மனிதர் வீட்டில், சாஸ்திரிக்கு ஆர்மோனியப் பெட்டி வாசிக்கத் தெரியுமா என்று கேட்டார்கள். தெரியாது என்றதும் போகச் சொல்லி விட்டார்கள். ஒரு செட்டியார், "பிளேட் கிளேட் கொடுத்திருக்கீமா? ரேடியோவிலோ, கீடியோவிலோ பாடியிருக்கீமா?" என்று கேட்டார். சாஸ்திரி, "இல்லை" என்றதும், "சரிதான், போய் வாரும்" என்று சொல்லி விட்டார்.

இம்மாதிரி வீடு வீடாகவும் பங்களா பங்களாவாகவும் நுழைந்து வெளியே வந்து சாஸ்திரி ரொம்பவும் அலுத்துப் போனார். அவர் மனம் ரொம்பவும் சோர்ந்து விட்டது. ஒரு நாள் அவர் ஒரு பெரிய பங்களாவுக்குள் நுழைந்த போது, 'இதுதான் கடைசி தடவை; இந்த இடத்தில் நமக்கு வேலை கிடைக்காவிட்டால், பகவானுக்கு விருப்பமில்லை என்று தீர்மானிக்க வேண்டியதுதான்' என்று எண்ணிக் கொண்டு சென்றார்.

அந்தப் பங்களாவின் எஜமானர் அப்போது பங்களாவின் முன் வாசல் தோட்டத்தில் தம் சிநேகிதருடன் உட்கார்ந்து சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார். சம்பு சாஸ்திரியை அங்கேயே உட்காரச் சொல்லி, "எங்கே, பாடுங்கள், பார்க்கலாம்" என்றார்.

இவர்களுக்கு என்ன பாட்டுப் பாடினால் பிடிக்கும் என்று சாஸ்திரி சற்று யோசித்தார். கடைசியில் அம்பிகையைத் தியானம் செய்து கொண்டு "சிருங்கார லஹரி" என்ற கீர்த்தனத்தைப் பாடி, அதற்கு ஸ்வரமும் விஸ்தாரமாகப் பாடத் தொடங்கினார்.

பங்களாவின் எஜமானர் பாட்டை நடுவிலேயே நிறுத்திவிட்டார். "இந்தக் காலத்திலே உங்க சங்கீதமெல்லாம் செல்லாது, ஸ்வாமி! இப்போ 'டேஸ்டெ'ல்லாம் மாறியிருக்கு. கொஞ்சம் இந்துஸ்தானி – கிந்துஸ்தானி அப்படியிருக்க வேண்டும்; போய் வாரும்" என்று சொல்லி அனுப்பினார்.

ஆனால், சாஸ்திரி அங்கே பாடிய பாட்டை ஓர் ஆத்மா அநுபவித்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்தது. அவன், நல்லானுடைய மைத்துனன் சின்னசாமிதான். இந்தப் பங்களாவில் சின்னசாமி தோட்ட வேலை செய்து கொண்டிருந்தான், பாட்டைக் கேட்டுவிட்டு அருகில் வந்து பார்த்து, 'நம்ம நெடுங்கரை சாஸ்திரி ஐயா!' என்று அவன் தெரிந்து கொண்டு, 'இவர் எப்படி இங்கே வந்தாரு?' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஆகவே, சாஸ்திரி திரும்பி வெளியே சென்று கொண்டிருந்தபோது, அவன் ஓடிவந்து விழுந்து நமஸ்காரம் செய்து, "சாமி! சாமி! என்னைத் தெரியுதுங்களா?" என்று கேட்டான்.

சாஸ்திரிக்கு அந்தப் பங்களாவில் உண்டாகியிருந்த ஏமாற்றத்தினால், மனம் குழம்பிப் போயிருந்தது. இவனை எங்கே அடையாளம் தெரியப் போகிறது?

"யார் தெரியவில்லையே, அப்பா!" என்றார்.

"நான் தானுங்க, நல்லானுக்கு மச்சான், சின்னசாமி. இப்பத் தெரியுதுங்களா?" என்றான்.

"ஞாபகம் வருகிறது. நல்லான் எங்கே அப்பா இருக்கான்? சௌக்கியமாயிருக்கானா?" என்று சாஸ்திரி கேட்டார்.

"நாங்க எல்லோரும் சாவடிக் குப்பத்திலே இருக்கோமுங்க. அவரு எப்போதும் உங்களைப் பத்தியும் உங்க நல்ல குணத்தைப் பத்தியுமே பேசிக்கிட்டிருப்பாருங்க. நீங்க அவசியம் வந்துட்டுப் போகணுங்க!" என்றான்.

"அதுக்கென்னப்பா, பார்க்கலாம்! எங்கே இருந்தாலும் சௌக்கியமாயிருந்தால் சரி" என்று சாஸ்திரி சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

"சாவடிக்குப்பங்க, கட்டாயம் வர்றணுங்க" என்று சின்னசாமி கூவினான்.

'ஸ்வாமி! ஸ்வாமி! இந்தத் திக்கற்ற நிலைமையில் நான் பட்டிக்கார நல்லானிடத்திலே போக வேண்டுமா? அவனிடம் என்னை வைத்து ரக்ஷிக்கும்படி கேட்க வேணுமா? வேண்டாம்! வேண்டாம்! இந்த உலக வாழ்க்கையே இனிமேல் வேண்டாம்! பூனூலை அறுத்து எறிந்துவிட்டுக் காஷாயம் கட்டிக்கொள்ள வேண்டியது; சாப்பாடு கிடைத்த இடத்தில் சாப்பிட வேண்டியது; திறந்த வெளியில் தூங்க வேண்டியது;

பகவானுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு ஊர் ஊராகப் போக வேண்டியது. க்ஷேத்திரங்களைத் தரிசிக்க வேண்டியது. இத்தனை நாளும் கிருகஸ்தாசிரமம் நடத்தியதெல்லாம் போதும்; மற்றவர்களுக்காகக் கவலைப் பட்டதும் போதும், இனிமேலாவது நாம் போகிற வழிக்குக் கதி தேடிக் கொள்வோம்.' ... இந்த மாதிரி யோசனை செய்து கொண்டு சாஸ்திரி மேலே நடந்தார்.

13. மீனாக்ஷி ஆஸ்பத்திரி

சாவித்திரி நெடுங்கரைக்கு வந்து வீடு பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டுத் திரும்பி இருபது நாளைக்கு மேலாயிற்று. இப்போது அவள் சென்னையில் மீனாக்ஷி ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த சிறு தொட்டிலில் கையால் இலேசாக ஆட்டக்கூடிய தொட்டிலில் ஒரு பெண் குழந்தை கிடந்தது. கனவில் அல்ல; உண்மையாகவேதான். மூக்கும் முழியுமாய்க் குழந்தை நன்றாயிருந்தது. பிறந்து பத்து நாள்தான் ஆகியிருந்தாலும் ஒரு மாதத்துக் குழந்தை போல் தோன்றியது.

குழந்தை அப்போது தன்னுடைய வலது கையின் விரல்களை ருசி பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உண்டான 'த்ஸு' 'த்ஸு' என்ற சப்தம் சாவித்திரியின் காதில் விழுந்தபோது அவளுடைய முகம் சிறிது மலர்ந்தது. உடனே, திரும்பிக் குழந்தையைப் பார்த்தாள். மலர்ந்த முகம் சுருங்கிற்று. இந்தக் குழந்தையின் காரணமாக என்னென்ன கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்க நேர்ந்தது? அவையெல்லாம் ஒரு மகா பயங்கரமான சொப்பனத்தைப் போல் சாவித்திரியின் நினைவில் வந்தன. அந்தச் சம்பவங்களை மறந்து விடுவதற்கு அவள் எவ்வளவோ முயன்று பார்த்தாள். அவற்றை நினைத்துப் பார்ப்பதில்லையென்று பல்லைக் கடித்துக்கொண்டு மனத்தை உறுதி செய்து கொண்டாள். அது ஒன்றும் பயன்படவில்லை. திரும்பத் திரும்ப அந்த நினைவுகள் வந்து கொண்டுதான் இருந்தன.

நெடுங்கரையிலிருந்து சாவித்திரி உடனே திரும்பிச் சென்னைக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயில் ஏறியபோது அவளுடைய மனத்தில் கவலையும் பயமும் இல்லாமலில்லை. 'அந்தப் பெரிய பட்டணத்தில் போய் அப்பாவை எப்படித் தேடுவோம்? அதுவும் இந்தப் பலஹீனமான ஸ்திதியில்?' என்று அவளுடைய நெஞ்சு பதைபதைத்துக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும் இவ்வளவு பயங்கரமான கஷ்டங்களை எல்லாம் அநுபவிக்க நேரிடுமென்று லவலேசமும் அவள் எதிர்பார்க்கவில்லை.

"பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி வீடு தெரியுமா?" என்று எத்தனை இடங்களில் எத்தனை பேரைக் கேட்டிருப்பாள்? அவர்களில் சிலர், "பாட்டு வாத்தியாரையும் தெரியாது; சம்பு சாஸ்திரியையும் தெரியாது; போ! போ!" என்று கடுமையாகப் பதில் சொன்னார்கள். இம்மாதிரி பதில்களைக் கேட்கும்போதெல்லாம், 'ஜனங்கள் ஏன் இவ்வளவு இரக்கமற்றவர்களாயிருக்கிறார்கள்?' என்று சாவித்திரி ஆச்சரியப்படுவாள். பட்டணங்களிலே வசிக்கும் ஜனங்களின் இடைவிடாத வேலைத் தொந்தரவும், அதனால் சின்னஞ் சிறு விஷயங் கூட அவர்களுக்கு எரிச்சல் உண்டு பண்ணிவிடுவதும் சாவித்திரிக்கு எவ்வாறு தெரியும்? மேலும், பூரண கர்ப்பவதியான ஓர் இளம் பெண் இந்த மாதிரி தன்னந்தனியாக அலைவதைக் கண்டவுடனேயே, ஜனங்களுக்கு அவள் பேரில் இல்லாத சந்தேகங்கள் எல்லாம் ஏற்பட்டு அருவருப்பு உண்டாவது சகஜம் என்பதைத்தான் சாவித்திரி எப்படி அறிவாள்?

ஆனால், எல்லாருமே இப்படி நடந்து கொள்ளவில்லை, சிலர் அவளிடம் இரக்கமும் காட்டினார்கள். "நீ யாரம்மா? எந்த ஊர்? இந்த நிலைமையிலே ஏன் இப்படி அலையறே?" என்றெல்லாம் விசாரித்தார்கள். ஜனங்களுடைய கோபத்தையும் கடுமையையுமாவது சகித்துக்கொள்ளலாம் போல் இருந்தது; ஆனால், இந்த இரக்கத்தைச் சாவித்திரியினால் சகிக்கமுடியவில்லை. அவர்களுடைய விசாரணைக்குப் பதில் சொல்லவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

'அப்பா இருக்கிற இடந்தெரிந்தால் சொல்லட்டும்; இல்லாமற்போனால் பேசாமலிருக்கட்டும். இவர்களை இதையெல்லாம் யார் விசாரிக்கச் சொன்னது?' என்று எண்ணினாள்.

கடைசியில், அவளை அந்த மாதிரி விசாரித்த இடம் ஒரு போலீஸ் ஸ்டேஷன், இங்கே அவள் எப்படி வர நேர்ந்தது என்பதும், ஸ்டேஷனில் நடந்தவையும் அவளுக்கு ஏதோ பூர்வ ஜன்மத்து ஞாபகம் போல் தெளிவின்றித் தோன்றின.

பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரியைத் தேடித் தேடி அலைந்து, கால் கை சோர்ந்து, கண்ணும் இருளடைந்து வந்த சமயத்தில், சாவித்திரி மேலே நடக்க முடியாமல் ஒரு வீட்டின் வாசற்படியில் உட்கார்ந்தாள். அந்த வீட்டிற்குள்ளே குழந்தைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் சத்தம் கேட்டது. ஒரு க்ஷணநேரம், 'ஒரு வேளை அப்பா தானோ?' என்று நினைத்தாள். பாட்டு வாத்தியாரின் குரல் அப்பா இல்லையென்பதைத் தெரிவித்தது. ஆனாலும், சாவித்திரி எழுந்து உள்ளே சென்றாள். அங்கே இரண்டு குழந்தைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவரைப் பார்த்து, "ஸ்வாமி! உங்களுக்குப் பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரிகள் விலாசம் தெரியுமா?" என்று கேட்டாள்.

"சம்பு சாஸ்திரிகளா?" என்று ஒரு கணம் யோசித்தார் பாட்டு வாத்தியார்.

சாவித்திரிக்கு கொஞ்சம் உயிர் வந்தது; "நெடுங்கரை சம்பு சாஸ்திரிகள்" என்றாள்.

"நெடுங்கரை சம்பு சாஸ்திரிகளா? தெரியாதே அம்மா! தபால்காரனைக் கேட்டுப் பாருங்கள்; ஒருவேளை தெரிஞ்சிருக்கும்" என்று சொல்லி விட்டு, பாட்டு வாத்தியார், மறுபடியும், "ஸா நீ பா...." என்று ஆரம்பித்தார். அவருக்கு, பாவம், பாட்டுச் சொல்லிக் கொடுக்க இன்னும் மூன்று வீடுகள் பாக்கியிருந்தன. வழிப்போக்கர்களோடு பேசிக் கொண்டிருந்தால் காரியம் எப்படி ஆகும்?

சாவித்திரி அங்கிருந்து தட்டுத் தடுமாறிப் போய்க் கொண்டிருக்கையில் ஒரு வீட்டிலிருந்து தபால்காரன் ஒருவன் வெளியில் வந்து கொண்டிருந்தான். "போஸ்ட்மான்! பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி வீடு எங்கே இருக்கு, தெரியுமா?" என்று கேட்டாள். தபால்காரன் கொஞ்சம் வயதானவன். பிள்ளை குட்டிக்காரன். சாவித்திரியைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாயிருந்தது. ஆனால், ஒரு நிமிஷம் நிற்பதற்குக் கூட அவனுக்கு அவகாசமில்லை. "அப்படி ஒத்தரும் இந்த டிவிஷன்லே இருக்கிறதாத் தெரியலே, அம்மா! போலீஸ் ஸ்டேஷனிலே போய்ச் சொல்லு, கண்டுபிடிச்சுக் கொடுப்பாங்க" என்று கூறிவிட்டு, மேலே நடந்தான்.

சாவித்திரி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றாள். போகும்போதே அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய நிலைமையையும் தோற்றத்தையும் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் கூடச் சிறிது மருண்டு போனார். அவளை உட்காரச் சொல்லி, "என்ன அம்மா விஷயம்?" என்று கேட்டார். சாவித்திரி "எங்க அப்பா சம்பு சாஸ்திரியைத் தேடிண்டு வந்தேன். ஊரெல்லாம் அலைஞ்சு பார்த்தாச்சு. அகப்படலை. போலீஸிலே சொன்னா கண்டு பிடிச்சுக் கொடுப்பான்னு கேள்விப்பட்டேன்..." என்றாள். இப்படிச் சொன்ன போதே அவளுக்கு மூச்சு வாங்கிற்று; கண் சுழன்றது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அவசர அவசரமாய், "ஆகட்டும், அம்மா! கண்டுபிடிக்கப் பார்க்கிறேன். அது வரையிலே நீ யாராவது தெரிஞ்சவா வீட்டிலே இருந்துக்கோ!..." என்றார்.

"தெரிஞ்சவாளா? எனக்குத் தெரிஞ்சவாளா?" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள் சாவித்திரி.

இன்ஸ்பெக்டருடைய பயம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அவர் பரபரப்புடன், "இந்த ஸ்திதியிலே நீ இப்படி அலையக் கூடாது அம்மா! உன் ஹஸ்பெண்டு அட்ரெஸ் என்ன?" என்று கேட்டார்.

அப்போது, சாவித்திரிக்கு, திடீரென்று என்ன வந்துவிட்டது? அது அவளுக்கே தெரியவில்லை. ஜன்னி கின்னி பிறந்து விட்டதோ? அல்லது பைத்தியமே பிடித்துவிட்டதோ? சொப்பனத்தில் எழுந்திருப்பது போல் எழுந்து நின்றாள். தன்னையறியாமல் சிரிப்பு வந்தது. அவளுடைய பற்கள் நறநறவென்று கடிபட்டன.

"இன்ஸ்பெக்டர்!..." என்றாள் அவளுடைய குரலின் தொனி பயங்கரத்தையளித்தது. "ஹஸ்பெண்டு, ஹஸ்பெண்டு!" என்று கூச்சலிட்டாள். "ஹஸ்பெண்டினால்தான் எனக்கு இந்தக் கதி!" என்று இன்னும் உரத்த குரலில் கூவினாள். நாலு அடி எடுத்து வைத்தாள். ஒரு நிமிஷம் இன்ஸ்பெக்டர், மேஜை, ஸ்டேஷன், தான் – எல்லாரும் ஒரே சுழலாகச் சுழலுவது போல் தோன்றியது. அடுத்த நிமிஷம் சாவித்திரி ஸ்மரணை இழந்து கட்டையைப் போல் தரையில் விழுந்தாள்.

சாவித்திரி பயங்கரமாய்க் கூச்சலிட ஆரம்பித்ததிலிருந்து, இன்ஸ்பெக்டர் அவளைப் பார்த்தது பார்த்தபடி ஸ்தம்பமாய் உட்கார்ந்திருந்தார். தான் ஏதாவது சொன்னாலும் செய்தாலும், அவளுடைய ஹிஸ்டீரியா அதிகமாகி விடலாமென்றும், எப்படியாவது அவள் வெளியே போனால் போதுமென்றும் அவர் எண்ணினார். அவள் கீழே விழுந்த அப்புறந்தான் அவருக்குச் சுறுசுறுப்பு வந்தது. டெலிபோனை மேலுங் கீழுமாய்த் திருப்பி மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்கு அவசரமாய் டெலிபோன் பண்ணினார்.

சாவித்திரிக்கு மறுபடி பிரக்ஞை வந்தபோது, தான் முன்பின் பார்த்திராத இடத்தில் கட்டிலில் கிடப்பது தெரிந்தது. அவளுடைய தலைமாட்டில் நின்று யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அவளைப் பற்றித்தான் பேசினார்கள்.

"கடுமையான ஹிஸ்டீரியா கேஸ்; பிழைத்தது புனர் ஜன்மம்" என்று ஒரு பெண் குரல் சொல்லிற்று.

"யார், என்னவென்று ஒரு தகவலும் இல்லையா?"

"ஒன்றும் தெரியலை. போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து யாரோ சாஸ்திரின்னு பேர் சொல்லி விலாசம் விசாரிச்சாளாம். ஹஸ்பெண்டு யாருன்னு கேட்டதும் கூச்சல் போட்டுட்டு விழுந்துட்டாளாம். உடனே ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணனும் என்று அந்த இன்ஸ்பெக்டருக்குத் தோணித்தே. அதுவே பெரிய காரியம்."

"இந்த நிலைமையிலே – பிரசவம் வேறே ஆகணும்; கஷ்டமான கேஸா இருக்கும் போலிருக்கு; ரொம்ப ஜாக்கிரதையாய்க் கவனிக்கணும்."

இந்தச் சம்பாஷணையிலிருந்து சாவித்திரிக்குத் தான் ஆஸ்பத்திரியில் இருக்கிறோம் என்பதும், எவ்வாறு அங்கு வந்தோம் என்பதும் ஒருவாறு தெரிந்தன.

இன்னும் அறிவு நன்றாகத் தெரிந்தபோது, 'ஆகா! அநாதையாகிய எனக்கு அடைக்கலம் அளிக்கும் இடமும் ஒன்று இருக்கிறதா?' என்று சாவித்திரி எண்ணி எண்ணி உருகினாள்.

அவளுடைய பிறந்த வீட்டிலாவது, புகுந்த வீட்டிலாவது அவளை அவ்வளவு ஆதரவுடன் யாரும் கவனித்தது கிடையாது. 'கடைசியில் பகவான் மனம் இரங்கி நம்மை இந்த இடத்தில் கொண்டு வந்து சேர்த்தாரே?' என்று நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டாள்.

ஆனால் அவளுடைய கஷ்டம் அத்துடன் தீர்ந்து போய் விடவில்லை. நாலு ஐந்து நாளைக்கெல்லாம் அவள் அது வரையில் அநுபவித்து அறிந்திராத வேதனையும் வலியும் உண்டாயின. நிமிஷத்துக்கு நிமிஷம் வேதனை அதிகமாகி வந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வலி பொறுக்க முடியாமல் போயிற்று. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம், 'ஐயோ! என்னத்துக்காக இந்தப் பெண் ஜன்மம் எடுத்தோம்?' என்று

நோகவும், தன்னைப் படைத்த கடவுளையே சபிக்கவும் ஆரம்பித்தாள். இத்தகைய நிலைமையில், டாக்டர்களும், நர்ஸுகளும் கும்பலாக வந்து அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். என்னத்தையோ மூக்கினருகில் கொண்டு வந்து பிடித்தார்கள். மூச்சுத் திணறத் தொடங்கியது. 'நாம் படுகிற துன்பத்தைக் கண்டு சகிக்காமல் நம்மைக் கொன்று விடுகிறார்கள் போல் இருக்கிறது. ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பராசக்தி! என்னை உன் பாதத்தில் சேர்த்துக் கொள்!' என்று வேண்டினாள்.

ஆனால், உண்மையில் அது சாவில்லை என்பது சாவித்திரிக்கு மறுபடியும் நினைவு வந்தபோது தெரியவந்தது. தான் சாகாததோடு மட்டுமில்லை, தன்னை இவ்வளவு கொடுமையான கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிய ஜீவன், பக்கத்தில் தொட்டிலில் கிடந்து அழுது கொண்டிருந்தது. 'அழு, அம்மா! அழு! இந்த உலகத்தில் அழுவதற்குத்தான் நான் பிறந்தேன்; அழுவதற்குத்தான் நீயும் பிறந்திருக்கிறாய்! அழு!'

குழந்தையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மார்போடு சேர்த்து அணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சாவித்திரிக்கு அளவிலாத தாபம் பொங்கி எழுந்தது. அடிக்கடி அதனுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. ஆனால் அந்தத் தாபத்தையும் ஆசையையும் அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள முயன்றாள். 'நாம் அடைந்த இவ்வளவு கஷ்டங்களுக்கும் காரணம் இந்தக் குழந்தைதானல்லவா?' என்று நினைத்து அதனிடம் கோபங் கொண்டாள். குழந்தையின் முகச்சாயல் அவளுடைய கோபம் வளர்வதற்கு ஒத்தாசை செய்தது! ஏனெனில், அது அவளுக்கு ஸ்ரீதரனை ஞாபகம் படுத்திற்று.

இதற்கு முன்பெல்லாம் ஸ்ரீதரனிடம் அவளுக்குக் கோபம் வந்தாலும், வெறுப்பு உண்டானது கிடையாது. கல்யாணத்தின்போது அவனிடம் அவள் கொண்ட அளவிலாத அன்பைக் கல்கத்தாவில் அவள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் மாற்றிவிடவில்லை. நெடுங்கரைக்கு அவள் தனியாக ரயில் ஏறி வந்தபோது கூட அவளுடைய உள்ளத்தில் அவனிடம் அன்பு வைத்திருந்தாள். என்றைக்கோ ஒரு நாள் அவனுடைய மனம் மாறும், தன்னுடைய அன்பும் சாபல்யமாகும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனால் இப்போது அவளுடைய மனோநிலை அடியோடு மாறிவிட்டது. தன்னை இவ்வளவு சகிக்க முடியாத கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளக்கிவிட்டு அந்தப் பாவி கவலையின்றியிருக்கிறான்! 'அவனும் மனுஷ ஜன்மமா! அப்படிப்பட்ட மனுஷனிடமா நாம் அவ்வளவு அன்பும் பக்தியும் வைத்திருந்தோம்? சீச்சீ! என்ன பேதைமை!

'பதியாம்! பக்தியாம்! புருஷனைத் தெய்வமாகப் பாவிக்க வேண்டுமாம்!' – கல்கத்தாவுக்குப் புறப்படும் போது தகப்பனார் செய்த உபதேசம் சாவித்திரிக்கு ஞாபகம் வந்தது. 'நல்ல தகப்பனார்! நல்ல உபதேசம்! இங்கே வந்து பாருங்கள், அப்பா! நீங்கள் தேடிக் கொடுத்த தெய்வம் என்னை என்ன செய்கிறது வந்து பாருங்கள்!

'ஆனால், நீங்கள் ஏன் வரப்போகிறீர்கள்? நீங்கள் ஏன் பார்க்கப் போகிறீர்கள்? இந்த உபத்திரவம் எல்லாம் வேண்டாம் என்று தான், கடுதாசும் போடாமல், கதவையும் பூட்டிக்கொண்டு போய்விட்டீர்களே! நான் எக்கேடு கெட்டால் உங்களுக்கென்ன? இந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு நான் தெருத் தெருவாய்ப் பிச்சை வாங்கினால் தான் நீங்கள் எங்கே பார்க்கப் போகிறீர்கள்!...'

இவ்வாறு சாவித்திரி தன்னுடைய மனம் யார் யாரிடம் அன்பு கொண்டிருந்ததோ அவர்கள் எல்லாரையும் வெறுத்து, துவேஷம் கொள்ளும் நிலைமையை அடைந்திருந்தாள்.

அவளுடைய வெறுப்பும் துவேஷமும் நூறு மடங்கு அதிகமாகும்படியான சந்தர்ப்பம் சீக்கிரத்திலேயே நேரிட்டது.

14. சாவித்திரியின் சங்கல்பம்

ஆஸ்பத்திரியில் சாவித்திரிக்கு நன்றாய்ச் சுயஞாபகம் வந்ததிலிருந்து, அவள் தான் ஏற்கெனவே பட்ட கஷ்டங்களைப்பற்றி எண்ணியதோடு வருங்காலத்தைப் பற்றியும் எண்ணத் தொடங்கினாள். இந்தத் துர்ப்பாக்கியவதியின் தலையில் பகவான் ஒரு குழந்தையை வேறே கட்டி விட்டார். இனிமேல் என்ன செய்வது? எங்கே போவது?

கல்கத்தாவுக்குப் போவது என்ற நினைப்பே அவளுக்கு விஷமாக இருந்தது! குழந்தைப் பிராயத்தில் அவளை ஒரு சமயம் ஒரு தேனீ கொட்டிவிட்டது. அப்போது அது ரொம்பவும் வலித்தது. இன்று சாவித்திரி கல்கத்தாவில் தான் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி நினைத்துக்கொண்டால், ஏக காலத்தில் ஆயிரம் தேனீக்கள் தன் தேக முழுவதும் கொட்டிவிட்டது போல் அவளுக்கு அத்தனை வேதனை உண்டாயிற்று. போதும், ஏழேழு ஜன்மத்துக்கும் போதும். மறுபடியும் கல்கத்தாவுக்குப் போய் அவர்களுடைய முகத்தில் விழிப்பது என்பது இயலாத காரியம். முடியவே முடியாது!

நெடுங்கரையிலோ வீடு பூட்டிக் கிடக்கிறது. திறந்திருந்தால் தான் என்ன? அங்கே எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? அப்பா சம்மதித்தாலும் சித்தியும் பாட்டியும் தன்னை வைத்துக்கொண்டிருக்கச் சம்மதிப்பார்களா? ஒவ்வொரு நிமிஷமும் தன்னை ஏசிக் காட்ட மாட்டார்களா? "போ! போ!" என்று பிடுங்கி எடுத்துவிட மாட்டார்களா? அப்பாவையும் அவர்கள் வதைத்து விடுவார்களே? தன்னால் அப்பாவுக்கு இத்தனை நாளும் நேர்ந்த கஷ்டமெல்லாம் போதாதா?

அப்பாவுக்குக் கஷ்டம்! தன்னால்! – இதை நினைத்துச் சாவித்திரி தன் மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். தன்னால் அப்பாவுக்குக் கஷ்டம் என்ற எண்ணம் இந்த நிமிஷம் வரையில் அவள் மனத்தில் இருந்தது. இப்போது அது மாறிற்று. 'என்ன? அப்பாவுக்கு என்னால் கஷ்டமா? அவரால் எனக்குக் கஷ்டம் இல்லையா?' என்று எண்ணினாள். தான் அநுபவித்த இத்தனை துன்பங்களுக்கும் யார் காரணம்? அப்பாதான் இல்லையா? 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கொடு என்று நான் அழுதேனா? இந்த ஸ்ரீதரனுக்குத்தான் வாழ்க்கைப்படுவேன் என்று இவரிடம் சொன்னேனா? இவரை யார் என்னை இப்படிப்பட்ட புருஷனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கச் சொன்னது? அறியாத பிராயத்தில் என்னை இப்படிப்பட்ட கதிக்கு ஆளாக்கினாரே? கல்யாணம் செய்ததற்குப் பதில் என்னைப் படிக்க வைத்து இதோ இந்த ஆஸ்பத்திரியில் உள்ள நர்ஸுகளைப்போல் என்னையும் ஒரு நர்ஸாகச் செய்திருக்கப்படாதா?..."

ஆம்; சாவித்திரிக்கு உணர்வு தெளிந்ததிலிருந்து அவள் இந்த நினைவாகவே இருந்தாள். ஆகா! இந்த நர்ஸுகள் எவ்வளவு உற்சாகமாயிருக்கிறார்கள்? எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறார்கள்? சுயமாகச் சம்பாதித்து ஜீவனம் செய்வதைப் போல் உண்டா? இவர்களுக்குக் கவலை ஏது? பிறருடைய கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லையல்லவா? ஒருவரிடம் பேச்சுக் கேட்கவேண்டிய அவசியமும் இல்லை யல்லவா? பெண் ஜன்மம் எடுத்தவர்களில் இவர்கள் அல்லவா பாக்கியசாலிகள்?

இப்படிச் சதாகாலமும் சிந்தனை செய்துகொண்டிருந்தாள் சாவித்திரி. சிந்தனை செய்யச் செய்ய அவர்களைப் போல் தானும் சுதந்திர வாழ்க்கை வாழ வேண்டுமென்ற ஆசை அவள் மனத்தில் அபரிமிதமாக வளர்ந்து கொண்டிருந்தது. இனிமேல், தான் பிறந்த வீட்டிலேயோ, புகுந்த வீட்டிலேயோ போய் வயிறு வளர்ப்பதில்லையென்னும் திடசங்கல்பம் அவளுடைய மனத்தில் ஏற்பட்டது. உயிர் வாழ்ந்தால், இந்த நர்ஸுகளைப் போல் சுய ஜீவனம் செய்து சுதந்திரமாக வாழவேண்டும்; இல்லாவிடில் எந்த வகையிலாவது உயிரை விட்டுவிடவேண்டும். பிறர் கையை எதிர்பார்த்து, பிறருக்கு

அடிமையாகி வாழும் வாழ்க்கை இனிமேல் வேண்டாம். சாவித்திரி இவ்வாறு சங்கல்பம் செய்து கொள்ளும் சமயத்தில் தொட்டிலில் கிடக்கும் குழந்தை விரலை ருசி பார்த்துச் சப்புக்கொட்டும் சத்தம் கேட்கும். 'ஐயோ! இந்தச் சனியன் ஒன்றை ஸ்வாமி நம் தலையில் கட்டி விட்டாரே? நாம் செத்துப் போவதாயிருந்தால் இதை என்ன செய்வது?' என்ற ஏக்கம் உண்டாகும்.

சாவித்திரிக்குக் குழந்தை பிறந்து இருபது நாளாயிற்று. அன்று நர்ஸ் சம்பங்கி சாவித்திரியிடம் வந்து, "சாவித்திரியம்மா! உங்களுக்கு உடம்பு கம்ப்ளீட்டா சொஸ்தமாயிடுத்து. நாளைக்கு உங்களை ஹாஸ்பிடல்லேயிருந்து அனுப்பி விடணுமென்று மேட்ரன் சொல்லிவிட்டாங்க. கிளம்பறத்துக்கு ரெடியாயிருங்க; யாருக்காவது சொல்லியனுப்ப வேணும்னா, சொல்லியனுப்பிச்சுடுங்க" என்றாள்.

சாவித்திரிக்கு இடி விழுந்ததுபோல் இருந்தது. 'ஐயோ! ஆஸ்பத்திரியை விட்டுப் போக வேண்டுமா?' தாயின் அன்பு என்பதைத் தன் வாழ்நாளில் அநுபவித்தறியாதவள் சாவித்திரி. ஆனால் மற்றப் பெண்களிடம் அவர்களுடைய தாய்மார்கள் காட்டும் அன்பையும் ஆதரவையும் பார்த்திருக்கிறாள். அத்தகைய அன்பையும் ஆதரவையும் இந்த ஆஸ்பத்திரியில் தான் சாவித்திரி முதன் முதலில் கண்டாள். அப்படிப்பட்ட இடத்தை விட்டா நாளைக்குப் போக வேண்டும்? எங்கே போவது?

மறுபடியும் அந்தப் பக்கம் நர்ஸ் வந்த போது, "நர்ஸு அம்மா! இங்கே கொஞ்சம் உட்காருங்கள். ஒரு விஷயம் கேட்கிறேன். சொல்லுங்கள்" என்றாள்.

நர்ஸ் உட்கார்ந்ததும், "இந்த ஆஸ்பத்திரியிலேயே நானும் உங்களையெல்லாம்போல் நர்ஸா இருக்கேன்னு சொன்னா, மேட்ரன் என்னை எடுத்துக்குவாங்களா?" என்று கேட்டாள்.

வேறு நர்ஸாயிருந்தால் சிரித்திருப்பாள். ஆனால், சம்பங்கிக்குச் சாவித்திரியிடம் அநுதாபம் உண்டாகியிருந்தபடியால், அவள் சிரிக்கவில்லை; பரிதாபப்பட்டாள்.

"அம்மா, நர்ஸ் ஆகிறது அவ்வளவு சுலபமில்லை. முதலில், இங்கிலீஷ் பத்தாவது வகுப்பு வரையில் படித்திருக்க வேண்டும். அப்புறம் மூணு வருஷம் டிரெயினிங் ஆக வேண்டும். மேலும், உனக்குக் கைக்குழந்தை வேறு இருக்கு; சான்ஸே கிடையாது. இந்த ஆசையை விட்டுடு, அம்மா!" என்றாள்.

சாவித்திரி இம்மாதிரி பதிலை ஒருவாறு எதிர்பார்த்தாள். ஆகையால் ரொம்ப ஏமாற்றம் அடையவில்லை.

"அது சரி, ஸிஸ்டர்! நீங்க முன்னயே இரண்டொரு தடவை என்னுடைய பந்துக்கள் அட்ரஸ் கேட்டயள். நான் திக்கற்றவள் என்று சொன்னேன். என்னைப் போன்றவள் வேலை செய்து ஜீவனம் செய்யவேணுமென்றால், அதற்கு ஒரு வழியும் இல்லையா? நீங்கள் ஏதாவது எனக்கு ஒத்தாசை செய்யப்படாதா?" என்றாள்.

"நான் என்ன பண்ணுவேன், சாவித்திரியம்மா! நீ முன்னே சொன்னதிலிருந்து நான் ஐந்தாறு பெரிய மனுஷா வீட்டிலே விசாரிச்சேன், உன்னை ஏதாவது வேலைக்கு வச்சுக்கறாங்களான்னு. கைக் குழந்தைக்காரின்னா வேண்டாங்கறாங்க எல்லாரும். நான் சொல்றதைக் கேளு, அம்மா! இந்த ஆசையெல்லாம் உனக்கு வேண்டாம். கல்யாணம்னு பண்ணிண்டுட்டா, புருஷன் எப்படி இருந்தாலும், அவனைக் கட்டிண்டுதான் மாரடிச்சாகணும். நீ ஒருத்திதான் இப்படிக் கஷ்டப்படுறதாக எண்ணிக்காதே! நம் தேசத்திலே உன் மாதிரி எத்தனையோ பேர். யாருக்காவது கடுதாசி எழுதணும். இல்லாப் போனா தந்தியடிக்கணும்னா சொல்லு, அடிக்கிறேன்" என்றாள்.

சாவித்திரி தன்னைப்பற்றி ஒரு விவரமும் சொல்லாவிட்டாலும், அவள் புருஷனுடன் ஏதோ சண்டை போட்டுக் கொண்டு ஓடி வந்திருக்க வேண்டும் என்று சம்பங்கி ஊகம் செய்திருந்தாள். அதனால்தான் மேற்கண்டவாறு சொன்னாள்.

சாவித்திரி இதற்குப் பதில் சொல்லாமல், முகத்தைக் கைகளினால் மூடிக்கொண்டு விம்மத் தொடங்கவே, நர்ஸ் அங்கிருந்து போய்விட்டாள்.

அன்று சாயங்காலம் நர்ஸ் சம்பங்கி, கையில் ஒரு பிரித்த பத்திரிகையுடன் சாவித்திரியிடம் விரைவாக வந்தாள். "சாவித்திரி அம்மா! உனக்கு வேலை வேணுமென்று சொன்னாயே? இதோ ஒரு விளம்பரம் இருக்கிறது, கேள்" என்று சொல்லி வாசிக்கத் தொடங்கினாள்:

"தேவை : பம்பாயிலுள்ள ஓர் உயர் குடும்பத்து எஜமானிக்குத் தோழியாக இருக்க ஒரு தமிழ் நாட்டுப் பெண் தேவை. தக்க சம்பளம் கொடுக்கப்படும்..."

இவ்வளவு வாசித்த நர்ஸ், இங்கே சட்டென்று நிறுத்தி, "ஐயையோ! இதிலேயும், குழந்தை உள்ளவர்கள் விண்ணப்பம் போட வேண்டாமென்று எழுதியிருக்கே!" என்றாள். பிறகு, சாவித்திரியைப் பார்த்து, "உன் அதிர்ஷ்டம் அவ்வளவுதானம்மா! வேண்டாத புருஷனைக் கட்டிண்டு மாரடிக்கணும்னுதான் உன் தலையிலே எழுதியிருக்கு" என்று சொல்லிவிட்டு, அந்தப் பத்திரிகையை அங்கேயே போட்டுவிட்டுப் போனாள்.

ஆனால், அதே சமயத்தில் சாவித்திரி பல்லைக் கடித்துக் கொண்டு, 'என்ன கதி நேர்ந்தாலும் வேண்டாத புருஷனுடன் நான் மாரடிக்கப் போவதில்லை' என்று மறுபடியும் சங்கல்பம் செய்து கொண்டாள். சம்பங்கி எறிந்துவிட்டுப் போன பத்திரிகையை எடுத்து அந்த விளம்பரத்தைப் பார்த்தாள். அதைத் திரும்பித் திருப்பி நூறு தடவை படித்தாள். 'குழந்தை உள்ளவர்கள் விண்ணப்பம் போட வேண்டியதில்லை' என்ற வாக்கியம் அவளுடைய நெஞ்சில் பழுக்கக் காய்ந்த இரும்புக் கரண்டியினால் எழுதியது போல் பதிந்து புண்ணாக்கிற்று.

மறுநாள் சாவித்திரியை ஆஸ்பத்திரியை விட்டு அனுப்பி விட்டார்கள். இரண்டாவது தடவையும் சாவித்திரி சென்னையின் வீதிகளில் அநாதையாய் அலையும்படி ஆயிற்று. ஆனால் இந்தத் தடவை அவள் தனியாக அலையவில்லை; கையில் குழந்தையுடன் அலைந்தாள். மேலும் இம்முறை சம்பு சாஸ்திரியைத் தேடி அலையவில்லை; ஜீவனத்துக்கு வேலை தேடி அலைந்தாள். அவளுடைய அலைச்சல் இந்த முறை வெகு சீக்கிரமாகவும் முடிவடைந்து விட்டது.

முதலில் பெரிய மனுஷர்கள் வீடுகளைத் தேடிப் போனாள். ஒரு வீட்டில் எஜமானியம்மாள், "கையிலே குழந்தையை வைச்சுண்டு, வேலைக்கு வர்றயே? வேலையைப் பார்ப்பயா, குழந்தையைப் பார்ப்பயா? போ! போ" என்றாள். இன்னும் சில வீடுகளில், அவளுடைய நடத்தையைப் பற்றிச் சந்தேகித்துக் கேள்வி கேட்டார்கள். "நீ கைம் பெண்ணா, வாழுகிறவளா?" என்று வேறு சிலர் கேட்டார்கள். ஹோட்டல்களில் வேலை செய்து பிழைக்கலாம் என்று சாவித்திரி முன் எப்போதோ கேள்விப்பட்டிருந்தாள். ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து, அந்த ஹோட்டல்காரனை, "வேலை கிடைக்குமா?" என்று கேட்டாள். அவன் சாவித்திரியைத் தனியாக அழைத்துச் சென்று, "இந்தக் குழந்தையை எங்கேயாவது தொலைச்சுட்டு வந்துடு. உன்னை நான் ஜில்லுனு வச்சுக்கறேன்" என்றான். சாவித்திரிக்கு, 'நாம் இன்னது செய்கிறோம்' என்றே தெரியவில்லை. அந்த ஹோட்டல்காரனுடைய கன்னத்தில் பளீரென்று ஓர் அறை அறைந்தாள். உடனே அவளைப் பயம் பற்றிக் கொண்டது. ஹோட்டலிலிருந்து வெளிக் கிளம்பி ஓடினாள்.

கையில் குழந்தையுடன் ஒரு ஸ்திரீ நடுரோட்டில் ஓடுவது விசித்திரமல்லவா? சாலையோடு போனவர்கள் அவளை வெறிக்கப் பார்த்தார்கள். அவர்களுடைய முகங்கள் மனிதர்கள் முகங்களாகவே சாவித்திரிக்குத் தோன்றவில்லை. ராட்சதர்கள், பேய்கள், பிசாசுகளின் முகங்களாகத் தோன்றின. ஆகவே இன்னும் விரைவாக ஓடினாள்.

மனத்தில் பொங்கிக் கொண்டிருந்த கோபமும் பயமும் வெறியும் அவளுடைய தேகத்திற்குப் பலத்தைக் கொடுத்து ஓடச் செய்தன. ஆனால், குழந்தை எப்படித்

தாங்கும்? அது சிணுங்கி அழத் தொடங்கியது. சாவித்திரி நின்று, குழந்தையின் முகத்தைப் பார்த்து, "என் கண்ணே! வேண்டாம்" என்றாள். 'இந்தப் பாவி இன்னும் எத்தனை நேரம் உயிரோடிருக்கப் போகிறேனோ, என்னமோ? அதற்குள் உன்னைக் கஷ்டப்படுத்துவானேன்?' என்று எண்ணினாள்.

அப்போது கொஞ்ச தூரத்தில் யாரோ, "மண்ணாலானா இந்தக் காயம்-" என்று பாடிக்கொண்டு போனது காதில் விழுந்தது.

சாவித்திரி கையிலிருந்த குழந்தையைப் பார்த்து, "கண்ணே! நீயும் மண்; நானும் மண். இரண்டு பேரும் தண்ணீரில் இறங்கிக் கரைந்து போய்விடுவோம்!" என்று சொல்லிச் சிரித்தாள். குழந்தைப் பிராயத்தில் தான் கொல்லைக் கிணற்றில் விழுந்த செய்தி ஞாபகத்தில் வந்தது. 'ஐயோ! அப்பா! உங்கள் பெண் இந்த மாதிரியெல்லாம் திண்டாட வேண்டுமென்பதற்காகவா கிணற்றில் விழுந்தவளை எடுத்துக் காப்பாற்றினீர்கள்? அப்போதே நான் செத்துப்போய் எங்கம்மா போன இடத்துக்குப் போயிருக்கக் கூடாதா?'

குழந்தை அப்போது தன் பட்டுப்போன்ற மிருதுவான விரல்களால் தாயின் மார்பைத் தொட்டது. சாவித்திரி குனிந்து குழந்தையை முத்தமிட்டாள். "என் கண்ணே! உன்னை நான் விட்டுவிட்டுப் போய்விடுவேன் என்று பயப்படுகிறாயா? என் அம்மாவும் அப்பாவும் என்னைப் பிறந்த பின் கைவிட்டார்கள்; உன் அப்பா உன்னை, பிறப்பதற்கு முன்பே கைவிட்டார். ஆனால் நான் உன்னைக் கைவிடமாட்டேன். இந்த உலகத்தில் நீ வளர்ந்து பெரியவளானால் என்னைப் போலவேதானே கஷ்டப்படுவாய்? அப்போது என்னைத்தானே நோவாய்? வேண்டாம். இந்த உலக வாழ்க்கை உனக்கு வேண்டாம். வா, இரண்டு பேருமாய்ப் போகலாம்" என்றாள். பிறகு, நிர்மானுஷயமான ஜலப் பிரதேசத்தைத் தேடி நிதானமாக நடந்து சென்றாள்.

சாவித்திரி! நீயும் உன் குழந்தையும் நீண்ட காலம் வாழ்ந்து உலகின் சுகதுக்கங்களை அநுபவிக்க வேண்டுமென்று பிரம்மதேவன் உங்கள் தலையில் எழுதியிருக்கிறானே? நீ அதை மீற நினைப்பதில் என்ன பிரயோஜனம்?

15. சாவடிக் குப்பம்

நல்லானின் மச்சான், சம்பு சாஸ்திரியைப் பார்த்த அன்று இரவு வெகு உற்சாகமாகச் சாவடிக் குப்பத்தில் தன் வீட்டுக்குப் போனான். அந்தச் செய்தியை நல்லானுக்குச் சொன்னால் அவன் ரொம்பவும் சந்தோஷமடைவானென்று அவனுக்குத் தெரியும்.

"இன்னிக்கு நான் ஒத்தரைப் பார்த்தேன்! அது யாருன்னு சொல்லு பார்க்கலாம்" என்றான் நல்லானிடம்.

"நீ யாரைப் பார்த்தா என்ன, பாக்காட்டி என்ன? எனக்குச் சாஸ்திரி ஐயாவைப் பார்க்காமே ஒரு நிமிஷம் ஒரு யுகமாயிருக்கு. நெடுங்கரைக்கு ஒரு நடை போய் அவங்களைப் பார்த்துட்டு வந்தாத்தான் என் மனசு சமாதானம் ஆகும். இல்லாட்டி, நான் செத்துப் போனேன்னா என் நெஞ்சு கூட வேவாது" என்றான்.

"அப்படியானா, நெடுங்கரைக்குப் போயிட்டு வர்ற பணத்தை எங்கிட்டக் கொடு" என்றான் சின்னசாமி.

"என்னத்திற்காக உங்கிட்டக் கொடுக்கிறது?"

"கொடுத்தேன்னா, சாஸ்திரி ஐயாவை நான் இவ்விடத்துக்கே வரப் பண்றேன்."

"என்னடா ஒளற்றே!" என்று நல்லான் கேட்டான்.

"நான் ஒண்ணும் ஒளறலை. சாஸ்திரி ஐயா இப்போது நெடுங்கரையில் இல்லை. இந்த ஊரிலேதான் இருக்காரு. இன்னிக்கு அவரைத்தான் பார்த்தேன்" என்றான்.

நல்லான் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்திருந்தான். "அடே இந்த வெஷயத்திலே மட்டும் எங்கிட்ட விளையாடாதே! நெஜத்தை நடந்தது நடந்தபடி சொல்லு!" என்றான்.

சின்னசாமி விவரமாகச் சொன்னான். அவன் எதிர் பார்த்தபடியே நல்லானுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. கடைசியில் "போவட்டும்; இந்த மட்டும் ஐயாவைப் பார்த்துப் பேசறத்துக்கு ஒனக்குத் தோணித்தே; அது நல்ல காரியந்தான். ஐயா எவ்விடத்திலே இறங்கியிருகாருன்னு கேட்டுண்டாயா?" என்றான்.

"அது கேக்க மறந்துட்டேன்; ஆனா, ஐயாவைத்தான் நான் சாவடிக் குப்பத்துக்குக் கட்டாயம் வரணும்னு சொல்லியிருக்கேனே?"

"அட போடா, முட்டாள்! நீ சொன்னதுக்காக ஐயா வந்துடுவாங்களா? அவங்களுக்கு ஏற்கெனவே என் மேலே கோபமாச்சேடா, அவங்க பேச்சைத் தட்டிண்டு நான் பட்டணத்துக்கு வந்ததுக்காக? என்னைத் தேடிக்கிட்டு எங்கேடா வரப்போறாரு?" என்றான் நல்லான்.

ஆகவே, முடிவில் சின்னசாமிக்கு அவன் சாஸ்திரியாரைப் பார்த்து வந்ததன் பலனாக வசவுதான் கிடைத்தது. நல்லானுடன் அவனுடைய மனைவியும் சேர்ந்து கொண்டு தன் தம்பியைத் திட்டினாள். "மறந்துட்டேன், மறந்துட்டேங்கறயே வெக்கமில்லாமே? சோறு திங்க மறப்பயா?" என்று அவள் கேட்டாள்.

பிறகு இரண்டு நாள் நல்லானும் அவன் மச்சானுமாகச் சேர்ந்து, அந்தப் பக்கத்திலுள்ள பிராம்மணாள் ஹோட்டலில் எல்லாம் போய், "நெடுங்கரை சம்பு சாஸ்திரியார் இருக்காரா?" என்று கேட்டார்கள். "நெடுங்கரையையும் காணும், சம்பு சாஸ்திரியையும் காணும்" என்ற பதில் தான் வந்தது.

நல்லானுக்கு இதே கவலையாய்ப் போயிற்று. "கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போச்சே, இந்த முட்டாளாலே! எங்கே தங்கியிருக்கீங்கன்னு ஒரு வார்த்தை கேக்காமே வந்துட்டானே?" என்று ஒரு நாளைக்கு முப்பது தடவை அவன்

சொல்லிக்கொண்டிருந்தான். ஒரு நாள் அதிகாலையில் அவன் எழுந்திருந்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, 'சாஸ்திரி ஐயாவை ஒருவேளை இந்த ஜன்மத்திலே காண முடியாமலேயே போய்விடுமோ?' என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது பின்பனிக் காலமாகையால், பொழுது விடிந்திருந்தும் பனி பெய்து கொண்டிருந்தது.

திடீரென்று அவனுக்குப் பின்னால், "அப்பா! நெடுங்கரை நல்லான் என்பவன் வீடு இங்கே எங்கிருக்கு?" என்று ஒரு குரல் கேட்டது. அந்தக் குரல் அவனுக்குத் தெரியாமல் போய்விடுமா? திடுக்கிட்டு எழுந்திருந்து திரும்பிப் பார்த்தான். சாஸ்திரி ஐயாதான்!

"சாமி! சாமி! இந்த ஏழையைத் தேடிக்கிட்டு வந்தீங்களா?" என்று நாத் தழுதழுக்கக் கூறினான்.

அப்போது அவனுடைய பார்வை சாஸ்திரியின் கைகளில் ஏந்தியிருந்த பொருளின் மேல் விழுந்தது. அது ஒரு சின்னஞ்சிறு குழந்தை!

"இது என்னங்க? கொழந்தை ஏதுங்க?"

"நல்லான்! இந்த உலகத்தைத் துறந்து சந்நியாசியாகலாம் என்றிருந்தேன். அப்போது பகவான் இந்தக் குழந்தையைக் கொடுத்தார். எனக்கு வேறு போக்கிடம் இல்லாததால் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன், அப்பா!" என்றார் சாஸ்திரியார்.

"அப்படிச் சொல்லாதீங்க, சாமி! உங்களுக்கா போக்கிடமில்லை? நான் பூர்வ ஜென்மத்திலே செய்த பாக்கியம், நீங்க வந்தீங்க" என்று நல்லான் சொல்லி, "நிக்காதீங்க, உக்காந்து எல்லாம் வெவரமாய்ச் சொல்லுங்க" என்றான்.

சாஸ்திரியார் மடியில் குழந்தையுடன் அந்தக் குடிசையின் திண்ணையில் உட்கார்ந்தார். எல்லாம் விவரமாய்ச் சொன்னார். சாவித்திரியும் நல்லானும் ஊரை விட்டுப் போனபிறகு நெடுங்கரை வாழ்க்கை தமக்குப் பிடிக்காமற் போனதும், இந்தச் சமயத்தில் பெரியம்மா, பட்டணத்துக்குப் போய்ப் பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கும்படி யோசனை சொன்னதும், அதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு தான் கிளம்பிவந்ததும், பட்டணத்தில் அநேக வீடுகளில் பாட்டு வாத்தியார் வேலைக்காக அலைந்ததும், எங்கும் வேலை கிடைக்காததும், கடைசியில் உலக வாழ்க்கையை விட்டுச் சந்நியாசியாகலாமென்று தீர்மானித்ததும், அந்தத் தீர்மானத்துக்குப் பிறகு இவ்விடம் போகிறோம் என்ற உத்தேசமில்லாமல் கால்போன வழியில் நடந்து சென்றதும், நடந்ததனால் களைப்பு அடைந்து ஓரிடத்தில் உட்கார்ந்ததும், உட்கார்ந்த இடத்தில் தூக்கம் வந்து படுத்துத் தூங்கியதும் – எல்லாம் சொல்லிவிட்டு, கடைசியில், "அப்பா! தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டபோது பக்கத்தில் குழந்தை அழும் குரல் கேட்டது. யாராவது அக்கம் பக்கத்தில் இருப்பார்களோ என்று பார்த்தேன். சுற்றுமுற்றும் தேடினேன். சத்தம் போட்டும் பார்த்தேன். ஒருவரும் ஏனென்றும் கேட்கவில்லை. 'சரி, நாம் உலகத்தைத் துறப்பது பராசக்திக்கு விருப்பமில்லை, ஆகையால்தான் இந்தப் பந்தத்தை நமக்கு அளித்திருக்கிறாள்' என்று தீர்மானித்துக் கொண்டேன். உன் மைத்துனன் 'சாவடிக் குப்பம்' என்று சொல்லியிருந்தது ஞாபகத்தில் இருந்தது. விசாரித்துக் கொண்டு வந்து சேர்ந்தேன். நல்லான்! உன் மச்சான் என்னை உன் வீட்டுக்கு வரும்படி அழைத்தபோது, 'கேவலம் நல்லானிடம் போயா ஒத்தாசை கேட்பது?' என்று எண்ணினேன். அப்படி நான் கர்வப்பட்டது பிசகு என்று பகவான் புத்தி கற்பித்துவிட்டார்" என்றார்.

நல்லான், "சாமி! அப்படிச் சொல்லவே சொல்லாதீங்க. சாவடிக் குப்பம் கொடுத்து வச்சுதுங்க, நீங்க வர்றதுக்கு. அதனாலே வந்தீங்க. இங்கே உங்களுக்குத் தனியா ஒரு குடிசை போட்டுத் தர்றோமுங்க. அதிலே நீங்களும் குழந்தையுமா இருந்துகிட்டு, எங்களுக்கெல்லாம் கதை புராணம் சொல்லிக் கடைத்தேற்றுங்க!" என்றான்.

அன்று மத்தியானத்துக்குள் சாஸ்திரியாருக்காக ஒரு தனிக் குடிசை போட்டாயிற்று. நல்லான் மனைவி வந்து குடிசையில் குழந்தைக்காக ஒரு தூளி

போட்டுக் கொடுத்தாள். நல்லான், குழந்தைக்குப் பாலுக்காக ஓர் ஆடு கொண்டு வந்து கட்டினான்.

சாயங்காலம் புதுக் குடிசையின் வாசலில் சாஸ்திரியும் நல்லானும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது, கொஞ்ச தூரத்தில் ஏதோ கலாட்டா நடந்து கொண்டிருந்தது. ஐந்தாறு பேர் கும்பலாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். காதால் கேட்க முடியாத துர்ப்பாஷையில் அவர்கள் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

"சாமி! இந்த ஜனங்கள் எல்லாம் உங்களாலேதான் சீர்திருந்தணும்" என்று நல்லான் சொன்னான்.

சாஸ்திரி சுற்று முற்றும் பார்த்தார். தெருவெல்லாம் ஒரே குப்பையும் அசிங்கமுமாயிருந்தது. அந்தக் குப்பைக்கும் அசிங்கத்துக்குமிடையில் குழந்தைகள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பரட்டைத் தலையும் அழுக்கு உடம்பும், கந்தல் துணியும் பார்க்க முடியாதபடி இருந்தன. நாலு பக்கத்திலிருந்தும் துர்நாற்றம் வந்து கொண்டிருந்தது.

இத்தனைக்கும், சாவடிக் குப்பம் இருந்த இடம் அழகும் வசதியும் பொருந்தியது. சுற்றிலும் மரங்கள் அடர்ந்து நிழல் தந்துகொண்டிருந்தன. தெரு விஸ்தாரமாக இருந்தது. பட்டணத்தின் எல்லைக்கு வெளியே சற்றுத் தூரத்தில் இருந்தபடியால், இவ்வளவு விஸ்தாரமாக அவர்கள் குடிசை கட்டிக்கொள்ளுவது சாத்தியமாயிற்று. இவ்வளவு சௌகரியமான இடத்தைத்தான், நாளெல்லாம் மற்றவர்களுடைய பங்களாக்களைச் சுத்தமாக்கி அழகுபடுத்திவிட்டு வந்த அதே ஏழை ஜனங்கள் அவ்வளவு ஆபாசமாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

சாஸ்திரி இதையெல்லாம் பார்த்தார். இந்தச் சாவடிக் குப்பத்து ஜனங்களுக்குச் சேவை செய்வதற்காகவே, பகவான் ஒரு குழந்தையைக் கொடுத்துத் தம்மை மறுபடியும் சம்சாரியாக்கி அவ்விடம் அனுப்பியிருப்பதாக அவர் மனத்தில் தோன்றிற்று. இது தனக்குப் புனர்ஜன்மம் என்றும், இனிமேல் பழைய வாழ்க்கைக்கும் தமக்கும் சம்பந்தமில்லையென்றும் தீர்மானித்துக் கொண்டார்.

அன்றிரவு, சம்பு சாஸ்திரி தமது புதுக் குடிசையில் பஜனை செய்ய ஆரம்பித்தார். நல்லானும் அவர் மனைவியும் மைத்துனனுந்தான் முதலில் பஜனைக்கு வந்தார்கள். நாளடைவில் சாவடிக் குப்பத்து ஜனங்கள் ஒவ்வொருவராகப் பஜனைக்கு வர ஆரம்பித்தார்கள்.

ஆறு வருஷ காலத்தில் சாவடிக் குப்பம் அடையாளமே தெரியாதபடி மாறுதல் அடைந்தது. குப்பத்து ஜனங்களின் வாழ்க்கை முறையும் அடியோடு மாறிற்று.

இந்தக் காலத்தில், பராசக்தி சம்பு சாஸ்திரிக்கு அளித்த குழந்தை சாருவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள்.

நாலாம் பாகம்

இளவேனில்

"செந்தா மரை விரியத் தேமா ங்
கொ ழுந்தொழு கமைந்தா ர சோ கம் மட லவி ழ...."
"மன்னுயிரெ ல்லா ம கிழ்துணை புணர்க் கும்
இன் னிள வே னில்." - இளங் கோவடி கள்

1. சாருவின் பிரார்த்தனை

கீழ் வானம் வெளுத்தது. காலைப் பிறை, ஒளி இழந்து மங்கிற்று. அதனருகில் தோன்றிய சுக்கிரன் 'இதோ மறையப் போகிறேன்' என்று கண் சிமிட்டிச் சமிக்ஞை செய்தது.

கோழி கூவிற்று; குருவி சிலும்பிற்று; காகம் கரைந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் நானாவிதமான பட்சி ஜாலங்கள் பற்பல ஸ்வரங்களில் பாடத் தொடங்கின.

விருட்சங்களிலும் செடிகளிலும் இருந்த பூ மொக்குகள், பட்சிகளின் இனிய கானத்தைக் கேட்டு ஆனந்தத்தினால் சிலிர்த்தன.

அந்தக் குளிர்ந்த அதிகாலை நேரத்தில் வீசிய இனிய இளந்தென்றல் சற்று விரிந்த பூ இதழ்களின் மீது தவழ்ந்து சென்று நாலு பக்கமும் நறுமணத்தைப் பரப்பிற்று.

பட்சிகளின் கீதத்துக்குச் சுருதி போடுவதுபோல் தூரத்தில் கடலின் 'ஹோ' என்ற ஓசை இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

சம்பு சாஸ்திரி படுக்கையில் எழுந்து உட்கார்ந்து மனோகரமான பூபாள ராகத்தில், "கௌஸல்யா ஸுப்ரஜா ராமா" என்ற ராமாயண சுலோகம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"தாத்தா! தாத்தா!" என்றாள் சாரு.

"முழிச்சுண்டயா, அம்மா! எங்கே, எழுந்து உட்காரு" என்றார் சம்பு சாஸ்திரி.

"நான் முழிச்சுக்கலை; இன்னும் தூங்கிண்டு தான் இருக்கேன்" என்றாள் சாரு.

"அப்படின்னா, தூங்கினபடியே, நேத்திக்கு ஸரஸ்வதி ஸ்தோத்திரம் சொல்லிக் கொடுத்தேனே, அதைச் சொல்லு, பார்க்கலாம்" என்றார் சாஸ்திரி.

சாரு, உடனே எழுந்து உட்கார்ந்தாள். "எங்கே, சொல்லிக் கொடு தாத்தா, சொல்றேன்" என்றாள்.

சாஸ்திரிகள், "ஜய ஜய தேவி தயாலஹரி" என்ற கீதத்தை ஆரம்பித்துச் சொல்லிக் கொடுத்தார். சாருவும் சொல்லிக் கொண்டு வந்தாள். ஆனால், பாதிப் பாட்டில் திடீரென்று அவள் நிறுத்திவிட்டு, "தாத்தா! தாத்தா! கொஞ்சம் இரு, தாத்தா வர்றேன்!" என்று கூறிவிட்டு, வாசலில் ஓடினாள்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம், "தாத்தா! இங்கே வாயேன், சீக்கிரம் வாயேன்" என்று சாரு வாசலிலிருந்து கூவுவதைக் கேட்டு, சாஸ்திரிகள் குடிசைக்கு வெளியே வந்தார்.

"பார்த்தாயா, தாத்தா! நம்மாத்துச் செடியிலே ரோஜாப்பூ பூத்திருக்கு. நேத்தி சாயங்காலம் மொட்டாயிருந்தது. இப்பப் பூவாய்ப் போயிடுத்து, தாத்தா!" என்று கூச்சலிட்டாள்.

சம்பு சாஸ்திரி, வைகறையின் மங்கிய வெளிச்சத்தில், அந்த மலர்ந்த ரோஜாவையும், சாருவின் மலர்ந்த முகத்தையும் மாறி மாறிப் பார்த்துச் சந்தோஷப்பட்டார்.

சாரு, பூவைத் தொடுவதற்குப் போனாள். கையை சுருக்கென்று முள் குத்தவே, "அப்பப்பா!" என்று கையை உதறினாள்.

"தாத்தா! நேத்திக்கு எங்க டீச்சர் கூடச் சொன்னா, ரோஜாப் பூவிலே முள் இருக்காப்பலே, சுகத்திலேயும் கஷ்டம் இருக்கும்னு. ஸ்வாமி என்னத்துக்காக, தாத்தா, இவ்வளவு அழகான பூச்செடியிலே கொண்டு போய் முள்ளை வைச்சிருக்கார்?" என்று கேட்டாள்.

"சாரு, உலகத்திலே எல்லாரும் அப்படித்தான் சொல்ற வழக்கம். ரோஜாவிலே முள் இருக்கேன்னு வருத்தப்படுவார்கள். ஆனால், ஒரு பெரியவர் இதை வேறு தினுஸாகச் சொல்லியிருக்கார்; 'ரோஜாவிலே முள் இருக்கேன்னு வருத்தப்படக் கூடாது; முள்ளிலே ரோஜா இருக்கேன்னு சந்தோஷப்படணும்' என்று அவர் சொன்னார். அந்த மாதிரிதான். உலகத்திலும் சுகத்துக்கு நடுவிலே கஷ்டம் இருக்கேன்னு வருத்தப்படக்கூடாது; இவ்வளவு கஷ்டத்துக்கு நடுவிலே சுகமும் இருக்கேன்னு சந்தோஷப்படணும்" என்றார் சாஸ்திரி.

இந்தத் தத்துவமெல்லாம் சாருவுக்குச் சரியாகப் பிடிபடவில்லை. ஆகவே, அவள், "சரி, தாத்தா! நான் பல் தேய்க்கப் போறேன், தாத்தா!" என்று போய் விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் நல்லான் மனைவி வந்து சாருவுக்குத் தலையை வாரிப் பின்னிவிட்டாள். கையில் சங்கு வளையல்களும், கழுத்தில் மணி மாலைகளும் போட்டு அலங்காரம் செய்தாள். இதற்குள் தாத்தா காய்ச்சி வைத்திருந்த பாலைச் சாப்பிட்டுவிட்டு, சாரு அவரிடம் சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடம் கிளம்பினாள். அவளுடன் சாவடிக் குப்பம் குழந்தைகள் இன்னும் சிலரும் புறப்பட்டார்கள்.

பள்ளிக்கூடத்துக்குக் கொஞ்ச தூரம் அவர்கள் நடந்து போயாக வேண்டும். வழியில் அவர்களுடைய கண்ணில் பட்ட மரங்கள் எல்லாம் பழைய காய்ந்த இலைகள் உதிர்ந்து போய், புதிய இளந்தளிர்கள் விட்டுத் தளதளவென்று காணப்பட்டன. மாமரங்களில் புதுத்தளிர்களுடன் பூக்களும் நிறைந்திருந்தன. இதனால் உலகமே புதுமை பெற்று விளங்கியது போல் இருந்தது. வஸந்த காலத்தின் உற்சாகத்தினால், சாலையின் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளும், கன்றுக் குட்டிகளும் துள்ளி விளையாடின. அதைப் பார்த்த சாருவுக்கும் துள்ளி குதித்து ஓட வேண்டுமென்று தோன்றியது.

அப்புறம் பங்களாக்கள் வந்தன. பங்களாக்களின் தோட்டங்களில் புஷ்பச் செடிகள் அபரிமிதமாகப் புஷ்பித்திருந்தன. ஒரு நாகலிங்க மரம் ஏராளமாகப் பூக்கள் பூத்துக் குலுங்கிற்று. அதிலிருந்து வந்த வாசனை நெடுந்தூரம் பரவிற்று.

வழியெங்கும் விதவிதமான வர்ண இறகுகள் உள்ள பட்டுப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. அந்தப் பட்டுப் பூச்சிகளைப் பார்க்க பார்க்க, சாருவின் உற்சாகம் பன்மடங்கு பெருகிற்று. கையிலிருந்த புத்தகப் பையைச் சாலை ஓரத்திலிருந்த மதகின் மேல் வைத்துவிட்டு, சாரு அந்தப் பட்டுப் பூச்சிகளைப் போல் தானும் இரண்டு கைகளையும் ஆட்டிக் கொண்டு பறக்க முயன்றாள். கூட வந்த குழந்தைகள், "இதென்னடி சாரு, இங்கேயே ஆரம்பிச்சிட்டே! பள்ளிக்கூடம் போய் ஆடலாம் வா!" என்று சொல்லி, அவளைக் கையைப் பிடித்து இழுத்து அழைத்துக் கொண்டு போனார்கள்.

சாரு பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்தாளோ இல்லையோ மற்றச் சிறுவர்களும் சிறுமிகளும் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள், "சாரு! ஒரு டான்ஸு பண்ணு!" என்று தலைக்குத் தலை கேட்டார்கள். "தெருவில் வாரானோ!" "இல்லை இல்லை; கிருஷ்ணா நீ பேகனே" என்று இம்மாதிரி கூச்சலிட்டார்கள்.

இதற்குள் சாருவின் உபாத்தியாயினி ஜனகம்மாள் அங்கு வந்தாள். "இதென்ன கூச்சல்? மணி அடிக்கப் போறது! எல்லாரும் அவாவா கிளாஸுக்குப் போங்க" என்றாள்.

குழந்தைகள், "டீச்சர்! டீச்சர்! சாரு ஒரு டான்ஸு பண்ணட்டும், டீச்சர்! நீங்க பாடுங்கோ, டீச்சர்" என்று கூச்சலிட்டார்கள்.

"சரி, ஒரே ஒரு பாட்டுப் பாடறேன். அப்புறம் அவாவா கிளாஸுக்கு உடனே போயிடணும்" என்று ஜனகம்மாள் சொன்னாள்.

ஜனகம்மாளுக்குச் சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளில் விசேஷ ஆர்வம் உண்டு. சங்கீதத்தில் கொஞ்சம் பயிற்சி இருந்தது. நாட்டியம் நிறையப் பார்த்திருந்தாள். இப்படித் தனக்குத் தெரிந்ததை வைத்துக் கொண்டு குழந்தைகளையும் மேற்சொன்ன கலைகளில் பயில்வித்து வந்தாள்.

வருஷந்தோறும் பள்ளிக்கூடத்துச் சிறுமிகளைக் கொண்டு கதம்பக் கச்சேரி ஒன்று அந்தப் பள்ளிக்கூடத்தில் நடத்துவது உண்டு. இதற்குக் குழந்தைகளைத் தயாரிப்பவள், ஜனகம்மாள்தான். இந்த வருஷத்தில் அவர்களுடைய பள்ளிக்கூடத்தின் கட்டிட நிதிக்குப் பணம் சேகரிப்பதற்காக ஒரு நாடகம் நடத்தலாமென்று தீர்மானித்திருந்தார்கள். இதற்காகக் குழந்தைகளைப் பொறுக்கி எடுத்தபோது, சாருவுக்கு நாட்டியம் ரொம்ப நன்றாய் வருமென்பதை ஜனகம்மாள் கண்டுபிடித்தாள். ஏற்கெனவே சாருவின் பேரில் அவளுக்கு ரொம்பப் பிரியம். இப்பொழுதோ கேட்க வேண்டியதில்லை. இந்த வருஷத்து நாடகத்தில், சாருதான் பள்ளிக்கூடத்துக்கே பெயர் வாங்கிக் கொடுக்கப் போகிறாள் என்று அவள் நம்பியிருந்தாள். ஆகவே வகுப்பின் மற்றப் பாடங்களையெல்லாங்கூட அலட்சியம் செய்து, சாருவுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுப்பதில் ஊக்கம் கொண்டிருந்தாள்.

ஜனகம்மாள் "கிருஷ்ணா நீ பேகனே பாரோ" என்ற கன்னடப் பாட்டுக்குச் சரியாகத் தமிழில் ஒரு பாட்டு தானே கவனம் செய்திருந்தாள். அதை இப்போது பாடினாள்.

சாரு, அந்தப் பாட்டின் அர்த்தத்துக்குத் தகுந்தபடி அபிநயம் பிடித்துக் கொண்டு ஆடினாள்.

குழந்தைகள் அளவிலாத ஆர்வத்துடன் சாருவின் ஆட்டத்தைப் பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். இடையிடையே கையைக் கொட்டி, அவர்கள் சாருவை உற்சாகப்படுத்தினார்கள்.

சாருவின் அபிநய ஆட்டம் அவளுடைய வாத்தியாரம்மாளுக்கே வியப்பையளித்தது. 'நாம் ஏதோ காமா சோமா என்று சொல்லிக் கொடுத்ததற்கே இவ்வளவு நன்றாய் வந்திருக்கிறதே! இன்னும் இந்தக் குழந்தைக்குத் தக்கபடி பயிற்சி அளித்தால் எவ்வளவு நன்றாய் ஆடுவாள்?' என்று எண்ணினாள்.

பள்ளிக்கூடத்து முதல் மணி அடித்தது; கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இரண்டாவது மணியும் அடித்தது.

ஆனால் சாருவின் ஆட்டம் நடந்து கொண்டேயிருந்தது. வகுப்புகளெல்லாம் காலியாய்க் கிடந்தன.

பள்ளிக்கூடத்தின் ஹெட் மிஸ்ட்ரஸ், காலியாகக் கிடந்த வகுப்புகளைப் பார்த்துக்கொண்டு, கடைசியில் ஆட்டம் நடந்து கொண்டிருந்த அறைக்குள் வந்தாள். அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

அந்த ஹெட் மிஸ்ட்ரஸ் இந்தப் பள்ளிக்கூடத்துக்குப் புதிதாக வந்தவள். ஆட்டம் பாட்டுக்களினால் பள்ளிக்கூடத்தின் 'டிஸிப்ளி'னைக் கெடுத்துவிடுவதாக ஜனகம்மாளின்பேரில் அவளுக்கு ரொம்பக் கோபம். ஆனால், பள்ளிக்கூடத்தின் நிர்வாகிகள் குழந்தைகளுக்குப் பாட்டும் ஆட்டமும் சொல்லித் தரவேண்டுமென்று வற்புறுத்தியபடியினால் அவள் சகித்துக்கொண்டிருந்தாள். இப்போது வகுப்புகளே நடக்காதபடி ஜனகம்மாள் பள்ளிக்கூடத்தையே குட்டிச் சுவராக்குவதைக் கண்டதும் அவளுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்துவிட்டது.

கோபத்தை ஜனகம்மாளின் பேரில் காட்ட முடியவில்லை; எனவே, அந்தக் கோபம் சாருவின்மேல் பாய்ந்தது.

மேஜையின் பேரில் கையில் இருந்த பிரம்பினால் ஓங்கி அடித்தாள் ஹெட் மிஸ்ட்ரஸ். எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

"டீச்சர்! கலாட்டா போதுமா?" என்றாள். உடனே ஜனகம்மாள் குழந்தைகளை அவரவர்கள் வகுப்புக்குப் போகும்படி ஜாடை காட்டி விட்டுத் தானும் போனாள்."

குழந்தைகள் விழுந்தடித்து அவரவர்களுடைய வகுப்புக்கு ஓடினார்கள். பாவம்! சாரு மட்டும் பின் தங்கி விட்டாள்.

"சாரு! கம் ஹியர்!" என்றாள் ஹெட் மிஸ்ட்ரஸ்.

சாரு தயங்கிக் கொண்டே அடிமேல் அடி வைத்து வந்தாள்.

"உன் கார்டியன் யார்?" என்று ஹெட் மிஸ்ட்ரஸ் கேட்டாள்.

"சம்பு சாஸ்திரி" என்றாள் சாரு.

"யாரு?"

"சம்பு சாஸ்திரி!"

"அவர் உங்க அப்பாவா?"

"இல்லை, எங்க தாத்தா!"

"உங்க அப்பா யாரு?"

"எங்க அப்பா இல்லை."

"அம்மா?"

"அம்மாவும் இல்லை."

"அவாள்ளாம் எங்கே?"

"அவா பொறக்கவேயில்லை. நான் மட்டுந்தான் பொறந்தேன்" என்றாள் சாரு.

வேறு யாராயிருந்தாலும் இம்மாதிரி குழந்தை சொன்னவுடன் கோபம் தணியப் பெற்றிருப்பார்கள். ஆனால், அந்த அம்மாளுக்குக் கோபம் அதிகமாயிற்று.

"அப்பா அம்மா இல்லையா? ஓஹோ! அதனாலேதான் இப்படித் துஷ்டத்தனம் பண்ணறே? இங்கே வா! கையை நீட்டு!" என்றாள்.

சாரு அன்று சாயங்காலம் வீட்டுக்குப் போனபோது, சாஸ்திரி எங்கேயோ வெளியில் போயிருந்தார். சாரு, சாஸ்திரியாரின் பூஜை மாடத்துக்கு முன்னால் நின்று, "அம்பிகே! பராசக்தி! நீ நினைச்சால் முடியாதது ஒண்ணுமில்லைன்னு தாத்தா சொன்னாளே! எனக்கு ஓர் அம்மா கொடுக்கக் கூடாதா, நல்ல அம்மாவா?" என்று பிரார்த்தனை செய்தாள்.

ஹெட் மிஸ்ட்ரஸ் சாருவின் கையில் சுளீரென்று பிரம்பினாள் அடித்த போது சாருவுக்கு வலித்ததென்றாலும் சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வலி மறந்து போயிற்று. ஆனால், "அப்பா அம்மா இல்லாததனால் தான் இப்படித் துஷ்டத்தனம் பண்றே!" என்று சொன்னது மட்டும் மறக்கவேயில்லை. அவளுடைய குழந்தை உள்ளத்தில் அதனால் ஏற்பட்ட வலியும் மாறவில்லை. ஆகையினால் தான், அம்பிகையை அவ்வாறு பிரார்த்தனை செய்தாள்.

குழந்தையின் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டே சாஸ்திரி உள்ளே வந்தார். புன்னகையுடன் அவர் சாருவை அணைத்துக் கொண்டு, "உனக்கு அம்மாவா வேணும். சாரு! பராசக்திதான் உனக்கு அம்மாவாச்சே! வேறு அம்மா என்னத்துக்கு, சாரு?" என்று கேட்டார்.

"பராசக்திதான் எனக்கு அம்மான்னாக்கே பராசக்தியை வந்து என்னை மடியிலே எடுத்து வைச்சுக்கச் சொல்லேன். எல்லா அம்மாவும் அவாவா குழந்தையை மடியிலே வச்சுக்கலையா?" என்றாள் சாரு.

2. உமாராணி விஜயம்

சென்னைப் பட்டணம் சில நாளாக அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. பம்பாயிலிருந்து ஸ்ரீமதி உமாராணி என்னும் சீமாட்டி சென்னைக்கு விஜயம் செய்யப் போகிறாள் என்னும் செய்தி தான் அதற்குக் காரணம். டிராம் வண்டிகளிலும், மோட்டார் பஸ்களிலும், கிளப்புகளிலும், காப்பி ஹோட்டல்களிலும், பீச் மணற் கரையிலும், பார்க் புல் தரையிலும் இன்னும் ஜனங்கள் எங்கெங்கே கூடுகிறார்களோ, அங்கெல்லாம், உமாராணியின் வரவைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

"ஏன், ஸார்! என்னிக்கு வர்றாளாம்?"

"அடுத்த புதன்கிழமை வர்றதாகப் பத்திரிகையிலே போட்டிருக்கு."

"எந்த ரயில்லே-பம்பாய் எக்ஸ்பிரஸிலேதானே?"

"நான் சொல்றேன், கேளுங்கோ! அவள் சென்ட்ரல் ஸ்டேஷனிலே வந்து இறங்கமாட்டா. சென்ட்ரல்லே இறங்கினா, கூட்டம் தாங்காது. பேஸின் பிரிட்ஜிலேயே இறங்கிக் காரிலே போயிடுவா."

"கார்ப்பரேஷனிலே உபசாராம் நடக்கிறதோ இல்லையோ?"

"ஆகா! மீட்டிங் நடந்து தீர்மானங்கூடப் பாஸாயிடுத்தே!"

இந்தச் சமயத்தில், அந்த டிராமிலோ பஸ்ஸிலோ உலக விஷயங்களை அதிகமாய்க் காதிலே போட்டுக் கொள்ளாத மனுஷர் யாராவது இருந்தால், "ஏன், ஸார்! யாரோ வர்றா, வர்றா என்கிறயளே? அது யாரு?" என்று கேட்டு வைப்பார்.

"யாரு, உமாராணிதான்" என்று பதில் வரும்.

"உமாராணியா! அவள் யார், ஐயா, அப்படி ஒருத்தி கிளம்பியிருக்காள்? ஸினிமா ஸ்டாரோ?"

உடனே கலகலவென்று சிரிப்பு.

"என்ன, சிரிக்கறயளே? அவள் யாருதான் பின்னே? காங்கிரஸிலே சேர்ந்தவளோ?"

"என்ன, ஐயா, நிஜமா உமாராணி யாருன்னு தெரியாமயா கேட்கிறீர்?"

"தெரியாமல் தான் கேட்கிறேன். பின்னே, தெரிஞ்சால் கேட்பாளோ?"

"உமாராணிங்கறவள் பம்பாயிலே ஒரு பெரிய பணக்காரி. அவள் நம் ஊர் மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்கு அஞ்சு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறாள்."

"என்ன? என்ன?"

"அவரைக் கொஞ்சம் பிடிச்சுக்குங்கோ, ஐயா! மூர்ச்சை போட்டு விழுந்துடப் போறார்."

"என்ன பரிகாசம் பண்றயளா? அஞ்சு லட்சம் ரூபாயாவது, கொடுக்கவாவது?"

"கொடுக்கவாவதுன்னா? - கொடுத்திருக்காளே!"

"ஐம்பதினாயிரமாயிருக்கும்; பத்திரிகைக்காரன் ஒரு பூஜ்யத்தைச் சேர்த்துப் போட்டிருப்பன்."

"அஞ்சு லட்சம்னு இலக்கத்திலும் போட்டு, எழுத்திலும் எழுதியிருக்கு. அப்புறம்?"

"நம்பறதுக்கு முடியாமேன்னா இருக்கு? அஞ்சு லட்சம்! அடேயப்பா!"

"அஞ்சு லட்சமான்னு வாயைப் பிளந்துடறீரே, ஐயா! நமக்குன்னா அஞ்சு லட்சம் பெரிது! பம்பாயிலே அஞ்சு லட்சம் என்கிறது அஞ்சு ரூபாய் மாதிரி."

"ஆமாமாம்; நம் ஊரிலே பெரிய ரூபாய்ன்னா ஓர் ஆயிரம்; அங்கே, ஒரு லட்சம்."

"பம்பாய்ன்னா, குபேர பட்டணந்தான்; சந்தேகம் என்ன? அங்கே இருக்கிற ஒரு ஸேட் மனஸு வச்சான்னா இந்த மெட்ராஸ் பூராவையும் விலைக்கு வாங்கிடுவான்?"

"நம் ஊர்க்காரன்கிட்டப் பணந்தான் இருக்குன்னு வச்சுக்குங்கோ. இந்த மாதிரி ஒரு நல்ல காரியத்துக்கு அஞ்சு லட்சம் கொடுக்க மனஸு வருமா? எவனாவது கொடுத்திருக்கானான்னு கேக்கறேன்!"

"அல்லது எவளாவது தான் கொடுத்திருக்காளா?"

இந்த மாதிரி எங்கே பார்த்தாலும் பலவிதமான பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தன.

கடைசியாக, உமாராணியின் விஜய தினம் வந்தது. அவளை வரவேற்பதற்கு ஸ்டேஷனில் ஏராளமான ஜனக்கூட்டம் சேர்ந்திருந்தது. சென்னைப் பிரமுகர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் வந்திருந்தார்கள். வண்டி வந்து பிளாட்பாரத்தில் நின்று, உமாராணியின் முகம் தெரிந்ததும், காமராக்கள் 'கிளிக்' 'கிளிக்' என்று சப்தித்தன. நாளைக்குப் பத்திரிகைகளில் படம் வரும்போது, உமா ராணிக்குப் பக்கத்தில் தாங்களும் தெரியவேண்டுமென்று அநேகம்பேர் தலையைத் தலையை நீட்டினார்கள்.

உமாராணி ரயிலிலிருந்து இறங்கி அங்கே தன்னை வரவேற்பதற்காகக் கூடியிருந்தவர்களைப் பார்த்துப் புன்னகையுடன் ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் காரில் போய் ஏறிக் கொண்டாள். அந்த ஒரு செய்கையினால் சென்னைவாசிகளின் உள்ளத்தை அவள் கொள்ளை கொண்டு விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்த வாரத்தில் ஸ்ரீமதி உமாராணிக்குச் சென்னைக் கார்ப்பரேஷனின் சார்பாக உபசாரப் பத்திரம் அளிக்கப்பட்டது. அன்று சாயங்காலம், சென்னையிலுள்ள அவ்வளவு மோட்டார் வண்டிகளும் ரிப்பன் கட்டிடத்தை நோக்கிச் சென்றது போல் தோன்றிற்று. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை கட்டிடத்தின் காம்பவுண்டுக்குள் பிரவேசிக்க முடியாமல் திரும்பிப் போக வேண்டியிருந்தது. ஏற்கெனவே, அந்தக் காம்பவுண்டில் அவ்வளவு ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவர்கள் எல்லாரும் கட்டிடத்தின் மண்டபத்துக்குள் போக முயன்று, அங்கே ஏற்கெனவே கூட்டம் நிறைந்து விட்டபடியால் ஏமாற்றம் அடைந்து, உமாராணி வரும்போது அவளைப் பார்த்து விட்டாவது போகலாமென்று நின்றார்கள்.

உமாராணியின் வரவேற்புக்காக ரூ.500 வரையில் செலவு செய்யலாமென்று நகரசபையில் தீர்மானம் ஆகியிருந்தபடியால் நகரசபை மண்டபம் அன்று பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கார்ப்பரேஷன் மேயரும் உமாராணியும் அமருவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை ஹாலிவுட் தியேட்டர்களில் உள்ள அரங்க மேடைகளைப் போல் அவ்வளவு அழகாக விளங்கிற்று.

மேயரும் உமாராணியும் மேடையில் வந்து உட்கார்ந்த போது சபையில் எழுந்த கரகோஷம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷம் ஆயிற்று. பிறகு, மேயர் உபசாரப் பத்திரம் படிப்பதற்காக எழுந்தார். உபசாரப் பத்திரம் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுதி அச்சிடப்பட்டிருந்தது. மேயர் ஆங்கிலத்தில் எழுதிய உபசாரப் பத்திரத்தைப் படிக்கத் தொடங்கினார். சபையில் இருந்த தமிழபிமானி ஒருவர், "தமிழ்! தமிழ்!" என்றார்.

"சபையோர்களே! உபசாரப் பத்திரம் தமிழிலும் இருக்கிறது. ஆனால், நாம் இன்றைக்கு யாரை உபசரிக்கக் கூடியிருக்கிறோமோ அவருக்குத் தமிழ் தெரியாதாகையால், முதலில் இங்கிலீஷில் படிந்துவிட்டு, அப்புறம் வேண்டுமானால் தமிழிலும் படிக்கிறேன்" என்றார் மேயர்.

இச்சமயத்தில், ஸ்ரீமதி உமாராணி, "please read in your mother-tongue (தயவு செய்து உங்கள் தாய் பாஷையிலேயே படியுங்கள்)" என்று மேயரைப் பார்த்துக்

கூறினாள். சபையில் முன் வரிசையிருந்தவர்களுக்கு இது காதில் விழவே, அவர்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

மேயர் பிறகு தமிழிலேயே பத்திரத்தை வாசித்தார்:

"தாங்கள் பம்பாயைச் சேர்ந்தவராயிருந்தும், இந்தச் சென்னையிலுள்ள மாதர் வைத்தியசாலைக்கு இவ்வளவு பெரிய நன்கொடையை அளித்திருக்கிறீர்கள். தங்களுடைய தர்ம சிந்தனையானது சாதி, மதம், பாஷை, மாகாணம் முதலிய வரம்புகளைக் கடந்தது என்பது இதிலிருந்து வெளியாகிறது. தாங்கள் செய்திருக்கும் இந்தச் சிறந்த தர்மத்தைத் தமிழ் மக்கள் – முக்கியமாகத் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் – நன்றியுடன் எப்போதும் நினைவு கூர்வார்கள். தங்களுடைய இந்த அரிய உதாரணத்தைத் தமிழ் நாட்டிலுள்ள செல்வந்தர்கள் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த அரிய நன்கொடையின் மூலம் தங்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள உறவு என்றைக்கும் நீடித்திருக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

"கார்ப்பரேஷன் மேயரும் அங்கத்தினர்களும்."

மேற்கண்டவாறு வாசித்துவிட்டு, மேயர் உபசாரப் பத்திரம் அடங்கிய அழகிய வெள்ளிப் பேழையை உமாராணியிடம் அளித்தார். உமாராணி அதை வாங்கி வைத்துவிட்டு உபசாரப் பத்திரத்துக்குப் பதில் சொல்வதற்காக மேடையின் முன்னால் வந்து நின்றாள். அவள் வந்து நின்றவுடனேயே சபையில் பலமான கரகோஷம் உண்டாயிற்று. ஆனால், அவள், "சகோதரிகளே! சகோதரர்களே!" என்று தமிழில் பேச ஆரம்பித்ததும், சபையோரின் உற்சாகத்துக்கும் குதூகலத்துக்கும் அளவில்லாமல் போயிற்று. காது செவிடுபடும்படியான கரகோஷம் அடங்கியதும் உமாராணி தொடர்ந்து பின்வருமாறு பேசினாள்:

"சகோதரிகளே! சகோதரர்களே! நான் தமிழில் பேச முன் வந்தது உங்களுக்குச் சிறிது ஆச்சரியத்தை அளித்தது என்று நினைக்கிறேன். ஆனால் இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. பல வருஷ காலமாக நான் பம்பாயிலேயே வாசம் செய்தபடியால், என்னுடைய நடை உடை பாவனைகளால் வடக்கத்தியாரைப் போல் நான் தோன்றக்கூடும். ஆனால், உண்மையில் நான் இந்தத் தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் தான். உலகத்தில் பல தேசங்களுக்கும் நான் சென்று பார்த்திருக்கிறேன். மற்றத் தேசங்களைப் பார்க்கப் பார்க்கத்தான் நமது தமிழ் நாட்டின் சிறப்பு எனக்கு நன்றாய்த் தெரிய வந்தது. நமது செந்தமிழ் நாட்டைப் போன்ற அழகான நாட்டை நான் வேறெங்கும் பார்த்ததில்லை. தமிழைப் போன்ற இனிமையான பாஷையையும் கேட்டதில்லை. உங்களுடைய உபசாரப் பத்திரத்தில் 'நீங்கள், எனக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கும் உறவு நீடித்திருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறீர்கள். உண்மையில், நான் இனிமேல் சென்னை நகரில் வசிப்பதென்று தீர்மானத்துடனேயே வந்திருக்கிறேன்."

உமாராணி பேசிக்கொண்டு வந்தபோது இடையிடையே சபையில் கைதட்டலும், "கேளுங்கள், கேளுங்கள்" என்ற கோஷமும் ஏற்பட்டு வந்தன. அவள் இனிமேல் சென்னையிலேயே வாசம் செய்யப் போவதாகச் சொன்னதும் சபையோரின் உற்சாகம் மறுபடியும் ஒரு தடவை உச்ச நிலையை அடைந்தது. கரகோஷ ஆரவாரங்களுக்கிடையில், "உமாராணிக்கு ஜே!" என்ற கோஷமும் எழுந்து வானை அளாவிற்று.

3. 'ஸ்ரீமதி சாருமதி தேவி'

"வலது கையால் கொடுப்பது இடது கைக்குத் தெரியாதபடி கொடுக்க வேண்டும்" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? இது எவ்வளவு அருமையான ஆப்த வாக்கியம் என்பதை உமாராணி வெகு சீக்கிரத்தில் தெரிந்து கொண்டாள். புகழ்ச்சிக்கு ஆசைப் பட்டுத் தர்மம் செய்வதில் பலன் குறைவு என்பதுதான் மேற்படி வாக்கியத்தின் உண்மைக் கருத்து. ஆனால், வேறொரு விதத்திலும் அது மிகவும் உபயோகமான உபதேசமாகும். இந்த நாளில் ஒருவர் செய்யும் தர்மம் பிரசித்தியாகிவிட்டால் அதைக் காட்டிலும் அவருக்கு உபத்திரவம் உண்டாக்கக் கூடியது வேறொன்றுமில்லை. அப்புறம் அவருக்கு மனநிம்மதி என்பதே இல்லாமற் போய் விடுகிறது. இந்த ஏழைத் தேசத்தில் தர்மத்தை எதிர்பார்க்கும் ஸ்தாபனங்களும், காரியங்களும் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை நடத்துவோரெல்லாம் மேற்படி தர்மப் பிரபுவைத் தேடி வருகின்றனர்.

'இவர்தான் இந்தப் பெரிய தர்மத்தைச் செய்தாரே வேறு தர்மங்களுக்கு வேறு மனுஷர்களைத் தேடிப் போவோம்' என்று யாரும் நினைப்பதில்லை. ரயிலில் ஏற்கெனவே கூட்டமாயுள்ள வண்டியிலேயே இன்னும் கூட்டமாக ஜனங்கள் ஏறுவதைப் பார்த்திருக்கிறோமல்லவா? அந்த மாதிரி ஒரு நல்ல காரியத்துக்குப் பணம் கொடுத்தவரிடமேதான் மற்றவர்களும் வருகிறார்கள். உண்மையான தர்மத்தை நடத்துவோரைத் தவிர, போலி மனிதர்களும் மோசக்காரர்களும் வருகிறார்கள். வந்து அவருடைய பிராணனை வாங்கிவிடுகிறார்கள். அந்தத் தர்மப் பிரபு இல்லையென்று சொன்னாலோ வருகிறவர்களுக்குக் கோபம் பொங்குகிறது. "ஒரு நாளும் கொடுக்காத மகாலக்ஷ்மிதான் இன்றைக்கும் இல்லை என்று சொல்லிவிட்டாள், தினமும் கொடுக்கிற மூதேவி, உனக்கென்ன வந்தது?" என்ற கொள்கையின்படி, தர்மம் செய்தவர்களுக்கு முடிவில் எப்போதும் வசவுதான் கிடைக்கிறது.

உமாராணியின் அநுபவமும் இந்த மாதிரிதான் இருந்தது. 'அடாடா! நாம் மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்கு ஐந்து லட்சம் கொடுத்ததை ஏன் விளம்பரப்படுத்தினோம்? அநாமதேயமாகக் கொடுத்திருக்கக் கூடாதா?' என்று அடிக்கடி அவள் எண்ணமிட்டாள்.

சென்னையில் எவ்வளவு தர்ம ஸ்தாபனங்கள், பொது நலக் கழகங்கள் உண்டோ அவ்வளவிலிருந்தும் நன்கொடை கோரி அவளுக்குக் கடிதங்கள் வந்தன. ஒரு நகரத்தில் இவ்வளவு அநாதாசிரமங்களும், இலவசக் கல்வி ஸ்தாபனங்களும், மாதர் முன்னேற்றக் கழகங்களும், அமெச்சூர் நாடக சபைகளும், சங்கீத சபாக்களும், ஜீவகாருண்ய சங்கங்களும் இருக்கக் கூடுமென்று உமாராணி கனவிலும் எதிர்பார்க்கவில்லை. தினந்தோறும் புதிய புதிய ஸ்தாபனங்களிலிருந்து அவளுக்குக் கடிதங்கள் வந்து குவிந்தன. திறப்பு விழாக்கள், வருஷபூர்த்திக் கொண்டாட்டங்கள் முதலியவற்றுக்கு அவளுக்கு வந்த அழைப்புக் கடிதங்களுக்கோ அளவில்லை. கடிதங்களை அனுப்பிவிட்டு, அந்தந்த ஸ்தாபனங்களின் நிர்வாகிகள் உமாராணியை நேரில் பார்ப்பதற்கும் வந்தார்கள். உண்மையாக வந்தவர்களுடன் போலி மனிதர்களும் வந்தார்கள். சிலர், ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக் கொண்டு உமாராணியுடன் பேசிவிட்டு வரலாமென்று வந்தார்கள்.

இம்மாதிரி ஒரு இளம்பெண் – பெரிய பணக்காரி – நவநாகரிகத்தில் சிறந்தவள் – அழகோ சொல்ல வேண்டாம் – ஒரு புன்சிரிப்புக்கு உலகம் மூன்றையும் கொடுக்கலாம் – இப்படிப்பட்டவள் புருஷன் முதலிய தொந்தரவு ஒன்றுமில்லாதவளாய், சுதந்திரமாயிருக்கிறாள் என்றால், அவளைப் பார்ப்பதற்கும் அவளுடன் சிநேகம் செய்து

கொள்வதற்கும் இஷ்டப்படுகிறவர்கள் ஒரு பெரிய பட்டணத்தில் எவ்வளவோ பேர் இருப்பார்கள் அல்லவா?

ஆகவே, உமாராணியின் பங்களாவில் எப்போதும் வருகிறவர்களும் போகிறவர்களுமாய் ஜே ஜே என்று இருந்தது.

ஒரு நாள் காலை சுமார் பத்து மணி இருக்கும். ஒரு பெரிய மோட்டார் வண்டி வந்து, உமாராணி பங்களாவின் போர்ட்டிக்கோ முகப்பில் நின்றது. வண்டியில் ஒரு பெரிய மனுஷர் இருந்தார். பங்களாவின் வாசல் சேவகன், மோட்டார் வண்டியினருகில் வந்ததும், "அம்மா இருக்காங்களா ?" என்று பெரிய மனுஷர் கேட்டார்.

சேவகன் "இருக்காங்க; ஆனால், இன்னிக்கு இனிமே யாரையும் பார்க்கிறதில்லைன்னு சொல்லிட்டாங்க. நாளைக்கு வந்தாப் பார்க்கலாம்" என்றான்.

வந்த பெரிய மனுஷர், "ஓ! ஐ ஆம் ஸாரி" என்றார். உடனே, தம்முடைய சட்டைப் பையிலிருந்து பெயர் அச்சிட்ட விஸிட்டிங் கார்டு ஒன்றை எடுத்துச் சேவகனிடம் கொடுத்து, "இதை அம்மாவிடம் கொடு" என்றார். பிறகு, மோட்டார் அங்கிருந்து நகர்ந்தது.

அந்தப் பெரிய மனுஷரின் வண்டி வந்து நின்ற அதே சமயத்தில் நாலு பெண் குழந்தைகள் அங்கே வந்தார்கள். அவர்களில் ஒருத்தி சாரு. மோட்டாரில் இருந்தவருக்கும் சேவகனுக்கும் நடந்த பேச்சை அவள் கவனித்துக்கொண்டிருந்தாள். மோட்டார் நகரத் தொடங்கியதும் சாரு அவசரமாய் ஒரு காகிதத்தை எடுத்து, பென்ஸிலால் அதில் ஏதோ எழுதினாள்.

சேவகன், "நீங்கள்ளாம் எங்கே வந்தீங்க இங்கே, போங்க!" என்று அதட்டினான்.

சாரு, "நாங்க உமாராணியைப் பார்க்கிறதுக்காக வந்திருக்கோம்" என்றான்.

சேவகன், "அதெல்லாம் நீங்க பார்க்க முடியாது. போங்கோ!" என்றான்.

சாரு, தன் கையில் வைத்திருந்த காகிதத்தை நீட்டி, "தர்வான்! தர்வான்! இந்தக் காகிதத்தை மாத்திரம் நீ உமாராணியிடம் கொண்டு போய்க் கொடுத்துடு. அவங்க வரச் சொன்னா வர்றோம்; இல்லாட்டாப் போறோம்" என்றாள்.

தர்வான் அந்தக் காகிதத்தைக் கையில் வாங்கிக் கொண்டு, "நீங்க இப்போ போறயளா? இல்லையா? அப்புறம் நாயை அவிழ்த்து விட்டுடுவேன்; கடிச்சுடும்" என்றான்.

"காகிதத்தைக் கொண்டு போய்க் கொடுக்க மாட்டயோ? அப்படின்னா நான் அழுவேன்" என்றாள் சாரு.

உடனே, அழத் தொடங்கிவிட்டாள். மற்றக் குழந்தைகளும் அவளுடைய கை ஜாடையைப் பார்த்துக் கொண்டு அழத் தொடங்கின.

அப்போது, வீட்டுக்குள்ளே மாடியிலிருந்து, "தர்வான்! அங்கே என்ன கூச்சல்? இங்கே வா!" என்று உமாராணியின் குரல் கேட்டது. தர்வான் அவசரமாக மாடிப்படி மீது ஏறிச் சென்றான்.

அவன் மேல் மாடியிலிருந்த டிராயிங் ரூமுக்குள் போன போது, உமாராணி தன் கண்களில் ததும்பிக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"என்னடா, அது?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லைங்க, நாலைஞ்சு பெண் குழந்தைங்க வந்து எஜமானியைப் பார்க்கணுங்கறதுங்க" என்றான்.

"அது என்ன கையிலே காகிதம்?"

தர்வானுக்கு அப்போதுதான் கையில் இருந்த காகிதம் ஞாபகம் வந்தது. அதை எஜமானியிடம் கொடுத்தான். காகிதத்தில், 'ஸ்ரீமதி சாருமதி தேவி' என்று எழுதியிருந்தது. ஆனால், அது குழந்தை எழுத்தில் எழுதியிருந்தபடியால் உமாராணிக்கு

வேடிக்கையாக இருந்தது. முகமலர்ச்சியுடன், "ஸ்ரீமதி...சாருமதி...தேவி! இது யாரப்பா இது?" என்றாள்.

அப்போது, "நான் தான் சாருமதி!" என்று ஒரு குழந்தையின் குரல் கேட்டது. உமா வியப்புடன் தலை நிமிர்ந்து பார்த்தாள். அந்த அறையின் வாசற்படிக்கு அருகில் சாருவும் அவளுடைய தோழிகள் மூவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

4. பசுவும் கன்றும்

அட்வகேட் ஆபத்சகாயமய்யர் தமக்கு இந்த மாதிரி அதிர்ஷ்டம் வரப்போகிறதென்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை. உமாராணி இப்போது குடியிருந்த பங்களா ஆபத்சகாயமய்யருடைய கட்சிக்காரன் ஒருவனுக்குச் சொந்தமானது. அந்தப் பங்களாவுக்கு வாடகைப் பத்திரம் எழுதுவது சம்பந்தமாக, அவர் உமாராணியைப் பார்த்துப் பேச நேர்ந்தது. அவருடைய நல்ல சுபாவத்தைக் கண்ட உமாராணி அவரையே தன்னுடைய மற்ற காரியங்களையும் கவனிப்பதற்கு வக்கீலாக அமர்த்திக் கொண்டாள். இதன் காரணமாக ஆபத்சகாயம் அடைந்த பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. 'உலகத்திலே பெண்ணாய்ப் பிறந்தால் உமாராணியைப் போல் பிறக்கவேண்டும்! வக்கீலாயிருந்தால் நம்மைப் போல் கொடுத்து வைத்தவனாயிருக்க வேண்டும் என்பது தற்சமயம் அவருடைய தீர்ந்த அபிப்பிராயமாயிருந்தது. அந்தச் சமயத்தில் அவருக்கு ஹைகோர்ட் ஜட்ஜு பதவி கிடைப்பதாயிருந்தால் கூடத் தயங்காமல் மறுத்திருப்பார். ஹைகோர்ட் ஜட்ஜு ஆகிவிட்டால், உமாராணிக்கு வக்கீலாயிருக்கும் பாக்கியத்தை இழந்து விட வேண்டுமல்லவா? இதைக் காட்டிலும் அது என்ன ஒசத்தி?

அன்று காலை உமாராணி டெலிபோனில் கூப்பிட்டதன் மேல் ஆபத்சகாயமய்யர் அவளுடைய பங்களாவுக்கு வந்திருந்தார்.

"ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்று உமாராணி கேட்டாள்.

"இதுவரையில் ஒன்றும் கிடைக்கவில்லை; நானும் முயற்சி பண்ணிக்கொண்டுதான் இருக்கிறேன்" என்றார் வக்கீல்.

"உங்க கிட்டச் சொல்லி ஒரு மாதம் போலிருக்கிறதே; இன்னுமா கண்டுபிடிக்க முடியலை?" என்றாள் உமா.

ஆபத்சகாயமய்யர் புன்னகை புரிந்தார்.

"என் மேலே தான் தப்பு என்று உங்கள் எண்ணம் போல் இருக்கு. சதகோடி சங்கத்திலே மொட்டைத் தாதனைக் கண்டாயா என்கிறாப் போலே, சென்னைப் பட்டணத்திலே சம்பு சாஸ்திரி எங்கே இருக்கார் என்று கேட்டால் யாருக்குத் தெரிகிறது? ஏதாவது அடையாளம் சொன்னால் தேவலை" என்றார்.

இதைக் கேட்ட உமாராணி சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ஏதோ பழைய ஞாபகங்கள் அவள் உள்ளத்தில் தோன்றிக் கொண்டிருந்ததாக முக பாவத்திலிருந்து தெரிந்தது.

பிறகு, தூக்கத்திலிருந்து விழிப்பவள் போல், திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து, "என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏதாவது அடையாளம் சொன்னால் தேவலை என்றேன்."

"ஓர் அடையாளங் கூடத்தான் சொல்லியிருக்கிறேனே? ஆறு ஏழு வயதிலே அவரோட ஒரு குழந்தையிருக்கும்னு சொல்லலையா?" என்றாள் உமா.

அதற்கு வக்கீல், "இந்த அடையாளம் போதுமா அம்மா? முதலிலே சம்பு சாஸ்திரியைக் கண்டுபிடிச்சின்னா, அப்புறம் அவர்கிட்டக் குழந்தை இருக்கான்னு பார்க்கணும்? எனக்குத் தெரிந்த வரையிலே, இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு. பத்திரிகைகளிலே விளம்பரம் பண்ணிப் பார்க்கலாம்" என்றார்.

"வக்கீல் ஸார்! இந்த யோசனை எனக்குத் தெரியாதுன்னா நினைச்சுட்டேள்; பத்திரிகைகளிலே விளம்பரம் பண்ணக்கூடாது. பண்ணினால், யார் விளம்பரம் பண்ணினா, எதுக்காகப் பண்ணினா என்கிற கேள்வியெல்லாம் கிளம்பும். நான் யாரைத்

தேடறேனோ, அவருக்கு நான் தேடுகிறேன் என்கிற விஷயம் தெரியக் கூடாது. அப்படித் தெரியாமல் அவரைக் கண்டு பிடிக்கிறதற்கு வழி என்ன என்று தான் பார்க்கவேணும். இந்தச் சென்னைப் பட்டணத்திலே அவர் இல்லாவிட்டால், வேறு எங்கே இருந்தாலும் கண்டு பிடித்தாக வேணும்" என்றாள் உமா.

வக்கீல் ஒரு நிமிஷம் சிந்தனையில் ஆழ்ந்து இருந்துவிட்டு, "அம்மா! ஒரு விஷயம் சொல்ல உத்தரவு கொடுத்தால் சொல்கிறேன்" என்றார்.

"பேஷாய்ச் சொல்லுங்கள்" என்றாள் உமா.

"உங்கள் மனஸிலே ஏதோ துக்கம் இருக்கிறது. என்னத்தையோ நினைத்துக்கொண்டு அடிக்கடி வருத்தப்படுகிறீர்கள். அது என்ன என்கிறதை மனத்தைத் திறந்து என்னிடம் சொன்னால் என்னாலான ஒத்தாசை செய்யக் காத்திருக்கிறேன். என்னிடத்திலே நீங்கள் பூரணமாய் நம்பிக்கை வைக்கலாம். உங்களுக்கு ஏதாவது என்னால் உதவி செய்ய முடிந்தால், அதை என்னுடைய பாக்கியம் என்று நினைப்பேன்" என்றார்.

அப்போது உமா, உருக்கத்தினால் கனிந்த குரலில், "வக்கீல் ஸார்! உங்களைப் பார்த்தவுடனேயே உங்களுடைய நல்ல குணம் எனக்குத் தெரிந்து போய்விட்டது. அதனால்தான் உங்களிடம் இந்த விஷயத்தையே பிரஸ்தாபித்தேன். எனக்கு உங்களிடம் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனால், எந்தெந்த விஷயத்தை எப்போது சொல்லவேணுமோ, அப்போது சொல்கிறேன். அதுவரையிலே நீங்கள் பொறுமையாயிருந்து, நான் சொல்கிறதை மட்டும் செய்கிறதற்கு முயற்சி செய்தால் போதும். இப்போதைக்குச் சம்பு சாஸ்திரிகளைக் கண்டு பிடிக்கப் பாருங்கள்" என்றாள்.

"அப்படியே ஆகட்டும், அம்மா! கட்டாயம் என்னால் முடிந்தவரையிலே பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு வக்கீல் ஆபத்சகாமய்யர் உமாராணியிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

அவருக்கு விடை கொடுப்பதற்கு எழுந்த உமா, அவர் போன பிறகு, அந்த விஸ்தாரமான, ஹாலின் ஜன்னல் ஒன்றுக்குச் சமீபமாகச் சென்று வெளியே பார்த்தாள், எங்கும் ஆனந்த மயமாக இருந்தது. பங்களாவைச் சுற்றியிருந்த தோட்டத்தில் விதவிதமான வர்ணப் பூஞ்செடிகள் இளந்தென்றல் காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. வண்டுகளும் தேனீக்களும் அந்தப் புஷ்பங்களின் மேல் 'ஙொய்' என்று மொய்த்து ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. ஒரு குயில் மாமரத்தில் எங்கேயோ மறைந்து கொண்டு 'கக்கூ' 'கக்கூ' என்று கத்திற்று. குருவிகள் 'ரிகிங்' 'ரிகிங்' என்று சுருதி கூட்டிக் கொண்டிருந்தன.

உமாராணியின் பார்வை தற்செயலாகத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நின்ற பசுமாட்டின் மீது விழுந்தது. அந்தப் பசு அப்போது தன்னுடைய மடியில் ஊட்டிக் கொண்டிருந்த கன்றுக் குட்டியை நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது. சாதாரணமாக, தோல் கன்றுக் குட்டியைக் காட்டிப் பால் கறக்கும் பாழும் சென்னைப் பட்டணத்தில் இம்மாதிரி கன்றுக் குட்டிக்குப் பசு ஊட்டும் காட்சியைப் பார்த்தால் யாருக்கும் சந்தோஷம் உண்டாகக் கூடுமல்லவா? ஆனால், எக் காரணத்தினாலோ, உமாராணிக்கு இந்தக் காட்சி துக்கத்தை அளித்தது போல் காணப்பட்டது. ஒரு நொடிப் போதில் அவள் கண்ணில் ஜலம் ததும்பி நின்றது. அவள் அங்கிருந்து திரும்பி வந்து, ஸோபாவில் தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டு தேம்பினாள்.

இந்தச் சமயத்தில், அவளுடைய விம்மலின் எதிரொலியே போல் கீழேயிருந்து குழந்தைகளின் அழுகைக் குரல் கேட்கவே, உமா உடனே தன்னுடைய அழுகையை நிறுத்திச் சமாளித்துக் கொண்டு, தர்வானைக் கூப்பிட்டாள்.

5. முல்லைச் சிரிப்பு

"நான் தான் சாருமதி" என்று சாரு சொன்னபோது அவளுடைய முகத்தில் குறுநகை தவழ்ந்தது. அதைப் பார்த்த உமாராணியின் முகத்திலும், சற்று முன்பு தோன்றிய சோகக் குறி மறைந்து புன்னகை மலர்ந்தது.

"அடி சமர்த்து! இங்கே வா! எல்லாரும் கிட்ட வாங்கோ!" என்றாள் உமா.

குழந்தைகள் எல்லாம் அவள் அருகில் வந்து சூழ்ந்து கொண்டன. அவர்களில் ஒரு பெண் "மாமி! உங்க வீட்டு தர்வான் இருக்கானே அவன் வந்து... எங்க மேலே..." என்று புகார் சொல்ல ஆரம்பித்தாள். சாரு உடனே அவளுடைய வாயைப் பொத்தினாள்!

"ஏம்மா அவளுடைய வாயைப் பொத்தறே! அவள் சொல்ல வந்ததைச் சொல்லட்டுமே?" என்றாள் உமா.

அதற்குச் சாரு, "இல்லை, மாமி! உங்க தர்வான் விளையாட்டுக் கோசறம் எங்க மேலே நாயை அவிழ்த்து விடறேன்னு சொன்னான். அதைப் போய் லலிதா உங்க கிட்டப் புகார் சொல்றாளே, அது சரியா?" என்றாள். இப்படிச் சொல்லிவிட்டுச் சாரு கடைக் கண்ணால் தர்வானைப் பார்த்தாள். அந்த தர்வானுடைய கடுவம் பூனை முகத்தில் கூட அப்போது புன்னகை தோன்றியது.

உமா அவனைப் பார்த்து, "ஏண்டா! குழந்தைகள் மேலேயா நாயை அவிழ்த்துவிடறேன்னு சொன்னே? சீ, போ!" என்றாள். தர்வான் வெட்கித் தலை குனிந்து கொண்டு கீழே சென்றான்.

பிறகு உமா, "எல்லாரும் எங்கேயம்மா வந்தேள்?" என்று கேட்டாள்.

அதற்கு லலிதா, "மாமி! எங்கள் பள்ளிக்கூடத்து பில்டிங் பண்டுக்காக ஒரு டிராமா போடப் போகிறோம். அதுக்கு டிக்கெட் இரண்டு ரூபாய், ஒரு ரூபாய், அரை ரூபாயில் இருக்கு. உங்களுக்கு எது வேணுமோ அது வாங்கிக்குங்கோ" என்றாள்.

அப்போது சாரு, "ஆனா, உங்களைப் பார்த்தால், நீங்க ஓர் இரண்டு ரூபாய் டிக்கெட்டுதான் வாங்கிக்குவேள் என்று எனக்குத் தோணுகிறது" என்றாள்.

உமா சாருவைப் பார்த்து, விஷமமாக 'அடே அப்பா! இரண்டு ரூபாய்க்கா டிக்கெட் வாங்கணும்? அப்படி என்ன அதிசயமான டிராமா போடப்போறேள்?" என்று கேட்டாள்.

சாரு, "கிருஷ்ண லீலா போடப் போறோம். நான் தான் கிருஷ்ண வேஷம். இப்ப என்னமோ போலே இருக்கேனேன்னு நினைக்காதீங்கோ. வேஷம் போட்டுண்டு வந்தேன்னா நீங்க பிரமிச்சுப் போயிடுவேள்" என்றாள்.

உமாவுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால், சிரித்தால் அந்தக் குழந்தை, பரிகாசம் என்று நினைத்துக் கொண்டு வருத்தப்படப் போகிறதென்று எண்ணிச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"இதுவரையில் எத்தனை டிக்கெட் வித்திருக்கேள்?" என்று கேட்டாள்.

சாரு, "ஒண்ணுகூட விக்கலை மாமி! எல்லாரும் ஏதாவது வேலையிருக்கு, கீலையிருக்குன்னு சாக்குப் போக்குச் சொல்றா. குழந்தைகள் டிராமாதானேன்னு அவாளுக்கு அலட்சியம் போலேயிருக்கு" என்றாள். இப்படிச் சொன்னபோது சாருவின் குழந்தை உள்ளத்தில் உண்மையாகவே துக்கம் பொங்கி வந்தது. அவள் கண்ணில் ஜலம் துளித்தது.

உமாவுக்கு இதைப் பார்க்கச் சகிக்கவில்லை. உடனே குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு முத்தமிட்டாள்.

"அவா கிடக்கா, நீ வருத்தப்படாதே, கண்ணு! பெரியவாள்ளாம் சுத்த அசடுகள். நீங்க தான் சமத்து. உங்ககிட்ட இருக்கிற டிக்கெட்டையெல்லாம் கொடுத்துடுங்கோ. நானே வாங்கிக்கிறேன். நீங்க இந்த வெயில்லே அலையாமே வீட்டுக்குப் போங்க" என்றாள்.

உடனே சாருவின் முகத்தில் மறுபடியும் மலர்ச்சி உண்டாயிற்று. மற்றக் குழந்தைகளோ உமா சொன்னதைக் கேட்டுப் பிரமித்துப் போனார்கள். லலிதாவுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. அவளிடம் இருந்த டிக்கெட் புத்தகத்தை உமா வாங்கி பார்த்தாள். அதில் பல ரகங்களில் 20-டிக்கெட்டுகள் இருந்தன. மொத்தம் முப்பது ரூபாய் விலையாயிற்று.

உமா முப்பது ரூபாய் நோட்டு எடுத்து லலிதாவிடம் கொடுத்து, "பணத்தை ஜாக்கிரதையாய் எடுத்துண்டு போவயோன்னோ?" என்றாள்.

"ஓ! பேஷாய் எடுத்துண்டு போவோம்" என்றாள் லலிதா.

சாரு விஷமச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே உமாவைப் பார்த்து, "மாமி! உங்களை ஒன்று கேட்கட்டுமா?" என்றாள்.

"பேஷாய்க் கேளடி அம்மா!" என்றாள் உமா.

"நீங்க இருபது டிக்கெட் வாங்கிண்டிருக்கேளே இருபது ஸீட்டிலும் உட்காருவேளா?" என்று கேட்டாள்.

உமாராணி கலீரென்று சிரித்தாள்.

"இல்லேடி, குழந்தை! இருபது ஸீட்டிலும் உட்கார மாட்டேன். ஒரு ஸீட்டிலே தான் உட்காருவேன்."

"அப்படின்னா, எங்க பள்ளிக்கூடத்துக்கு ஒத்தாசை செய்யணும்னுட்டுத்தானே வாங்கிண்டேள்? ரொம்ப ரொம்ப தாங்ஸ்" என்றாள்.

லலிதா, "சரி! வாங்கடி போகலாம்" என்று அழைத்தாள். குழந்தைகள் எல்லாரும் கிளம்பினார்கள். சாருவும் கிளம்பினாள். ஆனால் அவள் நாலடி வைத்ததும் மறுபடி திரும்பிப் பார்த்து, "மாமி, நீங்க எங்க டிராமாவுக்கு மட்டும் கட்டாயம் வரணும். நீங்க வர்றேளான்னு பார்த்துண்டேயிருப்பேன்" என்றாள்.

உமா, "கட்டாயம் வர்றேண்டி, குழந்தை" என்றாள்.

குழந்தைகள் கீழே இறங்கிப் போனபோது, அங்கே தர்வான் நின்று கொண்டிருந்தான். சாரு, அவனை பார்த்து, "தர்வான்! நீ நல்ல தர்வான் தானே! எங்க மேலே நாயை அவிழ்த்து விடறேன்னு சொன்னயே, அந்த நாயைக் காட்டு பார்க்கலாம்!" என்றான்.

"போங்க, போங்க. இங்கே நாயும் இல்லை. ஒண்ணும் இல்லை" என்றான் தர்வான்.

அந்தச் சமயம் பார்த்து, ஒரு சின்னஞ் சிறு நாய் அங்கே ஓடி வந்தது. "பார்த்தயா, தர்வான்! பொய் தானே சொன்னே?" என்று சாரு சொல்லி, கீழே உட்கார்ந்து அந்த நாயைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினாள். நாய் சாருவின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நாக்கை நீட்டிற்று.

"என்ன நாக்கை நீட்டறே? உன் நாக்குத்தான் ரொம்ப நீளமோ?" என்று சாரு தன்னுடைய நாக்கை நீட்டினாள்.

இதற்குள் மற்றக் குழந்தைகள் கொஞ்ச தூரம் போய் விட்டார்கள். லலிதா திரும்பிப் பார்த்து, "சாரு, நீ வர்றயா இல்லையா? நாங்கள்ளாம் போறோம்" என்றாள்.

சாரு எழுந்து ஓடினாள். நாயும் பின்னோடு ஓடிற்று. தர்வான் அதை, "ஜில்லி! ஜில்லி!" என்று கூப்பிட்டான்.

மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்துகொண்டே சாரு "யமுனா, அந்த ஜில்லியின் மூஞ்சியைப் பார்த்தா, நம்ம பள்ளிக்கூடத்து ஹெட் மிஸ்ட்ரஸ் மூஞ்சி மாதிரியேயில்லை?" என்றாள். உடனே, எல்லாக் குழந்தைகளும் கலகலவென்று சிரித்தன. அந்தச் சிரிப்பின் சத்தம், மேலே ஹாலிலிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த உமாராணியின் காதில் இனிமையாக ஒலித்தது.

6. பூர்வ ஞாபகம்

குழந்தைகள் போன பிறகு உமாவுக்கு அடிக்கடி அவர்களுடைய ஞாபகம் வந்து கொண்டிருந்தது. முக்கியமாக, சாருவின் மலர்ந்த முகமும், கலீரென்ற சிரிப்பும், வெடுக்கென்ற பேச்சும், கண்ணீர் ததும்பிய கண்களும் உமாவின் மனக்கண்ணின் முன்னால் எப்போதும் தோன்றிக் கொண்டிருந்தன.

அந்தக் குழந்தையை மறுபடி எப்போது பார்ப்போம் என்று இருந்தது. டிக்கெட் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். நாடகம் நடப்பதற்கு இன்னும் மூன்று நாள் இருப்பது தெரிய வந்தது. 'அடாடா! இன்று ராத்திரியே இருக்கக் கூடாதா?' என்று தோன்றிற்று.

சாருவின் பேச்சுக்களும் செய்கைகளும் ஒவ்வொன்றாய் உமாராணிக்கு ஞாபகம் வந்து கொண்டிருந்தன. அவை அவ்வளவு தூரம் தன்னுடைய உள்ளத்தில் பதிந்துவிட்டன என்பது உமாவுக்கு அதிசயமாயிருந்தது. குழந்தை எதிரில் இருந்தபோதும், அவள் போனபோதுங்கூட அவ்வளவு தெரியவில்லை. அவள் போய்விட்ட பிறகு தான் தன்னுடைய உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்து விட்டாள் என்பது நன்றாய்த் தெரிந்தது.

குழந்தை தான் என்ன சமர்த்து! என்ன சூடிகை! முகத்திலே எவ்வளவு களை! எவ்வளவு சாதுர்யமாய்ப் பேசுகிறது! – இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கே சமர்த்து அதிகம்.

அந்த வயசில் தான் எப்படி இருந்தாள் என்பதை உமா யோசித்துப் பார்த்தாள். அதை நினைக்கவே அவளுக்கு வெட்கமாயிருந்தது. கிழிச்சல் பாவாடையைக் கட்டிக்கொண்டு நடுத்தெருவில் உட்கார்ந்து வீடு கட்டி விளையாடியதெல்லாம் ஞாபகம் வந்தது. சிவராத்திரிக்குக் கண் விழிப்பதற்காக, "சீசந்தி அம்பாரம் சிவராத்திரி அம்பாரம்" என்று பாடிக் கொண்டு வீடு வீடாகப் போய் எண்ணெய் தண்டியதும் நினைவு வந்தது. அப்போது தனக்கு அ, ஆ என்று எழுதக் கூடத் தெரியாது. இந்தக் காலத்துக் குழந்தைகளோ ஏழு, எட்டு வயதில் டிராமா போடுகின்றன!

ஆமாம்; சாருவுக்கு ஆறு, ஏழு வயதுதான் இருக்கும். ஆறு, ஏழு, வயது! ஆறு – ஏழு–! அந்தக் குழந்தை இருந்தால் அதற்கும் இப்போது ஏழு வயது தான் இருக்கும்.

உமாவுக்கு, சொப்பனத்தில் கண்டது போல், ஏழு வருஷத்துக்கு முந்தி நடந்த அந்த அதிசயச் சம்பவம் ஞாபகம் வந்தது.

ஒரு யுவதி கையில் ஒரு சின்னஞ் சிறு குழந்தையுடன் சென்னை நகரின் வீதிகளில் வெறி பிடித்தவள் போல் ஓடுகிறாள். கொஞ்ச நேரம் வரையில் அவள் மனத்தில் பொங்கிய ஆத்திரம் அவளுடைய தேகத்துக்கும் பலம் அளித்து வருகிறது. திடீரென்று அவளுடைய சக்தி குன்றுகிறது; மூச்சு வாங்குகிறது. இனிமேல் ஓடினால் உயிர் போய் விடுமென்று தோன்றுகிறது.

அவளுக்கு உயிரை விடுவதைப் பற்றிக் கவலையில்லை. உண்மையில் அவள் மரணத்தை மனப்பூர்வமாக வேண்டுகிறாள். ஆனால், தனக்குப் பின்னால் அந்தக் குழந்தையை இந்த உலகத்தில் விட்டு விட்டுப் போக மட்டும் மனம் வரவில்லை. ஆகவே, இரண்டு பேரும் ஏக காலத்தில் மரணமடைய வேண்டுமென்று தீர்மானிக்கிறாள். ஜன சஞ்சாரமில்லாத ஜலப் பிரதேசத்தைத் தேடிச் செல்கிறாள்.

உலகந்தான் எவ்வளவு ஆச்சரியமானது! எப்போது நாம் யாராவது மனுஷ்யர்களைப் பார்க்க மாட்டோ மா, யாரேனும் வந்து உதவி செய்யமாட்டார்களா என்று தவித்துக் கொண்டிருக்கிறோமோ, அப்போது நம் கண்ணில் யாரும் எதிர்படுவதில்லை. கண்ணில் எதிர்ப்படுகிறவர்கள் கூட நம்மருகில் வராமல் தூரமாய்

ஒதுங்கிப் போகிறார்கள். ஆனால், எப்போது நாம் ஒருவரையும் பார்க்க வேண்டாம். ஒருவர் கண்ணிலும் படவேண்டாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோமோ, அப்போது எங்கிருந்தோ மனுஷ்யர்கள் வந்து சேர்கிறார்கள்.

அந்தப் பெண்ணின் அநுபவம் அப்படித்தான் இருந்தது. அவள் ஜன நெருக்கமுள்ள சென்னையின் வீதிகளில் அலைந்த போதெல்லாம், யாரும் ஏனென்று கேட்பாரில்லை. யாருடைய அருகிலாவது சென்று பேச முயன்றாலும், அவள் பிச்சை கேட்க வருவதாக நினைத்து, "போ! போ!" என்று எரிந்து விழுந்தார்கள். ஆனால், இப்போது அவள் ஜன சஞ்சாரமில்லாத இடத்தைத் தேடிப் போன போது, அதற்கு நேர் விரோதமான அனுபவம் ஏற்பட்டது. எவ்வளவு தூரம் நடந்து போனாலும், அங்கேயும் யாராவது ஒருவர் இருவர் எதிர்ப்பட்டனர். அவர்கள் வெகு அக்கறையுடன் அவளருகில் வந்து "ஏம்மா, எங்கேம்மா போறே, இந்தக் குழந்தையை எடுத்துக்கிட்டு?" என்று கேட்டார்கள். பாவம்! இவர்கள் பட்டணத்துக்கு வெளியே கிராமங்களில் வசிக்கும் ஜனங்கள் என்பதும், இவர்களுடைய உள்ளத்தில் இரக்கமும், கருணையும் இன்னும் அடியோடு வற்றிப் போய் விடவில்லையென்பதும் அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. ஆகவே, தன்னுடைய நோக்கத்துக்கு இடையூறு செய்யவே அவர்கள் அப்படிப் பரிவுடன் வந்து கேட்கிறார்கள் என்று நினைத்தாள். சிலருக்குப் பதில் சொல்லாமல் நடந்தாள். வேறு சிலருக்கு, "போங்கோ, உங்க வேலையைப் பார்த்துக் கொண்டு!" என்று எரிந்து விழுந்தாள்.

கடைசியில் அவளுடைய எண்ணம் நிறைவேறுவதற்குரிய இடத்தை அடைந்தாள். ஒரு விஸ்தாரமான சவுக்கு மரத்தோப்பு. நெருங்கி வளர்ந்திருந்த சவுக்கு மரங்களில் காற்று அடித்து 'சோ' என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மற்றபடி நிச்சப்தமாயிருந்தது. சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு மனுஷ சஞ்சாரமே இல்லை. சவுக்கு மரங்களின் வழியாகப் பார்த்தால், வெகு தூரத்தில் உருக்கிய வெள்ளியைப் போல் ஜலம் தெரிந்தது. ஜலம் காணப்பட்ட திக்கை நோக்கி அவள் நடந்தாள். அது பெரிய ஆறு; சற்றுத் தூரத்தில் சமுத்திரத்தில் போய்ச் சங்கமம் ஆயிற்று. சங்கமம் ஆகும் இடத்தில் சமுத்திரத்தில் அடித்த அலைகளின் வெண்ணுரை இங்கிருந்தே நன்றாய்த் தெரிந்தது.

தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இது தான் தகுந்த இடம் என்று தீர்மானித்தாள். குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு தண்ணீரில் இறங்கினாள். ஜலம் முழங்காலுக்கு வந்தது, இடுப்புக்கு வந்தது; இன்னும் மேலே ஏறிக் கொண்டிருந்தது. அப்போது அவளுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஒரு கூஷணம் நின்றாள். முதலிலே தண்ணீரில் யார் முழுகுவது? ஐயோ! குழந்தை தண்ணீரில் அமுங்கி அது மூச்சுத் திணறிச் சாவதைத் தன்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? இந்த எண்ணத்தினால் அவள் உடம்பெல்லாம் நடுங்கிற்று. முடியாது, முடியாது! பின்னே, என்ன செய்வது? முதலில் தான் தண்ணீரில் மூழுகிவிட வேண்டியது. அப்புறம் எப்படியாவது நடக்கட்டும்!-இந்த எண்ணத்துடன் மார்பில் அணைத்திருந்த குழந்தையைத் தூக்கித் தலைக்கு மேல் பிடித்துக்கொண்டாள். இன்னும் இரண்டு அடி எடுத்து வைத்தாள். ஆச்சு! ஜலம் மார்பளவுக்கு வந்து விட்டது. இன்னும் கூஷண நேரத்தில் எல்லாம் முடிந்து விடும்.

ஸ்வாமி! பகவானே! நீதான் கதி; அடுத்த ஜன்மத்திலாவது என்னை இம்மாதிரி கதிக்கெல்லாம் ஆளாக்காதே!...

ஆ! இதென்ன?

யார் பாடுகிறார்கள்?

குரலில் அந்த நடுக்கமும் உருக்கமும் வேறு யாருக்கு உண்டு?

ஸ்வாமி! இதென்ன சோதனை?

அப்பா இங்கே எப்படி வந்து சேர்ந்தார்?

கால்கள் மேலே தண்ணீருக்குள் செல்ல மறுத்தன; கரையை நோக்கித் தாமே நடக்கத் தொடங்கின.

கரை ஏறினாள்! இன்னும் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. எங்கேயோ சமீபத்தில் தான் இருக்கிறார். இப்போது என்ன செய்வது? யோசிக்கலாமென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தாள். குனிந்து கையிலிருந்த குழந்தையைப் பார்த்தாள். அது பல் இல்லாத தன் சின்னஞ்சிறு வாயைத் திறந்து சிரிக்க முயன்றது.

சீ! தாத்தா வந்து உன்னைக் காப்பாற்றி விட்டார் என்று சந்தோஷப்படுகிறாயாக்கும்? தாத்தாவுக்கு என்ன வந்தது? பிறத்தியாருடைய கஷ்டம் அவருக்கு என்ன தெரியப் போகிறது?

அந்தச் சமயத்தில் பாட்டு நின்றது.

அவள் குதித்து எழுந்தாள். ஓகோ! அப்பா! சாகப் போனவளைத் தடுத்து மறுபடியும் சந்தியில் நிறுத்தி விட்டு, ஓடிப் போய்விடலாமென்று பார்க்கிறீர்களா? சற்று முன்பு குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள்.

சட்டென்று மறுபடியும் நின்றாள். கொஞ்ச தூரத்தில் மரங்களின் வழியே அவள் கண்ட காட்சி தான் அப்படி அவளை நிற்கச் செய்தது. அப்பா தான்; சந்தேகமில்லை. அந்தத் தோப்புக்கு நடுவே ஒரு சிறு குளமும் குளத்தின் கரையில் ஒரு பழைய மேடையும் காணப்பட்டன. மேடையில் அப்பா தலைப்பை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்தார்.

அப்பா இங்கே தான் இருக்கிறார். மறைந்து ஓடிவிடவில்லையென்றதும் அவசரம் குறைந்தது. அவர் எதிரில் போகத் தயக்கமாயிருந்தது. அவரிடம் என்னமாய்ப் போவது? என்ன சொல்வது? தன்னுடைய கதையையெல்லாம் கேட்டால் அவர் என்ன நினைப்பார்? எதற்காகச் சொல்ல வேண்டும்? சொல்லி என்ன பிரயோஜனம்? மறுபடி கல்கத்தாவுக்குப் போ என்று தானே அவர் சொல்லப் போகிறார்? 'பதியே தெய்வம்' என்று தானே உபதேசிக்கப் போகிறார்?

முடியாது, முடியாது! பேசாமல் இந்தக் குழந்தையை அவர் தலையிலே கட்டி விட்டு, நாம் போய் மறுபடியும் ஜலத்தில் இறங்கிச் சாகலாம்.

ஆனால்...? பளிச்சென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று.

குழந்தையை அவர் தலையில் கட்டி விட்டால் அப்புறம் நாம் எதற்காகச் சாக வேண்டும்?

"பம்பாயிலுள்ள ஓர் உயர் குடும்பத்துப் பெண்மணிக்குத் தோழியாயிருக்க ஒரு தமிழ்நாட்டுப் பெண் தேவை. குழந்தையுள்ளவர்கள் விண்ணப்பம் போட வேண்டியதில்லை."

அவள் மனத்தில் பதிந்து போயிருந்த இந்தப் பத்திரிகை விளம்பரம் இதோ கண்ணெதிரில் தோன்றிற்று.

சரி! அது தான் சரி!

மெதுவாக மேடைக்கு அருகில் சென்றாள். அப்பா அசந்து தூங்குவதைப் பார்த்தாள். அவருடைய தலை மாட்டில் குழந்தையை மெதுவாகக் கீழே விட்டாள். விரைந்து ஓடிக் கொஞ்ச தூரத்தில் மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டாள்.

இத்தனை நேரம் தாயின் மார்போடு அணைந்திருந்த குழந்தை இப்போது வெறுந் தரையில் விடப்பட்டதும் 'வீல்' என்று கத்திற்று.

தூங்கினவர் கண் விழித்தெழுந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். குழந்தையைக் கண்டு ஆச்சரியப்பட்டார். கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார். "இது என்ன இது?" "இது என்ன இது?" என்று சொல்லிக் கொண்டு தடுமாறினார்.

அவருடைய தடுமாற்றம் மரத்தின் மறைவில் இருந்தவளுக்குக் குதூகலத்தையளித்தது. 'படட்டும்; நன்றாக அவஸ்தைப் படட்டும்!' என்று எண்ணினாள்.

அந்த மனுஷர் குழந்தையின் அருகில் போய் அதை எடுத்தார். மறுபடி அதைக் கீழே விட்டு விட்டு நாற்புறமும் பார்த்தார். "யாரம்மா, இது? குழந்தை யாருது?" என்று கூவினார்.

மீண்டும் குழந்தையிடம் வந்து அதை எடுத்துக் கொண்டார். "அம்பிகே! பராசக்தி! இந்த உலகத்தைத் துறந்து சந்நியாசியாகலாமென்று இருந்தவனுக்கு இப்படி புத்தி கற்பிக்கிறாயோ?" என்றார்.

'அப்படியா அப்பா எண்ணினீர்கள்? என்னை இம்மாதிரியெல்லாம் கஷ்டத்துக்கு ஆளாக்கிவிட்டு நீங்கள் சந்நியாசியாகலாமென்று பார்த்தீர்களா? ரொம்ப லக்ஷணம்' என்று மரத்தின் மறைவிலிருந்தவள் எண்ணிக் கொண்டாள்.

குழந்தையை எடுத்துக் கொண்டு அவர் அந்தத் தோப்பைக் கடந்து போகிற வரையில் அவள் அங்கேயே இருந்தாள்.

உமா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். மேற்சொன்ன சம்பவம் தன்னுடைய வாழ்க்கையில் உண்மையாக நடந்தது என்பதை அவளால் நம்ப முடியவில்லை. அப்போது தனக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும்! பட்ட கஷ்டங்களினால் தன் மனம் அவ்வளவு கசந்து போயிருந்தது. பிறருடைய கையை எதிர்பாராமல், தானே சுதந்திரமாகச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஆசை ஒரு வெறி மாதிரியே பிடித்திருந்தது. இல்லாவிட்டால், அத்தனை நாளைக்குப் பிறகு பார்த்த அப்பாவுடன் பேசாமல் போக மனம் வந்திருக்குமா? குழந்தையை அப்படி விட்டுவிட்டுப் போகத்தான் மனம் வந்திருக்குமா?

இந்த ஏழு வருஷத்தில் குழந்தை வளர்ந்திருக்குமல்லவா? கிட்டத்தட்ட, இன்று டிக்கெட் விற்பதற்கு வந்த குழந்தைகளின் வயது ஆகியிருக்கும். சாருவைப் போல் இருந்தாலும் இருக்கும்.

ஒரு வேளை...! சீ! என்ன பைத்தியக்கார எண்ணம்? அந்த மாதிரியெல்லாம் கதைகளில் வேணுமானால் நடக்கும். நிஜமாக நடக்குமா? சென்னைப் பட்டணத்தில் ஏழு வயதுக் குழந்தைகள் எத்தனையோ ஆயிரம் இருக்கலாம். இந்தக் குழந்தை யாரோ, என்னவோ?

உமா மறுபடியும் டிக்கெட்டை எடுத்துப் பார்த்தாள். டைரியை எடுத்து அந்தத் தேதியில் "மியூஸியம் தியேட்டர்: குழந்தைகள் நாடகம்: மாலை 6 மணி என்று எழுதி வைத்துக் கொண்டாள்.

7. புனர் ஜன்மம்

அன்று சாயங்காலம் சாரு சாவடிக் குப்பத்துக்குத் திரும்பியபோது குதித்துக் கொண்டு வீட்டுக்குள் போனாள். "தாத்தா! தாத்தா! இன்னிக்கு ஒரு சமாசாரம் நடந்தது; உனக்கு அதைச் சொல்லவே மாட்டேன்" என்றாள்.

"நீ சொல்லாமே போனா, நானும் கேட்கவே மாட்டேன்" என்றார் சாஸ்திரி.

"நீ கேக்கா போனா, நான் அழுவேன்" என்றான் சாரு.

அவரது மடியில் உட்கார்ந்து கொண்டு, "தாத்தா! இன்னிக்கு ஒரு மாமியைப் பார்த்தோம். ரொம்ப ரொம்ப நல்ல மாமி" என்று சொல்லிவிட்டு, சற்று மெதுவான குரலில், "அந்த மாமி வந்து என்னைக் கட்டிண்டு முத்தமிட்டா, தாத்தா!" என்றாள்.

"அந்த மாமி யார், சாரு? அவள் பேர் என்ன?" என்று சாஸ்திரி கேட்டார்.

"அவ ரொம்பப் பணக்கார மாமி தாத்தா! பணக்காரா நல்லவாளா இருக்க மாட்டான்னு நீ சொல்லுவயோன்னோ? அது சுத்தப் பொய்!"

"நான் அப்படி எங்கேயம்மா சொல்லியிருக்கேன்? நல்ல மனுஷாளைக் கூடப் பணம் கெடுத்துடும்னுதானே சொன்னேன்? அதனாலே, பணக்காரா எல்லாம் கெட்டவான்னு அர்த்தமா!"

"அதென்னமோ, நாங்க இன்னிக்குப் பார்த்த மாமி ரொம்ப நல்ல மாமி. எங்க கிட்ட இருந்த டிக்கெட் அவ்வளவையும் வாங்கிண்டு, 'அலையாமே வீட்டுக்குப் போங்கோ' அப்படின்னா, தாத்தா! முப்பது ரூபாய் டிக்கெட், தாத்தா!"

"யாரம்மா, அவ்வளவு தாராள மனஸுடையவாள் இந்த ஊரிலே? அவ பேரென்ன?"

"அவ பேரு ஸ்ரீமதி உமாராணியாம்."

இந்தப் பெயர் சம்பு சாஸ்திரி காதிலும் விழுந்திருந்தது. ஒரு தர்மத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்த பெண்மணியின் பெயர் காதில் படாமல் இருக்க முடியுமா?

"ஓஹோ! சரிதான்; அந்த அம்மா பம்பாயிலிருந்து வந்திருக்கிறவள். அதனாலே தான் அவ்வளவு தாராளம். இந்த ஊரிலே அந்த மாதிரி யார் இருக்கா? அவ்வளவு பணந்தான் யாரிடத்திலே இருக்கு" என்றார்.

பிறகு, சாரு அன்று நடந்ததெல்லாம் விவரமாகச் சொன்னாள். அவள் கூறியதில் சாஸ்திரியின் மனத்தில் நன்கு பதிந்த விஷயம், உமாராணி குழந்தையை அணைத்து முத்தமிட்டது தான். குழந்தை அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சந்தோஷப்பட்டாள். 'ஐயோ! இந்தக் குழந்தை, அம்மாவுக்காக எப்படி ஏங்கிப் போயிருக்கிறது?' என்று சாஸ்திரி எண்ணினார். ஒரு வேளை தான் செய்ததெல்லாம் தவறோ? தான் இந்தக் குழந்தையை எடுத்து வளர்த்தது பிசகோ? உடனே போலீஸிலே கொண்டுபோய்க் கொடுத்து அதன் தாயாரைக் கண்டு பிடித்துச் சேர்க்கும்படி சொல்லியிருக்க வேண்டுமோ?

இந்தக் குழந்தையின் காரணமாகத் தம்முடைய வாழ்க்கையிலே ஏற்பட்ட மாறுதலைச் சாஸ்திரி எண்ணிப் பார்த்தார். தேச யாத்திரை செய்ய வேண்டும், ஊர் ஊராய்ப் போய் இந்தப் புண்ணிய பூமியிலுள்ள க்ஷேத்திரங்களையெல்லாம் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஒரு காலத்தில் அவர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஆசை நிறைவேறும் என்று தோன்றிய சமயத்தில், இந்தக் குழந்தையைப் பராசக்தி அளித்தாள். அதன் காரணமாக அவர் சாவடிக் குப்பத்திற்கு வரவும் இங்கேயே தங்கவும் நேர்ந்தது.

இது மட்டுமா? இந்தக் குழந்தை காரணமாகவே, அவர் நெடுங்கரையையும், கல்கத்தாவையும் அடியோடு மறந்திருந்தார். சாவித்திரி குழந்தையாயிருந்த போது அவளை வளர்ப்பதற்கென்று மங்களத்தைக் கல்யாணம் செய்து கொண்டதும், பிறகு, 'ஐயோ! எப்படிப்பட்ட தவறு செய்தோம்?' என்று பல முறை வருந்தியதும் அவர் ஞாபகத்தை விட்டு அகல முடியாதல்லவா? எனவே, இந்தக் குழந்தையை அந்தக் கதிக்கு ஆளாக்கக் கூடாதென்று தீர்மானித்திருந்தார். 'வேண்டாம்; மங்களமும் அவள் தாயாரும் சௌக்கியமாயிருக்கட்டும். நாம் இல்லை என்பதற்காக அவர்கள் ஒன்றும் உருகிப் போக மாட்டார்கள். நல்ல வேளையாய், அவர்கள் நிராதரவாக இல்லை; சாப்பாட்டுக்குத் துணிக்குப் பஞ்சமில்லாமல் வைத்திருக்கிறோம். எப்படியாவது அவர்கள் சௌக்கியமாயிருக்கட்டும்.'

இந்த எண்ணத்தினால் அவர் நெடுங்கரைக்குக் கடிதம் போடவும் இல்லை; அவர்களை வரவழைத்துக் கொள்ள முயலவும் இல்லை.

ஆனால், சாவித்திரி! அவளை மறக்க முடியுமா? ஒரு நாளும் முடியாது. ஆரம்பத்தில் அவளை எண்ணி எண்ணி அவர் மனம் உருகிற்று. 'ஐயோ! இந்தக் குழந்தையை நாமே வளர்ப்பதுபோல் சாவித்திரியையும் வளர்த்திருக்கக் கூடாதா?' என்று அடிக்கடி எண்ணமிடுவார். 'எப்படியோ, அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பி விட்டோ ம். அங்கே அவள் சௌக்கியமாயிருப்பாள்!' என்று எண்ணி ஆறுதல் கொள்வார்.

சாவித்திரிக்கு அவர் அச்சமயம் கடிதம் எழுதவில்லை. எழுதினால் தாம் இருக்கிற இடம் சம்பந்திகளுக்குத் தெரிந்து போய் விடும். சம்பந்திகளுக்குத் தெரிந்தால், நெடுங்கரைக்கும் தெரியாமல் இராது. அப்படித் தெரிந்தால், மங்களமும் சொர்ணம்மாளும் இங்கே வராமல் இருப்பார்களா? முதலிலே, "இந்தக் குழந்தையை எங்கே பிடிச்சயள்!" என்று மாமியார்காரி கேட்டால், அதற்கு என்ன பதில் சொல்வது? இதை நினைத்தாலே, சாஸ்திரிக்கு உடம்பு நடுங்கிற்று. வேண்டாம், வேண்டாம்! எல்லாரும் அவரவர்கள் இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும்.

இவ்வாறெல்லாம் யோசித்து, தனக்கு இது ஒரு புனர் ஜன்மம் என்றும், தமது பழைய வாழ்க்கைக்கும் இந்த புதிய வாழ்க்கைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று சாஸ்திரி தீர்மானித்துக் கொண்டார். இது பராசக்தியின் ஆக்ஞை என்றும் அவர் மனப்பூர்வமாக நம்பினார். அந்த நம்பிக்கையிலேயே ஆறு, ஏழு வருஷ காலம் கழிந்து விட்டது.

அந்த நம்பிக்கை ஒரு வேளை பொய்யோ? பராசக்தியின் ஆக்ஞையென்பதெல்லாம் வெறும் பிரமையோ! இந்தக் குழந்தையை அப்பொழுதே போலீஸாரிடம் ஒப்புவித்திருந்தால், ஒரு வேளை அதன் தாயாரைக் கண்டுபிடித்து ஒப்புவித்திருப்பார்கள் அல்லவா? அப்படிக் குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்து வைத்த பாவத்தை நாம் செய்து விட்டோ மோ? அக்கினி சாட்சியாக மணந்த மங்களத்தை விட்டுப் பிரிந்திருப்பதும் குற்றமோ? தாயே இதென்ன மாயை! ஒன்றும் புரியவில்லையே!

"சாமி! வாருங்கோ! என்ன உள்ளேயே இருக்கீங்களே?' என்று வாசலில் நல்லானின் குரல் கேட்டது. சாஸ்திரியாரின் பூர்வ ஞாபகமும் கலைந்தது. வாசலில் வந்து பார்த்தார்.

அன்று ஸ்ரீராம நவமி. சாஸ்திரியின் இஷ்ட தெய்வங்கள் பராசக்தியும் ஸ்ரீராமபிரானும் ஆதலால் சாவடிக் குப்பத்தில் நவராத்திரியும் ஸ்ரீராம நவமியும் விசேஷமாய்க் கொண்டாடுவது வழக்கம். ஆகையால் சாவடிக் குப்பம் அன்று அற்புதமான தீபாலங்காரத்துடன் காட்சியளித்தது.

வாசலில், சாவடிக் குப்பத்துக் குழந்தைகள் அழகாக அலங்காரம் செய்து கொண்டு வந்து பாட்டுச் சொல்லிக் கும்மி அடித்தார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்தவுடன் சாஸ்திரியாருக்கு மனநிம்மதி உண்டாயிற்று. ஆறு வருஷத்துக்கு முந்தி தாம் சாவடிக் குப்பத்துக்கு வந்த போது குப்பம் எப்படியிருந்ததென்பதையும், இப்போது எப்படியிருக்கிறதென்பதையும் அவர் ஒப்பிட்டுப் பார்த்தார். தாம் வாழ்க்கையில் வேறு என்ன தவறு செய்திருந்த போதிலும், சாவடிக் குப்பத்தில் வந்திருந்தது மட்டும் வீண் போகவில்லையென்று அவருக்கு உறுதி ஏற்பட்டது.

8. கதம்பக் கச்சேரி

"குழந்தைகள் டிராமா தானேன்னு அவாளுக்கெல்லாம் அலட்சியம் போல் இருக்கு" என்று சாரு கண்ணில் நீர் ததும்ப உமாராணியிடம் சொன்னாளல்லவா? அவள் சொன்னது உண்மையாகவே இருக்கலாம். ஆனால், மியூஸியம் தியேட்டரில் அன்று சாயங்காலம் ஐந்து மணிக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்தவர்களுக்கு குழந்தை சொன்னதில் நம்பிக்கை ஏற்படாது. அவ்வளவு கனதனவான்களும் சீமாட்டிகளும் தியேட்டரில் வந்து நிறைந்திருந்தார்கள்.

இவ்வாறு கூட்டம் சேர்ந்ததற்குக் காரணம் குழந்தைகளின் கதம்பக் கச்சேரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மட்டுமல்ல என்பதைச் சொல்ல வேண்டும். அத்துடன் உமாராணியைப் பார்க்கலாமென்ற ஆசையும் சேர்ந்திருந்தது. உமாராணி இருபது டிக்கெட் வாங்கிக் கொண்ட செய்தியைக் குழந்தைகள் போய் வாத்தியாரம்மாளிடம் சொல்ல, அவள் பள்ளிக்கூட நிர்வாகிகளிடம் சொல்ல, அவர்கள் நேரில் போய் உமாராணியை அழைத்துவிட்டு வந்ததோடல்லாமல் நகரில் பிரஸ்தாபமும் செய்து விட்டார்கள். இந்தச் செய்தி பரவிவிடவே, அன்று மாலை மியூஸியம் தியேட்டரில் சென்னை நகரின் பிரசித்தி வாய்ந்த ஸ்திரீ புருஷர்கள் பெரும்பாலோரைக் காணும்படியிருந்தது.

ஐந்து மணிக்குக் கச்சேரி ஆரம்பமாக வேண்டும். ஆனால், ஐந்து அடித்துப் பத்து நிமிஷம் ஆகியும் ஆரம்பமாகவில்லை. சாதாரணமாய், இந்த மாதிரி தாமதமானால், சபையோர் கைதட்டி ஆரவாரிப்பது வழக்கம். இன்று அப்படி ஒன்றும் நடக்கவில்லை. "இன்னும் உமாராணி வரவில்லை; அவள் வந்தவுடன் ஆரம்பிப்பார்கள்" என்று சபையோர் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒருவராவது மேடைப் பக்கம் திரை தூக்குகிறார்களா என்று கவனிக்கவில்லை. எல்லாரும் வாசற் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, வாசலில் ஏதோ கலகலப்புச் சப்தம் கேட்டது. அடுத்த நிமிஷம், பள்ளிக்கூடத்தின் முக்கிய நிர்வாகியாகிய ராவ்சாகிப் கஜகுல ஆஜாநுபாகு அவர்கள் வழி காட்டிக் கொண்டு வர, பின்னால் வக்கீல் ஆபத்சகாமய்யர் தொடர, உமாராணி உள்ளே பிரவேசித்தாள். சொல்லி வைத்தாற்போல் சபையில் எல்லாரும் கரகோஷம் செய்தார்கள். உமாராணி கும்பிட்டுக் கொண்டே போய், முன்னால் தனக்காகப் போடப்பட்டிருந்த தனி ஸோபாவில் உட்கார்ந்திருந்தார்கள்.

உடனே திரை தூக்கப்பட்டது. "ஜன கண மன" என்ற தேசிய கீதத்துடன் கதம்பக் கச்சேரி ஆரம்பமாயிற்று.

புரோகிராமில் மொத்தம் ஒன்பது அங்கங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றுள் மூன்றில் சாருமதியின் பெயர் காணப்பட்டது. முதலில், சாருமதியின் பரத நாட்டியம். பிறகு, கிருஷ்ண லீலா நாடகத்தில் சாருமதி கிருஷ்ண வேஷம். கடைசியில், சாருமதியும் யமுனாவும் ராதா கிருஷ்ண நடனம்.

ஒவ்வொரு தடவையும் சாரு மேடைக்கு வரும் போதெல்லாம் சபையில் நிசப்தம் குடிகொண்டிருக்கும். சபையோரின் கவனத்தை அவள் அவ்வாறு கவர்ந்து விடுவாள். சாரு உள்ளே சென்றதும் சபையில் கலகலப்பு ஏற்படும். பெரும்பாலோர் உமாராணி என்ன செய்கிறாள் என்பதைக் கவனிக்கத் தொடங்குவார்கள். இதற்காகச் சிலர் தலையைத் தூக்கிப் பார்ப்பதும், எழுந்து நிற்பதும், பின்னாலிருப்பவர்கள் அவர்களை அதட்டி உட்காரச் செய்வதும் சர்வ சாதாரணமாயிருந்தது.

ஆனால், உமாவோ இவை ஒன்றையும் கவனிக்கவில்லை. குழந்தை சாருவின் பரத நாட்டியத்தைப் பார்த்ததுமே அவளுக்கு மெய்ம்மறந்து போய்விட்டது. நாட்டியம் முடிந்ததும் உமா, பக்கத்திலிருந்த வக்கீல் ஆபத்சகாயமய்யரைப் பார்த்து, "இந்தக் குழந்தை எவ்வளவு நன்றாய் நாட்டியம் ஆடுகிறது, பார்த்தீர்களா? முகத்தில் என்ன களை! இந்தக் குழந்தை யார் என்று உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாதே?" என்றார் வக்கீல். பிறகு "நீங்கள் மெட்ராஸுக்குப் புதிசல்லவா? அதனாலே அப்படித் தோணுகிறது. இந்த மாதிரி குழந்தைகள் நாட்டியம் செய்யறது ரொம்ப சாதாரண விஷயம். பாருங்கோ, என்னுடைய குழந்தைக்குக் கூட நாட்டியத்திலே ரொம்ப 'டேஸ்ட்'. சொல்லிக் கொடுத்தா நன்னா வரும் என்று எல்லாரும் சொல்றா. ஆத்திலே கூட அடிக்கடி டான்ஸ் டீச்சர் வைச்சுச் சொல்லிக் கொடுக்கணுமின்னு சொல்றா. ஆனால், எனக்கென்னமோ இந்தப் பைத்தியக்காரத்தன மெல்லாம் ஒண்ணும் பிடிக்கிறதில்லை" என்றார்.

உமாராணி பிற்பாடு வக்கீலிடம் ஒன்றும் பேச்சுக் கொடுக்கவில்லை. மேடை மீதே கவனம் செலுத்தத் தொடங்கினாள். சாரு மேடை மீது இல்லாத சமயங்களில் அவள் எப்போது வருவாள் என்றே அவளுடைய மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவள் வந்துவிட்டாலோ உமாவுக்குப் பரவசமாயிருந்தது. அவளுடைய ஒவ்வொரு சைகையும் பேச்சும் உமாவுக்கு மயிர்க் கூச்சம் உண்டாக்கிற்று.

கச்சேரியில் எட்டாவது அங்கமென்று குறிப்பிட்டிருந்தது ராதா-கிருஷ்ண நடனம். சாரு கிருஷ்ணன் வேஷத்திலும், யமுனா என்னும் பெண் ராதை வேஷத்திலும் வந்து நடனம் செய்தார்கள். அன்றைய கச்சேரியில் சிகரமாக விளங்கிய அம்சம் இதுதான். ராதையாக வந்த குழந்தையும் வெகு அழகாகத்தான் ஆடினாள். ஆனால் உமாவின் கண்களுக்கு மேடையில் குழந்தை சாரு மட்டுந்தான் தெரிந்தாள். மற்றக் குழந்தையை அவளால் கவனிக்கவே முடியவில்லை.

இந்த ராதா - கிருஷ்ண நடனம் ஆனதும் சபையில் பிரமாதமான கரகோஷமும் ஆரவாரமும் உண்டாயின. இவற்றுக்கிடையே சபையிலிருந்த பிரமுகர்களில் ஒருவரான திவான் பகதூர் பஞ்சாபகேச சாஸ்திரிகள் மேடை மீதேறினார். நாடகம், நாட்டியம் என்னும் கலைகளைப் பற்றி அவர் விஸ்தாரமாகப் பேசினார். நடராஜாவின் ஆனந்தக் கூத்தில் ஆரம்பித்து, அன்று சாரு ஆடிய ஆட்டத்தில் கொண்டு வந்து முடித்தார். அவருடைய பேச்சு நீண்டு கொண்டே இருந்ததைப் பொறுக்காமல், சபையில் சிலர் அவ்வப்போது கைதட்டினார்கள். கடைசியில் அவர், "இன்று சாரு என்கிற குழந்தை நாட்டியம் ஆடினதைப் பார்த்த போது எனக்குக் கூட நாட்டியம் கற்றுக்கொள்ளலாமென்று ஆசை உண்டாகி விட்டது" என்றதும், சபையில் கொல்லென்ற சிரிப்பு எழுந்தது. இப்படிச் சொல்லிவிட்டு, திவான் பகதூர் பஞ்சாபகேச சாஸ்திரிகள் மேடையிலிருந்து கீழே இறங்கினார். இறங்கும்போது, கால் நொடித்துத் தடுமாறி விழுந்தார். அப்போது சபையில் உண்டான கோலாகலத்தின் சப்தம் வானத்தை அளாவிற்று.

பிறகு, கஜகுல ஆஜானுபாகு அவர்கள் கையில் ஒரு பெரிய ரோஜாப்பூ மாலையுடன் மேடையின் மீது ஏறினார். சபையில் அதிருப்தியின் சின்னங்கள் அதிகமாயின. ஆனால் ஆஜானுபாகு வாயைத் திறந்து பேச ஆரம்பித்ததும், அதிருப்தி மாறி மௌனம் குடிகொண்டது.

"சபையோர்களே, என் சிநேகிதர் மகா-ஈ-ஈ-ஸ்ரீபஞ்சாமிர்த - இல்லை, மன்னிக்கணும் - பஞ்சாபகேச சாஸ்திரிகளைப்போல் நான் பெரிய பிரசங்கம் செய்ய வரவில்லை. (சிரிப்பு) ரொம்பவும் சந்தோஷமான ஒரு கடமையைச் செய்வதற்காக உங்கள் முன்னால் வந்து நிற்கிறேன். இன்று ஒரு சுபதினம். ஸ்ரீமதி உமாராணி தேவி அவர்கள் இவ்விடம் இன்று விஜயம் செய்திருப்பது நமது பள்ளிக்கூடத்தின் பாக்கியம்

(கரகோஷம்). நமது பள்ளிக்கூடத்தின் கட்டிட நிதியைப் பற்றி இனிமேல் நமக்குக் கவலையில்லை. (கரகோஷம்). ஸ்ரீமதி உமாராணி தேவி மனசு வைத்தால் நமது பள்ளிக்கூடம் அடுத்த வருஷமே ஹைஸ்கூலாகவும் காலேஜாகவுங்கூட மாறிவிடும். உங்கள் சார்பாகவும் எங்கள் பள்ளிக்கூடத்தின் சார்பாகவும் இந்த ஹாரத்தை ஸ்ரீமதி உமாராணி தேவிக்குப் போடுகிறேன்." (பலமான கரகோஷம்)

இம்மாதிரி சொல்லிவிட்டு, ஆஜானுபாகு பக்கப்படுதாவின் பக்கம் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தார். குழந்தை சாரு அங்கிருந்து வந்தாள். அவளிடம் ஆஜானுபாகு பூமாலையைக் கொடுத்தார். சாரு அந்த மாலையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மேடையிலிருந்து கீழே இறங்கயத்தனித்தாள்.

அப்போது, உமாராணி சட்டென்று தன்னுடைய ஆஸனத்திலிருந்து எழுந்து விரைந்து சென்று மேடை மீது ஏறினாள். சபையில் மறுபடியும் கரகோஷம் உண்டாயிற்று. குழந்தை சாருவினிடமிருந்த பூமாலையை வாங்கிக் கொண்டாள். அதைச் சபையோர் எதிர்பார்த்தார்கள். ஆனால் அடுத்தபடி அவள் செய்த காரியத்தை யாரும் எதிர் பார்க்கவில்லை. அந்த மாலையை உமா, சாருவின் கழுத்தில் போட்டு, அவளுடைய கன்னத்தில் ஒரு முத்தமிட்டு விட்டுக் கீழே இறங்கினாள். அப்போது சபையில் எழுந்த சந்தோஷ ஆரவாரம் மண்டபத்தின் கூரையைப் பிளந்துகொண்டு மேலே சென்று வானை அளாவிற்று என்று சொன்னால் அது மிகையாகாது.

கடைசி அம்சமும் முடிந்ததும், உமாராணி வெளியே சென்று வண்டியில் ஏறிக்கொண்டாள். காரின் அருகில் விடை பெற்றுக்கொள்ள நின்ற வக்கீலிடம், "வக்கீல் ஸார்! அந்தக் குழந்தை யார் வீட்டுக் குழந்தை என்று கொஞ்சம் விசாரிச்சுண்டு வந்து சொல்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆகட்டும், அம்மா!" என்றார் வக்கீல்.

"மறந்துவிடக் கூடாது. கட்டாயம் விசாரிச்சுண்டு வாங்கோ!" என்றாள்.

'இது என்ன பைத்தியம்' என்று வக்கீல் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார்.

9. பராசக்தி குழந்தை

அன்றிரவு உமா குழந்தையின் நினைவாகவே இருந்தாள். தூக்கத்தில் சாருவைப் பற்றித்தான் கனவு. மறுநாள் பொழுது விடிந்த பிறகும் அந்த ஞாபகம் மாறவில்லை. இப்படிப்பட்ட குழந்தையைப் பெற்ற பாக்கியசாலிகள் யாரோ என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். 'வக்கீலை விசாரிக்கச் சொன்னோமே, அவர் விசாரித்தாரோ என்னமோ தெரியவில்லையே?' என்று யோசித்தாள். காலை ஒன்பது மணி வரையில் தகவல் ஒன்றும் வராமல் போகவே, டெலிபோனை எடுத்து வக்கீலைக் கூப்பிட்டாள்.

வக்கீல், "யாரு? – ஓஹோ! நீங்களா? – நமஸ்காரம்" என்றார்.

"நேற்று ராத்திரி டான்ஸு பண்ணின குழந்தையைப் பற்றி விசாரிக்கச் சொன்னேனே, விசாரிச்சீர்களா?" என்று உமா கேட்டாள்.

"நீங்கள் ஒரு காரியம் சொன்னால் அதை நான் செய்யாமல் இருப்பேனா?" என்றார் வக்கீல்.

"அப்படின்னா ஏன் உடனே தெரிவிக்கலை?" என்றாள் உமா.

"இல்லை; வந்து... விஷயம் அவ்வளவு அவசரமாகத் தோணலை. அதனாலேதான் மத்தியானம் வந்து நேரில் தெரியப்படுத்தலாம் என்றிருந்தேன்."

"போகட்டும்; இப்பத்தான் சொல்லுங்கள்."

வக்கீல் தொண்டையைக் கனைக்கும் சத்தம் கேட்டது.

"என்ன ஸார்! ஆர்ப்பாட்டம் பலமாயிருக்கே. இதுவும் கேஸ் விசாரணையா என்ன? நிஜத்தைச் சொல்றதுக்கு இவ்வளவு யோசனை என்னத்திற்கு?"

"யோசனை ஒண்ணுமில்லை – வந்து பழம் நழுவிப் பாலிலே விழுந்ததுன்னு கேட்டிருக்கிறீர்களோல்லியோ?..."

"அதுக்கென்ன இப்போ வந்தது?"

"அந்த மாதிரி – நேற்று ராத்திரி நீங்க போனவுடனே தியேட்டரிலேயே விசாரிச்சுட்டேன். விசாரிச்சதிலே, ஒரு கல்லிலே இரண்டு பழம் விழுந்தாப்பலே ஆச்சு."

"விஷயத்தைச் சொல்லுங்கோ, ஸார்!"

"அதுதானே சொல்லிண்டிருக்கேன். நீங்க முன்னே சம்பு சாஸ்திரின்னு ஒருத்தரைப் பத்தி விசாரிக்கச் சொன்னீர்களோ, இல்லையோ?"

"ஆமாம்?" என்று உமா சொன்னபோது அவள் குரல் கொஞ்சம் நடுங்கிற்று.

"குழந்தையைப் பற்றி விசாரிச்சதிலே சம்பு சாஸ்திரியையும் கண்டுபிடிச்சுட்டேன். இந்தக் குழந்தை சாவடிக் குப்பத்திலே சம்பு சாஸ்திரிங்கறவர் வீட்டிலேதான் இருக்காளாம். அவர் தான் கார்டியனாம். வேறே தாயார் தகப்பனார் கிடையாதாம்."

"என்ன, என்ன! வக்கீல் ஸார்! நிஜமாவா சொல்றேள்?"

"நிஜமாத்தான் சொல்றேள். அந்த சம்பு சாஸ்திரிங்கறவரைக் கூடப் பார்த்தேன். நல்ல ஒண்ணாம் நம்பர் மடிசஞ்சிப் பிராமணன்!"

உமா தன் வாய்க்குள், "இடியட்!" என்று அழுத்தந்திருத்தமாய்ச் சொல்லிக் கொண்டாள். அது அந்த மனுஷர் காதில் விழுந்ததோ என்னவோ தெரியாது. உடனே அவள் உரத்த குரலில், "இந்த சமாசாரத்தை நேத்து ராத்திரிலேயிருந்து சொல்லாமலா வச்சிண்டிருந்தேள்? ரொம்ப பேஷ்! அவர் எங்கே இருக்கார்னு சொன்னேள்?" என்று கேட்டாள்.

"சாவடிக் குப்பத்திலே..."

உமா, டக்கென்று டெலிபோன் ரிஸீவரை வைத்துவிட்டு விரைவாகக் கீழே இறங்கினாள். "டிரைவர்! டிரைவர்! வண்டியை எடு ஜல்தி!" என்றாள். வண்டி வந்ததும், "சாவடிக் குப்பத்துக்குப் போ! சீக்கிரம்!" என்றாள்.

டிரைவர் சிறிது தயங்கி "சாவடிக் குப்பம் எங்கேயிருக்குங்க?" என்று கேட்டான்.

"சாவடிக் குப்பம் தெரியாதா உனக்கு? நீ என்ன டிரைவர்?" என்றாள் உமா. தர்வானை அழைத்துக் கேட்டாள். அவனுக்கும் தெரியவில்லை.

"சுத்த தடியன்கள்! ஏண்டா நிக்கறேள்? எங்கேயாவது போய் விசாரிச்சுண்டு வாங்கோ, சீக்கிரம்" என்றாள்.

வேலைக்காரர்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருந்தது. அம்மாளுக்கு இவ்வளவு கோபம் வந்து அவர்கள் பார்த்ததேயில்லை. சாவடிக் குப்பம் எங்கேயிருக்கிறதென்று விசாரிப்பதற்காக அவர்கள் நாற்புறமும் ஓடினார்கள்.

உமா காரிலிருந்து இறங்கி உள்ளே சென்று மறுபடியும் டெலிபோனில் வக்கீலைக் கூப்பிட்டு விசாரித்தாள்.

கடைசியாக, சாவடிக் குப்பம் எங்கே இருக்கிறதென்பது தெரிந்து, வண்டி கிளம்பியபோது எஜமானியின் அவசரத்தையும் பரபரப்பையும் பார்த்திருந்த டிரைவர் வண்டியை வெகு வேகமாக ஓட்டினான். சற்று நேரத்துக்கெல்லாம் அம்மாள், "ஏண்டா இவ்வளவு வேகமாய் ஓட்டுகிறாய்? மெதுவாய்ப் போ!" என்று சொன்னதும், அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

உண்மை என்னவென்றால், இதற்குள் உமாவின் பரபரப்பெல்லாம் அடங்கிவிட்டது. அப்பாவிடம் என்ன பேசுவது, எப்படி நடந்துகொள்வது என்ற யோசனை மேலிட்டது. தன்னைப் பார்த்ததும் தான் சாவித்திரி என்பதை அவர் தெரிந்து கொள்வாரா? தெரிந்து கொள்ளாவிடில் தான் சொல்ல வேண்டுமா? "அப்பா! என்னைத் தெரியவில்லையா?" என்று அவர் காலில் விழுந்து கதறலாமா? -சீச்சீ! கூடவே கூடாது. தான் பெற்ற பெண்ணை அவருக்குத் தெரியவில்லையென்றால் இன்னும் கொஞ்ச நாள் தெரியாமலே இருக்கட்டும்! - ஆமாம்! அவருக்குத் தெரியாமல் இருப்பதுதான் நல்லது. தெரிந்தால், தன்னை ஏற்றுக் கொள்வாரோ என்னவோ? அவர் கல்யாணம் பண்ணிக் கொடுத்த அழகான புருஷனிடம் ஏன் இருந்து வாழவில்லையென்று கோபித்துக் கொண்டாலும் கொள்வார். தம் மகள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டாலும் படுவார்! அவருக்கு ஏன் அவ்வளவு சங்கடத்தை உண்டாக்க வேண்டும்? அப்பாவாம் அப்பா! பெண்ணைச் சந்தியில் விட்ட அப்பா! அவரிடம் போய் நான் உங்கள் பெண் என்று சொல்லாமற் போனால் தான் என்ன?

ஆனால், குழந்தை! என் குழந்தை! - அப்பா! உங்களை நான் நம்பியது வீண் போகவில்லை. இத்தனை நாளும் வளர்த்துக் காப்பாற்றினீர்களே! - சாரு! சாரு! நீ என் குழந்தையடி! அதனால் தாண்டி உன்னைப் பார்த்ததும் என் உடம்பு அப்படித் துடித்தது! - இதெல்லாம் நிஜமா? நான் காண்பது கனவில்லையா? உண்மையில் சாருவா என் குழந்தை?

இந்த மாதிரியெல்லாம் உமாவின் உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் அலை மோதிக் கொண்டு எழுந்தன. அப்பாவிடம் உண்மையைச் சொல்வதா, வேண்டாமா என்ற யோசனை முடிவு பெறுவதற்குள் வண்டி சாவடிக் குப்பத்தில் வந்து நின்றது.

என்றும் இல்லாத அதிசயமாகக் குப்பத்தில் மோட்டார் வண்டி வந்து நிற்கவே, குழந்தைகளும் பெரியவர்களுமாய் வண்டியை வந்து சூழ்ந்து கொண்டார்கள். "சம்பு சாஸ்திரிகள் வீடு எது?" என்று உமா கேட்டுக் கொண்டிருக்கையிலேயே ஒரு குடிசைக்குள்ளிருந்து சாரு வெளியில் வருவதைப் பார்த்து விட்டாள். உடனே வண்டியிலிருந்து இறங்கி விரைந்து சென்றாள். குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு கரை காணாக் காதலுடன் அணைத்து முத்தமிட்டாள்.

சாரு, "மாமி! நான் உங்களைப் பத்தியே தான் நினைச்சுண்டிருந்தேன். நேத்திக்கு எனக்கு ரோஜாப் பூ மாலை போட்டேளோன்னோ? அதை ஜோராய்ப் போட்டுண்டு வந்து தாத்தா கிட்டக் காட்டினேன். தாத்தா ரொம்ப சந்தோஷப்பட்டார். அதை இன்னுங்கூட உள்ளே வச்சிருக்கேன்" என்று மூச்சு விடாமல் பேசினாள். பிறகு, உமாராணியின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு கீழே இறங்கி அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, "தாத்தா! தாத்தா! இருபது டிக்கெட் வாங்கிண்டான்னு சொன்னேனே, அந்த மாமி வந்திருக்கா!" என்று கூவிக் கொண்டே உள்ளே போனாள்.

ஏதோ புத்தகத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த சம்பு சாஸ்திரிகள் உமாவைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்திருந்தார். அப்போது உமாவுக்கு நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. அவர் தெரிந்து கொண்டு விட்டாரோ? நாம் இப்போது சாருவைக் கட்டிக் கொண்டது போல் அவரும் ஓடி வந்து, "குழந்தை" என்று நம்மைக் கட்டிக் கொள்வாரோ? உமாவுக்குக் கண்ணில் ஜலம் ததும்பப் பார்த்தது. அப்போது சாஸ்திரிகள், "வாருங்கோ, அம்மா! உட்காருங்கோ! உங்களைப் போலப் பெரிய மனுஷாளை உபசாரம் பண்றதுக்குக் கூட எனக்குத் தெரியாது!" என்றார்.

உமாவுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. இவர் நம்மைத் தெரிந்து கொள்ளவில்லை; ரொம்ப நல்லது. அதை நன்றாய் ஊர்ஜிதப்படுத்தி விடலாம்.

"என்ன சாஸ்திரிகளே, என்னை ஞாபகம் இருக்கா?" என்றாள் உமா. அவளுடைய துணிச்சல் அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது.

"ஞாபகம் இல்லாமல் என்ன? நேத்திக்குக் குழந்தைக்கு மாலை போட்டேளே, நீங்கதானே? குழந்தை என்னமோ நன்னாத்தான் எல்லாம் செய்தாள். ஆனாலும் நீங்க பாராட்டினது ரொம்ப ஜாஸ்தி. அப்படிக் குழந்தையைப் பாராட்டறதற்கு எல்லாருக்குமே மனஸு வராது" என்றார் சாஸ்திரி.

உமா, கண்ணில் துளித்திருந்த ஜலத்தைத் துடைத்துக் கொண்டு, "சாம்பிராணிப் புகையை ரொம்பப் போட்டுட்டேள் போல் இருக்கு!" என்றாள்.

"அடாடா! வாசல்லே வேணாப் போகலாமா?" என்றார் சாஸ்திரி.

"வேண்டாம், வேண்டாம்! இங்கேயே உட்காரலாம்" என்று சொல்லி, உமா கீழே உட்கார்ந்து, சாருவை மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

சாஸ்திரியும் உட்கார்ந்தார்.

இதற்குள் உமாவுக்கு மனஸு நன்றாய்த் திடப்பட்டுவிட்டது. இருதயத்தின் உணர்ச்சியை வெளியில் காட்டாமல் பேசுவதற்குத் தைரியம் உண்டாயிற்று. முற்றும் புதிய மனிதருடன் பேசுவது போலவே சாஸ்திரியுடன் பேசத் தொடங்கினாள்.

"குழந்தை ரொம்பச் சமத்து. நேத்திக்கு இவள் டான்ஸு பண்ணினது இன்னும் என் கண் முன்னாலேயே நிற்கிறது. ஏன், சாஸ்திரிகளே! குழந்தை உங்களுக்கு என்ன வேணும்? இவ அப்பா அம்மா யாரு?" என்று கேட்டாள்.

சாஸ்திரியின் முகம் சுணங்கிற்று. "சாருவைத்தானே கேக்கறயள்? அம்பாள் பராசக்தி எனக்குக் கொடுத்த குழந்தை இவள்!" என்றார்.

உமா புன்னகையுடன், "சரியாய்ப் போச்சு! உலகத்திலே எல்லாக் குழந்தைகளையும் அம்பாள் பராசக்தியே பெற்று வளர்த்துட்டா எவ்வளவோ சௌகரியமாயிருக்கும்" என்று சொல்லிவிட்டுச் சாருவுக்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

"ஆமாம், அம்மா! உண்மையிலேயே அம்பாள் பராசக்திதான் நம்மையெல்லாம் பெற்று வளர்க்கிறாள். அவள் ஆட்டி வைத்தபடி தான் நாம் ஆடுகிறோம். ஆனால், நாம் தான் எல்லாம் செய்யறதாக நினைச்சுண்டு அவஸ்தைப் படறோம்" என்றார்.

"அது போனால் போறது. நீங்க ஒரு நாளைக்குக் குழந்தையை அழைச்சுண்டு எங்காத்துக்கு வர்றணும்" என்றாள் உமா.

"அதுக்கென்ன, பேஷா வர்றேன். குழந்தைக்குப் பள்ளிக்கூடம் சாத்தட்டும்..."

"பள்ளிக்கூடம் சாத்துவானேன். சாஸ்திரிகளே, நாளைக்குக் காலையிலே வந்துட்டு வாருங்களேன். நான் கார் அனுப்பிக்கறேன்."

சாஸ்திரி பேசாமல் இருக்கவே உமா மறுபடியும், "என்ன யோசிக்கறயள்? நான் என்ன ஜாதிக்காரியோ, என்னமோன்னு பாக்கறயளா?" என்றாள்.

"அதெல்லாம் இல்லை, அம்மா! எனக்கு அந்த மாதிரி வித்தியாசமெல்லாம் ஒன்றும் கிடையாது. எனக்குக் காரிலே கீரிலே ஏறியெல்லாம் பழக்கமில்லை. பெரிய மனுஷாளோடே பழகவும் தெரியாது. அதனாலே தான் யோசித்தேன். ஆனால் நீங்கள் இவ்வளவு அபிமானத்தோடு கூப்பிடறதினாலே வந்துட்டு வர்றேன்" என்றார்.

அந்தச் சமயம் வாசலில் யாரோ பேசும் குரல் கேட்டது. அது உமாவுக்குத் தெரிந்த குரல். ஒரு நிமிஷந்தான் யோசிக்க வேண்டியிருந்தது. அது நல்லானுடைய குரல் என்று தெரிந்து போயிற்று. உமாவுக்கு திக்கென்றது. அப்பாவிடம் நன்றாக வேஷம் போட்டாயிற்று; ஆனால் நல்லானிடம் பலிக்குமோ என்னவோ? ஒரு வேளை ஞாபக மறதியாக ஏதாவது சொல்லி விட்டால்...?

உமா அவசரமாக எழுந்திருந்தாள். "சரி, சாஸ்திரிகளே! ரொம்ப நேரமாயிடுத்து. நான் போய் வர்றேன். கட்டாயம் நாளைக்கு நீங்கள் வரணும்! வண்டி அனுப்பறேன்" என்றாள்.

எல்லாருமாக வாசலுக்குச் சென்றார்கள்.

சாஸ்திரிக்காகக் கறிகாய் வாங்கிக் கொண்டு வந்த நல்லான் வாசலில் ஒதுங்கி நின்றான். உமா அவனைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டுப் போய் வண்டியில் ஏறிக் கொண்டாள். சாருவும் பின்னோடு போய் வண்டியின் பக்கத்தில் நின்றாள்.

"சாரு! நாளைக்குத் தாத்தா எங்காத்துக்கு வரப் போறார். நீயும் வர்றயோ இல்லையோ?" என்றாள் உமா.

"உங்காத்துக்கு நான் வந்தால் ஜில்லியோடே விளையாடலாமோ!" என்று சாரு கேட்டாள்.

"பேஷா விளையாடலாம். ஆனால், என்னையும் விளையாட்டிலே சேத்துக்கணும்; என்ன?" என்றாள் உமா.

"ஓ எஸ்!" என்றாள் சாரு.

உமா வண்டியிலிருந்தபடியே சாருவை எடுத்து மறுபடியும் முத்தமிட்டாள். அப்போது, பின் வரும் பேச்சு அவளுடைய காதில் விழுந்தது.

"மகாலட்சுமி மாதிரி இந்த அம்மாவைப் பார்க்கச்சே, நம்ம பெரிய கொழந்தை ஞாபகம் வருதுங்க. ஆனா, நம்மைத்தான் அது அடியோடு மறந்துட்டாப்பலே இருக்குங்களே!" என்றான் நல்லான்.

"அதை என்னத்துக்காக இப்போ ஞாபகப்படுத்துகிறே, நல்லான்! குழந்தை புக்காத்துக்குப் போன போது, உனக்கு இனிமே புருஷன் தான் தாயார், தகப்பனார், குரு, தெய்வம் எல்லாரும் என்று சொன்னேன். அந்தப்படியே அவள் இருக்காள். எப்படியாவது க்ஷேமமாயிருந்தா சரி!" என்றார் சாஸ்திரி.

உமா, குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, டிரைவரிடம், "சலோ" என்றாள்.

வண்டி கிளம்பிற்று.

"இப்படியா எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள், அப்பா! தாயார், தகப்பனார், குரு, தெய்வமா? பேஷ்!" என்று உமா தனக்குள் சொல்லிக் கொண்டாள். அப்பாவின் மேல் அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

10. 'ஜில்லி! ஜில்லி!'

சாரு அன்றிரவு நன்றாய்த் தூங்கவில்லை. இரண்டு மூன்று தடவை விழித்துக் கொண்டு, "தாத்தா! பொழுது விடிந்துடுத்தோ?" என்று கேட்டாள்.

உமாவோ இராத்திரி தூங்கவேயில்லையென்று சொல்லலாம். வெகு நேரம் வரையில், குழந்தைக்கு என்னென்ன உடைகள் வாங்குவது, என்னென்ன ஆபரணங்கள் அணிவிப்பது, எந்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவது, எப்படி எப்படியெல்லாம் வளர்ப்பது என்று யோசனையில் ஆழ்ந்திருந்தாள். இரவு சுமார் இரண்டு மணிக்குத் தூங்கியவள் அதிகாலையில் எழுந்திருந்து, பொழுது விடிய இன்னும் எவ்வளவு நேரம் இருக்குமென்று ஜன்னலண்டை வந்து பார்த்தாள். 'சரி, வெள்ளி முளைத்துவிட்டது; இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் பொழுது விடிந்து விடும். சாருவை அழைத்து வர வண்டி அனுப்ப வேண்டும்' என்று எண்ணினான்.

சாருவை விட்டு இனி மேல் தன்னால் பிரிந்திருக்க முடியாது என்று உமா தீர்மானித்துக் கொண்டாள். அவளை இனி மேல் தன்னுடன் வைத்துக் கொண்டு தான் வளர்க்க வேண்டும். ஆனால், இந்த எண்ணம் எப்படி நிறைவேறும்? அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா? அதை நினைத்தால் உமாவுக்குப் பயமாயிருந்தது. தன்னுடைய செய்கைகளை அவர் ஒப்புக் கொள்வாரா? பாவி, பதிதை என்று நிராகரிக்க மாட்டாரா? எப்படியும் ஒன்று நிச்சயம்; தான் யார் என்று தெரிந்தால், உடனே இனிமேலாவது புருஷனுடன் வாழ்ந்திரு என்று தான் உபதேசிப்பார் – முடியாது, முடியாது!

ஆகவே, தான் யார் என்று அப்பாவிடம் தெரிவிக்கும் விஷயம் யோசித்துத் தான் செய்ய வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது குழந்தையை மட்டும் அழைத்துக் கொண்டு வந்து விட வேண்டும். இது எப்படிச் சாத்தியம்? – குழந்தையை நம்முடன் விட்டு வைக்கச் சம்மதிப்பாரா? – ஏன் மாட்டார்? அவருக்கு என்ன பாத்தியதை குழந்தையின் மேல்? – ஆறு வருஷம் வளர்த்தால் குழந்தை அவருடையதாகி விடுமா? – "இந்த ஐசுவரியத்தையெல்லாம் குழந்தைக்குக் கொடுக்கிறேன்; என்னோடே இருக்கட்டும்" என்று சொன்னால், வேண்டாம் என்று சொல்வதற்கு இவர் யார்?–போதும், போதும். என்னை இவர் வளர்த்துப் பாழுங் கிணற்றில் தள்ளினாரே, அது போதும்! சாருவையும் வளர்த்து அப்படித் தானே செய்வார்? – இம்மாதிரியெல்லாம் எண்ணி எண்ணி அவள் உள்ளம் அலைந்து கொண்டிருந்தது.

கடைசியாகப் பொழுது விடிந்தது. வண்டியும் சாவடிக் குப்பத்துக்குப் போயிற்று. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சம்பு சாஸ்திரியும் சாருவும் 'வஸந்த விஹார'த்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

உமா பங்களாவின் வாசலில் காத்திருந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள். பங்களா, தோட்டம் எல்லாவற்றையும் சுற்றிக் காட்டினாள். தோட்டத்திலிருந்த புஷ்பச் செடிகள் சாருவின் உள்ளத்தைக் கவர்ந்தன. அந்தச் செடிகளை விட்டு வருவதற்கே சாருவுக்கு மனம் வரவில்லை.

கடைசியாக, பங்களாவின் டிராயிங் ரூமில் வந்து உட்கார்ந்தார்கள்.

சாஸ்திரி உபசாரமாக, "பங்களாவும் தோட்டமும் ரொம்ப அழகாயிருக்கு. மயன் மாளிகையிலே துரியோதனன் தரையை ஜலமென்றும், ஜலத்தைத் தரையென்றும் நினைச்சுண்டு திண்டாடினானே, அந்த மாதிரி நானும் திண்டாடிப் போய்ட்டேன்" என்றார்.

உமா, "ஆமாம் சாஸ்திரிகளே! இவ்வளவு பெரிய பங்களாவிலே நான் ஒண்டிக்காரி தனியாயிருக்கேன், எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும், பார்த்துக்குங்கோ!" என்றாள்.

அதற்கு சாஸ்திரி, "உலகமே இப்படித் தான் இருக்கு, அம்மா! சில பேர் இருக்க இடமில்லாமே திண்டாடறா; சில பேர் இருக்கிற இடத்தை என்ன செய்யறதுன்னு தெரியாமே திண்டாடறா" என்றார்.

உமாவுக்குச் சிரிப்பு வந்தது. அப்பாவினுடைய சுபாவம் பழையபடியே தான் இருக்கிறதென்று எண்ணிக் கொண்டாள். தீண்டாதவர்களுக்கு மாட்டுக் கொட்டகையில் தங்க இடங்கொடுத்துவிட்டு, அப்புறம் திண்டாடினவர் தானே?

"நீங்க சொல்றது ரொம்ப வாஸ்தவம். இந்தக் காலத்திலே வீடு வாசல் வச்சிண்டிருக்கறவா பாடுதான் ரொம்ப திண்டாட்டமாயிருக்கு. அதனாலேதான் உங்களை ஒரு ஒத்தாசை கேக்கலாம்னு நினைக்கிறேன். ஆனால், நீங்க இஷ்டப்பட்டாத்தான்..."

"எங்கிட்டயா? ஒத்தாசையா? நான் என்னம்மா உங்களுக்கு ஒத்தாசை செய்யப் போகிறேன்?"

"உங்களாலே முடிகிற காரியந்தான் அது. செய்தேள்னா உங்களை என்னிக்கும் மறக்க மாட்டேன்."

"என்னாலே முடியற காரியமாயிருந்தா, கட்டாயம் செய்யறேன்."

"வேறே ஒண்ணும் பிரமாதமில்லை. யாராவது ஒரு குழந்தையை எடுத்து வளர்க்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை. சாருவைப் பார்த்ததிலிருந்து, அந்த ஆசை ரொம்ப அதிகமாயிருக்கு. சாருவுக்கும் அம்மா இல்லேங்கறயள்; எனக்கும் குழந்தையில்லை. ஒருவேளை நீங்கள் அம்பாள், பராசக்தின்னு சொல்றயளே – அந்த அம்பாள் தான் இப்படிக் கொண்டுவிட்டிருக்காளோன்னு கூடத் தோண்றது. நீங்க சம்மதிச்சா, குழந்தையை நானே வச்சுண்டு வளர்க்கிறேன்... என்ன சொல்றேள்?"

சாஸ்திரி ஸ்தம்பித்துப் போனார். அவர் இம்மாதிரி ஒரு கோரிக்கையை எதிர்பார்க்கவில்லை. அதை மறுத்துச் சொல்லவும் அவருக்குத் தைரியம் வரவில்லை. உமா "அம்பாள் – பராசக்தி" என்று சொன்னதும், அவருக்கு வேறொரு ஞாபகம் வந்தது; சாரு ஒரு நாள், "பராசக்தி! நல்ல அம்மாவா எனக்கு ஒரு அம்மா கொடுக்கக் கூடாதா?" என்று பிரார்த்தித்தாளே; ஒரு வேளை பராசக்திதான் குழந்தையின் பிரார்த்தனையை இம்மாதிரி நிறைவேற்றுகிறாளோ? – ஆனாலும் முன்பின் தெரியாத பம்பாய்க்காரியிடம் சாருவை விட்டு விட்டுப் போவதா? அது எப்படி முடியும்?

"என்ன சாஸ்திரிகளே? மௌனமாயிருக்கேளே? உங்களுக்குச் சம்மதந்தானே?" என்றாள் உமா.

சாஸ்திரி தயக்கத்துடன், "குழந்தையையே கேட்டுப் பாருங்கோ, அம்மா! அவளுக்கு இஷ்டமானால், எனக்கு ஆட்சேபணையில்லை" என்றார்.

சாரு அப்போது சற்றுத் தூரத்தில் ஜில்லியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். ஜில்லி தன் முன்னங்கால்களைத் தூக்கித் தலையை அண்ணாந்து பார்த்துக் கொண்டு சாருவின் மேல் ஏறுவதற்கு முயன்று கொண்டிருந்தது. சாரு கலீரென்று சிரித்தாள்.

"பாருங்கோ! இதற்குள்ளே ஜில்லியோடே எவ்வளவு ஸ்நேகமாய்ப் போயிட்டா, குழந்தை! சாரு! இங்கே வா அம்மா!" என்றாள் உமா.

சாரு அருகில் வந்ததும் அவளை எடுத்து அணைத்துக் கொண்டு, "சாரு! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.

"ஓ எஸ்!" என்றாள் சாரு.

"இந்தப் பங்களாவையும் தோட்டத்தையும் பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.

"ஓ! பேஷாய்ப் பிடிச்சிருக்கு."

"ஜில்லியை?"

"ஜில்லியை ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு."

"அப்படின்னா, நீ இந்த ஆத்திலேயே என்னோடே இருந்துடேன். உனக்கு அம்மா இல்லேன்னு தாத்தா சொல்றா. நான் உனக்கு அம்மாவா இருக்கேன். ஜில்லியோடே விளையாடிண்டு ஜோராயிருக்கலாம்" என்றாள் உமா.

குழந்தை, பாவம், என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தாத்தாவின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் குழந்தையின் உள்ளத்தில் இருந்ததைச் சாஸ்திரி தெரிந்து கொண்டார். அவளுக்கு இங்கே இருக்கத்தான் பிரியம்; ஆனால் சொல்வதற்குத் தயங்குகிறாள்.

"நீங்க சொன்னால் குழந்தை இருந்துடுவள், சாஸ்திரிகளே!" என்றாள் உமா.

சாஸ்திரி கண்ணில் ததும்பிய கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, "அதுக்கென்ன, குழந்தை இருக்கணும்னு பிரியப்பட்டா இருக்கட்டும்" என்றார்.

"தாத்தா சரி என்கிறார். உனக்குச் சம்மதந்தானே, சாரு? அப்புறம் தாத்தாவைப் பார்க்கவே முடியாதென்னு நினைச்சுக்காதே. தாத்தாவுக்கு எப்போ எப்போ இஷ்டமோ அப்போவெல்லாம் வந்து உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்" என்றாள் உமா.

சாரு, "அப்படின்னா சரி" என்று சொல்லி விட்டு, "ஜில்லி! ஜில்லி!" என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடினாள்.

அன்று மாலை சம்பு சாஸ்திரி தம்முடைய குடிசையில் அம்பிகையின் விக்கிரகத்துக்கு முன்னால் கை கூப்பிக் கொண்டு நின்றார். அம்பிகை எதிரில் இருப்பதாகவே பாவித்து அவர் பேசும் வழக்கத்தைப் போல் இன்றும் பேசினார்.

"அம்மா! இவ்வளவு கடுஞ் சோதனையா! இந்த உலகத்தில் நான் யார் யார் பேரில் அதிக பாசம் வைக்கிறேனோ அவ்வளவு பேரையும் இழந்து விட வேணுமா? மீனா – சாவித்திரி – கடைசியில், குழந்தை சாரு – தாயே! இனி என்னால் பொறுக்க முடியாது!" என்று கூறி விட்டு விம்மினார்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் அவருடைய முகம் சிறிது பிரகாசம் அடைந்தது. "இது என்ன பைத்தியம்? – தாயே! நீ கொடுத்தாய்; நீ எடுத்துக் கொண்டாய். நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? அந்தக் குழந்தைக்கு வருகிற பாக்கியத்தைத் தடுப்பதற்கு நான் யார்?" என்றார். இப்படிச் சொன்னபோது அவருக்கு மறுபடியும் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. கண்ணில் தாரை தாரையாய் ஜலம் பெருகி வழிந்தது.

அந்தச் சமயத்தில் வீதியில் கொஞ்ச தூரத்தில் சிலர் பஜனை செய்துகொண்டு வரும் சப்தம் கேட்டது. அது தேசீய பஜனை.

"தாயின் மணிக்கொடி பாரீர்...அதைத்

தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட – வாரீர்!"

என்று தொண்டர்கள் பாடிக்கொண்டு வந்தார்கள்.

இதைக் கேட்ட சம்பு சாஸ்திரிக்கு ரோமம் சிலிர்த்தது. வாசற்பக்கம் சென்று, அந்தப் பஜனை கோஷ்டி மறையும் வரையில் கேட்டுக் கொண்டு நின்றார். திரும்பி அம்பிகையின் விக்கிரகத்தின் முன்னால் வந்து, "அம்பிகே! இதுவா உன் ஆக்ஞை? இந்தத் துர்ப்பலமான சரீரத்தைத் தேச சேவையில் ஈடுபடச் சொல்கிறாயோ? உன் கருணையே கருணை!" என்று சொல்லி நமஸ்கரித்தார்.

11. சங்கம் ஒலித்தது!

அந்த வருஷத்தில் பாரத நாட்டில் ஒரு யுகப் புரட்சி நடந்து கொண்டிருந்தது. ஆயிரம் வருஷங்களாக அறியாமையில் மூழ்கி, சோம்பலுக்கு ஆளாகி, வீரமிழந்து, அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த பாரத மக்கள் விழித்தெழுந்து கொண்டிருந்தார்கள். காந்தி மகானுடைய அஹிம்சா மந்திரத்தின் சக்தியால் அவர்களை மூடியிருந்த மாயை ஒரு நொடியில் பளிச்சென்று விலகிப் போனது போல் இருந்தது. அவர்களைப் பீடித்திருந்த அடிமைத்தளைகள் படீர் படீர் என்று முறிந்து விழும் சப்தம் நாலு பக்கங்களிலும் எழுந்தது.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின்னர்

வேறொன்று கொள்வாரோ?"

என்னும் ஆவேசம் தேசமெங்கும் உண்டாயிற்று. நாட்டின் விடுதலைக்காக ஜனங்கள் எந்த விதமான கஷ்டங்களையும் அநுபவிக்கவும், எவ்விதத் தியாகங்களையும் செய்யவும் தயாரானார்கள். தேசப் பணியில் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்வதற்கும் சித்தமானார்கள்.

அன்னையின் கைவிலங்குகளைத் தகர்க்க முயன்றவர்கள் அதே சமயத்தில் தங்களைப் பிணைத்திருந்த தளைகளையும் அறுத்தெறிந்தார்கள். உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற மடமை தகர்ந்தது. "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லாரும் இந்திய மக்கள்" என்னும் உணர்ச்சி பரவிற்று.

ஒரு தன்னந் தனி மனுஷர் தள்ளாத கிழவர் கையில் கோல் ஊன்றி – "சத்தியமே ஜயம்" என்று சொல்லிக் கொண்டு சுதந்திர யாத்திரை தொடங்கினார். அவரைப் பின்பற்றி அந்தப் புண்ணிய வருஷத்தில் பாரத மக்கள் ஆயிரம், பதினாயிரம் லட்சம் என்ற கணக்கில்,

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது

சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்"

என்று பாடிக்கொண்டு கிளம்பினார்கள்.

இத்தகைய சுதந்திர சங்கநாதத்தின் ஒலி சாவடிக் குப்பத்துக்கும் வந்து எட்டித்தான் இருந்தது. சம்பு சாஸ்திரிக்குச் சில காலமாக மனத்தில் அமைதி கிடையாது. 'தேசத்தில் இப்படிப்பட்ட மகத்தான இயக்கம் நடக்கின்றது. என்னவெல்லாமோ ஆச்சரியங்கள், கனவிலும் எதிர்பாராத அற்புதங்கள் நிகழ்கின்றன, – நாம் மட்டும் இந்தச் சாவடிக் குப்பத்தில் உட்கார்ந்து பொழுது போக்கிக் கொண்டிருக்கிறோமே?' என்ற தாபம் அவர் மனத்தில் அடிக்கடி உண்டாகும். அப்போதெல்லாம், 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் இந்த ஆசைகளெல்லாம் நமக்கு எதற்கு? எவ்வளவோ பெரிய மகான்கள், வீர புருஷர்களெல்லாம் சேர்ந்து செய்யும் காரியத்தில் நாம் ஈடுபட்டு என்ன செய்து விடப் போகிறோம்? நம்மால் என்ன முடியும்? ஏதோ இந்தச் சாவடிக் குப்பத்து ஜனங்களுக்கு நம்மாலான ஊழியம் செய்து கொண்டிருந்தால், அதுவே பெரிய காரியம்' என்று எண்ணி மனஸை சமாதானப்படுத்திக் கொள்வார்.

இந்த மாதிரி சம்பு சாஸ்திரி நினைத்ததற்கு அவருடைய இருதய அந்தரங்கத்தில் குழந்தை சாருவினிடம் கொண்டிருந்த அளவிலாத அபிமானமும் ஒரு முக்கிய காரணமாகும். ஒவ்வொரு சமயம் அவர் இது விஷயமாகத் தம்மைத் தாமே நிந்தித்துக் கொள்வதுமுண்டு. 'என்ன? உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளவா பார்க்கிறாய்? உன்னைவிடப் பலவீனர்கள் எத்தனையோ பேர் தேச சேவை செய்யவில்லையா?

சிறைக்குப் போகவில்லையா? உயிரையும் கொடுக்கவில்லையா? உனக்கு மட்டும் என்ன வந்தது? இந்தக் குழந்தை மேலுள்ள பாசத்தினால் தானே நீ வெளியே கிளம்பாமல், தேசப் பணியில் ஈடுபடாமல் உட்கார்ந்திருக்கிறாய்?' என்று அவருடைய ஒரு மனஸு சொல்லும். உடனே இன்னொரு மனஸு, "ஆமாம்; அதனால் என்ன? இந்தக் குழந்தையைப் பராசக்தி என்னிடம் ஒப்புவித்தாள். அந்தப் பொறுப்பை நான் எப்படித் தட்டிக் கழிக்க முடியும்? 'ஸ்வதர்மந்தான் செய்வதற்குரியது; பரதர்மம் விநாசத்தை அளிக்கும்' என்று கீதாசாரியன் சொல்லியிருக்கவில்லையா?" என்று தேறுதல் கூறும்.

இந்த மாதிரி சாஸ்திரியின் உள்ளத்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் தான் சென்ற அத்தியாயங்களில் கூறிய நிகழ்ச்சிகள் நடந்தன. ஆகவே சாருவை உமாராணி வளர்ப்பதாக ஏற்றுக் கொண்டது பராசக்தியின் விருப்பத்தினாலே என்று சாஸ்திரி தீர்மானித்தார். தம்மைத் தாய்நாட்டின் பணி செய்யும்படி அம்பிகை ஆக்ஞாபித்திருப்பதாகவும் அவர் நம்பினார். ஊர் ஊராகப் போய்த் தேச யாத்திரை செய்ய வேண்டுமென்பதாக அவர் மனத்தில் நெடுங்காலமாகக் குடி கொண்டிருந்த ஆசையும் இப்போது நிறைவேறக் கூடியதாயிற்று.

எனவே, சாவடிக் குப்பத்திலிருந்து கிளம்புவதென்று சாஸ்திரி முடிவு செய்துகொண்டார். ஆனால், இதை நல்லானிடமும் மற்றவர்களிடமும் எப்படித் தெரிவிப்பது? தெரிவித்தால், அவர்கள் கட்டாயம் ஆட்சேபிப்பார்களே?

இம்மாதிரி யோசித்துக் கொண்டு ஒருநாள் குடிசையின் திண்ணையில் உட்கார்ந்திருந்தபோது, குப்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகள் சிலர் அங்கே வந்தார்கள். சாஸ்திரியார் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவர்கள் அவர் அருகில் வந்து நின்றார்கள்.

"என்ன காந்திமதி! எங்கே வந்தீங்க எல்லாரும்?" என்று சாஸ்திரி கேட்டார்.

"ஏன், சாமி! சாரு இனிமே இங்கே வரவே வராதுங்களா?" என்றாள் காந்திமதி.

"சாரு இனிமே வரமாட்டாள், அம்மா! அவள் இப்போது பெரிய பணக்காரியாய்ப் போய்விட்டாள்" என்றார் சாஸ்திரி.

உமாராணி அன்று, "என்னோடே இருக்கயா?" என்று கேட்டதும், சாரு அதற்குச் சம்மதித்துவிட்டது சாஸ்திரியின் மனத்தைப் புண்ணாக்கியிருந்தது. இந்த வருத்தத்தைத்தான் மேற்கண்ட வார்த்தைகளில் அவர் தெரிவித்தார். ஆனால், உடனே, 'சீ! குழந்தையைப் பற்றி என்ன சொல்கிறோம்? அவளுக்கு என்ன தெரியும்! பாவம்!' என்று எண்ணினார்.

அந்தப் பெண்களில் இன்னொருத்தி, "ஏங்க? சாரு இப்போ போயிருக்கிற இடத்திலே சோறே சாப்பிட மாட்டாங்களாம்; ரூபாயைச் சமைச்சுச் சாப்பிடுவாங்களாமே; அது நிஜங்களா?" என்று கேட்டாள்.

சாஸ்திரி, "அப்படி யார் சொன்னா, உனக்கு? ரூபாயைச் சாப்பிட முடியாது, அம்மா! எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும் முடியாது. உங்க பள்ளிக்கூடத்திலே, 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று பாட்டுக் கூடச் சொல்லிக் கொடுத்திருப்பாளே; இல்லையா?" என்றார்.

"அதுதானுங்க கேட்டேன், காளியம்மாதான் அப்படிச் சொன்னா; நான் இருக்காதுன்னேன்" என்றான்.

அப்போது காளியம்மா, "சாரு இல்லாமே எங்களுக்கெல்லாம் போதே போலிங்க. ரொம்பக் கஷ்டமாயிருக்குதுங்க" என்றாள்.

"எனக்குக்கூடக் கஷ்டமாய்த்தானம்மா இருக்கு. அதனாலேதான் நான் கூட இந்த ஊரை விட்டே போய் விடலாமென்று யோசிச்சுண்டிருக்கேன்" என்றார் சாஸ்திரி.

இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு நல்லானும் இன்னும் நாலைந்து பேரும் கும்பலாகச் சாஸ்திரியிடம் வந்தார்கள்.

நல்லான் சிறிது ஆத்திரத்துடனே, "எஜமான் இது என்ன நாங்க கேள்விப்படறது? நீங்க குப்பத்தை விட்டுப் போகப் போறதாச் சொன்னீங்களாமே? பசங்கள் சொல்லிக்கிட்டிருக்குதே! அது நெசந்தானா?" என்று கேட்டான்.

"ஆமாம், நல்லான்! போகலாம்னுதான் உத்தேசம் பண்ணியிருக்கேன். நானே உங்கிட்ட சொல்லணும்னு இருந்தேன். அதுக்குள்ளே நீயே கேட்டுட்டே!" என்று சாஸ்திரி சாந்தமாக பதில் கூறினார்.

"அது ஏனுங்க அப்படி? எங்க மேலே ஏதாவது கோபங்களா, சாமி?" என்று நல்லான் இன்னும் ஆத்திரத்துடன் கேட்டான்.

"கோபமா? உங்க மேலே எனக்குக் கோபமா? உங்க மேலே நான் கோவிச்சுண்டேன்னா, எனக்கு விமோசனமே கிடையாது, அப்பா!"

"பின்னே ஏன் போறேங்கறீங்க, சொல்லுங்க" என்றான் நல்லானின் மச்சான்.

"நிர்க்கதியாய், கையிலே ஒரு குழந்தையையும் தூக்கிக் கொண்டு வந்த என்னை வைத்து ஆதரித்தீர்கள். நீங்கள் எனக்குச் செய்திருக்கிற ஒத்தாசைக்கு, தோலைச் செருப்பாத் தைத்துப் போடணும் என்பார்களே, அந்த மாதிரி செய்தால் கூட ஈடாகாது..."

"சாமி! சாமி! அந்த மாதிரியெல்லாம் சொல்லாதீங்க" என்று நல்லான் காதைப் பொத்திக் கொண்டான்.

"நான் குப்பத்தை விட்டுப் போகிறேனென்கிறது வேறு காரியத்துக்காக" என்றார் சாஸ்திரி.

"அது என்ன, அப்படிப்பட்ட காரியம்? அதையுந்தான் சொல்லுங்களேன்!" என்றான் நல்லானுடன் வந்தவர்களில் ஒருவன்.

"ஆகா சொல்கிறேன், இந்தத் தேசத்திலே இப்போது மகா ஆச்சரியமான காரியமெல்லாம் நடந்து வருகிறதே, உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ? பாரத தேசம் அடியோடு விழுந்துவிட்டது, இனிமேல் அதற்கு மோட்சமே கிடையாது என்று அநேகம் பேர் எண்ணியிருந்தார்கள். அந்தச் சமயத்தில் மகாத்மா காந்தின்னு ஒரு பெரியவர் கிளம்பி மகா அற்புதங்களையெல்லாம் செய்து வருகிறார். அவரால் தேசமெல்லாம் ஒரு புதிய சக்தி – ஒரு புதிய ஆவேசம் – ஏற்பட்டிருக்கிறது. என்றும் நடக்காத காரிய மெல்லாம் நடந்து வருகிறது. ஆயிரக் கணக்கான ஜனங்கள் தங்கள் சொந்தக் காரியங்களையெல்லாம் விட்டுத் தேசத்துக்காக உழைத்து வருகிறார்கள். எத்தனையோ பேர் தங்கள் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில், இராமருடைய பாலத்துக்கு அணிற்பிள்ளை மணலை உதிர்த்தது போல, என்னாலான தேச சேவையை நானும் செய்ய உத்தேசித்திருக்கிறேன். பெரிய காரியம் ஒன்றும் என்னால் செய்ய முடியாது. ஆனால், ஊர் ஊராய்ப் பஜனை செய்து கொண்டு போவேன். கள்ளை ஒழியுங்கள், கதரை உடுத்துங்கள், சுத்தமாயிருங்கள், என் சாதி பெரிது உன் சாதி பெரிது என்றெல்லாம் சண்டை போடாதீர்கள் என்று போதிப்பேன். ஆனால், நான் எங்கே போனாலும் என்ன செய்தாலும் உங்களை மட்டும் மறக்க மாட்டேன், நல்லான்! நீங்கள் இந்தச் சாவடிக் குப்பத்தில் செய்திருப்பதை நான் போகுமிடங்களிலெல்லாம் உதாரணமாய் எடுத்துச் சொல்லப் போகிறேன்."

சாஸ்திரியார் உருக்கத்துடன் செய்த இந்தப் பெரிய பிரசங்கத்தைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள் நல்லானும் அவனுடைய தோழர்களும். அது முடிந்ததும், நல்லான், "அதெல்லாம் சரிதானுங்க. ஆனால், இந்தக் குப்பத்தை விட்டுப் போற பேச்சை மட்டும் மறந்துடுங்க. இங்கேயே இருந்துகிட்டு என்னென்ன தேச சேவை செய்யணுமோ, செய்யுங்கள். நாங்களும் செய்யறோம்" என்றான்.

"இந்த வயசிலே நீங்களாவது, ஊர் ஊரா நடந்து போகவாவது, சாமி; அதெல்லாம் நடக்காத காரியங்க" என்றான் நல்லானின் மைத்துனன்.

"நீங்க போயிட்டா, எங்க பஜனையெல்லாம் என்னமாய்ப் போறதுங்க" என்று ஒருவன் கேட்டான்.

"அதெல்லாம் முடியாது, சாமி! உங்களை விடவே மாட்டோ ம். மீறிக் கிளம்பினால் குறுக்கே விழுந்து மறிப்போம்" என்றான் இன்னொருவன்.

"சத்தியாக்கிரஹம் பண்ணுவோம்" என்றான் நல்லான்.

சம்பு சாஸ்திரி புன்னகையுடன், "சத்தியாக்கிரஹம் என்பது ரொம்பவும் சக்தி வாய்ந்த ஆயுதம், அப்பா! அதை யார் வேணுமானாலும் எந்தக் காரியத்துக்கு வேண்டுமானாலும் உபயோகித்துவிட முடியாது. தவறுதலாக உபயோகித்தால் அது சத்தியாக்கிரஹம் அல்ல; துராக்கிரஹம்" என்றார்.

12. 'வஸந்த விஹாரம்'

உமா தேவியின் இருதய அந்தரங்கத்தில் இத்தனை நாளும் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த அன்பின் வெள்ளம் இப்போது கரை புரண்டோ டத் தொடங்கியது. அந்தப் பிரவாகத்தில் அகப்பட்டுக் கொண்ட சாரு திக்குமுக்காடிப் போனாள்.

ஆறு வருஷமாகக் குழந்தையை கைவிட்டிருந்ததற்கெல்லாம் இப்போது உமா ஒரேயடியாக ஈடு செய்யலானாள். சாருவுக்கு விதவிதமான விலையுயர்ந்த உடைகளை வாங்கிக் குவித்தாள். பாதாதிகேசம் வரை நகைகளாக வைத்து இழைத்தாள். தினம் மூன்று தடவையாவது குழந்தைக்குப் புதுப் புது அலங்காரம் செய்தாலொழிய அவளுக்குத் திருப்தி உண்டாவதில்லை.

முதல் தடவை இம்மாதிரி அலங்காரம் செய்து விட்டபோது, சாரு, "மாமி! மாமி! தத்ரூபமாய் டிராமாவிலே வேஷம் போட்டுண்டாப்பலேயே இருக்கே! இதற்கு என்ன வேஷம் என்று பேரு?" என்று கேட்டாள்.

இப்படியெல்லாம் பளபளப்பாக அலங்கரித்துக் கொள்வது டிராமாவில்தான் என்பது குழந்தையின் எண்ணம். உமாவுக்கு இந்தக் கேள்வி ரொம்ப வேடிக்கையாயிருந்தது. அவள் புன்னகையுடன், "இது என்ன வேஷம்னா கேக்கறே? இதற்குச் சாவித்திரி பொண் வேஷம்னு பேரு" என்றாள். அப்போது சாரி, "சாவித்திரி பொண்ணா? சாவித்திரி சத்தியவான் கதை எனக்குத் தெரியும். ஆனால், சாவித்திரிக்கு ஒரு பொண்ணு இருந்ததா, என்ன?" என்று கேட்டாள். "ஆமாம், இருந்தது; அந்தக் கதையை உனக்கு இன்னொரு நாளைக்குச் சொல்கிறேன்" என்றாள் உமா.

சாருவுக்கு அலங்காரம் செய்து பார்ப்பதுடன் உமா திருப்தியடைந்து மகிழ்ந்துவிடவில்லை. அவளுடைய படிப்பையும் கவனித்தாள். சென்னையில் மிகவும் பிரசித்தி வாய்ந்த கான்வெண்ட் ஸ்கூலுக்கு அவளை அனுப்பினாள். வீட்டில் அவளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க வெள்ளைக்காரி ஒருத்தியை ஏற்பாடு செய்தாள்.

பங்களாவில் சாருவுக்கென்று ஒரு தனி அறை. குழந்தை உட்கார்ந்து படிக்கவும் புத்தகங்கள் வைத்துக் கொள்ளவும் மேஜை நாற்காலி பீரோக்கள் மட்டும் ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கப்பட்டன.

சாருவுக்காக வாங்கிய விளையாட்டுச் சாமான்கள் நூறு குழந்தைகள் விளையாடுவதற்குப் போதுமானவை. சென்னைக் கடைகளில் எத்தனை விதமான பொம்மைகள் உண்டோ , அவ்வளவும் வந்துவிட்டன. அந்தப் பொம்மைகளுக்கு உடைகள் தைப்பதற்கே ஒரு தையற்காரனுக்கு வேலை சரியாக இருந்தது.

பொம்மைக் குதிரையில் ஏறிக் குழந்தை சந்தோஷமாக விளையாடுவதைப் பார்த்த உமாவுக்கு, நிஜக் குதிரையே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று தோன்றிற்று. அவ்வளவு தான். மறு நாளைக்கு மட்டக் குதிரை ஒன்று வந்துவிட்டது. பெயர் தான் மட்டக் குதிரையே தவிர, விலையில் மட்டமல்ல; 1200 ரூபாய்! சாரு அன்று முதல் குதிரைச் சவாரி கற்றுக்கொள்ளத் தொடங்கினாள்.

சாரு ஒவ்வொரு விதத்திலும் சாவடிக் குப்பத்தில் இருந்ததைவிடத் தன்னிடம் மேன்மை பெற வேண்டும் என்று உமா எண்ணினாள். பாக்கி எல்லாவற்றிலும் இந்த நோக்கம் நிறைவேறிற்று. ஆனால், குழந்தையின் நாட்டியத் திறமையைப் பற்றி என்ன? அதை முன்னைக் காட்டிலும் மேன்மை பெறச் செய்வதற்கு தன்னால் என்ன செய்ய முடியும்? – இந்த எண்ணம் உமாவுக்குச் சங்கடத்தை அளித்தது. சாவடிக் குப்பம் பள்ளிக்கூடத்தில் குழந்தைக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்த வாத்தியார் அம்மாள் மீது

உமாவுக்குப் பொறாமை கூட உண்டாயிற்று. கடைசியாக அதற்கும் ஒரு யோசனை கண்டு பிடித்தாள். பரத நாட்டியமாவது, ராதாகிருஷ்ண நடனமாவது? அதெல்லாம் தோற்றுப் போகும்படியாகக் குழந்தைக்கு இங்கிலீஷ் டான்ஸ் சொல்லிக் கொடுக்கத் தீர்மானித்தாள் உமா.

சாருவின் மனோநிலை எப்படியிருந்தது? உமாராணியின் பங்களாவில் அவள் தொடங்கிய புதிய வாழ்க்கை அவளுக்கு சந்தோஷமாயிருந்ததா? சாவடிக் குப்பத்தைக் காட்டிலும் 'வஸந்த விஹாரம்' அவளுக்கு அதிகம் பிடித்திருந்தா? வெளித் தோற்றத்தைப் பொறுத்த வரையில் அப்படித்தான் காணப்பட்டது. புதிய வீட்டில் அவள் கண்ட புதுமைகள் எல்லாம் குழந்தைக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தன.

காலையில் எழுந்ததும், தான் படுத்திருந்த வெல்வெட் மெத்தையையும் தலையணைகளையும் சாரு கையினால் தடவித் தடவிப் பார்ப்பாள். பெரிய நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று, தான் செய்யும் சேஷ்டைகளைப் போலவே தன்னுடைய பிரதிபிம்பமும் செய்வதைக் கண்டு சிரிப்பாள். குளிக்கும் அறையில், 'ஷவர் பாத்'தைத் திறந்து விட்டு, அதிலிருந்து சலசலவென்று ஜலம் கொட்டுவதைப் பார்ப்பதில் அவளுக்கு அளவிலாத ஆனந்தம். எதிர்பாராதபோது தன் மேலேயே அப்படிப் பொழிய ஆரம்பித்துவிட்டால், விழுந்து விழுந்து சிரிப்பாள்.

மேஜையின் மேல் சாப்பாடு கொண்டு வந்து வைப்பதும், ஸ்பூனினால் எடுத்துச் சாப்பிடுவதும் அவளுக்கு ரொம்ப வேடிக்கை. மோட்டார் சவாரி, குதிரை ஏற்றம் எல்லாம் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

முதலில் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் குழந்தை அதிருப்தி தெரிவித்தாள். கான்வெண்ட் ஸ்கூலுக்குப் போய் வந்த அன்று, உமா, அவளை, "குழந்தை! புதுப் பள்ளிக்கூடம் எப்படியம்மா இருக்கு? உனக்குப் புடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.

"புடிக்காமல் என்ன? புடிச்சுத்தான் இருக்கு, ஆனாக்கே..."

"ஆனாக்கே, என்ன?"

"எங்க பள்ளிக்கூடம் மாதிரி ஆகாது" என்றாள் சாரு.

உமா சிரித்துக் கொண்டே, "இப்ப அப்படித்தான் இருக்கும். கொஞ்ச நாள் போனால், கான்வெண்ட் ஸ்கூலும் சாவடிக் குப்பம் பள்ளிக்கூடம் மாதிரி பிடிச்சுப் போயிடும்" என்றாள்.

மாமி பரிகாசம் பண்ணுகிறாள் என்பதைச் சாரு தெரிந்து கொண்டு, "நெஜமாகத்தான் சொல்றேன் மாமி! எங்க பள்ளிக்கூடம் ரொம்ப நல்ல பள்ளிக்கூடம்" என்றாள்.

"உங்க பள்ளிக்கூடத்து ஹெட் மிஸ்ட்ரஸ் ரொம்ப பொல்லாதவள், உன்னைக் கூடப் பிரம்பாலே அடிச்சிருக்கான்னு சொன்னயே?" என்று உமா கேட்டாள்.

"ஆனா, எங்க கிளாஸ் டீச்சர் ரொம்ப நல்லவராச்சே! அப்புறம், எங்க பள்ளிக்கூடத்துப் பசங்கள்ளாம் ரொம்ப நல்ல பசங்கள். தினம் நான் பள்ளிக்கூடத்துக்குப் போனதும் என்னைச் சுத்திண்டு, 'சாரு, ஒரு டான்ஸு பண்ணு!' 'சாரு, ஒரு டான்ஸு பண்ணு' அப்படின்னு நெச்சரிக்குங்க. மாமி! நாங்க போட்ட டிராமாவிலே ஒரு சின்னப் பையன் போலீஸ்காரன் வேஷம் போட்டுண்டு வந்தானே, அவனை உங்களுக்கு நினைவிருக்கோ? அவன் பேரு ரங்கன். என் மேலே அவனுக்கு ரொம்ப ஆசை!" என்று சாரு பேசிக் கொண்டே இருந்தாள்.

உமா, "சாரு, இன்னும் கொஞ்ச நாளிலே கான்வெண்ட் ஸ்கூல் பசங்களும் அந்த மாதிரி உன்கிட்டப் பிரியமாய்ப் போயிடுவா" என்றாள்.

உமா சொன்னது உண்மையாயிற்று. சில நாளைக்குள் சாருவுக்குக் கான்வெண்ட் ஸ்கூலும் பிடித்துப் போய்விட்டது. ஆகவே, வெளிப் பார்வைக்கு அவள்

உற்சாகமாகத்தான் இருந்தாள். குறை எதுவும் இருந்ததாகவே தெரியவில்லை. ஆனால், உண்மையிலோ, சாருவின் உள்ளத்தின் ஆழத்தில் ஒரு பெரிய ஏக்கம் குடிகொண்டு தான் இருந்தது. அது தாத்தாவைப் பற்றிய ஏக்கந்தான். எதிர்பாராத சமயங்களில் திடீரென்று குழந்தையின் இந்த மனக்குறை வெளியாகும். எதைப் பற்றியாவது பேசிக் கொண்டிருக்கும்போது, சம்பந்தமில்லாமல் அவள், "மாமி! தாத்தா ஏன் வரவேயில்லை?" என்று கேட்பாள்.

"தாத்தாவா? அவர் ஏன் வரப் போறார், சாரு! யார் தலையிலே உன்னைக் கட்டலாம்னு யோசனை பண்ணிண்டிருந்தார் போல் இருக்கு. 'நான் வளர்க்கிறேன்' என்று சொன்னதும், எங்கிட்ட விட்டுட்டு அவர் பாட்டுக்குச் சௌக்கியமாயிருக்கார்" என்பாள் உமா.

சாரு எப்போது தாத்தாவைப் பற்றிப் பிரஸ்தாபித்தாலும் உமா ஏதாவது காரமாகத்தான் பதில் சொல்வாள். "உன் தாத்தா உன்னை வந்து பார்க்கிறாதை நானா வேண்டாம்னு வழி மறிச்சிண்டிருக்கேன்? நீ இருக்கிற போதே தானே சொன்னேன், எப்ப வேணாலும் வந்து உங்கப் பேத்தியைப் பாத்துட்டுப் போங்கோன்னு? அவர் வராட்டா என்னை என்ன பண்ணச் சொல்றே?" என்பாள்.

மற்ற எல்லா விஷயங்களிலும் எவ்வளவோ அன்பாகவும், இனிமையாகவும் பேசும் உமா, தாத்தாவைப் பற்றிப் பேச்சு வந்தால் மட்டும் எரிந்து விழுவது சாருவுக்கு ஆச்சரியமாயிருந்தது. அதன் காரணம் ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை. இந்த மாதிரி நாலைந்து தடவை ஆனபிறகு, தாத்தாவைப் பற்றி மட்டும் மாமியிடம் பேசக்கூடாது என்று அவளுடைய மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

அந்தத் தாத்தா விஷயமாக உமாவின் மனம் எவ்வளவு சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது என்பது குழந்தைக்கு என்ன தெரியும்? அவரை நினைக்கும் போதெல்லாம் ஒரு பக்கம் பக்தியும், மற்றொரு பக்கம் ஆத்திரமும் அவளுக்குப் பொங்கிக் கொண்டிருந்தது என்பதைக் குழந்தை என்ன கண்டாள்?

13. குருட்டுக் கிழவன்

ஒரு நாள் சாரு தான் கற்றுக்கொண்டிருந்த இங்கிலீஷ் நடனத்தை உமாராணிக்கு ஆடிக் காட்டிக் கொண்டிருந்தாள். உமா அதைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து, 'இப்படிப்பட்ட குழந்தையைப் பெறுவதற்கு நாம் எவ்வளவு பாக்கியம் செய்தோம்!' என்று எண்ணினாள். அதைத் தொடர்ந்து, 'இந்தப் பாக்கியம் நமக்கு நீடித்திருக்க வேண்டுமே? நம்முடைய ஜன்மம் துரதிர்ஷ்ட ஜன்மமாயிற்றே!' என்ற எண்ணம் உண்டாயிற்று.

அப்போது வாசலில், "அம்மா! கண்ணில்லாத கபோதி! ரெண்டு பிச்சை போடுங்கோ!" என்று ஒரு குரல் கேட்டது. அது கிழவனுடைய குரல்; அதிலிருந்த நடுக்கம் கேட்பவர்களுடைய உள்ளத்தை உருக்குவதாயிருந்தது.

பிறகு, அந்தக் கிழவனின் குரலும் இன்னொரு சிறு பெண்ணின் குரலுமாகச் சேர்ந்து பாடும் சத்தம் கேட்கத் தொடங்கியது;

"தில்லையம்பல ஸ்தல மொண்டிருக்குதாம்-அதைக் கண்டபேர்க்கு

ஜனனமரணப் பிணியைக் கருக்குதாம்."

சாரு ஆட்டத்தை நிறுத்திவிட்டு ஜன்னலோரமாகச் சென்று பார்த்தாள். அப்போது வாசல் 'கேட்'டுக்கு அருகில் ஒரு கிழவனும் ஒரு சிறு பெண்ணும் நின்று பாடுவது தெரிந்தது. சாரு பார்த்துக் கொண்டிருக்கும் போதே, பங்களாவின் தர்வான் அங்கே வந்து, "போ! போ!" என்று அவர்களை விரட்டினான். "மாமி! மாமி! இங்கே சுருங்க வாங்கோ!" என்று அடித்துக் கொண்டாள் சாரு. உமா அவள் அருகில் வந்ததும், "மாமி! மாமி! அந்தக் கிழவனையும் பெண்ணையும் தர்வான் விரட்டுகிறான். ஐயையோ! அவா போறாளே! திரும்பி வரச் சொல்லுங்களேன்!" என்று சாரு கூவினாள்.

உமா, "நல்ல பொண்ணடி நீ!" என்று சொல்லிச் சிரித்துவிட்டு, "தர்வான்! அவர்களைக் கூப்பிடு" என்று உத்தரவிட்டாள். தரவான் ஓடிப் போய், "இந்தாங்க; இங்கே வாங்க. உங்க பாடு யோகந்தான்" என்றான். கிழவனும் பெண்ணும் திரும்பினார்கள். கிழவன் ஒரு கையில் கோல் ஊன்றிக் கொண்டிருந்தான். இன்னொரு கையை அந்தச் சிறு பெண் பிடித்துக் கொண்டு முன்னால் வர, கிழவன் பின் தொடர்ந்து வந்தான்.

"மாமி! அந்தப் பொண்ணு ஏன் அந்தக் கிழவன் கையைப் புடிச்சுண்டே வர்றது?" என்று சாரு கேட்டாள்.

"உனக்குப் பார்த்தாத் தெரியலையா, என்ன? அந்தக் கிழவனுக்கு ரெண்டு கண்ணும் பொட்டை. அதனாலேதான் அந்தப் பொண்ண எங்கே போனாலும் அவன் கையைப் புடிச்சு அழைச்சுண்டே போறது" என்றாள் உமா.

"அதுதான் நானும் நெனைச்சேன். கண் பொட்டையாப் போனா ரொம்பக் கஷ்டமில்லையா, மாமி!" என்றாள் சாரு.

அதற்குள் கிழவனும் பெண்ணும் மறுபடியும் 'கேட்'டுக்குப் பக்கத்தில் வந்து நின்று,

"உயருஞ்சிகரக் கும்பம் தெரியுதாம்-அதைப் பார்த்தபேர்க்கு

உள்ளங்குளிர கருணை புரியுதாம்"

என்று பாடினார்கள். கண் தெரியாத ஒருவன் இந்த மாதிரி பாடியதால் அதனுடைய உருக்கம் அதிகமாயிற்று. நந்தனுக்கு, தூரத்தில் நின்று கோபுர சிகரத்தைக் காணலாமென்ற நம்பிக்கையாவது இருந்தது. இந்தக் குருடனுக்கு அந்த நம்பிக்கைக்கும் இடமில்லையல்லவா? ஆகையால் பாட்டைக் கேட்டு உமாராணிக்குக் கண்ணில் ஜலம் வந்து விட்டது.

சாரு இதைக் கவனிக்கவில்லை. அவள் வெளியில் பார்த்தவண்ணமே, "மாமி! அந்தப் பொண்ணைப் பார்த்தா எனக்குப் புடிச்சிருக்கு. எவ்வளவு நன்னாப் பாடறது? அவளையும் நம்மாத்திலே கூப்பிட்டு வச்சுக்கலாமா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியினால், உமாவின் மனத்தில் ஏற்பட்டிருந்த உருக்கம் மறைந்து விட்டது. சிறிது கடுமையான குரலில், "ரொம்ப அழகாத்தானிருக்கு! தெருவோடு போகிற குழந்தைகளையெல்லாம் நாம் அழைச்சு வச்சுக்கறதா என்ன?" என்றாள்.

"என்னை மாத்திரம் அழைச்சு வச்சுண்டேளே?" என்று சாரு எதிர்பாராத விதமாய்க் கேட்டதும், உமா திகைத்துப் போனாள். குழந்தையைக் கட்டிக் கொண்டு, "நீ தெருவோடு போன குழந்தையா, சாரு?" என்றாள். அந்த நிமிஷத்தில் உமாவுக்கு, "என் கண்ணே! நான்தாண்டி உன் அம்மா! பத்து மாதம் நான் சுமந்து பெற்ற குழந்தையடி நீ!" என்று சொல்லிக் கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனாலும், பல்லைக் கடித்துக் கொண்டு அந்த ஆவலை அடிக்கிக் கொண்டாள். அசாத்தியச் சூடிகையாச்சே சாரு? "நான்தாண்டி உன் அம்மா!" என்றால், "இத்தனை நாளும் எங்கே போனே? ஏன் என்னை விட்டுட்டுப் போனே?" என்று ஆயிரம் கேள்வி கேட்பாளே? அதற்கெல்லாம் என்னமாய்ப் பதில் சொல்வது?

இதற்குள், வாசலில் நின்ற பிச்சைக்காரன் பாடுவதை நிறுத்தி, "அம்மா! கண்ணில்லாத கபோதி, அம்மா! ரெண்டு பிச்சை போடுங்கோ, அம்மா!" என்று கத்தினான்.

உமா, சாருவிடம், "இதோ பாரடி, கண்ணு! அந்தப் பெண்ணின் தாத்தாவுக்கு ரெண்டு கண்ணும் தெரியலை, பாரு! அவளையும் நாம் கூட்டி வச்சுண்டுட்டோ மானால், அந்தக் கிழவன் என்னம்மா பண்ணுவான்? நடக்கக்கூட முடியாமே தவிப்பானே? -இந்தா! இந்த ரூபாயைக் கொண்டு போய் அவள் கிட்டக் கொடுத்துட்டு வா, அம்மா!" என்று சொல்லி ஒரு முழு ரூபாய் எடுத்துக் கொடுத்தாள். சாரு அதை வாங்கிக் கொண்டு கீழே ஓடினாள்.

ஓர் அணா அல்லது இரண்டு அணா கொடுத்திருந்தால் அந்தப் பிச்சைக்காரப் பெண் வழக்கம்போல், "நீ நன்னாயிருக்கணும், மகராஜியாயிருக்கணும்" என்று ஏதாவது வாழ்த்தியிருப்பாள். ஆனால் சாரு ஒரு ரூபாயை அவளிடம் கொடுத்ததும், அவளுக்குப் பேசவே நா எழவில்லை. சாருவை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே, கிழவனிடம் அதைக் கொடுத்து, "ஒரு ரூவா தாத்தா!" என்றாள். அந்தக் கிழவன் குருட்டுக் கண்களில் கூட அந்தச் சமயம் ஒளி வந்தது போல் தோன்றிற்று. அவன் ரூபாயைக் கையால் தடவிப் பார்த்தபடி ஒரு கணம் நின்றான். பிறகு, கீழே உட்கார்ந்து, ரூபாயைப் போட்டுப் பார்த்தான். கணீரென்று சத்தம் கேட்கவே, அவசரமாய் எழுந்திருந்து, "வா கண்ணம்மா, போகலாம்!" என்று சொல்லிவிட்டு, அவள் கையைப் பிடித்துக் கொள்வதற்குக்கூடக் காத்திராமல் போகத் தொடங்கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சாரு, அவன் போகத் தொடங்கியவுடனே, அந்தப் பொண்ணைப் பார்த்து, "இதோ பாரு; நீ இந்த வீட்டிலே என்னோடேயே இருக்கயா? உனக்கு நல்ல பாவாடை, சொக்காய் எல்லாம் வாங்கித் தரச் சொல்றேன்" என்றாள்.

அந்தப் பெண்ணுக்கு, சாரு ஒரு ரூபாயைக் கொடுத்ததுமே அவள் தன்னை ஏதோ ஏமாற்றப் பார்க்கிறாள் என்று ஒருவித சந்தேகம் தோன்றியிருந்தது. இப்போது அந்தச் சந்தேகம் அதிகமாய்ப் போய்விட்டது.

"நான் என்னத்துக்கு உன் வீட்டிலே இருக்கேன்? என் தாத்தாவோடே நான் போவாண்டாமா?" என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் ஓட்டமாய் ஓடிப் போய் முன்னால் போய்க் கொண்டிருந்த தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அவர்களிருவரும் அந்தச் சாலையின் கோடி வரையில் போய் மறையும் வரையில் சாரு அவர்களைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

அன்றிரவு சுமார் பத்து மணிக்கு உமாராணி தன்னுடைய படுக்கை அறைக்குள் வந்தபோது, சாரு வழக்கம் போல் கட்டிலின் மீது மெத்தையில் படுத்துக் கொள்ளாமல், கீழே தரையில் படுத்துத் தூங்குவதைக் கண்டு துணுக்கமுற்றாள். குழந்தையை இரண்டு கையாலும் அணைத்து எடுத்துக் கட்டிலின் மீது போட்டாள். சாரு ஒரு தடவை புரண்டு, வாயோடு, "தாத்தா! தாத்தா!" என்று சொல்லி விட்டு, மறுபடியும் தூங்கிப் போனாள்.

"தாத்தாவைப் பார்க்காமல் குழந்தை ஏங்கிக் கிடக்கிறது. ஐயோ! இவளை இப்படிப் பிரித்து வைத்திருக்கிறேனே, பாவி!" என்று உமா தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். சாருவை அழைத்து வந்த நாளிலிருந்து உமாவின் மனத்தில் இந்தப் போராட்டம் நடந்து கொண்டு தான் இருந்தது. அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். அவரையும் தன்னுடன் வந்து இந்த வீட்டில் இருக்கச் சொல்ல வேண்டும் என்று ஒரு பக்கம் ஆசை பொங்கிற்று. இன்னொரு பக்கம், 'அப்பா என்ன சொல்வாரோ, என்னவோ? நான் சொல்வதை முதலில் நம்புவாரா? நம்பினாலும், என்னிடம் வெறுப்புக் கொள்ளாமல் இருப்பாரா? ஒருவேளை மறுபடியும், அவர் தேடிக் கொடுத்த அழகான மாப்பிள்ளையுடன் போய் வாழவேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது?' என்று ஆட்சேபங்கள் தோன்றின.

உண்மையை அவரிடம் சொல்வதாயிருந்தாலும் எப்படிச் சொல்வது? நேராகச் சொல்வதற்கு அவளுக்குத் தைரியம் வரவில்லை. ஒரு கடிதம் எழுதி எல்லாவற்றையும் அதில் சொல்லி விடலாமா என்று அடிக்கடி நினைப்பாள். இன்று குழந்தை தூக்கத்தில், "தாத்தா தாத்தா" என்று சொன்னதைக் கேட்டதும், இனிமேல் தாமதிக்கக் கூடாது என்றெண்ணிக் காகிதமும் பேனாவும் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

"என் அருமை அப்பாவுக்கு உங்கள் பெண் சாவித்திரி அநேக கோடி நமஸ்காரம்..."

அவ்வளவுதான் எழுதினாள். அதற்கு மேல் யோசித்து யோசித்துப் பார்த்தும் என்ன எழுதுவது, என்னமாய் எழுதுவது என்று தெரியவில்லை. இரண்டு மூன்று தடவை எழுதினதையெல்லாம் கிழித்துப் போட்டுவிட்டு, கடைசியில், 'நாளைக்கு எப்படியாவது அப்பாவை அழைத்துக் கொண்டு வந்து எல்லாவற்றையும் நேரிலேயே சொல்லி விடலாம்' என்று தீர்மானித்தாள். உடனே, "நாளைக்கு என்ன அவசரம்? ஆறு வருஷ காலம் பேத்தியோடு சதா சர்வதாகாலமும் இருந்தாரே, போதாதா? நானுந்தான் கொஞ்ச நாளைக்கு என் பொண்ணை எனக்கே எனக்கென்று வைத்துக் கொண்டிருக்கிறேனே?' என்று நினைத்தாள். 'ஆமாம்; ஆமாம். இன்னும் கொஞ்ச நாள் நன்றாய்க் கஷ்டப்படட்டும். என்னை மட்டும் கல்கத்தாவிலே அந்த ராக்ஷசர்களிடம் ஒப்படைத்துவிட்டு, நான் போட்ட கடுதாசிக்கெல்லாம் பதில் போடாமல் இருந்தாரே. அது மட்டும் தேவலையா?' என்று எண்ணினாள். இம்மாதிரி சிறிது நேரம் தனக்குள் தானே கோபத்தை வளர்த்துக் கொண்டிருந்து விட்டு, கடைசியில் அசந்து தூங்கிப் போனாள்.

டங், டங், டங் என்று கடிகாரம் இசையுடன் மணி பன்னிரண்டு அடித்து நிறுத்தியது. சாரு கண் விழித்துப் பரபரப்புடன் எழுந்திருந்து உட்கார்ந்தாள். "ஐயோ! தாத்தா! உன் கண் பொட்டையாய்ப் போயிடுத்தா?" என்று முணுமுணுத்துக் கொண்டாள். அவள் கண்ட கனவு, அவள் மனத்தில் தத்ரூபமாய்ப் பார்த்தது போல் தோன்றிக் கொண்டிருந்தது. தாத்தாவுக்குக் கண் குருடாய்ப் போய் விட்டது; சாவடிக் குப்பத்துக் குடிசையில், அம்பிகையின் சந்நிதியில் அவர் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார்; கையினால் துளாவுகிறார்; அவர் தேடுகிற பொருள் அகப்படவேயில்லை; நகர்ந்து நகர்ந்து போய், பூஜைக்கு அருகில் வைத்திருந்த குத்து

விளக்கில் முட்டிக் கொள்கிறார்; அப்படி முட்டிக் கொண்டபோது 'டங்' கென்ற சத்தம் கேட்கிறது.

சாரு விழித்துக் கொண்டபோது, கடிகாரத்தில் கடைசி மணி அடித்தபடியால், அதன் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அதனால் தானோ என்னவோ கனவில் கண்டது வாஸ்தவத்தில் நடந்தது போலவே சாருவுக்குத் தோன்றியது.

படுக்கையிலிருந்து அவள் மெல்லக் கீழே குதித்தாள். பக்கத்தில் இன்னொரு கட்டிலில் உமா ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதைப் பார்த்தாள், ஓசைப்படாமல் அந்த அறையிலிருந்து வெளியே போகத் தொடங்கினாள்.

அப்போது, எதிரே சுவரில் இருந்த நிலைக் கண்ணாடியில் அவளுடைய பிரதிபிம்பம் மங்கலாய்த் தெரிந்தது. ஒரு கணம் அதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். உடனே, திரும்பி, படுக்கை அறைக்குப் பக்கத்திலிருந்த உடை அணியும் அறைக்குச் சென்றாள். தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி வைத்தாள். சாவடிக் குப்பத்திலிருந்து வந்த போது அவள் அணிந்து வந்த 'கௌன்' அலமாரியில் இருந்தது. தான் போட்டுக் கொண்டிருந்த புது கௌனை எடுத்து வைத்துவிட்டு, அந்தப் பழைய கௌனைப் போட்டுக் கொண்டாள். இவ்வளவும் இரண்டு நிமிஷத்திற்குள் நடந்துவிட்டது. பிறகு, சாரு மறுபடியும் சத்தப்படுத்தாமல் படுக்கையறைக்குள் வந்து, உமாராணியைச் சற்று தூரத்திலிருந்தபடியே ஆவலுடன் எட்டிப் பார்த்து விட்டு, கதவை மெள்ளத் திறந்து கொண்டு வெளியே சென்றாள். அடுத்த இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் 'வஸந்த விஹார' த்தின் வாசலுக்கு வந்துவிட்டாள். அந்த அர்த்த ராத்திரியில், பால் போல் எரிந்த நிலவின் பிரகாசத்தில், முன்னே டிராமா டிக்கெட் விற்பதற்காக வந்த வழியை ஞாபகப் படுத்திக் கொண்டு, குழந்தை தன்னந் தனியாகச் சாவடிக் குப்பத்தை நோக்கிச் சென்றாள்.

14. கண் திறந்தது !

அதே அர்த்தராத்திரிப் போதில் இன்னொர் ஆத்மா கண் விழித்துக் கொண்டிருந்தது. சம்பு சாஸ்திரி அன்றிரவு சாவடிக் குப்பத்திலிருந்து பிரயாணப்பட்டுப் போவதென்று தீர்மானித்திருந்தார். நல்லானிடமும் மற்றவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு போவதென்பது அசாத்தியமான காரியம்; இராமாயணத்தில் இராமர் தம்மைப் பின் தொடர்ந்த அயோத்திவாசிகள் தூங்கும் போது போனது போல் தாமும் அர்த்த ராத்திரியில் கிளம்பிப் போய்விட வேண்டியது தான் என்று அவர் முடிவு செய்திருந்தார்.

சாவடிக் குப்பத்துக் குடிசையில் கடிகாரம் கிடையாது. ஆனாலும், ஏறக்குறைய நடுநிசியில் சாஸ்திரி கண் விழித்தெழுந்தார். வாசலில் போய்ப் பார்த்தார். அன்று பௌர்ணமி; சந்திரன் உச்சி வானத்தை கடந்து கொஞ்சம் மேற்கே சாய்ந்திருந்தது. உலகம் அப்போது தான் பாற்கடலில் முழுகி எழுந்திருந்தது போல் காணப்பட்டது. தென்னை மரங்களின் மட்டைகள் இளங்காற்றில் அசைந்த போது, முத்துச் சுடர் போன்ற நிலவின் ஒளியில் அவை பளிச் பளிச்சென்று மின்னின.

சாவடிக் குப்பத்தில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ஏழை உழைப்பாளி ஜனங்கள், பகலெல்லாம் உடலை வருத்தி வேலை செய்து விட்டு வந்தவர்கள், இரவில் அசந்து தூங்கினார்கள்.

சாஸ்திரி திரும்பவும் உள்ளே சென்றார். அம்பிகையின் முன்னால் கைகூப்பிக் கொண்டு உட்கார்ந்தார். "தாயே! ஜகதம்பிகே! உன்னையே தஞ்சமாக அடைந்த என்னை இப்படியா கஷ்டப்படுத்துவது? எத்தனையோ துக்கங்களை நானும் பொறுத்திருக்கிறேன்; ஆனால் இந்தக் குழந்தையைப் பிரிந்த துக்கத்தைப் பொறுக்க முடியவில்லையே? ஏன் இப்படிப்பட்ட பாசத்தைக் கொடுத்தாய்? ஏன் இப்படி என்னை வருத்துகிறாய்? எதற்காக இப்படி என் இருதயத்தைப் பிழிகிறாய்?"

சாஸ்திரியின் கண்ணில் ஜலம் ததும்பிப் பிரவாகமாய் ஓடிற்று. சட்டென்று அவர் எழுந்திருந்து நின்றார்.

"அம்மா! இந்த ஏழையாலே உனக்கு ஏதோ காரியம் ஆகவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் இப்படித் துன்புறுத்த மாட்டாய். உன் ஆக்ஞையை நான் மீற வில்லை. இதோ புறப்படுகிறேன். இந்தத் தடவை உன்னை கூட நான் எடுத்துப் போகவில்லை. நீ இங்கேயே இருந்து இந்த நல்ல ஜனங்களைக் காப்பாற்றிக் கொண்டிரு!"

இப்படிச் சொல்லிச் சம்பு சாஸ்திரி அம்பிகைக்கு நமஸ்காரம் செய்து விட்டு எழுந்தார். அந்தக் குடிசையின் முன் புறத்து அறைக்குள் வந்தார். கொடியில் கிடந்த வேஷ்டி அங்க வஸ்திரங்களை எடுத்து மடிசஞ்சிக்குள் அடைக்கத் தொடங்கினார்.

அப்போது பின்னால், "தாத்தா! தாத்தா!" என்று குழந்தையின் குரல் கேட்டது.

சாஸ்திரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. திரும்பிப் பார்த்தார். அளவிலாத ஆச்சரியத்தினால் திக்பிரமை கொண்டார்.

"இதென்ன அதிசயம்? யார் இது? குழந்தை சாரு தானா?" என்று சொல்லிவிட்டு, கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார்.

அப்போது சாரு, "ஐயோ! தாத்தா! நான் கண்ட சொப்பனம் சரியாப் போயிடுத்தே! உனக்குக் கண் தெரியலையா? – நான் சாரு தான். என்னைத் தொட்டுப் பாரு" என்று சொல்லித் தாத்தாவின் அருகில் வந்தாள். கீழே கிடந்த அவருடைய அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொடுத்து, "இதோ உன் மேல்வேஷ்டி; தடவிப் பாரு; மேலே போட்டுக்கோ!

தாத்தா! என் கையைப் பிடிச்சுக்கோ! உனக்கு எங்கெல்லாம் போகணுமோ அங்கெல்லாம் நான் அழைச்சுண்டு போறேன்" என்றாள்.

சாஸ்திரி குழந்தையை அணைத்துக்கொண்டு மேலெல்லாம் தடவிக் கொடுத்துவிட்டு, "நிஜமா, என் கண்மணி சாருதான். எப்படியம்மா இந்தப் பாதி ராத்திரிலே வந்தே? தனியாவா வந்தே?..." என்றார்.

"உனக்குக் கண் பொட்டையாப் போனது சொப்பனத்திலே தெரிஞ்சு போச்சு. நான் இல்லாத போனா உன்னை யாரு கையைப் புடிச்சு அழைச்சுண்டு போவான்னு ஓடி வந்துட்டேன்."

"கண் பொட்டையாப் போச்சா? இதென்ன சாரு என் கண் சரியாத்தானே இருக்கு?"

"நிஜம்மா...?"

"நிச்சயமா, சாரு!"

சாரு ஒரு கணம் யோசித்தாள். சாஸ்திரிக்கு முன்னால் மூன்று விரலைக் காட்டி, "இது எவ்வளவு விரல், சொல்லு!" என்று கேட்டாள்.

"மூணு விரல்!" என்றார் சாஸ்திரி.

சாரு கையைப் பின்னால் கொண்டு போய் மறுபடியும் முன்னால் கொண்டு வந்தாள். "இப்ப எவ்வளவு விரல்?" என்றாள்.

"அஞ்சு விரல்" என்றார் சாஸ்திரி.

உடனே, குழந்தை, "தாத்தாவுக்குக் கண் சரியாப் போச்சு, தாத்தாவுக்குக் கண் சரியாப் போச்சு!" என்று கூவிக்கொண்டு சம்பு சாஸ்திரியைச் சுற்றிச் சுற்றி வந்து ஆனந்தக் கூத்தாடினாள்.

சாஸ்திரி அவளைத் தூக்கி வாரி எடுத்துக் கொண்டார்.

சாரு, பொய்க் கோபத்துடன், "போ, தாத்தா! உன்னோடே நான் 'டூ' தாத்தா! நீதான் அந்த மாமியாத்திலே என்னைக் கொண்டுபோய் விட்டுட்டு, அப்புறம் வந்து பார்க்காமலேயே இருந்துட்டயே? நான் செத்துப் போயிருந்தேன்னா, நீ என்ன பண்ணுவே?" என்றாள்.

"அது என் பேரிலே தப்புத்தான், சாரு! அம்பாள் அந்தப் பணக்கார மாமியை அனுப்பி என்னைச் சோதனை பண்ணினாள். அது சோதனைன்னு தெரிஞ்சுக்காமே, உன்னை நான் அவள் கிட்டக் கொடுத்துட்டேன். இப்பத்தான் எனக்குக் கண் திறந்தது, சாரு!" என்றார் சாஸ்திரி.

தமக்குக் கண் பொட்டையாய்ப் போச்சுன்னா குழந்தை சொன்னாள்? இல்லை. தமக்குக் கண் பொட்டையாய்ப் போகவில்லை; எப்போதும் பொட்டையாகவே இருந்திருக்கிறது. இப்போதுதான் உண்மையில் கண் கிடைத்தது! – இந்த மாதிரி மனத்திற்குள் நினைத்து கொண்ட சம்பு சாஸ்திரி, "இனிமேல் அந்த மாதிரி தப்பு செய்யமாட்டேன், அம்மா! ஐசுவரியத்தைக் கண்டு ஏமாற மாட்டேன். நான் போகிற இடத்துக்கெல்லாம் உன்னையும் அழைச்சுண்டு போறேன். நீ வர்றயோ, இல்லையோ?" என்றார்.

"ஓ! ரெடியா வர்றேன்" என்று குழந்தை சொல்லித் தாத்தாவின் மடிசஞ்சியைத் தோள்மீது எடுத்து வைத்துக் கொண்டாள்.

இரண்டு பேருமாய்க் குடிசையை விட்டுக் கிளம்பினார்கள். சாவடிக் குப்பத்தைத் தாண்டி மோகனமான நிலவு வெளிச்சத்தில் கொஞ்ச தூரம் நடந்து சென்றார்கள். குறுக்குப் பாதை முடிந்து பெரிய சாலையை அவர்கள் அடைந்தபோது, கொத்தவால் சாவடிக்குச் சாமான் மூட்டை கொண்டு வந்த கட்டை வண்டிகள் சில திரும்பிப் போய்க் கொண்டிருந்தன.

ஒரு வண்டிக்காரனைப் பார்த்து சாஸ்திரி, "அப்பா வண்டிகளெல்லாம் எங்கே போவுது?" என்று கேட்டார்.

வண்டிக்காரன் தூங்கி வழிந்துகொண்டே, "செங்கற்பட்டுக்குப் போவுதுங்க" என்றான்.

"இந்தக் குழந்தையைக் கொஞ்சம் ஏத்தி விடட்டுமா? போது விடிஞ்சவுடனே இறக்கிக் கொள்கிறேன்" என்றார்.

"குழந்தையையும் ஏத்திவிடுங்க நீங்களும் ஏறிக்கிங்க, வெறும் வண்டிதானே, சாமி?" என்றான் வண்டிக்காரன்.

சாஸ்திரியும் சாருவும் அந்தக் கட்டை வண்டியில் ஏறிக் கொண்டார்கள். பஞ்சணை மெத்தையில் படுத்து நல்ல தூக்கம் இல்லாமல் புரண்டு கொண்டிருந்த சாரு, கட்டைவண்டியின் வைக்கோல் படுக்கையில் ஆனந்தமாகத் தூங்கினாள்.

15. சாரு எங்கே?

தொட்டிலில் படுத்துத் தூங்குவதுபோல், கட்டை வண்டியில் ஆனந்தமாகத் தூங்கிய சாரு அதிகாலை நேரத்தில் பட்சிகள் பாடிய திருப்பாவையைக் கேட்டுத் துயிலெழுந்தாள். பக்கத்தில் கையால் தடவிப் பார்த்தாள். தாத்தா இல்லாமற் போகவே, "தாத்தா!" என்று அலறிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். ஏற்கெனவே எழுந்திருந்து வண்டியின் பின்னால் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்த சம்பு சாஸ்திரி, "ஏன், சாரு! இன்னும் சற்றுத் தூங்கேன்" என்றார். சாரு அவரைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, "நான் பயந்து போய் விட்டேன், தாத்தா! முன்னே மாதிரி எங்கே என்னை விட்டுட்டுப் போய்விட்டயோன்னு பார்த்தேன்" என்றாள்.

சம்பு சாஸ்திரி சிரித்துக் கொண்டார்.

"தாத்தா! உன்னை விட்டுட்டு நான் அந்த மாமி வீட்டுக்குப் போனதிலிருந்து, அடிக்கடி உன்னைப் பத்தி சொப்பனம் கண்டுண்டிருந்தேன். நீ என்னைச் சொப்பனத்திலே பார்த்தாயோ?" என்றாள் சாரு.

"இல்லை, சாரு! நான் உன்னைச் சொப்பனத்திலே பார்க்கலை. ஆனால், ஏன் தெரியுமா?" என்று சாஸ்திரி கேட்டார்.

"ஏன்னா, உனக்கு என் மேலே ஆசை இல்லை."

"அதுதான் தப்பு. சொப்பனம் எப்ப காணுவா எல்லாரும்? தூங்குகிற போது தானே? உன்னைப் பிரிஞ்ச அப்புறம் நான் தூங்கவே இல்லை, சாரு!" என்று சாஸ்திரி சொன்னார்.

அதைச் சரியாய்க் காதில் கூட வாங்கிக் கொள்ளாமல், "தாத்தா, தாத்தா! அதோ 'ரிகிங் ரிகிங்' என்று ஒரு பட்சி கத்தறதே, அது என்ன பட்சி, தாத்தா?" என்று சாரு கேட்டாள்.

இந்த மாதிரி ஒவ்வொரு பட்சியின் குரலையும் தனித்தனியே கண்டுபிடித்துத் தாத்தாவை அது என்ன பட்சி என்று கேட்டு வந்தாள். அவரும் தெரிந்த வரையில் சொல்லிக் கொண்டு வந்தார்.

கிழக்கே சூரியன் தகதகவென்று புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம், சாலை ஓரத்தில் ஓர் அழகான குளம் தென்பட்டது. வண்டியை நிறுத்தச் சொல்லி, சாஸ்திரியும் சாருவும் இறங்கி அந்தக் குளக்கரைக்குச் சென்றார்கள்.

சாரு, இந்த மாதிரி நாட்டுப் புறத்தையும், குளத்தையும் இதற்கு முன் பார்த்ததே கிடையாது. ஆகையால், அவளுக்கு அளவிலாத சந்தோஷம் உண்டாயிற்று. குளத்தில் பூத்திருந்த தாமரையையும், அதைச் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரம் செய்த வண்டையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள். குளக் கரையிலிருந்த மரங்களின் மீது அணிற்பிள்ளைகள் துள்ளி ஓடுவதைப் பார்த்தபோது, அவளுக்குத் தானும் ஓர் அணிற் பிள்ளையாக மாறி மரத்தின் மீது துள்ளி ஓட வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. குளத்தில் வாத்துக்களைப்போல் நீந்த வேண்டுமென்றும், வானத்தில் பட்சிகளைப் போல் பறக்க வேண்டுமென்றும் ஆசை கொண்டாள். வண்டாக மாறித் தாமரைப் பூவைச் சுற்றிச் சுற்றி வரவேண்டுமென்று விரும்பினாள். குளத்து ஜலத்தில் காலை வைத்ததும் மீன்கள் சுற்றிக் கொண்டு கொத்தின. அப்போது உண்டான குறுகுறுப்பு அவளுக்கு மிகுந்த குதூகலத்தை அளித்தது. ஜலத்தில் காலை வைப்பதும், மீன்கள் கொத்த ஆரம்பித்தவுடன் எடுப்பதும் அவளுக்குப் பெரிய விளையாட்டாயிருந்தது.

சாஸ்திரியார் இதற்குள் காலைக் கடன்களையெல்லாம் முடித்துவிட்டு, சாருவை அருகில் அழைத்து உட்கார வைத்தார். "குழந்தை! பாரதத் தாயைப் பற்றி உனக்கு ஒரு பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன், கற்றுக் கொள்ளுகிறாயா?" என்று கேட்டார்.

"பேஷாய்க் கத்துக்கறேன்" என்றாள் சாரு.

"இனிய பொழில்கள் நெடிய வயல்கள்

எண்ணரும் பெரு நாடு

கனியுங் கிழங்கும் தானியங்களும்

கணக்கின்றித் தரு நாடு"

என்று சம்பு சாஸ்திரி சொல்லிக் கொடுக்கத் தொடங்கினார்.

காலையில் குளக்கரைக்கு வந்த கிராமவாசிகள் சிலர் சம்பு சாஸ்திரி சாருவுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுவிட்டுப் போய், "யாரோ ஒரு பெரியவரும் குழந்தையும் வந்திருக்கிறார்கள்" என்ற செய்தியை ஊரில் பரப்பினார்கள்.

அதே சமயத்தில், சென்னையில் 'வஸந்த விஹாரம்' அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்தது. வழக்கம் போல் அன்று காலை உமாராணி கண் விழித்தெழுந்ததும், "சாரு!" என்று கூப்பிட்டாள். கட்டிலைப் பார்த்தாள்; குழந்தையைக் காணவில்லை. 'இன்றைக்கு என்ன குழந்தை அதற்குள் இறங்கிக் கீழே போய்விட்டாள்?' என்று எண்ணிக் கொண்டு கீழே வந்தாள். வேலைக்காரர்களை விசாரித்தாள். அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்றார்கள். "தோட்டத்திலே இருக்கிறாளா பாருங்கள்! எங்கேயாவது பூச்செடி கிட்ட நின்று கொண்டிருப்பாள்" என்றாள்.

வேலைக்காரர்கள் சற்று நேரத்துக்கெல்லாம் வந்து தோட்டத்தில் எங்கும் காணவில்லை என்றார்கள்.

காப்பி சாப்பிடும் நேரம் ஆயிற்று. இன்னும் குழந்தையைக் காணோம். உமாவுக்கு இப்போது கவலை உண்டாயிற்று. வேலைக்காரர்களை விட்டு மறுபடியும் மாடியிலும் தோட்டத்திலும் நன்றாய்த் தேடச் சொன்னாள். ஒன்றும் பிரயோஜனமில்லை. அதற்குள் ஒரு வேலைக்காரி, அதிகாலையில் தான் வந்தபோது கதவெல்லாம் திறந்து கிடந்தது என்று சொன்னாள்.

நேரம் ஆக ஆக, உமாவின் பதைபதைப்பு அதிகமாயிற்று. 'ஒருவேளை தாத்தாவைப் பார்ப்பதற்கு ஒண்டியாகப் போய்விட்டாளோ குழந்தை!' என்று நினைத்தாள். உடனே, மோட்டாரைக் கொண்டு வரச் சொல்லி ஏறிக்கொண்டு விரைவாகச் சாவடிக் குப்பத்துக்கு விடச் சொன்னாள்.

வண்டி சாவடிக் குப்பத்தை அடைந்த போது, அங்கே சம்பு சாஸ்திரியின் குடிசை வாசலில் ஏழெட்டுப் பேர் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் நல்லானும் அவனுடைய மனைவியும் மைத்துனனும் இருந்தார்கள்.

உமா வண்டியிலிருந்து இறங்கி மிகுந்த மனக்கலக்கத்துடன் அவர்களிடம் வந்து, "சாஸ்திரி ஐயா வீட்டிலே இருக்காங்களா?" என்று கேட்டாள்.

அவங்களைத்தான் அம்மா, காணோம்! போகப் போறேன் போகப் போறேன்னு சொல்லிக்கிட்டிருந்தாங்க. கடைசியிலே, போய்விட்டாங்க போலிருக்கு" என்றான் நல்லான்.

"நான் தான் அப்பவே சொன்னேனே, ஐயாவுக்கு எப்போது போகவேணுமென்று தோணிப் போச்சோ, இனிமே இங்கே இருக்கமாட்டாங்கன்னு?" என்றான் சின்னசாமி.

"அவங்க இவ்வளவு பிடிவாதமாயிருப்பாங்கன்னு தெரிஞ்சா, நானும் அவங்களோட கிளம்பியிருப்பேனே?" என்றான் நல்லான்.

நல்லானுடைய மனைவி உமாராணியைச் சுட்டெரித்திடுபவள் போலப் பார்த்து, "நீ வந்தாலும் வந்தே, அம்மா, எங்களுக்கெல்லாம் சனியன் பிடிச்சுடுத்து. குழந்தையை

உன் வூட்டிலே விட்டுட்டு வந்ததிலேயிருந்து, ஐயாவுக்கு மனசே சரியாயில்லை. அதுதான் ஊரை விட்டே போய்ட்டாங்க" என்றாள்.

உமாவுக்கு இந்த வார்த்தை புண்ணிலே கோலை விட்டுக் குத்துவது போல் இருந்தது. ஆனாலும், தனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்ற எண்ணமும் கூட இருந்தது. இதனால் ஒரு நிமிஷம் பேச நாவெழாமல் தத்தளித்தாள். பிறகு சமாளித்துக் கொண்டு, "என் பேரிலே பிசகுதான். ஆனால், நீங்கள்ளாம் கவலைப்பட வேண்டாம். ஐயாவை எப்படியாவது கண்டு பிடிச்சு உங்களண்டை கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்றாள்.

"அப்படியே கொழந்தையையும் சேர்த்துக் கொண்டாந்து விட்டுடுங்கோ! அம்மா! சாரு போனதிலிருந்து எங்க குப்பம் களையேயில்லாமே போச்சு!" என்றான் அங்கு நின்றவர்களில் ஒருவன்.

உமா விரைந்து சென்று வண்டியில் ஏறிக் கொண்டாள். அவள் மனம் சொல்ல முடியாத வேதனையை அநுபவித்துக் கொண்டிருந்தது. எப்படியோ அப்பாவும் சாருவும் சந்தித்து இரண்டு பேருமாய்ப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்; தன்னிடமுள்ள வெறுப்பினால்தான், அப்படிச் சொல்லாமலே கிளம்பிச் சென்றிருக்கிறார்கள். 'ஐயோ! பாவி, என்ன காரியம் செய்தேன்! அப்போதே அவர் காலிலே விழுந்து 'அப்பா'ன்னு கதறி மன்னிப்புக் கேட்காமல் போனேனே! என்னென்னமோ யோசனை பண்ணிண்டு இருந்துட்டேனே? இப்போது மோசம் போயிடுத்தே! தள்ளாத கிழவரையும், சின்னக் குழந்தையையும் ஊரை விட்டுத் துரத்தினேனே, பாவி! எங்கே போனார்களோ, என்னமோ தெரியவில்லையே? அகப்பட்டாலும் என்னை முகமெடுத்துப் பார்ப்பார்களா? இனிமேல், நிஜத்தைச் சொன்னால்கூட அப்பா நம்புவாரோ என்னமோ தெரியவில்லையே!'

'நல்லான்! நீயல்லவா உத்தமன்? ஊரை விட்டுக் கிளம்புகிற போது, "எஜமானைக் கவனிச்சுக்கோ!" என்று சொல்லிவிட்டு வந்தேன். அப்படியே இந்தப் பட்டணக் கரையிலே வந்து கூட நீ அவரை வைத்துப் பராமரித்திருக்கிறாய்! அவருடைய சொந்தப் பெண் நான், இந்த மாதிரி அவரை ஊரைவிட்டே துரத்திவிட்டேன்!' – இம்மாதிரி உமா துயரச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போதே, வண்டி மறுபடியும் 'வஸந்த விஹார'த்தை அடைந்தது.

16. 'ஸுலோச்சு விஷயம்'

வக்கீல் ஆபத்சகாயமய்யர் தமது ஆபீஸ் அறையில் உட்கார்ந்து சட்டப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவருடைய குழந்தை ஸுலோசனா அருகில் நின்று மேஜை மீதிருந்த இங்கிப் புட்டியின் மூடியைத் திறப்பதற்கு முயன்று கொண்டிருந்தாள்.

"ஏன்னா, ஸுலோச்சு அங்கே இருக்காளா?" என்று கேட்டுக் கொண்டே அவருடைய தர்மபத்தினி உள்ளே வந்தாள்.

"இதோ இருக்காளே, கண்ணு! ஏண்டி அம்மா, ஆபீஸ் ரூமிலே வந்து அப்பாவைத் தொந்தரவு படுத்தாதேன்னு எத்தனை தடவை சொல்றது?" என்று சொல்லிக் கொண்டே தானும் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"குழந்தை தொந்தரவு படுத்தினால் படுத்தட்டும். நீ தொந்தரவு படுத்தாதிருந்தால் போதும். இப்போ என்னத்துக்கு இங்கே வந்தே?" என்றார் வக்கீல்.

"இதென்ன ஆபத்தான்னா இருக்கு? வர வர என்னைப் பார்க்கறதுக்கே உங்களுக்கு பிடிக்கலையா என்ன?"

"ஆபத்துத்தான்; என் பேரே ஆபத்துத்தானே? இப்ப தானா உனக்கு அது தெரிஞ்சுது?"

"போரும், போரும். இந்த அரட்டைக் கல்லியெல்லாம் அந்தப் பம்பாய்க்காரியண்டே கத்துண்டிருக்கேளாக்கும். பேச்சு மட்டும் கிழியறதேயொழியக் காரியத்திலே உப்புக்குப் பிரயோஜனம் இல்லை. நான் சொன்னேனே, அந்த விஷயத்தைப்பத்தி ஏதாவது பேசினேளோ, இல்லையோ?"

"என்ன விஷயம் சொன்னே? ஞாபகம் இல்லையே?"

"அட ஏன் ஞாபகம் இருக்கப் போகிறது? ஊரிலே இருக்கிறவாளெல்லாம் சொன்னா நினைவிருக்கும். நான் சொன்னா நினைவிருக்குமா?"

"கோவிச்சுக்கறயே? என்ன விஷயம்னு இன்னொரு தடவைதான் சொல்லேன்."

"நம்ம ஸுலோச்சு விஷயந்தான்."

"என்ன ஸுலோச்சு விஷயம்?"

"உங்களுக்கு எல்லாம் பிரிச்சுப் பிரிச்சுச் சொல்லியாகணும். எங்கேயோ குப்பத்திலே கிடந்த பெண்ணைக் கொண்டு வந்து அந்தப் பம்பாய்க்காரி வச்சிண்டிருக்காளே, நம்ம ஸுலோச்சுவை வேணும்னா வச்சுக்கட்டும்னு சொன்னேனே?"

"வேணும்னாத்தானே வச்சுக்கணும்? அவவேணும்னு சொல்லலையே?" என்றார் வக்கீல்.

"அவளா வந்து வேணும்னு சொல்லுவாளா என்ன? நம்ம காரியத்துக்கு நாம் தான் சொல்லணும். சம்பு சாஸ்திரியா, சொம்பு சாஸ்திரியா, அந்தப் பிராமணனுக்கு இருக்கிற துப்புக்கூட உங்களுக்கு இல்லை. நீங்களுந்தான் வைக்கல் பண்ணறயள், வைக்கல்! மாட்டுக்குப் போடற வைக்கல்தான்!" என்றாள் ஸுலோச்சுவின் தாயார்.

"அப்பா! அப்பா! இந்த இங்கிப் புட்டியை நான் எடுத்துக்கட்டுமா, அப்பா!" என்றாள் குழந்தை ஸுலோச்சு.

"அட சனியனே! இங்கியெல்லாம் எங்கேடி?" என்றார் வக்கீல்.

"உன் பாக்கெட்டிலே கொட்டிட்டேன், அப்பா!" என்றாள் குழந்தை.

வக்கீல் திடுக்கிட்டுப் பார்த்தார். அவருடைய கோட்டுப் பாக்கெட்டிலிருந்து மை சொட்டிக்கொண்டிருந்தது.

"அசடு! பீடை! சனி!" என்று வக்கீல் கையை ஓங்கினார்.

"இந்தாங்கோன்னா. அவ அசடாயிருந்தா இருக்கட்டும். ஊரிலேயிருக்கிற குழந்தையெல்லாம் உங்களுக்குச் சமத்து; ஸுலோச்சுதான் அசடு. இந்தாடி அம்மா! நீ இங்கே வா" என்று அவர் சம்சாரம் குழந்தையைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டாள்.

வக்கீலுக்குக் கோபம் அசாத்தியமாய் வந்தது. மனைவியைப் பார்த்துச் சுடச்சுட ஏதாவது சொல்லியிருப்பார். குழந்தையை அடிக்க ஓங்கின கையினால் மேஜையைக் குத்தியிருந்தாலும் குத்தியிருப்பார். அந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடித்து, காரியத்தைக் கெடுத்துவிட்டது!

இப்போது டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தபோது கூட, கோபமாய்த்தான் எடுத்தார். "யார் அது?" என்று அவர் கேட்ட போது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஆனால் அடுத்த கணத்தில் முகபாவம் முழுவதும் மாறிவிட்டது.

"ஓஹோ! உமாராணியா – மன்னிக்கணும் – என்ன? ஆச்சரியமாயிருக்கே! – நம்பவே முடியலையே? – இதோ வந்துட்டேன் – ரெண்டு நிமிஷத்திலே அங்கே வர்றேன்."

இந்த மாதிரி பேசிவிட்டு வக்கீல் பரபரவென்று இங்கியாய்ப் போன சட்டையைக் கழற்றி எறிந்துவிடு வேறு சட்டை போட்டுக் கொண்டார். உடனே அவசரமாக வெளியே போகத் தொடங்கினார்.

அவருடைய மனைவி, "என்ன சங்கதி, இப்படித் தலைகால் தெரியாமல் பறக்கிறேள்?" என்று கேட்டாள்.

"உமாராணியாத்துக் குழந்தையைக் காணுமாம். அவசரமாய் வரச்சொல்றா. போய்விட்டு வர்றேன்" என்றார்.

"குழந்தையைக் காணுமா? போச்சுன்னா பீடை விட்டுதுன்னு சொல்லுங்கோ. நம்ம ஸுலோச்சுவைப் பத்திப் பேச்சு எடுக்க இதுதான் சமயம். நான் சொல்றது காதிலே விழறதோ இல்லையோ?"

அம்மாள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறபோதே ஆபத்சகாயமய்யர் வெளியிலே போய்விட்டார். அவருடைய பத்தினி, "இந்த மாதிரி துப்புக் கெட்டவாள் இந்த உலகத்திலே இருப்பாளோ!" என்று சொல்லித் தலையில் போட்டுக் கொண்டாள்.

17. 'அவள் என் மனைவி'

வக்கீல் ஆபத்சகாயமய்யர் உமாராணியின் பங்களாவை அடைந்ததும், உமாராணி அவருக்கு விஷயத்தைச் சொல்லி யோசனை கேட்டாள். "உடனே போய்ப் போலீஸிலே எழுதி வைப்பதுதான் சரி" என்று ஆபத்சகாயமய்யர் சொன்னதும் இருவரும் போலீஸ் டிபுடி கமிஷ்னர் ஆபீஸுக்குச் சென்றார்கள்.

உமாராணியைப் பற்றித் தெரியாதவர்கள் சென்னையில் இல்லையாதலால், டிபுடி கமிஷ்னருக்கும் உமாராணியைத் தெரிந்திருந்தது. எனவே, அவர்களை அவர் மரியாதையுடன் வரவேற்று உட்காரவைத்து, அவர்கள் வந்த காரியம் என்னவென்று விசாரித்தார். வக்கீல் விவரங்களைச் சொன்னார். கடைசியாக, உமாராணி கமிஷ்னரைப் பார்த்து, "தாத்தாவும் பேத்தியுமாகத்தான் எங்கேயோ போயிருக்கிறார்கள். எப்படியாவது அவர்களைக் கண்டுபிடித்துக் கொண்டு வரவேண்டும். அதற்காக என்ன செலவானாலும் நான் ஒத்துக் கொள்கிறேன். இந்த ஒத்தாசை எனக்காகச் செய்யவேணும்" என்று வேண்டிக் கொண்டாள். அதற்கு டிபுடி கமிஷ்னர், "உங்களுக்கு ஒத்தாசை செய்வதில் எனக்கு ரொம்ப சந்தோஷம், அம்மா! ஆனால் இந்த விஷயத்திலே எனக்கு ஒன்றும் அதிகாரமில்லையேயென்றுதான் பார்க்கிறேன். நீங்கள் சொல்கிற சம்பு சாஸ்திரி குற்றம் ஒன்றும் செய்து விடவில்லை. அவர் வளர்த்த குழந்தையைத் தான் அவர் அழைச்சிண்டு போயிருக்கிறார். நகை, கிகை ஒன்று கூட எடுத்துக் கொண்டு போகவில்லை. அப்படியிருக்கிறபோது 'அரெஸ்ட்' பண்ணியோ வேறு விதத்திலோ அவர்களைக் கொண்டு வருவதற்குச் சட்டம் இடங்கொடுக்காதே!" என்றார்.

"அரெஸ்ட்" என்று சொன்னதும் உமாவுக்குப் பகீர் என்றது.

"நீங்கள் அப்படியெல்லாம் அரெஸ்ட் கிரஸ்ட் ஒன்றும் பண்ண வேண்டாம். அந்தக் குழந்தை சௌக்கியமாயிருக்குன்னு எனக்குத் தெரிஞ்சால் போதும். அவா இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சுச் சொல்லுங்கோ! அதற்குமேலே அவாளை அழைச்சுண்டு வர்றதற்கு நானே ஏற்பாடு பண்ணிக்கிறேன்" என்றாள்.

டிபுடி கமிஷ்னர், "ஆகட்டும், அம்மா! நீங்க மட்டும் 'பார்மல் பெடிஷன்' ஒன்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டுப் போங்கோ" என்றார்.

உமா, வக்கீலை விண்ணப்பம் எழுதும்படி கேட்டுக் கொண்டாள். வக்கீல் விண்ணப்பம் எழுத ஆரம்பித்ததும், டிபுடி கமிஷ்னர், "இந்தக் காலத்திலேயே நல்லது ஆகிறதில்லை, பாருங்கள். ஏதோ ஓர் அநாதைக் குழந்தையை எடுத்து வளர்க்கலாம் என்று நீங்கள் நினைக்கப் போக, இந்த மாதிரி தொல்லை நேர்ந்தது" என்றார். அதற்கு உமா பதில் சொல்வதற்குள் டெலிபோனில் மணி அடித்தது.

டிபுடி கமிஷ்னர் டெலிபோனில் பின் வருமாறு பேசினார்: "ஹலோ - எஸ்! - பாங்கி போர்ஜரி கேஸா? - கல்கத்தாக்காரனா? - ஜஸ்! - சென்ட்ரல் ஸ்டேஷன்லேயா 'அரெஸ்ட்' ஆச்சு? - பேரென்ன? ஸ்ரீ...? ஓஹோ! - ஸ்ரீதரன்..."

இதுவரையில் மேற்படி பேச்சை அசட்டையாக கவனித்துக் கொண்டிருந்த உமாராணி, "ஸ்ரீதரன்!" என்று அழுத்தந்திருத்தமாய் டிபுடி கமிஷ்னர் சொன்னதும், திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

டிபுடி கமிஷ்னர், மேஜை மீதிருந்த நோட் புத்தகத்தில் ஏதோ குறித்துக் கொண்டு, மறுபடியும் டெலிபோனில், "ஆல் ரைட்! - இங்கே அனுப்பு - ரிமாண்டுக்கு ஆர்டர் பண்றேன்!-" என்று சொல்லிவிட்டு, டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்தார். வக்கீலைப் பார்த்து, "பெடிஷன் எழுதியாச்சா?" என்று கேட்டார்.

உமாவின் உள்ளமோ அளவிலாத குழப்பத்தை அடைந்திருந்தது. அவளால் தெளிவாகச் சிந்தனை செய்ய முடியவில்லை. 'ஸ்ரீதரன்...பாங்கி போர்ஜரி – அரெஸ்ட்; ஸ்ரீதரன் – பாங்கி போர்ஜரி – அரெஸ்ட்; ஸ்ரீதரன் – பாங்கி போர்ஜரி – அரெஸ்ட்...' – இந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் மனத்தில் சுழன்று கொண்டிருந்தன. இந்தக் குழப்பத்துக்கு மத்தியில் ஒரே ஒரு விஷயம் மட்டும் அவள் மனத்தில் தெளிவாகத் தோன்றியது. தான் உடனே அந்த இடத்தை விட்டுப் போய்விடவேண்டும். அவரை இங்கே கொண்டு வரப் போகிறார்கள்! அப்போது தான் இங்கே இருக்கக்கூடாது! – இப்படி அவள் மனம் பரபரப்பு அடைந்திருக்கையில், வக்கீல் ஆபத்சகாயமய்யர் தாம் எழுதிய விண்ணப்பத்தை அவளிடம் கொடுத்தார். கையெழுத்துப் போடப் போகையில் உமாவின் கை நடுங்கிற்று. மெதுவாகச் சமாளித்துக்கொண்டு கையெழுத்துப் போட்டாள். அதை டிபுடி கமிஷ்னரிடம் கொடுக்கக்கூட அவளுக்குத் துணிவு இல்லை. அப்படியே மேஜை மீது வைத்துவிட்டு எழுந்திருந்தாள்.

டிபுடி கமிஷ்னர், "நீங்க போயிட்டு வாருங்கோ அம்மா! ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே தெரிவிக்கிறேன்" என்றார்.

உமா நடுங்கிய குரலில் அவருக்கு வந்தனம் சொல்லிவிட்டு வெளியே சென்றாள்.

டிபுடி கமிஷ்னர் ஆபீஸ் அந்தக் கட்டிடத்தின் மேல் மாடியில் இருந்தது. உமா மாடிப் படியில் இறங்க ஆரம்பித்தபோது, கீழே ஒரு மனிதனைப் போலீஸ்காரர்கள் சூழ்ந்து அழைத்து வருவதைப் பார்த்தாள். அவனுடைய கையில் விலங்கு போட்டிருந்தது. முதலில் உமாவின் பார்வை அந்த விலங்கின் மேல் தான் விழுந்தது. பிறகு அளவிலாத மன வேதனையுடன் அந்த மனுஷனுடைய முகத்தைப் பார்த்தாள். ஆமாம்! அவர் தான். தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன் தான்! உமா, ஸ்ரீதரனுடைய முகத்தைப் பார்த்த அதே நேரத்தில் ஸ்ரீதரனும் உமாவின் முகத்தைப் பார்த்தான். உடனே, தலையைக் குனிந்து கொண்டான். ஒரு பெண் பிள்ளையின் முன்னால், அதுவும் இவ்வளவு நாகரிகமான ஸ்திரீயின் முன்னால், கையில் விலங்குடன் காணப்பட நேர்ந்ததைக் குறித்து ஏற்பட்ட வெட்கந்தான் அவனை அப்படித் தலை குனியச் செய்தது. குனிந்த தலை நிமிராமல் மாடிப் படிகளில் அவன் ஏறினான். அந்த ஸ்திரீ தனக்கு வெகு சமீபமாக வந்து தன்னைத் தாண்டிப் போனபோது கூட அவளை அவன் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனால், மேல்படிக்கு ஏறினதும் மறுபடியும் அவளைப் பார்க்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தான். அதே சமயத்தில், கீழே தரையை அடைந்துவிட்ட உமாராணியும் மேல் நோக்கி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வை பளிச்சென்று மின்னலைப்போல் அவனுடைய உள்ளத்தில் பாய்ந்தது. அதனால் அவனுடைய மனத்தை மூடியிருந்த இருள் சட்டென்று விலகியது போல் இருந்தது.

'இது யார்? இந்த முகத்தை எங்கே பார்த்திருக்கிறோம்?–ஆஹா, அப்படியும் இருக்க முடியுமோ?'

இதற்குள், பின்னே வந்த போலீஸ்காரர்கள், "போ அப்பா, போ!" என்று சொல்லி அவனைப் பிடித்துத் தள்ளினார்கள். உமாராணியும் மறைந்தாள்.

அடுத்த நிமிஷம் டிபுடி கமிஷ்னரின் முன்னிலையில் பின்வரும் சின்ன நாடகம் நடைபெற்றது.

கையில் விலங்குடன் வந்த கைதி அவருடைய மேஜைக்கு வெகு சமீபமாக வந்து, மிகவும் நயமான குரலில், "ஸார்! கீழே இறங்கிப் போகிறாளே, அந்த லேடி யார்?" என்று கேட்டான்.

"ஷட் அப்! உனக்கு என்ன அதைப் பற்றிக் கவலை?" என்றார் டிபுடி கமிஷ்னர்.

உமாராணியிடம் எவ்வளவோ இனிமையாகவும் மரியாதையாகவும் பேசிய டிபுடி கமிஷ்னர் இப்போது நெருப்பாக இருந்தார்.

அவருடைய அதட்டலில் மிரண்டு போன கைதி தலையைக் குனிந்து கொண்டான். குனிந்தவனுடைய பார்வை தற்செயலாக மேஜையின் மீது வைத்திருந்த காகிதத்தின் மேல் விழுந்தது. அது சற்று முன், வக்கீல் ஆபத்சகாயமய்யர் எழுதிய விண்ணப்பக் காகிதம். அதில் முதல் வரியில், சம்புசாஸ்திரி என்ற பெயரைக் கண்டதும் ஸ்ரீதரன் திடுக்கிட்டான். உடனே, கடைசியில் பார்த்தான். கீழே, "உமாராணி (அலயஸ்) சாவித்திரி" என்று எழுதியிருந்தது.

இதைப் பார்த்தானோ இல்லையோ, ஸ்ரீதரன் திடீரென்று திரும்பி ஓட யத்தனித்தான். ஜவான்கள் அவனைப் பிடித்து நிறுத்தினார்கள்.

டிபுடி கமிஷ்னர், மேஜையில் ஓங்கி ஒரு குத்துக் குத்தி, "இது என்ன கலாட்டா?" என்று கர்ஜித்தார்.

அப்போது ஸ்ரீதரனும், குரலை உயர்த்தி, "She is my wife, Sir! She is my wife! (அவள் என் மனைவி! அவள் என் மனைவி)" என்று கத்தினான்.

"நான்ஸென்ஸ்! அடுத்தாப்பலே, என்னை உன் பேரன் என்று சொல்வே போலிருக்கே!" என்றார் டிபுடி கமிஷ்னர்.

ஸ்ரீதரன் மறுபடியும் ஏதோ பேச ஆரம்பித்தான். அப்போது பக்கத்திலிருந்த போலீஸ்காரன், "உம்" என்று அதட்டி, இடுப்பில் ஒரு குத்துக் குத்தவே, ஸ்ரீதரனுக்குத் தன்னுடைய நிலைமை நன்கு ஞாபகம் வந்தது. தலையைக் குனிந்து கொண்டு மௌனமாய் நின்றான்.

18. உமா ராணியின் பழி

உமாராணி அன்றெல்லாம் ஒரே மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தாள். குழந்தையையும் தந்தையையும் பிரிந்த துன்பம் இப்போது அவ்வளவு பெரியதாயில்லை. அவர்களுடைய நினைவையே மறக்கச் செய்யக்கூடியதான சம்பவம் வேறொன்று நேர்ந்துவிட்டது.

விதியின் விசித்திரத்தை நினைக்க நினைக்க அவளுக்கு வியப்பாயிருந்தது. குழந்தையைக் கண்டுபிடிக்கச் சொல்வதற்காக டிபுடி கமிஷ்னர் ஆபீஸுக்குப் போன இடத்தில், இந்தச் சந்திப்பு ஏற்பட்டது. குழந்தையும் தாத்தாவும் இராத்திரி இப்படித் தன்னை ஏமாற்றிவிட்டுப் போகாதிருந்தால், தான் டிபுடி கமிஷ்னர் ஆபீஸுக்குப் போக நேர்ந்திராது. அவரைச் சந்திக்கவும் நேர்ந்திராது.

ஒரு வேளை பகவானுடைய செயல் இதில் ஏதேனும் இருக்குமோ?

பைத்தியந்தான்! பகவானாவது மண்ணாங்கட்டியாவது? உலகில் தற்செயலாக இந்த மாதிரி சம்பவங்கள் எத்தனையோ நிகழ்கின்றன. தன்னுடைய வாழ்க்கையிலேயே நடந்திருக்கிறது. அதற்கெல்லாம் சுவாமி பேரில் பாரத்தைப் போடுவதில் என்ன பிரயோஜனம்? அப்பாவாயிருந்தால், 'எல்லாம் பராசக்தி செயல்' என்று சொல்லிக் கொண்டிருப்பார். மனுஷ்யர்களுடைய காரியங்களையெல்லாம் பராசக்தி நடத்துவதாயிருந்தால், உலகம் இவ்வளவு கேவலமாயிருக்குமா? இவ்வளவு அநியாயங்களும் கொடுமைகளும் நடக்குமா? தானும் குழந்தையுமாகச் சாகப் போகும் சமயத்தில் அப்பாவின் குரல் கேட்டது தன்னுடைய வாழ்க்கையில் ஓர் ஆச்சரியமான விஷயம்! அப்பாவிடம் சொன்னால், அது பகவானுடைய செயல் என்றுதான் சொல்வார். அது பகவானுடைய செயலாயிருந்தால், கல்கத்தாவில் தான் பட்ட கஷ்டங்களும் பகவானுடைய செயல் தானே? சென்னையின் வீதிகளில் தான் அலைந்து திரிந்ததும் பராசக்தியின் செயல்தானே?

அதெல்லாம் ஒன்றுமில்லை. அப்பாவினுடைய வீண் பிரமை. வாழ்க்கையில் மனுஷ்யர்களுடைய முயற்சியினால் சில காரியங்கள் நடக்கின்றன; தற்செயலாகச் சில காரியங்கள் நடக்கின்றன. அந்த மாதிரி தற்செயலாக நடந்திருக்கும் சம்பவம் இது. தன்னுடைய வாழ்க்கையிலேயே இதற்கு முன் நடந்திருப்பதையெல்லாம் நினைக்கும் போது இது ஒரு பிரமாத அதிசயங்கூட இல்லை.

சரி; ஆனால் தான் இப்போது செய்ய வேண்டியது என்ன? எக்கேடாவது கெட்டுப் போகட்டுமென்று சும்மா இருந்துவிடலாமா?

விலங்கு பூட்டிய கையுடன் கூடிய ஸ்ரீதரனுடைய தோற்றம் அடிக்கடி உமாவின் மனக் கண்ணின் முன்னால் வந்து நின்றது. அதை நினைக்கும் போதெல்லாம் ஒரு பக்கம் அவள் மனத்தில் அளவிலாத வேதனை உண்டாயிற்று; மற்றொரு பக்கத்தில் திருப்தியும் ஏற்பட்டது. தன்னை எவ்வளவோ கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிய மனுஷர் இப்போது சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். வேண்டும், நன்றாய் வேண்டும்!

அதே சமயத்தில் தான் அவருக்கு உதவி செய்யக் கூடிய நிலைமையில் இருப்பதை நினைத்து உமா கர்வமும் குதூகலமும் கொண்டாள். அது தான் சரி! இந்த ஆபத்துச் சமயத்தில் அவருக்கு உதவி செய்து பழிவாங்க வேண்டும்; அப்படித்தான் புத்தி கற்பிக்க வேண்டும். தன் முகத்தைப் பார்த்துப் பேசுவதற்குக் கூட தைரியம் வராதபடி அடிக்க வேண்டும். ஆம்; எப்படியாவது அவரைக் கேஸிலிருந்து தப்பித்து விடுதலை பண்ண வேண்டும். விடுதலையான பிறகு நன்றி செலுத்த வருவாரல்லவா? "உமது

நன்றி எனக்கு வேண்டாம்! போய்வாரும்! உமது முகத்தில் விழிக்கக்கூட எனக்கு இஷ்டமில்லை" என்று சொல்ல வேண்டும்.

எப்படியிருந்தாலும், எவ்வளவு கேவலமான மனுஷராயிருந்தாலும், சாருவின் தகப்பனாரல்லவா? அதற்காகவாவது அவரை விடுதலை செய்ய முயற்சிக்க வேண்டாமா? - நல்ல வேளை! குழந்தை இந்தச் சமயம் இங்கே இல்லாமற் போனாளே? அப்பாவும் போய்விட்டது எவ்வளவு நல்ல காரியம்? இதை நினைத்தபோதுதான், உமாவுக்கு ஒரு வேளை இது தெய்வத்தின் செயல்தானோ என்று சிறிது சந்தேகம் உண்டாயிற்று. தான் சாவித்திரி என்பதையும், சாரு தன் குழந்தையென்பதையும் அப்பாவிடம் சொல்லாமலிருந்தது இப்போது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! குழந்தை இங்கே இருந்து அவளுக்கு உண்மையும் தெரிந்திருந்தால் - ஐயோ! - தகப்பனார் கையில் விலங்குடன் நிற்கும் காட்சியையல்லவா குழந்தை பார்க்கவேண்டியிருந்திருக்கும்?

இப்படி நினைத்ததும் உமாவுக்கு இன்னொரு பெரிய பயம் உண்டாயிற்று. இவருக்குச் சாரு தன் குழந்தை என்பது தெரிந்தால் - அதனால் என்ன விபரீதம் வருமோ என்னவோ? தனக்கு இப்போது இந்த உலகத்திலுள்ள செல்வமெல்லாம் குழந்தைதானே? குழந்தையை அபகரித்துக் கொண்டு போக முயற்சிப்பாரோ, என்னவோ?-வேண்டாம், வேண்டாம். அவருக்குச் சாருவைப்பற்றித் தெரியவே கூடாது; தான் ஒத்தாசை செய்கிற விஷயமும் தெரிய வேண்டாம். ஏதோ சாருவின் தகப்பனார் என்ற தோஷத்துக்காக அவரை விடுதலை செய்து அனுப்பிவிட வேண்டும்; அவ்வளவு தான்.

மறு நாளைக்கு வக்கீல் ஆபத்சகாயமய்யர் உமாராணியின் வீட்டுக்கு வந்ததும், "போலீஸிலிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா, அம்மா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றாள் உமா.

"போலீஸை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. குழந்தையைத் தேடுகிறதற்கு நாமும் ஏதாவது ஏற்பாடு செய்தால் தான் நல்லது" என்றார் வக்கீல்.

உமா ஏதோ சொல்வதற்கு ஆரம்பித்தாள். அதற்குள் வக்கீல், "ஆனால், ஒரு சமாசாரம்; அந்தக் குழந்தையேதான் வேணுமென்றால், பேஷாய்த் தேடுகிறதற்கு ஏற்பாடு பண்ணுவோம். இல்லை, வீட்டுக்கு மங்களகரமாய் ஒரு குழந்தை இருந்தால் போதுமென்றால், எத்தனையோ பேர் நான் தர்றேன் நீ தர்றேன்னு காத்திண்டிருக்கா. என்னுடைய 'ஒய்ப்' கூட அடிக்கடி சொல்லிண்டிருக்காள்..."

உமாராணியின் எவ்வளவோ மனச் சங்கடங்களுக்கிடையில் வக்கீலின் இந்தப் பேச்சு அவள் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்தது.

"குழந்தை விஷயம் இருக்கட்டும், வக்கீல் ஸார்! அதை விட முக்கியமான காரியம் இப்போது வேறொன்று வந்திருக்கு" என்றாள்.

அப்போது அவள் முகத்தில் உண்டான கவலைக் குறியையும், மேலே பேசுவதற்குத் தயங்குவதையும் பார்த்த வக்கீல், "என்ன விஷயமாயிருந்தாலும் என்னிடம் தைரியமாய்ச் சொல்லுங்கள், அம்மா! உங்கள் மனஸிலே ஏதோ வச்சிண்டிருக்கயள்; என்னை உங்கள் தமையன்னு நினைச்சுண்டு எல்லாத்தையும் சொல்லணும்னு முன்னயே கேட்டுண்டேன். என்னை நீங்கள் வேற்று மனுஷனாகவே நினைக்கக் கூடாது" என்றார்.

உமா, "உங்களை என் தமையன் மாதிரிதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்றைக்காவது ஒரு நாள் எல்லா விஷயங்களையும் சொல்லத்தான் போகிறேன்; சொல்ல வேண்டியும் வரும். அதுவரையில் நீங்கள் அவசரப்படக் கூடாது. இப்போது ஒரு முக்கியமான ஒத்தாசை உங்களைக் கேட்கப் போகிறேன். ஏன் என்னத்திற்கு,

எதற்காக என்றெல்லாம் கேட்காமல் அந்த ஒத்தாசையை எனக்கு நீங்கள் செய்யவேணும்" என்றாள்.

"கட்டாயம் செய்றேன் அம்மா! உங்களுக்கு ஒத்தாசை செய்யணுங்கறதுதான் என் ஆசையே தவிர, உபத்திரவம் செய்யறது இல்லை" என்றார் வக்கீல்.

உமா சற்று யோசித்து விட்டு, "நேற்று டிபுடி கமிஷ்னர் ஆபீஸிலிருந்து நாம் வெளியே வந்தபோது ஒரு மனுஷரைக் கையிலே விலங்கு போட்டுக் கொண்டு வந்தார்களே; உங்களுக்கு ஞாபகம் இருக்கா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; ஞாபகம் இருக்கு. நான் கூட, 'பையன் முகத்தைப் பார்த்தாக் களையாயிருக்கு. இந்த மாதிரி அகப்பட்டுண்டிருக்கானே?' என்று நினைச்சுண்டேன். அவனைப் பற்றி என்ன?"

"அவரை எப்படியாவது கேஸிலிருந்து தப்ப வைக்கணும். அதற்காக எவ்வளவு பணம் செலவழிந்தாலும் பாதகமில்லை. நான் கொடுக்கிறேன்."

வக்கீலுடைய ஆச்சரியம் தீரக் கொஞ்ச நேரம் ஆயிற்று.

"என்ன யோசிக்கிறீர்கள், வக்கீல் ஸார்? அவர் எனக்கு உறவு மனுஷர்..."

வக்கீல் திடீரென்று ஏதோ யோசனை தோன்றியவர் போல், "ஏனம்மா? அவர்தான் ஒரு வேளை உங்களுடைய...?" என்று ஆரம்பித்தார். "ஹஸ்பெண்டா, என்ன?" என்று அவர் கேட்க வந்தார். அந்தச் சமயம் உமாவின் முகத் தோற்றத்தைப் பார்த்து விட்டுச் சட்டென்று நிறுத்திக் கொண்டார்.

"இல்லை; அதெல்லாம் நான் கேட்கவில்லை. அவர் யாராக வேணாலும் இருக்கட்டும். ஆனால் என்ன கேஸோ, என்னமோ, ஒன்றும் தெரியவில்லையே? விலங்கு போட்டுக் கொண்டு வந்ததைப் பார்த்தால், 'ஸீரியஸ் கேஸா'யிருக்கும் போலேயிருக்கே?..."

"டிபுடி கமிஷ்னர் டெலிபோனில் பேசியதை நான் கேட்டுண்டிருந்தேன். நீங்கள் பெடிஷன் எழுதிண்டிருந்தயள்; அதனாலே கவனிக்கவில்லை. பாங்கி மோசடி கேஸாம்!..."

"பாங்கி மோசடி கேஸா? சரியாப் போச்சு! இப்போ எங்கே பார்த்தாலும் பாங்கி மோசடித்தான் ஜாஸ்தியாயிருக்கு. கொஞ்சம் கஷ்டமான விஷயந்தான். இருந்தாலும் என்னால் ஆன மட்டும் பார்க்கிறேன். ருசுவாகிறது கஷ்டம்னு பாங்கிக்காராளுக்குத் தோணினால், கேஸைக் கம்பவுண்டு பண்ணிக்கத் தயாராயிருந்தாலும் இருப்பா, பையனைப் பார்த்தா புத்திசாலியாத் தோணறது. ஏதாவது செய்திருந்தாலும் கெட்டிக்காரத்தனமாத்தான் செய்திருப்பான். என்னால் ஆனமட்டும் பார்க்கிறேன், அம்மா!" என்றார்.

"அவரைத் தப்ப வைக்கறது பெரிதில்லை. அதைவிட முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது. இந்தக் காரியத்துக்கு யார் பணங் கொடுக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியக் கூடாது. விடுதலையானதும் அவர் இந்த ஊரை விட்டுப் போய்விட வேண்டும். முன்னாலேயே அவரை நீங்கள் கண்டு பேசி இதற்குச் சம்மதிக்கப் பண்ண வேணும்" என்றாள் உமா.

அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டு வக்கீல் விடை பெற்றுச் சென்றார்.

19. ஸ்ரீதரன் சபதம்

வக்கீல் ஆபத்சகாயமய்யருக்கு உண்மையாகவே உமாவின் மீது சகோதர விசுவாசம் ஏற்பட்டிருந்தது. அவளுடைய வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று அவர் ஊகித்திருந்தார். ரொம்பவும் கஷ்டப்பட்டவளாயிருக்க வேண்டும்; பிறகு திடீரென்று நல்ல காலம் பிறந்து பணக்காரியாகியிருக்க வேண்டும் என்றும் நினைத்தார். இந்தச் செல்வம் அவளுக்கு எப்படிக் கிடைத்தது என்பதைப் பற்றி அவருக்குச் சந்தேகங்கள் தோன்றியதுண்டு. ஏதாவது 'அவ்யாகிருதமான' வழியில் எண்ணமிட்டார். ஆனாலும் அவளுடைய உத்தமமான குணத்தை உத்தேசித்து அவளிடம் எந்த விதமான குற்றம் குறையிருந்தாலும் மன்னித்து விடத்தயாராயிருந்தார்.

இந்த மாதிரி ஒரு ஸ்திரீ, உற்றார் உறவினர் யாருமில்லாதவள், பணக்காரி என்பதைத் தவிர மற்றபடி நிராதரவான நிலைமையில் இருப்பவள் – அவளுக்கு ஒத்தாசை செய்யும் படியான சந்தர்ப்பம் தமக்கு ஏற்பட்டது பற்றி ஆபத்சகாயமய்யருக்கு ரொம்பவும் பெருமையாயிருந்தது. கோர்ட்டிலும் அட்வகேட் சங்கத்திலும் அவருடைய நண்பர்கள் சாதாரணமாக அவர 'மிஸ்டர் ஆபத்!' என்று கூப்பிட்டுப் பரிகாசம் செய்வது வழக்கம். அவரிடம் அகப்பட்டுக் கொள்ளும் 'கட்சிக்காரர்களுக்கெல்லாம் ஆபத்துத்தான்' என்றும் அவர்கள் சொல்வார்கள். ஆனால் ஸ்ரீமதி உமாராணியின் விஷயத்தில் தம்முடைய பெயரின் பின்பகுதியை உண்மையாக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆபத்சகாயமய்யர் தீர்மானித்திருந்தார்.

ஆகவே, இப்போது உமாராணி தம்மிடம் பெரிதும் நம்பிக்கை வைத்து ஒரு முக்கியமான வேலையைக் கொடுக்கவே அதில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய முயற்சி கடைசியில் பயன் அளித்தது. ஸ்ரீதரன் கையாண்டதாகச் சந்தேகிக்கப்பட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு கே அண்டு ஓ பாங்கிக்காரர்கள் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளச் சம்மதித்தார்கள். சமீபத்தில் நடந்த ஒரு பாங்கி மோசடி வழக்கில் ஏராளமான பணச் செலவுக்குப் பின்னர் குற்றம் ருசுவாகாமல் கைதி விடுதலையடைந்திருந்தபடியால், பாங்கிக்காரர்கள் இதற்கு எளிதில் இணங்கினர். போலீஸ் இலாகாவினர் முதலில் இதை ஆட்சேபித்த போதிலும், கடைசியில் குற்றம் ருசுவாவது கஷ்டம் என்று கண்டு அவர்களும் சம்மதித்து விட்டார்கள். எனவே, ஸ்ரீதரனுடைய குற்றம் மோசடி இல்லையென்றும், கவனக் குறைவுதான் என்றும் தீர்மானிக்கப்பட்டு, ஸ்ரீதரன் சில தினங்களில் விடுதலையடைந்தான்.

சிறையில் ரிமாண்டு கைதியாக இருந்த ஸ்ரீதரனை வக்கீல் ஆபத்சகாயமய்யர் பார்த்துப் பேசியபோது, உமா கூறிய நிபந்தனைகளை அவனிடம் தெரிவித்தார். ஸ்ரீதரனும் அவற்றுக்கு உடனே இணங்கினான். ஆனால் நிபந்தனைகளை நிறைவேற்றும் உத்தேசம் அவனுக்குக் கிடையவே கிடையாது. பணங்கொடுப்பது யார் என்று கேட்க வேண்டிய அவசியம் இருப்பதாகவே அவன் நினைக்கவில்லை. சாவித்திரிதான் தன்னை விடுதலை செய்ய முயற்சி எடுக்கிறாள் என்பதைப் பற்றி அவனுக்குச் சந்தேகமே இல்லை. வேறு யார் தன்னிடம் இவ்வளவு அக்கறை காட்டிக் கேஸிலிருந்து தப்புவிக்க முயற்சி எடுக்கப் போகிறார்கள்?

ஆனால் விடுதலையானதும் சென்னையை விட்டுப் போக வேண்டும் என்ற நிபந்தனை அவன் மனத்தைப் புண்படுத்திக் கோபமூட்டியது. இதற்கு முக்கிய காரணம், சாவித்திரியை அன்று பார்த்ததிலிருந்து அவள் பேரில் அவனுக்கு ஏற்பட்டிருந்த பாசமேயாகும். ஏற்கெனவே, சாவித்திரியின் விஷயத்தில் தான் நடந்து கொண்ட விதத்தைக் குறித்து அவன் பல தடவைகளில் பச்சாத்தாபப் பட்டிருக்கிறான். அவளைப் பூரண கர்ப்பவதியாயிருக்கையில் வழிப்போக்கர்களுடன் கூட்டி அனுப்பி, அப்புறம்

தகவல் ஒன்றுமே தெரியாமல் போன பிறகு, தாயார் தகப்பனார்களுடன் அவன் அதைக் குறித்துச் சில சமயம் சண்டை பிடித்ததும் உண்டு. கொஞ்ச நாளைக்குப் பிறகு, ராஜாராமய்யர் மனநோயும் உடல் நோயும் அதிகமாகிக் காலஞ் சென்றார். பிறகு, தாயாருக்கும் பிள்ளைக்கும் ஒத்துக் கொள்ளவேயில்லை. தங்கம்மாள் பிள்ளையைச் சீர்திருத்த எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லாமல் கடைசியில் மனம் வெறுத்து ஹைதராபாத்தில் இருந்த தன் பெண்ணுடன் வசிக்கப் போய்விட்டாள். அம்மாவுடன் ஸ்ரீதரன் சண்டை போட்ட போதெல்லாம், "படுபாவி! ஒன்றுந் தெரியாத சாதுப் பெண்ணை அநியாயமாய்க் கொன்றுவிட்டாயே?" என்று திட்டுவது வழக்கம். இம்மாதிரி, சாவித்திரியைப் பிரிந்த பிறகு அவள் விஷயத்தில் அவனுடைய மனம் மாறியதோடு கூட, "ஐயோ! இந்த மாதிரி செய்துவிட்டோ மே!" என்று அடிக்கடி வருத்தப்பட்டதும் உண்டு. மறுபடியும் ஒரு தடவை சாவித்திரி தன்னைத் தேடி வந்தாளானால் முன்னால் செய்ததற்கெல்லாம் பிராயச்சித்தமாக அவளை ரொம்ப நன்றாக நடத்தவேண்டுமென்று அவன் தீர்மானித்திருந்தான்.

ஆனால் இதெல்லாம் மிகப் பழைய கதை. அவளை மறுபடியும் சந்திப்போம் என்ற நம்பிக்கையை அவன் இழந்து வெகு நாளாயிற்று. அப்புறம் அவனுடைய வாழ்க்கை எப்படி எப்படியோ சீர்குலைந்து கடைசியில் பாங்கி மோசடி வழக்கில் சிறைப்படும் நிலைமையும் ஏற்பட்டது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அன்று டிபுடி கமிஷ்னர் ஆபீஸில் உமாராணியை அவன் தற்செயலாகச் சந்தித்து, அவள் தான் சாவித்திரி என்பது தெரிய வந்ததும் அவனுடைய உள்ளத்தில் ஒரு பெரிய புரட்சி உண்டாயிற்று. இந்த கேஸிலிருந்து மட்டும் எப்படியாவது தப்பித்துக் கொண்டால் அப்புறம் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கிறதென்று தீர்மானித்தான். சாவித்திரியின் புதிய நாகரிகத் தோற்றத்தை நினைக்க நினைக்க அவனுக்குத் தலை கிறுகிறுவென்று சுழன்றது. ஆகா! இவளையா நாம் அவலட்சணமென்றும், பட்டிக்காடு என்றும் அலட்சியம் செய்தோம்! என்ன பிசகு! என்ன பிசகு! நம்முடைய புத்தி ஏன் அப்படிப் போயிருந்தது?... போனதெல்லாம் போகட்டும். நல்ல வேளையாக அதற்கெல்லாம் பரிகாரம் செய்ய இப்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தக் கேஸில் மட்டும் விடுதலை பெறவேண்டும்.

சாவித்திரி இந்த நிலைமையை எப்படி அடைந்தாள், எவ்வாறு உமாராணி ஆனாள், இத்தனை காலமும் எங்கே என்ன செய்துகொண்டிருந்தாள் என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்காமலில்லை. ஆனால், வக்கீல் ஆபத்சகாயமய்யரைப் போலவே அவனும் எது எப்படியிருந்தாலும் மன்னித்துவிடத் தயாராயிருந்தான். இவ்வளவெல்லாம் அவளைத் தான் கஷ்டத்துக்குள்ளாக்கியிருக்கும்போது, அவளுடைய காரியங்களைப் பற்றிக் கேள்வி கேட்கத் தனக்கு என்ன உரிமை இருக்கிறது? போனதெல்லாம் மறந்துவிட்டுப் புதிய வாழ்க்கை தொடங்குவதுதான் சரி.

சிறைக்குள்ளே தன்னந் தனியாக உட்கார்ந்து இப்படியெல்லாம் புனருத்தாரண சிந்தனையில் ஆழ்ந்திருந்தவனிடம், வக்கீல் ஆபத்சகாயமய்யர் வந்து, "உன்னிடம் ஒருவர் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்; பணம் செலவழித்து உன்னை விடுதலை செய்ய முயற்சி எடுக்கப் போகிறார்; ஆனால் யார் என்று நீ விசாரிக்கக் கூடாது. விடுதலையானதும் சென்னையை விட்டுக் கல்கத்தாவுக்குப் போய்விட வேண்டும்" என்று சொன்னால் அவனுக்கு ஆத்திரம் உண்டாகாதா? ஆனாலும், காரியம் ஆக வேண்டியதை முன்னிட்டு, ஸ்ரீதரன் நிபந்தனைகளுக்குச் சம்மதித்தான். அதை நிறைவேற்றும் உத்தேசம் அவனுக்கு லவலேசமும் இல்லையாகையால், விடுதலையான மறுநாளே உமாராணியின் பங்களாவைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

உமா இதை எதிர்பார்க்கவேயில்லை. விடுதலையானதும் ஸ்ரீதரன் என்ன செய்வான் என்பதைப் பற்றி அவள் நினைத்திருந்ததற்கு இது முற்றும் மாறாயிருந்தது. ஒரு வேளை, அவர் விடுதலையடைந்ததும், தனக்கு ஒரு கடிதம் எழுதலாமென்றும், அதில் அவர் தான் செய்த உதவிக்காக ரொம்பவும் நன்றி செலுத்துவாரென்றும், கல்கத்தாவுக்குப் போவதற்கு முன்னர் ஒரு தடவையாவது தன்னை வந்து பார்ப்பதற்கு ஆசைப்பட்டு, அதற்கு அநுமதி கேட்கக் கூடுமென்றும் எண்ணினாள். அப்படி அவர் எழுதினால், அவரைத் தன்னை வந்து பார்த்துப் போகச் சொல்லலாமா, வேண்டாமா என்று உமா சிந்தனை செய்தாள். போனால் போகட்டும் என்று வரச் சொல்வோமே; அவர் வந்து தம்முடைய பழைய காரியங்களுக்காக ரொம்பவும் வருத்தப்பட்டாரானால், "இப்போதைக்கு நீங்கள் வேறு, நான் வேறுதான். கொஞ்ச காலம் நீங்கள் கல்கத்தாவிலேயே இருங்கள் அதற்குப் பிறகு, உங்களுடைய சுபாவம் மாறியிருக்கிறதென்று எனக்கு நிச்சயமானால், பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று பதில் சொல்லலாமா என ஒரு சமயம் நினைப்பாள். அடுத்த நிமிஷம், 'சீ! என்ன சபலம்! அந்த மனுஷரிடம் இனிமேல் இந்த ஜன்மத்தில் சேர்ந்து வாழமுடியுமா?' என்று தோன்றும். அல்லது, அவர் நிபந்தனையின்படி நேரே கல்கத்தாவுக்கே போய் அங்கிருந்து தனக்குக் கடிதம் எழுதக்கூடும்; அந்தக் கடிதத்தில் அவர் நிஜமாகவே பச்சாதாபப்படுவதாகத் தெரிந்தால், பிறகு குழந்தை சாருவைப்பற்றி அவருக்கு எழுதித் தெரியப்படுத்தலாம் என்று நினைப்பாள். உடனே, வேண்டாம், வேண்டாம்! அவருக்குக் குழந்தை வேறு வேண்டிக் கிடக்கா? சிவ சிவா! அந்தப் புண்ணியவதி – அவர் அம்மா – என் குழந்தையைக் கொன்றாலும் கொன்றுவிடுவாள்' என்று எண்ணுவாள்.

உமாவின் மனோநிலை இம்மாதிரி இருந்தபோது, ஒரு நாள், "ஸ்ரீதரன் பி.ஏ." என்று அச்சடித்த சீட்டை வேலைக்காரன் கொண்டுவந்து கொடுக்கவே, அவளுக்குக் கோபம் அபரிமிதமாய் வந்தது. தான் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. அந்த மனுஷர் நிபந்தனையை நிறைவேற்றவில்லை. கடிதம் எழுதித் தன்னை வந்து பார்க்க அநுமதி கேட்கவும் இல்லை. துணிச்சலாக நேரிலேயே வந்திருக்கிறார். புருஷன் பாத்தியதை கொண்டாடிக் கொண்டு வந்திருக்கிறார் போல் இருக்கிறது! – பேஷ்! அப்படியா சமாசாரம்?

"பார்க்க முடியாது" என்று சொல்லி அனுப்பிவிடலாமா என முதலில் நினைத்தாள் உமா. உடனே அதை மாற்றிக் கொண்டாள். அவரிடம் நமக்கு என்ன பயம்? வரட்டும்; நன்றாகப் புத்தி கற்பித்து அனுப்பலாம்.

"வரச் சொல்" என்று சொல்லிவிட்டு, உமா ஒரு நிமிஷம் அலட்சியமாய் உட்கார்ந்திருந்தாள். உடனே ஏதோ ஞாபகம் வந்தவளைப்போல், முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொஞ்சம் அழகுபடுத்திக் கொண்டாள். பிறகு ஜன்னலோரமாய்ச் சென்று வாசலில் பார்த்தாள்.

ஸ்ரீதரன் மோட்டாரிலிருந்து இறங்கினான். அவன் இப்போது, முன்னே டிபுடி கமிஷ்னர் ஆபீஸில் பார்த்தது போல் கையில் விலங்குடன் சோர்ந்த முகத்துடனும் பரிதாபத் தோற்றம் கொண்டிருக்கவில்லை. நாகரிகமாக உடுப்பு அணிந்து கொண்டு தலையில் தொப்பியுடன் நவயௌவன விடபுருஷனாக விளங்கினான். அன்று விலங்கு போட்டிருந்த கையில், இன்று பாதி பிடித்த ஸிகரெட் காணப்பட்டது.

'லவலேசமும் மாறுதல் இல்லை. ஏழு வருஷத்துக்கு முன் எப்படியோ அப்படியேதான் இன்றும் இருக்கிறார்' என்று உமா எண்ணினாள். இதனால் அவளுடைய கோபம் பன்மடங்கு பெருகிற்று.

ஸ்ரீதரன் டக், டக்கென்று மிடுக்குடன் நடந்து உள்ளே வந்தபோது, உமா, ஒரு புத்தகத்தைப் படிக்கும் பாவனையில் இருந்தாள். ஸ்ரீதரனுடைய முகத்தை அவள் ஏறிட்டுப் பார்க்கவில்லை.

ஸ்ரீதரன் உமாவுக்கு எதிரில் கிடந்த ஸோபாவில் ஜம்மென்று உட்கார்ந்தான்.

ஒரு நிமிஷம் கழித்து, "உமா! என் முகத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்கவில்லை போல் இருக்கிறது!" என்றான்.

உமா கையிலிருந்த புத்தகத்தைக் கீழே எறிந்தாள். ஸ்ரீதரனை நேருக்கு நேர் பார்த்தாள். "ஆமாம்; உமது முகத்தைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லைதான். நீர் எதற்காக இங்கே வரவேணும்? விடுதலையானவுடன் மெட்ராஸை விட்டுப் போய் விடுகிறேன் என்று சொன்னீரா இல்லையா? அந்த நிபந்தனைமேல் தானே, பணத்தைக் கொடுத்து உம்மை விடுதலை செய்தேன்? பின், ஏன் இங்கே வந்தீர்?" என்று விடுவிடுவென்று பேசினாள்.

"ஏன் வந்தேனா?" என்று ஸ்ரீதரன் நிதானமாய்க் கேட்டுவிட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்பு உமாவுக்கு நெருப்பாயிருந்தது.

"உன்னை விட்டுப் போக முடியாமல் தான் வந்தேன். கோவிச்சுக்காதே, சாவித்திரி! அந்த பழைய கதையையெல்லாம் மறந்துவிடு..." என்று ஸ்ரீதரன் சொல்வதற்குள், உமா அளவிலாத எரிச்சலுடன், "கோபமாவது சாவித்திரியாவது, இங்கே சாவித்திரி என்று ஒருவருமில்லை. சாவித்திரி செத்துப் போய் எத்தனையோ காலமாச்சு!" என்கிறாள்.

"நிஜந்தான்; நீ இப்போது பழைய பட்டிக்காட்டுச் சாவித்திரி இல்லை. நானும் பழைய ஸ்ரீதரன் இல்லை. இரண்டு பேரும் புனர் ஜன்மம் எடுத்துவிட்டோ ம். அந்தக் கர்நாடக நாட்டுப் புறத்துச் சாவித்திரியை எனக்குப் பிடிக்கவில்லை; வாஸ்தவந்தான்; ஆனால்..."

ஸ்ரீதரன் இப்போது ஸோபாவிலிருந்து எழுந்திருந்து உமாவை நோக்கி நாலடி நடந்து வந்து, "...ஆனால் உமாராணி மிதித்த பூமியைக்கூட இன்று நான் பூஜை செய்யத் தயார்!" என்று முடித்தான்.

இந்த நாடகப் பேச்சு உமாவுக்கு நாராசமாயிருந்தது. அவளும் எழுந்து நின்று, "ஆனால் நீர் மிதித்த பூமியை மிதிப்பதற்குக் கூட உமாராணி இப்போது தயாராயில்லை. அந்தக் காலம் மலையேறிவிட்டது. போ வெளியே!" என்றாள்.

"வெளியே போக வேணுமா? உன்னை விட்டுவிட்டா! முடியாது, உமா! முடியாது! நீ என்னுடைய மனைவி நான் உனக்குத் தாலி கட்டிய புருஷன். ஞாபகமிருக்கட்டும்" என்றாள்.

உமாவின் கோபம் இதனால் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.

"மரியாதையாகப் போகிறீரா? தர்வானைக் கூப்பிட வேணுமா?" என்று கேட்டாள்.

ஸ்ரீதரனும் கோபத்துடன், "எங்கே கூப்பிடு பார்க்கலாம்" என்றான்.

உமா மேஜை மீதிருந்த மணியை அடித்தாள். அடுத்த நிமிஷம் தர்வான் உள்ளே வந்தான்.

"தர்வான்! இந்த ஐயாவை 'கேட்'டுக்கு வெளியிலே கொண்டு போய் விட்டுட்டு வா!" என்றாள் உமா.

"சலோ, பாபு! சலோ!" என்றான் தர்வான்.

ஸ்ரீதரன், உமாவைக் கண்ணில் பொறி பறக்கப் பார்த்து, "ஓஹோ! இவ்வளவுக்கு ஆயிடுத்தா?... சாவித்திரி! பொறு! Restitution of Conjugal Rightsக்கு (தாம்பத்திய உரிமை), ஸூட் போட்டு உன்னைக் கோர்ட்டிலே கொண்டு வந்து நிறுத்தறேன். தர்வானைக் கூப்பிடறதையெல்லாம் அப்போது பார்க்கிறேன்" என்றான்.

"சலோ பாபு! உன்கி போல் ரொம்ப ஆத்மி பார்த்திருக்கான்!" என்று சொல்லி, தர்வான் ஸ்ரீதரனைப் பிடித்துத் தள்ளப் போனான். "ஹும்!" என்று அவனை அதட்டிவிட்டு ஸ்ரீதரன் தானே விரைவாக நடந்து வெளியே சென்றான்.

ஸ்ரீதரன் போனதும் உமாராணி ஸோபாவில் குப்புறப் படுத்துக் கொண்டு விம்மி அழுதாள். அந்த மாதிரி அவள் அழுது எத்தனையோ வருஷம் ஆயிற்று.

20. வந்தாரே தீக்ஷிதர்!

இதற்கிடையில், சம்பு சாஸ்திரியும் சாருவும் தமிழ் நாட்டின் கிராமங்களில் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் அவர்கள் கால் நடையாக நடந்தும், சாலையில் போய்க் கொண்டிருந்த போக்கு வண்டிகளில் ஏறிக்கொண்டும் கிராமம் கிராமமாகச் சென்றார்கள். ஒரு கிராமத்துக்குப் போனதும், சாஸ்திரி குழந்தையுடன் ஊர்ச் சாவடியிலோ, கோவிலிலோ அல்லது குளக் கரையிலோ உட்கார்ந்து கொள்வார். யாரோ பெரியவர் வந்திருக்கிறாரே என்று ஜனங்கள் வந்து சேர்வார்கள். அவர்களிடம் பேசத் தொடங்குவார். நமது பாரத தேசம் முன்னே எவ்வளவு மேன்மையாக இருந்தது என்பதை எடுத்து விவரிப்பார். இந்தக் காலத்தில் தேசத்துக்கு ஏற்பட்டிருக்கும் தாழ்வையும் ஜனங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் தீய பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டுவார். சாதி, மத துவேஷங்களினால் விளையும் தீங்குகளையும், மதுபானத்தினால் உண்டாகும் கெடுதிகளையும் விவரிப்பார். தாம் சொல்வதற்கெல்லாம் ஆதாரமாக, புராண இதிகாசங்களிலிருந்தும், திருமந்திரம், திருக்குறள் முதலிய தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவார். இடையிடையே, குழந்தை சாருவும் தாத்தா சொல்லிக் கொடுத்த பாட்டு ஏதாவது சொல்வாள்.

சீக்கிரத்தில் இவர்களுடைய கீர்த்தி நெடுகப் பரவத் தொடங்கியது. "ஒரு பெரியவரும் குழந்தையுமாக ஊர் ஊராக வருகிறார்களாம், அந்தப் பெரியவர் ரொம்பப் படித்தவராம். சாஸ்திரங்களில் கரை கண்டவராம். தேசிய விஷயங்களை அவர் சொல்கிறது போல் அவ்வளவு மனத்தில் படியும்படி பெரிய பெரிய தலைவர்கள் கூட சொல்கிறதில்லையாம்" என்று கிராமங்களில் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

"தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா சொல்கிறாரோ, இல்லையோ? அதைப்பற்றி மற்றவர்கள் யாராவது பேசினால் ஜனங்களுக்குக் கோபம் வருகிறது. ஆனால், சம்பு சாஸ்திரி பேசுகிறபோது எல்லாரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தீண்டாமை வழக்கத்துக்கு நம்ம சாஸ்திரங்களிலே இடங் கிடையாதென்று அவர் அவ்வளவு தெளிவாய் எடுத்துச் சொல்கிறார்" என்று சீர்திருத்தப் பற்றுள்ளவர்கள் சொன்னார்கள்.

"அவரோடு ஒரு குழந்தை வருகிறதல்லவா? அதைப் பார்க்கிறதற்குப் பதினாயிரங் கண் வேணும். அந்தக் குழந்தை காந்தி பாட்டுப் பாடுகிறது. அந்தப் பாட்டைக் கேட்கிறதற்கு இருபதாயிரம் காது வேணும்" என்று வேறு சிலர் சொன்னார்கள்.

"சம்பு சாஸ்திரிதானே? ஓஹோஹோ! அவர் சாதாரண மனுஷரா என்ன? யோகின்னா அவர்? மந்திர சக்தியுடையவராச்சே? அவர் வாயாலே சாபங் கொடுத்தாலும் கொடுத்ததுதான்; அநுக்ரஹம் பண்ணினாலும் பண்ணினதுதான்" என்ற வதந்தி ஒரு பக்கத்தில் பரவிக் கொண்டிருந்தது.

"அந்தப் பெரியவரும் குழந்தையும் ஒரே சமயத்தில் மூன்று ஊரில் இருந்திருக்காளாம். மூன்று ஊரிலும் பொதுக் கூட்டத்திலே பேசியிருக்காளாம். கலியுகத்திலே இந்த மாதிரி அதிசயத்தை இதுவரையில் பார்த்ததில்லை" என்றும், "சம்பு சாஸ்திரியை அரெஸ்ட் பண்ணி ஜெயிலிலே போட்டுடறதுன்னு சர்க்காரிலே ஆன மட்டும் பார்த்தாளாம்; முடியலையாமே? போலீஸ்காரன் வந்தானோ, இல்லையோ, தாத்தாவும் பேத்தியும் மாயமாய் மறைஞ்சுடறாளாமே?" என்றும், இம்மாதிரி அவர்களுக்கு ஆச்சரியமான சக்தியெல்லாம் கற்பித்துப் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் விஷயம் தெரிந்தவர்கள், "சேச்சே! அதெல்லாம் சுத்தப் பிசகு. இந்த மாதிரி குருட்டு நம்பிக்கைதான் தேசத்தைக் கெடுக்கிறது. சம்பு சாஸ்திரியை என்னத்துக்காகச் சர்க்காரிலே அரெஸ்ட் பண்ண வர்றா? அவர் தான், கவர்ன்மெண்ட் பேச்சையோ, வெள்ளைக்காரன் பேச்சையோ எடுக்கறதேயில்லையே? நம்ம ஜனங்கள் ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது, சாதி வித்தியாசமெல்லாம் போகணும், தீண்டாமை ஒழியணும், கள்ளுக் குடிக்கக்கூடாது. கதர் கட்டிக்கணும் – இவ்வளவு தானே அவர் சொல்றது. இதுக்காக அவரைச் சர்க்காரிலே அரெஸ்ட் பண்ண வருவாளா, என்ன?" என்று உண்மையை எடுத்து விளக்கினார்கள்.

இப்படிப் பொய்யும் மெய்யுமாக அவர்களைப் பற்றிச் செய்திகள் எங்கும் பரவின. குடிகாரர்களிடையில் குருட்டு நம்பிக்கை பரவுதல் எளிதல்லவா? ஒரு கிராமத்தில் சம்பு சாஸ்திரி பஜனை செய்து கொண்டு ஊரைச் சுற்றி வந்தார். கிராமவாசிகள் கும்பலாக அவரைச் சூழ்ந்து வந்தார்கள். வழியில் ஓரிடத்தில் கள்ளுக்கடை இருந்தது. அங்கே சிலர் குடித்துக் கொண்டிருந்தார்கள். அரைப் போதையிலிருந்து ஒருவன், "அடே! அந்தப் பெரியவரும் குழந்தையும் வர்றாங்களாண்டா! குடிக்கிறவங்களை அவர் சபிச்சுப் போடுவாராண்டா!" என்றான். அவ்வளவு தான்; குடிகாரர்கள் அவ்வளவு பேரும் கையிலிருந்த கலயங்களைப் பொத்துப் பொத்தென்று போட்டு உடைத்துவிட்டு ஓட்டம் எடுத்தார்கள். இந்த மாதிரி இன்னும் சில இடங்களிலும் நடக்கவே, சம்பு சாஸ்திரி வரப்போகிறார் என்று அறிந்ததும், கள்ளுக் கடைக்காரர்கள் தாங்களே அன்று கடையை மூடிவிடத் தொடங்கினார்கள். அநேக கிராமங்களில் சாஸ்திரியும் சாருவும் வந்துவிட்டுப் போன பிறகு, குடி அடியோடு நின்று போய்விட்டது.

மனுஷ்யர்களுடைய வாழ்க்கையானது ஜாதக ரீதியாக அந்தந்த கிரகங்களின் சஞ்சாரக் கிரமப்படி நடைபெறுவதாகவும், மனுஷ்யர்களுடைய வாழ்க்கையில் திடீரென்று சில சமயம் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணம் கிரகங்களின் பெயர்ச்சிதான் என்றும் நிச்சயமாய்க் கூறுவோர் உண்டு. சாதாரணமாக இந்த மாதிரி ஜாதக பலன்களிலும், கிரகக் கோளாறுகளிலும் நம்பிக்கையில்லாதவர்கள் கூட, 'ஒரு வேளை அதெல்லாம் உண்மையாயிருக்குமோ?' என்று நினைக்கும்படியான சந்தர்ப்பங்கள் சில நேரிடுகின்றன. சம்பு சாஸ்திரிக்கு இந்தக் காலத்தில் திடீரென்று ஏற்பட்டிருந்த பிராபல்யத்தைப் பார்த்தால், கிரக சஞ்சாரத்தின் பலன் என்றே நினைக்கும்படியாக இருந்தது. நாளாக ஆக, "எங்கள் ஊருக்கு வரவேண்டும்", "எங்கள் ஊருக்கு வரவேண்டும்" என்று நாலு பக்கங்களிலிருந்தும் அவருக்கு அழைப்புகள் வரத் தொடங்கின. வரவேற்பு உபசாரங்களும் அதிகமாயின. சம்பு சாஸ்திரி ஓர் ஊருக்கு வருகிறார் என்றால், ஏதோ, திருவிழாக்களுக்கு அலங்காரம் செய்வதுபோல் ஊரே அலங்கரிப்பார்கள். எத்தனையோ நாளாகச் சேர்ந்திருந்த குப்பை கூளங்கள் எல்லாம் போய் ஊரே சுத்தமாகிவிடும். அப்புறம், பெரியவரையும் குழந்தையையும் வைத்து ஊர்வலம் விடுவார்கள். தேசிய பஜனைகள், மேளதாளங்கள் எல்லாம் தடபுடல் படும். சம்பு சாஸ்திரி எவ்வளவுதான் இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் வேண்டாமென்று சொன்னாலும் கிராமவாசிகள் கேட்பதில்லை.

முதலில், ஒரு கிராமத்தில் ஒரு பெரிய மனுஷர், சம்பு சாஸ்திரியையும், சாருவையும் ஊர்வலமாய் அழைத்துச் செல்வதற்காக, சமீப நகரத்திலிருந்து ஒரு மோட்டார் தருவித்திருந்தார். அந்தச் சமயம் சம்பு சாஸ்திரிக்கு மோட்டார் என்றாலே பயமாயிருந்தது. எந்த மோட்டாரைப் பார்த்தாலும், அது சாருவைத் தம்மிடமிருந்து கொண்டு போவதற்காகவே வந்திருக்கிறதென்று அவர் துணுக்கமுற்றார். ஆகவே, அவர் அந்த மோட்டாரில் ஏறுவதற்குக் கண்டிப்பாக மறுத்தார். "ஒரு கட்டை வண்டி கொண்டு வந்து அதில் ஊர்வலம் விடுங்கள், எனக்குச் சம்மதம், ஆனால் மோட்டாரில் மட்டும் ஏறமாட்டேன்" என்றார். அந்த ஊரிலிருந்த சில உற்சாகிகள் உடனே ஒரு மொட்டை

வண்டியைப் பிடித்து அதை அலங்காரம் செய்து கொண்டு வந்து நிறுத்தினார்கள். அந்த வண்டியில் ஊர்வலம் நடந்தது.

இந்தச் செய்தி பரவவே, மாடு பூட்டிய ரதத்தில் சம்பு சாஸ்திரியை ஊர்வலம் விடுவதென்பது சகஜமாகிவிட்டது. இதில் கிராமத்துக்குக் கிராமம் பெரிய போட்டி.

ஓர் ஊரிலே நாலு மாடு பூட்டிய ரதத்தில் ஊர்வலம் நடந்தால், அடுத்த ஊர்க்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு எட்டு மாடு கட்டிய ரதத்தில் ஊர்வலம் விடுவார்கள். அதற்கு அடுத்த ஊர்க்காரர்கள் பதினாறு மாடு பூட்டுவார்கள்! குழந்தை சாருவுக்கு இதெல்லாம் வேடிக்கையாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். ஆனால் சம்பு சாஸ்திரிக்கோ கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இருந்தாலும், இதுவும் பராசக்தியின் ஆக்ஞை என்பதாக எண்ணிக்கொண்டு வேண்டா வெறுப்பாய் ஊர்வல உபசாரங்களுக்கு உட்படுவார்.

இம்மாதிரி சம்பு சாஸ்திரியும் சாருவும் செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் எல்லாம் பிரயாணம் செய்து, உடையார் பாளையத் தாலுக்காவுக்கு இப்போது வந்திருந்தார்கள். ராசேந்திர சோழபுரம் என்ற கிராமத்துக்கு அவர்கள் அன்று வருவதாக இருந்தது. ஊரில் வீதிகளெல்லாம் சுத்தம் செய்யப்பட்டு, வீட்டு வாசல்களில் கோலம் போட்டிருந்தார்கள். எங்கே பார்த்தாலும் தோரணங்களும், 'நல்வரவு' வளைவுகளும் காணப்பட்டன. ஊரிலுள்ள புருஷர்கள் எல்லாம் ஊருக்கு வெளியே, பெரியவரையும் குழந்தையையும் வரவேற்பதற்காகப் போய்விட்டனர். வீட்டு வாசல்களில் எல்லாம் ஊர்வலத்தை எதிர்பார்த்துக் கொண்டு ஸ்திரீகள் நின்றார்கள்.

அந்தச் சமயத்தில், அந்தக் கிராமத்து வீதியில் ஒரு மனுஷர் அவசர அவசரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் வேறு யாருமில்லை; நமது பழைய சிநேகிதர் நெடுங்கரை சங்கர தீக்ஷிதர் தான். "இன்னிக்கு இந்த ஊரிலே என்ன விசேஷம்?" என்று கேட்பதற்கு அவருடைய நாக்கு துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், புருஷர்களே இல்லாமல் வீட்டு வாசல்களிலெல்லாம் ஸ்திரீகளாய் நிற்கவே, "இதென்னடா வம்பு?" என்று அவர் மேலும் விரைவாக நடந்தார். கடைசியில், ஒரு வீட்டிலிருந்து ஒரு பிராம்மணர் வெளியே வந்து கொண்டிருந்ததைக் கண்டதும் அவருக்குப் பரம சந்தோஷமாயிற்று.

தீக்ஷிதர் அந்தப் பிராம்மணரை நிறுத்தி, "ஏன், ஸ்வாமி! என்ன ஏக அலங்காரமும் அமர்க்களமுமாயிருக்கே! என்ன விசேஷம்? ஏதாவது உத்ஸவம் கித்ஸவம் உண்டா?" என்று கேட்டார்.

"உத்ஸவம் ஒண்ணும் இல்லை. மகான் சம்பு சாஸ்திரி வந்திருக்கார். இத்தனை நேரம் ஊர்வலம் கிளம்பியிருக்கும். அங்கே தான் நானும் போறேன்" என்றார் அந்தப் பிராம்மணர்.

"யாரு? மகான் சம்பு சாஸ்திரியா? அது யாரையா ஒத்தன் அப்படிக் கிளம்பியிருக்கான்?" என்று தீக்ஷிதர் கேட்டார்.

"என்ன, ஸ்வாமி. அவன் இவன் என்கிறீர்? சம்பு சாஸ்திரி, சம்பு சாஸ்திரின்னு எங்கே பார்த்தாலும் பிரசித்தமாயிருக்கே, உமக்குத் தெரியாதா?"

"நான் எங்கேயோ ஒரு பட்டிக்காட்டிலே கிடக்கிறவன். கிணத்துத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்று சொன்னாப்பலே, உலக விஷயங்களை அவ்வளவா நான் காதிலே போட்டுக் கொள்கிறதில்லை. இப்பவெல்லாம் காந்தி கீந்தி, காங்கிரஸ் கீங்கிரஸ் என்றெல்லாம் கூடச் சொல்லிக்கிறாளோல்லியோ? நான் அந்த விவகாரத்துக்கெல்லாம் போறதே கிடையாது. அப்படின்னா, இந்த மகான் சம்பு சாஸ்திரி என்கிறவர் மகாத்மா காந்திக்குப் போட்டியாக் கிளம்பியிருக்காராக்கும்?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மகாத்மா காந்தியைப் பின்பற்றுங்கோன்னுதான் இவரும் சொல்றார். ஒரு சின்னக் குழந்தையையும் கூட அழைச்சிண்டு போறார். அந்தக் குழந்தைக்குத்தான் சாரு என்று பேரு. இவாள் போற இடமெல்லாம் ஜனங்கள் அப்படியே மாறிப் போயிடறாள். ஊரெல்லாம் சுத்தமாயிடறது. சண்டை, சச்சரவெல்லாம் நின்னு போயிடறது. பாருங்கோ, விருத்தாசலத்துக்குப் பக்கத்திலே, கள்ளுக்கடைக்காராளெல்லாம் சேர்ந்து, 'உமக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துடறோம். குடிக்க வேண்டாம்னு பிரசாரம் பண்றதை மட்டும் நிறுத்திடுங்கோ'ன்னு சொன்னாளாம். அவர், 'அப்படியெல்லாம் பேசிண்டு என் கிட்ட வராதேங்கோ' என்று சொல்லி விட்டாராம். அப்படிப்பட்ட மகான் ஐயா அவர்!"

"ஓஹோ! இருக்கலாம்! உலகம் பலவிதம்னு பெரியவா தெரியாமலா சொல்லியிருக்கா? இந்த மகான் சம்பு சாஸ்திரி என்கிறவருக்கு எந்தத் தேசம், எந்த ஊருன்னு கேள்வியுண்டோ ?"

"தஞ்சாவூர் ஜில்லாவிலேதான் நெடுங்கரைன்னு ஒரு கிராமத்திலே பிறந்ததாகச் சொல்லிக்கிறா. ஆனால் ரொம்ப நாளாய் அவர் சென்னைப் பட்டணத்திலே தான் இருந்தாராம்."

"ஓஹோ! நெடுங்கரை சம்பு சாஸ்திரிதானா? அந்த ஆஷாடபூதியாய்த்தான் இருக்கணும்னுட்டு அப்பவே நினைச்சேன். தன்னைப் பெற்ற தாயார் கிண்ணிப் பிச்சை எடுக்கிறாள், பிள்ளை கும்பகோணத்திலே கோதானம் பண்ணறான்னு வசனம் சொல்வாளே, அந்தக் கதையாய்த்தான் இருக்கு!..."

தீக்ஷிதர் இப்படிச் சொன்னது அந்த இன்னொரு பிராம்மணரின் காதில் சரியாக விழவில்லை. அதற்குள் எதிரே சம்பு சாஸ்திரி – சாருவின் ஊர்வலம் வந்து விட்டது. ஊர்வலத்திலிருந்து கிளம்பிய, "மகாத்மா காந்திகி ஜே! பாரத மாதாகி ஜே! சம்பு சாஸ்திரிகி ஜே!" என்ற கோஷங்களின் பெரிய சப்தத்தில் தீக்ஷிதரின் பேச்சு அடிபட்டுப் போயிற்று. அந்தப் பிராம்மணரும் தீக்ஷிதரைப் பிரிந்து ஊர்வலக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

21. நெடுங்கரைப் பிரயாணம்

பதினாறு மாடு பூட்டிய ரதத்தில் சம்பு சாஸ்திரி கழுத்தில் பூமாலைகளுடனும், பக்கத்தில் ஒரு குழந்தையுடனும் ஊர்வலம் வருவதைக் கண்டதும் தீக்ஷிதருக்கு ஒரே பிரமிப்பாய் போய்விட்டது. "எப்படியும் தஞ்சாவூர் ஜில்லாக்காரனுடைய மூளையே மூளை! எப்படி ஊரை ஏமாத்திண்டிருக்கான் பார்த்தாயா?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். "இந்தப் பொண்ணு ஒண்ணை எங்கே போய்ப் பிடிச்சான்?" என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டார்.

ஊர்வலம் முடிந்து எல்லாரும் ஊர்ச் சாவடியை அடைந்தார்கள். அங்கே பொதுக் கூட்டம் நடக்க ஏற்பாடாகியிருந்தது. மரத்தடியில் பெரிய மேடை கட்டி, பாரத மாதா படத்தை வைத்து அலங்கரித்திருந்தார்கள். சம்பு சாஸ்திரியும் சாருவும் இன்னும் சிலரும் மேடையின் மீது அமர்ந்திருந்தார்கள்.

அந்த சமயத்தில் தீக்ஷிதர் கூட்டத்தில் புகுந்து இடித்துப் பிடித்துக் கொண்டு போய் மேடையருகில் வந்து சேர்ந்தார். சம்பு சாஸ்திரியைப் பார்த்து, "சாஸ்திரிகளே! சௌக்கியமா?" என்று கேட்டார்.

"அடடா! தீக்ஷிதர்வாளா? இங்கே எங்கே வந்தது? எதிர்பாராத விஜயமாயிருக்கிறதே?" என்றார் சம்பு சாஸ்திரி.

தீக்ஷிதரைப் பார்த்ததில் சம்பு சாஸ்திரிக்கு வெறுப்பும் சந்தோஷமும் கலந்தாற்போல் உண்டாயின. 'இந்த மனுஷர் இங்கே எங்கு வந்து சேர்ந்தார்?' என்று ஓர் எண்ணம்; 'இவரிடம் நெடுங்கரையைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ளலாமே' என்று ஓர் ஆசை.

"ஆமாங்கணும்! உலகமெல்லாம் இப்ப உம்ம பேச்சாத்தானே இருக்கு? தமிழ்நாட்டு மகாத்மா காந்தின்னு கூட உம்மைப் பத்திச் சொல்றாளே? அப்போப்பட்டவர் நம்மூர்க்காரராச்சே. அவரைப் பார்க்கணும்னுதான் வந்தேன். உம்மகிட்டத் தனியா ஒரு விஷயமும் பேச வேண்டியிருக்கு."

"அதுக்கென்ன! கூட்டம் முடிந்ததும் பேசலாம்" என்றார் சம்பு சாஸ்திரி.

கூட்டத்தில் வழக்கம் போல் வரவேற்புப் பேச்சுக்கள் முடிந்ததும், சாரு எழுந்திருந்து காந்தி பாட்டு ஒன்று பாடினாள். கூட்டத்திலிருந்தவர்கள் குழந்தையின் பாட்டை ரொம்பவும் ரஸித்து ஆனந்தித்தார்கள்.

பின்னர், சம்பு சாஸ்திரி எழுந்திருந்து பேசினார். பழைய நாட்களில் பாரத தேசம், எவ்வளவு பெருமையுடன் இருந்தது என்பதை எடுத்துச் சொன்னார். தேசம் தற்சமயம் கூனிமடைந்திருப்பதை எடுத்துக் காட்டினார். இந்தத் தேசத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு மகாத்மா காந்தி அவதாரம் செய்திருக்கிறார் என்று சொன்னார். ராமாயணம், கீதை முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி, நம்முடைய பெரியவர்கள் சொல்லியிருப்பதைத்தான் காந்தி மகானும் சொல்கிறார் என்று எடுத்துக் காட்டினார். பிறகு வர்ணாசிரம தர்மம் என்பதை நம் பெரியோர்கள் என்ன நோக்கத்துடன் ஏற்படுத்தினார்கள் என்பதை விவரித்தார். சாதிகளில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று கிடையாதென்றும், ஒரு வகுப்பாரைத் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைக்க சாஸ்திரத்தில் இடமில்லையென்றும் ருசுப்படுத்தினார். கடைசியில் மதுபானத்தின் தீங்கை எடுத்துச் சொல்லிப் பேச்சை முடித்தார். உள்ளூர்க்காரர்கள் வந்தனோபசாரம் சொன்ன பிறகு பிரமாதமான உற்சாகத்துடனும் ஜய கோஷங்களுடனும் கூட்டம் கலைந்தது.

பிறகு சம்பு சாஸ்திரி, தீக்ஷிதரைத் தனியாக அழைத்துச் சென்று, "என்ன சமாசாரம் தீக்ஷிதர்வாள்! தனியாய்ப் பேசவேணும் என்றீர்களே?" என்று கேட்டார்.

"ஓய் சம்பு சாஸ்திரி! உம்ம குட்டை எல்லார் மத்தியிலும் உடைச்சுவிடலாம்னு பார்த்தேன். போனால் போறது, நம்ம ஊர்க்காரனாச்சேன்னு விட்டேன்; தெரியுமாங்கணும்?" என்றார் தீக்ஷிதர்.

"குட்டை உடைக்கிறதா? என்ன சொல்றேள், தீக்ஷிதர்வாள்? எனக்கு ஒன்றுமே புரியலையே?"

"உமக்கு ஏங்காணும் புரியும்? பெரிய அழுத்தக்காரராச்சே நீர்? ஆமாம், எவ்வளவு ரூபாய்ங்காணும் சேர்த்திருக்கிறீர் இதுவரையிலே? ரொக்கமாய்ப் பத்தாயிரமாவது இருக்குமா?"

"ரொக்கமாவது, பத்தாயிரமாவது? நான் பணஞ்சேர்க்கறதுக்காக இப்படிக் கிளம்பினேன்னு நினைச்சுண்டயளோ?"

"அப்பாடா! இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமான்னு பேசமாட்டீரா நீர்? சொல்லாத போனால் போம்... பொண் ஒண்ணை அழைச்சுண்டு வந்திருக்கிறீரே? அதை எங்கே புடிச்சீர்? அதையாவது சொல்வீரோ, மாட்டீரோ?"

"குழந்தையா? பராசக்தி கொடுத்தாள், தீக்ஷிதரே!" என்று சாஸ்திரி சொல்லிவிட்டுப் புன்னகை புரிந்தார். அந்தப் புன்னகையில், இதை இந்த மனுஷர் எங்கே நம்பப் போகிறார் என்ற பாவம் தோன்றிற்று.

"பராசக்தி கொடுத்தாளா...?" என்று தீக்ஷிதர் ஒரு நீட்டு நீட்டினார். "அப்படி அடியுங்கணும் ஓர் அடி! ஓய் சம்பு சாஸ்திரி! பலே கெட்டிக்காரர் ஆயிட்டீருங்காணும் நீர்!" என்றார்.

"தீக்ஷிதர்வாள்! ஏதோ சமாசாரம் சொல்லணும்னேளே? அதைச் சொல்லுங்களேன்? எல்லாரும் எனக்காகக் காத்திண்டிருக்காளே?" என்று சம்பு சாஸ்திரி கேட்டார்.

"சொல்றேங்காணும், சொல்றேன்! உம்ம ஆம்படையாள் இருக்காளே மங்களம், அவள் அங்கே சாகக் கிடக்காள். நீரானா, இங்கே மீடிங்கு பேசறீர், மீடிங்!"

சம்பு சாஸ்திரிக்குப் பகீர் என்றது. சாவடிக் குப்பத்தில் இருக்கும்போதே, மங்களம் என்ன செய்கிறாளோ என்னவோ என்று சில சமயம் சம்பு சாஸ்திரி எண்ணுவதுண்டு. அவள் விஷயத்தில் நம்முடைய கடமையில் தவறி விட்டோ மோ என்ற எண்ணம் அவர் மனத்தில் அடிக்கடி தோன்றி வருத்துவதுண்டு. இப்போது, "மங்களம் சாகக் கிடக்கிறாள்" என்றதும், அவர் இருதயம் படீர் என்று வெடிக்கிறாப் போல் இருந்தது.

"நிஜமாகவா, தீக்ஷிதர்வாள்! விளையாடறேளா?" என்று கேட்டார்.

"உம்மோடே வந்து விளையாட வர்றேன்! நீரும் பச்சைக் குழந்தை; நானும் பால்யம். இரண்டு பேரும் விளையாட வேண்டியதுதான்! நீர் தான் விளையாடறதுக்குன்னு ஒரு குட்டியைப் பிடிச்சு இழுத்துண்டு வந்திருக்கீர்! எனக்கென்னங்காணும் விளையாட்டு?"

சம்பு சாஸ்திரி தீக்ஷிதரின் இந்த அசந்தர்ப்பப் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், "இல்லை, தீக்ஷிதர்வாள்! மங்களம் அவள் பிறந்தாத்துக்குப் போயிருந்தாளேன்னு கேட்டேன்" என்றார்.

"நீர் வாழ்ந்தாப்பலேயிருக்கு. பிறந்தாத்துக்குப் போனவள் அங்கேயே உட்கார்ந்திருப்பாள் என்று நினைச்சுண்டீரோ? அம்மாவும் பொண்ணும் அப்பவே திரும்பி வந்துட்டாளே? நீர் கடுதாசி, கிடுதாசி ஒண்ணும் போடலேன்னு, உம்ம மாமியார் மண்ணை வாரி இறைச்சிருக்காள், பாரும்! அக்கிரகாரத்துத் தெருவிலே ஒரு பிடி மண் பாக்கி கிடையாது."

சம்பு சாஸ்திரி மேலே தீக்ஷிதரிடம் பேச விரும்பவில்லை. உடனே நெடுங்கரைக்குப் புறப்பட்டுப் போக வேணுமென்று சாஸ்திரியின் மனத்தில் தீர்மானமாகிவிட்டது. எனவே, அவர், "சரி, நீங்க போய்ட்டு வாங்கோ. தீக்ஷிதர்வாள்! நானும் சீக்கிரத்திலே நெடுங்கரைக்கு வந்து சேரறேன்" என்றார்.

"போறேங்காணும், போறேன்! பின்னே, உம்மகிட்ட வந்து நின்னுண்டிருக்கப் போறேனா? ஒரு பத்து ரூபாய் பணம் இருந்தாக் கொடும். அப்புறம் கொடுத்துடறேன்."

"பணமா? பணம் என்கிறதை நான் தொட்டு ரொம்ப நாளாச்சே!"

"நல்ல ஆஷாடபூதிங்காணும் நீர்! ஒரு சிமிட்டா பொடியாவது கொடுப்பீரோ, அதைக்கூடத் தொட்டு இருபது வருஷம் ஆச்சு என்பீரோ?"

"தயவுசெய்து மன்னிக்கணும். நான் என்ன பண்றது? பொடி போடற வழக்கத்தைக்கூட நிறுத்தி விட்டேனே!"

"போங்காணும் போம்! சம்பு சாஸ்திரி சம்பு சாஸ்திரின்னு ஊரெல்லாம் பிரமாதப் பேரு; ஒரு சிமிட்டா பொடிக்குக் கூட வழியில்லை! எப்படியாவது நாசமாய்ப் போம்!" என்று சொல்லிவிட்டு, தீக்ஷிதர் மூட்டையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார்.

அவர் போனவுடனேயே சாரு வந்து, "தாத்தா! அந்த மாமா யாரு தாத்தா? அவர் மூஞ்சியைப் பார்த்தா எனக்குப் பிடிக்கவே இல்லை" என்றாள்.

"எனக்கும்தான் அவரைப் பிடிக்கிறதில்லை, சாரு! ஆனால் அவர் ஒரு முக்கியமான சமாசாரம் சொன்னார். நெடுங்கரையிலே, உனக்கு ஒரு பாட்டி இருக்கான்னு சொல்லியிருக்கேனோல்லியோ? அவளுக்கு ரொம்ப உடம்பு சரியில்லையாம். நாம் நெடுங்கரைக்குப் போய் அவளைப் பார்ப்பமா, சாரு?" என்று சாஸ்திரி கேட்டார்.

சாரு, "உடனே போகணும், தாத்தா! நான் தான் முன்னயே பிடிச்சுச் சொல்லிண்டிருக்கேனே? ஊர்கோலம் போய்ப் போய் எனக்கும் அலுத்துப் போச்சு!" என்றாள் சாரு.

மறு நாளே இருவரும் நெடுங்கரைக்குப் பிரயாணமானார்கள்.

22. ராஜி யோசனை

சென்னைப்பட்டணம் 'கொல்'லென்றிருந்தது. உமா ராணியின் புருஷன் என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்திருக்கிறானாம் என்றும், அவன் உமாராணியின் பேரில் தாம்பத்திய உரிமைக்கு வழக்குத் தொடுக்கப் போகிறானாம் என்றும் செய்தி பரவிற்று. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். உமாராணியின் பூர்வ ஜீவியத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஏற்கெனவே ரொம்பப் பேருக்கு ஆவல் இருந்தது. அவளுடைய வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று எல்லாருமே நினைத்தார்கள். அது என்னவாயிருக்கலாமென்று பலர் பலவிதமாய் ஊகம் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது உண்மை வெளியாவதற்கு ஹேது உண்டாகவே, நகரில் பிரமாதமான பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

கடைசியில், ஒரு நாள், பத்திரிகைகளில், கேஸ் தாக்கலாகிவிட்டது என்ற விவரம் வெளியாயிற்று. அந்தச் செய்தியைப் பெரிய தலைப்புக்களுடன் முக்கியமான இடத்தில் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன:

கலியுக அதிசயம்!

திடீரென்று வந்தவர் தாம்பத்ய உரிமை கோருகிறார்!

உமாராணியின் மேல் வழக்கு!

என்னும் இது போன்ற தலைப்புகள் பத்திரிகைகளின் இடத்தை அடைத்தன. 'போஸ்டர்' விளம்பரங்களிலும் இந்தக் கேஸ் விவரந்தான் காணப்பட்டது.

மறுநாள் காலையில், ஆபத்சகாயமய்யரின் பாரியை, கையில் ஒரு தமிழ்ப் பத்திரிகையுடன் அவருடைய ஆபீஸ் அறைக்கு வந்து சேர்ந்தாள்.

"ஏன்னா? இதென்ன அவமானம்? உங்க உமாராணி மேலே ஏதோ கேஸாமே?" என்றாள்.

"அதிலே உனக்கு என்ன வந்தது அவமானம்?" என்று வக்கீல் கேட்டார்.

"நீங்க அங்கே போயிண்டு வந்திண்டு இருக்கேளேன்னுதான்; இல்லாட்டா, ஊரிலே எந்த நாய் எப்படிப் போனா எனக்கென்ன? ஆமாம்; என்னமோ தாம்பத்திய உரிமைக் கேஸுன்னு போட்டிருக்கே, அப்படின்னா என்ன?"

"அப்படின்னா, 'Suit for Restitution of Conjugal Rights' என்று அர்த்தம்."

"போருமே பரிகாசம்! இப்படியெல்லாம் நீங்க கிருதக்காப் பேசறதைக் கேட்டாத்தான், எனக்கு எங்கேயாவது ஓடிப் போயிடலாம்னு தோணறது."

"நீ இப்பச் சொல்றயோல்லியோ? அந்த மாதிரி நிஜமாகவே ஒரு மனுஷனுக்கு அதிர்ஷ்டம் வந்து அவன் பெண்டாட்டி அவனை விட்டு ஓடிப்போயிடறாள்னு வச்சுக்கோ. அந்த மடையன் அது தனக்கு அதிர்ஷ்டம்னு தெரிஞ்சுக்காமே, அவளைத் தன்னோடு வந்து இருக்கச் செய்யணும்னு கோர்ட்டிலே கேஸ் போட்டான்னா, அதுக்குத்தான் தாம்பத்தியய் உரிமை வழக்குன்னு சொல்றது."

"இதென்ன வெட்கக்கேடு? இப்படிக்கூட ஒரு கேஸ் போடறதுண்டா, என்ன?"

"பின்னே சட்டம், கோர்ட்டு எல்லாம் என்னத்துக்காக இருக்குன்னு நினைச்சுண்டிருக்கே? வக்கீல் ஆம்படையாளாயிருந்துண்டு இன்னும் இது தெரிஞ்சுக்காமே இருக்கயே?"

"எனக்குத் தெரிஞ்ச மட்டும் போதும். உலகத்தைப் பத்தித் தெரிஞ்சுக்கத் தெரிஞ்சுக்க ஒண்ணும் தெரியாமலேயிருந்தாத் தேவலைன்னு தோணறது. போனாப்

போகட்டும். அந்த உமாராணிக்கு நீங்க பாக்கி எல்லாத்துக்கும் வக்கீலா இருக்கறது போரும். இந்தக் கேஸுக்கு நீங்க போக வேண்டாம். எனக்கு அவமானமாயிருக்கு."

"சரியாப் போச்சு! கோர்ட்டிலே எல்லாரும் என்னைப் பார்த்து இந்தக் கேஸ் வந்ததுக்காக அசூயைப் பட்டிண்டிருக்கா, 'உன் பாடு யோகம்' என்று சொல்லிச் சொல்லி வயத்தெரிச்சல் படறா. நீயானா இப்படிச் சொல்றே. இந்தக் கேஸ் மட்டும் நடந்தா, 5000 ரூபாய்க்குக் குறையாமே வரும்படி வரும். கேஸிலே ஜயிச்சுட்டேனோ அப்புறம் அட்வகேட்-ஜெனரலுக்கு அடுத்தபடி நான் தான் பெரிய வக்கீல் இந்த ஊரிலே. கேஸை ஒப்புக் கொள்ளட்டுமா, வேண்டாமா சொல்லு!"

"அதென்னமோ, நீங்களும் உலக கோர்ட்டும் எப்படியாவது போங்கோ எனக்கு ஒண்ணும் புடிக்கலை" என்று சொல்லிவிட்டு வக்கீலின் மனைவி எழுந்து உள்ளே சென்றாள்.

ஆபத்சகாயமய்யர் தம்முடைய முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காக அன்று உமாராணியின் பங்களாவுக்குப் போனார். அவரைக் கண்டதும் உமாராணி, "என்ன வக்கீல் ஸார்! சட்டம் என்ன சொல்றது?" என்று கேட்டாள்.

"பார்த்தேன், அம்மா! ஜயிக்கிறதற்கு சான்ஸு இல்லைன்னு சொல்றதற்கில்லை. இந்த விஷயத்திலே சட்டம் சுவர் மேல் பூனை மாதிரி இருக்கு. இந்தப் பக்கம் குதிச்சாலும் குதிக்கும்; அந்தப் பக்கம் குதிச்சாலும் குதிக்கும். கடைசியிலே, ஜட்ஜினுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தது."

"அவ்வளவு இடமிருந்தால் போதும். கேஸை நடத்தறதுக்கு வேண்டிய ஏற்பாடு பண்ணுங்கள். கேஸ் நமக்கு ஜயிக்கவே ஜயிக்காதுன்னாக்கூட, நடத்திப் பார்க்கறதுன்னு நான் தீர்மானிச்சுட்டேன்" என்று உமாராணி சொன்னாள்.

அப்போது வக்கீல் சிறிது தயக்கத்துடன், "ஒரு விஷயம் சொல்லணும்னு நினைக்கிறேன். அது என்னுடைய கடமை; நீங்க சொல்லச் சொன்னா, சொல்றேன்" என்றார்.

"பேஷாய்ச் சொல்லுங்கள், ஸார்! எப்பேர்ப்பட்ட சமாசாரமாயிருந்தாலும் என்னை ஒண்ணும் செய்யாது. என் நெஞ்சு அப்படிக் கல்லாகிவிட்டது" என்றாள் உமா.

"ஊரெல்லாம் அதுக்குள்ளே இந்தக் கேஸைப் பத்தியே பேச்சாயிருக்கு. கேஸ் ஆரம்பிச்சாயிடுத்துன்னா, பேச்சு இன்னும் ரொம்ப அதிகமாய்ப் போய்விடும். வெளியிலே நீங்க கிளம்பறதுக்கு முடியாதபடி ஆனாலும் ஆயிடும். நம்ம ஜனங்களின் சுபாவந்தான் உங்களுக்குத் தெரியுமே? இதையெல்லாம் யோசித்தால், ஏதாவது ஒரு விதமாய் ராஜியாய்ப் போயிடறதுதான் நல்லதுன்னு எனக்குத் தோணறது..."

அப்போது உமாவின் முகத்தில் உண்டான மாறுதலைப் பார்த்த வக்கீல், உடனே பரபரப்புடன், "நான் என்னமோ அவரோடு உங்களைப் போயிருக்கச் சொல்றதாக நினைச்சுக்கப்படாது. மிஸ்டர் ஸ்ரீதரனுடைய சுபாவம் எனக்கு இப்போ நன்னாத் தெரிஞ்சு போச்சு. ஏதாவது கொஞ்சம் பணங்கொடுத்தா வாங்கிண்டு போயிடுவார். நீங்க உத்தரவு கொடுத்தேள்னா, நான் போய் அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வர்றேன்" என்றார்.

உமா இலேசாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஆத்திரமும் அருவருப்பும் கலந்திருந்தன.

"ராஜியாய் போறதா? பணங் கொடுக்கிறதா? என்னத்துக்காகப் பணங்கொடுக்கிறது, வக்கீல் ஸார்! மேலும் மேலும் இவர் பாப கிருத்தியங்களைச் செய்வதற்கா?" என்று உமா கேட்டுவிட்டு ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தாள்.

"என்மேல் இவர் கேஸ் போடுகிறதாம்! நான் பணங்கொடுத்து ராஜியாய்ப் போகிறதாம்! பேஷ்... ஒரு காலத்தில் இந்த மனுஷன் பேரில் வைத்த ஆசையினால்

என் இருதயம் என்னமாய்த் துடித்திருக்கிறது. உங்களுக்குத் தெரியுமா? எத்தனை நாள் இவரை நினைத்து நினைத்து ராப்பகல் தூக்கமில்லாமல் கழித்திருக்கிறேன். தெரியுமா? எவ்வளவு நாள் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறேன். தெரியுமா? இப்போது கூட..." என்று சொல்ல வந்தவள், திடீரென்று நிறுத்தி, "அதையெல்லாம் பற்றி என்னத்திற்கு இப்போது பேச வேண்டும்? போங்கள், கேஸை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இனிமே ராஜி கீஜின்னு எங்கிட்ட ஒண்ணும் பேச வேண்டாம்" என்றாள்.

இப்படிச் சொல்லிவிட்டு உமா வேறு பக்கம் திரும்பி, கைகளால் கண்களை மூடிக்கொண்டாள். அவளுடைய மனத்தில் பொங்கிய துக்கத்தை ஒருவாறு அறிந்து கொண்ட ஆபத்சகாயமய்யர், எழுந்திருந்து வெளியே போனார். வாசற்படி வரையில் போனவர் மறுபடியும் திரும்பி வந்து, "இன்னொரு சமாசாரம் சொல்ல மறந்துட்டேன். குழந்தை சாருவைப் பத்தி..." என்றார்.

உமா, கண்ணைத் துடைத்துக் கொண்டு, வக்கீலை நிமிர்ந்து பார்த்து, "என்ன?" என்று கேட்டாள்.

"சம்பு சாஸ்திரியும் சாருவும் இப்போது தஞ்சாவூர் ஜில்லாவிலே நெடுங்கரை என்கிற ஊருக்குப் போயிருக்காளாம்."

"நெடுங்கரைக்கா போயிருக்கா? – நெடுங்கரை – நெடுங்கரை – " என்று உமா தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். பிறகு, "இது உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது? இன்னும் அவாளைப் போலீஸார் கவனிச்சுண்டு வர்றாளா, என்ன?" என்று கேட்டாள்.

"அவர்களுடைய பிரசாரத்தினாலே கிராமாந்தரங்களிலெல்லாம் பெரிய குழப்பம் உண்டாகிறதாம். அதற்காக அவர் பின்னோடேயே சி.ஐ.டி. காரன் ஒருத்தன் போயிண்டிருக்கானாம். அவனுடைய ரிப்போர்ட்டிலேயிருந்துதான் அவர்கள் நெடுங்கரைக்குப் போயிருக்கிறது தெரிந்தது."

"சரி; உங்களுக்குக் கோர்ட்டுக்கு நேரமாச்சே. போய்விட்டு வாருங்கள்" என்றாள் உமா. வக்கீல் போன பிறகு, மேஜையைத் திறந்து, அதில் கிருஷ்ணன் வேஷத்தில் நடனக் கோலத்தில் தோன்றிய சாருவின் புகைப்படத்தை எடுத்தாள். அந்தப் படத்துக்கு முத்தம் கொடுத்துவிட்டு, "என் கண்ணே! இந்த மாதிரி உன் அப்பா பேரும் அம்மா பேரும் சந்தி சிரிக்கிறதைப் பார்க்க இங்கே இல்லாமற் போனாயே, நீ பாக்கியம் செய்தவள், சாரு!" என்று சொல்லி, படத்தை மார்பின் மீது வைத்து அணைத்துக் கொண்டு, கண்ணீர் உகுத்தாள்.

23. மங்களத்தின் மரணம்

சம்பு சாஸ்திரி நெடுங்கரையை அடைந்ததும், தீக்ஷிதர் மங்களத்தைப் பற்றிச் சொன்னது உண்மைதானென்று அறிந்தார். அப்போது, பகவானுடைய கருணையின் ஒரு முக்கியமான அம்சம் அவருக்குப் புலப்பட்டது. இந்த உலகத்தில் சம்பு சாஸ்திரி யாராவது ஒரு மனிதரை வெறுத்தார், தம்முடைய சத்துருவாகக் கருதினார் என்றால், அந்த மனிதர் சங்கர தீக்ஷிதர்தான். அப்பேர்ப்பட்ட சங்கர தீக்ஷிதர் மூலமாக ஈசன் தம்மை மங்களத்தின் மரணத்தறுவாயில் அவளிடம் கொண்டு சேர்த்ததை நினைத்து நினைத்துச் சாஸ்திரி மனம் உருகினார். இந்த ஓர் உதவி செய்ததன் பொருட்டு, தீக்ஷிதர் தமக்கு ஏற்கெனவே செய்துள்ள அபசாரங்களையெல்லாம் அவர் மன்னித்துவிடவும், அவரிடம் நன்றி பாராட்டவும் தயாராயிருந்தார். ஆறு ஏழு வருஷமாக மங்களத்தைத் தாம் கை விட்டுவிட்டு இருந்ததே பிசகு. ஐயோ! இந்தச் சமயத்திலாவது தாம் வந்திராவிட்டால், அவள் கதி என்ன ஆகியிருக்கும்? தமக்குத்தான் அப்புறம் அடுத்த ஜன்மத்திலாவது மனச்சாந்தி உண்டாக முடியுமா?

தாம் பட்டணத்துக்குப் போன பிறகு மங்களத்தின் வாழ்க்கை எப்படி நடந்தது என்பதைப் பற்றி அவளே சொல்லிச் சாஸ்திரி தெரிந்து கொண்டார். சாஸ்திரியின் வாழ்க்கை எவ்வளவு விசேஷ சம்பவங்கள் நிறைந்ததோ, அவ்வளவு மங்களத்தின் வாழ்க்கை விசேஷமற்றதாயிருந்தது. நாலைந்து மாதத்துக்கெல்லாம் அவள் தன் தாயாருடனும் செவிட்டு வைத்தியுடனும் நெடுங்கரைக்குத் திரும்பி வந்தாள். அப்போதிருந்து நெடுங்கரையில் தான் வசித்தாள். தான் இல்லாதபோது சாவித்திரி பூரண கர்ப்பவதியாய் நெடுங்கரைக்கு வந்து வீடு பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டுத் திரும்பிய செய்தியை ஊரார் சொல்லத் தெரிந்து கொண்டபோது அவள் மனம் ரொம்பவும் புண்பட்டது. சாஸ்திரியிடமிருந்தும் கடிதம் ஒன்றும் வராமல் போகவே, தானும் தன் தாயாருமாகச் சேர்ந்து செய்த சதியை அவர் தெரிந்து கொண்டு தான் அடியோடு தன்னை வெறுத்து விட்டார் என்று மங்களம் எண்ணத் தொடங்கினாள். அது முதலே, மங்களத்துக்கும் அவள் தாயாருக்கும் ஒத்துக் கொள்ளாமல் போயிற்று. "பாவி! பழிகாரி! நீதானே அவரை ஊரைவிட்டு விரட்டினாய்!" என்று மங்களம் அடிக்கடி அம்மாவை வைவதும், "நன்றியற்ற நாயே! எல்லாம் உனக்காகத்தானேடி செய்தேன்?" என்று அம்மா திருப்பி வைவதும் நாளுக்கு நாள் அதிகமாயிற்று. இந்த மாதிரி சண்டையினால், சொர்ணம்மாள் சில சமயம் மங்களத்தினிடம் கோபித்துக் கொண்டு ஊரைப் பார்க்கப் போய்விடுவதும் உண்டு. அந்த மாதிரியே இந்தச் சமயமும் அவள் கோபித்துக் கொண்டு ஊருக்குப் போயிருந்தாள். செவிட்டு வைத்தி மட்டுந்தான் அக்காவுக்குத் துணையாயிருந்தான்.

சாவித்திரி நெடுங்கரைக்கு வந்து வீடு பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டுத் திரும்பினாள் என்னும் செய்தி சம்பு சாஸ்திரியைக் கதிகலங்கச் செய்தது. ஆனாலும், சாவித்திரியைப் பற்றி நினைக்க இப்போது தருணமில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். படுத்த படுக்கையாய்க் கிடக்கும் மங்களத்தைப் பராமரிப்பதுதான் இப்போது தம்முடைய முதன்மையான கடமை என்று கருதி, அந்தக் கடமையில் பூரணமாய் ஈடுபட்டார்.

மங்களம் சென்ற இரண்டு வருஷ காலமாக மிகக் கொடிய தலைவலியினால் அடிக்கடி பீடிக்கப்பட்டு வந்தாள். அதற்குச் செய்து கொண்ட நாட்டு வைத்தியங்கள் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. தான் செய்த கர்மத்தினால் தான் இந்த வியாதி தன்னைப் பீடித்திருக்கிறது என்று அவள் நம்பியபடியால், வைத்தியம் சாதாரணமாய்ப்

பலிக்கக்கூடிய அளவுகூடப் பலிக்கவில்லை. இப்போது தலைவலியுடன் சுரமும் சேர்ந்து அவளைப் பீடித்திருந்தது. ரொம்பவும் துர்பலமாயுமிருந்தாள்.

அந்த நிலைமையில் தன் கணவர் வந்து சேர்ந்தது அவளுக்கு எவ்வளவோ சந்தோஷம் அளித்தது. சாஸ்திரியும் மிகவும் சிரத்தையுடன் அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தார். ஆனால், இதனாலெல்லாம் அவளுடைய வியாதி குணப்படவில்லை; அதிகமே ஆயிற்று.

"சாகிறதற்கு முன்னால் அவரை ஒரு தடவை பார்க்கும்படி கிருபை செய்யவேணும், ஸ்வாமி!" என்று மங்களம் பகவானை அடிக்கடி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். அந்தப் பிரார்த்தனைக்குப் பகவான் மனமிரங்கித்தான் இப்போது சாஸ்திரியைக் கொண்டு வந்து சேர்ந்ததாக அவள் நினைத்தாள். ஆகவே, இனிமேல் தான் பிழைக்கப் போவதில்லையென்றும், சீக்கிரம் மரணம் நேர்ந்துவிடும் என்றும் அவளுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

சம்பு சாஸ்திரி வந்ததிலிருந்து அவளுடைய அலட்டலும் அதிகமாயிற்று. ஓயாமல் தான் சாவித்திரிக்குச் செய்த கெடுதலைச் சொல்லிச் சொல்லிப் புலம்பினாள். அப்போதெல்லாம் சாஸ்திரி அவளுக்குக் கூடியவரையில் சமாதானம் சொல்ல முயன்றார்.

சாஸ்திரி வந்த ஒரு வாரத்துக்குள் மங்களத்தினுடைய பலஹீனம் ரொம்பவும் அதிகமாகிவிட்டது. இனிமேல் அவள் பிழைப்பதரிது என்று சாஸ்திரிக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. ஆகவே, அந்தண்டை இந்தண்டை போகாமல் சாஸ்திரி அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

ஒரு மாதிரி மயக்கத்தில் ஆழ்ந்திருந்த மங்களம் கண்ணை விழித்தாள். சாஸ்திரியைப் பார்த்து, "நீங்க நிஜமாகவே வந்திருக்கேளா? நான் சொப்பனம் காணலையே?" என்று பலஹீனமான குரலில் கேட்டாள்.

"நான் நிஜமாத்தான் வந்திருக்கேன், மங்களம்! இத்தனை நாளும் உன்னை நான் விட்டுவிட்டிருந்ததே பிசகு. அந்தப் பாவத்தை நான் எப்படித் தீர்க்கப் போறேனோ, தெரியவில்லை" என்றார்.

"நீங்களா பாவம் செய்தவர்? இல்லவே இல்லை! நான் தான் பாவி! அம்மா பேச்சைக் கேட்டுண்டு அந்தக் குழந்தையைப் படுத்தாத பாடும் படுத்தினேன். அவள் எழுதின கடுதாசையெல்லாம் நீங்க பார்க்காமே கிழிச்சு நெருப்பிலே போட்டேன். அந்தப் பாவந்தான் என்னை இப்படி வதைக்கிறது! - ஐயோ! யாரோ கோடாலியாலே தலையிலே போடறாப்பலேயிருக்கே!"

"வேண்டாம், வீணா, அலட்டிக்காதே, மங்களம்! ஸ்வாமியை நினைச்சுக்கோ. எப்பேர்ப்பட்ட பாவமாயிருந்தாலும் பகவான் மன்னிச்சுடுவார்" என்று சொல்லி சாஸ்திரி கொஞ்சம் விபூதி எடுத்து மங்களத்தின் நெற்றியில் இட்டார்.

"ஐயோ! ஸ்வாமின்னா பயமாயிருக்கே!" என்றாள் மங்களம். பிறகு, "சாவித்திரி! சாவித்திரி! உன்னைச் சூடு போடறதற்கு வந்தேனே? பத்து மாஸத்துப் பிள்ளைத்தாச்சியா நீ வந்தபோது, உன்னைத் தெருவிலே நின்னு திண்டாட விட்டேனே? அந்தப் பாவந்தாண்டி என்னை இந்தப் பாடு படுத்தறது, சாவித்திரி! ஒரு வார்த்தை. 'உன் மேலே எனக்குக் கோபமில்லை, சித்தி'ன்னு சொல்லேண்டி!..." என்று புலம்பினாள்.

மங்களத்தின் துயரம் சாஸ்திரியின் மனத்தை உருக்கிவிட்டது. அவர் அவளைக் கருணையுடன் பார்த்து, "மங்களம்! குழந்தை சாவித்திரி இங்கே இல்லை. அவள் மட்டும் இங்கே இருந்தால், கட்டாயம் உன்னை..." என்று சொல்லிக் கொண்டு வருகையில், "தாத்தா! பாட்டிக்கு உடம்பு என்னமாயிருக்கு?" என்று கேட்டுக் கொண்டே சாரு உள்ளே வந்தாள்.

அவளை மங்களம் வெறிக்கப் பார்த்து, "சாவித்திரி இதோ இருக்காளே! இல்லைன்னு சொன்னேளே! சாவித்திரி! சாவித்திரி! சித்தே எங்கிட்ட வாடி, அம்மா!" என்றாள். சாஸ்திரிக்குக் கொஞ்சம் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் சாருவைப் பார்த்து விட்டு, 'பாவம்! இவளுக்குப் பிரமை!' என்று எண்ணிக் கொண்டார்.

சாரு ஒன்றும் புரியாதவளாய்த் தாத்தாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, "என் பேர் சாவித்திரி இல்லை, பாட்டி! என் பேரு சாரு!" என்றாள்.

மங்களத்தின் வெளுத்துப் போன இதழ்களில் ஒரு புன்னகையின் சாயை காணப்பட்டது.

"எனக்குத் தெரியாதா? – நீ சாவித்திரிதான் – என் மேலே உனக்கு இன்னும் கோபம் போலேயிருக்கு" என்று மங்களம் தட்டுத் தடுமாறிப் பேசினாள்.

சாரு பளிச்சென்று, "கோபமா? உன் மேலே எனக்கு ஒரு கோபமும் இல்லையே, பாட்டி! தாத்தாவை வேணாக் கேட்டுப் பாரு!" என்றாள்.

இதைக் கேட்டதும், மங்களத்தின் ஒளியிழந்த கண்களில் சிறிது பிரகாசம் உண்டாயிற்று.

"இல்லையா? உனக்கு என் மேலே கோபம் இல்லையா? நீ மகராஜியாயிருப்பே! நன்னாயிருப்பே! – தலையைப் பிளந்தது சட்டுனு நின்னு போச்சே!" என்றாள் மங்களம். அப்போது அவளுடைய கண்கள் செருகத் தொடங்கின. சீக்கிரத்தில் அவள் பிரக்ஞை இழந்தாள்.

பிறகு, மங்களத்துக்குச் சுய ஞாபகம் உண்டாகவேயில்லை. அன்று மாலை அவள் உயிர் தன்னுடைய சிறையிலிருந்து விடுதலை அடைந்து சென்றது.

24. 'மாட்டேன்! மாட்டேன்!'

சாரு, மங்களத்துக்கு முன்னால் சாவித்திரியின் ரூபமாகத் தோன்றி, "எனக்கு உன் பேரில் கோபமில்லை" என்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த அதே சமயத்தில், உண்மையான சாவித்திரி சென்னை ஐகோர்ட்டில் சாட்சிக் கூண்டில் கோபமே உருவெடுத்தவள் போல் நின்றாள்.

ஸ்ரீதரன் தன்னுடைய சபதத்தை நிறைவேற்றி விட்டான். உமாராணியின் மேல் நிஜமாகவே தாம்பத்திய உரிமைக்கு வழக்குத் தொடுத்து அவளைக் கோர்ட்டிலே கொண்டு வந்து நிறுத்தியிருந்தான்.

கோர்ட்டில் அப்போது உமாராணியின் குறுக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீதரனுடைய வக்கீல் மிஸ்டர் நாராயணன், பி.ஏ., பி.எல்., குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தார். இந்த நாராயணன் தான் ஸ்ரீதரனுடைய பழைய சிநேகிதனாகிய நாணா என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. நாணாவின் மாமனார் காலஞ்சென்ற பிறகு அவன் பாடு ரொம்பவும் கஷ்டமாய்ப் போயிருந்தது. பெரிய பெரிய வக்கீல்கள் எல்லாம், "காலங்கெட்டுப் போச்சு; கேஸுகள் குறைஞ்சு போச்சு!" என்று சொல்லிக் கொண்டிருக்கையில், கத்துக்குட்டி நாணாவை யார் கவனிக்கிறார்கள்? "எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்" என்ற தோரணையில்தான் அவன் கோர்ட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட நிலைமையில், ஸ்ரீதரனுடைய கேஸ் அவனுக்குப் பெரியதொரு வரப் பிரசாதமாக வந்து சேர்ந்தது. இதன் மூலம் தான் பெயரும் பிரஸித்தியும் அடையலாம் என்றெண்ணினான். "ஸ்ரீதரா! இப்போதைக்கு, பீஸ், கீஸ் ஒன்றும் நான் கேட்கவில்லை. கேஸ் ஜயிச்சுதோ, அப்புறம் என்னைக் கவனிச்சுக்கோ, போரும்-ஓ! இந்தக் கேஸ் மட்டும் ஜயிச்சுதுன்னா அப்புறம் உனக்கு என்ன குறைச்சல், எனக்குத்தான் என்னடா குறைச்சல்?" என்று ஸ்ரீதரனை உற்சாகப்படுத்தினான்.

இப்படியாக, இந்தத் தாம்பத்திய உரிமை வழக்கு ஜயமடைய வேண்டுமென்பதில் ஸ்ரீதரனுக்கு இருந்த கவலையைக் காட்டிலும் நாராயணன், பி.ஏ.,பி.எல்., அவர்களுக்குக் கவலை அதிகமாயிருந்தது. ஆகவே, மிகவும் சிரத்தையுடன் கேஸை நடத்தினார். அந்தச் சிரத்தையை இப்போது, உமாராணியைத் தாறுமாறாகக் கேள்வி கேட்டு, அவளுடைய மனம் கலங்கும்படி அடிப்பதில் காட்டினார்.

"புருஷன் வீட்டிலே நீங்கள் அப்படியெல்லாம் கஷ்டப்பட்டதாகச் சொல்கிறீர்களல்லவா? அந்தக் கஷ்டங்களை அந்தக் காலத்திலேயே யாரிடமாவது சொல்லியிருக்கிறீர்களா? உதாரணமாக, உங்கள் தகப்பனார் சம்பு சாஸ்திரியிடமாவது சொல்லியதுண்டா?" என்று கேட்டார்.

உமா சற்று யோசித்துவிட்டு, "இல்லை" என்று பதில் சொன்னாள்.

"அவ்வளவு கஷ்டம் நீங்கள் பட்டிருந்தால் ஏன் ஒருவரிடமும் அப்போது சொல்லவில்லை?"

"இஷ்டமில்லை; அதனால் சொல்லவில்லை."

"நீங்கள் கஷ்டப்பட்டதாகச் சொல்வதெல்லாம் பொய்; அதனால் தான் சொல்லவில்லையென்று நான் ஊகிக்கிறேன்."

"எனக்குப் பொய் சொல்ற வழக்கம் கிடையாது; உங்களுக்குத்தான் அதுவே தொழில்" என்று உமாராணி பளீரென்று பதில் கூறினாள். இதைக் கேட்டு, கோர்ட்டில் வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்களில் சிலர் சிரித்தார்கள்.

நீதிபதி கோபமாக மேஜையைத் தட்டினார்.

ஆனால், அட்வகேட் நாராயணன் ஒரு ஸ்திரீக்குச் சளைத்து விடுவாரா? அவர் ஒரு கோணல் புன்னகை புரிந்து, "ஆனால், உங்கள் பெயரே ஒரு பொய்யாச்சே?" என்றார். அப்போது, வக்கீல்களிடையே சிரிப்பு உண்டாயிற்று.

"அநாவசியமான விவாதம் வேண்டாம்; குறுக்கு விசாரணையை நடத்தும்!" என்று வாதி வக்கீலைப் பார்த்து நீதிபதி சொன்னார்.

மிஸ்டர் நாராயணன் மறுபடி கேட்டார்: "சரி, நீங்க சொன்னதெல்லாம் நிஜமென்றே நினைச்சுக்குவோம். புருஷன் வீட்டிலே நீங்க ரொம்ப ரொம்ப ரொம்பக் கஷ்டப்பட்டதாகவே வச்சுக்குவோம். ஆனா, நீங்கதான் அவரை அவ்வளவு தூரம் தெய்வமாகப் பாவிச்சுண்டிருந்தேன்னு சொன்னேளே? இப்போ, அவர், 'போனதையெல்லாம் மறந்துடலாம்; புருஷன் மனைவியாகத் தாம்பத்தியம் நடத்தலாம்' என்று சொல்கிறபோது, ஏன் அதை மறுக்கிறீர்கள்?"

உமா அப்போது ஆவேசத்தோடு பதில் சொன்னாள்: "ஆமாம்; ஒரு காலத்தில் இவரைத் தெய்வமாக நினைத்தேன்; வாஸ்தவந்தான். அப்போது என்னை இவருக்குப் பிடிக்கவில்லை, என்னைப் பார்ப்பதற்கும் கசப்பாயிருந்தது. நான் இருக்கிறேனா, செத்தேனா என்று கூடக் கவனிக்கவில்லை. இப்போது வந்து கூடி வாழலாமென்று சொல்கிறார். எதற்காக? என்பேரில் இவருக்குத் திடீரென்று பிரியம் வந்துவிட்டதா? இல்லை! என்னிடம் இருக்கும் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு சொல்கிறார்..."

இதுவரையில் உமாவின் முகத்தையே பார்த்துக் கொண்டும் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டுமிருந்த ஸ்ரீதரன் இப்போது ஆத்திரத்துடன், "பொய்! பொய்!" என்றான். அவன் மெதுவாகத்தான் சொன்னானென்றாலும், நீதிபதி உள்படக் கோர்ட்டிலிருந்த பெரும்பாலோருக்கு அது கேட்டது.

உமா, ஸ்ரீதரன் பக்கம் திரும்பி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையின் தீக்ஷணியத்தைச் சகிக்க முடியாமல் ஸ்ரீதரன் தலை குனிந்து கொண்டான்.

"ஆமாம்; மறுபடியும் சொல்கிறேன். என்னிடமுள்ள பணத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டு தான் இப்போது கிருகஸ்தாசிரமம் நடந்த வந்திருக்கிறார்" என்றாள் உமா.

உடனே, நீதிபதியின் பக்கமாகத் திரும்பிப் பார்த்துச் சொன்னாள்: "இது நியாயமா? இது தர்மமா? நீங்களே சொல்லுங்கள். ஒரு பெண்ணை அவள் பேரில் இஷ்டமில்லாத புருஷனுடன் வாழும்படி நிர்பந்தப்படுத்துவது நீதியா? தெய்வத்துக்குத்தான் அடுக்குமா? உலகமெல்லாம் 'சுதந்திரம், சுதந்திரம்' என்று முழங்கிக் கொண்டிருக்கும் இந்நாளில் ஒரு பெண் பேதையைச் சட்டத்தின் பேரால் இத்தகைய கொடுமைக்கு ஆளாக்கலாமா? மனைவியைப் புருஷன் தள்ளி வைத்தால், மனைவி கோரக்கூடிய பாத்தியதை என்ன? ஜீவனாம்சந்தானே? அந்த மாதிரி நானும் இவருக்கு ஜீவனாம்சம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் இவருடன் சேர்ந்து வாழ்வதற்கு மட்டும் சம்மதிக்க மாட்டேன்! ஒரு நாளும் மாட்டேன்!"

இந்த மாதிரி உமாராணி உரத்த குரலில் ஆவேசம் வந்தவள் போல் கூறியபோது, கோர்ட்டில் வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் திடுதிடுவென்று பெஞ்சிகளைத் தட்டியும் கைகொட்டியும் ஆர்ப்பரித்தார்கள்.

நீதிபதி மிகவும் கோபமாக நிமிர்ந்து உட்கார்ந்தார். கோர்ட் ஸார்ஜெண்ட் "ஸயலென்ஸ்!" என்று கத்தினான்.

மிஸ்டர் நாராயணன் மறுபடியும் உமாவைப் பார்த்து, "ரொம்பப் பதட்டப் படாமல் பதில் சொல்லுங்கள்; உங்களைக் கல்கத்தாவிலிருந்து வழி போக்கர்களுடன் கூட்டி அனுப்பியபோது எட்டு மாதம் கர்ப்பம் என்று சொன்னீர்களல்லவா? அது நிஜந்தானே?" என்று கேட்டார்.

"ஆமாம்; நிஜந்தான்!" என்றாள் உமா. அவளுக்குப் பழைய ஞாபகங்கள் குமுறிக்கொண்டு வந்தன. உடம்பில் படபடப்பு அதிகமாயிற்று. காலும் கையும் நடுங்கத் தொடங்கின. முன்னொரு தடவை, இதே சென்னை நகரில் போலீஸ் ஸ்டேஷனில் தனக்கு இம்மாதிரி படபடப்பு வந்ததும், தான் மூர்ச்சித்துக் கீழே விழுந்ததும் அவளுடைய நினைவில் வந்தன.

"சரி; அப்படின்னா, அந்தக் குழந்தை என்ன ஆச்சு?" என்று வாதி வக்கீல் கேட்டார்.

உமா திகைத்து நின்றாள். பிரதிவாதி வக்கீல் ஆபத்சகாயமய்யர் பளிச்சென்று எழுந்திருந்து, "நான் ஆட்சேபிக்கிறேன். இந்தக் கேள்வி கேஸுக்கு சம்பந்தமில்லை, யுவர் லார்ட்ஷிப்" என்றார்.

"ரொம்ப அவசியமான கேள்வி, யுவர் லார்ட்ஷிப்! பிரதிவாதி சொல்றது அவ்வளவும் கற்பனைக் கதை என்று நான் ருசுப் பண்றேன்" என்றார் நாராயணன் பி.ஏ., பி.எல்.

நீதிபதி, "ஆல் ரைட்!" என்று சொல்லி, உமாவைப் பார்த்து, "கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்" என்றார்.

அப்போது உமாவுக்கு நிஜமாகவே வெறி வந்துவிட்டது. உரத்த குரலில், "மாட்டேன்! மாட்டேன்! இதுவும் ஒரு சூழ்ச்சியா? பெண்டாட்டி பேரில் இருக்கும் ஆத்திரத்தை குழந்தை பேரில் காட்டலாம் என்ற உத்தேசமா? முடியாது; முடியாது!" என்று கத்தினாள். அப்படியே நின்ற இடத்தில் திடீரென்று மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தாள்.

உடனே, கோர்ட்டில் பெரிய குழப்பம் உண்டாயிற்று எல்லாரும் எழுந்திருந்து தலைக்கு ஒரு பக்கமாக ஓடினார்கள். "தண்ணி தண்ணி!" என்று சிலரும், "டாக்டர்! டாக்டர்!" என்று வேறு சிலரும் கத்தினார்கள். வக்கீல் ஆபத்சகாயமய்யர் தான் கொஞ்சம் புத்தியுடன் காரியம் செய்தார். ஓடிப் போய் உமாராணியைப் பிடித்துக் கொண்டு கீழே உட்கார வைத்தார். இன்னொரு வக்கீல் கொண்டு வந்த ஜலத்தை முகத்தில் தெளித்தார்.

நீதிபதி, "அந்த அம்மாளை அப்புறப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு போங்கள்; கேஸைத் தள்ளிப் போடலாம்" என்றார்.

இதற்குள், உமாவும் கொஞ்சம் தெளிவடைந்து எழுந்திருக்கவே, அவளை அழைத்துக்கொண்டு போய் வெளியில் உள்ள மோட்டாரில் ஏற்றினார்கள்.

ஸ்ரீதரன், பாவம், இதெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றான். உமாவினுடைய நிலைமை அவனுக்கு ஒரு பக்கம் பரிதாபத்தை உண்டாக்கிற்று. மற்றொரு பக்கத்தில், தனக்கு ஜீவனாம்சம் கொடுப்பதாக அவள் சொன்னதை எண்ணி எண்ணி ஆத்திரப்பட்டான்.

உமாராணி வெளியே சென்றதும், வாதி வக்கீல் நாராயண அய்யர், நீதிபதியைப் பார்த்து, "யுவர் லார்ட்ஷிப்! இந்தக் குழந்தை விஷயம் கேஸின் போக்கையே மாற்றக் கூடியதாயிருக்கிறது. பிரதிவாதியின் தகப்பனார் சம்பு சாஸ்திரிக்குக் கோர்ட் சாட்சியாக ஆஜராகும்படி அர்ஜெண்ட் ஸம்மன்ஸ் அனுப்பவேண்டும். அவர் மூலமாக இந்தக் கேஸில் ரொம்ப உண்மை வெளியாகக் கூடும்" என்றார்.

"ஆல் ரைட்!" என்றார் நீதிபதி.

25. பராச க்தி லீலை !

நெடுங்கரை வந்ததிலிருந்து சம்பு சாஸ்திரியார் ஈசனுடைய கருணைத் திறத்தை மேலும் மேலும் உணரும்படி நேரிட்டது. அக்கிரகாரத்து ஜனங்களின் மனோபாவத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல் அவருக்கு மிகவும் வியப்பை அளித்தது. தீக்ஷிதர் நெடுங்கரைக்கு இன்னும் திரும்பி வரவில்லை. மற்றவர்கள் எல்லாம் சம்பு சாஸ்திரியை இப்போது மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றார்கள். சாஸ்திரி புரிந்து வந்த தேசத் தொண்டைப் பற்றி ஏற்கெனவே அவர்களுக்குச் செய்தி எட்டியிருந்தது. அவருக்கு வந்த பெருமையெல்லாம் தங்கள் ஊருக்கு வந்ததாகவே கருதி அவர்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட மகானை ஒரு காலத்தில் சாதிப் பிரஷ்டம் செய்து வைத்திருந்தோமே என்பதைக் குறித்து அவர்களில் பலருக்கு வெட்கமாயும் இருந்தது. அதற்குப் பிராயச்சித்தமாக, இப்போது மங்களத்தின் அந்தியக் கிரியைகளை நடத்துவதற்கு அவர்கள் சம்பு சாஸ்திரிக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்தார்கள். அது விஷயமாக அவருக்கு அவர்கள் ஒரு கவலையும் வைக்கவில்லை. அக்கிரகாரத்து ஸ்திரீகளுடைய மனோபாவமும் பெரிதும் மாறிப் போயிருந்தது. வீட்டுக்கு ஒரு நாளாகச் சமையல் செய்து சாஸ்திரிக்கும் சாருவுக்கும் கொண்டு வந்து வைத்தார்கள். ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு, குழந்தை சாருவுக்கு வேண்டியதெல்லாம் செய்து வந்தார்கள்.

குடியானத் தெருவையும், சேரியையும் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. சாஸ்திரி ஐயா திரும்பி வந்ததைப் பற்றி அவர்களுக்கெல்லாம் ஒரே உற்சாகம். "அந்த அம்மா சாகப் போகிற சமயத்துக்கு வந்துட்டாங்க பாத்தியா? ஐயா கிட்ட தெய்வீக சக்தியல்ல இருக்குது?" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

இதையெல்லாம் பார்த்த சம்பு சாஸ்திரியார் இனி நெடுங்கரையிலேயே தங்கி விடலாமா என்று யோசித்தார். இதற்கு ஒரே ஓர் எண்ணந்தான் குறுக்கே நின்றது. சாவித்திரியின் க்ஷேமத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவருடைய உள்ளம் துடிதுடித்தது. ஏழு வருஷத்துக்கு முன்னால் நெடுங்கரைக்கு வந்து விட்டுத் திரும்பிச் சென்றவள் என்ன ஆனாள்? எங்கே போனாள்? சௌக்கியமாய்க் கல்கத்தாவுக்குத் திரும்பிப் போயிருப்பாளோ?...

சாவடிக் குப்பத்துக்குப் போன புதிதில் தாம் அங்கே இருப்பது நெடுங்கரைக்குத் தெரியக் கூடாதென்று சாஸ்திரி எண்ணினாரல்லவா? ஆகையினால், அந்தச் செய்தி, கல்கத்தாவுக்கும் தெரியக்கூடாது என்று அவர் நினைத்து, சாவித்திரிக்கும் கடிதம் போடவில்லை. ஆனாலும், அவளுடைய க்ஷேமசமாசாரத்தைத் தெரிந்து கொள்ள அவருக்கு ரொம்பவும் ஆவல் இருந்தது. நல்லானைக் கொண்டு கடிதம் எழுதச் சொன்னார். நல்லானுக்கு சாவித்திரி கட்டாயம் பதில் எழுதுவாளென்று அவர் நினைத்தார். ஆனால் நல்லான் எழுதிய இரண்டு மூன்று கடிதத்துக்கும் கல்கத்தாவிலிருந்து பதில் வரவில்லை. பிறகு, தாமே கடிதம் எழுதினார். அதற்கும் பதில் இல்லை. ஆகவே, ஒரு வேளை ஜாகை மாற்றிக் கொண்டு போயிருப்பார்கள், அதனால் தான் பதில் வரவில்லையென்று தீர்மானித்து, பகவானுடைய அருளால் எப்படியாவது சௌக்கியமாயிருந்தால் சரி என்று எண்ணிக் கொண்டார். நல்லான் முதன் முதலில் உமாராணியைப் பார்த்தபோது, "பெரிய குழந்தைதான் நம்மை அடியோடு மறந்துடுத்துங்க" என்று சொன்னதில், தன்னுடைய கடிதங்களுக்குச் சாவித்திரியிடமிருந்து பதில் வராத தாபத்தைத்தான் வெளியிட்டான்.

சாஸ்திரி அதையெல்லாம் இப்போது நினைவுபடுத்திக் கொண்டார். 'ஐயோ! சாவித்திரி! புக்ககத்தில் நீ சௌக்கியமாயிருக்கிறாய் என்று எண்ணிக்

கொண்டிருந்தேனே? உனக்கு இந்த மாதிரி கதி நேர வேண்டுமா? இந்த ஊரிலிருந்து திரும்பி எங்கே போனாயோ? என்னவெல்லாம் கஷ்டப்பட்டாயோ? இப்போது எவ்விடத்தில் என்னமாய் இருக்கிறாயோ? ஒரு வேளை, என்னைப் போல் கடின சித்தர்களும் பாவிகளும் நிறைந்த இந்த உலகில் இருக்கவே வேண்டாமென்று போய் விட்டாயோ?..."

இப்படி எண்ணாததெல்லாம் எண்ணி சம்பு சாஸ்திரி மனம் துடித்தார். எந்த விதத்திலாவது சாவித்திரியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்குத் தாபம் பொங்கிக் கொண்டிருந்தது. ஆகவே, தமக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி விசாரிப்பதென்று தீர்மானித்தார். ஒரு நாள் இப்படி அவர் உட்கார்ந்து முதலில் நரசிங்கபுரத்துக்குக் கடிதம் எழுதலாமென்று நினைத்து எழுதிக் கொண்டிருக்கையில், கோர்ட் அமீனா ஒருவன் வந்து, "சாமி!" என்று கூப்பிட்டான்.

சாஸ்திரியார் அவனை உள்ளே வரச் சொல்லி, என்ன விசேஷம் என்று கேட்டார். அமீனா அச்சிட்ட ஒரு கடுதாசியை எடுத்து நீட்டி, "சாட்சி ஸம்மன், சாமி! வாங்கிண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுங்க" என்றான்.

சாஸ்திரி திகைப்புடன், "சாட்சியாவது, சம்மனாவது? எனக்கு முன்னே பின்னே கோர்ட் வாசனையே தெரியாதே, அப்பா! என்னை யாரு சாட்சிக்குக் கூப்பிடறா?" என்று கேட்டார்.

"ஸம்மனை வாங்கிப் பாருங்களேன், சாமி! தானே தெரியறது. யாரோ உமாராணி என்ற சாவித்திரியோ, சாவித்திரி என்கிற உமாராணியோ, பட்டணத்திலே இருக்காளாமே! அவக மேலே கேஸாம்!" என்றான்.

சாஸ்திரி திடுக்கிட்டவராய், "என்ன, என்ன? உமாராணிங்கிற சாவித்திரியா?" என்று கேட்டார்.

"ஆமாங்க, சாமி! இந்தக் கேஸு இப்போ ரொம்ப அடிபடுதுங்களே! காலணாப் பாட்டுப் புத்தகங்கூட வந்துடுத்தே? உமாராணி என்கிறது வடக்கத்திப் பொம்பிளை என்றும் சொல்றாக; இல்லை, தமிழ்நாட்டுப் பொம்பிளைதான் என்றும் சொல்றாக. ஸ்ரீதரன் என்கிற ஒருத்தர், அந்த உமாராணி தன்னுடைய சம்சாரம், தன்னோடு வந்து இருக்கணும்னு கேஸு போட்டிருக்காராம். ஸம்மனை வாங்கிப் பாருங்க, தெரியும்!" என்றான் அமீனா.

சாஸ்திரி நடுங்கிய கைகளுடன் அந்த ஸம்மனை வாங்கிப் பார்த்தார். அதன் தலைப்பில், "வாதி: ஸ்ரீதரன்; பிரதிவாதி: உமாராணி என்கிற சாவித்திரி" என்று போட்டிருந்தது. கீழே மேற்படி கேஸில் சாட்சி சொல்வதற்காக, குறிப்பிட்ட தேதியில் சென்னை ஹைகோர்ட்டில் வந்து ஆஜராக வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சிறைவாசத்துக்கும் அதற்கும் மேலான தண்டனைகளுக்குங்கூட உள்ளாக நேரிடுமென்றும் கோர்ட்டு வாசக முறைப்படி எழுதியிருந்தது!

அப்போது அங்கே வந்த சாரு, சாஸ்திரியார் திகைப்புடன் கையிலுள்ள அச்சுக் காகிதத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு, "தாத்தா! என்ன தாத்தா இது?" என்று கேட்டாள்.

சாஸ்திரி குழந்தையைக் கூட நிமிர்ந்து பார்க்காமல், "இது என்ன என்கிறது எனக்கே தெரியலை. அம்மா! பராசக்தியின் லீலை அவ்வளவு விசித்திரமாயிருக்கு!" என்றார்.

26. சந்திப்பு

சம்பு சாஸ்திரி முன் தடவை நெடுங்கரையிலிருந்து கிளம்பிச் சென்றதற்கும், இப்போது கிளம்பியதற்கும் ரொம்பவும் வித்தியாசம் இருந்தது. முன்னே அவர் தன்னந்தனியாகக் கிளம்பிச் சென்றார். ஊரிலுள்ளவர்கள் யாரும் ஏனென்று கேட்கவில்லை. ஆனால் இம்முறை அவர் சாருவுடன் கிளம்பியபோது, கிராம ஜனங்கள் பாதிப்பேர் அவர் பின்னோடு வெகு தூரம் வந்து வழி அனுப்பினார்கள். சாஸ்திரிகள், "நில்லுங்கள், நில்லுங்கள்" என்று பல தடவை சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

"இனிமேல் நீங்கள் குழந்தையோடே இங்கேயே இருப்பயள், முன்மாதிரி பஜனையெல்லாம் நடத்தலாம்னு இருந்தோம்; அதுக்கு நாங்கள் கொடுத்து வைக்கலை" என்று முத்துசாமி ஐயர் சொன்னார்.

"அதுக்கென்னடா செய்யறது? நாம் செய்த பாக்கியம் அவ்வளவுதான்" என்றார் சாமாவய்யர்.

முத்துசாமி அய்யரும் சாமாவய்யரும் இவ்வளவு அன்பு காட்டினார்களென்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அதிலும், குடியானவர்களுக்குத்தான் சாஸ்திரி ஐயா போவது ரொம்பவும் மன வருத்தத்தை அளித்தது.

"சாமி, எங்களை மறந்துடாதீங்க!"

"திரும்பிக் கட்டாயம் வந்துடணும்!"

"பட்டிக்காரர் கிட்டே, நாங்க ரொம்ப அவரை விசாரிச்சோம் என்று சொல்லுங்க, சாமி!" என்று இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு குடியானவர்கள் வண்டியைத் தொடர்ந்து வந்தார்கள்.

கடைசியாக, ஊரின் எல்லையைத் தாண்டும் சமயத்தில், சாஸ்திரியார் அவர்களைப் படிவாதமாக நிற்கச் சொன்னார். பிற்பாடு, வண்டி துரிதமாகச் சென்றது.

வண்டி போய்க்கொண்டிருக்கையில், சாரு, "நான் போன ஜன்மத்திலே ரொம்பப் பாவம் பண்ணியிருப்பேன் போலிருக்கு, தாத்தா! இத்தனை நாளைக்கப்புறம், என்னை இடுப்பிலே எடுத்துக்கறதற்கு ஒரு பாட்டி கிடைச்சான்னு நினைச்சுண்டிருந்தேன். அவளையும் ஸ்வாமி அழைச்சுண்டுட்டாரே!" என்றாள்.

"உன் வாக்குப் பலிக்கட்டும், சாரு! ஸ்வாமி மங்களத்தினுடைய பாவத்தையெல்லாம் மன்னித்துத் தன்கிட்ட அழைச்சுக்கட்டும்" என்றார் சாஸ்திரி.

"என்ன தாத்தா, பாட்டியும் அப்படியே சொன்னா; நீங்களும் அப்படியே சொல்றேள்? பாட்டி என்ன பாவம் பண்ணினா?" என்று சாரு கேட்டாள்.

இதையெல்லாம் எப்படிக் குழந்தையிடம் சொல்வது என்று சாஸ்திரி தவித்தார். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு சொன்னார்: "ரொம்ப நாளைக்கு முன்னாலே உன்னைப்போல் ஒரு குழந்தை எனக்கு இருந்தா, அவ பேர் சாவித்திரின்னு சொன்னேனோ, இல்லையோ, அந்தக் குழந்தையைப் பாட்டி ரொம்பக் கஷ்டப்படுத்திண்டிருந்தா. அது அவள் மனத்திலே உறுத்திண்டே இருந்திருக்கு. அதனாலே தான் ஸ்வாமி என்னை மன்னிப்பாரான்னு கேட்டுண்டே இருந்தா. சாகிற சமயத்திலே உன்னைப் பார்த்ததும், சாவித்திரி குழந்தையாயிருந்தது மாதிரி அவளுக்குத் தோணித்துப் போலிருக்கு. அதனாலேதான், தன் மேலே கோபமில்லைன்னு உன்னைச் சொல்லச் சொன்னாள்..."

இப்படிச் சிரமத்துடன் கூறிவந்த சாஸ்திரி சட்டென்று நிறுத்தினார். அவர் மனத்தில் பளீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. சாருவை உற்றுப் பார்த்தார். அப்படியும் இருக்குமோ? அப்பேர்ப்பட்ட அதிசயம் நடக்கக் கூடியதா?...

"தாத்தா! என்ன யோசிக்கிறேள்?" என்று சாரு கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அம்மா! கெட்டுப் போன பெண் எனக்குக் கிடைத்தாள். உனக்கும் அம்மா கிடைக்கக் கூடாதா என்று யோசிக்கிறேன்" என்றார்.

"எனக்கு அம்மாதான் பராசக்தின்னு நீ சொல்லியிருக்கயே?" என்றாள் சார்.

"பராசக்தி நம் எல்லோருக்கும் அம்மா, குழந்தை! ஆனால் பூலோகத்து அம்மா வேணும்னு நீ ஒரு நாளைக்கு அம்பாளை வேண்டிண்டயே? அந்தப்படி பூலோகத்து அம்மாவே உனக்குக் கிடைச்சா நல்லதுதானே?"

"என்னமோ, நீ சொல்றது எனக்கு ஒண்ணுமே புரியலை தாத்தா!" என்றாள் குழந்தை.

மறுநாள் சென்னை 'வஸந்த விஹார'த்தில் சம்பு சாஸ்திரியும் உமாராணியும் சந்தித்தபோது நடந்த சம்பாஷணையும் குழந்தைக்கு நன்றாய்ப் புரியவில்லை.

முன்னெல்லாம், "சாஸ்திரிகளே! வாருங்கோ!" என்று சொல்லி அவரை வரவேற்ற உமாராணி, இன்று அவரைக் கண்டதும் ஓடிவந்து அவர் காலில் விழுந்தாள்.

அவளைத் தூக்கி எடுத்தபடி சாஸ்திரி, "இப்படி என்னை ஏமாற்றினயே? நியாயமா, சாவித்திரி?" என்று கேட்டார்.

சாவித்திரி விம்மலுடன், "என் பேரில் தப்புத்தான். அப்பா! ஒவ்வொரு நிமிஷமும் உங்கள் காலிலே விழுந்து நான் தான் சாவித்திரி என்று சொல்லணுமென்று என் மனது துடித்துக் கொண்டிருந்தது. நீங்கள் என்ன நினைச்சுக்குவேளோ என்னமோன்னு தயங்கித் தயங்கிண்டு இருந்துட்டேன்" என்றாள். பிறகு அப்பாவை நிமிர்ந்து பார்த்து, "நான் தான் பைத்தியக்காரி, சொல்லலை; உங்கள் பொண்ணை உங்களுக்கு எப்படி அப்பா அடையாளம் தெரியாமல் போச்சு?" என்று கேட்டாள்.

"மனத்துக்குள்ளே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது; பாசம் இழுத்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால், பராசக்தியின் மாயையைப் போல் உன் மாயையும் என்னை மயக்கி விட்டது" என்றார் சாஸ்திரி.

மறுபடியும் சாவித்திரி, "நான் உங்களை ஏமாற்றினேன் என்று சொல்கிறீர்களே, அப்பா! நீங்கள் மட்டும் என்னை ஏமாற்றிச் சாருவை ராத்திரிக்கு ராத்திரியே அழைச்சுண்டு போய்விடவில்லையா? எப்படி அப்பா உங்களுக்கு மனசு வந்தது?" என்று கேட்டாள்.

இந்தச் சமயத்தில் சாரு சோகமான குரலில், "தாத்தாவுக்குப் பொண் கிடைச்சுட்டா, மாமிக்கு அப்பா கிடைச்சுட்டா! நான் தான் அநாதையாய்ப் போய்ட்டேன்" என்றாள்.

சாவித்திரி அவளைக் கட்டித் தழுவிக்கொண்டு, "என் கண்ணே! நீ அநாதையாய்ப் போகவில்லை. தாத்தாவுக்குப் பொண்ணும், மாமிக்கு அப்பாவும் கிடைச்சா என்ன? உனக்கு யார் வேணும், சொல்லு, நான் கிடைக்கப் பண்றேன்" என்றாள்.

சாரு பேசாமல் நிற்கவும், "ஆனால் உனக்கு நன்றாய் வேணும்! நீ துஷ்டப் பொண்! எங்கிட்டச் சொல்லிக்காமே ராத்திரியிலே எழுந்து தாத்தா கிட்ட ஓடிப் போனயோல்லியோ? உன் தாத்தா என் அப்பாவாய்ப் போய் விட்டாரே? இப்ப என்ன பண்ணுவே!" என்று சாவித்திரி பரிகசிக்கும் குரலில் கேட்டாள்.

இந்தக் கேள்வி குழந்தையின் மனத்தை எவ்வளவு தூரம் புண்படுத்தியதென்பதைச் சாவித்திரி தெரிந்து கொள்ளவில்லை. தாய் தகப்பனாரின் அன்பை அனுபவிக்கக் கொடுத்து வைக்காத அந்தக் குழந்தை தாத்தாவின் பேரிலேயே தன்னுடைய முழு அன்பையும் சொரிந்திருந்தாள். தாத்தா தனக்கே முழுக்க முழுக்கச் சொந்தம் என்றும் நம்பியிருந்தாள். அப்படியில்லை, தாத்தாவின் மேல் இந்த மாமிக்குத் தன்னைவிட அதிக பாத்தியதை உண்டு என்று ஒருவாறு அவளுக்கு இப்போது

புலப்பட்டதும் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. சாவித்திரியினுடைய ஆலிங்கனத்திலிருந்து விடுவித்துக் கொண்டு குழந்தை வெளியே சென்றாள்.

மேற்சொன்ன சம்பவத்தின் போது, சாவித்திரியையும் சாருவையும் சம்பு சாஸ்திரி மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். இரண்டு பேருடைய முகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார். குழந்தை வெளியில் போனதும், "சாவித்திரி! என்னைத்தான் ஏமாற்றினாய்! அந்தக் குழந்தையை ஏன் ஏமாற்றுகிறாய்?" என்று கேட்டார்.

சாவித்திரியை அந்தக் கேள்வி திடுக்கிடச் செய்தது என்பதற்கு அவளுடைய கண்களில் ஒரு க்ஷண நேரம் உண்டான திகைப்பு அறிகுறியாயிருந்தது. அடுத்த க்ஷணத்தில் திகைப்பு மாறிவிட்டது.

"என்ன அப்பா சொல்கிறீர்கள்? குழந்தையை நான் ஏமாற்றுகிறேனா? எதற்கு? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்றாள்.

"புரியவில்லையா? இந்தக் குழந்தைக்கு அம்மா யார், சாவித்திரி! உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"இந்தக் குழந்தைக்கு அம்மாவா? எனக்கு எப்படித் தெரியும்!" என்றாள் சாவித்திரி.

சாஸ்திரி சற்று நேரம் சும்மா இருந்தார். பிறகு "குழந்தை! உனக்குச் சொல்ல இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம். ஏழு வருஷத்துக்கு முன்னாலே நெடுங்கரைக்கு நீ தனியா வந்துட்டுப் போனதெல்லாம் இப்பதான் அம்மா எனக்குத் தெரிஞ்சுது. அப்புறம் நீ என்ன செய்தே, எங்கே போனே, குழந்தை எங்கே பிறந்தது, யார் உனக்கு ஒத்தாசை பண்ணினா, இத்தனை நாளா எங்கே இருந்தே – இதையெல்லாம் தெரிஞ்சுக்கணும்னு என் மனசு துடியாய்த் துடிக்கிறது, சாவித்திரி!" என்றார்.

"அப்பா! இதெல்லாம் இப்ப என்னைக் கேக்காதேங்கோ, அப்பா! கொஞ்சம் பொறுத்துக்குங்கோ. இந்தக் கேஸ் முடியட்டும். அப்புறம் எல்லாம் சொல்றேன்" என்றாள் சாவித்திரி.

பிறகு சாஸ்திரி, சாவித்திரி புக்ககத்திலிருந்து தமக்கு எழுதிய கடிதத்தையெல்லாம் மங்களமும் அவள் தாயாரும் சேர்ந்து தம்மிடம் காட்டாமல் மறைத்த விஷயத்தைச் சொன்னார். மங்களம் இறந்து போன செய்தியையும், அந்திம காலத்தில் அவள், "ஸ்வாமி என்னை மன்னிப்பாரா?" என்று அடிக்கடி புலம்பியதையும், சாருவைப் பார்த்து, "சாவித்திரி! என் மேலே உனக்குக் கோபமா?" என்று கேட்டதையும் பற்றிச் சொன்னார். இதையெல்லாம் கேட்கக் கேட்கச் சாவித்திரிக்குக் கண்ணில் ஜலம் ததும்பிற்று. "ஐயோ! என் சித்தியை ஒரு தடவையாவது பார்க்காமல் போய்விட்டேனே?" என்று உள்ள உருக்கத்துடன் கூறினாள்.

அச் சமயத்தில், சாரு நாய்க்குட்டியை எடுத்துக் கொண்டு மறுபடியும் அந்த அறைக்குள் வந்தாள். "தாத்தாவுக்குப் பொண் கிடைச்சா, மாமிக்கு அப்பா கிடைச்சா, எனக்கு ஜில்லி கிடைச்சுது" என்றாள் குழந்தை.

27. 'ஜட்ஜ் மாமா !'

சாருவுக்கு ஜில்லி கிடைத்ததில் உண்மையாகவே சந்தோஷந்தான். ஆனாலும், முன்னையெல்லாம் போல் அவளுடைய மனத்தில் குதூகலம் ஏற்படவில்லை. 'மாமியும் தாத்தாவும் உறவாய்ப் போய்விட்டார்கள்; நாம் தனியாய்ப் போய்விட்டோ ம்' என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. தானும் தாத்தாவுமாய் ஊர் ஊராய்ப் போய்க் கொண்டேயிருக்கக் கூடாதா, எதற்காக இங்கே வந்தோம் என்று கூடத் தோன்றியது.

முன்னைப்போல் சாரு இப்போது பங்களாவின் தோட்டத்தில் திரிந்து விளையாடுவதில்லை. பங்களாவுக்குள் தனியாக எங்கேயாவது ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொள்வாள். சோகபாவம் ததும்பும் முகத்தோற்றத்துடன் சிந்தனையில் ஆழ்ந்திருப்பாள். அல்லது, ஜில்லியை மடியில் வைத்துக் கொண்டு அதனிடம் தன்னுடைய மனக்குறையை வெளியிடுவாள். "மாமியும் தாத்தாவும் ஒண்ணு; நீயும் நானும் ஒண்ணு" என்பாள்.

இந்த மாதிரி ஒரு நாள் சாரு ஜில்லியை வைத்துக் கொண்டு சோகமான குரலில் அதனுடன் பேசிக் கொண்டிருந்த போது சாவித்திரி அங்கே வந்தாள். "சாரு! ஏன் இப்படித் தனியாகத் தனியாக வந்து உட்கார்ந்து கொள்கிறாய்? ஓடித் திரிந்து விளையாடறதுக்கென்ன?" என்று கேட்டாள்.

"என்னோடு விளையாடறதுக்கு யார் இருக்கா? நான் தான் தனிப்பட்டவளாய்ப் போய்ட்டேனே?" என்றாள் சாரு.

"என்ன சாரு! பெரிய பாட்டி மாதிரி பேசறே! நீ தனிப்பட்டவளாய்ப் போகவாவது? உன்னோட விளையாடறதற்கு நான் இருக்கேனே! வா! நாம் இரண்டு பேரும் கண்ணாமூச்சி விளையாடலாம்" என்றாள் சாவித்திரி.

சாரு, சாவித்திரியின் பின்னால் வந்து அவளுடைய புடவைத் தலைப்பை மடித்துக் கண்ணைக் கட்டினாள். அப்போது, சாவித்திரி, "இதோ பாரு! என் கண்ணைக் கட்டிவிட்டு, முன்னே ராத்திரியிலே எழுந்து ஓடிப் போனயே, அந்த மாதிரி ஓடிவிடக் கூடாது!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். மறுபடியும், "ஆனால் இப்ப நீ எங்கே ஓடறது! தாத்தாதான் இங்கேயே இருக்காரே?" என்றாள்.

சாரு, இதற்குள் கண்ணைக் கட்டிவிட்டு, "ஊம்; ஒண்ணு, இரண்டு சொல்லுங்கோ!" என்றாள். சாவித்திரி, "ஒண்ணு, இரண்டு, மூணு..." என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, சாரு அந்த அறையிலிருந்து ஓடி ஆபீஸ் அறைக்குள் போனாள். அங்கே வக்கீல் ஆபத்சகாயமய்யர் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். சாரு அவருக்குத் தெரியாமல் சத்தமில்லாமல் நடந்து ஒரு ஸோபாவுக்குப் பின்புறத்தில் ஒளிந்து கொண்டாள். ஒளிந்து கொண்டவள் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள். 'தாத்தாவும் மாமியும் ஒண்ணாய்ப் போய்விட்டா. எனக்கு இப்போ ஓடறதுக்குக் கூட இடமில்லை' என்று எண்ணி அவள் மனம் ஏங்கிற்று.

சற்று நேரத்துக்கெல்லம் அந்த அறைக்குள் சாவித்திரி வந்தாள். "வக்கீல் ஸார்! சாரு இங்கே வந்தாளா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"இல்லையே, இங்கே வரலையே?" என்றார் வக்கீல். பிறகு, "பத்திரம் எழுதியாச்சு; கையெழுத்துப் போடலாம்" என்றார்.

உமா மேஜைக்கருகில் உட்கார்ந்து, "எங்கே வாசிங்கோ! கேட்கிறேன்" என்றாள்.

ஆபத்சகாயமய்யர் அடிக்கடி, "என்னிடம் நம்பிக்கை வையுங்கள்" என்று உமாராணியிடம் சொல்லிக் கொண்டிருந்தாரல்லவா? அதற்குரிய சந்தர்ப்பம் இப்போது

வந்திருந்தது. ஸ்ரீதரனுடைய வக்கீல், கோர்ட்டில் குழந்தையைப் பற்றிக் கேள்வி கேட்டதிலிருந்து சாவித்திரி பெரிதும் கலக்கமடைந்து போயிருந்தாள், யாரிடமாவது யோசனை கேட்டே ஆகவேண்டுமென்று தோன்றிற்று.

ஆகவே, ஆபத்சகாயமய்யரிடம் தன் வரலாறு முழுவதையும் விவரமாகச் சொன்னாள். சாருதான் தன்னுடைய குழந்தை என்று கூறி, சாஸ்திரியிடம் அவருக்குத் தெரியாமல் குழந்தையை விட்டுவிட்டுப் போனதையும் விவரித்தாள். பிறகு, தகப்பனாருக்குக் குழந்தைமேல் உள்ள பாத்தியதைப் பற்றிச் சட்டம் என்ன சொல்கிறது என்று கேட்டாள்.

ஆபத்சகாயமய்யர் சட்ட புஸ்தகங்களையெல்லாம் நன்றாய்ப் புரட்டிப் பார்த்துவிட்டு, "குழந்தை மேலே கட்டாயம் தகப்பனாருக்குப் பாத்தியதை உண்டு. இப்போ நடக்கிற கேஸிலே நீங்கள் ஜயித்த போதிலும், குழந்தையைத் தம்மிடம் ஒப்புவிக்க வேணுமென்று அவர் உங்க மேலே மறுபடியும் கேஸ் போடலாம்" என்றார்.

சட்டம் இந்த மாதிரிதான் இருக்கும் என்று சாவித்திரிக்கு ஏற்கெனவே ஒருவாறு தெரிந்திருந்தது. அது இப்போது உறுதியாகவே, "வக்கீல் ஸார்! என்னுடைய கதி எப்படியாவது ஆகட்டும். ஆனால் என் குழந்தையை அவரிடம் ஒரு நாளும் ஒப்புவிக்க மாட்டேன். அதைவிட அவள், நான் இரண்டு பேரும் செத்துப் போய்விட்டால் கூட பாதகமில்லை" என்றாள்.

பிறகு, சாருவுக்குத் தன்னுடைய சொத்தையெல்லாம் எழுதி வைத்து 'ஸெட்டில்மெண்ட்' பத்திரம் செய்ய வேண்டுமென்றும், சம்பு சாஸ்திரியைக் கார்டியனாக நியமிக்க வேண்டுமென்றும், "சம்பு சாஸ்திரி வளர்ப்புப் பெண்" என்று பத்திரத்தில் குறிப்பிட வேண்டுமென்றும் உமாராணி சொன்னதின் பேரில், அதன்படியே, வக்கீல் ஆபத்சகாயமய்யர் பத்திரம் எழுதினார்.

உமா சாருவைத் தேடிக் கொண்டு ஆபீஸ் அறைக்குள் வந்த போது, வக்கீல் மேற்சொன்ன பத்திரந்தான் தயாராகி விட்டதென்று சொல்லிக் கையெழுத்திடச் சொன்னார். பத்திரத்தைப் படிக்கக் கேட்டிவுட்டுச் சாவித்திரி கையொப்பம் இட்டாள். பிறகு, "வக்கீல் ஸார்! எனக்கு நீங்கள் எத்தனையோ ஒத்தாசை செய்திருக்கிறீர்கள். அதையெல்லாம் விட முக்கியமான ஓர் ஒத்தாசை கேட்கப் போகிறேன். அதைச் செய்ய வேணும்" என்றாள்.

"கட்டாயம் செய்கிறேன்" என்றார் வக்கீல்.

"சாருவுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருக்கேன். அதில் அவள் என் குழந்தை என்கிறதையும், அவளை அடையாறு புத்தர் கோவிலுக்குப் பக்கத்தில் தாத்தா தூங்கிண்டிருந்த போது விட்டுவிட்டுப் போனதையும் பற்றி எழுதியிருக்கேன். அவ அப்பாவைப் பற்றியும், ஏன் அவள் என் குழந்தை என்கிறதை மறைச்சு வைச்சேன் என்பதையும் பற்றிக் கூட எழுதியிருக்கேன். அந்தக் கடுதாசை நீங்க பத்திரப்படுத்தி வச்சிருந்து, குழந்தை மேஜரானதும் அவள் கிட்டக் கொடுக்கணும்..."

"என்னத்துக்காக அம்மா இவ்வளவெல்லாம் யோசனை பண்ணிக் காரியம் செய்யறயள்? குழந்தை மேஜராகிறபோது, நீங்களே சொல்லிண்டாப் போராதா? கடுதாசி என்னத்திற்கு?"

"வக்கீல் ஸார்! என் கதி என்ன ஆகுமோ, யார் கண்டா? எதுவும் எழுத்திலே இருக்கிறது நல்லது. நான் சொல்றபடி செய்யறதாக வாக்குக் கொடுப்பேளா, மாட்டேளோ?" என்றாள்.

"அவசியம் செய்யறேன், அம்மா!"

"சாரு என் குழந்தை என்கிறதை யாரிடமும் சொல்ல மாட்டேளே?"

"சொல்லவே மாட்டேன்."

"எங்க அப்பாகிட்ட கூடச் சொல்ல மாட்டேளே?"

"சொல்ல மாட்டேன், அம்மா!"

"அப்படி, சத்தியமாய்ச் சொல்லுங்கள்" என்றாள் உமாராணி.

"சத்தியமாக யார் கிட்டயும் சொல்றதில்லை" என்றார் ஆபத்சகாயமய்யர்.

அதே அறையில் ஸோபாவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த சாரு இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். மாமி உண்மையில் தன்னுடைய அம்மா தான் என்றும், தாத்தா தன்னுடைய நிஜத் தாத்தாதான் என்றும் அறிந்த போது குழந்தைக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதோடு கூட, ஒரு மிக முக்கியமான இரகசியத்தைத் தான் தெரிந்து கொண்டதில் அவளுக்கு ரொம்பப் பெருமையாகவும் இருந்தது. "ஓகோ! மாமியே எனக்கு அம்மாவா இருந்துண்டு இப்படியா ஏமாத்தினா? இருக்கட்டும், இருக்கட்டும்" என்று கறுவிக் கொண்டாள். ஏதாவது ஒரு நல்ல சந்தர்ப்பம் வரும் போது தனக்கு இந்த இரகசியம் தெரிந்திருப்பதை வெளிப்படுத்த வேண்டுமென்னும் ஆசையும் அவளுடைய குழந்தை உள்ளத்தில் குடி கொண்டது. அத்தகைய சந்தர்ப்பமும் சீக்கிரம் வந்தது.

குறிப்பிட்ட தேதியில் கோர்ட்டில் மறுபடியும் ஸ்ரீதரன், உமாராணி கேஸ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சம்பு சாஸ்திரி விசாரிக்கப்பட்டார். ஆனால், அவர் மூலமாகப் புதிய உண்மை ஒன்றும் வெளியாகவில்லை. சாவித்திரி பூரண கர்ப்பவதியாக இருந்த நிலைமையில், நெடுங்கரைக்கு வந்து விட்டுத் திரும்பினாள் என்று சமீபத்தில் ஊரில் தாம் கேள்விப்பட்டதாக மட்டுமே சொன்னார். குழந்தை என்ன ஆயிற்று என்று தமக்குத் தெரியாது என்றும், சாவித்திரி தம்மிடம் கூடச் சொல்ல மறுப்பதாகவும் கூறினார்.

நாராயணன், பி.ஏ.,பி.எல்., சாஸ்திரியை இலேசில் விட்டு விடவில்லை. இப்போது அவர் வளர்த்து வரும் குழந்தை ஏது என்று கேட்டார். சாஸ்திரி வழக்கம் போல், பராசக்தி எனக்குக் கொடுத்த குழந்தை" என்று சொன்னபோது, கோர்ட்டில் எல்லாரும் சிரித்தார்கள்.

"இது கோர்ட்டு, ஸ்வாமி! விளையாடாமல் உள்ளது உள்ளபடி சொல்லும்" என்றார் வாதி வக்கீல்.

இதன் மேல் சாஸ்திரியும் நிலைமையை உணர்ந்து, தாம் புத்தர் கோவிலுக்கருகில் படுத்துத் தூங்கியதையும், கண் விழித்தபோது இந்தக் குழந்தை அழுதுகொண்டு கிடந்ததையும், சுற்று முற்றும் தேடியதில் ஒருவரும் இல்லாதபடியால், பராசக்தியினுடைய ஆக்ஞை என்பதாக எண்ணிக் குழந்தையை எடுத்துக் கொண்டு சாவடிக் குப்பம் போனதையும் விவரமாகச் சொன்னார். இதையெல்லாம் கோர்ட்டில் கூடியிருந்தவர்கள் எல்லாரும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிறகு, உமாராணி என்ற சாவித்திரி மறுபடியும் சாட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்டாள்.

அன்று கேட்டதைத் தொடர்ந்து வாதி வக்கீல், "இன்றைக்காவது சொல்லுங்கள்; குழந்தை என்னதான் ஆயிற்று?" என்று கேட்டார்.

கையைக் கட்டிக் கொண்டு கம்பீரமாய் நின்ற உமா, "சொல்ல முடியாது" என்றாள்.

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லித்தான் ஆகணும்; மறுப்பது சட்ட விரோதம்."

"மறுத்தால்...?"

"மறுத்தால், குழந்தையைக் கொன்றுவிட்டீர்களென்று இங்கேயே உங்களை 'அரெஸ்ட்' பண்ணும்படி கோர்ட்டார் உத்தரவிடலாம்" என்றார் வாதி வக்கீல்.

சாவித்திரியின் முகத்தில் புன்னகை உண்டாயிற்று. 'ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அப்படி ஏதாவது நடந்தால், எத்தனையோ தொல்லைகள் தீர்ந்து போகும். முக்கியமாக, இந்தப் புருஷனுடன் சேர்ந்து வாழ வேண்டியிராது' என்று எண்ணிக் கொண்டாள் கோர்ட்டுக்கு அன்று வந்தது முதல், ஸ்ரீதரனைப் பார்க்கப் பார்க்க அவளுடைய கோபம் அதிகமாகிக் கொண்டிருந்தது. தனக்கு முன்னே கொடுத்த கஷ்டமெல்லாம் போதாதென்று, இப்போது என்னவெல்லாம் கஷ்டப் படுத்துகிறார்! தன்னைப் படுத்துவது போதாதா? அப்பாவைக் கூடவா சாட்சிக் கூண்டில் ஏற்றி இப்படித் தொந்தரவு படுத்தவேணும்? – கேஸில் ஒரு வேளை தோற்றுவிட்டால், இந்த மனுஷருடன் தான் சேர்ந்து வாழும்படி நேரிடுமோ என்று எண்ணியபோது, அவளுக்குச் சொல்ல முடியாத வேதனையும் ஆத்திரமும் உண்டாயின.

எனவே, வக்கீல், மேற்கண்டவாறு சொன்னதும், உமா ஒரு நிமிஷம் சும்மா இருந்துவிட்டு, "ஆமாம்; எனக்குப் பிறந்த குழந்தையைக் கொன்றுவிட்டேன். என்னை 'அரெஸ்ட்' செய்யுங்கள், இதோ ரெடி!" என்றாள்.

கோர்ட்டில் திடீரென்று ஒரு வெடி குண்டு விழுந்தது போல் எல்லாரும் அதிர்ச்சியடைந்து போனார்கள். ஆபத்சகாயமய்யர் சட்டென்று எழுந்திருந்து, "வாட் இஸ் திஸ்!" என்றார்.

சம்பு சாஸ்திரி, "சாவித்திரி! உனக்கு என்ன பைத்தியமா?" என்றார்.

நீதிபதிக்கு இந்தக் கேஸின் ஆரம்பத்தில் சாவித்திரியிடம் ரொம்ப அநுதாபம் இருந்தது. ஆனால், வர வர அவள் மேல் கோபம் அதிகமாகிக் கொண்டு வந்தது. அவளுடைய அதிகப் பிரசங்கித்தனமான பேச்சுக்களும், அடிக்கடி கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை. இதெல்லாம் கோர்ட்டில் தம்முடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைவிப்பதாக அவர் எண்ணினார்.

இப்போது குழந்தையைக் கொன்றுவிட்டதாக உமாராணி சொல்வது சுத்தப் பொய்; வேண்டுமென்றே சொல்கிறாள் என்பது அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. அதனாலேயே அவருக்குக் கோபம் அதிகமாய் வந்தது. எனவே, கோர்ட்டில் நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "இன்ஸ்பெக்டர்! இந்த அம்மாவை 'அரெஸ்ட்' பண்ணி, கேஸை 'இன்வெஸ்டிகேட்' பண்ணுங்கோ!" என்றார்.

இன்ஸ்பெக்டரும், இன்னொரு போலீஸ்காரனும் சாட்சிக் கூண்டினருகில் சென்றார்கள். சாரு எதிர் பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் அப்போது வந்தது.

குழந்தை ஒரு தாவுத் தாவி மேஜை மீது ஏறி நின்றாள். நீதிபதியைப் பார்த்து, "ஸ்டாப்! ஸ்டாப்! ஜட்ஜு மாமா! இந்த மாமி சொன்னதெல்லாம் பொய்! அவ கொழந்தையைக் கொல்லவே இல்லை. நான் தான் அந்தக் கொழந்தை! என்னைக் கொன்னுட்டிருந்தா, நான் எப்படி உசிரோட இருக்க முடியும்?" என்றாள்.

"வாட் இஸ் ஆல் திஸ்?" என்றார் நீதிபதி.

"இதோ இருக்காரே, எங்க தாத்தா – அவர் புத்தர் கோவில்லே தூங்கிண்டிருந்த போது, எங்க அம்மா என்னைப் போட்டுட்டுப் போயிட்டாளாம். இதையெல்லாம் ஒரு பெரிய கடுதாசியிலே எழுதி, நான் மேஜரான அப்புறம் எங்கிட்டக் கொடுங்கோன்னுட்டு, இந்த வக்கீல் மாமாகிட்ட எங்க அம்மா கொடுத்தா. நான் அவாளுக்குத் தெரியாம ஸோபா மறைவிலெ உட்கார்ந்துண்டு, எல்லாவற்றையும் கேட்டிண்டிருந்தேன்!..." இப்படிச் சொல்லி விட்டு, சாரு மேஜையின் மேலேயே இரண்டடி நடந்து சாவித்திரியின் அருகில் சென்றாள்.

"அம்மா! அப்பா உங்க மேலே கேஸ் போட்டிருக்காரேன்னு என்னை உங்க குழந்தைன்னு சொல்லிக்கிறதுக்கு வெட்கமாயிருக்கா?" என்றாள்.

சாவித்திரி உடனே சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கி ஓடிவந்து, "என் கண்ணே, சாரு!" என்று சொல்லிக் கொண்டே, குழந்தையைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். கோர்ட்டில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது.

நீதிபதி மேஜையை மறுபடியும் ஓங்கித் தட்டினார். ஸார்ஜெண்ட், "ஸைலன்ஸ்!" என்று கத்தினான். போலீஸ்காரர்கள் சாவித்திரியை 'அரெஸ்ட்' பண்ணுகிறதா, இல்லையா என்று தெரியாமல் திகைத்து நின்றார்கள்.

சாரு, சாவித்திரியின் ஆலிங்கனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கீழே இறங்கினாள். நேரே, ஸ்ரீதரன் இருக்கும் இடத்துக்குப் போனாள். ஸ்ரீதரன் பிரமைப் பிடித்தவனைப் போல் குழந்தையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் வந்ததும் சாரு, "நானும் எத்தனையோ அப்பா பார்த்திருக்கேன். உங்களைப்போலே அம்மா மேலே கேஸ் போடற அப்பாவைப் பார்த்ததேயில்லை" என்றாள்.

அப்போது கோர்ட்டில் உண்டான கலகலப்பு அடங்குவதற்கு வெகு நேரம் ஆயிற்று.

28. கர்வ பங்கம்

பாரத் விலாஸ் ஹோட்டலின் அறையொன்றில் ஸ்ரீதரன் முன்னும் பின்னுமாக உலாத்திக் கொண்டிருந்தான். அவனுடைய மனம் பெரிதும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது என்பது நன்றாய்த் தெரிய வந்தது. அவனுடைய தலைமயிர் எப்போதும் போல் படிந்து அழகாக வாரிவிடப் பட்டிருக்கவில்லை. முகத்திலும் கவலைக் குறி காணப்பட்டது. அடிக்கடி வாய்க்குள்ளாக, "என்ன முட்டாள்தனம்! என்ன முட்டாள்தனம்?" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் மேஜையருகில் நின்று மேஜைமீது கிடந்த ஒரு பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். அதில், சம்பு சாஸ்திரி, சாரு இவர்களுடைய படங்கள் வெளியாகியிருந்தன. படங்களுக்குக் கீழே பின்வருமாறு எழுதியிருந்தது:

"நேற்று உமாராணி – ஸ்ரீதரன் வழக்கில் ஒரு முக்கியமான விஷயம் வெளியாயிற்று. சம்பு சாஸ்திரியின் வளர்ப்புக் குழந்தையான சாரு உண்மையில் அவருடைய பேத்தி, அதாவது உமாராணியின் குழந்தை என்று தெரிய வந்தது. விசாரணையின் போது, உமாராணிமேல் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட சமயத்தில், குழந்தை சாருவே மேற்படி இரகசியத்தை வெளிப்படுத்தியதும் கோர்ட்டில் பெரிய கலகலப்பு ஏற்பட்டது..."

ஸ்ரீதரன் இதைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மறுபடி நடக்கத் தொடங்கினான். சுவரில் இருந்த கண்ணாடியில் தன்னுடைய பிரதிபிம்பத்தைப் பார்த்துவிட்டு, "ஸ்ரீதரா! நீ மகா கெட்டிக்காரன்! உன்னைப் போன்ற கெட்டிக்காரன் உலகத்திலேயே கிடையாது. உன் குழந்தையேதான் உனக்கு சர்டிபிகேட் கொடுத்து விட்டாளே? இனிமேல் உனக்கு என்ன குறை?" என்றான்.

நேற்று கோர்ட்டில் சாரு, "நானும் எத்தனையோ அப்பா பார்த்திருக்கேன். ஆனா, உங்களைப்போலே, அம்மா மேலே கேஸ் போட்ட அப்பாவைப் பார்த்ததேயில்லை" என்று சொன்னது அவன் மனத்தை அப்படி உறுத்திக் கொண்டிருந்தது.

இதே சமயத்தில், உமாரணியின், வீட்டு டிராயிங் ரூமில் இதே விஷயத்தைப் பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. உமாவும், சம்பு சாஸ்திரியும் ஸோபாவில் உட்கார்ந்திருந்தார்கள். நல்லானும், அவனுடைய மனைவியும் கீழே தரையில் உட்கார்ந்திருந்தார்கள்.

நல்லான், உமாவைப் பார்த்து, "குழந்தையைக் கொன்னுட்டேன்னு ஒரே புளுகாய்ப் புளுகினீங்களே! எப்படி அம்மா உங்களுக்கு மனஸு வந்தது?" என்று கேட்டான்.

"இருக்கட்டும், நல்லான்! நான் ஊரைவிட்டுக் கிளம்பறபோது, இனிமேல் நீதான் ஐயாவைக் கவனிச்சுக்கணும்னு சொன்னேன், நீயும் சரி இன்னயே, அந்த வாக்கை நீ காப்பாத்தினயா?" என்றாள் உமா.

"அது எம்மேலே தப்புத்தான். எஜமான் நிலத்தை வித்துட்டாங்க என்கிற கோபத்திலே புறப்பட்டு வந்துட்டேங்க. ஆனா, நீங்கமட்டும் இத்தனை நாளாய் அப்பாவை அடியோடு மறந்துட்டு இருந்தீங்களே? அது மாத்திரம் சரியா?" என்றான் நல்லான்.

அப்போது சம்பு சாஸ்திரி குறுக்கிட்டு, "சரியாப் போச்சு! மறுபடியும் பழைய கதையையே எடுத்துட்டேளா? சந்தோஷமாயிருக்கிற சமயத்திலே போனதையெல்லாம் பத்தி ஏன் பேசறே, நல்லான்?" என்றார்.

"எல்லாம் சந்தோஷந்தாங்க. ஆனா, கோர்ட்டு, கீர்ட்டு, கேஸு, கீஸுன்னு சொல்லிக்கிட்டிருக்காங்களே அதுதான் நல்லா இல்லைங்க. மாப்பிள்ளை ஐயா முன்னப் பின்னே எதுவாச்சும் செய்திருந்தாலும், அதையெல்லாம் கொழந்தை பொறுத்துக்கிட்டுத்தான் போகணுங்க" என்றான் நல்லான்.

அப்போது நல்லான் மனைவி, "சரிதான், சும்மா இரு, அவங்களுக்குத் தெரியாததுக்கு நீதான் ரோசனை சொல்ல வந்துட்டே!" என்றாள்.

"இந்தா! உன்னை யாரு கேட்டா? நீ வாயை மூடிக்கிட்டிரு" என்றான் நல்லான்.

"அடாடா! எனக்காக பாவம், நீங்க சண்டை போட்டுக்காதேங்கோ" என்றாள் உமா.

அப்போது சாரு, "இதையா சண்டைன்னு சொல்றே அம்மா! ஒவ்வொரு சமயம் இவா ரெண்டு பேரும் சண்டை போடறதைப் பார்த்தா, பயமாயிருக்கும். மறுபடியும் உடனே சிநேகமாய்ப் போயிடுவா" என்றாள்.

"ஆமாம், குழந்தை! எங்களைப்போலே ஏழை ஜனங்கள்ளாம் அப்படித்தான் சண்டை போட்டுக்குவோம்; உடனே சிநேகமாய்ப் போய்டுவோம்" என்றான் நல்லான்.

பிறகு எழுந்து நின்று, உமாவைப் பார்த்து, "நான் போயிட்டு வர்றேன், அம்மா! எங்க சாவடிக் குப்பத்தை மறந்துடக் கூடாதுங்க. அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருக்கணும்" என்றான்.

"கட்டாயம் வர்றேன், நல்லான்! நீயும் என்னை மறந்துடக்கூடாது. அடிக்கடி இங்கே வரணும்."

நல்லானும் அவனுடைய மனைவியும் வெளியே செல்ல, அவர்களைப் பின் தொடர்ந்து சாருவும் போனாள்.

சற்று நேரம் சாவித்திரியும் சம்பு சாஸ்திரியும் மௌனமாயிருந்தார்கள். சம்பு சாஸ்திரி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஏதோ பேசுவதற்கு இரண்டு மூன்று தடவை வாயெடுத்தார். ஆனால் தொண்டையை அடைத்துக் கொண்டபடியால், பேச்சு வரவில்லை.

சாவித்திரி, "என் பேரில் உங்களுக்கு ரொம்பக் கோபமா, அப்பா?" என்று கேட்டாள்.

"எனக்கு உன் பேரில் கோபமா? இல்லை, அம்மா! எனக்குக் கோபமில்லை. ஆனா, நீதான் பழைய கோபத்தையெல்லாம் விட்டுடணும். நல்லான் சொன்னதைக் கேட்டயோ, இல்லையோ? ஏழை ஜனங்கள் எல்லாம் சண்டை போட்டுண்டா உடனே சமாதானமாப் போயிடுவா என்று சொன்னானே! எவ்வளவு பணம் எவ்வளவு ஐசுவரியம் இருந்தால்தான் என்ன? – மனத்திலே கருணை, தயாளம் இல்லாமற் போனா, இந்தப் பணத்தினாலே எல்லாம் என்ன பிரயோஜனம்..."

சாவித்திரிக்கு இந்த உபதேசம் பிடிக்கவில்லையென்று அவளுடைய முக பாவத்திலிருந்து நன்றாய்த் தெரிந்தது. அவள் குறுக்கிட்டு, "அப்பா! கருணையும், தயாளமும் யாருக்கு வேணுமோ அவாளுக்கு இந்த உபதேசமெல்லாம் பண்ணுங்கோ! – பணம், பணம் என்று கரிக்காதேங்கோ! குழந்தைக்குக் கார்டியனாயிருந்து நீங்க தான் இந்தச் சொத்தையெல்லாம் வச்சுக் காப்பாத்தணும்" என்றாள்.

"இதுதான் எனக்குப் பிடிக்கவேயில்லை. குழந்தைக்கு நான் கார்டியனாவது, நீ உயில் எழுதுவதாவது! எதுக்காக அம்மா இந்த ஏற்பாடெல்லாம்?..."

சாவித்திரி ஒரு நிமிஷம் சும்மா இருந்தாள். மறுபடியும் பேசியபோது சாஸ்திரியின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

"ஆமாம், அப்பா! இந்த ஐசுவரியமெல்லாம் எனக்கு எப்படி வந்தது என்று நீங்க கேட்கவே இல்லையே, ஏன்?" என்றாள்.

"நான் என்னத்துக்கு அம்மா கேட்கணும்? கேட்க எனக்கு என்ன பாத்தியதை?" என்றார் சாஸ்திரி.

"உங்களுக்குப் பாத்தியதை உண்டு, அப்பா! இந்தப் பணமெல்லாம் எனக்குக் கொடுத்தவா, உங்களுக்குத் தெரிஞ்சவாதான்."

சாஸ்திரி வியப்புடன், "எனக்குத் தெரிஞ்சவாளா?" என்றார்.

"ஆமாம், அப்பா! உங்களுக்குத் தெரிஞ்சவாதான்."

"எனக்குத் தெரிஞ்சவா, யார் அம்மா! எனக்கு பணக்காராள் ஒத்தரையுமே தெரியாதே! சாவடிக் குப்பத்து ஏழைகளைத்தானே எனக்குத் தெரியும்?"

"அடியே பிடிச்சு எல்லாம் சொல்றேன், கேக்கறேளா, அப்பா?"

"பேஷாய்ச் சொல்லம்மா, கேட்கிறேன். நீயே சொல்லாமப் போனா நான் ஒண்ணுமே உன்னைக் கேட்க வேண்டாம்னு நினைச்சுண்டிருந்தேன். நாங்க எல்லாருமாச் சேர்ந்து உன்னைச் சந்தியிலே விட்டுட்டோ ம். அப்படி விட்டுட்ட எங்களுக்கு உன்னைப் பத்திக் கேக்க என்ன பாத்தியதைன்னு பேசாமே இருந்தேன்."

"ஐயோ! அப்பா! உங்க மாதிரி மனசு எல்லாருக்கும் இருக்கப்படாதா?" என்று சாவித்திரி சொல்லிப் பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள்:

"ஆமாம்; எல்லாருமாய்ச் சேர்ந்து என்னைச் சந்தியிலேதான் நிறுத்தினயள். இந்தச் சென்னைப் பட்டணத்துத் தெருக்களிலே இரண்டு தடவை நான் அநாதையாய் அலைஞ்சேன். ஒரு தடவை, 'பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி விலாசம் தெரியுமா'ன்னு கேட்டுண்டு அலைஞ்சேன். இன்னொரு தடவை, கையிலே குழந்தையையும் எடுத்துண்டு, எங்கேயாவது வேலை கிடைக்குமான்னு தேடி அலைஞ்சேன். கடைசியிலே, குழந்தையும் நானுமா ஜலத்திலே மூழ்கிச் செத்துப் போறதுன்னு தண்ணியிலே இறங்கினேன். அப்போ, எங்களைக் காப்பாத்தறதற்கு நீங்க வந்து சேர்ந்தேள். உங்களுடைய குரலைக் கேட்டுக் கரையேறினேன். குரல் வந்த திக்கைப் பிடிச்சுண்டு வந்தேன். புத்தர் கோவில்கிட்ட அப்பத்தான் நீங்க மேடையிலே படுத்துண்டேள். கொஞ்ச நேரம் மறைவா இருந்துட்டு, நீங்க தூங்கின அப்புறம் குழந்தையை உங்க பக்கத்திலே கொண்டு போட்டுட்டு, தூரத்திலே போய் ஒளிஞ்சுண்டு பார்த்தேன்..."

"சாவித்திரி! என்னைப் பார்த்துவிட்டுப் பேசாமே போக உனக்கு எப்படி மனசு வந்தது? குழந்தையை விட்டுட்டுப் போறதுக்குத்தான் எப்படி உன் மனசு துணிந்தது?..."

"அதுக்கு முன்னாலே மூணு மாதம் நான் பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா, இப்படி கேட்க மாட்டேள், அப்பா! என் மனசு அப்போ கல்லாய்ப் போயிருந்தது. நீங்க முழிச்சுண்டு எழுந்திருந்து, அழற குழந்தையை எடுத்துண்டு தவியாய்த் தவிச்சேளே, அதைப் பார்த்தா எனக்குச் சிரிப்புக் கூட வந்தது. 'அப்பாவாலே தானே நமக்கு இவ்வளவு கஷ்டமும் வந்தது? குழந்தையை வச்சிண்டு அவரே திண்டாடட்டும்' என்று விட்டுட்டுப் போயிட்டேன். உங்க மனசும் உங்க தயாள குணமும் எனக்கு நன்னாத் தெரியுமோல்லியோ, அப்பா! அதனாலே, நீங்க குழந்தையைக் கைவிடமாட்டேள், காப்பாத்துவேள் என்று நிச்சயமாய் நம்பினேன். அது நிஜமாப் போச்சு, அப்பா!"

"சாவித்திரி! குழந்தை சாரு என் பேத்தின்னு தெரிஞ்சதிலே எனக்கு ஒரு கர்வபங்கம் ஆச்சுன்னு உனக்குத் தெரியுமோ? சாரு அநாதைக் குழந்தை, அவளை எடுத்து வளர்த்துக் காப்பாத்தினோம் என்று கொஞ்சம் கர்வப்பட்டிண்டிருந்தேன். 'நமக்கு என்னத்துக்குத் தொந்தரவு? போலீஸிலே கொண்டு போய்க் கொடுத்துடுவோம்' என்று கொடுக்காமே, பராசக்தி ஆக்ஞைன்னு நினைச்சுக் குழந்தையை வளர்த்தேன். இப்போ தெரியறது, இரத்த பாசத்தினாலேதான் அப்படி எனக்கு எண்ணம் உண்டாச்சுன்னு.

இன்னொத்தர் குழந்தையாயிருந்தா, அந்த மாதிரி எனக்குத் தோணியிருக்குமோ, என்னமோ?"

"இரத்த பாசம் விடாது என்றும் நம்பிண்டுதான் குழந்தையை விட்டுட்டுப் போனேன், அப்பா!"

"ஆனால், நீ என்னத்துக்குப் போனே, அதுதானே எனக்குத் தெரியலை, சாவித்திரி?"

"சொல்றேன், அப்பா! கல்கத்தாவிலேயும், பட்டணத்திலேயும் பட்ட கஷ்டத்தினாலே என் மனசு ரொம்ப வெறுத்துப் போயிருந்தது. ஆஸ்பத்திரிலே நான் கிடந்தபோது, லேடி டாக்டர்களையும், நர்ஸுகளையும் பார்க்கப் பார்க்க, அவாளைப் போலே நாமும் ஏன் சுதந்திரமாய் ஜீவனம் பண்ணப்படாது, எதுக்காகப் புருஷாளையே நம்பிண்டு இருக்கணும்னு தோண ஆரம்பிச்சுது. எங்கிட்ட ரொம்பப் பிரியமாயிருந்த நர்ஸுகிட்ட அதைச் சொன்னேன். அவள் ஒரு நாள் ஒரு பத்திரிகை கொண்டு வந்து காட்டினாள். அதிலே ஒரு விளம்பரம் போட்டிருந்தது. பம்பாயிலே யாரோ ஒரு பணக்காரி இருக்காள், அவளுக்குத் தோழியாயிருக்க நம்ப பக்கத்துப் பெண் வேணும். ஆனால் குழந்தை கிழந்தையிருக்கக் கூடாது என்று விளம்பரத்திலேயிருந்தது. ஆஸ்பத்திரியிலேயிருந்து வெளியே வந்ததும், எத்தனையோ பணக்கார வீடுகளிலே வேலைக்கு அலைஞ்சேன். எல்லாரும் குழந்தைக்காரி வேண்டாம், குழந்தைக்காரி வேண்டாம்னு சொன்னா. அதுமேலே தான் செத்துப் போயிடலாம்னு தீர்மானிச்சேன். அப்போ, உங்களைப் பார்த்ததும், குழந்தையை உங்க கிட்ட விட்டுட்டுப் போய்ட்டா எங்கேயாவது வேலை சம்பாதிச்சுக்கலாம்னு தோணித்து. இந்த ஊரிலேயே இருந்தா, எப்படியும் உங்களைப் பார்க்கும்படியா ஆயிடும் என்று, பம்பாயிலே விளம்பரம் பண்ணியிருந்தவாளின் விலாசத்தைத் தெரிஞ்சுண்டு பம்பாய்க்குப் போனேன்."

"என்ன துணிச்சல், சாவித்திரி, உனக்கு? யாரோ முன்னப் பின்னே தெரியாதவாளின் விளம்பரத்தை நம்பிண்டா பம்பாய்க்குப் போனே?"

"அப்படி நான் நம்பிண்டு போனது வீணாப் போகலை, அப்பா! தாலி கட்டிய புருஷன் கைவிட்டு விட்டார், பெற்ற அப்பா கைவிட்டு விட்டார், கடவுளும் கைவிட்டுவிட்டார்னு நினைச்சுண்டிருந்த எனக்கு அந்தப் பெரிய மனுஷி அடைக்கலம் கொடுத்து ஆதரித்தாள்..."

"ஆமாம், பம்பாயிலிருக்கிறவா எதுக்காக மெனக்கெட்டுத் தமிழ்நாட்டுப் பெண் வேணும்னு விளம்பரம் பண்ணினா?"

"அந்த அம்மாள் பம்பாயிலே இருந்தபோதிலும், உண்மையிலே அவாள் நம்ம பக்கத்து மனுஷ்யாள்தான். அவாளுக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. அந்த அம்மாளின் புருஷனுக்கு உடம்பு சரியா யில்லாதபடியால், கப்பல் பிரயாணம் செய்தால் நல்லது என்று வைத்தியர்கள் சொன்னார்கள். அதன்மேல் அவர்கள் ஐரோப்பாவுக்குப் பிரயாணம் புறப்பட இருந்தார்கள். போகிற போது, அந்த அம்மாவுக்குப் பேச்சுத் துணைக்குத் தமிழ் பேசற பெண்ணாய் ஒருத்தியை அழைச்சுண்டு போகணும்னு நினைச்சாளாம். அதனாலேதான் குழந்தை உதவாதுன்னு விளம்பரத்திலே எழுதியிருந்தாளாம்."

"சரி அப்புறம்?"

"அவர்களுடனே நான் சீமைக்கெல்லாம் போய்விட்டு வந்தேன், அப்பா! அந்த அம்மாள் நான் போனது முதலே என் பேரில் ரொம்பப் பிரியமாயிருந்தாள். தன் வயத்திலே பிறந்த குழந்தை மாதிரி என்னை வச்சுக் காப்பாத்தினாள். அவர்கள் வெகு காலமாக இங்கிலீஷ்காரா தோரணையிலே வாழ்ந்தவர்கள். எனக்கு இந்த நாகரிகமெல்லாம் அவர்கள் தான் சொல்லிக் கொடுத்தார்கள். அந்த அம்மாளின் புருஷன் உடம்பு தேறாமல் இறந்து போனார். அந்த அம்மாளும் அது முதல் நாளுக்கு நாள்

மெலிந்து, போன வருஷத்தில் இறந்து போனாள். அவர்கள் தானப்பா எனக்கு இந்தச் சொத்தையெல்லாம் கொடுத்தது."

"ஆனால், யாரோ எனக்குத் தெரிஞ்சவான்னு சொன்னயே, அம்மா?..."

"ஆமாம்; உங்களுக்குத் தெரிஞ்சவள் தான்; உறவு கூட."

"உறவா? எனக்கா? குழந்தை! நீ என்ன சொல்றே? எனக்கு ஒண்ணுமே புரியலையே?"

"ரொம்ப நாள் வரையில் நான் யாரு, இன்னார்னு ஒண்ணும் அவாளுக்குச் சொல்லவேயில்லை. புருஷன் கைவிட்டுவிட்டு எங்கேயோ போய்ட்டார்னு மட்டும் சொல்லியிருந்தேன். இரண்டு வருஷத்துக்கு முன்னால், அந்த அம்மாள் ஒரு நாளைக்கு என்னை ரொம்ப வற்புறுத்திக் கேட்டாள். அதுக்கு மேலே, ஊரு பேரு எல்லாம் விவரமாய்ச் சொன்னேன். உங்க பேரைச் சொல்லி, நான் உங்க பொண்ணு என்றதும் அந்த அம்மாள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பிச்சுட்டா... அந்த அம்மாள் யார் தெரியுமா, அப்பா?"

"சாவித்திரி! சாவித்திரி! நீ என்ன சொல்லப் போறே? என் உடம்பெல்லாம் நடுங்கறதே!" என்றார் சாஸ்திரி.

"ஆமாம், அப்பா! அந்த அம்மாள் என் அத்தை மீனா தான்!" என்றாள் சாவித்திரி.

29. மீனாவின் கணவன்

'அந்த அம்மாள் என் அத்தை மீனாதான்!' என்று சாவித்திரி சொன்னதும், சம்பு சாஸ்திரி, "குழந்தை! கொஞ்சம் இரு! என்னமோ பண்ணுகிறது" என்று சொல்லிவிட்டு நாற்காலியில் சாய்ந்தார்.

சாவித்திரி கலவரமடைந்து, "டாக்டரை அழைச்சுண்டு வரச் சொல்லட்டுமா, அப்பா?" என்றாள்.

"வேண்டாம் அம்மா! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை; நெஞ்சுதான் படபடக்கிறது" என்றார்.

அப்போது சம்பு சாஸ்திரியின் மனக் கண்ணின் முன்பு சரியாக முப்பது வருஷத்துக்கு முன்னால் நடந்த சம்பவம் எதிரில் அப்போது நடப்பது போல் தோன்றியது. மீனாவுக்குக் கல்யாணம் ஆகி ஐந்தாறு வருஷம் ஆகிவிட்டது. அவளுடைய புருஷனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. சிலர் அவன் அக்கரைச் சீமைக்குப் போய் விட்டானென்று சொன்னார்கள். வேறு சிலர் அவன் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டதாகக் கூறினார்கள். ராமச்சந்திரன் திருச்சிராப்பள்ளியிலுள்ள ஒரு கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபடியாலும், அந்தக் கல்லூரியை நடத்திய ரோமன் காதலிக் பாதிரிமார்கள் அப்போது மதமாற்றும் வேலையில் ரொம்பவும் தீவிரமாயிருந்தபடியாலும், அவன் கிறிஸ்தவனாகிவிட்டான் என்னும் வதந்தி நம்பக் கூடியதாயிருந்தது.

இந்த நிலைமையில், பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை வரும் பிரசித்தமான மகாமக உத்ஸவம் வந்தது. சம்பு சாஸ்திரி தம்முடைய குடும்பத்தாரையும் அழைத்துக் கொண்டு கும்பகோணத்துக்குப் போனார். குடும்பத்தார், என்றால் சாஸ்திரியின் முதல் மனைவி பாக்கியம், தங்கை மீனா, வயதான அத்தை இவர்கள் தான். கும்பகோணத்தில் கடலங்குடித் தெருவில் சம்பு சாஸ்திரி ஜாகை போட்டிருந்தார். மகாமகத்துக்கு நாலு நாளைக்கு முன்னாலேயே போய்விட்டார். மகாமகத்தன்று எல்லாரும் மாமாங்கக் குளத்திற்கு ஸ்நானம் செய்யப் போனார்கள். ஜனக் கூட்டம் ரொம்ப அதிகமாயிருந்தபடியால், ஒருவருக்கொருவர் பிரிந்து போனாலும் தனித் தனியாக ஜாகைக்கு வந்து சேர்ந்துவிட வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். கூட்டத்தில் திருட்டுப் பயத்தை உத்தேசித்து ஸ்திரீகள் நகை நட்டுகளையெல்லாம் கழற்றி வைத்துவிட்டு வந்தார்கள். மாமாங்கக் குளத்தில் ஸ்நானம் செய்யும் வரையில் எல்லாரும் ஒன்றாக இருந்தார்கள். கரையேறும்போதும் ஒன்றாக ஏறினார்கள். ஆனால், ஜாகைக்குப் போய்ச் சேர்ந்ததும் பார்த்ததில், மீனாவை மட்டும் காணோம்! கூட்டத்தில் பிரிந்து போயிருப்பாள், ஜாகைதான் தெரியுமே, தானே வந்துவிடுவாள் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். வெகு நேரம் வரையில் வராமற் போகவே கவலை உண்டாயிற்று. சாஸ்திரி மீனாவைத் தேடுவதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்த சமயத்தில் அவருடைய மனைவி பாக்கியம் ஓடி வந்து ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்தாள். கழற்றி வைத்த நகைகளை எடுத்துப் பூட்டிக் கொள்வதற்காக டிரங்குப் பெட்டியைத் திறந்ததாகவும், அதில் இந்தக் கடுதாசி இருந்ததாகவும் சொன்னாள். கடுதாசியில் பின் வருமாறு எழுதியிருந்தது:

'அண்ணா! இந்த ஜன்மம் எனக்குப் பிடிக்கவில்லை. அவரைப் பிரிந்து என்னால் வாழ முடியாது. நான் போகிறேன். நீயும் மன்னியும் என்னை மன்னித்து விடுங்கள். – மீனா.'

இதைப் படித்த சாஸ்திரி பைத்தியம் பிடித்தவர் போலானார். அந்த மகாமகக் கூட்டத்தில் கும்பகோணத்தின் வீதிகளில், "மீனா! மீனா!" என்று கூவிக்கொண்டு

அலைந்தார். கூட்டத்தில் இடிபட்டோ , குளத்தில் மூழ்கியோ செத்துப் போனவர்களைப் போலீஸார் எடுத்துப் போட்டிருந்த இடத்துக்கெல்லம் ஓடி, மீனாவின் பிரேதமாய் இருக்குமோ என்று பதைபதைப்புடன் பார்த்தார். ஆனால், மீனாவோ அவளுடைய உயிரில்லாத உடலோ கிடைக்கவேயில்லை.

இரண்டு நாள் இப்படி சொல்ல முடியாத வேதனையும் துன்பமும் அநுபவித்துவிட்டுச் சாஸ்திரி தம் மனைவியையும் அத்தையையும் அழைத்துக் கொண்டு ரயிலேறப் போனார். அவர்களை ஊரில் கொண்டுபோய் விட்டு விட்டுத் திரும்பி வந்து தேட வேண்டுமென்பது அவருடைய எண்ணம். ரயில்வே ஸ்டெஷனில், மகாமகக் கூட்டத்தைக் கொண்டு போவதற்காக அரை மணிக்கு ஒரு ரயிலாகக் கிளம்பிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ரயில் வந்து பிளாட்பாரத்தில் நின்றதும், ஜனங்கள் மோதிக் கொண்டு போய் ஏறினார்கள். சாஸ்திரியாரால் இந்தக் கூட்டத்தில் முண்டி அடித்து ரயில் ஏற முடியவில்லை. அவர் வந்த பிறகு மூன்று ரயில் போய்விட்டது. நாலாவது ரயிலிலும் அவருக்கு இடங் கிடைக்கவில்லை. ஆனால் நாலாவது ரயில் கிளம்பியபோது, அந்த ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்றில் சாஸ்திரி ஓர் அதிசயத்தைக் கண்டார். அந்த நம்ப முடியாத காட்சியை அவர் கண்டபோது, அவருடைய நெஞ்சில் கூரிய ஈட்டியைச் செலுத்துவது போல் இருந்தது.

அவள் மீனாதான்; சந்தேகமில்லை. கொஞ்சம் சந்தேகம் இருந்தாலும் சாஸ்திரியைக் கண்டதும் அவளுடைய முகம் அடைந்த மாறுதலினால் சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. கண் விழி தெறித்து விழுந்துவிடும்போல் இருந்தது, அவள் சாஸ்திரியைப் பார்த்த பார்வை. மீனாவுக்குப் பக்கத்தில் ஒரு மனுஷன் உட்கார்ந்திருந்தான். அவன் நம் ஊர்க்காரனில்லை. வடக்கத்தியான். பார்ஸிக்காரர்களைப் போல் தொப்பியும் உடுப்பும் அணிந்து, கேரா கிருதா மீசையுடன் தோன்றினான்.

மீனா வெளிப்புறம் நோக்குவதையும், பிளாட்பாரத்தில் சம்பு சாஸ்த்ரி நிற்பதையும் கண்ட அந்தப் பார்ஸிக்காரன் சட்டென்று ரயிலின் ஜன்னல் கதவைத் தூக்கிச் சாத்தினான். அப்போது அவனுடைய கை மீனாவின் தோளின் மேல் இருந்தது.

இதெல்லாம் அரை நிமிஷத்தில் நடந்தவை. அவன் ஜன்னல் கதவைத் தூக்கும்போதே ரயில் நகரத் தொடங்கிவிட்டது. "மீனா! மீனா!" என்று கதறிக் கொண்டே சம்பு சாஸ்திரி நகருகிற ரயிலோடு தாமும் நடந்தார். அவர் நாலடி நடப்பதற்குள், ஒரு போர்ட்டர் வந்து அவரைப் பிடித்து நிறுத்தினான். வண்டி போயே போய் விட்டது.

பிறகு சாஸ்திரி நெடுங்கரைக்கு வந்தார். "கடுதாசியில் எழுதியிருந்தபடி மீனா செத்துப் போயிருக்கக் கூடாதா ஸ்வாமி! இந்த பாப காரியத்தைச் செய்ய வேண்டுமா?" என்று அவருடைய உள்ளம் கொந்தளித்தது. "என்னைப் பொறுத்த வரையில் இனிமேல் அவள் செத்தவள் தான்" என்று தீர்மானித்தார். ஊராருக்கும், "மீனா மாமாங்கக் குளத்தில் முழுகிச் செத்துப் போனாள்" என்று சொல்லிவிட்டார்.

அவர் ஒருவித வெறுப்புடன் இப்படிச் சொன்னபடியால் ஊரார் அவர் சொன்னதை நம்பவில்லை. ரயில்வே ஸ்டேஷனில் நடந்த சம்பவமும் அவர்கள் காதுக்கு அரை குறையாக எட்டிவிட்டது. எனவே, அவர்கள் தத்தமக்குத் தோன்றியபடி சொல்லி வந்தார்கள். "யாரோ வடக்கத்தியானைப் பிடித்துக் கொண்டு ஓடிவிட்டாள்" என்று சிலரும், "கிறிஸ்தவனாப்போன ஆம்படையானோடு சம்பு சாஸ்திரியே கூட்டி அனுப்பி விட்டார்" என்று வேறு சிலரும் கூறிவந்தார்கள்.

மேற்சொன்ன சம்பவத்திற்குப் பிறகு சம்பு சாஸ்திரியின் வாழ்க்கையில் எவ்வளவோ மாறுதல்கள் நடந்துவிட்டன. எத்தனையோ சுக துக்கங்களை அநுபவித்து விட்டார். ஆனால், அவருடைய இருதய அந்தரங்கத்தில் மீனாவின் ஞாபகம் குடிகொண்டிருந்தது. சம்பு சாஸ்திரி மீனாவிடம் அன்பு கொண்டிருந்தது போல் வேறு யாரிடமும் வைக்கவில்லை. பிற்காலத்தில் சாவித்திரியிடமும் சாருவிடமும் வைத்த

அன்பு கூட அடுத்தபடியென்றே சொல்ல வேண்டும். ஆகையால், மீனாவையும் அவளுடைய பாப காரியத்தையும் மறப்பதற்கு அவர் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை.

சாவித்திரி மீனாவைப்பற்றி இப்போது சொன்னதும் சாஸ்திரியின் உள்ளத்தில் புதைந்து கிடந்த உணர்ச்சியெல்லாம் பொங்கி எழுந்தது. உணர்ச்சி மிகுதியினால் உடம்பு நடுங்கிற்று. கொஞ்சம் படபடப்பு அடங்கி பேசும் சக்தி வந்ததும், "குழந்தை! நிஜமாக மீனாதானா உனக்கு அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றினாள்? அந்தப் பாப ஜன்மத்தின் சொத்துத்தானா இதெல்லாம்?" என்றார்.

"ஐயோ! அப்படிச் சொல்லாதேங்கோ, அப்பா! என் அத்தையைப் பாப ஜன்மம் என்று சொல்கிறவர்களுக்கு ஈரேழு பதினாறு ஜன்மத்திலும் விமோசனம் கிடையாது" என்றாள் சாவித்திரி.

அப்போது சாஸ்திரிக்குப் பளிச்சென்று இன்னொரு ஞாபகம் வந்தது: "குழந்தை, சாவித்திரி! அவா இரண்டு பேரும் நம்ம பக்கத்து மனுஷ்யாள் தான் என்று சொன்னே போலிருக்கே?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஆமாம், அப்பா! அத்தையோட நீங்க ரயில்லே பார்த்தது வேறே யாருமில்லை; என் அத்திம்பேர் ராமச்சந்திரய்யர்தான்" என்றாள் சாவித்திரி.

சம்பு சாஸ்திரி சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து, "நிஜமா, சாவித்திரி! நிஜந்தானா சொல்றே?" என்று அலறினார்.

"சத்தியமா, அப்பா!" என்றாள் சாவித்திரி.

சாஸ்திரி உடனே சாந்தமடைந்தவராய் "ஆனால் ஏன் நிஜமாயிருக்கப்படாது? பராசக்தி அருளால் என்னென்ன அதிசயமெல்லாம் நடந்திருக்கிறது? இதுவுந்தான் ஏன் நிஜமாயிருக்கப்படாது?" என்று தமக்கு தாமே சொல்லிக் கொண்டார்.

சாவித்திரி சொன்னாள்: "அப்பா! அத்திம்பேர் மேலே அப்போது ஏதோ ராஜாங்கத் துரோகக் கேஸ் இருந்ததாம். அந்தக் காலத்திலே, அதாவது மகாத்மா காந்தி தலைவராய் வர்றதுக்கு முன்னாலே, வெடிகுண்டு போட்டாத்தான் நம்ம தேசத்துக்கு விடுதலை கிடைக்கும்னு சில பேர் முட்டாள் தனமா நினைச்சுண்டிருந்தாளாம். அந்த மாதிரி ஒரு வெடிகுண்டு கேஸிலே அத்திம்பேர் அகப்பட்டுண்டிருந்தாராம். அதிலே தப்பிக்கிறதற்காக அவர் பார்ஸிக்காரர் மாதிரி வேஷம் போட்டுண்டு இருந்தாராம். கும்பகோணத்திலே மாமாங்கத்துக்கு முதல் நாள் அவர் அத்தையைப் பார்த்துட்டு, கூட்டத்திலே உங்களிடமிருந்து பிரியற சமயம் பார்த்துண்டிருந்து, 'உங்க அண்ணாகிட்டக் கூடச் சொல்லாமே என்னோடு வர்றதா இருந்தா வா' என்று கூப்பிட்டாராம். அத்தை சம்மதிச்சு உங்களுக்குக் கடுதாசி எழுதி வைச்சுட்டு அவரோடே கிளம்பிப் போனாளாம். அவள் செத்துப் போய் விட்டதாக நீங்கள் நினைச்சுக்கணும்னு அத்தைக்கு எண்ணமாம். ஸ்டேஷன் பிளாட்பாரத்திலே உங்களைப் பார்த்ததும், அவளை நீங்க தெரிஞ்சுண்டுட்டயளோ என்னமோ, என்ன நினைச்சுண்டயளோ என்னமோன்னு அத்தை பட்ட மன வேதனைக்கு அளவேயில்லையாம். இருந்தாலும் அத்திம்பேர் மேலே கேஸ் இருந்தபடியினால் அப்படி உங்களிடம் சொல்லிக்காமே போக வேண்டியதாய் ஆச்சாம். இதையெல்லாம் உங்க கிட்ட விவரமாய்ச் சொல்லி அத்தையை நீங்க மன்னிக்கணும்னு கேட்டுக்கச் சொன்னாள், அப்பா!"

"சாவித்திரி! நான் என்ன சொல்லப் போறேன்! இருபத்தைந்து வருஷமா என் மனஸிலிருந்த புண் இன்னிக்குத்தான் ஆறித்து" என்றார் சாஸ்திரி.

மீனாவையும் அவளுடைய புருஷனையும் பற்றிச் சாவித்திரி எவ்வளவுதான் சொன்னாலும் சம்பு சாஸ்திரி திருப்தியடையவில்லை. மேலும் மேலும் அவர்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார். சாவித்திரிக்கும் அவர்களைப் பற்றிப் பேசப் பிரியமாயிருந்தது. அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் தன்னிடம் அவர்கள்

காட்டிய அன்பைப் பற்றியும் சலிப்படையாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். அத்தையும் அத்திம்பேரும் பல இடங்களில் அலைந்து திரிந்தது, கடைசியில் அத்திம்பேர் லாலா ராம்சந்த் ராய் என்ற பெயருடன் ஒரு பெரிய இரும்பு வியாபாரியின் கடையில் வேலைக்கு அமர்ந்தது, வியாபார நுட்பங்களைத் தெரிந்து கொண்டு தாமே இரும்பு வியாபாரம் ஆரம்பித்தது, ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது இரும்பின் விலை திடீரென்று உயர்ந்ததன் பலனாக, அவருக்கு ஏராளமான லாபம் வந்து பெரிய பணக்காரரானது – எல்லாம் தான் அத்தையிடம் கேட்டபடி கதை கதையாகச் சொன்னாள்.

"அப்பா! இந்த ஊர் மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்கு நான் ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்தேனே, ஏன் தெரியுமா?" என்று கேட்டாள்.

"சாரு, அந்த ஆஸ்பத்திரியிலே பிறந்தாள் என்றுதான் சொன்னயே, அம்மா!" என்றார் சாஸ்திரி.

"அது வாஸ்தவந்தான், அப்பா! ஆனால், அதற்காக அவ்வளவு பெரிய தொகையை நானாகவே கொடுத்துவிடவில்லை. அத்தையின் விருப்பத்தின்படிதான் கொடுத்தேன். நான் பட்ட கஷ்டத்தையெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்லச் சொல்லிக் கேட்டு அத்தை கண்ணீர் விட்டு அழுவாள். அவ்வளவு கஷ்டப்பட்ட சமயத்தில் எனக்கு இந்த மீனாக்ஷி ஆஸ்பத்திரியில் அடைக்கலம் கிடைத்தது என்பது அத்தையின் மனத்தை உருக்கிவிட்டது. ஆஸ்பத்திரியின் பெயரும் தன்னுடைய பெயராயிருந்தபடியால் இதில் பகவானுடைய ஆக்ஞை இருப்பதாக நினைத்து, தன்னுடைய சொத்தில் பாதியை அந்த ஆஸ்பத்திரிக்கு நன்கொடையாகக் கொடுக்கவேண்டுமென்றும், பாக்கியை நான் வைத்துக் காப்பாற்றி என் குழந்தைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னாள். அதன்படியேதான் ஐந்து லட்ச ரூபாய் மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தேன், அப்பா!" என்றாள்.

இதையெல்லாம் அறிந்து சம்பு சாஸ்திரி எவ்வளவோ சந்தோஷமடைந்தார். மீனாவின் பேரில் தாம் கொண்ட சந்தேகம் தவறு என்று தெரிந்ததோடல்லாமல், தன் குழந்தைக்கு அடைக்கலம் அளித்தவள் அவள் தான் என்பதும் அவளுடைய சொத்துத்தான் இப்போது சாவித்திரியிடம் இருப்பது என்பதும் சாஸ்திரிக்கு எல்லையற்ற மகிழ்ச்சியளித்தது. ஆனாலும், அவருடைய ஆனந்தம் பரிபூரணம்டைவதற்குத் தடையாக இன்னும் ஒரே ஒரு குறை இருக்கத்தான் செய்தது.

நடந்து போனதையெல்லாம் சாவித்திரியும் ஸ்ரீதரனும் மறந்து மனம் ஒத்து வாழ வேண்டுமென்று அவர் விரும்பினார். கேஸில் சாவித்திரியின் பக்கம் தோற்று ஸ்ரீதரன் ஜெயித்தால் தான் இந்த விருப்பம் நிறைவேறுமென்று அவர் எண்ணினார். எனவே, "ஸ்வாமி! பகவானே! ஸ்ரீதரன் ஜெயிக்கட்டும், சாவித்திரி தோற்கட்டும்!" என்று அவர் பிரார்த்தனை செய்தார்.

அவருடைய பிரார்த்தனை பலித்தது!

30. தீர்ப்பு

சென்னை ஹைகோர்ட்டின் சரித்திரத்தில், இந்த உமாராணி-ஸ்ரீதரன் வழக்கைப்போல் ஜனங்களின் மனத்தைக் கவர்ந்த வழக்கு வேறு நடந்ததில்லையென்று சொல்லலாம். நாலுபேர் கூடுமிடங்களிலெல்லாம் இதே பேச்சாகத்தான் இருந்தது. கேஸ் நடக்கும் தினங்களில் மாலை வேளையில் கடற்கரைக்குப் போனால், வெண் மணலில் கும்பல் கும்பலாக உட்கார்ந்திருந்தவர்களுடைய பேச்சில் உமாராணி-ஸ்ரீதரன் என்ற பெயர்கள் அடிக்கடி கேட்கக் கூடிய நிலையில் இருந்தன. அநேகம் பேர், கையில் அன்று வந்த பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். தினசரிகளில் 'லீகல் காலம்' என்று சொல்லப்படும் கோர்ட் நடவடிக்கைகள் பிரசுரிக்கும் பத்திக்கு இவ்வளவு முக்கியம் இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டது கிடையாது.

இன்னும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இந்த வழக்கு விஷயத்தில் ஸ்திரீகள் காட்டிய சிரத்தையேயாகும். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, பெண்மணிகள் இரண்டு மூன்று பேர் சேர்ந்தால், உடனே உமாராணியின் பேச்சுத்தான் கிளம்பும். அபிப்பிராய பேதங்கள் வாதப் பிரதி வாதங்கள் இல்லாமலில்லை. பொதுவாக, இளம் பெண்கள் எல்லாரும் உமாராணியின் கட்சி பேசினார்கள். "ஆமாம்; அவள் கேட்பது நியாயந்தானே? புருஷர்கள் என்ன வேணுமானாலும் செய்யலாம், அதற்குக் கேள்வி முறை கிடையாது; பொம்மனாட்டிகள் மட்டும் எப்போதும் அடிமையாயிருக்க வேண்டுமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? அது என்ன நியாயத்தில் சேர்ந்தது? நன்றாய்ச் சொன்னாள், 'புருஷனுக்கு ஜீவனாம்சம் தருகிறே'னென்று!" - இம்மாதிரி படித்த யுவதிகளும், மாதர் விடுதலை இயக்கத்தில் சேர்ந்த மாது சிரோமணிகளும் பேசினார்கள். பழைய கர்நாடகத்தில் பற்றுள்ள வயதான ஸ்திரீகளோ, "இது என்ன அநியாயம்? புருஷனுக்குப் பெண்டாட்டி ஜீவனாம்சம் கொடுக்கிறதாமே? அப்படி அந்த உமாராணி நடுக்கோர்ட்டிலே சொன்னாளாமே? என்ன இருந்தாலும் ஒரு பொம்மனாட்டிக்கு இவ்வளவு தைரியம் ஆகுமோ?" என்றார்கள். இந்த மாதிரி வாதப் பிரதிவாதங்கள் ஒவ்வொரு வீட்டிலும் நடந்து கொண்டிருந்தன.

சுதந்திர ஸ்திரீ சமாஜத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் சிலர் உமாராணியிடம் அநுதாபம் காட்டுவதற்காகப் பொதுக் கூட்டம் கூட்ட வேண்டுமென்றும், உமாராணியின் பக்கம் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்பதாக நீதிபதிக்கு ஒரு மகஜர் அனுப்ப வேண்டுமென்றும் முயற்சி செய்தார்கள். இம்மாதிரியெல்லாம் செய்வது 'கண்டெம்ப்ட் ஆப் கோர்ட்', அதாவது கோர்டை அவமதிக்கும் குற்றமாகும் என்று சிலர் எடுத்துக் காட்டியதன் மேல் மேற்படி முயற்சி கைவிடப்பட்டது.

இப்படி ஜனங்களிடையில் அளவில்லாத ஆவலையும் பரபரப்பையும் உண்டு பண்ணியிருந்த வழக்கில் கடைசியாகத் தீர்ப்புச் சொல்லும் நாள் வந்தது. அன்று சாயங்காலம் தினசரிப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட கிராக்கி, காந்திமகான் கைதியான அன்று ஏற்பட்ட கிராக்கிக்குச் சமமாக இருந்தது.

நீதிபதி இரு தரப்பு வாதங்களையும் சாங்கோபாங்கமாக எடுத்து அலசி ஆராய்ந்து விட்டுக் கடைசியில் பின் வருமாறு தீர்ப்பை முடித்திருந்தார்.

"பிரதிவாதியாகிய ஸ்ரீமதி உமாராணி தம்முடைய கட்சியை மிகவும் பாராட்டத் தக்க முறையில் எடுத்துச் சொன்னார். அவருடைய வாழ்க்கை வரலாறு கல் நெஞ்சையும் உருக்கக் கூடியதாகும். ஹிந்து சமூக வாழ்க்கையிலுள்ள அநீதிகளுக்கு அவர் ரொம்பவும் உள்ளானவர் என்று நிச்சயமாய்த் தெரிகிறது. எல்லாவிதத்திலும் அவர் நம்முடைய அநுதாபத்துக்குப் பாத்திரமாயிருக்கிறார். தர்மமும் நியாயமும்

பிரதிவாதியின் கட்சியில் தான் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக, சட்டம் அவர் கட்சியில் இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேணுமென்று அவர் கேட்பது தர்ம நியாயமாயிருக்கலாம்; ஆனால் அவருடைய கோரிக்கையை இப்போதுள்ள சட்டம் அங்கீகரிக்கவில்லை. சட்டம் பிசகானதாயிருந்தால், அதைத் திருத்த வேண்டியது சட்ட நிபுணர்கள் – அரசியல் வாதிகள் இவர்களுடைய கடமை. நான் இப்போது அமுலிலுள்ள சட்டத்தின்படிதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். சாதாரணமாக, ஒரு புருஷன் தன்னுடைய மனைவி தன்னுடன் வசிக்க வேண்டுமென்று கோருவதற்குப் பாத்தியதை உண்டென்று சட்டம் சொல்கிறது. இந்த வழக்கில் பிரதிவாதியை வாதி கொடூரமாக ஹிம்ஸித்ததாய் ருசுவாகவில்லை. ஆகவே, உமாராணி என்கிற சாவித்திரி அம்மாள் அவளுடைய புருஷன் ஸ்ரீதரன் என்பவருடன் சேர்ந்து வசிக்க வேண்டும் என்பதாகத் தீர்ப்பளிக்கிறேன்."

இந்தத் தீர்ப்பு வெளியான அன்று, எங்கே பார்த்தாலும் ஒரே கிளர்ச்சியாக இருந்ததென்று சொல்ல வேண்டியதில்லை. பெரும்பாலோர், தீர்ப்பு ரொம்ப அநியாயமான தீர்ப்பு என்று தான் நினைத்தார்கள். "ஜட்ஜ் என்ன பண்ணுவார்? சட்டம் அவ்வளவு லட்சணமாயிருக்கு!" என்று சிலர் சொன்னார்கள். "என்ன கோர்ட்டு, என்ன சட்டம் வேண்டியிருக்கு!" என்று விரக்தியாகப் பேசினார்கள் சிலர். "சட்டப் புஸ்தகங்களையெல்லாம் வைச்சு பெட்ரோலை ஊற்றி நெருப்பை வைக்கணும்" என்று சொன்ன தீவிரவாதிகளும் உண்டு.

"என்ன இருந்தாலும், புருஷன் புருஷன் தான், பொம்மனாட்டி பொம்மனாட்டி தானே? 'துரை மகளானாலும் பாரி, புருஷனுக்கவள் ஊழியக்காரி!" என்று சொல்லி சந்தோஷப்பட்டவர்களும் இல்லாமற் போகவில்லை.

தீர்ப்புச் சொன்ன மறுநாள் வக்கீல் ஆபத்சகாயமய்யர் வழக்கம் போல் உமாராணியைப் பார்க்க வந்தார். அவருக்கு ரொம்பவும் மனம் சோர்ந்து போய் இருந்தது என்பதை அவருடைய முகம் காட்டிற்று.

"நான் அப்போதே சொன்னேன். கேஸ் ஜயிப்பது நிச்சயமில்லையென்று. நீங்கள் பிடிவாதமாய்க் கேஸ் நடத்தத்தான் வேண்டுமென்றீர்கள். கடைசியிலே, நான் பயந்தபடிதான் ஆச்சு, தோற்றுப் போனோம்" என்றார்.

"தோற்றுப் போனோமா? யார் சொன்னது, வக்கீல் ஸார்! உண்மையில் நமக்குத்தான் ஜயம். நான் எனக்காக மட்டும் இந்தக் கேஸை நடத்தினேன் என்றா நினைக்கிறீர்கள்! பெண் குலத்துக்காகவே அல்லவா நடத்தினேன்? புருஷர்கள் ஸ்திரீகளுக்குச் செய்யும் அநீதிகள் வெளியாகட்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டேன். இந்த நோக்கத்தில் நான் ஜயமடைந்து விடவில்லையா? என்னுடைய கட்சியில் தான் நியாயம் இருக்கிறதென்று ஜட்ஜு சொல்லிவிடவில்லையா? சர்க்கார் சட்டமும் சமூக சட்டமும் பெண் குலத்துக்குப் பெரிய அநீதி செய்கின்றன என்று தெரிந்து போய் விடவில்லையா? எனக்கு இதுவே போதும். கேஸ் தோற்றதனால் மோசமில்லை" என்று உமாராணி விடுவிடு என்று பேசினாள்.

"என்ன இருந்தாலும், ரஸாபாஸமாகத்தானே போச்சு, அம்மா? இவ்வளவு கேஸு, கீஸு எல்லாவற்றிற்கும் பிறகு அவரோடே நீங்க சேர்ந்து வாழறதுன்னா, கஷ்டமில்லையா? அதைவிட முன்னமே சமரசமாய்ப் போயிருந்தா நன்னாயிருக்காதா?" என்றார் ஆபத்சகாயமய்யர்.

"அவரோடே சேர்ந்து வாழறதா? நானா?" என்று சொல்லி உமாராணி இகழ்ச்சியாகச் சிரித்தாள். "வக்கீல் ஸார்! ஒரு வேளை கேஸ் நம்ம பக்கம் தீர்ப்பாகியிருந்தால், அவரோடே வாழறதற்கு நான் சம்மதிச்சிருப்பேன். நானே அவரிடம் போய், 'போனதெல்லாம் போகட்டும்; இனிமேல் நாம் புது வாழ்க்கை நடத்துவோம்.

சாருவை உத்தேசித்தாவது சண்டை போடாமல் இருப்போம்' என்று சொல்லியிருப்பேன். ஆனால், இப்போ அது முடியாது! கோர்ட்டுத் தீர்ப்புக்குக் கட்டுப் பட்டுப் புருஷனும் மனைவியும் சேர்ந்து வாழுகிறது நடக்கிற காரியமா?" என்றாள்.

வக்கீலுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாயிருந்தது.

"நீங்கள் என்ன சொல்றேள்? அப்பீல் பண்ணலாம்னு உத்தேசமா?" என்றார்.

"அப்படியெல்லாம் பயப்படாதேங்கோ. நான் அப்பீல், கிப்பீல் பண்ணப் போறதில்லை."

"ஓஹோ! தெரிஞ்சுது! நான் முன்னயே சொன்னேனே, அந்த யோசனை இப்ப செய்யறேளாக்கும். வாஸ்தவந்தான். ஏதாவது பணத்தைக் காசைக் கொடுத்தா, அந்த மனுஷன் வாங்கிண்டு போயிடுவன்."

"பணங்காசு கொடுக்கிறதா? இதெல்லாம் என் பணம் இல்லை. வக்கீல் ஸார்! என் அத்தை பணமாக்கும்! அதைத் துர்விநியோகம் செய்ய எனக்கு என்ன பாத்தியதை?" என்றாள் உமா.

பிறகு, "எங்க அப்பாவுக்கு உலக விவகாரம் ஒண்ணும் தெரியாது. பணங்காசு விஷயத்தைக் கவனிக்க அவரால் முடியாது. இத்தனை நாளும் எனக்குச் செய்துண்டு வந்தது போல் எங்க அப்பாவுக்கும் நீங்க தான் ஒத்தாசை செய்துண்டு வரணும், ஏதோ பேருக்கு எங்க அப்பா சாருவின் கார்டியனே தவிர, நீங்க தான் உண்மையிலே குழந்தைக்குக் கார்டியனாயிருக்கணும்" என்றாள்.

வக்கீல் மனக் கலக்கத்துடன், "நீங்க என்னதானம்மா செய்யப் போறேள்? இப்படியெல்லாம் பேசறதைப் பார்த்தால் பயமாயிருக்கே?" என்றார்.

"அந்த மாதிரி ஒண்ணும் பயப்படாதேங்கோ. என் குழந்தையை விட்டுட்டு, நான் செத்து கித்துப் போயிட மாட்டேன்" என்றாள் உமா.

இதைக் கேட்டுக் கொண்டே சம்பு சாஸ்திரி உள்ளே வந்தார். வக்கீல் விடைபெற்றுக் கொண்டு போனதும் அவர் சாவித்திரியின் பக்கத்தில் போய் ஸோபாவில் உட்கார்ந்தார்.

"நீ கடைசியிலே சொன்னது என் காதிலே விழுந்தது, சாவித்திரி!" என்றார்.

"ஆமாம், அப்பா! நான் செத்துக் கித்துப் போக மாட்டேன். நீங்களும் கவலைப்படாமலிருங்கோ!" என்றாள் சாவித்திரி.

"ரொம்ப சந்தோஷம், அம்மா! போனதெல்லாம் போகட்டும். நம்முடைய கஷ்ட காலமெல்லாம் தீர்ந்து போச்சு, இனிமேல் ஸ்ரீதரனும் சரியாயிருப்பான். இவ்வளவு பெரிய வீட்டிலே அவன் ஒருத்தனுக்குத்தானா இடமில்லை? அவனும் வந்து இருந்துட்டுப் போகட்டும்" என்றார் சாஸ்திரி.

"என்ன அப்பா சொன்னேள்? கோர்ட்டிலே கேஸ் போட்டு ஜெயிச்ச மனுஷரோடே என்னை இருந்து வாழச் சொல்றேளா? அது மாத்திரம் சொல்லாதேங்கோ. அப்பா! என்னால் முடியவே முடியாது!" என்று சாவித்திரி ஆத்திரத்துடன் கூறியபோது சாஸ்திரி உண்மையில் பயந்தே போனார்.

ஒரு நிமிஷம் கழித்து அவர், சாந்தமான குரலில், "சாவித்திரி! உனக்குத் தெரியாததற்கு நான் சொல்லப் போறதில்லை; இருந்தாலும் நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கக் கூடாது. அந்தக் காலத்தில் உன் பெயர் கொண்ட சாவித்திரி என்ன செய்தாள், உனக்குத் தெரியாதா? அவள் யமனோடு போய்ப் போராடிச் சத்தியவானுடைய உயிரைக் கொண்டு வரவில்லையா? அப்பேர்ப்பட்ட உத்தமிகள் பிறந்த தேசத்தில் பிறந்துவிட்டு..." என்று சொல்லி வருகையில், சாவித்திரி குறுக்கிட்டாள்.

"அந்தக் கதையெல்லாம் இப்போது ஏன் சொல்கிறேள் அப்பா! அந்த சத்தியவான் இப்படித்தான் சாவித்திரியைச் சந்தியிலே விட்டிருந்தானா? எட்டு மாதத்துக்

கர்ப்பிணியைத் தெருவிலே விரட்டியடித்தானா? இருக்காளா, செத்தாளா என்று கூடப் பார்க்காமல் இருந்தானா? அந்தப் பழைய கதையெல்லாம் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது, அப்பா!" என்றாள்.

"பழைய கதை வேண்டாம்; இந்தக் காலத்திலே நடக்கிறதைத்தான் கொஞ்சம் கவனியேன். அம்மா! நம் தேசத்திலே இப்போது எவ்வளவு பேர் எத்தனை மகத்தான தியாகங்கள் எல்லாம் செய்கிறார்கள்? பாரத தேசம் ஆதி காலத்திலிருந்தே தியாகத்துக்குப் பேர் போனதம்மா! அதனாலேதான் இந்த தேசத்தைத் தியாக பூமி என்று சொல்கிறார்கள். நீயும் கொஞ்சம் தியாகம் செய்யப்படாதா?" என்று சம்பு சாஸ்திரி கனிவு ததும்பிய குரலில் கேட்டார்.

ஆனால், சாவித்திரியின் மனம் கொஞ்சங்கூடக் கனியவில்லையென்று அவளுடைய பதிலிலிருந்து தெரிந்தது.

"தியாகமா, அப்பா! எப்பேர்ப்பட்ட தியாகம் வேணுமானாலும் நான் செய்யத் தயார், அப்பா! ஆனால் சுதந்திரத்துக்காக தான் தியாகம் செய்வேன்; அடிமைத்தனத்துக்காகத் தியாகம் செய்யமாட்டேன். இந்தக் காலத்தில் நமது தேசத்தில் தியாகம் செய்கிறவர்கள் எல்லாம் விடுதலைக்காகத் தியாகம் செய்கிறார்களா, அடிமைத்தனத்துக்காகத் தியாகம் செய்கிறார்களா, அப்பா?"

"சாவித்திரி! உனக்கு எப்போதும் பிடிவாதம் மாத்திரம் ஜாஸ்தி, அம்மா!" என்று சாஸ்திரி சிறிது கோபம் தொனித்த குரலில் சொன்னார்.

அந்தச் சமயத்தில், தெருவில் தேச சேவிகைகள் தேசிய பஜனை செய்து கொண்டு வந்த சப்தம் கேட்டது. "பாரத மாதாகி ஜே!" "மகாத்மா காந்திகி ஜே!" என்ற கோஷம் எழுந்தது. சாவித்திரி எழுந்திருந்து ஜன்னலண்டை சென்று பார்த்தாள். தேசீயக் கொடி தாங்கிய தேச சேவிகைகள்:

"பந்த மகன்று நம்திரு நாடு

உய்ந்திட வேண்டாமோ?"

என்ற கீதத்தைப் பாடிக்கொண்டு போனார்கள். அவர்கள் தெருவைக் கடந்து செல்லும் வரையில் சாவித்திரி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு விரைந்து தன் உடைகள் வைத்திருந்த அறைக்குள் சென்றாள். தான் அணிந்திருந்த விலை யுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றி வைத்தாள். ஏற்கெனவே தயாராக வாங்கி வைத்திருந்த ஆரஞ்சு நிறக் கதர்ப்புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். அப்பாவிடமும் குழந்தையிடமுங்கூடச் சொல்லிக் கொள்ளாமல் வெளிக் கிளம்பிச் சென்றாள்.

31. தியா கம்

அந்தப் புகழ்பெற்ற வருஷத்தில் பாரத புண்ணிய பூமியில் நிகழ்ந்து வந்த அதிசயங்களைப்பற்றி முன் ஓர் அத்தியாயத்தில் கூறினோமல்லவா? அந்த அதிசயங்களில் எல்லாம் மகா அதிசயம், பாரத நாட்டின் நாரீமணிகள் அந்த வருஷத்தில் கண் விழித்தெழுந்த அற்புதமேயாகும். அதற்கு முன்னாலும் தேசத்தில், "ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் வேண்டும்", "பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமை வேண்டும்" என்ற கிளர்ச்சி ஆங்காங்கு நடந்து கொண்டு தான் இருந்தது. ஆனால், அந்த வருஷத்தில் அந்த மாதர் உரிமைக் கிளர்ச்சி ஒரு புதிய ஸ்வரூபம் பெற்றது. அதற்கு அந்தப் புதிய ஸ்வரூபத்தைக் கொடுத்தவர் காந்தி மகான் தான் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

அதுகாறும், பாரதத் தாயின் புதல்விகளுக்கு வழிகாட்ட முன் வந்தவர்கள், "உங்கள் சுதந்திரத்துக்காகப் போராடுங்கள்", "ஆண்களுடன் சம உரிமைக்காகச் சண்டை பிடியுங்கள்" என்றெல்லாம் உபதேசித்து வந்தார்கள். இந்த உபதேசங்களைக் கேட்ட பாரதப் புதல்விகள் சிலர்,

"கற்புநெறி யென்று சொல்ல வந்தார் – இரு
கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்"

என்றும்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்றும் சொல்லிப் பெண்ணுரிமைக்காகப் போராடத் தொடங்கியிருந்தார்கள்.

இத்தகைய மனப்பான்மை பரவிக் கொண்டிருந்த காலத்தில் மகாத்மா காந்தி தோன்றி, தேசத்துக்கு எல்லாத் துறைகளிலும் புதிய வழி காட்டினார். "உங்கள் சுதந்திரம் அப்புறம் இருக்கட்டும்; நாடு சுதந்திரம் அடையும் வழியை முதலில் பாருங்கள்" என்று அவர் சொன்னார். "தேச சேவையில் ஈடுபடுங்கள்; சிறையில் சுதந்திரத்தைக் காணுங்கள். விலங்கில் விடுதலையை அடையுங்கள்" என்று அவர் உபதேசித்தார். "தாயின் அடிமைத்தனத்தை நீக்குங்கள்; உங்கள் அடிமைத்தனம் தானே விலகிப் போகும்" என்று அவர் உறுதி கூறினார்.

காந்தி மகானுடைய போதனைக்குப் பாரத நாட்டின் பெண்குலம் செவி சாய்த்தது. தேசமெங்கும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தாய்நாட்டின் தொண்டில் ஈடுபட்டார்கள்; அவர்களில் பலர் சுதந்திர இயக்கத்தின் முன்னணியில் நின்றார்கள்; சிறை புகுந்தார்கள்; இன்னும் பல கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்தார்கள்.

இதனால், சாதாரணமாய் நூறு வருஷத்தில் நடக்கக் கூடிய பெண்குலத்தின் முன்னேற்றம் இந்த ஒரே வருஷத்தில் ஏற்பட்டது. வேறு நாடுகளில் எத்தனையோ காலம் ஸ்திரீகள் ஆண் மக்களுடன் போராடி, சண்டை பிடித்துப் பெற்ற உரிமைகளையெல்லாம் பாரதப் பெண்கள் அநாயாசமாகப் பெற்றுவிட்டார்கள். ஆண்களுடன் சரி நிகர் சமானமாக நின்று தேச விடுதலைப் போரில் கலந்து கொண்டவர்களுக்கு சமூகத்தில் சம உரிமை கொடுக்க எவ்விதம் மறுக்க முடியும்?

கோர்ட்டில் உமாராணி – ஸ்ரீதரன் வழக்கு நடந்து கொண்டிருந்த காலத்தில், பொது ஜனங்களுடைய அநுதாபமெல்லாம் உமாராணியின் பக்கம் இருந்ததற்கு முக்கிய காரணம் மேற்கூறிய தேச நிலைமையேயாகும். இது உமாராணிக்கும்

தெரியாமலில்லை. நாட்டில் நடந்து கொண்டிருந்த தேச விடுதலை இயக்கத்தைப் பற்றியும், அந்த இயக்கத்தின் முன்னணியில் நின்று சிறை புகுந்த வீரப் பெண்மணிகளைப் பற்றியும் உமாராணி அறிந்து தான் இருந்தாள். வழக்கில் தோற்றுப் போனால் என்ன செய்வது என்று அவளுடைய இருதய அந்தரங்கத்தில் தீர்மானம் செய்திருந்தாள்.

வேண்டாத புருஷனுடன் சேர்ந்து வாழும்படி சட்டம் நிர்ப்பந்தப்படுத்தலாம்; கோர்ட்டும் அவ்வாறே தீர்ப்பளிக்கலாம். ஆனால், அந்தச் சட்டத்தையும் தீர்ப்பையும் அமுலுக்குக் கொண்டு வர முடியுமா? அது முடியாமல் செய்யும் வழி தனக்குத் தெரியும்! தேச சேவிகையர் படையில் சேர்ந்து சிறை புகுந்துவிட்டால், சிறைக்குள்ளே வந்து தன்னைச் சட்டம் கட்டாயப்படுத்தாதல்லவா? "சிறைக்குள் சுதந்திரத்தைக் காணுங்கள்" என்று மகாத்மா காந்தி சொன்னது மற்றையோர் விஷயத்தில் உண்மையோ, என்னமோ, தன் விஷயத்தில் அது முற்றும் உண்மையாயிருக்கும் என்று அவள் உறுதி கொண்டாள். சட்டத்துக்கும் தீர்ப்புக்கும் கட்டுப்பட்டு, ஸ்ரீதரனுடன் கூடிவாழ்ந்தால் அதுதான் அடிமை வாழ்வு; அதுதான் கொடிய சிறை வாழ்க்கை. இதற்கு மாறாக, தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகச் சிறை புகுந்தால், அந்தச் சிறை வாழ்க்கையே உண்மையான சுதந்திர வாழ்க்கையாகும். எனவே,

'அடிமை வாழ்வில் ஆசை ஏனோ?
விடுதலை பெற எழுவாய்!'

என்று தேச சேவிகையர் பாடிக் கொண்டு சென்றபோது, தன்னை பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு அவர்கள் அழைப்பதாகவே சாவித்திரிக்குத் தோன்றிற்று. அந்த அழைப்பை ஏற்று அவள் ஆரஞ்சு நிறக் கதர்ப்புடவை உடுத்திக் கிளம்பிச் சென்றதைச் சென்ற அத்தியாயத்தில் கூறினோம்.

ஆனால் சாவித்திரி எதிர்பார்த்த நிர்ப்பந்த வாழ்க்கை உண்மையிலேயே அவளுக்கு வர இருந்ததா? கோர்ட்டுத் தீர்ப்பின்படி அவள் பிரியமில்லாத புருஷனுடன் கட்டாயமாகக் கூடி வாழ்ந்திருக்கும்படி நேரிட்டிருக்குமோ?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள நாம் பாரத விலாஸ் ஹோட்டலில் ஸ்ரீதரனுடைய அறைக்குப் போக வேண்டியதாயிருக்கிறது.

ஸ்ரீதரன் அப்போது ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அந்தக் கடிதத்தை எழுதுவதில் அவனுக்கு ரொம்பவும் சிரமம் ஏற்படுகிறதென்பது நன்றாய்த் தெரிந்தது. அடிக்கடி எழுதுவதை நிறுத்திவிட்டு ஆகாயத்தைப் பார்ப்பதும், பெருமூச்சு விடுவதும், எழுந்திருந்து நடப்பதுமாயிருந்தான். அவனுக்குப் பக்கத்தில், கீழே அநேக கடுதாசிகள் கசக்கப்பட்டுக் கிடந்தன. அவையெல்லாம் ஸ்ரீதரன் எழுத முயற்சித்து அவனுக்குத் திருப்தியில்லாமல் அரை குறையாக நிறுத்திக் கசக்கிப் போட்டவையேயாகும்.

இப்போது, மேஜை மீது வைத்திருந்த காகிதத்தில், "சாவித்திரி, உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்? என்ன சொன்னால்தான் நீ நம்பப் போகிறாய்?...ஆனால், உனக்காக நான் இதை எழுதவில்லை. குழந்தை சாருவுக்காக எழுதுகிறேன். உங்களைவிட்டுப் பிரிந்து போவதற்கு முன் குழந்தைக்கு ஒரு வார்த்தை சொல்லாமல் போக என் மனம் இடங் கொடுக்கவில்லை..." என்று எழுதியிருந்தது.

அச் சமயத்தில் ஸ்ரீதரனுடைய பழைய சிநேகிதன் நாணா (நாராயணன், பி.ஏ.,பி.எல்.,) அறைக்குள் வந்தான். ஸ்ரீதரனுடைய முதுகில் தட்டிக் கொடுத்து "ஸ்ரீதரா! எப்போதும் நீ அதிர்ஷ்டக்காரண்டா!" என்றான்.

பிறகு, நாற்காலியில் உட்கார்ந்து, ஒரு சிகரெட் எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு சொன்னான்: "ஸ்ரீதரா! உன்னை நான் ரொம்ப 'தாங்க்' பண்ணணும். இந்தக் கேஸிலே,

நான் உனக்காக ஆஜரானதிலிருந்து என் பேர் பிரசித்தமாப் போச்சு. இந்த ஒரு வாரத்திலே எனக்கு ஆறு கேஸ் வந்திருக்கு. இரண்டு கிட்னாப்பிங் கேஸ்..."

அதற்குள் ஸ்ரீதரன் எரிச்சலுடன், "ரொம்ப சரி! இப்போ எங்க வந்தே, அதைச் சொல்லித் தொலை!" என்றான்.

"என்ன ரொம்பக் கோபமாயிருக்கே, ஸ்ரீதரா? எங்கே வந்தேன்னு கேக்கறயே? நம்ம பக்கந்தான் கேஸ் ஜயிச்சுடுத்தேன்னு சும்மா இருக்கக்கூடாது, தெரியுமோ இல்லையோ? சூட்டோ டு சூடா மேலே ஆகவேண்டியதுக்கு 'ஸ்டெப்ஸ்' எடுத்துக்கணும். நாளைக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்து வைக்கலாம்னு நினைக்கிறேன்" என்றான் நாணா.

ஸ்ரீதரன் அப்போது ரௌத்ராகாரம் அடைந்தான் என்று சொல்லவேண்டும். அவனுடைய கோபத்துக்குத் தகுந்த வார்த்தைகள் இங்கிலீஷ் வார்த்தைகளாகத்தான் வந்தன. "ஷட் அப், யு இடியட்! கெட் அவுட், கெட் அவுட்!" என்று கத்தினான். கத்திக் கொண்டே நாணாவைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளி அறைக்கு வெளியே கொண்டு விட்டான். நாணா, "என்னடா இது? திடீர்னு பைத்தியம் பிடிச்சுடுத்தா என்ன?" என்று சொல்லிக்கொண்டே மாடிப்படியில் வேகமாக இறங்கிச் சென்றான்.

அவன் போனதும், ஸ்ரீதரன் மறுபடியும் குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தான். தனக்குத் தானே பின் வருமாறு சொல்லிக் கொண்டான்: 'கேஸாம், ஜயமாம், இங்கே யாருக்கு வேணும்! சாவித்திரி! உன் பணத்துக்கு ஆசைப்பட்டுண்டு கேஸ் போட்டேன் என்று தானே நினைச்சே? நீ நினைச்சது தப்பு என்று இதோ காட்டுகிறேன், பார்! – நான் பழைய ஸ்ரீதரன் இல்லேன்னு சொன்னேன்; நீ நம்பலை – இன்னிக்குச் சாயங்காலம் நான் தேசத் தொண்டிலே சேர்ந்து ஜெயிலுக்குப் போய்ட்டேன்னு நீ கேள்விப்படற போதாவது நம்ப மாட்டாயா, பார்க்கலாம்!"

இம்மாதிரி சொல்லிக் கொண்டே ஸ்ரீதரன் அன்று காலையில் தான் வாங்கிக் கொண்டு வந்திருந்த கதர் உடைகளை எடுத்து அணிந்து கொண்டான்.

32. சாந்தி

சென்னை நகரில் அப்போது அஹிம்சைப் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. தேசீய பஜனை ஊர்வலமும் சாத்துவிக மறியலும் தடை செய்யப்பட்டிருந்தன. இந்தத் தடை உத்தரவுகளை மீறி தேசத் தொண்டர்களும் தேச சேவிகளும் சிறை புகுந்து கொண்டிருந்தார்கள்.

அன்று சிறை புகுவதற்குத் தயாராய்க் கிளம்பிய தேச சேவிகைகளுடன் சாவித்திரியும் சேர்ந்து கொண்டாள். அவர்கள் தேசியக் கொடி பிடித்துக் கொண்டும், தேசிய பஜனை செய்து கொண்டும் சென்னை நகரின் வீதிகளில் ஊர்வலம் வந்தார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்களுக்கருகில் போலீஸ் வண்டி ஒன்று வந்து நின்றது. வண்டியுடன் வந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தேச சேவிகைகளைக் கைது செய்து வண்டியில் ஏறச் சொன்னார்கள்.

வண்டி கிளம்பிக் கொஞ்ச தூரம் சென்றதும், கடை வீதியில் இன்னொரு போலீஸ் உத்தியோகஸ்தர் கையைக் காட்டி வண்டியை நிறுத்தினார். அந்த இடத்தில் ஜனக் கூட்டம் சேர்ந்திருந்தது. "இந்த வீதியில் தான் மறியல் நடக்கிறது" என்று கைதியான தேச சேவிகைகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

வண்டி நின்ற இடத்தில், போலீஸ்காரர்களால் சூழப்பட்டுச் சில தேசத் தொண்டர்கள் நின்றார்கள். அவர்களையும் அந்த வண்டியில் ஏற்றிக் கொள்ள முடியுமா என்று கீழே நின்ற போலீஸ் உத்தியோகஸ்தர் கேட்டார். வண்டியோடு வந்த போலீஸ் ஸார்ஜெண்ட், 'இடமில்லை' என்று சொல்லவே, வண்டி மறுபடியும் கிளம்பியது.

இப்படி போலீஸ் வண்டி அங்கே நின்ற ஒரு நிமிஷத்தில், சாவித்திரியின் வாழ்க்கையில் ஒரு மகத்தான சம்பவம் நடந்துவிட்டது. வீதியில் கைது செய்யப்பட்டு நின்ற தேசத் தொண்டர்களின் மீது சாவித்திரியின் பார்வை சென்றபோது, அவர்களுக்கு மத்தியில் ஸ்ரீதரனும் நிற்பதைக் கண்டாள். அவனுடைய உடை மாறியிருந்தது போலவே முகத்தோற்றமும் மாறியிருப்பதைப் பார்த்தாள். சாவித்திரியின் தேகம் புளகாங்கிதம் அடைந்தது. அவளுடைய கண்களில் ஆனந்த பாஷ்பம் துளித்தது.

அதே சமயத்தில் ஸ்ரீதரனும் போலீஸ் வண்டிக்குள் பார்த்தான். அங்கே தேச சேவிகைகளின் மத்தியில் சாவித்திரியைக் கண்டு அளவிலாத வியப்படைந்தான்.

சொல்ல முடியாத ஆதுரத்துடன் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?" என்ற கவியின் வாக்குக்கு அப்போது அவர்களுடைய நிலைமை மிகவும் பொருத்தமாயிருந்தது. உண்மையில், இத்தனை நாளும் பிரிந்திருந்தவர்கள் அந்த நிமிஷத்திலே தான் ஒன்று கூடினார்கள். அதாவது, அவர்களுடைய இருதயங்கள் ஒன்றுபட்டன. இரண்டு ஜீவன்களுடைய இதயங்கள் ஒன்றுபட்டனவென்றால், அவர்களுடைய தேகங்கள் வட துருவத்திலும் தென் துருவத்திலும் இருந்தால் தான் என்ன? அவர்களை யாரால் பிரித்து வைக்க முடியும்?

அந்த நிமிஷத்தில் ஸ்ரீதரனுக்கும் சாவித்திரிக்கும் புனர் விவாகம் நடந்தது என்று சொல்லலாம். ஏற்கெனவே, பெரியோர்களுடைய வற்புறுத்தலினால் தேக சம்பந்தமான விவாகம் அவர்களுக்கு நடந்திருந்தது. இன்றைய சுபதினத்தில், அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்றையொன்று மணந்து கொண்டன. இந்த ஆத்மீக விவாகத்துக்கு பாரத மாதாவும் காந்தி மகாத்மாவுமே சாட்சிகளாயினர்.

போலீஸ் வண்டிக்குள்ளிருந்த தேச சேவிகைகள், "ஜய ஜய பாரத!" என்று கோஷித்தார்கள். வெளியில் நின்ற தேசத் தொண்டர்கள், "மகாத்மா காந்திகி ஜே!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

மறுநாள் 'வஸந்த விஹார'த்தில் குழந்தை சாரு தனியாக உட்கார்ந்து சாவித்திரியின் படத்தை வைத்துக் கொண்டு, "அம்மா! என்னையும் நீ அழைச்சுண்டு போயிருக்கக்கூடாதா? நானும் உன்னோடே வந்து ஜெயிலிலே இருக்க மாட்டேனா?" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவளைத் தேடி வந்த சம்பு சாஸ்திரி, குழந்தையைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டு, "கண்ணே சாரு! ஒரே சமயத்தில் உனக்கு அப்பாவும் அம்மாவும் கிடைத்தார்கள். அவாள் இரண்டு பேரையும் ஒரே நாளில் இழந்துட்டே! ஆனால், நீ இதுக்காக வருத்தப்படாதே, குழந்தை! நல்ல காரியத்துக்குத்தான் அவாள் போயிருக்கா. சீக்கிரத்திலே திரும்பி வந்துடுவா. அதுவரைக்கும் நாம் நம்முடைய பழைய இடத்துக்கே போகலாம் வா, அம்மா! இந்தப் பங்களா எல்லாம் நமக்கு லாயக்கில்லை. சாவடிக் குப்பம் தான் நமக்குச் சரி!" என்றார்.

சாவடிக் குப்பத்தில் சம்பு சாஸ்திரி குடி இருந்த குடிசையை நல்லான் சுத்தமாக வைத்திருந்தான். குடிசைக்குள்ளிருந்த பூஜை மாடத்தையும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தான். சம்பு சாஸ்திரியும் சாருவும் அந்தக் குடிசைக்கு மறுபடியும் வந்ததும், தங்களுடைய சொந்த வீட்டுக்கு வந்து விட்டதாக எண்ணினார்கள். சாஸ்திரி வாசலில் நின்று நல்லானுடன் பேசிக் கொண்டிருக்கையில், சாரு உள்ளே சென்று, பூஜை மாடத்துக்கு முன்னால் கை கூப்பி நின்று, "அம்பிகே! பராசக்தி! எனக்கு அம்மா வேணும்னு கேட்டேன். அம்மா, அப்பா இரண்டு பேரையும் கொடுத்தே! ஆனா, அவா ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுக்கறது எனக்குப் பிடிக்கவேயில்லை. ரொம்பக் கஷ்டமாயிருக்கு. எங்க அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டுக்காம ஒத்துமையாயிருக்கும்படி கிருபை செய்யப்படாதா?" என்றாள்.

முன்னொரு தடவை குழந்தையின் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டு சம்பு சாஸ்திரி உள்ளே வந்தது போல் இப்போதும் வந்தார். சாருவின் பின்னால் வந்து நின்று கொண்டார். "குழந்தை! உன்னுடைய பிரார்த்தனையைத்தான் ஏற்கெனவே பராசக்தி நிறைவேற்றிவிட்டாளே! உன் அப்பாவும் அம்மாவும் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள், சாரு! எப்போது இரண்டு பேருக்கும் ஏக காலத்திலே தேச சேவையிலே ஈடுபட வேண்டுமென்று தோணியிருக்கோ, அப்போதே அவாளுடைய மனது ஒற்றுமைப் பட்டுடுத்து. திரும்பி வர்றபோது அவாள் புதுமனுஷாளாயிருப்பாள். அவாளுடைய இருதயம் பரிசுத்தமாயிருக்கும். இரண்டு பேரும் மனம் ஒத்து வாழ்வார்கள், அம்மா!" என்றார்.

அன்று சாவடிக் குப்பம் ஒரே குதூகலமாயிருந்தது. "சாஸ்திரி ஐயாவும் சாருவும் திரும்பி வந்துட்டாங்க" என்னும் செய்தி சாவடிக் குப்பத்து ஜனங்களுக்கு அளவிலாத மகிழ்ச்சியை அளித்தது. அன்றைய தினமே பஜனை ஆரம்பித்துவிட வேண்டுமென்று நல்லான் வற்புறுத்தினான். சாயங்காலம் பஜனை ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் ஜனங்கள் ஏராளமாக வந்து கூடிவிட்டார்கள். குப்பத்து ஜனங்கள் மாத்திரமின்றி, வக்கீல் ஆபத்சகாயமய்யர், சாருவின் பழைய வாத்தியாரம்மா முதலியோரும் வந்திருந்தார்கள். கூட்டம் அதிகமாயிருந்தபடியால், குப்பத்துத் தெருவில் திறந்த வெளியிலேயே பஜனை நடத்த வேண்டியதாயிற்று.

ஆனால், அன்று பஜனையில் சம்பு சாஸ்திரியினால் பாடவே முடியவில்லை. உணர்ச்சி மிகுதியால் அவருக்குத் தொண்டை அடிக்கடி அடைத்துக் கொண்டது. மற்றவர்கள்தான் பாடினார்கள். காந்தி மகானுக்குப் பிரியமான கீதம் என்று பிரசித்தமான "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாட்டைச் சம்பு சாஸ்திரி பஜனையில் அடிக்கடி பாடுவதுண்டு. அதை மற்றவர்களுக்கும் கற்பித்திருந்தார். அந்தக் கீதம் இன்று பஜனையில் பாடப்பட்டபோது, சாஸ்திரி மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

"எவன் பிறருடைய துக்கத்தைத் தன்னுடைய துக்கமாகக் கருதுவானோ, கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி புரிந்து விட்டு அதைப் பற்றி மனத்தில் கர்வம் கொள்ளாமலும் இருப்பானோ, அவனே உண்மையான வைஷ்ணவன்."

"எவன் உலகில் பிறந்தோர் அனைவரையும் வணங்குவானோ, யாரையும் நிந்தனை செய்ய மாட்டானோ, மனோ வாக்குக் காயங்களைப் பரிசுத்தமாக வைத்துக் கொண்டிருப்பானோ, அப்படிப்பட்டவனுடைய தாயே தன்யை யாவள்."

"எவன் (விரோதியையும் நண்பனையும்) சமதிருஷ்டியுடன் நோக்குவானோ, எவன் பரஸ்திரீயைத் தன் தாயாகக் கருதுவானோ, எவன் தன் நாவால் ஒரு போதும் பொய் பேச மாட்டானோ, எவன் பிறருடைய பொருளைக் கையால் தொடவும் மாட்டானோ, அவனே வைஷ்ணவன்."

"எவனை மோகமோ மாயையோ அண்டாதோ, எவனுடைய மனத்தில் திட வைராக்கியம் குடிகொண்டிருக்குமோ, எவன் ஸ்ரீராம நாமத்தைக் கேட்டதுமே அதில் ஆழ்ந்து மெய் மறந்து விடுவானோ, அவனுடைய சரீரம் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களுக்கும் இருப்பிடமாகும்."

"எவன் லோபமும் கபடமும் இல்லாதவனோ, எவன் காமத்தையும் குரோதத்தையும் விட்டொழித்தவனோ, அப்படிப்பட்ட உத்தமனைத் தரிசிப்பவனது எழுபத்தொரு தலைமுறையும் கரையேறிவிடும்."

இந்த கீதத்தைக் கேட்டு வருகையில் சம்பு சாஸ்திரிக்கு இன்று அதனுடைய உண்மையான பொருளைத் தாம் உணர்வதாகத் தோன்றியது. 'ஆகா! இந்தப் பாட்டில் சொல்லியபடி உண்மை வைஷ்ணவனாக நாம் என்று ஆகப் போகிறோம்? இந்த ஜன்மத்தில் அத்தகைய பேற்றை நாம் அடைவோமா! அம்பிகே! தாயே! இந்தக் கீதத்தில் வர்ணித்திருக்கும் குணங்களில் நூறில் ஒரு பங்காவது எனக்கு அருளமாட்டாயா?' என்று தமது இருதய அந்தரங்கத்தில் பிரார்த்தனை செய்தார்.

ஓம் சாந்தி !

-::கல்கி::-